# திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர்



உ

சிவமயம்

# திருக்கேதீச்சரம்

# திருக்குடத்திருமஞ்சன மலர்

அகில இலங்கைப் பரிசில்

✷

## நள ஆண்டு ஆனி உக

## (4-7-1976)

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
கொழும்புத் ... நூலகத்திற்கு
க. இ. ஆறுமுகம்
அவர்கள் நன்கொடையாக அளித்தது
திகதி 13/11/2004

✷

34624
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை வெளியீடு

*Printed at*

**Albion Press (Colombo) Ltd.**
157, Jayantha Weerasekera **Mawatha**
Colombo-10

உ
சிவமயம்

# பதிப்புரை

''தொண்டர் நாள்தொறுந் துதிசெய அருள்செய் கேதீச்சரமது தானே''

எல்லையில் புகழ் எந்தை கேதீச்சரத்தை இராப்பகல் நினைந்தேத்தி அருட்பணியாகிய அவனது திருப்பணி வேலைகள் பலவற்றைப் புரிந்தோம். இவ்வேலைகள் பல ஆண்டுகளாகப் புரியப்பட்டு வந்தன. பல்லாயிரக்கணக்கான அடியவர் இவற்றில் கலந்து கொண்டனர். பல நாட்டவரதும் பொருள்கள் இங்கு சுவறியிருக்கின்றன. ஒன்றிற்கும் பற்றாத அடியவர்களது அன்புருகு கண்ணீரும் இதிற் கலந்திருக்கின்றது. இவை யாவற்றினதும் பெறுபேறே சிவலோகப் பொலிவில் யாம் இன்று காணும் திருக்கேதீச்சரமாகும். இப்பொலிவில் கரியகறைக் கண்டனல்ல கண்மேலொரு கண்ணுணுகிய கௌரி பாகனும் கேதீச்சரப் பெருமானின் திருக்குடத் திருமஞ்சனத்தை இன்று கண்குளிரக் கண்டு கைதொழுகின்றோம். இஞ்ஞான்று இங்கு உன்னி அன்போடு தொழும் அடியவர் கையில் உளம்பூரிக்குந் திருவருட் பிரசாதமாக — திருவருட் சின்னமாக வெகுமானப் பொருள் ஒன்று வழங்கப்படவேண்டுமெனத் திருக்கேதீச்சரம் ஆலயத் திருப்பணிச் சபையினர் விரும்பினர். அதற்கமைய நல்லுரைக் கோவையாலான மலர் ஒன்றைத் திருக்குடத் திருமஞ்சனத்தன்று மலர வைக்கும் ஒழுங்குகளை மேற்கொண்டோம். அடியோமின் எண்ணப்படி திருக்குட மஞ்சன நாளாகிய இன்று நறுமண மாலையாக மலர் விரிந்து விட்டது. இதில்,

★ ஆதியில் செய்யகேது தலையற்ற வன்னுள், மன்னுகேதீச்சரத்தில் திருந்து பூசைகள் செய்ய வையகம் போற்ற கௌரி பங்கர் நல்லருள் ஈயுங்கோல மூவர்ண முகப்புப் படமும்,

★ தருமை ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்களதும், மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் குரு முதல்வர் அவர்களதும், காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களதும் அருளாசியுரைகளும்,

★ ஐம்பதுக்கு மேற்பட்ட திருக்கேதீச்சரப் பிரதிட்டா மூர்த்திகளதும், மற்றும் திருவுருவங்களினதும் கலையொழுகு நிழற்படங்களும்,

★ நாற்பதிற்கு மேலான பலவகையிலமைந்த செஞ்சொற் புலவோர் — நல்லறிஞர் கருத்துரைக் கட்டுரைகளும்

இடம் பெறுகின்றன.

பெருமான் துணைகொண்டு யாம் எண்ணிய எண்ணியாங்கு எய்தி, ஞானக் கருவூலமாக இம்மலர் ஒளிவிட அருளாசியுரை வழங்கியுதவிய ஆதீன முதல்வர்களது பொன்னார் திருவடிகளை இறைஞ்சி நன்றி கூறுவதுடன், தம் இடர்களையும் நோக்காது கட்டுரைகள் எழுதி அனுப்பிய அன்பர்கள் அனைவர்க்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். மேலும், இதனை நல்லமுறையில் ஆக்கி எடுப்பதற்காகக் கட்டுரைகளைக் கருத்தூன்றிப் படித்து, அவற்றிலுள்ள வழுக்களைச் செம்மை செய்வதிலும், அச்சுப் பிழைகளைத் திருத்தஞ் செய்வதிலும் இரவு பகல் அயராதும்—சலியாதும் உழைத்தவர்கள் பல்கலைக்கழக கொழும்பு வளாகத் தமிழ்த் துறைச் சிரேட்ட விரிவுரையாளர் கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்களும், சைவத்தின் உயர்பண்பை மேலோங்க வைக்கும் பணியில் முன்னின்றுழைத்து வருபவராகிய கொழும்பு விவேகாநந்த சபையின் பரீட்சைச் செயலாளர் திரு. சி. கந்தசாமி அவர்களுமாவர். இவ்விருவர்க்கும் திருக்கேதீச்சரப் பெருமான் அருளொடிணைந்த எம் நன்றியைக் கூறிப் பாராட்டுகின்றோம்.

மேலும் 18 நாட்களில் இப்பெருவேலையை அச்சேற்றி முடித்துத் தந்துதவிய அல்பியன் அச்சக உரிமையாளர், பணியாளர் ஆகியோர்க்கும், மூவர்ண முகப்புப்படத்தைக் குறுகியகாலத்தில் பிரதியுபகாரங் கருதாது அச்சிட்டுதவிய மெய்கண்டான் அச்சக உரிமையாளர்க்கும் நன்றி கூறுகின்றோம். இன்னும், இம்மலரில் தேன் மொந்த இருக்கும் அன்பராம் அடியாரையும் நல்லுலகுக்காளாக்க வேண்டுமென கௌரி பணுணுகிய கேதீச்சரப் பெருமான் இணையடிதொழு தேத்துவோமாக.

''அல்லல் லைசறுத் தரனடி யிணைதொழு மன்பரா மடியாரே''.

சிவம்.

**இ. நமசிவாயம்**
செயலாளர்,
திருக்கேதீச்சரம் ஆலயத் திருப்பணிச் சபை.

திருக்கேதீச்சரம்
நள, ஆனி, உக
(4–7–1976).

சிவமயம்

அகில இலங்கைப் பரிசில்

## உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| * | திருமுறைப்பாடல்கள் .. .. .. .. .. | i |
| * | அருளாசியுரைகள் .. .. .. .. .. | iv |
| * | திருக்கேதீச்சர வரலாறு .. .. .. .. .. | viii |
| * | திருக்கேதீச்சரச் சிற்ப வடிவத் திருவுருவங்கள் .. .. .. .. | xiv |
| 1. | சிவபுராண படன விதி .. .. .. .. .. <br> ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 1 |
| 2. | திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும் .. .. .. <br> பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | 11 |
| 3. | ஈழமும் பதிகம் பாடிய சம்பந்தரும் .. .. .. .. .. <br> ஏழாலை திரு. மு. ஞானப்பிரகாசம், B.A., B. Sc. | 14 |
| 4. | நித்திய பூசையும் அதன் தத்துவமும் .. .. .. .. .. <br> தருமபுரம் சிவாகமரத்னாகரம் எஸ். சுவாமிநாத சிவாசாரியர் | 17 |
| 5. | கும்பாபிஷேக முறைகளும் விளக்கமும் .. .. .. .. <br> பிரதிட்டாபூஷணம் நயினை இ. கைலாசநாதக் குருக்கள் | 23 |
| 6. | சிவலிங்க தத்துவ விளக்கமும் வழிபாடும் .. .. .. .. <br> சிவஸ்ரீ எஸ். காளஹஸ்தீஸ்வரக் குருக்கள் | 30 |
| 7. | இந்துசாதனம் .. .. .. .. .. <br> திரு. மு. மயில்வாகனம் | 34 |
| 8. | சைவமும் பௌத்தமும் .. .. .. .. .. <br> பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, Ph.D., D.Phil. | 36 |
| 9. | ஈழத்துப் புராணங்கள் .. .. .. .. .. <br> கலாநிதி பொ. பூலோகசிங்கம், D.Phil. | 43 |
| 10. | தேவாரப் பண்முறை .. .. .. .. .. <br> பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி | 51 |
| 11. | இறைக்காதல் .. .. .. .. .. <br> திரு. சி. தில்லைநாதன், M. Litt. | 53 |
| 12. | Chola Inscriptions From Mantai .. .. .. .. <br> Dr. S. Pathmanathan, Ph. D. | 59 |
| 13. | மலையகத்திற் சைவம் .. .. .. .. .. <br> திரு. நா. முத்தையா | 70 |
| 14. | பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்துச் சைவமறுமலர்ச்சி .. .. .. <br> திரு. க. அருமைநாயகம், B.A.(Hons.). | 72 |
| 15. | மன்னார் மாவட்டத்தின் குடிசனத்தொகையும் வளங்களும் அபிவிருத்தியும் .. .. <br> கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை, Ph.D. | 86 |
| 16. | இலங்கையிற் சைவக்கல்வியின் எழுச்சி .. .. .. .. .. <br> திரு. வ. ஆறுமுகம், M. Phil. | 93 |
| 17. | திருக்கேதீச்சரம் — மரபுகளும் ஐதீகங்களும் .. .. .. .. <br> திரு. வி. சிவசாமி, M.A. | 98 |
| 18. | திருவளர் திருக்கேதீச்சரம் .. .. .. .. .. <br> துணைப்பேராசிரியர் ஆர். ராமசேஷன், M.A. | 101 |
| 19. | திருக்கேதீச்சரமும் திருமுறைகளும் .. .. .. .. .. <br> வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார் | 104 |
| 20. | திருவாசகத்தில் சைவசித்தாந்தம் .. .. .. .. .. <br> புலவர் ந. ரா. முருகவேள், M.A., M.O.L. | 107 |
| 21. | ஈழத்திற் கண்ணகி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் .. .. .. <br> திரு. எம். சற்குணம், B.A.(Hons) | 113 |

பக்கம்

22. The Significance of the Vel-Festival in Colombo .. .. .. 118
Mrs. Maheswari Balakrishnan, B.A (Hons.)

23. திருக்கோயிற் கிரியைகளில் இசைக்கருவிகள் .. .. .. .. 120
திருமதி ஞானா குலேந்திரன், B.A.(Hons.)

24. ஈழநாட்டில் சித்தர் மரபு .. .. .. .. .. 124
திரு. ச. அம்பிகைபாகன் B.A.

25. இலங்கையிற் சைவர்கள்: குடிசனப் புவியியல் நோக்கு .. .. .. 129
கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை, Ph.D.

26. கந்தபுராண கலாசாரம் .. .. .. .. 132
திரு. செ. தனபாலசிங்கம், B.A.

27. திருநீற்றின் பெருமை .. .. .. .. 135
சிவச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

28. பிறவிப்பிணி .. .. .. .. 138
திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை

29. ஈழநாட்டுச் சைவக்கிரியைகளும் சடங்குகளும் .. .. .. 140
சிவஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள்

30. கௌரியே காட்சியருள்வாய் .. .. .. .. 145
திரு. வ. கோவிந்தபிள்ளை

31. கூடுவோம் நாமின்றே திருக்கேதீச்சரப் பதியினிலே .. .. .. .. 146
"முருகு"

32. நாவலர் தாபித்த வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை .. .. .. 148
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

33. கேதீச்சரம் தொழவைத்த செம்மல் சித. மு. பசுபதிச்செட்டியார் .. .. .. 153
திரு. க. சிவராமலிங்கம், B.A.

34. சிவாகமஞானபாநு சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் .. .. .. .. 156
"அழலாடி"

35. திருக்கேதீச்சர ஆலயமும் மாந்தைத்துறைமுகமும் .. .. .. .. 159
சேர். கந்தையா வைத்தியநாதன்

36. சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை .. .. .. 164
பொ. பூ.

37. சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் .. .. .. .. 166
சி. க.

38. வள்ளியும் வல்லியரும் .. .. .. .. 169
திரு. சி. எஸ். நவரத்தினம்

39. சிவநெறியின் வளர்ச்சி .. .. .. .. 177
குன்றக்குடி அடிகளார்

40. சுத்த சைவ சித்தாந்தக் கொள்கைகள் .. .. .. .. 178
திரு. சு. நடேசபிள்ளை, B.A.

41. The Philosophy of Yogar Swamigal .. .. .. .. 183
Mrs. Ratna Navaratnam M.A. M.Litt.

42. முன்னேசுவரம் .. .. .. .. .. 188
செ. கு.

43. நகுலேசுவரம் .. .. .. .. 189
"முத்து"

44. ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் கோயில் .. .. .. .. 191
முல்லைமணி வே. சுப்பிரமணியம், B.A. (Hons.)

45. கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் .. .. .. 195
திரு. க. மகேஸ்வரலிங்கம், B.A.

46. வண்ணை வைத்தீசுவரன் கோயில் .. .. .. .. .. 200
திரு. சி. சிவகுருநாதன், M.A.

47. நயினாதீவு நாகபூஷணியம்மன் கோயில் .. .. 204
"தமிழடியான்"

48. வற்றாப்பளை கண்ணகையம்மன் கோயில் .. .. .. .. 206
திரு. நா. சுப்பிரமணியம், M.A.

உ

கணபதி துணை

அகில இலங்கைப் பரிசில்

# திருக்கேதீச்சரம்

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம்

பண்—நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவி னாணர
வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளுங்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டங்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே. (௧)

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினி
லெழிறிகழ் மாதோட்டங்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே. (௨)

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின
ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவ
ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி னுழல்பவ
ருயர்தரு மாதோட்டத்
தண்ண னண்ணுகே தீச்சர மடைபவர்க்
கருவினை யடையாவே. (௩)

பொடிகொண் மேனியர் புலியத ளரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடன் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேன்
மொய்த்தெழும் வினைபோமே. (௪)

தல்ல ராற்றவு ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடன் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சர
மிராப்பக னினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு
மன்பரா மடியாரே. (௫)

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப்
பொருந்தவைத் தொருபாக
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டங்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே
தீச்சரம் பிரியாரே. (௬)

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை
நடமிடு மாதோட்டந்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே
தீச்சர மதுதானே. (௭)

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட வடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே. (௮)

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநுன் னடியிணை காண்கிலார்
வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா
தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருந்தவெம் பெருமானே. (௯)

புத்த ராய்ச்சில் புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய
வேழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபாலாவி யின் கரையிற்கே
தீச்சர மடைமின்னே. (௧0)

மாடெ லாமண முரசெனக் கடலின்
　　தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல்கே தீச்சரத்
　　தடிகளை யணிகாழி
நாடு வார்க்கிறை ஞானசம் பந்தன்சொ ன
　　னவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பத்தர்காள்
　　பரகதி பெறலாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

# சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

பண் -நட்டபாடை

திருச்சிற்றம்பலம்.

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேற்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே. (க)

சுடுவார்பொடி நீறுநல்ல துண்டப்பிறைக் கீளுங்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேற்
றிடமாயுறை கின்றான்றிருக் கேதீச்சரத் தானே. (உ)

அங்கம் மொழி யன்னாரவ ரமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேற்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே. (ங)

கரியகறைக் கண்டன்னல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேற்
றெரியுமறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே. (ச)

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேற்
றெங்கம் பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. (ரு)

வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே. (சு)

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரிற்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத் தானே. (எ)

அட்டன்னழ காகவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன்னகரிற்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்னமை யாள்வான்றிருக் கேதீச் சரத்தானே. (அ)

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே. (கூ)

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொல்லக் கூடாகொடு வினையே. (க0)

திருச்சிற்றம்பலம்.

---

## சுந்தரர் தேவாரம் (திருநாட்டுத் தொகை)

ஈழநாட்டு மாதோட்டந் தென்னாட்டி ராமேச்சரஞ்
சோழநாட்டுத் துருத்தி நெய்த்தானந் திருமலை
ஆழியூரன நாட்டுக் கெல்லா மணியாகிய
கீழையில் லரனூர்க் கிடங்கிள்ளி குடியதே.

திருச்சிற்றம்பலம்

---

## திருநாவுக்கரசர் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்
 பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதீச்சரமேவினார் கேதாரத்தார்
 கெடில வடவதிகை வீரட்டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை யுய்யக் கொண்டார்
 மழபாடிமேய மழுவாளனார்
வேதி குடியுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவினாரே.

திருச்சிற்றம்பலம்

## சேக்கிழார் பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
 ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
 மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
 திருக்கேதீச்சரத் தண்ணல் செய்யபாத
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகையுற்றார்.

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்த
சொன்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார்.

திருச்சிற்றம்பலம்

# அருளாசியுரை

உ
குருபாதம்

தருமையாதீனம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

'' ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே ''

தமிழக நாகரிகமும் கலாசாரமும் பண்பாடும் பரவி விளங்கும் நாடு ஈழம். ஈழ நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற இரண்டு சிவதலங்கள் உள்ளன. அவை திருக்கோணமலை எனவும், திருக்கேதீச்சரம் எனவும் போற்றப்பெறும். கதிர்காமம் முருகப்பெருமானுக்குரிய சிறந்த தலமாக இந்நாட்டில் விளங்குகிறது.

இலங்கைவாழ் தமிழ்மக்கள் தாய்மொழிப்பற்றும் சமய உணர்வும் உடையவர்கள். தேவாரப் பாடல் பெற்ற இவ்விரு தலங்களையும் சிறப்பாகப் பேணிப் போற்றி வருகின்றனர்.

திருக்கேதீச்சரம் மாதோட்டநகரில் பாலாவித்தீர்த்தக்கரையில் விளங்கும் திருக்கோயிலாகும். நவக்கிரகங்களில் ஒன்றான கேது பூசித்த தலமாதலின் கேதீச்சரம் என வழங்கப்பெறுகிறது.

திருஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இராமேசுவரத்திலிருந்து இத்தலத்தை நினைந்து தேவாரத் திருப்பதிகங்கள் அருளிச் செய்துள்ளனர். ''கேதீச்சரத்து இறைவரை இராப்பகல் நினைந்து தொழும் அன்பர்களாகிய அடியார்கள் நல்லவராகவும் ஞானமுடையவராகவும் தம்மை அடைந்தார்க்கு அருளிய வல்லவராகவும் பிறப்பு இறப்பு அற்றவராகவும் விளங்குவர்'' என்று ஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்கின்றார்.

தேவாரம்
திருச்சிற்றம்பலம்

'' நல்லவர் ஆற்றவும் ஞானம் நன்குடையார் தம்மடைந்தவர்க்கு அருளிய
வல்லர் பார்மிசை வான் பிறப்பு இறப்பிலர் மலிகடல் மாதோட்டத்து
எல்லையில் புகழ் எந்தை கேதீச்சரம் இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத்து அரனடி இணைதொழும் அன்பராம் அடியாரே''

என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு.

''அங்கத்துறும் நோய்கள் அடியார்கள் மேல் ஒழித்தருளுபவன்'' என்றும், ''வெய்யவினையாய அடியார்மேல் ஒழித்தருள்பவன்'' என்றும் சுந்தரர் அருளிச் செய்கின்றார்.

இத்தகைய புகழ்பெற்ற இத்திருக்கேதீச்சரத் திருக்கோயில் இருந்த இடத்தைக் கண்டறிந்து அங்கு கோயில் எடுக்க வேண்டுமென்ற முயற்சியை முதலில் தொடங்கியவர் யாழ்ப்பாணம் திரு ஆறுமுகநாவலர் ஆவார். தொடர்ந்து பழநியப்பச் செட்டியார், பசுபதிச் செட்டியார் போன்ற பல நல்லன்பர்கள் இத்திருக்கோயில் திருப்பணி முயற்சியில் ஈடுபட்டவர். அன்பர் சுர்தையா வைத்தியநாதன் இத்திருக்கோயில் பணியில் மிக்க ஊக்கம் காட்டியவர். திருக்கேதீச்சரம் ஆலயத் திருப்பணிச்சபை உருவாயிற்று. தமிழகத்திலும் கடல் கடந்த நாடுகளிலும் வாழும் அன்பர்கள் பெரும் பொருள் அளித்தனர். இவ்வாறு அன்பர்கள் பலரது ஆக்கத்தினையும் ஊக்கத்தினையும் துணையாகக் கொண்டு திருக்கேதீச்சரத் திருக்கோயிலைச் சிறந்தமுறையில் திருப்பணிகள் செய்வித்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக விழா நிகழ்த்தும் திரு. நமசிவாயம் முதலிய அன்பர்களின் முயற்சியைப் பாராட்டுகிறோம்.

மகா கும்பாபிஷேக விழா இனிது நிகழவும், இலங்கைவாழ் தமிழ்மக்கள் பல்வளமும் சிறப்புற வாழவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிவம்

தருமபுரம்,
மாயூரம்.
25.6.1976

# அருளாசியுரை

உ

மதுரையாதீனம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக.

திருக்கேதீச்சர ஆலயம் புனருத்தாரணத் திருப்பணி நிறைவெய்தி நள ஆனித் திங்களில் கும்பாபிஷேகம் நடத்தத் திருவருள் கூட்டிவைத்திருப்பதையும் கும்பாபிஷேகத்தை ஒட்டி ஒரு சிறப்பு மலர் வெளியிட இருப்பதையும் அறிந்து மகிழ்கின்றோம்.

கும்பாபிஷேக விழா யாதொரு விக்கினமுமின்றிச் சிறப்பாக நடந்தேறவும் அதில் பங்கு கொள்கிற திருப்பணிக் குழு அன்பர்களும் மற்றும் பக்தர்களும் எல்லா நலங்களும் பெற்றுத் திகழவும் திருவருள்பாலிக்குமாறு எல்லாம் வல்ல திருக்கேதீச்சரநாதரை பிரார்த்தித்துப் ஆசீர்வதிக்கிறோம்.

சிவம்

மதுரை.
29.3.76

# அருளாசியுரை

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

இலங்கையில் விளங்குவதும் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய இவர்களின் பாடல்களைப் பெற்றதுமான திருக்கேதீச்சரப்பெருமான் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்வதற்காக இவ்வாலய நிர்வாகிகளும் திருப்பணிச்சபையினரும் ஆரம்பித்துக் கர்ப்பக்கிருகங்கள், அர்த்தமண்டபங்கள், விமானங்கள் முதலிய அமைப்புகளைப் பூர்த்திசெய்திருப்பதையும், மற்றும்கொடிக்கம்பம், அம்மன் சன்னிதி, இராஜகோபுரம், தேர்கள், ஸோமாஸ்கந்தர், பிக்ஷாடனர், முத்துக்குமரர், வள்ளி, தேவசேனை விக்கிரகங்கள் முதலிய அமைப்புகளைத் தொடங்கி யிருப்பதையும் அறிந்து சந்தோஷிக்கிறோம்.

ஆஸ்திகர்கள் லக்ஷக்கணக்கான தொகையினால் ஸாத்யமாகும் இத்திருப்பணிகளுக்கு தாராளமாக உதவி செய்து ஒத்துழைத்துப் பூர்த்தி செய்வித்தும், தொடர்ந்து மஹாகும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தும் ஸ்ரீ கௌரி அம்பாள் ஸமேத ஸ்ரீ திருக்கேதீஸ்வரப் பெருமானின் அருளால் எல்லா மங்களங்களையும் அடைவார்களாக.

நாராயணஸ்ம்ருதி.

ஸ்ரீமடம்,
காஞ்சிபுரம்.
*19.1.1976*

# திருக்கேதீச்சரம் வரலாறு

''மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூரு மிவ்வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் தில்லைவனத் தண்மா மலயத்து
டேறுஞ் சுழுனை யிவை சிவபூமியே''

எனச் சிறப்பாகத் திருமந்திரத்திற் கூறப்படும் ஈழநாட்டிற் கீர்த்திவாய்ந்த அதிபுராதன சிவாலயங்கள் பலவுள. அவற்றுள் முக்கியமானது திருக்கேதீச்சரத் திருத்தலமாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன மூன்றும் முறையாக அமைந்த பதி திருக்கேதீச்சரம். கேது, மயன், மகாதுவட்டா, மண்டோதரி, இராமன், அகத்தியர் முதலாம் பெருந்தவத்தோர்கள் குறைநீங்க வழிபட்டு அருள்பெற்றுய்ந்த வரலாறுடைய தலம் இது வாகும். தேவர்கள் இங்கு அர்த்தசாமக் பூசை செய்வதாக ஓர் ஐதிகமும் உண்டு. புரட்டாதி மாதப் பூர்வபட்ச சதுர்த்தசித் திதியே தேவர்கள் அர்த்தசாமப் பூசை நாளாகும். கேது வழிபட்ட தலமாதலின் இது கேதீச்சர மெனப் பெயர் பெற்றதாம்.

இக்கோயில் இருக்கும் இடத்திற்கு ''மாதோட்டம்'' எனப் பெயர் வந்த காரணம் சூரபன்மனுடைய மனைவியின் தகப்பனுடைய தகப்பன் பெயர் துவட்டா என்பதனுலாம். அவன் நெடுங்காலம் பிள்ளைப் பேறில்லாதிருந்து திருக்கேதீச்சரத்திற்கு வந்து பாலாவியில் நீராடிக் கேதீச்சரப் பெருமானை வழிபட்டு வந்தமையாற் பிள்ளைப்பாக்கியம் கிடைத்ததாம். இதனுல் அவன் அவ்விடத்தை ஒரு நகரமாக்கி அங்கு வாழத் தலைப்பட்டானும். ''துவட்டா'' என்னும் பெயர் கொண்ட அவனுல் உண்டாக்கப்பெற்ற நகரமானமையால் அது துவட்டா ஆகிப் பெரு நகரமானபோது ''மாதுவட்டா'' ஆயதாகவும், காலக்கிரமத்தில் அச்சொல் திரிபடைந்து ''மாதோட்டம்'' எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாலய மகாலிங்கத்தைப் பூசித்த தேவர்களும், முனிவர்களும் சித்தி முத்திகளைப் பெற்றிருப்பதினுல் இவ்வாலயம் மூர்த்தி விசேடம் பெற்று விளங்குகின்றது.

தன்னை அடைந்த இறந்தோர்க்குப் பிரணவ உபதேசஞ் செய்யும் இடமாகத் திருக்கேதீச்சரம் இருப்பதால், தல விசேடம் மிக்க தலமாகவும் விளங்குகின்றது.

இவ்வாலயத்தீர்த்தமாய பாலாவிக் கரையிற் பிதிர்க்கடன் செய்வோர்க்குக் கயாவிற் செய்யுஞ் சிரார்த்த புண்ணிய பலன் கூடும் என்பதனுலும், இங்கு நீராடிக் கேதீச்சரப்பெருமானை வழிபடுவோர்க்குப் பிரமகத்தி முதலிய பாவங்கள் நீங்குகின்றதனுலும் தீர்த்தவிசேடமும் பெற்ற தலமாகின்றது இவ்வாலயம்.

இந்நாட்டு ஆதிக்குடிகளாகிய நாகர்களது தலையாய வணக்கத்தலமாக விளங்கியதும் கேதீச்சரமேயாம். இதனுல் நாகநாதர் என்ற பழம்பெயர் ஒன்றும் கேதீச்சரப் பெருமானுக்குண்டு. இது நாகர்களது தொன்மையை எடுத்துக்காட்டுவதுடன், இந்நாட்டுச் சைவ நெறியினதும், திருக்கேதீச்சரத்தினதும் தொன்மையையும் வலியுறுத்துஞ் சான்றுமாகும்.

7 ஆம், 8 ஆம் நூற்றூண்டுகளில் வாழ்ந்த சிவானுபூதிச் செல்வர்களாகிய திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளாலும், சுந்தர மூர்த்தி சுவாமிகளாலும் தேவாரத்திருப்பதிகங்கள் பாடப்பட்ட பேரருள் மிக்க பெருஞ்சிவத்தலம் இதுவாகும். அப்பர் சுவாமிகளின் திருவீழி மிழலைத் திருத்தாண்டகத்தில் ''பூதியணி பொன்னிறத்தர்'' என்ற பாடலிலும், சுந்தரரின் திருநாட்டுத் தொகையில் ''ஈழநாட்டு மாதோட்டம்'' என்ற பாடலிலும், சேக்கிழாரின் பெரிய புராணத்தில் ''அந்நகரில் அமர்ந்தங்கண்--மன்னுமிரா மேசரத்து'' என்னும் பாடல்களிலும் திருக்கேதீச்சரம் இடம் பெற்றிருக்கின்றமை பெருமைக்குரியதாகும். சோழரும் பாண்டியரும் திருப்பணிகள் பல செய்ததும், வன்னி நாட்டரசரதும், யாழ்ப்பாணத்தரசரதும் இறை உணர்ச்சியால் நித்திய நைமித்தியங்கள் நியமமாகச் செய்து வளர்க்கப்பட்ட பெருமைக்குரியதுமான பெரும்பதி இதுவாகும். இத்திறச் சீருஞ் சிறப்பும் பழம் பெருமையும் மகிமையும் வாய்ந்த ஈழத் தமிழரின் இப்புண்ணிய திருத்தலம், காலச்சுழற்சியிற் சிக்குண்டு சிதைவுற்று அழிந்து மண்மேடாகும் நிலை ஏற்பட்டது.

திருக்கேதீச்சரம் இருக்கும் இடம் ''வன்னிநாடு'' என்று கூறப்படும். இவ்வன்னி நாடு 3000 சதுர மைல் பரப்பளவு கொண்டதாகும். இவ்வன்னி நாட்டிலுஞ் சிறப்பாகத் திருக்கேதீச்ச ஆலயச் சூழலில் வேறும் பல திருத்தலங்கள் அக்காலத்தில் இருந்ததாகத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவர்கள் கூற்றுப்படி திருக்கேதீச்சரம் அந்நாளில் ஒரு கோயிற் பட்டினம் (City of Temples) எனப்படுகின்றது. அந்நாளில் இவ்வாலயக் கோட்டஞ் சிற்பத்தில் வல்ல தபதிகளுக்கு உறைவிடமாக இருந்ததாகவும் கருதப்படுகிறது. இன்று காடுமண்டிக்கிடக்கும் வளமிக்க வன்னிப் பிரதேசத்தில் திருக்கேதீச்சரம்போன்று பல உன்னத சிவாலயங்கள் இருந்திருக்கின்றன என்பதும், அவை இன்று கண்ணுக்கு எட்டாது அழிந்தும், மறைந்துங் கிடக்கின்றன என்பதும் அகழ்வாராய்ச்சியாளர் தேற்றமாகும்.

அன்றைய பாலாவியின் முகத்துவாரத்தில் மாந்தைத் துறைமுகம் அமைந்து இருந்தது. அங்கே மலை போன்ற அலைகள் எழுந்தும் விழுந்தும் காட்சியளித்தன. களஞ்சியக்கட்டடங்களும், பாலத்துறையும் பாலாவியின் தென் கரையில் அமைந்து விளங்கின. அவ்விடம் இன்றும் 'வங்காலை' (வங்கம்—கப்பல், காலை—தங்கும் நிலையம்; கப்பல்கள் தங்கும் நிலையம்) என்ற பெயருடன் நிலவக்காணலாம். பாலாவியின் வட கரையில் திருக்கேதீச்சர ஆலயம் அமைந்து திகழ்ந்தது. அதையடுத்து அதன் பரிபாலகர்களின் இல்லங்களும், மக்கள் வாழ்ந்த வளம் மிக்க மாளிகைகளும் காணப்பட்டன. அந்நாளில் மாளிகைகள் நிலவிய உயர்ந்தவிடம் ''மாளிகைத்திடல்'' என்றும், அந்தணர்க்குரிய இடங்கள் ''பாப்பாமோட்டை'' என்றும், கோயில் நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சும் குளம் ''கோயிற்குளம்'' என்றும் இருந்தவை இன்றும் அதே பெயர்களில் இருந்து வருவதை நாம் காணலாம்.

திருவிராமேசுவரமுடைய மகாதேவன் கோவில் என இன்னோர் கோவில் இங்கு இருந்ததாகவும் வரலாறு இருக்கின்றது.

பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளில் திருக்கேதீச்சரம் 'இராசராசேசுவர மகாதேவன் கோவில்'' எனச் சோழர்களால் அழைக்கப்பட்டு வந்தது.

புத்த தந்தம் பகையரசன் கைக்குப் போகாது பாது காத்தற்காகக் கலிங்கத்திலிருந்து கொண்டு வரப்பட்டபோது, கொண்டுவந்தவர் மாந்தோட்டையில் இறங்கியதாகவும், அன்று இரவு அவர் ஓர் ஆலயத்தில் தங்கியதாகவும் கூறப்படுகின்றது. அவ்வாலயம் பெரும்பாலும் திருக்கேதீசுவரம் ஆகவே இருக்கக் கூடுமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

சிதம்பரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றின்படி 12 ஆம் நூற்றாண்டில் சுந்தரபாண்டியன் என்பவனால் இவ்வாலயம் பிற்காலப் பாண்டியர் சிற்பமுறையில் திருப்பிக் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாலயம் போர்த்துக்கேயரினால் இடிக்கப்பட்ட போது, இடித்த ஆலயத்திற் சூறையாடப்பட்ட விக்கிரகங்கள் மாதோட்டத்தில் முதலாவதாகப் போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட முதலாவது தேவாலய அத்திவாரத்தில் இடம் பட்டதாகக் கூறப்படுகின்றது.

மூன்று முழு நூற்றாண்டுகள் இருந்த இடம் தெரியாமல் இருந்த திருக்கேதீச்சர நிலத்தைவாங்கி அதில் கோயில் எடுத்துப் பழைமை நாட்டப்பட வேண்டுமென அவாவியவர் சைவ சமயத்தை விளக்கமுறச் செய்ய அவதாரமூர்த்தி போல் வந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களேயாம். இவர்கள் ''யாழ்ப்பாணத்துச் சமயநிலை'' என்னும் துண்டுப் பிரசுரத்தில் இது பற்றி வெளியிடப்பட்டமையை அறிந்த கொழும்பு தம்பையா முதலியாரும், சுபதார் வைத்திலிங்கமும், மாத்தளை தபாற் கோச்சு ஒப்பந்தக்காரராகிய ஆசைப்பிள்ளையும் அவர் கனவை நனவாக்க முன்வந்தனர். ஆயின் 1887 இல் நடந்த ஏலத்தில் அரசாட்சியார் விதித்த நிபந்தனைகளின் கொடூரம் காரணமாக இவர்கள் இதனைக் கொள்ள இயலாதவராயினர்.

1890 இல் கண்ணிய முள்ள சைவப்பெரியார் சிலர் யாழ்ப்பாண மாவட்ட அதிபரைக் கேட்டதை யொட்டிச் சைவர்களுக்கே இந்நிலத்தைக் கொடுக்கும் படி அரசினர்க்கு விதப்புரை செய்து அறிவித்தார் அந்நாள் மாவட்ட அதிபர்.

இத் திருக்கேதீச்சரத்தலத்திற்கு வேறு எப்பாடல்பெற்ற சிவத்தலத்திற்கும் இல்லாத தனிச்சிறப்பொன்று உண்டு. அது, ''கோயிலோ, உருவமோ, பூசையோ யாதொன்றுமே இன்றி மூன்று முழு நூற்றாண்டு

யாகும். இதன் முதற் தலைவர் சைவப் பெரியார் சு. சிவபாத சுந்தரம் அவர்கள்; செயலாளர் நீராவியடி பண்டிதர் அ. சிற்றம்பலம் ஆவார்.

## இத்திருப்பணிச்சபையின் ஆரம்பகால நோக்கங்கள் :

1. சைவசமயக் கோட்பாடுகளுக்கும், கொள்கைகளுக்கும் இணங்கத் திருக்கேதீச்சர ஆலயத்தைப் புனருத்தாரணஞ் செய்வதும், அவ்வாலயத்தையும் அதன் சொத்துக்களையும் பராமரித்தலும்;

2. சைவசமயக் கோட்பாடுகளுக்கும், கொள்கைகளுக்கும் இணங்கத்திருக்கேதீச்சர ஆலயத்தையும், இறைவணக்கத்துக்குரிய ஏனைய ஆலயங்களையும் நிருமாணித்தலும் பரிபாலித்தலும்;

3. மடங்கள், நூல்நிலையங்கள், வாசிகசாலைகள், பாடசாலைகள் முதலியவற்றை நிறுவுதலும் பரிபாலித்தலும்;

4. சைவசமயப்பிரசாரஞ் செய்தல், பரப்புதல், வளர்த்தல் முதலிய சற்காரியங்களில் ஈடுபடல் போன்றனவாகும்.

10.2.51 இல் பொதுச்சொத்துப் பரிபாலனச் சட்டத்தின் கீழ் இச்சபை பதிவு செய்து கொள்ளப்பட்டதாகும்.

திருப்பணிச்சபை உதயமாகிய பின்வரும் கோயில் உரிமைகள் நாட்டுக் கோட்டை நகரத்தவரிடமே இருந்து வந்தன. 2.8.1956 இல் கூட்டப்பட்ட ஆலய பஞ்சாயக்கூட்டத்திற் செய்து கொண்ட யோசனைப் படி, 14.9.1956 இல் திருக்கேதீச்சர ஆலயத்தில் விசேட அபிடேக ஆராதனைகள் செய்து, மங்களகரமான நல்லோரையில் நகரத்தாரின் நல்லிணக்கத்துடன் அவர்களிடமிருந்து திருப்பணிச்சபையார் ஆலயபரிபாலனத்தைப் பொறுப்பேற்றனர். கோவில் சம்பந்தமான கணக்குகளை நகரத்தார் 8.11.56 இல் சபையாரிடம் ஒப்படைத்தனர்.

இவ்விடத்தில் ஆலய பரிபாலனத்தைப்பற்றியும், அதன் கட்டமைகளைப்பற்றியும் நாம் முக்கியமாய்த் தெரிவித்தலும், ஒவ்வொரு சைவ அடியாரும் அதிமுக்கியமாய் அறிந்து கொள்ளுதலும் இன்றியமையாததாகும். கொழும்பு பழைய புதிய கதிரேசன் கோயில்களின் தர்மகர்த்தாக்களும் சபையாரும் பேசி முடிவு செய்த வண்ணம் 23.4.53 இல் கூடிய பொது நிர்வாக சபையில், சபையின் பிரமாணம் 26,27 இல் முதலாம் இரண்டாம் பிரிவிற் சேர்த்துக்கொள்ளப்பட்ட திருத்தங்களின்படி கொழும்பு பழைய, புதிய கதிரேசன் கோவில்களின் தர்மகர்த்தாக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவரும், முறையே தர்மகர்த்தாக்களாகவும், பஞ்சாயத்தர்களாகவும் சேர்க்கப்பட்டு, தர்மகர்த்தாக்கள் பதினொருவராகவும், பஞ்சாயத்தார் ஐவராகவும் அமைக்க முடிவு செய்யப்பட்டது. 29.10.53 இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சபைத் தலைவர் பஞ்சாயத்தின் தலைவராகவும், சபையின் தர்மகர்த்தாக்குழுவிலிருந்து இருவரும், பழைய புதிய ஆலயங்களின் அவ்வப்போதைய பிரதிநிதிகள் இருவருமாக ஐவரைக் கொண்ட பஞ்சாயம் அமைக்கப்பட்டது. திருத்தம் செய்த பிரமாணப்படி பஞ்சாயத்தாரே ஆலயத்தின் அசைவுள்ள அசைவற்ற சொத்துக்களையும் ஆலயத்தையும் பரிபாலித்துவரவும், ஆலயத்தின் நித்திய நைமித்திய பூசை, திருமஞ்சனம், உற்சவம், முதலியவற்றை நடத்தவும் கடமைப்பட்டவர்களாவர்.

## திருப்பணி :

இத்திருப்பணிச்சபையாரின் வேண்டுகோட்படி தமிழ் நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் மு. செல்லக்கண்ணு ஸ்தபதி, மு. வைத்தியநாதஸ்தபதி ஆகியவர்களினால் கோயிற் சிற்பாகமமுறைப்படி வரைவு செய்யப்பட்டு, காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார், அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள், சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், கட்டடக்கலைஞர் வி. நரசிம்மன் ஆகியோரது அங்கீகாரம்பெற்ற வரைபடத்திற்கு அமைய, சுவாமி அம்பாள் கோவிற் கருவறைகளும், அவற்றோடிணைந்த அர்த்த மண்டபம் வரையான பகுதிகள் கருங்கற் திருப்பணியாகவும், விமானம், இராசகோபுரம், விநாயகர் முதலான பரிவார கோட்டங்கள் பலவும் கலவைக் கட்டாகவும், நாட்டின் நாற்றிசை யோரதும் கடல் கடந்த நாடுகளாகிய மலேசியா, சிங்கப்பூர், தென்னாடு ஆகியவற்றிலுள்ள அடியார்களதும் பெரும் பொருட்செலவில் ஐந்துபேரறிவும் கண்களே கொள்ளும் வகையில் எழுந்திருக்கும் பெருங் கோயிலே நள ஆண்டு ஆனி உக (4.7.1976) இல்

களுக்கு மேலான காலம் தமிழ் வேதமாகிய தேவாரத்திருவுருவில் மட்டுமே கேதீச்சரப் பெருமான் உறைந்திருந்தார்'' என்பதாம்.

இந்நிலைக்கு உள்ளாகி இருந்த இத்திருப்பதியின் பழைய இடத்தைக் கண்டறிந்து அதில் கோயில் எடுத்துப் பழைமையை நிலைநாட்ட வேண்டுமென்ற முயற்சியில் முதன் முதலீடுபட்டவர் 19 ஆம் நூற்றாண்டில் சைவத்தின் விடி வெள்ளியாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஆவார். ''மன்னாருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்தில் திருக்கேதீச்சரம் என்னும் தேன் பொந்து ஒன்று உளது; அங்கு மருந்து ஒன்று மறைந்திருக்கின்றது; அதனைச் சென்றடையுங்கள்'' என ஆங்கிரச ஆண்டு ஐப்பசி மாசம் (1872) சைவ உலகிற்கு விஞ்ஞாபனம் ஒன்றையும் நாவலர் பெருமான் விடுத்தார்கள்.

இதனைக் கேள்விப்பட்டு அப்போது இதில் முதலாவதாக முயற்சித்தவர் திருக்கேதீச்சரத்திற்கு அண்மையில் உள்ள விடத்தல் தீவு என்னும் ஊரினராகிய திரு. வி. வேலுப்பிள்ளை என்பவராவர்.

இன்றைய திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைக்கு மூல வித்திட்டவர் நாவலர் ஐயா அவர்களே என்பதும், திருக்கேதீச்சரம் புனர் நிருமாணம் பெற வேண்டுமென முதல் முதலாகக் குரல் கொடுத்த சபை ''யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை'' என்பதும் நிறைவுகாணும் இந்நாட்களில் நினைவு கூரற்பாலவையாம்.

மாவட்ட அதிபர் விதப்புரைப்படி விஜய ஆண்டு கார்த்திகை 29 ஆம் நாள் (13–12–1893) புதன் கிழமை, அவிட்ட நன்நாளில் நடைபெற்ற ஏலத்தில் பழைய கோவில் இருந்த இடத்தோடு கூடிய 43 ஏக்கர் 3 றூட் 33 பேர்ச் காடடைந்த நிலம் நாட்டுக் கோட்டை நகரத்தவராகிய சைவப்பெரியார் ராம. அரு. அரு. பழனியப்பச்செட்டியார் அவர்களால் 3,100 ரூபாவுக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் கொள்வனவு செய்யப்பட்டது.

1894 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வண்ணை சைவத்திருவாளர் சித. மு. பசுபதிச் செட்டியார் அவர்கள் திருவாளர்கள் இ. இராமுப்பிள்ளை வைத்தியர், வை. ஆறுமுகப் பிள்ளை, தா. இராகவப் பிள்ளை முதலானோர் உதவியுடன் மேற்கொண்ட முயற்சியால், ஜய ஆண்டு ஆனி முதலாம் நாள் (13–6–1894) புதன்கிழமை யன்று பழைய ஆலயம் இருந்த இடமும், தீர்த்தக் கிணறு ஒன்றும், பழைய ஆலயப் பிரதிட்டா லிங்கம் ஒன்றும், திருநந்தி, சோமாஸ்கந்தர், கணேசர் ஆகிய மூர்த்திகளது சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன. இதன் நிமித்தம் இன்று கோயிலுள்ள இடத்தில் சிறு கோயில் ஒன்று கட்டப்பட்டு நூதனப் பிரதிட்டை செய்யப்பட்ட மூர்த்திகளுக்கு, சோபகிருது ஆண்டு ஆனித்திங்கள் 14 ஆம் நாள் (28–6–1903) ஞாயிற்றுக் கிழமை வளர் பிறைச்சதுர்த்தசியும், அவிட்ட நட்சத்திரமும் கூடிய நன்நாளில் முதலாவது திருகுட முழுக்குச் செய்யப்பட்டது. அன்று ஆதி மூலக்கருவறையில் பிரதிட்டை செய்யப்பட்ட சிவலிங்கம் காசியிலிருந்து கொண்டு வரப்பட்டுக் குடமுழுக்குச் செய்யப்பட்டதாகத் திருவிராமேசுவர வரலாறுகள் கூறுகின்றன. இதன் பின்னர் நித்திய பூசைகள் செய்யப்படுதற்கேற்ற ஒழுங்குகளும் செய்யப்பட்டன. மேலும் தொடர்ந்து பல திருப்பணிகள் செய்யப்பட்டு கி. பி. 1910 இல் இன்னொரு திருக்குட முழுக்குஞ் செய்யப்பட்டது. இத்தலத்திற் கொண்டிருந்த பத்திசிரத்தையினால் திரு. பசுபதிச் செட்டியார் தனது ஆன்மார்த்த பூசையில் திருக்கேதீச்சரப் பெருமானையே ஆவாகித்துப் பூசித்து வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு புதிதாக அமைக்கப்பட்ட ஆலயமும் பழுதடைந்து காடு மண்டிக் கிடந்ததினால் இதனைப் புதுப்பிக்கவேண்டிய நிலை இந்நாட்டுச் சைவர்களுக்கு ஏற்படலாயிற்று. பல சைவப்பெரியோரின் பல ஆண்டு முயற்சியால் இந்நாட்டுச் சைவர்களை விழிப்படையச் செய்யவும், திருக்கேதீச்சரத்தைப் பழைய உன்னத நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்திற்காகவும், ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் என்று பெயரில் இயங்கி வந்த சைவ தாபனத்தின் தொண்டர்கள் சார்பில் 1948 ஆம் ஆண்டு ஒக்தோபர் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் திருக்கேதீச்சரத்தில் சைவமாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அம்மாநாட்டிற்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்துந் தகைசான்ற சைவப்பெரியோர் பலர் வருகை தந்திருந்தனர். இக் கூட்டத்தைக் கூட்ட முன்னோடியாக நின்று அயராது உழைத்தவர்கள் வேலணையூரைச் சேர்ந்த திரு. வி. கே. செல்லப்பாச்சாமி அவர்களும், திருக்கேதீச்சரத் திருவாசக மடத்தின் கர்த்தாவாகிய திரு. சி. சரவணமுத்துச்சாமி அவர்களும், வழக்கறிஞர் திரு சு. சிவசுப்பிரமணியம் அவர்களுமாவர். அன்று அங்கு கூடிய அம்மாநாடு திருக்கேதீச்சரம் புனர்நிருமாணம் பெறவேண்டுமென்ற விழிப்புணர்வை நாடு முழுவதும் ஏற்படுத்தியது. அப்பெரு விருப்பை அடித்தளமாகக் கொண்டு 1948 ஐப்பசி 28 இல் கொழும்பு பம்பலப்பிட்டி நகரத்தார் கதிரேசன் கோயிலிற் கூடிய மன்றில் உதயமான சபைதான் இன்றைய திருக்கேதீச்சரம் ஆலயத்திருப்பணிச்சபை,

ஆண்டவன் சித்தப்படி மறைவல்லோரால் விதித்த நல்லோரையில் திருக்குட முழுக்குக்காணுகின்றதென் பதைத் திருவருள் விண்ணப்பமாகத் தெரியத் தருகின்றோம். இத்திருப்பணிக்காக இவ்வாலயம் பாலத் தாபனம் செய்யப்பட்ட நாள் 6.6.71 ஆகும்.

இப்போதைய கௌரியம்பாள் கோவிற் சுருங்கற்றிருப்பணிகள் முழுவதும் மலேசியநாட்டு எமது இளைச் சங்கத்தினராற் கட்டிமுடிக்கப்பட்டதென்பதையும் அக மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

இப்பொழுது இவ்வாலயத்திற் பிரதிட்டை செய்யப்படும் திருப்படிவங்களிற் பெரும்பாலானவை தமிழ்நாட்டு மாமல்லபுரத்து சிற்பக்கலைக் கல்லூரியிற் செய்யப்பட்டனவாகும்.

பலவித சிறப்பம்சங்களுடன் பொலிவு தர இருக்கும் இப்புதுக் கோயில் இந்நாட்டில் காணப்படாச் சில பொலிவுகளுடன் அமைந்திருக்கின்றது. ஐம்பொன்னால் வார்க்கப்பட்டிருக்கும் சோமாஸ்கந்தரும், திருமுறைக்கோயிலும், சந்தானசாரியர் கோயிலும் திருக்கேதீச்சரத்தின் கீர்த்தியையும் கவர்ச்சியையும் மேலும் மேலும் வளர்க்கப் போகின்றன என்பதனையும் கூறிவைக்க விரும்புகிறோம்.

திருக்கேதிச்சரத் திருப்பணிச்சபை உதயமான பின்னர் திருப்பணிகள் செய்து 1952 ஆகஸ்ட் மாதத்தில் திருக்குடமுழுக்கு ஒன்று செய்வித்தனர். இது இன்று மதுரைத் திருஞானசம்பந்த மடத்து குரு முதல்வராக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய பரமாசாரிய சுவாமிகள் அன்று குலசேகரபட்டினம் திரு. கே. வி. எஸ். சுந்தரமென்னும் பூர்வாசிரமப் பெயருடையவரது செலவில் நடைபெற்றதாகும். பின்னர் ஆலயச் சுற்றில் பூமியின் அடியிலிருந்தும் எடுக்கப்பட்ட பழைய மகாலிங்கத்தையும், விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், சண்டேசுரர் முதலான மூர்த்திகளையும் அந்தந்தமூர்த்திகளுக்குரிய இடங்களில் பிரதிட்டை செய்து 31.10.1960 இல் இன்னோர் திருக்குடமுழுக்குஞ் செய்வித்தனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வேளையில் பண்டைய திருக்கேதீச்சரத்தை அமைப்பதற்காக ஒல்லுமட்டும் பல்லாற்றானும் பணிகளையாற்றியும் இடர்களை அனுபவித்தும் பெருஞ்சோதியோடு இணைந்த சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களது திருக்கேதீச்சரப் பெரும்பணிகளும், சேறும் கரியும் நிறைந்து மண்மேடாய்க் கிடந்த பாலாவியை மீண்டும் வெட்டி அணைகட்டி நீர்தேங்கி ஓடும் நிலைக்காக்கி வைத்த நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. எஸ். ஆறுமுகம் அவர்களின் சேவையும் நம்மவர் நெஞ்சில் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டியனவாகும்.

மேலும், திருக்கேதீச்சர ஆலயப் புனர் நிருமாணத்தின் பொருட்டுத் திருப்பணிகள் பலவுஞ் செய்து சிவன்தாள் சேர்ந்தோர் பலரையும் மானசீகமாக இந்நேரம் திருக்கேதீச்சரப் பெருமான் நடுவிருத்தி வாழ்த்தி வணங்குவதுடன், இன்று திருப்பணிகள் பல செய்து கொண்டிருப்போர்க்கும் இனிப்பல பணிகளைச் செய்ய இருப்போர்க்கும் ஈறிலா நன்மை பெருக அருள்நெறி வந்தணையச் செய்யவேண்டுமென கௌரி பங்சராகிய திருக்கேதீச்சரப் பெருமான் திருவடிகளைப் பலகோடி தரந் தாழ்ந்தெழுந்து இறைஞ்சுகின்றோம்.

திருக்கேதீச்சர நித்திய நைமித்தியங்கள் நாள் நேரம் தப்பாது நியமமாக நடைபெற்று வருகின்றன. இங்கு நடைபெறும் அதி சிறப்புவிழா மாசிமாத மகாசிவராத்திரியாகும். பல்லாயிரக்கணக்கான அடியவர் வந்து பாவம் வினையறுக்கும் பாலாவியில் நீராடித் தேவன் எம்மையாளும் திருக்கேதீச்சரத்தில் வழிபடுவர்.


திருக்கேதீச்சரத்தைச் சூழ்ந்த இடங்களில் 1887, — 1925 — 1928 — 1950 ஆகிய ஆண்டுகளிற் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியினர் அகழ்வாராய்ச்சி நடத்தியுள்ளனர்.

இன்று இந்நாட்டுச் சைவர்களது மனம் முழுவதும் திருக்கேதீச்சரப் பக்கமே சாய்ந்திருப்பதனால், அன்று நாயன்மாரால் பாடப்பெற்ற பாலாவியின் பண்பையும், திருக்கேதீச்சரச் சிறப்பையும் யாம் ஓரளவிற்குத் திருவருள் கடைக்கணோக்காற் பெற்றிருக்கின்றனம். முழுமையையும் விரைவிற் பெறப் பிரார்த்தித்து தவுவோமாக.

இன்று திருக்கேதீச்சரம் யாத்திரை செய்வோர் தங்குவதற்கு ஏற்ற வசதியில் கோயிலைச் சூழப் பல திருமடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. திருஞான சம்பந்தர்மடம், சுந்தரர் மடம், திருவாசக மடம், நாவலர் மடம் (அப்பா மடம்) அம்மா மடம், நகரத்தார் மடம், சிவராத்திரி மடம், திருப்பதி மடம், கௌரி மடம் போன்றவை அவைகளாகும். இவர்றேடு அஞ்சலகம், குழாய் நீர், திருக்கேதீச்சர சைவப் பாடசாலை, நூல்நிலயம், கிராமச் சங்கம், மருத்துவமனை, மின்னொளி, உற்சவ காலங்களில் கிடைக்கும் அரசாங்க உதவிகள் போன்றவை திருக்கேதீச்சரத்தைப் பொலிவு செய்வனவாகும்.


இங்கு கோயில் கொண்டிருக்கும் இறைவன் பெயர் திருக்கேதீச்சர நாதர்; இறைவிபெயர் கௌரி; தீர்த்தம் பாலாவி, தலவிருட்சம் வன்னி. வரலாறு பற்றிக் கூறும் அழிந்த நூல்கள் போக, எஞ்சியவை தட்சண கைலாய மகாத்மியம், மாந்தை பள்ளு என்பனவாம். இவையன்றித் திருக்கேதீச்சரம் பற்றிய பிற்காலத்தெழுந்த செய்யுள் நூல்கள் திருக்கேதீச்சரநாதர் திருப்பதிகம் (1949) நயினை க. இராமச்சந்திரன்; திருக்கேதீச்சர நாதர் கிள்ளை விடுதூது (1963) புங்குடுதீவு பேராசான் சி. இ. சதாசிவம் பிள்ளை; திருக்கேதீச்சரநாதன் ஊஞ்சல் (1966) கொக்குவில் த. குமாரசுவாமிப் பிள்ளை; திருக்கேதீச்சரப் புராணம் (1970) அச்சுவேலி சிவஸ்ரீ ச. கு. வைத்தீஸ்வரக்குருக்கள்; திருக்கேதீச்சரத்துக் கௌரிநாயகி பிள்ளைத் தமிழ் (1976) புங்குடுதீவு பேராசான் சி. இ. சதாசிவம் பிள்ளை என்பனவாகும். உலக சரித்திரத்தின் தொன்மையில் மறைந்து கிடக்கும் வரலாற்றுப் பெருமை மிக்க இப்புண்ணிய திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் இத்திருக்கோயிலைப் புதுப்பிக்கும் புனருத்தாரண வேலைகளில் ஈடுபட்டிருக்கும் இச்சபையானது மகத்தான திருப்பணிகளைத் தலைமேற் கொண்டுள்ளது. இத் திருப்பணிகளினால் இறைவனுக்குக் கோயில் கட்டி எழுப்புகிறோம் என்பது மாத்திரம் பொருளல்ல. சைவ சமய வளர்ச்சிக்கும் அதன் முன்னேற்றத்திற்கும் ஏதுவாய் இச்சபை அமைந்திருக்கின்றதென்பதையும் வலியுறுத்த விரும்புகின்றோம். சைவ சமயக் கோட்பாடுகளையும், பண்பாடுகளையும் கடைப்பிடித்து, சிவாகமங்களும், திருமுறைகளும் காட்டும் வழியை வாழ்க்கையிலே அநுட்டித்து இறைவன் திருவடி சேர்க்கும் தலைமைக் கோயிலாகத் திருக்கேதீச்சரம் இன்று மிளிர்கின்றது. இதனைத் தொடர்ந்து வளர்க்கவும், பெருக்கவும் திருவருள் என்றென்றும் எமக்குக் கைகூட வேண்டும் என்று சைவ இனத்தின் தலை சிறந்த ஒப்பற்ற இப்புண்ணிய தலத்தின் பணிகள் ஓங்கி எம்மை ஊக்குவித்து அருளும் வண்ணம் தொண்டர் நாள் தொறுந் துதிசெய அருள் செய் அம்மை அப்பர் திருவடிகளைப் பிரார்த்தித்துத் தலைமேற்கொண்டு வணங்குவோமாக.

இந்த இடத்தில் எத்தனையோ அடியார்கள் பற்றியும், அவர்களாற்றிய தொண்டுகள் பற்றியும் தெரிவிப்பதற்கிருந்தும் காலம் போதாமையினால் அவற்றைத் தவர்த்துள்ளோம். இவற்றைப் பொறுத்தருளும் வண்ணங் கேட்டுக் கொள்ளுகின்றோம்.




திருக்கேதீச்சர ஆலய
இராசகோபுரம்

2




3



துவாரபாலகர்



துவாரசக்திகள்

6



துவார கணபதி

7




துவார சுப்பிரமணியர்

8




1894 இல் அகழ்ந்தெடுத்த விநாயகர்

9



1894 இல் அகழ்ந்தெடுத்த நந்தி


10



11



சந்திரசேகரர்




மகாலிங்கம்

13



கேது

14



சுவாமி கோயில் நந்தி

15




கல்லாலின்கீழ் சநகர், சநந்தனர், சநாதனர், சநற்குமாருக்கு அறமுரைக்கும் தட்சணாமூர்த்தி


16



உமா மகேசுவர சுகாசன மூர்த்தம்




நடராசர் - சிவகாமியம்மை - மாணிக்கவாசகர்




சமயகுரவர் நால்வர்

19



1894 இல் அகழ்ந்தெடுத்த சோமாஸ்கந்தர்

20



கௌரியம்மை

21



உற்சவ சண்டேசுரர்

22



நிருத்த கணபதி

23



லிங்கோற்பவர்

24



உற்சவ விநாயகர்

25




தெய்வயானை வள்ளி சமேத சண்முகர்

26



ஏறுமயிலேறி விளையாடும் ஆறுமுகப்பெருமான்

27




பிரமா

28




வைரவர்

29



துர்க்கை

30



கௌரி கோயில் நந்தி

31



பாவை விளக்கு

32



சண்டேசுரர்

33



ஞாயிறு (சூரியன்)

34



திங்கள் (சந்திரன்)

35



செவ்வாய்

36




புதன்

37



வியாழன்

38



வெள்ளி (சுக்கிரன்)

39



சனி

40




இராகு

41




கேது

42



பதிகம் பாடிய சம்பந்தர்

43





பதிகம் பாடிய சுந்தரர்

44



மணிவாசகர் - சம்பந்தர்

45



சேக்கிழார்

47




மெய்கண்டார்

46



அருணந்திசிவாசாரியர்

48



மகாவிஷ்ணு

49




அப்பர்சுவாமிகள்

50




மறைஞானசம்பந்தர்

51



உமாபதிசிவாசாரியர்



கஜலட்சுமி

# சிவபுராண படன விதி

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

நால்வகை யோனிகளுள் ஒரு யோனிவாய்ப்பட்டுப் பிறப்பவை யாவை அவையெல்லாம் பசுக்கள், அப்படிப் பிறத்தலில்லாதது யாது அது பதிப்பொருள் என்னும் இதுவொன்றே எளிதில் அவ்விரண்டுக்கும் தம்முள் வேற்றுமை அறியும் வண்ணம் நிற்பது. ஆதலால், வேதம் புராணம் இதிகாசம் முதலிய நூல்களிலே மற்றைத் தேவர்களெல்லாம் அப்படிப் பிறந்திறத்தல் சொல்லப்படுதலாலும், சிவ பெருமானுக்கு அது உண்டென்பது எங்காயினும் சொல்லப்படாமையாலும், அநாதி முத்தசித்துருவாகிய முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்பது தெள்ளிதிற்றுணியப்படும்.

சிவஞானசித்தியார்.

யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே.

அருணகிரியந்தாதி.

எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேநஞ் சோணேச — — ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.

உ. இப்படித் துணியப்படும் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாகிய சிவபெருமானை வேதசிவாகம விதிப்படி மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்றும், சிவனடியார்கள் என்றும் சொல்லப்படுவார்கள். இச் சைவர்கள் பல சமயத்தாருக்கும் பொதுவகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிக் கொண்டே பின்பு தங்களுக்குச் சிறப்பு வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை உடையர்களாய் ஒழுகல் வேண்டும்.

ங. பொது விலக்கணங்களாவன கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, வரைவின்மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய்தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். இந்நன்மைகளில்லாத கிரியை ஞானங்கள் சிறிதும் பயன்படாவாம்.

பட்டணத்துப் பிள்ளையார் பாடல்.

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவினும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

## சிவஞானதீபம்.

கொலையாதி நெறியகன்ற ஞானர் தானே
கூறரிய மேலான ஞான மாகுங்
கொலையாதி யகன்றொழுகுந் தவங்க டாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்கு நூலுங்
கொலையாதி யகற்றியநல் லறங்க டாமே
குவலயத்தி லொப்பரிய வறங்க ளாகுங்
கொலையாதி யகன்றுபெறுஞ் செல்வந் தானே
கூறினுயிர்க் கிதமான வாழ்வ தாமே.

எவ்வுயிரும் பராபரன்சந் நிதிய தாகு
மிலங்குமுயி ருடலனைத்து மீசன் கோயி
லெவ்வுயிரு மெம்முயிர்போ லென்று நோக்கி
யிரங்காது கொன்றருந்து மிழிவி னோரை
வல்லியமன் றூதருந் தண்டஞ் செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறு
வேதனைசெய் திடுவரென வோது நூலே.

## பதிபசுபாசவிளக்கம்.

அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
யிம்மா னுடரெல்லா மின்புற் றிருக்கின்று
ரம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமென்றுற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

கங்கையிற் படிந்திட் டாலுங் கடவுளைப் பூசித் தாலு
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னாலுஞ்
சங்கையி லாத ஞான தத்துவ முணர்ந்திட் டாலும்
பொங்குறு புலால்பு சிப்போன் போய்நர கடைவ னன்றே.

கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகுங்
கொலையுளா னுதவு மன்னங் கூறிற்பேர் விடம தாகும்
புலையர்த மனையி லுண்போன் புலையனு மாறு போலக்
கொலைஞர்த மனையி லுண்போன் கொலைஞனே யாவ னன்றே.

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனு
மலையென வுயர்ந்தா னேனு மனமய லகன்று னேனு
முலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கைய னேனு
மிலகிய விரக்க மின்றே லெழுநர கடைவ னன்றே.

## கூர்ம புராணம்.

கள்விலை பகர்வோர் கள்ளினை நுகர்ந்தோர் கள்ளருந் துதற்குடன் படுவோர்
கள்ளருந் துநரை மகிழுநர் நரகிற் கற்பகா லங்கிடந் தழுந்தி
யெள்ளறுந் திய மலப்புழு வாகி மலத்தினை நுகர்ந்துபின் னிறந்து
விள்ளருங் கொடிய ரௌரவ நரகின் மீட்டுமீட் டுழந்துநாள் கழிப்பார்.

திருவிளையாடற் புராணம்.

காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ டாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாத லாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்றான்.

௪. சிறப்பிலக்கணங்கள் புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம் என மூவகைப்படும். அவற்றுள், புறத்திலக்கணம் பத்து; உடலிலக்கணம் பத்து; அகத்திலக்கணம் மூன்று. ஆகச் சிவனடியாரிலக்கணம் இருபத்து மூன்று.

உபதேச காண்டம்.

செய்ய மேனிச் சிவனடி யார்க்கய
லெய்தக் காணு மிலக்கணம் பத்துள
மெய்யி லெய்து மிலக்கண மெய்ம்மைசா
லையி ரண்டகத் துள்ளன மூன்றரோ.

அலக்க ணிக்கு மரனடி யார்க்கென
விலக்க ணங்க ளிருபத்து மூன்றுள
பலப்ப டுத்து முதற்படு பத்தையும்
புலப்ப டுத்தி நுமக்குப் புகலுவாம்.

௫. புறத்திலக்கணம் பத்தாவன விபூதி உருத்திராக்ஷம் என்னுஞ் சிவ சின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடல், சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெருமானைப் பூசை செய்தல், சிவதருமங்களைச் செய்தல், சிவபுராணங்களைக் கேட்டல், சிவாலய தரிசனஞ் செய்தல், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை, சிவனடியார்களுக்குக் கொடுத்தல் என்பவைகளாம்.

உபதேசகாண்டம்.

வாசப் பூதி யுருத்திர மாமணி
பூசிப் பூணல் குரவரைப் பூசித்த
வாசைப் பாட்டி னரனைப் புகழுத
லீசற் குள்ளன நாம மியம்புதல்.

எந்தை யீச னருச்சனை யோம்புத
றந்தி ரச்சிவ தன்மம் புரிகுதன்
முந்தை யோன்கதை கேட்டன் முறைமையாற்
புந்தி கூர்ந்தர னாலயம் போற்றுதல்.

ஒத்த பத்த ரிடத்தல தோரிடந்
துய்த்த னீத்தலத் தொண்டரிற் றெண்டராயச்
சித்த மன்புற வீதன்முன் செப்பிய
பத்து மீங்கிவை காணப் படுதிரால்.

௬. உடலிலக்கணம் பத்தாவன சிவபெருமானுடைய பெருமையைச் சிந்திக்குந் தோறும் பேசுந் தோறுங் கண்டம் விம்முதல், நாக்குத்துடித்தல், உதடு துடித்தல், சரீர நடுங்குதல், உரோமஞ் சிலிர்த்தல், குறுவேர்வை கொள்ளல், நாக்குத் தழுதழுத்தல், ஆனந்தக் கண்ணீர் சொரிதல், வாய் விட்டழுதல், பரவச மாய்த் தன்னை அயர்த்தல் என்பவைகளாம்.

உபதேச காண்டம்.

தொண்டர் மெய்யிற் றுலங்கு மிலக்கண
முண்டொர் பத்தென் றுரைத்த துரைக்குதுங்
குண்டை யூர்த்தி சிவத்தியல் கூறுங்காற்
கண்ட முற்றொரு விம்பிதங் காட்டுதல்.

ஏதது மெந்தை யியற்கை யுணர்தொறு
நாத்து டித்தெழும் பாமை நகைப்புறம்
பூத்த முத்தந் துடித்தல்வி பூதிகொண்
டார்த்த ணிந்ததன் னங்கங் குலுங்குதல்.

மயிர்ப்பு றம்புள கித்தல் வரன்முறை
வியர்த்த றன்வச மன்றி விளம்புநாப்
பெயர்த்தி டாமையா னந்தப் பெருங்கணீ
ரயற்ப டுத்துதல் வாய்விட் டழுதலே.

பரவ சத்தின ளுகிப் படர்சடை
யரனு ளப்படத் தன்னை யயர்க்குதல்
விரவு பத்தும் விடுத்துரைத் தோமிவை
வரமு னித்தலை விர்மனக் கொள்விரால்.

எ. அகத்திலக்கணம் மூன்றுவன பஞ்சாக்ஷரத்தை மானதமாகச் செபித்தல், மானதபூசை, சிவபெருமானைத் தன்னேடு பிரிவறக் காண்டல் என்பனவைகளாம்.

உபதேச காண்டம்.

உளத்தி லக்கண மூன்றென் றுரைத்தன
மளக்கி னஞ்செழுத் துன்ன லகப்பட
வளர்க்கு மானத பூசனை மைக்கடுக்
களத்த னைத்தனை யொன்றெனக் காண்குதல்.

அ. இவ்விருபத்து மூன்றிலக்கணங்களுள் ஒன்ருகிய சிவபுராணங் கேட்டல் தான் ஓரிலக்கணமாய் நிற்றலன்றித் தன்னையும் தன்னையொழிந்த சிறப்பிலக்கணங்களையும் மற்றைப் பொதுவிலக்கணங்களையும் வருவித்தற்குக் கருவியாயும் நிற்றலுடையது. யாதிருலெனின், விபூதி ருத்திராக்ஷ தாரணம் முதலிய புண்ணியங்களையும் அவற்றின் பயனுகிய இன்பத்தையும் கொலை முதலிய பாவங்களையும் அவற்றின் பயனுகிய துன்பத்தையும் அறிவிப்பது சிவபுராணமாகலினென்க. ஆதலால், சைவ சமயிகள் யாவரும் சிவபுராணங்கேட்டல் வேண்டுமென்பது துணிவு.

கூ. புராணங்கள் பதினெட்டு. அவையாவன பிரமபுராணம், பதும புராணம், வைணவ புராணம், சைவ புராணம், பாகவத புராணம், பவிடிய புராணம், நாரதீய புராணம், மாக்கண்டேய புராணம், ஆக்கினேய புராணம், பிரமகைவர்த்த புராணம், இலிங்க புராணம், வராக புராணம், காந்த புராணம், வாமன புராணம், மற்ச புராணம், கூர்ம புராணம், காருட புராணம், பிரமாண்ட புராணம் என்பனவாம். இப்பதினெட்டும் நாலிலக்ஷத்தெண்ணுயிரங் கிரந்த முடையன.

க0. அவற்றுள், சைவ புராணம், பவிடிய புராணம், மார்க்கண்டேய புராணம், இலிங்க புராணம், காந்த புராணம், வராக புராணம், வாமன புராணம், மற்ச புராணம், கூர்ம புராணம், பிரமாண்ட புராணம் என்னும் பத்துஞ் சிவ புராணங்கள். இவற்றுள், சைவ புராணம் இருபத்து நாலாயிரங் கிரந்தமும், பவிடிய புராணம் முப்பத்தோராயிரங் கிரந்தமும், மார்க்கண்டேய புராணம் முப்பத்திராயிரங் கிரந்தமும், இலிங்க புராணம் பதினோராயிரங் கிரந்தமும், காந்த புராணம் இலக்ஷங் கிரந்தமும், வராக புராணம்

இருபத்துநாலாயிரங் கிரந்தமும், வாமன புராணம் பதினுலாயிரங் கிரந்தமும், மற்ச புராணம் பதினுலாயிரங் கிரந்தமும், கூர்ம புராணம் ஆருயிரங் கிரந்தமும், பிரமாண்ட புராணம் பன்னீராயிரங் கிரந்தமுமுடையன. ஆகச் சிவ புராணம் பத்துக்குங் கிரந்தம் இரண்டிலக்ஷத்தறுபத்தெண்ணுயிரம்.

கக. காருட புராணம், நாரதீய புராணம், வைணவ புராணம், பாகவத புராணம் என்னு நான்கும் விட்டுணு புராணங்கள். இவற்றுள், காருட புராணம் ஆருயிரங் கிரந்தமும், நாரதீய புராணம் இருபத்தையாயிரங் கிரந்தமும், வைணவ புராணம் ஆருயிரங் கிரந்தமும், பாகவத புராணம் பதினெண்ணுயிரங் கிரந்தமுமுடையன. ஆக விட்டுணு புராணம் நான்கிற்குங் கிரந்தம் ஐம்பத்தையாயிரம்.

கஉ. பிரம புராணம், பதும புராணம் என்னு மிரண்டும் பிரம புராணங்கள். இவற்றுள், பிரம புராணம் பதினுயிரங் கிரந்தமும், பதும புராணம் ஐம்பத்தையாயிரங் கிரந்தமு முடையன. ஆகப் பிரம புராணம் இரண்டிற்குங் கிரந்தம் அறுபத்தையாயிரம்.

கஙு. ஆக்கினேயம் அக்கினி புராணம். இது எண்ணுயிரங் கிரந்த முடையது.

கச. பிரமகைவர்த்தம் சூரிய புராணம். இது பன்னீராயிரங் கிரந்த முடையது.

கரு. சிவபுராணம் பத்தும் சாத்துவிகங்களாம். சத்துவகுணம் வெண்ணிறமுடையதும் சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடமுமாம். யோகிகளுக்கு ஞானம் உபதேசிக்குஞ் சிவபெருமான் தெளிபளிங்கு வடிவினராய் எங்கு முறங்காது பிராமணுதிபதியாயிருப்பர்.

கசு. விட்டுணு புராண நான்கும் தாமசங்களாம். தமோகுணம் கருநிறமுடையதும் உதாசினரூபமும் கூட கிருத்திய சமர்த்தமுமாம். நித்திரை, சோம்பு, பிரமாதம், வஞ்சனம் முதலியவைகள் தாமசங்கள். விட்டுணுகரியரும் சேஷசயனஞ் செய்வோரும் பத்தரை மோகிப்பவருமாயிருப்பர்.

கஎ. பிரமபுராணம் இரண்டும் இராசசங்களாம். இரசோகுணம் சிவந்த நிறமுடையதும் துக்கத்துக்கிடமும் சஞ்சலரூபமுமாம். பிரமாச் செந்நிறமுடையராய்ச் சஞ்சலரூபியாயிருப்பர்.

கஅ. அக்கினி புராணமும் சூரிய புராணமும் திரிகுணயுத்தமாம். அக்கினியுஞ் சூரியனும் முக்குண வடிவினராயிருப்பர்.

கசு. ஆதலால், இப்பதினெட்டினுள்ளுஞ் சிவபுராணங்கள் பத்துமே உயர்ந்தனவாம். ஆகையாற் சிவனடியார்கள் சிவபுராணங்களையே விதிப்படி மெய்யன்போடு கேட்கக்கடவர்கள்.

உபதேச காண்டம்.

நடத்து மூவறு சரிதையுண் முக்கணன் சரிதைதநா யகமென்றே
யெடுத்து ரைப்பது சுருதிமற்றுமக மிப்படி யெடுத்தோதுங்
கடுக்க ளத்தனுக் கன்புடைத் தாகிய புராணகா தையைய யன்றேன்
ஞெடுத்த சோதிமா மயமெனப் பகர்நற் றெண்டரிற் றலைநின்றோர்.

வேட்டு நிற்சிவ பதவியே வேட்டுற விரும்பிக்
கேட்டு நிற்சிவ புராணமே கேட்டுற வினைகொண்
டாட்டு மன்பதை யீறுகண் டத்தகன் றூதர்
வீட்டு முன்னரே சிவத்தினில் விருப்புற வேண்டும்.

உ0. சிவ புராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கு உரிய இடங்களாவன தேவாலயம், திருமடம், நதிக்கரை, குளக்கரை, திருநந்தவனம், யாகசாலை முதலிய சுத்த ஸ்தானங்களாகும்.

உபதேச காண்டம்.

புண்ணி யச்சிவ புராணமோ திப்பொருள் விரிப்பி
னண்ண லாலய நதிக்கரை குளக்கரை யன்றேன்
மண்ணு றுந்திரு மடமெனு மித்தலே மருவிக்
கண்ணு தற்பர ஊத்தொழு தோதுறக் கடவோர்.

பிரமோத்தர காண்டம்.

மூவ ராதி முழுதுல கத்துள
தேவர் வாழுஞ் சிவகர முன்னருந்
தூவு தண்ணற வுண்டு சுரும்பிமிர்
பூவர் சோலைப் புனித விடத்தினும்.

தீதி லாத செழுநதி தீரத்துங்
கோதி லார்கள் குழீஇய விடத்தினும்
வேத வேதியர் வேள்வித் தலேயினு
மாதி மாதவ ரம்மனே முற்றத்தும்

மற்றும் வேறுள புண்ணிய மல்குசீ
ருற்ற தெவ்விட மவ்விடத் தோதுவர்
பற்றி நாளும் பரமன் றிருக்கதை
முற்று மோதி முழுதுணர் கேள்வியார்.

உக. சிறியோர்கள் களிக்குமிடத்திலும், சூதாடுமிடத்திலும், பெண்கள் உண்டாட்டுச் செய்யுமிடத்திலும், அறிவில்லாதவர்கள் இருக்குமிடத்திலும் புராணம் படிக்கலாகாது.

பிரமோத்தர காண்டம்.

சிறியர் தீக்களி செய்யு மிடத்தினு
மறிவி லாளர்சூ தாடு மரங்கினு
முறவில் வஞ்சிய ருண்டாட் டிடத்தினும்
பொறியி லாளர் பொருந்து மிடத்தினும்.

கம்ப மால்கரி நல்கினுங் கண்ணக
னிம்பர் நாடு முழுவது மீயினுஞ்
செம்பொன் மாரி பொழியினுஞ் செஞ்சடை
நம்பன் காதை நயந்து நவிற்றிடார்.

உஉ. திருக்கோயிலிலே சிவபுராண மண்டபஞ் செய்வித்து, அதிலே சிவபுராண புத்தகத்தைப் பீடத்தின் மீது வைத்து, நாடோறும் விதிப்படி பூசை செய்து கொண்டு வரின், அது கோடி சிவலிங்கப் பிரதிட்டைக்குச் சமமாகும்.

உபதேச காண்டம்.

எந்தை கோயிலுட் டிருமுறை மண்டப மெடுத்துத்
தந்த பீடிகைத் தலத்தினிற் றிருமுறை தந்து
சிந்தை யன்பினே டாங்கதற் கருச்சனே செய்தா
லுந்து மேற்றினன் பிரதிட்டை கோடியோப் புறுமால்.

௨௩. சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கு அதிகாரிகளாவார் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நான்கு வருணத்துட்பட்டவராய், உடற் குற்றங்களில்லாதவராய், நல்லொழுக்கமுடையவராய், நிகண்டு கற்று இலக்கியவாராய்ச்சி செய்து இலக்கண நூலிற் பயின்றவராய், நீதிநூல்களையும் சைவநூல்களையும் ஓதியுணர்ந்தவராய், சந்தியாவந்தனம் சிவ பூசை முதலிய நித்திய கருமங்களைத் தவறாமல் விதிப்படி சிரத்தையோடு செய்பவராயுள்ளவர்.

உபதேச காண்டம்.

பெருகுநூற் புராண மோதிப் பிரித்துரைத் திடுவோ னன்கு
வருணத்தி லொருவ னாகிப் பொறையொடு மரபி னோங்கி
முருகவே ளடக்கிழ்த் தொண்டு முயன்றவ னாகி யம்பொற்
றிருவொடுந் தனய ரோடுங் கிளையொடுஞ் சிறக்க வேண்டும்.

சிவஞான தீபம்.

நிலையுறுதி யாசார மொழுக்கஞ் சில
நிறையறிவு கருணைதவ நெறிநி லாமற்
கொலைகளவு கட்காம முதலா வுள்ள
கொடும்பவமே தவமாகக் கொள்ளுந் தீயோ
ருலைவிலருஞ் சிவனருணூ லோத லாகா
தோதினுமங் கவருரைகொள் ளொணாது நிலம்
புலையர்மரு விடுந்தெருவிற் பொல்லாக் கும்பி
பொருந்தியிடுங் குழியதனுட் பூத்த தாமே.

௨௪. சிவ புராணஞ் சுப தினத்திற் சுப முகூர்த்தத்தில் ஆரம்பித்தல் வேண்டும். ஆரம்பிக்குந் தினத்தினும், முடிக்குந் தினத்தினும் திருக்கல்யாண முதலிய சுப சரித்திரங்கள் படிக்குந் தினங்களினும், சிவபுராண மண்டபத்தைக் கோமயத்தினாலே திருமெழுகிட்டுக் கமுகுகளையும், வாழைகளையும், கரும்புகளையும் நாட்டி மேற்கட்டி கட்டி, கொய்யப்பட்ட பட்டுக்களையும் பூமாலைகளையுந் தூக்கி அலங்கரித்தல் வேண்டும். சிவ புராண போதகர் நாடோறும் ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திர மிரண்டு தரித்துச் சந்தியா வந்தனமுஞ் சிவபூசையும் முடித்துக் கொண்டு, சிவ புராண புத்தகத்தைப் பீடத்தின் மீது வைத்துச் சந்தனம் புட்பம் தூபம் தீபம் முதலியவற்றினாலே பூசை செய்து நமஸ்காரம் பண்ணி, ஆசனத்திருந்து கொண்டு புராணம் போதித்தல் வேண்டும். அவர் அங்கே யாரையும் அஞ்சலி செய்தலாகாது.

உபதேச காண்டம்.

மங்கல தினத்திற் றேவ ராலயங் குரவர் வாயில்
பொங்குநீர் நதியின் பாங்கர் புண்ணிய தலங்கண் மன்றந்
தங்குகோ மயத்தா னிவித் தண்மலர்த் தொடைய றற்றி
யங்கண்மாக் கரும்பு வாழை நிரபிட் டமையச் செய்து.

பட்டுடை கொய்து நாற்றிப் பசுங்கமு கமைத்துப் பின்ன
ரிட்டபொற் பீடந் தன்னிற் புத்தக மினிதி னேற்றி
மட்டுவார் தூபஞ் சாந்த மலரினு லருச்சித் தாங்க
ணட்டவர் கிளைஞ ரோடுங் கேட்பது நன்மைத் தாமால்.

பிரமோத்தர காண்டம்.

ஓங்கு சீர்த்திருக் காதை யுரைக்குநர்
தாங்கு பீடிகை யின்றித் தரையிரா
ராங்கண் யாரையு மஞ்சலி செய்திடார்
தீங்கி னேருறை சிற்றவை சேர்ந்திடார்.

உ௦. சிவபுராணங்கேட்போர் நாடோறும் ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்த்திரந் தரித்து, நித்திய கரும முடித்துக்கொண்டு புத்தக பூசை முற்றியவுடனே சிவபுராண போதகரைக் கிழக்கு முகமாக ஆசனத்திருத்திச் சிவபெருமானுகப் பாவித்துச் சந்தனம் புட்பம் முதலிய வைகளினுலே நமஸ்காரஞ் செய்து, சுற்றத்தார்களோடுஞ் சிநேகிதர்களோடும், சித்திரப் பாவைபோல அசைவற மௌனமாக இருந்து, மெய்யன்போடு கேட்டுக் கொண்டு மீட்டும் நமஸ்காரஞ் செய்தல் வேண்டும்.

உபதேச காண்டம்.

ஏசறு புராண காதை படித்தெடுத் திசைப் போர்க் கென்ன
வாசன மளித்துப் பூவாற் சாந்தத்தா லவர்க்கு வேண்டும்
பூசனை யியற்றி யன்னேர் பூருவ நோக்கி வைக
மாசறு சரிதை கேட்போ னிருப்பது வடக்கு நோக்கி.

பிரமோத்தர காண்டம்.

நாய கன்கதை நாடொறுங் கேட்குநர்
தூய நீரினிற் றேய்ந்துவெண் ணீறணிந்
தேய நித்த கரும மியற்றிப்பின்
காய வைம்புல னுங்கருத் தொன்றியே.

வல்ல தேசிக னுக்கு மணித்தவி
சொல்லை நல்கி யுறுபொரு ளீந்துநல்
கல்வ வாணி கிளத்த லடங்கிவன்
புல்ல ரானவ ரைப்புறம் போக்கியே.

பத்தி யோடொல்கு பாவகத் தோடுரு
வொத்த நற்றவி சேற லொழித்துநூல்
வித்த கற்குக்கீழ் மென்றவி சொன்றியே
சித்தம் வேறறக் கேட்பது செவ்விதால்.

சிவதருமோத்தரம்.

புத்த கத்தினைப் பூசை புரிகிலார்
சித்தங் கூர்தரத் தேசிகன் றன்னையு
மத்த கைப்பல நிங்குவ தன்றியுங்
கொத்லதை சேர்நிர யக்குழி கூடுவார்.

ஆத லாற்புத்த காதி யருச்சனை
காத லாற்செய்க காமுறு வார்பலம்
வேத னுநர கக்குழி வேண்டிலா
ரேதெ னுந்தம சத்திக் கிசையவே.

சைவசமயநெறி.

படிக்கும் பொழுது பணிகுர வன்முன்
முடிக்கும் பொழுது முயன்று.

உக. நாடோறும் புராணந் தொடங்கும் போதும் முடிக்கும் போதும் காப்புச் சொல்லல்வேண்டும். காப்புக்கு முன்னும் பின்னும் ''திருச்சிற்றம்பலம்'' என்று உச்சரித்தல் வேண்டும். காப்புச் சொல்லும் பொழுது யாவருங் கும்பிட்டுக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூறு மாக்கதை கூட்டுமு ளுப்பனே
வேறு தங்கரு மத்து விரைந்துபோஞ்
சீறு சிந்தையர் செல்வத்தைத் துய்க்குங்கா
லீறு செல்லா திடையி லிழப்பரே.

மஞ்ச மேறியும் வெள்ளிலை மாந்தியும்
நஞ்ச முண்டவர் நற்கதை கேட்குந
ரஞ்சி யோவென் றரற்றிக் கழுநுனைந்
தஞ்ச மாகக் கிடந்து தவிப்பரே.

கயிலை யண்ணல் கதையை நிகழ்த்துழித்
துயில்பு ரிந்திடுந் தொல்வினைப் பாதகர்
வெயில்க ரந்தடு வெங்கொடிக் கஞ்சியே
யயின்முட் காட்டுறை கூகைய தாகுவார்.

படர்ந்த வேணிப் பரமன் றிருக்கதை —
கிடந்த சேக்கையிற் கேட்கு மறிவிலோர்
மிடைந்த மால்வரை யுச்சி யிடர்புகுந்
தடைந்த மாசுண மாகிப் பிறப்பரே.

ஈசன் காதைசொல் வானன்றி யின்னுமோர்
தேசி கன்பிற னுண்டென்று செப்புமோ
காசு நீர்க்குங் கதைவிளக் கங்கொடு
மாசின் மாக்கண் மனவிரு ளாக்கலால்.

உகூ. சிவ புராணத்தை முதற்றொடங்கி முடிவுவரையும் இடைவிடாது நியமமாகக் கேட்டல் வேண்டும். தினந்தோறும் ஒவ்வொரு சிவபத்தருக்கு அன்னங் கொடுத்தல் வேண்டும். புராணம் ஆரம்பித்த காலத்தினும், திருக்கல்யாண முதலிய சுபசரிதங்கள் படித்த காலங்களினும், காண்டங்கள் முடிந்த காலங்களினும், புராண முடிந்த காலத்தினும், சிவனடியார்களுக்கும் பிராமணர்களுக்கும் இயன்ற மட்டும் அன்ன தானஞ் செய்து, புராண போதகருக்குப் பூசை பண்ணி வஸ்திரம் ஆபரணம் முதலியவை கொடுத்தல் வேண்டும். புராண முடிந்த பின், புராணத் திரு முறையையும் போதகரையும் மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வீதிவலஞ் செய்வித்தல் வேண்டும்.

உபதேச காண்டம்.

ஆதிதொட் டீறு காறு முடக்குரு தருளிற் கேட்க
வோதிய புராணத் தெம்மா னுமையினை மணக்கு நாளிற்
காதுவேற் குமரற் கம்பொற் கதிர்முடி கவிக்கு நாளிற்
றீதறு தெய்வ யானை திருமணஞ் சிறக்கு நாளின்.

மறையவர்க் கினிய வேண்டும் போசன மரபி னீந்து
நிறை தமிழ்ப் புராண காதை நிகழ்த்தினோர்ப் பணிந்து போற்றி
யுறுகதிர்ப் பசும்பொ னுடை பொலங்கல னுவர்து நல்கி
நறைகம ழலரிற் சாந்நி னருச்சனை நடத்தல் வேண்டும்.

ருO. சிரத்தையோடு சிவ புராண புத்தகத்தை எழுதிச் சிவனடியார்களுக்குக் கொடுத்தவரும், எழுதித் தம்வீட்டில் வைத்துப் பூசை செய்தவரும், சிவ புராணத்தை வாசித்தவரும், அதற்குப் பொருள் சொன்னவரும், அதனைக் கேட்டவருஞ் சிவ பதத்தையடைவர்.

உபதேச காண்டம்.

எழுதி யோர்ந்துண ரெம்முறைச் சரிதைகேட் டிருப்பவ ரிரக்கங்கூர்ந்
தழுதல் விம்முத லுத்தடு மாறுத லணிமயிர்ப் புளகெய்தித்
தொழுத லெய்தினோர் பெறுகுவ தியாமலாற் சொலற்கரி தெவர்க்கேனும்
பழுதி லுன்மறை நுணுக்கமு மின்னணம் பகர்வது பல்லூழி.

கள்ளு யிர்த்தலுங் கொன்றையா னருட்சிவ காதை
யெள்ளில் சிந்தையால் விதிமுறை யிவிதுகேட் டுவந்து
வெள்ள வார்சடை யெம்பிரான் றிருவருள் விளைவித்
தெள்ள ருங்கதி புகுந்தவர்க் கிலக்கமா ரிசைப்பார்.

ஓது நாவினுங் கேட்பவர் செவிப்புலத் துள்ளுந்
தீதில் சிந்தையோர் சிரத்தினுந் திருவரு ளிரங்கி
மாது பாகனுற் றுறைகுவன் மாதவத் துலறயீ
ராத லாற்கதி யடைந்தன கேட்டவை யனைத்தும்.

எழுதி யன்பருக் கீந்தவர் திருமுறை யெழுதித்
தொழுது தம்மனைத் தொகுப்பவர் பெருநலந் துய்த்திண்
டொழுகு காலம்வீற் றெவ்வொரு கற்பமோ ரெழுத்திற்
கழிவி லாப்பெருங் கயிலையுற் றருங்கதி யடைவார்.

திருச்சிற்றம்பலம்

கந்தபுராணம்
சுக்கில வருஷம் சித்திரை மாதம்.
(1869)

---

# திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும்

**— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —**

''கருதநின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே''

திருக்கேதீச்சரம் திருக்கோணமலைக்கு வெகு வெகு காலத்தால் முந்தியது. திருக்கேதீச்சரப் பழைமை சரித்திரத்துக்கோ, அகழ்வாராய்ச்சிகளுக்கோ எட்டாதது. புராணேதிகாசங்களால் ஒருவாறு அறிக்கற்பாலது.

ஒரு கற்பத்தில் மேரு மலையின் மூன்று சிகரங்கள் தென் கடலில் வீசப்பட்டன. அவற்றுள் ஒரு சிகரம், இந்திரன் ஆணையால் தேவதபதியான விசுவகன்மாவால் இலங்காபுரியாக அமைக்கப்பட்டது.

மற்றெரு சிகரம் திருக்கேதீச்சரம். அச்சிகரத்தைக் கொண்டு விசுவகன்மாவின் மூத்த புதல்வனான மகாதுவட்டா, ஒரு சிறு நகரஞ் செய்து அதன் மத்தியில் ஒரு சிவஸ்தலத்தையும் அமைத்தான்; நகரம் அவன் பெயரால் மகாதுவட்டாபுரம் எனப்பட்டது. அதுவே மாதோட்டம் என மருவிற்று. மத்தியில் அமைத்த சிவஸ்தலம் சிகரத்தின் பெயராகிய திருக்கேதீச்சரம் என வழங்குகின்றது.

மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் வேறு; இலங்கை வேறு. இரண்டும் ஒரு காலத்தில் உண்டானவை.

மூன்றுஞ் சிகரம் கந்த மாதனம். இது இராமர் அணைகட்டிய போது நிலப்பரப்பாக அமைக்கப்பட்டது.

கால அடைவில் கந்த மாதனம் இராமேசுவரத்தோடும், மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் இலங்கையோடும் இணைந்துவிட்டன.

மற்றொரு கற்பத்தில் இமாசல கைலாசத்தின் மூன்று சிகரங்கள் தக்ஷிண பூமியில் வீசப்பட்டன. அவற்றுள் ஒன்று திருக்கோணமலை; அது இலங்கையில் வீழ்ந்தது.

மற்றவை திருக்காளத்தியும், திரிசிராப்பள்ளியுமாம்.

மூன்றுந் தக்ஷிண கைலாசங்கள்.

திருக்கோணமலையைக் கைலாசம் என்று வழங்குவது போல, மேரு சிகரமாகிய திருக்கேதீச்சரத்தை அவ்வாறு வழங்குவதில்லை.

மகா துவட்டாவுக்கு இருவர் தம்பியர். ஒருவர் மது; மற்றையவர் மயன். மயன் புதல்வி மந்தோதரி. நித்திய கன்னிகைகள் வரிசையைச் சேர்ந்த உத்தமி மந்தோதரி; இராவணன் மனைவி. இராவணன் மணக்கும் போது அவள் வயிற்றிற் சிவகர்ப்பமாயிருந்து இலங்கையிற் பிறந்தவள் சீதை. இவ் வரலாறு இடைப்பிற வரலாயினும் இங்கே அறியத் தக்கது.*

வெகு காலத்துக்கு முன்னமே திருக்கேதீச்சரத் தலம் மண் மழை பெய்து மணல் மூடிப் பின் காடாய் விட்டது என்று கர்ண பரம்பரைக் கதையுமுண்டு.

சமய குரவர்களாகிய மூவர் நாயன்மார் காலத்திலும் திருக்கேதீச்சரம் காடாகவே யிருக்கலாம்; தேவாரப் பாடல்களிற் காணப்படும் திருக்கேதீச்சுவரம் அவர்கள் அகக் காட்சியிற் காட்சியளித்ததாக லாம் எனக் கருதலாம்.

'கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடை யா வே' என்ற ஞானசம்பந்தம் பிள்ளையார் வாக்கில் 'கருத நின்ற கேதீச்சரம் கருத்தகத்தே கண்ட மறைந்த கேதீச்சரம் என்னலாம்.

திருக்கேதீச்சரம் சம்பந்தப் பிள்ளையாராலும் சுந்தரமூர்த்தி நாயனுராலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. திருக்கேதீச்சரம் என்னும் நாமம் திருநாவுக்கரசர் திருநாவால் உச்சரிக்கப்பட்டது. மந்திர சக்தி வாய்ந்தது. இவ் வாற்றல் தனக்குத் தானே இணையாய தனிச் சிறப்பு வாய்ந்த புனிதத் தலம் திருக்கேதீச்சரம்.

புனிதம் மிக்க தைவிக சிவத்தலங்கள் வழிபடும் பக்குவர்களருகிய காலத்தில் மறைவதும்; பக்குவர் சிலரின் தவ விசேடத்தினுல் ஒரு பாகமோ முழுவதுமோ வெளிப்படுவதும் இயற்கை என்று அறிந்தோர் கூறக் கேட்டதுண்டு.

---

*இங்கே காட்டப்பட்ட வரலாறுகளுக்கு ஆதாரம், ஈழ மண்டல சதகத்திலுள்ள 'சுருதி பயில் அறிஞன் துவட்டா' என்று தொடங்குந் திருக்கேதீச்சரப் பாடலும், 'தென் கயிலையாகியொளிர் திரிகோணமலை' என்ற பாடலும் அவற்றின் உரையுமாம்.

சதக மியற்றி உரையுஞ் செய்தவர் பௌராணிகரும், உரையாசிரியருமான ம. க. வேற்பிள்ளை. இவர் நாவலரின் மாணவராவர்.

எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்து, சென்ற நூற்றாண்டு மத்தியில் ஒரே ஒரு ஆறுமுகநாவலர் இருதயத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டது. ''யாழ்ப்பாணச் சமய நிலை'' என்ற துண்டுப் புத்தகத்தில் இறுதிப் பந்தி,

''சைவ சமயிகளே! தேவாரம் பெற்ற சிவஸ் தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது; மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்கு திருஞான சம்பந்த மூர்த்திநாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிக மொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் வட மாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத் திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ் விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையாத தென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்து விடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்.''

எனக் கூறிச் சைவர்களை ஊக்கப்படுத்துகின்றார் நாவலர் பெருமான்.

திருக்கேதீச்சர நிலம் அரசாங்கச் சொத்தாய் வடமாகாண அதிபதியின் அதிகாரத்தில் இருந்தது. நாவலரின் இளமைக் காலத்தில் 'டைக்கும்' மத்திய காலத்தில் 'றசலும்' மாகாண அதிபதிகளாயிருந்து நாவலருக்கு உறுதுணை புரிந்தவர்கள். அவர்கள் காலத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டிருக்குமாயின், நாவலர் பெருமானே விதிப்படி சிவாலயம் எடுத்துப் பூசைக் கிரமம் முதலியன பற்றிப் பத்ததியுஞ் செய்து வைத்திருப்பார்.

றசலைத் தயாநிதி என்கின்றார் நாவலர். றசலுக்குப் பின் வந்தவர் துவைனம். திருக்கேதீச்சர நிலத்தை துவைனம் மூலம் நாவலர் பெற விரும்பவில்லை. காரணம் துவைனத்தின் உத்தியோக நடைமுறையில் நாவலருக்கு அருவருப்பு உண்டாயிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம்.

பெரியோர்கள் நீதி நெறிக்குப் புறம்பானவர்களிடம் எதையும் பெற விரும்புவதில்லை. இதற்கு எத்தனையோ உதாரணங்கள் உள. நீதிக்குப் புறம்பானவர்களின் உதவி, எடுத்த கருமத்தை மாசு படுத்தும் என்பதைப் பெரியோர்கள் நன்கு அறிவார்கள்.

நாவலரின் அந்திய காலத்தில் துவைனத்தின் அநீதி மிகப் பிரகாசமாயது. மழையின்றிய பஞ்ச காலத்திலும், பேதி நோய்க் காலத்திலும், ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய அரசாங்க உதவிகளை துவைனமும், கீழுள்ளவர்களும் அப்படியே உறிஞ்சிவிட்டார்கள்.

சமயம்! சமயம்!
இது நல்ல சமயம்!
வெகு சனத் துரோகம்!

என்ற துண்டுப் புத்தகங்கள் துவைனத்தின் மீது நாவலர் கொடுத்த வச்சிர குலிசங்கள்.

'யாழ்ப்பாணத்துக் கச்சேரி அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலீசு **(College)** அதற்குத் தலைவர் **(Principal)** துவைனந் துரை; உபாத்தியாயர்கள்' பாவந் தோன்றிய நாளையிற் றோன்றிய பாதகன்' ஆகிய முதலியார் முதலிய சில உத்தியோகத்தர்கள்; அவைகள் படிப்பிக்கிற தாலுகாப் பள்ளிக் கூடங்கள் **(Taluk Schools)** சில தலைமைக்காரர்களுடைய தானங்கள்.

(இது நல்ல சமயம் — 5ஆம் பக்கம்)

ஏழைகளுக் கிரங்கி இவ்வாறெழுதிய நாவலர் பெருமானின் தைரியம் பற்றி என்ன நினைக்கலாம். மேற் காட்டிய மூன்று கட்டுரைகளும் நாவலர் பிரபந்தத்தில் உள்ளவை. யாவரும் படித்து நாவலர் யார் எத்தகையினர்! எனபதை ஊன்றி உணரக் கடவர்கள்.

...ர்லநாவ குடியேற்ற நாட்டு மந்திரி பரியந்தம், துவைனத்தின் ஊழல்தனை எடுத்துக்காட்டி வாதித்தார். துவைனம் தம்மீது ஏற்றும் குற்றங்களைப் பரிகரியாத வழி உத்தியோக இழப்பு ஒன்றோ உடற்றண்டமும் பெறும் நிலை நேர்ந்தது. துவைனம் செய்வதறியாது திகைத்தார்.

இந்நிலையில் நாவலர் பெருமானுக்கு அழைப்பு வந்து விட்டது. நாவலர் மறைந்தார் என்ற வார்த்தை கேட்ட அக்கணமே, துவைனத்திற்கு விழிப்புணர்ச்சி உண்டாயது. கச்சேரிக்கு விடுதலை அளித்து, கச்சேரி உத்தியோகத்தர் அனைவரையும் நாவலர் பெருமானின் இறுதிச் சடங்கில் பங்கு பற்றச் செய்தார். அடுத்த சில ஆண்டுகளுக்குள் திருக்கேதீச்சர நிலத்தை அந்நிய மதத்தர் கைப்படாமல் வெகு திறமையாகச் சைவர்களுக்கே ஆக்கி வைத்தார் துவைனம். நாவலர் பெருமான் துவைனத்தைக் கேளாமலே காரியம் நிறைவேறியது.

நாவலர் பெருமானின் தவ சக்தி இருந்தவாறு!!

---

# ஈழமும் பதிகம் பாடிய சம்பந்தரும்

**— ஏழாலை மு. ஞானப்பிரகாசம்**

வேதாகமங்களில் வரும் முனிவர்களுள் ஈழ நாட்டுடன் தொடர்பு பெற்றவர்கள் புலஸ்தியர், அகஸ்தியர், துவட்டா, மயன் முதலியோர். இவர்களுள் புலஸ்தியர் ''சப்த ரிஷிகளுள்'' ஒருவர். அவரது வழித்தோன்றல்களே குபேரன் இராவணன் ஆகிய இருவரும். குபேரன், யக்ஷர்கள் தலைவனாயிருந்து, இந்த ஈழநாட்டை அரசு புரிந்து, சிவபிரான் தோழமைபெற்று, வடதிசைத் திக்பாலகர் பதவி பெற்றான் என்று புராண இதிகாச நூல்கள் கூறுகின்றன. கோயில்களில் நிகழும் மண்டல பூசை முதலியவற்றில் குபேரனை வடதிசைத் திக்பாலக மூர்த்தியாக வைத்து, ஆசனம் மூலம் மூர்த்தி முதலியன கற்பித்து, 'ஓம் குபேராய நம:' என அர்ச்சித்து ஆகமங்கள் பூசித்து வருவதை இன்றும் நாங்கள் கண்டு வருகின்றோம். குபேரனுக்குத் தம்பி முறை பூண்ட இராவணனைப் பற்றி இவ்விடத்தில் கூறுவது மிகையாயினும், அவன் பரம சிவபக்தன் என்பதும், கடைசியில் வாஹனவுருபியாக இருந்து, எல்லா நாடுகளிலுமுள்ள எல்லாச் சிவாலயங்களிலும் சிவபிரானைச் சேவித்து, சுமந்து வரும் பெரும் பதவி பெற்றுள்ளான் என்பதும் எங்கள் உள்ளங்களில் பதிந்து கிடக்கும் பெரிய சைவ சமய உண்மையாகும். இராவணன் மனைவி மண்டோதரியோ திருவாசகப் பெரும் புகழ் படைத்தவள்; பெரிய சிவபக்தையாய் விளங்கியவள்; தெய்வ அநுக்கிரகம் வாய்க்கப் பெற்ற சப்தமாதர்களுள் ஒருத்தியாகப் போற்றப்படுபவள்; சிவபக்தி வாழ்வில், தன் பர்த்தாவாகிய இராவணனுக்கே வழிகாட்டியாகத் திகழ்ந்தவள். சிவபிரான் அவள் பொருட்டு நிகழ்த்திய திருவிளையாடல்கள் இரண்டு. ஒன்று அலை கடல் மீனச நடந்து, கடலைக் கடந்ததாகிய திருவிளையாடல்; மற்றையது, அவள் வேண்டுகோளுக் கிரங்கி, பேரழகு வாய்ந்த மழவிளங்குழந்தை வடிவில் அவளுக்குக் காட்சி கொடுத்தது. இவ்வரலாறு உத்தரகோச மங்கைத் தலபுராணத்தில் கூறப்படுகிறது. மேலே தரப்பட்ட செய்திகள் புராண வரலாறுகளாயினும், அவையே ஈழநாட்டுச் சைவ சமய வரலாற்றுக்கு பின்னணியாய் நிற்பன.

**சைவ அரசர்களும் பிரதானிகளும்:**

கிறிஸ்தவ சகாப்த ஆரம்பகாலத்துக்கு முன்னர், இந்த ஈழநாட்டில் பிறந்து வளர்ந்து அரசாண்ட அரசர்கள் பிரதானிகள் முதலியோர்களின் பெயர்களை 'மஹாவம்சம்' என்ற சமய சரித்திரநூல் தெளிவாகக் கூறுகிறது. மூத்த சிவன் என்றும், ஐயாசிவன் என்றும், மகாசிவன் என்றும், சிவன் என்றும், ஸ்ரீ கண்டசிவன் என்றும், சண்டசிவன் என்றும்,சண்டமுக சிவன் என்றும், தனசிவன் என்றும் பெயர்களைத் தாங்கியபற்பலர், அரசர்களாகவும் பிரதானிகளாகவும் இந்த ஈழநாட்டில் இருந்திருக்கின்றனர் என்பதை மஹாவம்சம் என்ற நூலிலிருந்து நாங்கள் அறிகிறோம். இப் பெயர்களிலிருந்தே இந்நாடு எவ்வளவு தூரம் சைவ வாழ்விலும், சிவவழிபாட்டிலும் ஊறி, முதிர்ந்து, முறுகி இருந்தது என்பது தெளிவாகின்றது.

## ஈழநாடு—சிவபூமி:

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில், சிவசாந்நித்தியத்திற்குப் பெயர் பெற்ற க்ஷேத்திரங்கள் பல உளவாயினும், வடக்கேயுள்ள உத்தரகைலையும் தெற்கேயுள்ள தக்ஷிணகைலையும் (ஈழநாடும்) சைவ எல்லைப் பூமிகளாயிருத்தலின் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தனவாம். சைவாகமங்கள், சிவபிரான் தாமாகவே விரும்பி, சுயம்புவாய் எழுந்தருளியுள்ள நாடித்தலங்கள் மூன்றனுள், ஈழநாடும் ஒன்றெனப் பகர்வன வாயின. அதனுற்போலும், கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த சைவ நான்மறை யோகச் செல்வராகிய திருமூல தேவநாயனுர், இலங்கை எனப்படும் ஈழநாடு 'சிறந்த சிவபூமி' என மூன்று இடங்களில் குறிப்பிடு வாராயினர்.

## 7 ஆம் நூற்றுண்டில் ஈழநாட்டின் சைவ நிலை.

ஈழநாட்டில் நிலவிய சைவ வாழ்வையும், சைவ நெறியையும், சைவச்சால்பையும் முதன் முதலாகத் தெளிவாக வெளிப்படுத்தியவர் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளே. சுவாமிகள் கி. பி. ஏழாம் நூற் ருண்டினர்.

இராமேஸ்வரக் கரையிலிருந்து, அதிதூர வணக்கம் செய்து, ஈழநாட்டிலே மாதோட்ட நகரை நோக்கி நிற்கும் சுவாமிகளுக்கு, சூக்குமத்திற் சூக்குமமாயும், பெரியதிற் பெரியதாயும் திகழ்ந்து, ஈழநாட்டை அருளாட்சி புரிந்து நிற்கும் சுயம்புலிங்கம் தோன்றிக் காட்சி அளிக்கிறது. சுயம்பு மூர்த்தியாகிய சிவ பிரான் திரிபுராந்தக மூர்த்தியாய் 'உடும்பு ஒன்றைப் பற்றி நிற்பது போல' திருக்கேதீச்சரத்தை இறுகப் பற்றிக்கொண்டு நிற்பதையும், பற்றியது மாத்திரமன்றி அதனையே சதா கருதிக் கொண்டு நிற்பதையும், ஆதரித்துக் காதலித்துக்கொண்டிருப்பதையும் ஒரு அதி அற்புத அருட்காட்சி மூலம் காணுகின்ருர். அக்காட்சி யால் விழுங்கப்பட்ட சுவாமிகளின் பாடல்கள் திருக்கேதீச்சரப் பூமியீது பாடப்பெற்ற பாடல்களாகவே அமைந்துவிடுகின்றன. அதிதூரத்திலிருந்து அந்தப்பூமியைத் திசை நோக்கிக் 'கைதொழ கெடும் இடர் வினை தானே' என்கின்ருர். அந்தப்பூமியைத் தொழுதற்கு எழுவோம் என எழுந்து நின்ருலே 'தொழுதெழக்கடு வினை அடையாவே' என்கின்ருர். எழுந்து அப்பூமியை அடைவோம் என மனத்தால் உன்னி அடைபவருக்கு 'அருவினை அடையாவே' என்கின்ருர். அப்பூமியை அடைந்து, அப்பூமியின் பரம இரகசியமாகிய மூர்த்தியை ஒருவர் கண்டுகொள்வாராகில், அவர் பாதங்களில் வீழ்ந்து கும்பிடுவாராகில், 'மொய்த்து எழும் வினை போமே' என்கின்ருர். இவையெல்லாம் இங்ஙனமிருப்பதனுல், ஈழநாட்டு மாதோட்டத்திலே, பாலாவிக் கரையிலேயுள்ள 'அந்தர் கேதீச்சரம் அடைமின்னே! அடைமின்னே! என்றும் அறை கூவுகின்ருர். சுவாமிகள் பதிகம் பாடும் பொழுது, சில தலங்களில் அவற்றின் திருவிழாப் பொலிவினையே புகழ்ந்து பாடுவார்; சில வற்றில், ஆங்குள்ள வேத ஒலி, கீத ஒலி முதலியவற்றிற்கே முதன்மை கொடுத்துப் பாடுவார்; இன்னும் வேறு சிலவற்றில், ஆங்குள்ள அபிஷேக பூஜாதிகளையும், அர்ச்சனை புரிந்தொழுகும் அந்தணர் ஒழுக்க விசேடத்தையுமே சிறப்பித்துப் பாடுவார்; இன்னும் சிலவற்றில், அடியார்கள் உருத்திர பல் கணத் தார் போல நின்று, அட்டு இட்டு உண்டு ஒக்கலிக்கின்றதாகிய காட்சியையே பாடுவார். எங்கள் ஈழநாட்டைப் பொறுத்த மட்டில், சுவாமிகள் தலத்தின் பெருமைக்கே, அதாவது பூமியின் மகத்துவத்துக்கே முதலிடம் கொடுத்துப் பாடுவாராயினர். ஈழநாடு ஒரு சிவபூமி என்ற கருத்துக் காட்சியே சுவாமிகள் உள்ளத்தில் மேலோங்கி நின்றதனுற்போலும். வேற்றுச் சமயத்து அரசர்கள் காலத்துக்குக் காலம் வந்து அதிருதி செய்து போவாராயினும், ''கேதீச்சரம்'' என்ருல் முக் காலத்தும் கேடில்லாத கேதீச்சரம் தானே! எனக் கூறி அருளுகின்ருர்.

## பதிகம் பாடிய சம்பந்தர் ஈழநாட்டை வாழ்த்தி அநுக்கிரகித்தமை :

சுவாமிகள் காலத்தில் வாழ்ந்த ஈழம் வாழ் சைவத்தமிழ் மக்களின் அறிவு நிலையையும், அன்பு நிலையை யும், தொண்டு நிலையையும் சுவாமிகள் பாடியருளிய பாடல்கள் மூலம் காணலாம். திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் கவுணிய கோத்திரத்து அந்தணர் குலத்திலே அவதரித்து, அக்காலத்திலிருந்த சைவப்

பொதுமக்களுடன் ஒன்றுபட்டு, அப்பொது மக்கள் போல, தாமும் கோயில்களெல்லாம் சென்று சென்று சுவாமிதரிசனம் செய்து வந்த சைவத்தனிப் பெருந்தலைவர். சுவாமிகள் காலத்து ஈழம் வாழ் சைவ மக்களின் சைவ அறிவு நிலை, இக்காலம் வாழ் சைவ மக்களின் அறிவு நிலைக்கு குறைந்தது என்று நாங்கள் கருதுவதற்கு ஒரு நியாயமுமில்லை. அவர்கள் சைவ அறிவு நிலை சிறந்திருந்தமையால்தான், சுவாமிகள் அவர்கள் அறிவிற் கலந்திருந்த—அறிவிற்குகந்த சிவபிரான் பிரபாவங்களை தாம் பாடியருளிய திருக்கேதீச்சர, திருக்கோண மலைப் பதிகங்களில் முழங்குவாராயினர்.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளின் தமிழை, ''மெல்லென முழங்கும் மந்திரத்தமிழ்'' என்றும், ''பண்டைய வேதங்களின் தத்ரூபம் பெற்ற அற்புதத்தமிழ்'' என்றும், "தன்னிகரில்லாத் தனித்தமிழ்" என்றும் அறிஞர்கள் பலர் கூறி வந்திருக்கின்றனர். அத்தகைய மந்திரத் தமிழ் மழையையே பெரிய தமிழ் முகிலாகிய 'ஞானசம்பந்தம்' இராமேஸ்வரக் கடற்கரையில் நின்று மின்னி முழங்கி, எழுந்து படர்ந்து வந்து ஈழநாடு எனப்படும் புண்ணிய பூமி மீது பெருமழையாய்ப் பொழிந்து சென்றது; அதனுல் நாமெல்லாம் எற்றைக்கும் திருவருள்நெறி உடையோமாயினேம்.

பதிகம் பாடிய சம்பந்த சுவாமிகள் அரிய பெரியவராய் இராமேஸ்வரக்கரைக்கு வந்து, ஒரு நாள் ஒரு பொழுது மாத்திரம் எங்களை நோக்கி நின்று எங்கள் மீது திருவருட் பெருமின்னேற்றம் செலுத்திய சிறப்பினுலன்றே, ஈழம் வாழ் சைவமக்களாகிய எங்கள் நெறி என்றென்றும் சைவப் பொதுமக்களுடன் கலந்து ஒன்று பட்டு வாழும் கோயிற் பெரு நெறியாயிற்று. அவரது அடிச் சுவட்டில் வாழும் வழக்கினுலன்றே, சரியை யாளர்க்கும், கிரியையாளர்க்கும், யோகியர்க்கும், ஞானியர்க்கும் பொதுமையில் நின்ற அவரது அருவுருவ மூர்த்தி வணக்கத்தையே யாமும் எங்கள் மூலவர் வணக்கம் எனக் கொண்வோமாயினேம். எங்களுக்குள் போக இயல்பினர் போக மூர்த்தியை வணங்குதற்கும், யோக இயல்பினர் யோக மூர்த்தியை வணங்குதற்கும், கோர இயல்பினர் கோர மூர்த்தியை வணங்குதற்கும், தம் பதிகப்பாடல்கள் வாயிலாக ஆணைதந்து நிற்பவர் திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகளே.

## பதிகம் பாடிய சம்பந்தரின் குருத்துவ விசேடம்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் திருநெறிய தமிழில் ஈடுபட்டு, அவரது தமிழ் மொழி நடைத்திறனையும் அந்தத் தமிழ் நடையின் பொருளையும், அந்தப் பொருளாற் போந்த பயனையும் உணர முயன்ற பெரியோர் பலர், எமது ஈழநாட்டிலே, ஆரியச்சக்கரவர்த்தி அரசகேசரி காலந் தொடக்கம் இற்றை வரையும் வாழையடி வாழையாய் இருந்து வந்திருக்கின்றனர். அவ்வாறு வாழ்ந்து வந்த சைவச்சான்றோர் பலருள் தலைமாமணியாய்த் திகழ்ந்தவரே தமிழ்வசனநடை கைவந்த வல்லாளராகிய எங்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் பெரிய அநுக்கிரக வெள்ளத்தில் திளைத்து சைவத்தமிழ்ப் பொதுமக்களுடன் ஒன்று பட்டு, கோயில் நெறியில் நின்று, ஈழநாட்டிலும், தமிழ் நாட்டிலும் பிரகாசித்துச் சென்ற எங்கள் நாவலர் பெருமான் பிதுரார்ச்சிதமாக எமக்கு வழங்கிய ஆத்ம ஞானச் சொத்தே, எங்கள் மத்தியில் இன்று 'சைவசித்தாந்தம்' என்ற பெயருடன் விளங்கி வருகின்றது.

'' ஆழ்க தீயதெல்லாம், அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே ''

—தேவாரம்.

# நித்திய பூசையும் அதன் தத்துவமும்

— தருமபுரம் சிவாகமரத்னகரம் எஸ், சுவாமிநாதசிவாசாரியர் —

நான்முகம்: சர்வக்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசக்தி, அநந்தசக்தி, சுதந்திரத்வம் என்னும் ஆறு குணமுடையவராய், அஷ்டமூர்த்தியாய் விளங்கும் சிவபெருமான் எங்கும் வியாபகமாக இருப்பினும், சிவலிங்கம் முதலிய திருமேனியும் குருவும் சங்கமமும் இடமாகிக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் நெய்போல் விளங்கி நிற்பர்; மற்றவிடங்களில் பாலில் நெய்போல் வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே ஆன்மாக்கள் யாவரும் பரமபதியான சிவபெருமானை குரு, லிங்க, சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபட வேண்டும்.

இவ்வழிபாடு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாலும் செயற்பாலதேயாகும். மலம்நீங்கிய சிவஞானிகளும், பூர்வமலவாசனை தாக்காமையின் பொருட்டும் மேன்மேலும் சிவானந்தம் வளருதற் பொருட்டும், சிவலிங்கம் முதலிய திரு மேனிகளை வழிபடுவர். ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் ஏற்றும் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றார். இவற்றை முறையாக வழிபடுவோர் பரமாசாரியரால் உண்மைஞானம் பெற்று முத்தியடைவர்.

> ''மூர்த்தி தலம் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
> வார்த்தை சொலசற்குருவும் வாய்க்கும் பராபரமே.''

— தாயுமான சுவாமிகள்.

விபூதி இல்லாத நெற்றி வீண்; சிவாலய மில்லாத ஊர் பாழ்; ஈஸ்வர பூஜை செய்யாத ஜன்மா பாழ்; சிவனைக் கூறாத வித்தை பாழ் என்று ''ஸ்மிருதிசங்கிரஹம்'' என்னும் நூல் கூறுகிறது.

பிறவிகளுள் சிறந்த மானுட ஜன்மத்தை முற்பிறப்பில் செய்த புண்ணியமேலீட்டினால் அடைந்த யாவரும் பசுபதியாகவும், உலகிற்குக் கர்த்தாவாயுமுள்ள சிவபெருமானைப் பூஜிக்க வேண்டும். அந்த சிவ பூஜையானது ஆன்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை என இரு வகைப்படும். ஆசாரியாரால் தீக்ஷை செய்விக்கப்பட்டு, அந்தத் தீக்ஷாகுருவால் கொடுக்கப்பட்ட மண்டலம், க்ஷணிகம், ஸ்படிகம் முதலான லிங்கங்களில் ஆன்ம நலம் கருதிச் செய்யப்படுவது ஆன்மார்த்தமாகும். பரார்த்த பூஜை என்பது சிவாலயங்களில் தனக்கும் பிறர்க்கும் அருள் பாலிக்கும் பொருட்டுச் சிவாலயங்களில் விளங்கும் சுயாம்புவம், தேவிகம், திவ்யம், மானுஷம், ஆர்ஷம், ஆசுரம், பாணம் என்ற ஏழுவித லிங்கங்களுள் ஒரு லிங்கத்தில் ஆதிசைவர்கள் எனப்படும் சிவாசாரியாரைக் கொண்டு செய்விக்கப்படும் பூஜையாகும்.

> ''எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
> உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
> அண்ணலார் தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்
> பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து''

—பெரிய புராணம்

இருபத்தெட்டு ஆகமங்களையும், இருநூற்றிருபத்து நான்கு உபாகமங்களையும் தோற்றுவித்த பரம கருணாநிதியாகிய இறைவன் விரும்புவது சிவாகமத்தினால் செய்யப்படும் பூஜை என்பதை உணர்ந்த உமாதேவியார்,

''இங்கு நாத! நீ மொழிந்த வாகமத்தியல் பிறழுனையர்ச்சனை புரியப்
பொங்குகின்ற தென்றிசை யென்றிறைஞ்சிப் போகமார்த்த பூண்முலையாள் போற்றி''

என்றபடி, ஆலய வழிபாட்டின் பெருமையும், ஆகமங்களால் அருச்சிப்பதால் இறைவனுக்கு ஏற்படும் அளவு கடந்த அன்பையும், அவ்வன்பினால் ஆன்மாக்களுக்குக் கிடைக்கும் அறம்பொருள் இன்பத்துடன் பேரின்பத்தையும் உலக மக்களுக்கு உணர்த்தவே திருவுளங்கொண்ட உமாதேவியார் காஞ்சிபுரம், திருவானைக்கா, மாயூரம், மயிலாப்பூர் முதலிய இடங்களில் சிவபெருமானைப் பூஜித்தாள் என்று அறியப்படுகிறது.

எல்லாக் காரியங்களையும் நிறைவு செய்வதாலும், ஆன்மாவிற்கு ஞானத்தை அளிப்பதாலும் சிவபூஜை எனப் பெயர்பெற்றது. அத்தகைய சிவபூஜை செய்பவன் விஸ்தாரமான ராஜ்யத்தையும், அக்னிகாரியத்தினால் சம்பத்தையும், ஜபத்தினால் பாபநிக்ரஹத்தையும், தியானத்தினால் ஞானத்தையும் அடைகிறான். மதம் கொண்ட யானைகளும், காற்றைப்போல் வேகமாக ஓடும் குதிரைகளும், தேவவனிதைகளுக்கு ஒப்பான பெண்மணிகளும் எவருடைய இல்லத்தில் இருக்கின்றனவோ, அது முறையுடன் செய்யப்படும் சிவபூஜையின் பலன் என்ற வாக்கியங்களைக் கொண்டு, முறையுடன் செய்யப்படும் சிவார்ச்சனை ஆன்மார்த்த பூஜையாயினும் பரார்த்த பூஜையாயினும் அது வேண்டிய பயனை அளிக்கக் கூடியது ஆகும்.

சிவதீக்ஷைபெற்ற அந்தணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் யாவரும் ஆன்மார்த்த பூஜை செய்யலாம்; பரார்த்த பூஜை செய்யக்கூடாது.

சிவதீக்ஷை பெற்றவர்களாயினும் சாதாரண அந்தணர் முதலானோர் மோஹத்தினால் பரார்த்த பூஜையைச் செய்வார்களேயானால், அரசனுக்கும் ராஷ்டரத்திற்கும் நாசம் உண்டாகும். மற்றும் தனது ஜீவனத்திற்குச் சாமான்ய பிராம்மணர்கள் பரார்த்தமாகச் சிவனை அர்ச்சிப்பார்களேயானால் ஆறு மாதத்தில் வீழ்ச்சி அடைவார்கள். ஆதலால் அத்தகைய சாமானிய அந்தணர்களைக் கொண்டு பரார்த்தபூஜை செய்வதை நீக்கவேண்டும்.

சிவப்பிராமணர் எனப்படும் ஆதிசைவர்களாலே ''ஆன்மார்த்தம், பரார்த்தம்'' இரண்டும் செய்யத்தகுந்தது. சிவபெருமானின் ஆஜ்ஞையின் வசமுள்ளவர்களான ஆதிசைவர்களுக்குப் ''பரார்த்த பூஜை'' விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஆத்மார்த்த பூஜையும் செய்ய வேண்டும். சிவ பெருமானின் ஆஜ்ஞைக்குட்பட்ட இவர்களுக்குப் ''பரார்த்த பூஜை'' தோஷமற்றது.

(தீக்ஷைபெற்று ஆன்மார்த்த பூஜையைத் தனியாகச் செய்யாத ஆதிசைவர்கள் சுமது தீக்ஷையில் இஷ்டலிங்கமாகப் பெற்ற மூர்த்தியை பரார்த்தாலய சிவபூஜையுடன் பூஜை செய்யலாம்; இவ்வாறு செய்வது சம்பிரதாயம்.)

சிவாலயங்களில் பரார்த்த பூஜை செய்யும் சிவாசாரியர்கள், பதினாறு வயதிற்கு மேல் எழுபது வயது வரையில் பூஜை செய்யலாம் என்று காமிகாகமம் கூறுகிறது.

இத்தகைய ஆசாரியரைக் கொண்டு பரார்த்த பூஜையை முறைப்படி செய்தால், அதிவிருஷ்டி அனாவிருஷ்டி முதலான ஈதிபாதைகள் இல்லாமலும் நீர்வளம், நிலவளம் முதலான செழுமையுடன் உலகம் விளங்கும். ஆலயங்களில் செய்யப்படும் பூஜையானது உத்தமோத்தமம், உத்தமமத்யமம், உத்தமாதமம், மத்தியமோத்தமம், மத்தியமமத்திமம், மத்தியமாதமம், அதமோத்தமம், அதமமத்யமம் என்ற எட்டுக்கால பூஜை அஜிதாகமத்தில் கூறப்படுகிறது. அவைகளுள் உத்தமத்தில் கடைசியான ஆறுகால பூஜையானது இங்கு விளக்கப்படுகிறது.

சூரியன் உதயமாவதற்குமுன் மூன்றேமுக்கால் நாழிகைக்கு ஆரம்பித்து நடத்தப்படும் பூஜை உஷக்காலம் எனப்படும். காரணாகம வாக்கியப்படி உஷக் காலபூஜை முடிவதற்கும் சூரியன் உதயமாவதற்கும் சரியாக இருக்கவேண்டும்.

ஆசாரியன் உஷக் காலத்தில், அதாவது இரவு 56½ நாழிகை அளவில் எழுந்து, அவசியமான நித்திய கடன்களை முடித்துக்கொண்டு, பல்துலக்கி ஸ்நானம் செய்து (பஸ்மதாரணம்) விபூதி அணிந்து கொண்டு பத்து ஆவர்த்தி பஞ்சாக்ஷரம் ஜபித்து, தூய்மையான வெண்மை வஸ்த்திரம் உடுத்திக்கொண்டு, ருத்ராக்ஷரம் முதலிய பஞ்சாங்க பூஷிதராய், கையில் புஷ்பம் வைத்துக்கொண்டு, மூன்றே முக்கால் நாழிகைக்கு ஆலயத்துள் நுழைந்து சுவாமியின் சன்னிதியில் புஷ்பத்தை எதிரில் போட்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து பிரார்த்தித்துச் பள்ளியறைக்குச் சென்று பாவனையினால் இறைவனுக்கு தந்ததாவனம், ஸ்நானம் முதலிய

வைகளைச் செய்வித்து அஷ்ட புஷ்பம் அணிவித்துச் சிவபெருமானைப் பாதுகையில் ஆரோகணித்துப் பிரதக்ஷிணமாக வந்து மூலகர்ப்பக்ரஹத்தில் வைத்து மூலலிங்கத்துடன் சேர்க்க வேண்டும். உதயத்திற்குமுன் ஒரு முகூர்த்தத்தில் (அதாவது இரண்டு நாழிகைக்குள்) உஷக்கால பூஜை செய்ய வேண்டும். பின்னர் தேவியின் ஆலயம் சென்று பூஜை செய்ய வேண்டும். (நடராஜர், சோமாஸ்கந்தர் முதலிய மகேஸ்வரபேதங்களுக்கும் மற்றைய பரிவாரமூர்த்திகளுக்கும் பூஜை செய்யக்கூடாது.)

ஆசாரியனுக்கு ஆத்மசுத்தி முதலான பஞ்சசுத்தி, பலி போடுதல் முதலியன கிடையாது. இதனை காரணாகமம் உஷக் காலபூஜா விதியில் காண்க.

உஷக்கால பூஜை முடிந்தவுடன் ஆசாரியன் யதோக்தமாக இரண்டு வித கர்மானுஷ்டானங்களைச் செய்து முடித்தபின்னர் கால சந்தி பூஜைக்குத் தொடங்க வேண்டும். காலசந்திபூஜை தொடங்கு முன்பு ''தீர்த்த சங்கிரஹணம்''—அதாவது ஆறு, குளம் முதலிய இடங்களிலிருந்து திருமஞ்சனம் கொண்டு வரவேண்டும்.

## தீர்த்த சங்கிரஹணம் :

சிவபெருமான் அர்த்தயாம பூஜையின் முடிவில், சிபிகை மீது எழுந்தருளி கீதம், நர்த்தனம் முதலிய வாத்ய கோஷங்களுடன் சயனாலயத்திற்குச் சென்றதும், பரமசிவனுடைய ஜடையிலுள்ள கங்கை அங்கு பள்ளி அறையிலுள்ள மனோன்மணி அம்பிகையைப்பார்த்து வெகு வேகமாக அங்கிருந்து நீங்குவாள். மீண்டும் கங்காதேவியை பரமசிவனுடைய ஜடாமகுடத்தில் சேர்க்கும் பொருட்டு வேதியர் சுத்தமாக இருந்து பலவித வாத்ய கோஷங்களுடனும் ஸகல உபசாரங்களுடனும் சுவர்ணம் முதலிய ஏதாகினும் ஒரு குடத்தில் நதியிலிருந்து நீரை நிரப்பி, மாவிலை தேங்காய் முதலியவற்றால் அலங்கரித்து பரிசாரகரின் தலை மீது வைத்து குடை வெண்சாமரங்களுடன் ஆலயத்தை வலம் வந்து, பலிபீடத்தின் மீது அல்லது நந்தியின் மீது அல்லது சிவலிங்கத்தின் மீது விஸர்ஜனம் செய்ய வேண்டும். இதற்கு ''கங்கா ஹரணம்'' (தீர்த்த சங்கிரஹணம்) என்று பெயர். இதன் பிறகு காலசந்திதொடங்க வேண்டும்.

சூரியன் உதயம் தொடங்கி ஏழரை நாழி காலம் காலசந்தி பூஜா காலமாகும். அதில் முதலில் சூரியனைப் பூஜித்து பின்பு கணபதியை பூஜிக்க வேண்டும். அதன் பிறகு மகேஸ்வரபேதங்களுக்கும், மூல லிங்கத்திற்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் அபிஷேகம், அலங்காரம் செய்ய வேண்டும். நைவேத்யம் செய்யும் பொழுது முதலில் கணபதிக்கும் பிறகு மூலமூர்த்தியான சுவாமிக்கும், நடராஜர், சோமாஸ்கந்தர் முதலான பரிவாரமூர்த்திகளுக்கும் நிவேதனம் செய்து, அதன் பிறகு அம்பாளுக்கு நைவேத்யம் முதலிய உபசாரம் செய்து பலி போட்டு மடப்பள்ளியிலிருக்கும் குண்டத்தில் நித்யாக்னிகாரியம் செய்து, நித்யோத்ஸவம் செய்து சண்டேச பூஜையை முடிவாகச் செய்ய வேண்டும் என்ற முறையானது காலசந்தி பூஜைக்குரியதாகும்.

காலசந்தி பூஜை முடிந்தவுடன் $3\frac{3}{4}$ நாழிகைக் காலம் ஓய்வு நேரமாகும்; அதாவது $7\frac{1}{2}$ நாழிகைக்கு மேல் $11\frac{1}{4}$ நாழிகை வரையில் பொது மக்கள் தரிசனம் அர்ச்சனை முதலியன செய்யும் காலம். அந்தப் பதினொன்றேகால் நாழிகைக்குப் பிறகு உச்சிகால பூஜை செய்ய வேண்டும். அதற்கு ஸ்நபனம் பஞ்சகவ்யம் வைத்துப் பூஜித்து, வாஸ்து நாதனைப் பூஜித்துக் கொண்டு, துவார பூஜை செய்து லிங்க சுத்தியுடன் சுவாமிக்கு முறையாக அபிஷேகம் செய்து போகாங்கம்வரையில் பூஜித்துத் தேவிக்கும் அபிஷேகமும் சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் அலங்காரமும் செய்து சண்டேஸ்வரருக்கு பூஜை செய்ய வேண்டும்.

காலையிலும் உச்சிக்காலத்திலும் சாயங்காலத்திலும் பலிபோட வேண்டும் என்ற காரணாகம விதிப்படி உச்சிக்காலத்தில் பலிபோட்டுப் பூஜையை முடிக்க வேண்டும்; ஸ்நபனாங்கமாக ஹோமம் செய்ய வேண்டும்; பரிவாரங்களுக்கு பூஜை வேத்யம் கிடையாது.

## அபிஷேக திரவ்யங்களின் வரிசையும் அளவும் பலனும்.

| வரிசை | திரவ்யம் | அளவு | பலன் |
|---|---|---|---|
| முதலாவது | வாசனைத்தைலம் | ஒருபடி | சுகமளிக்கும் |
| இரண்டாவது | மாப்பொடி | ஒருபலம் | கடனைத்தீர்க்கும் |
| மூன்றாவது | நெல்லிமுள்ளி | ஒருபலம் | அரசன் வசம் |
| நான்காவது | மஞ்சள் பொடி | ஒருபலம் | ரோகத்தைப் போக்கும் |

| வரிசை | திரவியம் | அளவு | பலன் |
|---|---|---|---|
| ஐந்தாவது | ஜலதிரவியம் | இரண்டுபலம் | |
| ஆறுவது | பஞ்சகவ்யம் | ஒரு மரக்கால் | பாபத்தைப்போக்கும் |
| ஏழாவது | பஞ்சாமிர்தம் | ஒரு மரக்கால் | புஷ்டிஅளிக்கும் |
| எட்டாவது | பசுவின்நெய் | அரைப் படி | மோக்ஷமளிக்கும் |
| ஒன்பதாவது | பசுவின் பால் | ஆறு படி | ஆயுளைக்கொடுக்கும் |
| பத்தாவது | பசுவின் தயிர் | 12 படி | பிரஜாவிருத்திஉண்டாகும் |
| பதினொன்றாவது | தேன் | ஒரு ஆழாக்கு | சுகமளிக்கும் |
| பன்னிரண்டாவது | கரும்பின் சாறு | ஒரு படி | ஆரோக்யமளிக்கும் |
| பதின்மூன்றாவது | சர்க்கரை | மூன்றுபலம் | |
| பதினான்காவது | பழவர்க்கம், வாழைப்பழம் | 25 | பயிரை வளர்க்கும் |
| | மாம்பழம் | 15 | வச்யம் |
| | மாதுளை | 10 | கோபத்தைப்போக்கும் |
| | பலாப்பழம் | 10 | புஷ்டியளிக்கும் |
| பதினைந்தாவது | எலுமிச்சம்பழம் | 25 | |
| | | 10 | நேர்மை |
| பதினாறாவது | இளநீர் | 25 | போகமளிக்கும் |
| பதினேழாவது | அன்னபிஷேகம் | ஒருமரக்கால் | சாம்ராஜ்யமளிக்கும் |
| பதினெட்டாவது | சந்தனம் | ஒருமரக்கால் | லஷ்மியைக்கொடுக்கும் |
| பத்தொன்பதவேது | கும்பம் | 10 | மோஷப்ரதம் |
| இருபதாவது | பத்ராம்பு | ஒரு மரக்கால் | உலகவசம் |
| இருபத்தொன்றாவது | தாராம்பு | ஒரு மரக்கால் | இன்பமளிக்கும் |
| இருபத்திரண்டாவது | சிருங்கதோயம் | ஒரு மரக்கால் | தைரியத்தை அளிக்கும் |
| இருபத்திமூன்றாவது | ரத்னோதகம் | ஒருமரக்கால் | லக்ஷ்மீப்ரதம் |
| இருபத்தி நான்காவது | குசோதகம் | ஒரு மரக்கால் | தூய்மையளிக்கும் |
| இருபத்தைந்தாவது | அர்க்யோதகம் | ஒரு மரக்கால் | ஞானமளிக்கும் |
| இதன் பிறகு | சங்கோதகம் | ஒரு மரக்கால் | புண்யப்ரதம் |
| | தீப எண்ணெய் | ஒருபடி | |

ஜலம் காலையில் — 5 பாரம், உச்சியில் — 10 பாரம், மாலையில் — 3 பாரம்; மற்றக் காலங்களில் விருப்பம் போல் (பயன்— இஷ்டசித்தியளிக்கும்).

இவ்வாறு ஒரு படி எண்ணெய் அபிஷேகம் செய்தால் மேற்கூறிய இந்த திரவ்யங்கள் முறையானதாகும். எண்ணெய் அதிகமானால் சாமான்களை அதிகப்படுத்த வேண்டும். எண்ணெய் குறைந்தால் அதன் படி சாமான்களையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது.. இதை நித்திய பூஜா லக்ஷண சங்கிரஹத்தில் காணலாம். அபிஷேகம் முடிந்தவுடன் சுத்தான்ன நிவேதனம் செய்து விட்டு திருஒத்தாடைபோட வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் ஆசாரியனைக் கொளுத்துவார் என்பது ஆகம விதி. வஸ்திரம், சந்தனம், புஷ்பம் அணிவித்து, நைவேதியம் தீபாராதனை செய்ய வேண்டும்.

சாயுங்காலம் :

சூர்ய அஸ்தமனத்திற்கு முன்பு மூன்றே முக்கால் நாழிகை தொடங்கிச் செய்யப்படும் பூஜை பிரதோஷ பூஜையாகும். இது நித்தியபிரதோஷம் எனப்படும். நித்யநைமித்திகபிரதோஷம் என்பது சுக்ல கிருஷ்ண திரயோதசியன்று மாலையில் செய்யப்படும் பூஜையாகும். நித்யத்தில் நைமித்திகம் என்று தீப்த்தாகமம் கூறுகிறது.

நித்யபிரதோஷபூஜை இதில் முதலில் நடராஜப் பெருமானுக்கு நிவேதனம் செய்து, பிறகு மூலலிங்கத்திற்கு அபிஷேகம் தீபாராதனை செய்து, பிறகு சோமாஸ்கந்தருக்கு நிவேதனம் செய்து, அம்பாளுக்கு நிவேதனம் செய்து முடிப்பதாகும்.

**நைமித்திக பிரதோஷம் :** மாலையில் முதலில் நந்திதேவருக்கு நிவேதனம் செய்ய வேண்டும். நித்யபிர தோஷத்திற்கு ''நந்திநிவேதனம்'' இடையாது.

சூரிய அஸ்தமனம் தொடங்கி 7½ நாழிகையில் செய்யப்படும் பூஜை ''மஹாசந்தி'' எனப்படும். (சாய ரக்ஷைபூஜையாகும்.) இதன் ஆரம்பத்தில் ஆசாரியன் தேஹசுத்திமுதலிய பஞ்சசுத்திகளைச் செய்து கொண்டு ஸ்நபநபூஜையுடன் துவாரபூஜை செய்து மூலமூர்த்திக்கு அபிஷேகம் அலங்காரம் நைவேத்தியத்துடன் ஷோடச உபசாரம் செய்யவேண்டும்.

ஷோடசோபசாரம் என்பது: 1. ஆவாஹனம், 2. ஸ்தாபனம், 3. பாத்யம், 4. ஆசமனம், 5. அர்க்கியம், 6. அபிஷேகம், 7. வஸ்திரம், சந்தனம், 8. புஷ்பாலங்காரம், 9. தூபதீபம், 10. நிவேதயம், 11. பலி, 12. ஹோமம், 13. நித்யோத்ஸவம், 14. கேயம்வாத்யம், 15. நிருத்தம், 16. உத்வாஸநம் என்ற பதினாறு உபசாரம் ஆகும்.

கீழ்வரும் பதினாறு தீபங்களும் ''தீபஷோடசோபசாரம்'' என்று அஜிதாகமத்தில் பெயர் பெறும்.

| வரிசை | பொருள் | பயன் |
|---|---|---|
| முதலாவது | தூபம் | உற்சாகத்தைத்தரும் |
| இரண்டாவது | ஏகதீபம் (உருக்களி) | விழிப்பைத்தரும் |
| மூன்றாவது | அலங்காரதீபம் (புஷ்பதீபம்) | சாம்ராஜ்யத்தைத்தரும் |
| நான்காவது | நாகதீபம் | லோகாதிபத்யம் தரும் |
| ஐந்தாவது | விருஷபதீபம் | அரசை அளிக்கும் |
| ஆறாவது | புருஷாமிருகதீபம் | |
| ஏழாவது | சூலதீபம் | வயிற்றுவலிநீக்கும் |
| எட்டாவது | ஆமைதீபம் | ஜலகண்டத்தைத்தடுக்கும் |
| ஒன்பதாவது | கஜதீபம் | ஐஸ்வர்யத்தைக்கொடுக்கும் |
| பத்தாவது | சிம்மதீபம் | ஆயுளைக் கொடுக்கும் |
| பதினொன்றாவது | வியாக்ரதீபம் (புலி) | விலங்குகளிடத்தில் பயத்தைப்போக்கும் |
| பன்னிரண்டாவது | கொடிதீபம் | சோபையைத்தரும் |
| பதின்மூன்றாவது | மயூரதீபம் (மயில்) | புத்திரப்பேறு அளிக்கும் |
| பதினான்காவது | பஞ்சதட்டுடன் பூர்ணகும்பம் | சாம்ராஜ்யமளிக்கும் |
| பதினைந்தாவது | நக்ஷத்ரதீபம் | பாதுகாப்பு ஆதிபத்தியமளிக்கும் (காவல் துறை அதிகாரி) |
| பதினாறாவது | மேருதீபம் | எல்லா நாட்டிலும் செல்வாக்களிக்கும் |

நீராஜநம் விபூதிசாத்துதலும் ரக்ஷையுமாகும். அவை பதினாறு உபசாரத்தில் அடங்கியவை.

மேற்கூறியவாறு பதினாறு உபசாரங்களையும் செய்து, பழம், தாம்பூலம் நிவேதனம் செய்து, கற்பூர ஹாரத்தி செய்து, குஹ்யோதகசமர்ப்பணம் செய்து பிரார்த்திக்கவேண்டும். குஹ்யோதகம் என்பது ஆசாரியன் மூல மந்திரத்தை இயன்ற அளவு ஜபம் செய்து, அம்மந்திரத்தைக் கையில் புஷ்பத்துடன் சேர்த்து கவச மந்திரத்தி னால் அவகுண்டம் செய்து, தீர்த்தத்தைக் கீழே விட்டுச் சுவாமியின் வரத ஹஸ்தத்தில் சேர்க்கவேண்டும். இவ்

வாறு ஜப சமர்ப்பணம் செய்யாத பூஜை பயனற்றதாகும்; சுவாமிக்கும் ஆசாரியனுக்கும் தொடர்பு அற்று பூஜா பலன் கிட்டாது. ஆதலால் சுஹோதகசமர்ப்பணம் முக்கியமாகும். இவ்வாறு சாயுங்கால பூஜை செய்ய வேண்டும். சாயரக்ஷையில் மகேஸ்வரன் முதலிய மூர்த்திகளுக்கும், பரிவாரமூர்த்திகளுக்கும்,பிறகு தேவிக்கும் சண்டேசன் பைரவன் முதலானவர்களுக்கும் பூஜை உபசாரம் செய்து பலிஹோமம் நித்தியோத்ஸவம் செய்ய வேண்டும். இது சாயரக்ஷையின் முறையாகும்.

## அர்த்தயாம பூஜை

சாயுரக்ஷாகாலபூஜை முடிந்தவுடன் தொடங்கி $3\frac{3}{4}$ நாழிகை அளவில் அர்த்தயாம பூஜை செய்ய வேண்டும். அதாவது $7\frac{1}{2}$ நாழிகைக்குமேல் $11\frac{1}{2}$ நாழிகைக்குள் செய்ய வேண்டிய பூஜை அர்த்தயாம பூஜை எனப்படும்.

சுவாமிக்கு அபிஷேகத்தின் பொருட்டு ஸ்நபன பூஜை செய்து, பஞ்சாமிருதம் பஞ்சகவ்யம் செய்து கொண்டு, சுவாமிக்கு சலாஸனம் பூஜை செய்து, அபிஷேகம் நிவேதனம் தூபம் தீபம் கொடுத்து, கௌரிக்கும் நிவேதனம் செய்து சயனாலய பூஜையுடன் க்ஷேத்ரபாலபூஜை செய்து முடிக்கவேண்டும்.

அர்த்தயாமத்தில் அபிஷேகம் செய்யலாம்; செய்யாமலுமிருக்கலாம். அபிஷேகம் செய்வதானால் சுவாமிக்கு மாத்திரம் செய்யலாம். அவ்வாறு செய்யும் அபிஷேகத்திற்கு நல்லெண்ணெய் கூடாது; ரஸவர்க்கம் சேர்ந்த பஞ்சாமிருதம், தேன், சர்க்கரை, பசுவின்பால், இளநீர், சந்தனம் விசேஷ திரவியங்களாகும்; மற்றவை வேண்டியதில்லை. தைலாபிஷேகம் செய்ய விரும்பினால், சந்தனாதி தைலம் முதலிய வாசனைத் தைலத்தால் அபிஷேகம் செய்யலாம்.

## பூஜையில் ஐந்தொழில்

அபிஷேகம் படைத்தல் தொழில், நைவேத்யம் காத்தல்தொழில், பலிபோடுதல் சங்காரத்தொழில் தீபம் திரோபாவத்தொழில், ஹோமம் செய்தல் அனுக்ரஹத் தொழில் ஆகும்.

மேற்கூறியவாறு ஆறு கால பூஜையின் முறைகளைச் சில ஆகமங்களின் சாரங்கொண்டு எமது புத்திக்கு எட்டியவாறு கூறியுள்ளாம். ''ஆகமவிபின'' என்றார் ஒரு அபிக்ஞர். ''ஆகமம்'' என்பது நுழைய, முடியாத காடு; அது 28 எண்ணையுடையதாயினும், 224 உபாகமங்களை உடையது. இறைவனின் திருவாக்கு. கேட்பவர்தகுதிக்கு ஏற்றவாறு சிலவற்றைக் கூட்டியும், குறைத்தும் மாற்றியும் கூறியிருக்கிறார் பரம கருணை நிதியான பரம சிவன். இதைக் கண்ணுறும் அன்பர்கள் குற்றம் நீக்கிக் குணம் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இக்கட்டுரையை திருக்கேதீச்சரம் ஸ்ரீ கௌரி அம்பாள்சமேத ஸ்ரீ கேதீச்வரஸ்வாமி திருவடிகளில் மலராக கும்பாபிஷேக மலருக்கு அளிக்கிறோம். திருக்கேதீச்சரம் ஆலய தருமகர்த்தாக்களும், திருப்பணிக் குழுவினர்களும், நோயற்ற வாழ்வுடன் சகல போக பொக்யங்களைப் பெற்று நூறு ஆண்டுவாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மழை வழங்குக மன்னனேங்குக
பிழையில் பல்வள மெங்கும் பெருகுக
தழைக வஞ்செழுத்தோசை தரையெலாம்
பழைய வைதீக சைவம் பரக்கவே.

சிவம்.

# கும்பாபிஷேக முறைகளும் விளக்கமும்

பிரதிட்டபூஷணம் நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள் —

ஆணவமலமுத்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாகினும், அணுதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கிப் போக மோக்ஷங்களை அடைய ஆலயத்தில் நிறுவப்படும் சிவலிங்கத் திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாம்.

"கும்பாபிஷேகம்" என்பது குடமுழுக்கு, "குடநன்னீராட்டு விழா" என்று சொல்லுவார்கள். இது பிரதிஷ்டை என்றும் கூறப்படும். இது நான்கு வகைப்படும். அவையாவன :

(1) ஆவர்த்தம் (3) புனராவர்த்தம்
(2) அனுவர்த்தம் (4) அந்தரீதம்

**ஆவர்த்தம்:** புதிதான ஓர் இடத்தில் சிவலிங்கம் வைத்துப் பாலப்பிரதிஷ்டை செய்து பூஜித்துப் புதிதாகக் கோயில் கட்டி, பாலாலய மூர்த்தியைக் கும்பத்தில் எடுத்து பின்னர் மூலஸ்தானத்தில் இருக்கும் மூர்த்தியில் சேர்த்து அபிஷேகம் செய்வதாம்.

**அனுவர்த்தம்:** வெகு காலத்துக்கு முன் கோயில் கட்டி பூஜையில்லாமல் அழிய விட்டும், சீர் குலைந்தும் இருந்து, முன்போல் அவைகளைத் திருத்தி ஆலயம் கற்பித்துக் கும்பாபிஷேகம் செய்தலாம்.

**புனராவர்த்தம்:** கர்ப்பக்கிரகம், விமானம், பிரகாரம், கோபுரம், பலிபீடம் முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும், அட்டபந்தனத்தில் பழுது உண்டானாலும், விமானத்தில் உள்ள விக்கிரகங்களில் பழுது நிகழ்ந்தாலும், வர்ணம் அழிந்து இருந்தாலும், பாலாலயம் செய்து ஆலயத்தைப் புதுப்பித்து மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தலாம்.

**அந்தரீதம்** ஆலயத்தில் சோரன் சண்டாளன் நாய் முதலியன உட்சென்று தீண்டியதன் காரணமாக மூர்த்தியின் பிரத்தியங்கம், உபாங்கம் போன்றவைகளில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அவைகளைத் திருத்தி உடனே செய்வதாகும். இதில் அந்தரீதப் பிரதிஷ்டைக்கு நாள், நட்ஷத்திரம் பார்க்கவேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கேதீச்சரத்தில் இப்போது நடக்கும் கும்பாபிஷேகம் அனுவர்த்தம் என்று சொல்லப்படும். அதற்கு: 1. அனுஞ்ஞை 2. தனபூஜை 3. திரவிய விபாகம் 4. ஆசாரியவர்ணம் 5. கணபதி பூஜை 6. கிராம சாந்தி 7. பிரவேச பலி 8. திசா ஹோமம் 9. இரட்சோக்கிர ஹோமம் 10. வாஸ்துசாந்தி 11 ஆயுஷ் மூர்மம் 12. கிரகமகம் 13. கோபூஜை 14. விப்பிரபோஜனம் 15. மிருத்சங்கிரகணம் 16. நூதன கர்த்திகளுக்கு ரத்தின நியாசம் 17. நயனோன்மிலனம் 18. தான்யாதிவாசம் 19. ஜலாதிவாசம் 20. அங்குரார்ப்பணம் 21. ரக்ஷாபந்தனம் 22. சயனாதிவாசம் 23. யாகசாலா தான்யாதிஸ்தாபனம் 24. சூர்யகாந்த சங்கிரகணம் 25. கும்பஸ்தாதகாதிவரணம் 26. பிரசன்னாபிஷேகம் 27. கடஸ்தாபனம் 28. கலாகர்ஷணம் 29. யாகசாலா பூஜைகள் 30. ஹோமம் பூர்ணாகுதி 31. பதவின்னியாசம் 32. தூபிஸ்தாபனம் 33. திபஸ்தாபனம் 34. ரத்னஸ்தாபனம் 35. யந்திரஸ்தாபனம் 36. பிம்பஸ்தாபனம் 37. அஷ்டபந்தனம் 33. சுவர்ணபந்தனம் 39. தைலாப்பியங்கம்

40. பிம்பசுத்தி 41. பிம்பரக்ஷாபந்தனம் 42. பூர்வசந்தானம் 43. விஷேட திரவிய ஹோமம் 44. சாந்திகும்பம் 45. ஸ்பர்சாகுதி 46. சுரோத்திரவந்தனம் 47. ஆசார்யபூஜை 48. அக்கினி சம்யோசனம் 49. மஹா பூர்ணகுதி 50. ஆசர்யபூஜை 51. தீபாராதனை 52. வேதகோஷம் 53. அந்தர்பலி—பெகிர்பலி 54. ஸ்தூபி கும்பாபிஷேகம் 55. மகாகும்பாபிஷேகம் 56. பரிவார கும்பாபிஷேகம் 57. சண்ட ஹோமம் 58. மகாபிஷேகம் 59. ஆசார்ய உற்சவம் 60. எயமான்ய பலப்பிராப்த்தி 60. மகா ஆசீர்வாதம் முதலியனவும், இதற்கு அங்கமான சில கிரிகைகளும் உள. இவைகளின் விளக்கங்களை விரிவாகக் கூறுவிட்டாலும், ஓர் அளவு சுருக்கமாக அறியவேண்டியது நம் கடமையாம்.

**அனுஞ்ஞை :** இறைவணக்கம் செய்து சர்வசாதகரிடத்திலும், பரம்பொருள் இடத்திலும் நான் குறித்த காலத்தில் இந்த மகத்துவமான கும்பாபிஷேகத்தை செய்ய உத்தரவு தரவேண்டும் என்று வணங்கி உத்தரவு கேட்பதாம்.

**தனபூஜை :** புண்ணிய வசத்தால் கிடைத்த திரவியத்தை பூஜை செய்தலாகும்.

**திரவிய விபாகம் :** பூஜை செய்த திரவியத்தை ஒருபாகம் ஆலயக் கட்டடவேலைக்கும், இரண்டாவது பாகம் நித்திய பூஜை, மாசாந்த விசேட நட்சத்திர பூஜை, உற்சவம், ஆபரணாதிகட்கும் இராமாதி வாங்கவும், மூன்றுவது பாகத்தை பதினொருபாகம் செய்தல் வேண்டும். அவை :

| | | | |
|---|---|---|---|
| 1. | யாகம் கட்டுதல் முதலானவற்றிற்கு | — | 2 பாகம் |
| 2. | அபிஷேக திரவியத்திற்கு | — | 1 பாகம் |
| 3. | ஆசாரிய தெட்சணை | — | 2 பாகம் |
| 4. | மூர்த்தி பர்கட்கு | — | 1 பாகம் |
| 5. | வேதாதி திருமுறைகட்கு | — | 1 பாகம் |
| 6. | தானுதிகட்கு | — | 1 பாகம் |
| 7. | பிராமண போஜனம், அன்னதானம் | — | 1 பாகம் |
| 8. | சிற்பிக்கும் பரிஜனங்கட்கும் | — | 1 பாகம் |
| 9. | யாக திரவியங்கட்கு | — | 1 பாகம் |
| | | | 11 பாகம் |

மேற்கூறிய பாகமாகப் பிரிந்து முறையே செலவு செய்தல் திரவியபாகமாம்.

**ஆசாரியவர்ணம் :** பிரதான ஆசாரியரையும், சர்வசாதகரையும் வணங்கி இத்திரவியத்தைக் கொண்டு மகாகும்பாபிஷேகம் செய்து இறையருளைப் பெற்றுத்தர வேண்டும் என்று எசமான் குருவை வழிபடுதலாகும்.

**கணபதி பூஜை :** எவ்வகையினராயினும் முதலில் விநயகரை வழிபாடு செய்தல் வேண்டும்; செய்யாவிடில் அவர்களின் காரியத்தை இடையூறு செய் என்று இறைவன் கட்டளை என்பது ''என்னரே யாயினும்'' என்ற திருவிளையாடற் புராணத்தில் விளங்குகின்றது. ஆகவே இங்கு தொடங்கிய மகாகும்பாபிஷேகம் இடையூறு இன்றி நிறைவேற விநயகப் பெருமானுக்குப் பூஜை அபிஷேகம் ஹோமம் செய்து முதலில் பிரதான சிவாசாரியர் வழிபடுதல்.

**கிராமசாந்தி :** ''சர்வலோக இதம் புண்ணியம்
வட்சியே சுந்து சடானவ
கிராம நூதன காலேது
ஷேத்திரவா மந்திரேவிவா
பிரதிஷ்டோத்துவ காலேச
பூஜாம் கருத்துவாவிசேஷவதா'' என்று காரணாகமம் கூறுகிறது. விளக்கம் சகல லோக சுசத்துக்கும், புதிதானபட்டினம், கிராமங்களில் உள்ள அசுர, ராட்சத, பிசாச, பிரம ராட்சதர்களைத் திருப்தி செய்து சந்தோசப்படுத்தி, கிராம அதிதேவதையான வைரக்வரைப் பூஜித்தலாம்.

**பிரவேசபலி :** நாம் பிரவேசம் செய்து மகா கும்பாபிஷேகம் செய்யும் இடத்தில் உள்ள எட்டுத் திக்குகளிலும் வசிக்கின்ற இயக்கர், இராட்சதர், பிசாசர், பிரம இராட்சதர், பூதர், காளி, சரளி, வைரவர் முதலிய தேவதைகளுக்கு உணவு கொடுத்து எழுப்பி, அவர்களை முறையே கடல், மலை, வனம், நதி, மயானம் முதலிய இடங்களிற் சென்று சுகமாய் வீற்றிருங்கள்; இது சிவன் கட்டளை எனக் கூறித் திருப்தி செய்தவாம். இது மகா கும்பாபிஷேகம், திருவிழா, புதுவீடு குடிபுகல் போன்ற காரியங்களிற் செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

**திசாஹோமம் :** நான்கு திக்குகளில் முறையே பாசுபதாஸ்தம், அஹோராஸ்திரம், பிரத்தியங்கிராஸ்திரம், சிவாஸ்திரம் முதலியவர்களைப் பூசித்துக் காவல் செய்யும்படி கட்டளை இடுதலாம்.

**இரட்சோக்கிரஹோமம் :** அசுர, ராட்சதர்களின் தொல்லை நீங்குவதற்காக மூன்று மேடைகள் அமைத்து, நடுவில் கும்பம் வைத்து, அதில் ரட்சோக்கிர தேவதையை வடவாமுகாக்கினிக்குச் சமமாகப் பாவித்துப் பூசை செய்து, அதன் தென்புறத்தில் வெள்ளை வஸ்திரம் இட்டு, தேங்காய் ஒன்று வைத்து, வடக்குப் பக்கத்திற் சிவப்பு வஸ்திரம் வைத்து, அதன் மேல் வாள் ஒன்று வைத்து, தேங்காயில் சிவனையும் வாளில் கட்கேசுவரரையும், வாளைச்சுற்றி அசிதாங்கபைரவர், ருருபைரவர், சண்டபைரவர் முதலிய எண்மரைப் பூசித்து, அவர்களுக்கு உள்ள திரவியங்களாலும் சமித்தாலும் ஹோமம் செய்து, சம்யோசித்துக் கும்பஜலத்தை ஆலயத்தைச் சுற்றித் தெளித்தலாம்.

**ஆயுஸ் கர்மம் :** குருமார் செய்து கொள்ளும் தசவித ஸ்நானமாம்.

**நவக்கிரகமகம் :** கும்பாபிஷேகத்தால் உலகத்துக்கு அதிக மழையாலும், மழையின்மையாலும், விரோதிகளாலும், துஷ்டர்களாலும் வரும் துன்பம் நீங்கவும், எல்லாப் பிராணிகளின் பயம், நோய், பிணி நீங்கவும் சூரியன் முதலிய நவக்கிரகங்களைப் பூசித்து வணங்கி ஹோமம் செய்தலாம்.

**வாஸ்து சாந்தி:** பூமியானது அசுத்தாக, ஜடசம்பந்தம் உள்ளதினால் அதை நீக்கிச் சத்பாவம் உண்டாவதற்குச் செய்வது. அசுத்த சொரூபமான பூமியை பாலாக்கினியால் தகித்துப் பின்பூமிக்கு அதிபதியான பிரமாவின் மூச்சுக்காற்றினால் சோதிரூபமாக்கிச் சுத்தம் செய்வதாம். நீற்றுப் பூசினிக்காயைப் பூமியின் வடிவமாகத் தியானித்து, அதன் விதைகளை அண்டங்களாக நினைத்து, எல்லாவற்றையும் ஹோமம் செய்து, பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் கட்டளையினால் பரிசுத்தமானதாகப் பாவித்தல் வாஸ்து சாந்தியாம். இச்சாந்தி கும்பாபிஷேகம், பலஸ்தாபனம், யாக மண்டப கல்பனம், கோபுரம், தடாகம், வீடு, உற்சவம் போன்ற இடங்களில் அவசியம் செய்யவேண்டும்.

**கோபூஜை :** பசுமாடு கன்று கட்டுதல்.

**விற்பிரபோசனம் :** வேதம் அறிந்த பிராமணர் பிருதுவி முதல் சுத்ததத்துவம் வரையுள்ள எல்லாத் தத்துவங்களையும் சுத்தமாக்குகின்றேன்; ஹோமம் செய்கின்றேன்; இது நன்கு சுத்தி அடையட்டும் என்று சிதாக்கினியில் ஹோமம் செய்கின்ற பாவனையில் போறுவம் செய்வித்தலால் அந்த இடம் சுத்தியாகும்.

**மிருத்சங்கிரகணம் :** கிராமத்துக்குச் சாந்தியையும் தேசநன்மையடையவும் நினைந்து, பூமாதேவியைப் பிரார்த்தித்து, இந்தப் பூமி கண்டங்களாகப் பிரிந்து இருப்பதால் ஒவ்வொரு கண்டத்துக்கும் பூசை செய்து, பிரார்த்தித்து, ஞானயாகம் செய்ய முளையிடுவதற்காக மண்வெட்டியை சிவாஸ்திரமாகப் பூசித்து, பூமிதேவியின் வயிற்றில் மூன்று அல்லது ஐந்து முறை மண்ணை எடுத்தலாம். எடுத்த தோசம் நீங்க அந்த இடத்துக்கு வேறு மண் போட்டுச் சப்தவாரிதி கும்பத்தால் அபிஷேகம் செய்தலாம்.

அங்குரார்ப்பணம் : முளையிடுதல். இந்தப் பூமியானது முன்னர் அமிர்தத்தால் நனைந்து சுத்தமானது. ஆகையால் உலகச் சேமத்தின் பொருட்டு நெல் முதலிய நவதானியங்களைப் பாலில் ஊறவிட்டு ''ஓசதி சூக்தம்'' செபித்துச் சந்திரனை வணங்கி முளையிடுதலாம்.

ரஷாபந்தனம் : காப்புக்கட்டுதல். குழந்தையின் வருத்தம் தீர மாதா மருந்துண்ணுதல் போல, உலக சேமத்திற்காக ஆசாரியர் எடுத்தகாரியம் செவ்வனே நிறைவேற இடையூறுகள் தடுக்கா வண்ணம் இறைவியின் கர்ப்பநாடியில் நின்றும் உண்டானதாக நாகராசனைப் பூசித்துக் கையில் கங்கணம் கட்டுதலாம்.

இரத்தினநியாசம், நைநோன்மீலனம்
தானியாதிவாசம், சயனுரோகணம்
கிராமப்பிரதட்சணம்
} இவைகள் புதிதான மூர்த்திகளுக்குப் பஞ்சபூத சம்பந்தமான தத்துவங்கள் ஏற்படுத்துவதற்காகச் செய்யப்படும் கிரியைகளாம். அன்றியும் இறைவன் ''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியுங் காற்றுமாகி''

என்ற தேவாரத்தில் இருந்து இறைவடிவத்தை உண்டுபண்ணும் குறிப்பை உணர்த்துவதும் ஆகும்.

யாகசாலா தானியாதி ஸ்தாபனம் : யாகசாலையிற் சப்ததாத்துகள் மயமான சப்த தானியங்களைப் பரப்புதல்.

சூரியகாந்தி சங்கிரகணம் : ஞானாக்கினிக்கு சூரிய காந்தத்தில் இருந்து அக்கினியை எடுத்தல்.

ருத்விக் சாதகாதி வரணம் : பிரதான குண்டத்தைத் தவிர ஏனைய குண்டங்களுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் ஏற்ற குருமாரையும் சாதகர்களையும் உபசாதகர்களையும் நியமித்தல்.

பிரசன்ன அபிஷேக பூஜை : எங்கும் நிறைந்த மூர்த்தியைப் பூஜிப்பதற்காகத் தமக்கு நேர்முகப்படுத்தல்.

கடஸ்தாபனம் : குடத்தைச் சுத்தமாக்கிச் சப்ததாதுக்களும் ஜீவனும் உண்டாக்குவதற்காகக் கும்பத்தின் அடியில் ஆன்மதத்துவத்தையும் பிரமாவையும், கும்ப நடுவில் வித்தியா தத்துவத்தையும் விஷ்ணுவையும், கும்ப நுனியிற் சிவதத்துவத்தையும் ருத்திரனையும், கும்பத்தில் 9 சக்திகளையும், மூவிளை நூலிற் சரஸ்வதி, இலக்குமி, ரௌத்திரி ஆகியோரையும், கும்பத்திற்குப் பிடிக்கப்படும் தூபத்தில் அர்ச்சினி சக்தியையும், தீர்த்தத்திற் கங்கை முதலிய புண்ணிய நதிகளையும், மத்தியில் வருணனையும், நவரத்தினங்களில் வாமை முதலிய நவசக்திகளையும், தங்கத் தாமரைப் பூவிற் சதாசிவத்தையும், வாசனைத் திரவியங்களிற் சப்த மாதுருக்களையும் பூசித்துக் குடத்தில் இட்டு மாவிலைச் சடையாகவும், தேங்காயைச் சிரசாகவும், கூர்ச்சத்தை முடியாகவும், வஸ்திரத்தைத் தோலாகவும், ஜெஞ்ஞோபவீதத்தைப் பஞ்சப்பிரம மந்திரமாகவும் பூசிப்பதாற் கும்பமானது சர்வதேவதா சொரூபமாகிறது என்று ஆகமங்கள் கூறுகின்றன.

கலாகர்சணம் : கலைகளை இருத்தலாம்; சடத்துவன்னியாசமும் கும்பத்திற்குச் செய்ய வேண்டும். சடத்துவாவானது பரமேஸ்வரர் இருக்கும் ஸ்தானத்தை அடைதலுக்கு உரிய வழியாகும். இதில் சர்வ வியாபகராக உள்ள பரமேஸ்வரர் இந்த ஆறு அத்துவாக்களிற் கலந்தும் இருக்கின்றார். பரமேஸ்வரர் சக்தி சொரூபர்; அதீதர்; சக்திக்கும் சக்தனுக்கும் பேதமின்மை ஆதலால் அங்காங்கிபாபம் என்றும் கூறப்படுகிறது. ஆகவே சக்தியின் இடத்தில் இருந்து கலையும், கலையில் இருந்து தத்துவமும், தத்துவத்தில் இருந்து புவனமும், புவனத்தில் இருந்து வர்ணமும், வர்ணத்தில் இருந்து பதமும், பதத்தில் இருந்து மந்திரமும் உண்டாயின. கலையில் தத்துவம் அடங்கியுள்ளதாதலின் தத்துவம் முதல் மந்திரம் இறுதியாக ஒன்றில் ஒன்று அடங்கி இருந்து திரும்ப வந்ததாதலின் இந்தச் சடத்துவாக்களைச் செய்யவேண்டும் என்பதாம். அன்றியும் கலாநியாசத்தால் சர்வஞ்ஞசக்தியும், தத்துவநியாசத்தால் நித்திய திருப்தியத்துவமும், புவனநியாசத்தால் அநாதிபோதத்துவமும், வர்ணநியாசத்தால் சுவதந்திரத்துவமும், பதநியாசத்தால் அலுப்த சத்தித்துவமும், மந்திரநியாசத்தால் அநந்த சத்தித்துவமும் சித்திக்கின்றமையால் அவசியம் செய்ய வேண்டும்.

**யாகசாலைப்பூஜை :** யாகசாலை கலாமயமாக விளங்குகிறது. நிவிர்த்தி முதலிய நான்கு கலைகளும் நான்கு பக்கநிலைகளாகவும், இதற்கு நான்கு கலசமும், இவைகளுக்கு இருபுறங்களிலும் நந்தி முதலிய எண்மர் வாயில் காப்பாளராகவும், கிழக்கு முதல் 8 திக்குகளில் கீழ், மேல், ஆகிய 10 திசைகளில், இந்திரன் முதல் விஷ்ணு ஈறாக தசலோக பாலகர்களும் அக்கினிக்கு வடக்கில் சிவ சூரியனும், நிருதிக்கு கிழக்கில் யாகபலனைத்தரும் வாஸ்து பிரமனும், வாயுவுக்கு தெற்கில் உத்தமப்பாக மண்டப ரூபமாகிய மகா லட்சுமியும், வாயுவின் வலப்புறத்தில் யாகத்தில் ஏற்படும் விக்கினங்களை நீக்கும் விநாயகரும், ஈசானத்துக்கு மேற்கில் எதையும் உத்தரவு கேட்டுச் செய்ய சதாசிவம் முதல் சப்த குரு மூர்த்திகளையும் பூசிப்பதற்கு, 27 கலசங்கள் வைத்து ஞான வாள் ஏந்தியபடி யாகேஸ்வரன், யாகேஸ்வரியையும் கலசத்தில் அமைத்து, 9 குண்டங்களோடு விளங்குகின்றமையால் யாகசாலை கலாமயமாகும்.

**நவகுண்டம் :** சிவபெருமானுக்குச் சொருபம், தடத்தம் என இரு வடிவங்கள் உள்ளன. சொரூபத்திருமேனி சுயப்பிரகாச திருமேனியாகும். அது உலகத்தைக் கடந்தவடிவம். தடத்தவடிவம் என்பது உலகத்தோடு கலந்த வடிவமாம். இந்த உலகம் நிலம், நீர், நெருப்பு, காற்று, நீள்விசும்பு, நிலா, பகலோன், இயமானன் என்னும் எண்வகைப் பொருளிலும் கலந்தது. இதனால் இறைவனை எண்வகை உருவில் வைத்து வணங்கவேண்டும் என்பது பெற்றும். முதலில் நிலம் என்பது பிருதுவியாகும்; அது சதுரமான வடிவம்; அதைக் குறிப்பது கிழக்குத் திக்கில் அமைந்த நாற்கோண வடிவமான குண்டமாம்.

நீர் என்பது அப்பு: இதன் வடிவம் பாதிச்சந்திரனுன பிறைவடிவம்; அது தெற்கில் உள்ள பிறை வடிவமான குண்டமாம்.

நெருப்பு என்பது தேயு: இதன் வடிவு முக்கோணம். இது தென் மேற்கு மூலையில் உள்ள முக்கோண வடிவம்.

வாயு: இது அறுகோணவடிவம்; இது வடமேற்கு மூலையில் அமைந்திருக்கிறது.

ஆகாயம்: இது வட்டவடிவினது; மேற்குத்திக்கில் உள்ள குண்டத்தில் அமைந்திருக்கிறது.

சூரியன்: இது தாமரைப்பூ வடிவம்; இது வடக்குத் திக்கில் அமைந்திருக்கிறது.

சந்திரன்: இது எண்கோணவடிவினது; இது வட கிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது.

இயமானன்: என்னும் ஆன்மா மாயாதத்துவத்தைக் குறித்து, அரசிலை வடிவாய் தென் கிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது. இவை எட்டுத்திக்கிலும் அமைய ஈசானத்திற்கும் கிழக்கிற்கும் மத்தியில் வட்டவடிவமான பிரதான குண்டத்தில் சுயம்பிரகாசமூர்த்தியாய் அமைந்துள்ளதுதான் இறைவடிவம். இறைவன் மேலே குறித்த 8 வடிவமாகிய உலகத்தில் கலந்து இருக்கிறன். ஆகவே அவனை இந்த 8 வகையான குண்டத்தில் வைத்துப் பூஜித்து ஓமம் செய்து வணங்குகின்றோம். இதுஎப்படியெனில், நமது அருவமான உயிரை உருவமான உடம்பில் வைத்து அனுமானித்துக் காண்பது போல இறைவனை வழிபாடு செய்தலே 9 குண்டங்களின் அமைப்பாம். இன்னும் ஈசானம் முதல் சத்தியோசாதம் இறுதியாக உடைய பஞ்சப்பிரம மந்திரங்களும் மூலமந்திரமும் சிவபெருமானுடைய எல்லாம் அறியும் தன்மை, வரம்பில் இன்பம் உடைமை, இயல்பாகவே பாசங்களில் நீங்கிய தன்மை, தன் வயத்தாகும் தன்மை, பேரறிவுடைமை, பேர் அருளுடைமை, அளவிலாற்றல் உடைமை, தூய உடம்பினனுதல் முதலிய எண் குணங்களும் பிரதான குண்டத்தில் இறைவனுக்குப் போல் அமைந்து விளங்கும். மேலும்பிரதான வேதிகையில் அமைந்தாசனம் முதல் உள்ள ஆசனங்கள் மேல் சர்வதேவதா சொரூபமான இறைவனை வைத்து வணங்கும் இடமும் சிறந்த யாகசாலையேயாம்.

**பதவின்யாசம் :** மூலஸ்தானத்து இறைவனை ஸ்தாபிக்க ஏற்படுத்தும் இடத்தைக் குறித்தல். இதை ''ஆசார்யசில்பின சார்த்தம், பிரவிசேத்கர்ப கேககம்'' என்ற காரணகம விதிப்படி, ஆசாரியரும் சிற்ப சாஸ்திரியும் சேர்ந்து சிவன் அம்மாள் விநாயகர் முதலிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்வதற்குரிய இடத்தை வகுத்தலாம்.

**ஸ்தூபிஸ்தாபனம் :** அதிஸ்டானம் முதல் (பட்டிகை) ஸ்தூபிவரியந்தமும் முறையே ஆறு அத்துவாக்களும் அமைய தூல லிங்கமாக அமைந்த பத்மத்தின் மேல் ஸ்தூபியை வைத்தலாம்.

**தீபஸ்தாபனம் :** இறைவன் சோதிவடிவினன்; அவனைச் சோதி வடிவாக வணங்குவதற்காக வைக்கப்படுவது தீபஸ்தாபனமாம். ''இல்லக விளக்கது இருள் கெடுப்பது.........நல்லகவிளக்கது நமச்சிவாயவே'' என்னும் தேவாரம் இங்கு நினைவு கூரத்தக்கது.

**இரத்தினஸ்தாபனம் :** நவரத்தினம், நவலோகம் முதலிய வஸ்துக்களை, ஆரோக்கிய, வீரிய, பிரபா சக்திமயமானப் திரவியங்களைப் பீடத்தின் மேல் இட்டு, இந்திராதி லோக பாலகர்களைப் பூஜித்துப் பத்மாசனம் வரை பூசித்தல் இரத்தினஸ்தாபனம் ஆகும்.

**இயந்திரஸ்தாபனம்:** கோடுகளும், கோணங்களும் இறைவனின் மூல பிராசாத மந்திரங்களும் எழுதிப் பூசிக்கப்பட்ட யந்திரத்தை உரிய இடத்தில் வைத்தலாம். இது இறைவனுக்கு அருள் சக்தியை ஊட்டுவதாம். (இது வீட்டுக்கு பற்றறி போல எனலாம்.)

**பிம்பஸ்தாபனம் :** மூர்த்திகளை முறைப்படி வைத்தலாம்.

**அஷ்டபந்தனம் :** என்பது இறைவனின் அம்சமாகிய அஷ்ட மூர்த்திகளின் அருள் பெற்று, அணிமாதி அஷ்ட சித்திகளும் சித்தியடைந்த நிலையில் ஞானகிரியா சக்தியாகும். சங்கநிதி, பதுமநிதி, இரண்டும் தோன்றி பரம்பொருளின் ஆணையால் சாம்பிராட்சிய லட்சுமியும், அதில் இருந்து பயன் தரும் வகையில் தனலட்சுமி தான்ய லட்சுமி, வித்தியா லட்சுமி, கீர்த்தி லட்சுமி, சௌபாக்கிய லட்சுமி, வீர லட்சுமி, ஜெயலட்சுமி, சந்தான லட்சுமி ஈறாக அஷ்டலட்சுமிகளும் உருக் கொண்டு உயிர்களை உய்விக்கும் வண்ணம் உள்ள கதிகளைத்தருவது அஷ்டபந்தன சமர்ப்பணமாம்.

**சொர்ணபந்தனம் :** தங்கத்தால் செய்வது.

**தைலாப்பியங்கம் :** லிங்கத்திற்கு தைலத்தினால் (எண்ணெய்) ஆசாரியரும், சிற்பசாஸ்திரியாரும், அன்பர்களும் சாத்துதல்; அன்பர்கள் தங்களிடத்தில் உள்ள ஆணவமல சம்பந்தத்தாலும், திரிகரணங்களாலும் ஏற்படும் குற்றம் நீங்கி சுத்தி அடைதற் பொருட்டு, எள்ளில் இருந்து எடுக்கப்பட்ட சுத்தமான நல் எண்ணெய்யை சுவர்ணத்தினால் தொட்டு இறைவனின் சிரசு, கண்கள், மூக்கு, செவி, தொப்பிள், பாதம், முதலிய எல்லா அங்கங்களிலும் குளிரும்படி நிறையச் சாத்துவதாம்.

**பிம்ப சுத்தி :** தீட்சாயினர்கள் முதலானோரால் பரிசிக்கப்பட்ட தோசநீக்கத்திற்காகவும், உஷ்ணசாந்திக்காகவும், பிம்பத்திற்குச் சுத்தம் உண்டாவதற்கு உதகம், கந்தம், புஷ்பம், பத்திரம், காசாயம், மிருத்தி, பீஜம், பல்லவம், இரத்தினம், லோகம், தாது, அஸ்திரம், ஒசதி, கவ்வியம், குசம், சிருங்கம் முதலிய 16 வகையான திரவியங்கள் நிரம்பிய கலசங்களைப் பூசித்து, ஓமம் செய்து, பின்னர் மூர்த்திக்கு முறைப்படி பஞ்சாமிர்தாதி முதலியவைகளால் அபிஷேகம் செய்து அலங்கரித்துப் பூசித்தலாம்.

**பிம்பிரக்ஷாபந்தனம் :** கும்பாபிஷேக நிமித்தம் மூர்த்திகளுக்கு காப்புக்கட்டுதலாம்.

**பூர்வசந்தானம்:** மூர்த்திக்குப் பக்கத்தில் ஆசாரியர், சாதகர் உட்கார்ந்து ஆதார சக்தி முதல் பஞ்சமாவரணம் வரைபூசித்து, கலை முதல் மந்திரம் இறுதியாகச் சங்கோபாங்கமாக அவயவ பேதங்களாய் பிம்பத்திற்கு தர்ப்பை நுனியால் நியாசம் செய்தலாம்.

**விசேடதிரவிய ஹோமம் :** இறைவனை அக்கினிவடிவில் பூசித்தலாம். சகலவிதமான ஹோமத்திரவியங்களையும் சிவமயமாக்கி அதற்குரிய மந்திரங்களோடு பஞ்சப்பிரம மந்திரமும் வியாகிருதியும் சேர்த்துச் சொல்லி அக்கினியில் ஹோமம் செய்தலாம்.

**ஸ்பரிசாகுதி :** யாகத்தில் உள்ள மூர்த்தி, மூர்த்தீஸ்வரன், மூர்த்தீஸ்வரி, மந்திரம், ஆகியவைகளைப் பூஜித்து ஹோமம் செய்த முறைப்படி மூல மூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களில் முறையே தொடர்பு படுத்தலாம்.

**ஸ்ரோத்திர வந்தனம் :** ஆசாரியர் மூர்த்திபர்கள் செய்த தொடர்புகளில் கூடுதல், குறைவு ஏற்பட்டால் அவைகளைக் கருணையினால் பூர்த்தியாக்கி அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கலாம்

**ஆசாரிய பூஜை :** குரு மாருக்கும், சர்வசாதர்களுக்கும் உடை, உத்தரீயம், உஷ்ணீசம், உருத்திராக்ஷம், மோதிரம், விபூதிப்பை முதலிய உபசாரங்கள் கொடுத்து மகிழ்வித்தலாம்.

**அக்கினிசம்யோஜனம் :** பிரதானகுண்டத்தில் பூஜை செய்து எடுத்த அக்கினி மூர்த்தி முதலானவைகளைப் பிரதான ஆசாரியர் மூலம் குண்டத்தில் சேர்த்தலாம்.

**பூரணாகுதி :** ஓமத்தைப் பூர்த்தி செய்வதற்காகச் செய்யப்படும் கிரியை.

**தீபாராதனை :** சோடசோபசார விசேட பூசையாம்.

**வேத கோசம்:** வடமொழி வேதம் முதலியன ஓதல்; தமிழ் வேதம்.

**ஸ்தூபிகும்பாபிஷேகம் :** விமானங்களில் உள்ள ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்தல்.

**மகாகும்பாபிஷேகம் :** அர்ச்சகர், ஸ்தானிகர் ஒருவரை நந்திகணத்தலைவராகப் பூஜை செய்து, அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து அலங்கரித்து, அவரது சிரசின் மீது பிரதான கடத்தை வைத்து, சர்வசாதகர், பிரதான குரு, மூர்த்திபர்கள் முதலியோர் கும்பத்தை தொட்டுக்கொண்டு, எஜமான்கள், பக்த ஜனங்கள் சூழ்ந்து புஷ்பாஞ்சலி, வேதம், தேவாரம், தோத்திரம், சங்கு, மங்கள வாத்தியம், பேரி, மணி முதலிய வாத்திய கோசங்களுடன் சிவநாம பஜனை செய்து பக்தியுடன் மெதுவாக வீதிவலம் வந்து, மூலாலயம்சென்று, ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்து, கும்பத்திற்கும் மூர்த்திக்கும் நாடிசந்தானம் செய்து தொடர்பேற்படுத்தி, உரிய முகூர்த்தத்தில் இறைவனை ஆவாகனம் செய்து, மூலமந்திரம் உச்சரித்துப் பதமந்திரத்துடன் பக்தர்கள் ஹரஹர என்ற சத்தம் முழங்க, வேத சிவாகமம், தேவார, புராண திருமுறைகளைப் பக்தர்கள் ஓத, சகலவாத்திய கோசங்களும் ஒலிக்க, மகா கும்பாபிஷேகத்தைச் செய்து எஜமானர்களும் சகல ஜீவராசிகளும் உயதி அடையப் பிரார்த்தித்துச் செய்வதே மகாகும்பாபிஷேகமாகும். வர்த்தனி கும்பத்தை ஆவுடையாருக்கும், வித்தியேஸ்வரக் கும்பங்களை ஆவுடையாரைச் சுற்றிலும் அபிஷேகித்து, மகாநைவேத்திய உபசாரம் செய்து, அகண்ட தீபம் வைத்துப் பிரார்த்தித்த பின்னர் தேவர்களின் பூசைக்காக மூன்றே முக்கால் நாழிகைக்கு கதவைச் சாத்தி வைக்கவும்.

**தசதர்சனம் :** கதவைத்திறந்து பசு, ஆசாரியர், வேதபாரகர், கண்ணாடி, பூரணகும்பம், தீபம் கன்னிகை, சன்னியாசி, சுமங்கலி, எஜமான், பக்தசனம், முதலியோரைச் சகலவாத்திய உபசாரங்களுடன் தனித்தனியே தரிசிக்கச் செய்தல்.

**பிராயச்சித்த ஆகுதி :** இது யாகத்தில் செய்வது.

**ஆசார்ய உற்சவம் :** குருவழிபாடு.

**எஜமானுக்குப் பலப்பிராப்தி :** எஜமானுக்கு கும்பாபிஷேகப் பலனை ஒப்புவித்தல்.

இன்னும் இதைப்பற்றிய விளக்க விரிவுகள் அநேகம் உண்டு. அவைகளை இன்னும் அறிந்தோர் வாயிலாகக் கேட்டுப் பேரானந்தப் பெரு வாழ்வு அடைவோமாக.

# சிவலிங்க தத்துவ விளக்கமும் வழிபாடும்

சிவஸ்ரீ எஸ். காளஹஸ்திஸ்வரக் குருக்கள்

சிவலிங்கம் என்னும் சொற்றொடர் ''சிவமாகியலிங்கம்'' என விரியும்; விரிந்து லிங்கத்தின் தன்மை சிவம் எனப் பொருள் படும். அது எது போல எனின், சாரைப்பாம்பு என்ற சொற்றொடர் சாரையாகிய பாம்பென விரிந்து பாம்பின் தன்மை சாரையெனக் கொள்வது போலாகும்.

'லிங்கம்' என்னும் சொல் 'அடையாளம்' என்னும் பொருளை உணர்த்தும். அடையாளம் என்பது ஒரு பொருளை இத்தன்மைத்து என்று உணர்த்துவதற்கு ஏற்பட்ட குறியாம். ஒரு பொருளை உணர்த்துவதற்கு ஏற்பட்ட அடையாளம் அப்பொருளையே உணர்த்தும்; வேறு பொருளை உணர்த்தாது. ஒரு பொருளுக்கு ஏற்பட்ட அடையாளத்தை எப்பொழுது உபயோகப்படுத்துகிறோம் என்று ஆராய்ந்தால், ஒரு பொருளை நேரிற் காட்ட முடியாத சந்தர்ப்பத்தில், அப்பொருள் இத்தன்மைத்தாய் இருக்கும் என்று அத்தன்மையை விளக்குகின்ற ஒரு குறியைக்காட்டுவது வழக்கம். அது போல, சிவமாகிய பொருளை நேரிற் காட்ட முடியாத சந்தர்ப்பத்தில் அச்சிவப் பொருள் இத்தன்மைத்து என்று காட்டும் அடையாளமே லிங்கம். சந்திரசேகரர், சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்தங்களுக்கு 'லிங்கம்' என்ற பெயர் பொருந்தாது; இம்மூர்த்தங்கள் வேறு வேறு அண்டங்களிற் பேசும் தெய்வங்களாய் உருவத் திருமேனிகளோடு காணப்படுதலால், உபசாரமாக லிங்கங்கள் என்றும் கூறுவர். உருவப்பொருள் அல்லாத சிவப்பொருளைக் குறிப்பதே 'லிங்கம்' எனப்படும்.

இனி, சிவம் எனும் சொல் மங்கலம் எனப் பொருள் படும்; மங்கலத்தைத் தருவதெனவும் பொருள் படும். இத்தகைய மங்கலப் பொருளின் வடிவம் யாதாகும் என்று ஆராய்ந்தால், அது பரவெளி என்று அமையும். எல்லாப்பொருள்களோடு கூடியும் அப்பொருள்களில் நின்றும் பிரிந்தும், அப்பொருள்களிற் பற்றில்லாதும் இருக்கும் பொருள் அகண்டவெளியாய் இருத்தல் வேண்டுமேயொழிய, உருவமாகவோ அருவுருவமாகவோ இருத்தல் இயலாது. இது ஆகாயம் போன்றதாகும். ஆகாயம் மண்முதலிய நான்கு பூதங்களோடு கூடியும், பிரிந்தும், பற்றின்றியும் நிற்கும். சிவமும் எப்பொருள்களோடும் கூடியும், தனித்தும், பற்றின்றியும் நிற்கும். ஆகையால் சிவத்தின் வடிவம் பரவெளியாகும். ஆகாயம் பூதவெளி, அறிவில்லாத சடம். சிவம் பரவெளி; அறிவுடைய சித்து. இப்பர வெளியை ''சிதாகாயம்'' என்றும், ''ஞானகாயம்'' என்றும் பெரியோர் கூறுவர்;

> ''பூதங்களல்ல பொறியல்ல வேறுபுலனல்ல வுள்ள மதியின்
> பேதங்களல்ல வினையின்றி நின்றபிறிதல்ல வென்று பெருநூல்
> வேதங்கிடந்து தடுமாறும் வஞ்ச வெளியென்ப''

எனவும்,

> ''சிற்பரவெளிக்குள் வளர்தற் பரமதான பரதேவதையை''

எனவும் வரும் திருவாக்குகளால் இவற்றைத் தெளிக.

ஆகவே, அப்பரவெளியாகிய சிவப்பொருளை வழிபட்டு உய்வதற்கு அவருடைய தோற்றம் வேண்டும். தோன்றாத பொருளிடத்து வழிபாடு செல்லாது. எனவே, இம்மண்ணுலகத்துள்ளார் கடவுளை வழிப்படுதற்குப் பார்த்த மாத்திரத்தே பொதுவான அறிவுடையார்க்குக் ''கடவுள்'' என்ற எண்ணமும், சிறப்பான அறிவுடையார்க்குப் பரவெளியாகிய ''சிவம்'' என்ற எண்ணமும் உண்டாகும் பொருட்டு, அப்பரசிவமே சிவலிங்கமாகிய திருமேனியைக்கொண்டுள்ளார். இறைவன் கருணைப் பெருக்கால் தோன்றிய சிவலிங்கத்திருமேனியைச் ''சுயம்பு லிங்கம்'' என்பர். ஒருவராற் செய்யப்படாது தானாகவே தோன்றியது சுயம்புலிங்கம்.

பூதவெளியாகிய ஆகாயத்தை உற்று நோக்கும் பொழுது, அது உயர்ந்தும் அகன்றும் தோன்றும். உயர்ந்த தோற்றம் ''அதீதம்'' என்பதையும் அகன்ற தோற்றம் எல்லாம் தன்னுள்ளும், தான் எல்லாவற்றுள்ளும் என்பதையும் உணர்த்தும். இவ்வாறே ஞான வெளியாகிய சிவப்பொருளும் விளங்கும் என்பதை உணர்த்துதற்கே, அச்சிவப்பொருளின் திருமேனியாகிய சிவலிங்கம் உயர்ந்தும் வட்டமாக அகன்றும் அமைந்துள்ளது. இக்கருத்தையே பின் வரும் திருமந்திரச் செய்யுள் உணர்த்துகின்றது.

''குரைக்கின்ற வாரிக் குவலய நீரும்
பரக்கின்ற காற்றும் பயில்கின்ற தீயும்
நிரைக்கின்ற வாறிவை நீண்டகன் றுனே
வரைத்து வலஞ்செயு மாறறி யேனே''. (1773)

ஆதலால், சிவலிங்கம் எல்லாமாய் நின்ற சிவப்பொருளையும், அச்சிவப்பொருளின் உண்மைச் சொரூப மாகிய பரவெளியையும் உணர்த்துமுகமாக அமைந்துள்ளது என்பதை நாம் அறியலாம்.

மேலும் ''லிங்கம்'' என்ற சொல் ''எல்லாம் தோன்றிமறையும் மூலம்'' என்றும் பொருள் படும்; லிங்—லயம், கம்—தோன்றுதல்; இக்கருத்தையே சுப்பிரபேதாகமம் வலியுறுத்துகிறது.

''லயம் கச்சந்தி பூதாநி சம்ஹாரே நிகிலாநிச
''சிருஷ்டிகாலே யதா சிருஷ்டிஸ் தஸ்மால் லிங்கமுதாகிருதம்''

சங்கார காலத்திலே சமஸ்த சேதன சேதனப்பிரபஞ்சங்களும் லயத்தை அடைந்து, பின் சிருஷ்டிகாலத்தே அங்ஙனம் உற்பத்தி ஆகின்றமையால் 'லிங்கம்' எனப்படும்.

அன்றியும் லிங்கம் என்ற சொல் 'லிகி' என்ற தாதுவில் நின்றும் பிறந்து சித்திரித்தல் என்னும் பொருளும் கொள்ளக்கிடத்தலால், சிவபிரான் படைத்தல் முதலிய ஐந்தொழில்களாற பிரபஞ்சத்தைச் சித்திரிக்கிறார் என்றும் பொருள் கூறுவர்.

சிவலிங்கத்தின் கீழ் காணப்படும் ''ஆவுடையார்'' என்பது சிற்சக்தியைக் குறிப்பதாம். பரசிவ மாகிய பரவெளியில் எப்பொழுதும் ஓர் அசைவுண்டு. அவ்வசைவைச் சிற்சக்தி என்பார். அந்த அசைவு சுற்றிக்கொண்டே இருக்கும். இவ்வசைதற் சக்தி பரவெளியில் உண்டு என்பதை உணர்த்துதற்குப் பர வெளியை உணர்த்தும் சிவலிங்கத்தில் வளைந்திருக்கும் ஆவுடையார் அமைந்திருக்கிறது. அன்றியும் அசைதல் பரவெளியில் அடங்கியுள்ளது என்பதை உணர்த்துதற்கு அவ் அசைதலைக் குறிக்கும் ஆவுடையார் பரவெளி யாகிய சிவலிங்கத்தின் கீழ் அடங்கிக் காணப்படுகின்றது. இனி, அவ் ஆவுடையார் வளைந்திருப்பதோடு அமை யாது, ஒரு பக்கத்தில் சிறிது நீண்டுமிருக்கின்றது. இதற்குக் ''கோமுகி'' என்று பெயர். ''கோமுகி'' என்ற தினல், கோவாகிய பசுக்களை (உயிர்களை), தன்னிடத்து அழைத்து மலநீக்கம் செய்து சிவமாக்கும் செய லுக்கு அறிகுறியாய் அமைந்துள்ளது என்பதாம். இதனையே 'தன் நிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ் சக்தி' என்று பெரியோர் கூறியுள்ளனர்.

மேலும் ஆவுடையாரின் கீழ் எண்கோணமாகவும்; அவ் எண் கோணத்தின் கீழ் நாற்கோணமாகவும் பிரதிட்டாலிங்கம் அமைந்திருக்கின்றது. இவற்றின் கருத்தென்னை எனின், நான்குதிக்கும் எட்டுக்கோணங் களுமாயிருக்கிற எல்லா அண்டங்களும், சத்தியினால் ஆக்கப்படுவன என்பதையும், அவையெல்லாம் சத்தியுள் அடங்கும் என்பதையும் உணர்த்தும் பொருட்டாகுமாம்.

இறைவன் இங்ஙனம் சத்தியும் சிவமும் எனப் பெண்பாலாகவும் ஆண்பாலாகவும் தம்முள் இருவேறு வகைப்பட்ட தன்மைகள் உடையனாயிருத்தலால், இவ்வுலகம் எல்லாம் ஆண்பெண் என்ற இரு பகுதியாக இயங்குகின்றன. இக்கருத்து அருணந்திசிவாசாரிய சுவாமிகளாற் சிவஞான சித்தியாரில் விளக்கப்பட்டுள் ளது. அத்திருவாக்கு வருமாறு :

''சத்தியுஞ் சிவமும் ஆயதன்மை இவ்வுலகம் எல்லாம்
ஒத்துஒவ்வா ஆணும் பெண்ணும் உணர்குணங் குணியும்ஆக
வைத்தனன் அவனால் வந்தஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்
இத்தையும் அறியார் பீட இலிங்கத்தின் இயல்பும் ஓரார்''.

—சித்தியார் 1.89

எனவே ''இலிங்கம்'' என்பது சிவமேயாம். அது பக்குவம் நோக்கி ஆன்மாக்களின் தியானபூசா நிமித்தம் அச்சிவம் விலங்குஞ் சிலை முதலிய வடிவங்களிற் கற்பிக்கப்பட்டதாகும். அதன் சொரூபம் பிரணவ வடிவமாகக் காணப்படும். அகாரம் கண்டம், உகாரம் கோமுகம், மகாரம் வட்டம் எனவும்; அதன் விருத்தம் உருத்திரபாகம், நடுவில் எட்டு மூலை விட்டுணுபாகம்,

கீழ்பகுதியின் அடி நான்கு மூலை பிரமபாகம் எனவும்; உருத்திரபாகம் ''பும்லிங்கம்'', விட்டுணுபாகம் ''ஸ்திரீ லிங்கம்'', பிரமபாகம் ''நபுஞ்சகலிங்கம்'' எனவும் அறிய விளங்கும்.

சிவயோகியர் தமது தேகாலயத்தினில் உள்ளிருக்கும் ஆதாரங்களுள் அனுகரத்திலே, ஆதியந்தமில்லாததாய், அக்கினிபோல விளங்குஞ் செந்நிறமுள்ளதாய், அதோமுகமாய்ச் சோதிப் பிரகாசமாய் விளங்கும் சுயம்புலிங்கத்தையும், மணி பூரகத்தில் கோடி சூரியப் பிரகாசமாய்ப் பாசபந்தத்தைச் சிதைப்பதாய், கோமளமாய், ஊர்த்துவமுகமாய் விளங்கும் இலிங்கத்தையும், புருவமத்தியில் இருக்கும் ஆக்கினையிலே கோடி சந்திரப் பிரகாசம் போல் ஒளிர்வதாய், அருவங்கொண்டதாய் பராசத்தியோடு இலிது விளங்கும் மகாலிங்கத்தையும், ஞானசாரியர் திருவருளினாலே அறிவார்கள். இதனை,

''அகார வுகாரம் இரண்டு மறியில்
அகார வுகாரம் இலிங்கம் தாமே''

''மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்
பலர்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தருஞ் சக்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே''

என்னும் பாடல்களின் விளக்கத்திற் கண்டுகொள்ளலாம்.

இனி, இச்சிவலிங்கம் பரவெளியாகிய அருவத்தைக் காட்டுகின்ற உருவமாயிருப்பதால், அருவுருவத் திருமேனி எனப்படும். அன்றியும் அதீத நிலையில் நிற்கின்ற சிவம் சத்தியோடு கூடிச் சீவன்முத்தர்க்கும், சாதகர்க்கும், ஞானிகட்கும் அவரவர்க்கேற்ற தியானத்தில் அளவிடுதல் நிமித்தமாக அவிகாரமான நிட்களத்திலே சத்தி விகற்பமான கலைகளாலே தியான மூர்த்தங்களாக விளங்கும் சாதாக்கியத்தைக் குறிப்பதனாலும் அருவுருவத்திருமேனி எனப்படும்.

சாதாக்கியம் ஐந்து வகைப்படும்; அவற்றுள் இலிங்கமும் பீடமுமாக விளங்கும் நிலை கன்ம சாதாக்கியமாகும்; சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம் என்னும் நான்கும் ஒன்றை ஒன்று பற்றி ஐந்தாவதாகிய கன்ம சாதாக்கியத்தைச் சேர்திருத்தலின் இந்தக் கன்ம சாதாக்கியம் மற்றைய சாதாக்கியங்களிலும் சிறப்புடைத்தாகும்.

''ஐந்தியற் சத்திக ளாயினோர் தலைமைத்
தந்தது மருவுருத் தாங்கி யவ்வழிச்
சிந்தனை யருச்சனை செய்து யாவரு
முய்ந்திடச் சாதாசிவ வுருவைத் துற்றதும்''

எனக் கந்தபுராணமும்,

''பந்தமாகிய மலவி ருளகற் றும்
பரிதியாயுள பல்லு யிர்க் குயிரா
யந்த மாதிகளளப் பருமொ ளியா
யமலமாகு மவ்வ ருவெனு முருவம்''

எனத் திருவாத வூரடிகள் புராணமுங் கூறுமாற்றால் தெளிக.

<u>இலிங்கபேதம் :</u>

சிவலிங்கம் மூன்று வகைப்படும் :

1. அவ்வியத்தலிங்கம் : பீடமும் இலிங்கமுமாயிருப்பது.
2. வியக்தா வியக்தலிங்கம் : இலிங்கத்திலே முகமும் தோள்களும் வெளிப்பட்டிருப்பது.
3. வியக்தலிங்கம் : எல்லா அவையவங்களும் வெளிப்பட்டிருக்கும் சந்திரசேகரர் முதலிய மகேசுவர வடிவங்கள்.

சிவலிங்கபேதம் வேறு வகையாகவும் கூறப்படும். அவற்றை விரிக்கில் பெருகும். திருக்கோயில் தூபி, தூலலிங்கம் எனவும், விமானத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்குமலிங்கம் எனவும், அதற்கு

முன்னுள்ள பலிபீடம் பத்திரலிங்கம் எனவும் கொள்ளப்படும். இவ்வுண்மைகள் திருமந்திரத்திற் கூறப்பட்டுள்ளன.

''தூய விமானமுந் தூலம தாகுமால்
ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்
ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே''.

**சிவலிங்கவழிபாடு.**

இறைவனை விக்கிரகத்தில் வழிபாடு செய்தலினும், இலிங்கத்தில் வழிபாடுசெய்தல் சிரேஷ்டமானது. இதனை மகாபாரதத்திலுள்ள ஒரு நிகழ்ச்சி விளக்கிக் காட்டுகிறது.

அசுவத்தாமன் அக்கினி அஸ்திரத்தை நரநாராயணர்கள் மேல் பிரயோகித்தான். அது பாண்டவர்கள் சேனையை அழித்தது. ஆனால் நரநாராயணருக்குத் தீங்கு செய்யமுடியாது போயிற்று. இதனால் மனம் உடைந்த அசுவத்தாமன் போரை நிறுத்திக் களத்தை விட்டு ஓடினான். வியாச முனிவர் அசுவத்தாமனுக்கு முன் எதிர்ப்பட்டு ''நீயாது காரணத்துக்காகப் போரைவிட்டு ஓடுகின்றாய்'' என்று கேட்டார்; ''நான் பிரயோகித்த அக்கினி அஸ்திரத்துக்கு எவரேனும் தப்பமுடியாது; நரநாராயணரைச் செயிக்கமுடியாது போன காரணம் யாது என அறியப் போகின்றேன்'' என்றான்; ''கேசவார்ச் சுனரைப்போல் நீ தவத்திறால் சிறந்தனையாயினும், அவ்விருவரும் யுகந்தோறும் சிவபிரானை லிங்கத்திலே அர்ச்சிக்கின்றார்கள். நீ அச்சிவனை விக்கிரகத்தில் வழிபடுகின்றாய். ஆதலின் அவர் தவவலிமை உனது தவவலிமையில் சிறந்தது'' என்று வியாசர் கூறினார்.

எனவே மகேசுரவடிவங்களுக்கும் மேலாயது சிவலிங்கம் என்பதும், அவ்வழிபாடு மிக்க சிறப்புடையது என்பதும் சிவாகம நூல் துணிபு ஆகும்.

இக்காலத்தில் சிலர் சிவலிங்க வழிபாடு வேதத்தில் விதிக்கப்படவில்லை என்று ஆராய்ச்சி செய்கின்றனர்; வேறு சிலர் விக்கிரக வழிபாடே வேதத்தில் கிடையாது எனக் கூசாமல் கூறுகின்றனர். இவர்களுக்கு விரிந்த மறுமொழி கொடுப்பது இக்கட்டுரையிற் சாத்தியமில்லை. விக்கிரக ஆராதனை வேதத்தில் விதிக்கப்பட்டுள்ளது:

''சம்வத்சரஸ்ய பிரதிமாம் யாந்துவா ராத்திரி யுபாசதே, பிரஜாம் சுவீராம் கிருத்துவா
விச்வமாயுர் வ்யசநவத் ப்ராஜாபத்யாம்''

சம்வற்சர (கால) ரூபியாகிய (உமது) பிரதிமையைச் செய்து இருட்டறையில் உம்மை உபாசிக்கிறான்; (அங்ஙனம் உபாசிப்பவன்) வலிமையுள்ள புத்திரனையும், பூரண ஆயுளையும் அடைகின்றான்; பிரஜைகளுக்கு எஜமானனுந்தன்மையையும் அடைகின்றான். (யசுர்வேதம் 5ஆம் கண்டம், 7ஆம் பிரசினம் 2ஆம் அநுவாகம்)

2. ''அச்மான மாகணம் பிரபத்யே.''

நன்கு சித்திரிக்கப்பட்ட சிலையை வணங்குகின்றேன் (யசுர்வேத ஆரணியகம். 4ஆம் பிரசினம்).

3. ''ஏஹ்யச்மாந மாதிஷ்ட அச்மாபவது தேதநூ :''
(சுவாமி) வாரும் (இந்தக்) கற்பிரதிமையில்நிற்பீராக.
உமது சரீரம் கல்விக்கிரகமாய் இருப்பதாக.
(அதர்வணவேதம்: 1ஆம் கண்டம் 2ஆம் சுற்பத்து 3ஆம் நுவனி)

4 ''சிவலிங்காய நம :''
சிவலிங்கத்துக்கு நமஸ்காரம்.
(யசுர்வேத தைத்திரீய ஆரணியகம் 10ஆம் பிரசினம், 16ஆம் அநுவாகம்).

5. சிவலிங்கம் திரிசந்திய மஹாஹுப் யர்ச்சயேத்
சிவலிங்கத்தைத் தினந்தோறுங் காலை மாலை உச்சி என்னும் முப்பொழுதும் பூசிக்க.
(பஸ்மஜாபாலோபநிடதம்.)

# இந்து சாதனம்

— மு. மயில்வாகனம் —

ஈழநாட்டிலே பத்தொன்பதாம் நூற்றாண்டில் அந்நியருடைய ஆட்சியின் கீழ் தமிழ் மொழியும், சைவ சமயமும் நலிவுற்று இழிந்த நிலையை அடையலாயின. அவற்றிற்குப் புத்துயிர் அளித்துச் சிறப்படையச் செய்வதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் காலமறிந்து பரம்பொருள் அனுப்பிய இறைமகனாக — ஐந்தாங் குரவராக— நல்லூரிற் றோன்றினர்.

அவர் தகுதி வாய்ந்த மாணாக்கர்களைத்தேடி அழைத்துக் கல்வி கற்பித்தார்; அவர்களுடைய உதவியுடன் சைவசமயத்தையும், தமிழ் மொழியையும் தூய்மையான முறையிற் பரப்பினர். சைவசமயச் சூழலிலேயே சைவப்பிள்ளைகள் கல்வி பயில வேண்டும் என்பது அவருடைய விருப்பம். அதன் நிமித்தமாக எழுந்த பாடசாலையே இன்று ''நாவலர் பாடசாலை'' என வழங்கப்படும் கலாசாலையாகும்; அந் நேரத்தில் இதன் பெயர் ''சைவப்பிரகாச வித்தியாசாலை'' ஆகும்.

தமக்குப் பின் தமிழ் மொழியையும், சைவசமயத்தையும் பேணுதற்கு ஒரு சபை இயங்க வேண்டும் என்பது அவரது தூய நோக்காகும். அவர் சிவ பத மெய்திய பின்னர் அவருடைய மாணாக்கர்களும் சைவாபிமானிகளும் 1888 ஆம் ஆண்டு சித்திரை மாதம் மூன்றாம் தேதி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் விசேட பூசை ஆராதனைகளுடன் கோவில் சன்னிதானத்தில் ஒரு குத்துவிளக்கையேற்றி அதன் தீபத்துடன் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ''சைவசமய பரிபாலன சபை'' எனப் பெயரிய சபையைத் தாபித்தனர். அச்சபையின் முதற்றலைவராக நாவலரது மருகர் வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் பதவியேற்றனர்; காரியதரிசியாக நாவலரது பெருமகன் த. கைலாசபிள்ளை அவர்களும், தனாதிகாரியாக மு. பசுபதிச்செட்டியார் அவர்களும் கடமையாற்றினர். குத்துவிளக்கேற்றிச் சபையைத் தாபித்ததன் நோக்கம் அச்சபை நமது நாட்டில் ஒரு சைவ ஞான தீபமாக விளங்க வேண்டும் என்பதேயாகும்.

1899 ஆம் ஆண்டு சபையார் ''இந்துசாதனம்'' என்ற தமிழ்ப் பத்திரிகையையும், ''Hindu Organ'' என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் ''டெமி'' பிரமாணங் கொண்ட தாளில் அகத்திற்றமிழும், புறத்தில் ஆங்கிலமுங் கொண்ட ஒரு கூட்டுப்பத்திரிகையாக பட்சத்திற்கொருமுறை புதன் கிழமை தோறும் தங்கள் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற் பிரசுரஞ் செய்தனர்.

ஆரம்பத்திலே தமிழ்ப்பத்திராசிரியராகத் த. கைலாசபிள்ளை அவர்களும், ஆங்கிலப்பத்திராசிரியராகத் திருவனந்தபுரம் உயர்நீதிபதி தா. செல்லப்பாபிள்ளையவர்களும் கடமையாற்றினர். அக்காலத்தில் சைவர்கட்குரிய ஆங்கில—தமிழ் பத்திரிகை இதுவொன்றேயாதலின் அபிமானிகள் பலர் இப்பத்திரிகையை ஏற்று வாசித்தும், அறிஞர் பலர் அரிய பல விஷயதானங்கள் செய்துதவியும் வளர்த்து வரலாயினர்.

''சைவ சமய சூழலிற் கல்வி'' என்ற நாவலர் நோக்கை நிறைவேற்றும் வண்ணம், பத்திரிகை ஆரம்பித்த இதே வருடம், சபையார் வண்ணார்பண்ணையில் அத்துவக்காத்து எஸ். நாகலிங்கம் அவர்களை மனேஜராகக் கொண்டு தற்போது ''யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி'' (Jaffna Hindu College) என வழங்கும் கலாசாலையை ''இந்து உயர் கல்விக்கூடம்'' (Jaffna High School) என்ற பெயருடன் ஆரம்பித்தனர்.

1889 ஆம் ஆண்டு ஆடிமாதம் ஏழாம் திகதி வண்ணார்பண்ணை சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற் கூட்டப் பட்ட சபையில் ''சைவ சமய பரிபாலன சபை'' என்ற பெயர் ''சைவ பரிபாலன சபை'' என மாற்றப்பட் டது. இச் சபையாரின் முயற்சியால் ''இந்து சாதனமும்'' ''Hindu Organ'' என்ற ஆங்கில இதழும் பேரறி ஞர் பலரின் கருத்துக்களை வெளியிட்ட வண்ணமேயிருந்தன. அத்துடன் மொழி, சமய சம்பந்தமான முக்கிய மான செய்திகளையும், கருத்துக்களையும் இப்பத்திரிகைகள் வெளியிடத் தவறியதில்லை. சபை, பாடசாலை, அச்சியந்திரசாலை, பத்திரிகை என்ற இவை நான்கும் பின்னிப்பிணைந்து சீரும் சிறப்புடன் இயங்கியவண்ணமே இருந்தன.

1905 ஆம் ஆண்டு தொடக்கம் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையானது அதற்கெனக் கட்டப்பட்ட இந்துக்கல்லூரியின் தென்பாகத்தில் இருந்த கட்டடத்திலேயே இயங்கி வந்தது. கல்லூரியிற் பயிலும் மாண வர் தொகை அதிகரித்தமையினாற் சபையார் அக்கட்டடத்தைக் கல்லூரியின் அதிகார சபைக்குக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இந்து சாதனாலயமும், சைவப்பிரகாச அச்சியந்திரசாலையும் ஒருங்கு சேர்ந்து தொடர்ந்தும் இந்துக் கல்லூரியின் அண்மையிலேயே இருக்க வேண்டும் என்ற நன்னோக்குடன், கல்லூரிக்கண்மையிலேயே நிலத்தைப் பெற்று 1928 ஆம் ஆண்டு தமது நோக்கத்தைச் சபையார் நிறைவேற்றினர். இதற்கு உறுதுணையாக நின்று உதவியவர்கள் சி. த. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களும், அக்காலம் மனேஜராகக் கடமை யாற்றிய ச. அம்பிகைபாகன் அவர்களுமாவர்.

''இந்துசாதனம்'' பத்திரிகையின் தமிழ்ப் பத்திராசிரியர்களாகத் த. கைலாசபிள்ளை, பெ. கார்த்தி கேசுபிள்ளை, பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை சு. சிற்சபேசன், மு. மயில்வாகனம் ஆகியோர் கடமையாற்றினர்; தற்சமயம் நம. சிவப்பிரகாசம் தமிழ்ப்பத்திராசிரியராகக் கடமையாற்றுகின்றனர்.

''Hindu Organ'' என்ற ஆங்கிலப் பிரதிக்குப் பத்திராசிரியர்களாகத் தா. செல்லப்பாபிள்ளை, அ. சபாபதி, ச. சிவகுருநாதர், ரி. ஏ. துரையப்பாபிள்ளை, எம். எஸ். இராஜரத்தினம், எம். எஸ். இளையதம்பி, வி. நாகலிங்கம், அத்துவக்காத்து ஏ. வி. குலசிங்கம், த. முத்துசாமிப்பிள்ளை ஆகியோர் கடமையாற்றினர்; தற்சமயம் நம. சிவப்பிரகாசம் அவர்களே ஆங்கிலப் பிரதியின் பத்திராசிரியராகவும் கடமையாற்றுகின்றார்.

இவ்விரு பத்திரிகைகளும் சமய சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவண்ணமே யுள்ளன. ஈழத்தில் தேவாரப்பாடல்கள் பெற்ற சிவஸ்தலங்களாகிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணமலை பற்றிய செய்திகளைத் தவறாது இவ்விரு பத்திரிகைகளும் பிரசுரித்து வருகின்றன. சேர் கந்தையா வைத்திய நாதன் திருக்கேதீஸ்வர புனருத்தாரண சபைக்குத் தலைவராக இருந்த சமயம், திருக்கேதீஸ்வர மகிமையைப் பற்றியும், புனருத்தாரன சபை புரிந்து வந்த தொண்டுகள் பற்றியும் சித்திர சகிதம் விசேட மலரொன்றை வெளியிட்டுச் சபை மகிழ்ந்தது. இப்பொழுதும் திருக்கேதீஸ்வரத்தில் நிகழும் விழாக்களைப்பற்றியும், ஸ்தலத் துக்குத் தேவையான பணிகளைப் பற்றியும் இவ்விரு பத்திரிகைகளும் வெளியிடத் தவறுவதில்லை.

சைவமுந் தமிழும் தனது உயிரெனவும், மூச்செனவும் விளங்கும் இக் கூட்டுப்பத்திரிகையாகிய ''இந்து சாதனம்'' மேலும் மேலும் தனது பணியிற் சீரும் சிறப்புடனும் மிளிரக் கௌரியம்பாள் சமேத கேதீஸ்வரநாதர் அருள்பாலிப்பாராக.

# சைவமும் பௌத்தமும்

—பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை—

இந்திய வரலாறு, சிறப்பாகப் பண்டைய இந்திய வரலாறு விடுவிக்க இயலாத புதிர்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக, காலமுறை தெளிவாகப் புலப்படும் சில நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு வளர்ச்சி முறையிலே தகவல்களைப் பிணைத்து 'இப்படி இருந்திருக்கவேண்டும்' என்று ஊகங்கள் பலவற்றை உருவாக்கியே பழைய இந்திய வரலாறு எழுதப்படுகின்றது. இந்திய வரலாற்றின் பொது நிலையே இவ்வாறு இருக்கும்போது, இந்தியச்சமயவரலாற்றில் தெளிவின்மை இன்னும் ஆழமாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு சமயப் பிரிவிலும் அபிமானம் கொண்ட அறிஞர் அச்சமயப் பிரிவுக்குத் தொன்மை; முதன்மை, சிறப்பு முதலியன கொடுத்து, இந்தியச் சமயவரலாற்றை எழுதுமாற்றைப் பல இடங்களிலே காணலாம். இன்று கிடைக்கும் பண்டைய மூலதாரங்களுக்குக் காலமுறை அறிய முடியாமை, சமயாபிமானம் காரணமாகப் பண்டைய சமய நூல்களிலே பிற்காலத்துச் சிறந்த கொள்கைகளாகக் காணப்பட்டவற்றை இடைச் செருகலாகப் புகுத்தியுள்ளமை, சமயநூற் கருத்துக்களை விளக்கும் போது தத்தம் மதங்களை நிறுவுவதற்குத் தக்க மாதிரி உரைவிளக்கம் முதலியன கூறிவந்துள்ளமை போன்றவை சைவம், பௌத்தம் முதலிய இந்தியச் சமயங்களின் வரலாற்றைக் கோடிகாட்டி வரையறுத்துக் காண்பதற்குத் தடையாக அமைகின்றன. இச்சமயங்களைப் பற்றிய ஆராய்ச்சியிலே கருத்து வேறுபாடுகளுக்கு நிறைய இடம் இருக்கின்றது என்பதை உணர்ந்து கொண்டு நடுநிலையாளர்களாகக் கொள்ளக் கூடிய அறிஞர்கள் நோக்கிலிருந்து இச்சமயங்களுக்கிடையே இருந்த உறவு நிலையைப் பார்க்கவேண்டும்.

பண்டைய இந்திய வரலாறு இந்து வெளி நாகரிக வரலாற்றோடு தொடங்குகின்றது. சைவ சமயம் இந்து மதத்திலே ஒரு கிளையெனலாம். உலகிலுள்ள முக்கியமான பிற சமயங்களோடு ஒப்பிடும்போது, இந்து சமயத்துக்கு ஒரு தனித்துவம் காணப்படுகிறது. இந்து சமயம் என்றால் என்ன என்று வரையறுத்துக் கூற முடியாமையே அது. கால முறையிலும், இடமுறையிலும், குழுக்களிடையிலும் காணப்படும் வேறுபாடுகளை நோக்கும்போது இந்து சமயம் ஒரு சமயமா என்று கேட்கத்தோன்றும். இந்திய நிலத்தையும் நீர்நிலையையும் மலையையும் ஆற்றையும் புனிதப்படுத்தி இந்தியச் சூழலுக்கேற்ப வாழுபவர்களிலே, பிற உலகப் பெருமதங்களைச் சார்ந்தவர்களல்லாதவர்களை இந்துக்கள் என்று கூறவேண்டும். இந்துவெளி நாகரிக மக்கள் விட்டுச் சென்ற சாசனங்கள் அறிஞர்கள் யாவரும ஏற்கத்தக்க முறையிலே இன்னும் வாசிக்கப்படாமையினால், இந்துவெளிச் சமய நிலை பற்றித் தீர்மானமாகக் கூற முடியாமலிருக்கின்றது. தொல்பொருளியலாளரான சேர் யோன் மார்ஷல் சைவ சமயத்தின் ஆரம்பநிலை இந்துவெளி நாகரித்திலே காணப்படுவதாகக் கூறியுள்ளார்.[1] பெருந்தொகையான பெண் உருவங்களும் பெரும்பாலும் நிர்வாண உருவிற் காணப்படும் ஆண் உருவங்களும் முறையே சக்தியான தாய்த்தெய்வ வழி பாட்டையும், நக்கன் என்று பிற்காலத்திலே போற்றப்படும் சிவபெருமானுடைய வழிபாட்டையும் குறிப்பனவாக வேண்டும் என்று அவர் கொண்டார். இலிங்கங்களும் யோனிகளும் பெருந்தொகையாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளமையும், இவ்வடிவிலும் சிவ சக்தி வழிபாடு அக்காலத்திலே நிலவியமைக்குச் சான்று என்பதும் அவர் கூற்று. மூன்று முகமுள்ளதாக, தலையிலே சூலம் போன்ற அணியுடன் யோக நிலையில், மான், எருமை, யானை, புலி முதலிய மிருகங்கள் புடை சூழக் காணப்படும் ஆண் உருவம் சிவனைப் பசுபதியாக வணங்கும் வரலாற்றுக்கால வணக்கத்தின் தோற்றுவாயாகக் கொள்ளத் தக்கது என்பது மேலும் அவர் கூற்று. பௌத்த சமயத்தில் முக்கிய இடம் பெறும் அரச மர வணக்கமும் அக்காலத்திலேயே தோன்றிவிட்டது. அரச மரத்துக்குப் பதிலாக அரசிலையை மட்டும் வரைவது மிகவும் பழைய முறை; கிளையை வரைவது சிறிது பிற்கால முறை. அரசிலையில் இறைவன் நிற்பதைச் சுட்டும் வடிவமும் உண்டு. இவையாவும் இந்துவெளி நாகரிகத்திலே இடம்பெற்றுள்ளன. சைவம் பௌத்தம் முதலிய பழைய இந்திய மதங்களின் சில கூறுகள் அக்காலத்திலேயே தோன்றிவிட்டனவெனக் கூறலாம்.

வரலாற்றாசிரியர் நீலகண்ட சாஸ்திரி முதலிய சிலர், சைவ சமயத்தின் தோற்றுவாய் வேதகாலத்துக்கு மட்டுமே போகின்றதெனக் கூறுவர்.[2] ஆனால் வேதகாலத்துச் சமயமான வைதிகம் வேறு, சைவம் உள்ளிட்ட

பிராமணீய இந்து மதம் வேறு என மானிடவியற் பேராசிரியர் சுநீதிகுமார் சட்டர்ஜி தெளிவாக விளக்கியுள்ளார். சிவனையும் உமையையும் வணங்குதல்; யோக அனுட்டானம், பக்தி மார்க்கம் என்பன திராவிடர்களிடமிருந்து பெறப்பட்டன வென்பது அவர் கருத்து.[3] ஆரியருடைய சமய நோக்கு எளிமையானதும் வளர்ச்சியடையாததுமாக இருந்தது. தெய்வலோகத்தின் வெவ்வேறு பகுதிகளிலே முப்பத்துமூன்று தேவர்கள் உள்ளார்கள் என்று கொண்ட அவர்கள், விக்கிரக வணக்கம் உடையவர்களல்லர். அக்கினியே அவர்களுடைய தூதுவன். மாடு, ஆடு அல்லது சில சந்தர்ப்பங்களிலே குதிரையைக் கொன்ற ஆரியர் அதன் இறைச்சியையும்இரத்தத்தையும் பால், நெய், சோமம் முதலியவற்றுடன் அக்கினி மூலமாகத் தேவருக்கு அனுப்பினர். உணவு, பானம் முதலியவற்றைப் பெற்றுத் திருப்திகண்ட தேவர் தம்மை வழிபட்டவருக்கு அவர் விரும்பிய செல்வம், புத்திரப்பேறு, நீண்ட வாழ்வு, சத்துருவெற்றி முதலியவற்றை வழங்கினுர். இந்தோ ஐரோப்பியர் பூர்விக வழிபாட்டு முறை இதுவே. பூசை முறை இதற்கு நேர் எதிரிடையானது; இந்தியாவில் மட்டும் காணப்படுவது; இந்தியாவுக்கு வெளியிலுள்ள ஆரியர் என்றும் கைக்கொள்ளாதது. பூசை முறையிலே கடவுள் அண்டமெங்கும் நிறைந்திருப்பதாகக் கருதப்படுகின்றது; விக்கிரக வணக்கம் சிறப்பிடம் பெறுகிறது. நீர், மலர், இலை, பழம், தானியம் முதலியவை கடவுளுக்குப் படைக்கப்படுகின்றன. வழிபடுபவர் மிகவும் ஆழமான ஆத்மார்த்த உறவு கொள்ளத்தக்க முறையிலே விக்கிரகம் அமைகிறது. ஓமம் வளர்ப்பு அல்லது அக்கினி மூலம் வழிபாடு 'பெற்றுக் கொண்டு பதிலுபகாரம் செய்' என்பது போல அமைந்துள்ளது. வழிபடுபவர் தம்மை இழந்து நிற்கும் பக்தி நிலையைப் பூசையிலே காணலாமே தவிர, ஓமம் வளர்ப்பிற் காண முடியாது. பிற்கால இந்து சமயத்திலே இவ்விருவகை வழிபாடுகளும் கலந்து இடம் பெறுகின்றன. வைதிக வழிபாடு 'நிகமம்' என்று பெயர் பெற, பௌராணிக—ஆகம வழிபாடு 'நிகமாந்தனித்யா' என்று பெயர் பெறுகிறது. பூசையும் யோகமும் ஆகமத்திலேயே இடம் பெறுகின்றன. ஆகமத்தைச் சிவபெருமானே அருளினுரெனப் படுகிறது. வைதீகத் தேவர்களுள்ளே சிவன் முதலில் இடம் பெறவில்லை யென்பது இங்கு கவனிக்கப்படவேண்டியது. வைதிகம் பிற்கால இந்து மதமாக வளர்ச்சியடையும் பௌத்தம் முதலிய புதிய சமயங்கள் தோன்றவும், ஆரியரல்லாதாராக இந்தியாவில் அக்காலத்தில் வாழ்ந்த மக்கட்குழுக்கள் காரணமாக இருந்திருக்கவேண்டும் என்பதை அறிஞர் பலர் ஏற்கின்றனர். அவருள் ஒருசாரார், சுநீதிகுமார் சட்டர்ஜியின் கருத்திற்கு உடன்படுகின்றனர்.

சைவசமயம் என்பதன் சிறப்பியல்புகளாவன: எல்லாத் தேவர்களிலும் உயர்ந்த மகாதேவனுகச் சிவபெருமானைக் கொள்வது, கடவுளை மிகவும் அதிகமாக உருவகித்து மனத்திலே பதியவைப்பது, கடவுளுக்கும் பக்தர்களுக்குமிடையிலான மிகவும் நெருக்கமான உறவு என்பன. இந்து வெளி நாகரிகம் ஆரியருடையதென்று வாதிப்போர் சிலர், சிவ—பசுபதி வணக்கம் அங்கு காணப்படுவதை முக்கியமான சான்றுக எடுத்துக் காட்டுவர். ஆனுல், இவ்வணக்கத்தைப் பற்றிய நுணுகிய ஆய்வு இக்கூற்றுப் பொருந்தாதெனவும், இவ்வழிபாடு பிறரிடம் இருந்து ஆரியர் மனமில்லாமல் ஏற்றுக் கொண்டதெனவும் புலப்படுத்தும். கிரியை பற்றிய நூல்களிலே எல்லாத் தேவர்களையும் யாகத்துக்கு வரும்படி அழைக்கும்போது, உருத்திரனையும் உருத்திரர்களையும் போய்விடும்படி வேண்டுவதைக் காணலாம். ''உருத்திரன்'' என்ற பெயரை உச்சரிக்கவே கூடாதென்ற நிலையிருந்தது போலத் தெரியவருகிறது. ஐதரேய பிராமணம் உருத்திரனைக் குறிக்கும்போது 'இந்தக் கடவுள்' எனவும், 'பூதம் அல்லது பசு என்பவதைப் பெயரின் அங்கமாகவுடைய கடவுள்' எனவும் கூறுகிறது. உருத்திரன் யாகத்துக்கு வந்துவிடுவான் என்ற பயத்தில் 'எங்களை நோக்கி' என்ற பொருளிலுள்ள மந்திரம் ஒன்று அதே பிராமணத்தில் மாற்றஞ் செய்யப்பட்டுக் காணப்படுகிறது. தேவர்களுக்கு அக்கினியிற் பலியிடும் ஆரியர், உருத்திரனுக்கு மட்டும் ஒதுக்குப் புறமான தூரமான இடங்களிலே பலியிட்டனர். உருத்திரன் ஆரியருடைய தெய்வமானுல், ஆரியரிடம் உருத்திரனைப் பற்றி இவ்வளவு வெறுப்பு இருக்க நியாயமில்லை[4]. இருக்கு வேதத்திலே உருத்திரன் அச்சத்தை தரும் கடவுளெனக் கூறப்பட்டுப் பலி கொடுத்தல் மூலம் அவன் திருப்திப்படுத்தப்படவேண்டுமெனப் படுகிறது. சதருத்திரீயம் அல்லது தைத்திரீய சங்கிதை என்னும் நூலில் உருத்திரன் பொல்லாதவனெனவும், நல்லவனெனவும் வருணிக்கப்பட்டு, நல்லவனுக இருக்கும்போது, சிவனெனப் பெயர் பெறுவனெனப்படுகிறது. சுவேதாஸ்வதா உபநிசத்திலே; உபநிசத காலத்துப் பொதுவான கருத்துக்கள் விளக்கம் பெறுகின்றபோதும் பிரமனும், உருத்திரசிவனும் ஒன்று என்ற கருத்து இடையிடையே காணப்படுகிறது. இது பகவத் கீதைக்கு முந்திய கால நூலாகும். 'அண்ட சராசரத்தை இயக்குபவன் சிவன்', 'சிவனை நம்பிக்கை, பக்தி, தூய உள்ளம் என்பவற்ருல் அடையாலம்', 'சிவனை உணர்ந்தால் என்றுமுள அமைதி பெறலாம்' என்னும் கருத்துக்கள் இந்த உபநிசத்திலே காணப்படுகின்றன[5]. சைவசமயத்தின் அடிப்படைக் கொள்கைகள் யாவும் இந்த உபநிசத்தில் இடம் பெற்றுள்ளனவென்பர் பேராசிரியர் நீலகண்டசாத்திரி. அதர்வசிரஸ் உபநிசத்திலே, சைவம் பற்றிய கருத்துக்கள் இன்னும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றன. கி. பி. இரண்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த பதஞ்சலி 'சிவபாகவதர்' என்ற சமயப் பிரிவினரை முதன் முதலிலே குறிப்பிடுகிறுர். மகாபாரதத்திலே, நாராயணீய பர்வத்திலே 'பாசுபதர்' என்ற சமயப் பிரிவினர் முதன் முதலிலே குறிப்பிடப்படுகின்றனர். வேத இலக்கியத்திலே உருத்திர சிவன் முக்கியத்துவம் பெறுத

போதிலும், பிற்காலப் புராணங்களிலே சிவனைப் பற்றி இடம் பெறும் கதைகள் யாவற்றின் தோற்றுவாயையும் வேதத்திலேயே காணக்கூடியதாயுள்ளது.[6]

வேத இலக்கியத்திலே காணப்படும் வைதிகத்துக்கு மறுப்பாக எழுந்த இயக்கங்களில் முக்கியமானவையே பௌத்தம், சமணம் முதலியனவாம். அன்பு, மானிடத்துவம், சமத்துவம் முதலிய கொள்கைகளைப் போதிக்க வந்த பௌத்தம், வேதகால வழிபாட்டு முறையான யாகங்களிலே நடைபெற்ற மிருக பலியை கடுமையாகக் கண்டிக்கிறது[7]. மிருக பலியிடும் கிரியையிலே நுட்பங்கள் மிகமிக, வேதகாலத்திலே பிராமணர் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டு வந்தது. சத்திரியர், வைசியர் என்போரும் இரு பிறப்பாளராகக் கருதப்பட்டு வந்தபோதும், பிராமணரோடு ஒப்பிடும் போது, சமூகத்திலே அவர் நிலை தாழ்ந்து வந்தது. சூத்திரர் ஏடுபிடிவேலை செய்வோராக மட்டும் பயன்பட்டனர். பௌத்தம் பிராமணருக்கு உயர்வு வழங்குவதை முற்றாக நிராகரித்தது. பிறப்பால் உயர்வு தாழ்வு ஏற்படுவதில்லை எனவும், மனிதர் செயல்களே அவர்கள் உயர்வு தாழ்வுகளை நிர்ணயிக்கின்றனவெனவும் பௌத்தம் போதித்தது. பிராமணர்கள் சமயக் கருத்துக்களைச் சங்கதமொழியிலே மறைபொருளாக வைத்துப் பேணிவர, புத்தர் மக்கள் வழங்கும் பேச்சு மொழியையே தம்முடைய போதனைகளுக்குப் பயன் படுத்தினர். பௌத்தத்திலே தனிமனித நோக்கு, சமுதாய நோக்கு என்ற அடிப்படையிலே இரண்டு பெரும் பிரிவுகள் தோன்றின[8]. இலங்கை, பர்மா, தாய்லாந்து முதலிய நாடுகளிலே காணப்படும் தேரவாத பௌத்தம் தனிமனித நோக்குடையது. இங்கு புத்தர் தவஞ்செய்யும் முனிவராகக் காட்சி தருகிறார். பௌத்தத்தின் இப்பிரிவு புத்தரை மனிதராகவும் குருவாகவும் காண்கிறதேயல்லாமல் கடவுளாகவோ உலகை உய்விக்க வந்தவராகவோ காணவில்லை. வட இந்தியாவில் உருவாகி மத்திய ஆசியாவிலும் தூர கிழக்கிலும் பரவிய மகாயான பௌத்தம் சமுதாய நோக்குடையது. மானிடர் துயர்கண்டு சகியாது, அவர் வாழ்க்கையிலே புகுந்து, அவர் துன்பங்களைத் துடைத்து நல்வழிகாட்டுபவராகப் புத்தர் இங்கே கருதப்படுகிறார். எல்லாரும் உய்யவேண்டுமென்ற இலட்சியம், எல்லாரும் பயனடையப் பணிசெய்யவேண்டும் என்ற மனப்பான்மை முதலியன பௌத்தத்தின் இப்பிரிவிலே வற்புறுத்தப்படுகின்றன.

இந்திய மெய்யியல் வளர்ச்சியிலே பௌத்தத்துக்குத் தனிச்சிறப்பு உண்டு. சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சை, வேதாந்தம் என ஆறு தரிசனங்கள் வைதிக நெறியை விளக்குவனவாகத் தோன்றின. சார்வாக நெறி எனப்பட்ட உலகாயத நெறி தனிப்போக்குடையதாகச் சமய நெறிகள் யாவற்றையும் கண்டிக்கும் நெறியாக விளங்கியது. பௌத்தமும் சமணமும் பூரணவளர்ச்சி பெற்ற தத்துவ முறைகளாக உருப்பெற்றது மட்டுமன்றி, சமய நிறுவனங்களையும் ஏற்படுத்திக்கொண்டன. வட இந்தியாவிலாவது பௌத்தம் சமணத்திலும் கூடிய அளவு ஆதரவும் பெருமையும் பெற்றது. மதம் மாறிய பிராமணருள்ளும் பெரும்பாலோர் பௌத்தத்தையே கைக்கொண்டு தம்முடைய பழைய சமயம், தத்துவம் என்பனவற்றின் பலவீனங்களை உணர்த்த உதவினர். சமணத்திலும் கூடியளவு சிந்தனைச் சுதந்திரம் பௌத்தத்திலிருந்ததால் பௌத்தம் பலவகைப்பட்ட சிந்தனைகளைத் தோற்றுவிக்கக் கூடியதாயிருந்தது. எனவே பௌத்தத்துக்கும் பிராமணீயத்துக்குமிடையிலேயே வாதப்போர் மிக நீண்டதாகவும், மிக நுணுக்கமாகவும் நடைபெற்று இந்து மதம் பல முனைகளிலே மாற்றங்களை ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்தது[9]. கி.பி. ஆறாம் நூற்றாண்டிலே உபநிசத்துக்கள் ஒரு புறம் வைதிகச் சிந்தனையை வளர்த்துவர, சமணமும் பௌத்தமும் மறுபுறம் மெய்யியற் கொள்கைகளை உருவாக்கத் தொடங்கிவிட்டன. இச்சமயங்களின் உட்பிரிவுகளுக்குள் நடந்த வாதங்களும் இச்சமயத் தத்துவங்கள் வளர்ச்சியடைய உதவின. புத்தருடைய போதனைகள் யாவும் பாளி மொழியிலே திரிபிடகமாகத் தொகுக்கப்பட்டபோதும், அபிதர்மம் என்னும் புத்ததத்துவம் கி.பி. நான்காம் நூற்றாண்டிலே வசுபந்து என்பவரால் அபிதர்மகோசம் என்னும் நூலாகச் சங்கதத்திலே வரையப்பட்டது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் உபநிசத்துக்களைக் கற்றறிந்த பிராமணர் பலர் பௌத்த மதத்தை தழுவினர். உபநிசத்துக்களை ஒத்த முறையிலே பௌத்தத்தை விளக்கிய அவர்கள், சங்கத மொழியிலேயே தம்முடைய நூல்களை எழுதினர்[10]. பௌத்த சமய தத்துவப் பிரிவுகள் பதினெட்டுக்குக் குறையாமல் இருந்த போதிலும், அவற்றுள் இந்து சமயத்தோடு தொடர்ந்து போரிட்டு வந்தவை வைபாடிகம், சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்யாமிகம் என்னும் நான்குமாம். வசுபந்துவின் அபிதர்மகோசத்திலே நன்கு விளக்கமெய்தியது வைபாடிகமாகும். தின்னாகர், கமலசீலர், சாந்தராக்சிதர், தருமகீர்த்தி, தருமோத்தரர் முதலியோரால் விளக்கமெய்தியது சௌத்திராந்திகமாகும். அசுவ கோசர், மைத்திரேயர், அசங்கர், வசுபந்து என்போர் யோகாசாரத்தை விளக்கியுள்ளனர். நாகார்ச்சுனர், ஆரியதேவர், சந்திரகீர்த்தி முதலியோரால் விளக்கப்பட்ட மாத்யாமிகத்துக்கு நூல் பிரக்ஞாபாரமிதா சூத்திரமாகும். பௌத்தச் சிந்தனையை அளவை முறையிலும் கால முறையிலும் வைத்துப் பார்க்கும் போது, வைபாடிகம், சௌத்திராந்திகம், யோகாசாரம் என்பன ஒன்றற்குப் பின் ஒன்றாக மெய்யியல் வாதத் தேவைகளை முன்னிட்டு எழுந்தனவெனக் கூறக்கூடியதாயிருக்கின்றது.

இந்திய தத்துவத்தின் அடிப்படையாக இரண்டு அல்லது மூன்று மரபுகளைக் கூறலாம்[11]. உபநிசத்துக்களிலே உருபெறும் ஆத்மிக வாதத்தைக்கொண்ட பிராமணீய முறையும், அனுத்மவாதம் அல்லது நைராத்மிய வாதத்தைக் கொண்ட பௌத்தமுமே அவ்வடிப்படைகளில் மிகவும் முக்கியமானவை. சமணம் ஒரு வகையில் இவை இரண்டுக்கும் நடுநின்று அநேகாந்தாத்மக வாதத்தைப் போதிக்கிறது. சமண தத்துவம் இந்திய தத்துவ வரலாற்றை அதிகம் பாதிக்கவில்லை. இந்திய தத்துவ முறைகள் யாவுமே உலக வாழ்விலிருந்து விடுதலை பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. பொது மக்களின் சமயப்போக்கு இந்திய தத்துவத்தை மிகவும் பாதித்ததென்று கூறுவதற்கில்லை. யதார்த்தப் போக்குடைய நியாயம் வைசேடிகம் என்னும்தரிசனங்களும், உலக வாழ்வு துன்பமானது எனவும், அதிலிருந்து விடுபட முயல்வது ஞானம் எனவும், மோட்சம் ஒன்றே இலட்சியம் எனவும் கூறுவதைக் காணலாம். பௌத்தம் சமணம் என்பவற்றின் செல்வாக்காலேயே இத்தகைய மனப்போக்குத் தோன்றியிருக்க வேண்டுமென இன்றைய அறிஞர் கருதுவர்[12]. தேவர்களை வணங்குவதைக் கண்டித்த புத்தர் தேவாதி தேவனாக மாற்றப்பட்டார். பௌத்த விகாரங்கள், சைத்தியங்கள் எழுந்தன. வேதகாலத்து இலக்கியத்திலே விக்கிரக வழிபாடு இருந்ததற்குச் சான்றில்லை. கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து இந்து சமயக் கோயில்களும் விக்கிரக வழிபாடும் பரவின. பௌத்தத்தை ஏற்றுக் கொண்ட கிரேக்கர்கள் தொடக்கிவைத்த பௌத்தக் கலைகள், சிற்பம் என்பவற்றின் செல்வாக்கினையே இந்து மதத்திலே காண முடிகின்றதென அறிஞர் சிலர் கூறுவர். தாந்திரம், வச்சிரயானம், மந்திரயானம் என்று பல பெயர்களால் வழங்கப்படும் பௌத்தசமயப் பிரிவு யோகாசாரம் அல்லது விஞ்ஞானவாதத்திலிருந்து தோன்றியது. மந்திரம், கிரியை, வழிபாடு என்பவற்றின் ஒரு தனிச்சேர்க்கையாக விளங்கிய இச்சமய தத்துவம் பெரும்பாலும் ,வங்காளத்திலும் காஷ்மீரிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இதுவே பின்பு திபெத்துக்கும் பரவியது. பிராமணீய சமயத்திலும் இத்தகைய பிரிவு காணப்பட்டது. மந்திரம், கிரியை, வழிபாடு என்பன இருக்குவேதம் முதலிய வற்றிலேயே காணப்பட்டபோதும், தத்துவ அடிப்படை பிற்காலத்திலேயே அமைந்தது. சக்திவாதம் தோன்றியபோது தாந்திரிகம் வளர்ச்சி கண்டது. சாக்தர்கள், சைவர்கள் என்போர்களில் சில பிரிவுகளிடையே இப்புதிய இயக்கம் பரவியது. இந்த இயக்கம் பௌத்தத்தின் செல்வாக்காலேயே இந்து மதத்திலே புகுந்த தென்பர் அறிஞர் ஒருவர். வைதிக காலத்துப் பிராமணர் துறவைப் போற்றவில்லை. வருணாசிரம தருமம் வற்புறுத்தப்பட்டு வந்தபோதும் வாழ்வின், இறுதிக்காலமே துறவுக்குரிய காலமாகக் கருதப்பட்டது. துறவை ஏற்றுக்கொண்ட சங்கராச்சாரியர் பிற்கால உபநிசத்து எனக் கருதப்படக் கூடிய ஒரு உபநிசத்தின் ஒரு கூற்றைத் தமக்கு ஆதரவாக எடுத்துக் காட்டுகிறார். பௌத்த சமயத்தின் உதாரணமே சங்கரர் துறவைக் கொள்கையளவிலும் நடைமுறையிலும் ஏற்றுக்கொண்டமைக்குக் காரணமென்று சேர் சார்ள்ஸ் எலியட் கூறுகிறார்.

பௌத்த சமயம் இந்தியாவிலே இந்து சமயத்திலே அமிழ்ந்துவிட்டது; அழியவில்லை என்று வாதிக்கக் கூடியதாயிருக்கிறது. இந்தியாவிலே தோன்றிய சமயங்களுள் பௌத்தம் ஒன்றுமட்டுமே உலக மதம் என்று போற்றக் கூடியதாக ஆசியாக்கண்டத்தின் பல பகுதிகளிலும் பரவி இன்றும் உயிர்த்துடிப்புடன் விளங்குகிறது. இந்தியாவிலே மிகச் சமீபகாலம்வரை, பல நூற்றாண்டுகளாகப் பௌத்தம் தனிச் சமயமாக விளங்கவில்லை. புத்தர் போதித்ததாகப் பாளி மொழியிலே காணப்படும் பௌத்தம் மனிதத் தேவைகள் யாவற்றையும் உள்ளடக்கிய பூரணத்துவமான சமயமாக அமையவில்லை; சம்சாரபந்தத்தைக் கடந்து விடுதலை பெறுவதற்குரிய ஒரு துறவு இயக்கமாகவே அமைந்தது. வைதிக சமயமோ இம்மை மறுமை என்ற இரண்டு காலத்தேவைகளையும் தனிப்பட்ட வாழ்வுத் தேவைகளை மட்டுமன்றி அரசியல் சமுதாயத்தேவைகளையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. பௌத்தத்தின் அறநெறியும் வாதவன்மையும் தனிக்கவர்ச்சியுடையனவாக விளங்கிய போதும், பௌத்தத்தின் சமுதாய நோக்கு வளர்ச்சியடைந்த பின்பே அது கோடிக் கணக்கான மக்களின் ஆதரவைத் தன்பால் ஈர்க்கத் தொடங்கியது. அரசர்கள், வள்ளல்கள் ஆதரவு பௌத்தத்துக்குக் குறைந்த போது பௌத்தம் அழியத்தொடங்கியது ஒரு பொது வரலாற்றுண்மையாகும். பௌத்தத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் பௌத்தப் பெரியார்களின் வியத்தகு அறிவிலும் தூய வாழ்விலும் தங்கியிருந்ததென்பது இன்னொரு வரலாற்றுண்மையாகும். பேரரசன் ஹர்சவர்த்தனன் சைவனாக இருந்தபோதும், தம் காலத்திலே வாழ்ந்த திவாகரமித்திரர் என்னும் பௌத்தப் பெரியாரின் செல்வாக்கினாலே பௌத்தத்துக்குக் கவரப்பட்டான். சைவர்கள் தங்களுடைய சமய நூல்கள் மரபுகளைக் கற்பதற்கு திவாகரமித்திரரை அணுகிப் பாடங்கேட்கத் தக்க புலமை அவருக்கிருந்திருக்கிறது. பௌத்த பிக்குகள் அரசியற் சூழ்ச்சிகளிலே மிகவும் ஈடுபட்டதால், அரசியல் வெற்றி தோல்விகளால் ஏற்படும் நன்மை தீமைகளை ஏற்க வேண்டியிருந்திருக்கிறது. பௌத்தர்கள் பொதுவாகப் பிறசமயங்களை மதித்து வந்திருந்த போதிலும், பௌத்த பிக்குகளிலே தீவிரவாதிகள் வைதிக சமயத்தவர்கள் மீது பகைமை பாராட்டியதற்கும் சான்று கிடைத்துள்ளது. இந்து சமயக் கடவுளரைப் பௌத்த சமயக் கடவுளர் தோற்கடிப்பதைக் காட்டும் சிலைகள் கிடைத்துள்ளன. உலோகேசுவரர் சிவபெருமானையும் பார்வதியையும் உதைக்கும் சிலையும், திரைலோக்ய விசயர் சுதறும்

கணபதியை நசிக்கும் சிலையும் நாளந்தா நூதன சாலையிலே காணப்படுகின்றன. இத்தகைய சிலைகள் பௌத்தர்கள்மேலே சைவர்களுக்குக் குரோத உணர்ச்சி ஏற்படவே உதவியிருக்கும்.

பௌத்தம், சமணம் முதலிய புறச் சமயங்களை எதிர்த்து நின்ற இந்து சமயப் பிரிவுகள், தம்மிடையே ஒருவகை ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டிருந்ததை அறிய முடிகிறது. அசோகப் பேரரசன் காலத்திலே இந்தியாவெங்கும் செல்வாக்குப் பெற்று வெளிநாடுகளிலும் பரவத் தொடங்கிய பௌத்தம், கி. பி. மூன்றும் நூற்றாண்டு வரையிலே வளர்ந்து சென்றது. குப்தர் ஆட்சிகாலத்திலிருந்து பௌத்தம் முதலியன வீழ்ச்சியடையவும், இந்து மதம் எழுச்சியுறவும் தொடங்கின. கி. மு. 300க்கும், கி.பி. 300க்கும் இடைப்பட்ட காலத்திலே தோன்றியனவாக இன்று 1500 சாசனங்கள் இந்தியாவிலே கிடைத்துள்ளன. இவற்றுள், பௌத்தம், சமணம் சம்பந்தப்படாதவை ஐம்பதுக்கு உட்பட்டனவே. கி. பி. 300க்கும், கி.பி. 800க்கும் இடைப்பட்ட இந்தியச் சாசனங்களிலே, நிலைமை முற்றாக மாறிவிட்டது. மிகப் பெருபாலான சாசனங்கள் சைவம், வைணவம் சம்பந்தப்பட்டனவே. இவ்வாறு இந்து சமயப் பிரிவுகள் வெற்றி பெறுவதற்கு, அவை ஒற்றுமைப்பட்டு நின்றமை முக்கியமான காரணியாகும். சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் ஒற்றுமை ஏற்படுத்துவதற்காக ஹரிஹர உருவம் தோற்றுவிக்கப்பட்டது. சிவபெருமானையும் திருமாலையும் ஒரே உருவச் சிலையில் வைத்து வணங்கும் முறை இதுவாகும். சிவனையும் சக்தியையும் ஒரே உருவத்தில் வைத்து வணங்கும் அர்த்தநாரீசுவரவடிவம் இதற்கு வழி காட்டியாக இருந்திருக்கவேண்டும். திருமாலை உமையின் சகோதரன் என்று கொள்வதன் மூலம் இரு கடவுளருக்கும் நெருங்கிய உறவு முறை கற்பிக்கப்பட்டது. உபநிசத்துக்களிலே முழு முதற் பொருளாகக் கொள்ளப்படும் பிரமம் ''பிரமா'' என்ற பெயரில் இவ்விரு மூர்த்திகளோடும் இணைக்கப்பட்டுத் திரிமூர்த்தி வடிவம் தோற்றுவிக்கப்பட்டது. வைதிக சமயத் தரிசனங்கள் ஆறனுக்கிடையிலும் இருந்த வேற்றுமைகளை மறந்து, அவை ஆறும் ஒரே உண்மைப் பொருளைக் கூறுகின்றனவென்று வற்புறுத்தும் போக்கை கி.பி. பதினோராம் நூற்றாண்டிலே தோன்றியதாகக் கொள்ளப்படும் பிரபோத சந்திரோதயத்திலே காணலாம். சங்கராச்சாரியரின் போதனைகளைப் பின்பற்றிய ஸ்மார்த்தர் சிவபூசை செய்வதாகக் கூறிக்கொண்டு, சிவன், திருமால், சூரியன், கணேசர், துர்க்கை என்னும் ஐந்து தெய்வங்களுக்கும் ஒருங்கே வழிபாடு செலுத்தி வந்தனர். இந்து மதம் வெற்றி பெற்ற பின்பு அதன் உட்பிரிவுகளுக்கிடையே பகைமை வளர்வதை வரலாற்றிலிருந்தறியலாம்.

இந்தியாவிலே சைவசமயத்துக்கும் பௌத்தத்துக்கும் இடையிலான பொதுவான தொடர்பு இவ்வாறிருக்க, தமிழ் நாட்டிலே இவையிரண்டுக்குமான தொடர்பு இருந்தவாற்றைச் சிறப்புச் சான்றுகள் கொண்டு நோக்கலாம். சங்ககாலத் தமிழகத்திலே சைவம் இருந்ததற்குச் சான்று உண்டு. அசோகப் பேரரசன் காலத்திலேயே, பௌத்தம் தமிழ் நாட்டுக்கு வந்துவிட்டது. கிறித்தவ ஆண்டுக்கு முன் பின்னாகத் தமிழ் நாட்டிலே வரையப்பட்ட பிராமிச்சாசனங்களும் அவை காணப்படும் குகைகளும் பௌத்தத் தொடர்பானவையென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சங்கமருவிய காலத் தமிழகத்திலே எழுந்த பௌத்த இலக்கியமான மணிமேகலை, தமிழ் நாட்டிலே பௌத்தம் பரவியிருந்ததற்கும், பௌத்தத்துக்கும் சைவம் முதலிய பிற சமயங்களுக்கும் வாதங்கள் நடந்துவந்ததற்கும் சான்று பகருகிறது. 'சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட காதை' என்ற பகுதியிலே, மணிமேகலைக்குச் சைவவாதி தன்னுடைய சமயத்தின் பொருளை எடுத்து விளக்குகிறான்.[13] இன்று கிடைக்கும் தமிழ் இலக்கியங்களிலே சைவசமயத்தின் தத்துவத்தை எடுத்துக்காட்டும் மிகப் பழைய நூல் பௌத்த சமய மணிமேகலையாக இருப்பது வியப்புக்குரியது. சைவவாதி உட்படப் பல சமயவாதிகளின் உரைகளைக் கேட்ட மணிமேகலைக்கு அவற்றில் நம்பிக்கை ஏற்படவில்லை. 'தவத்திறம்பொண்டு தருமம் கேட்ட காதை'யிலே அவளுக்கு பௌத்த நெறியிலே நம்பிக்கை ஏற்பட்டுப் பின்பு துறவு பூணுகின்றாள். சமய வாதங்கள் நடைபெற்று மக்கள் சமயங்களிலே புகுந்தவாற்றை மணிமேகலையிலே காணலாமேயல்லாமல், சைவவாதத்தின் குறைகளை எடுத்துச் சுட்டிக்காட்டும் நிலை மணிமேகலையிலில்லை. சைவ சமய குரவர்களுள்ளே முதல்வராகக் கணிக்கப்படும் திருஞானசம்பந்தர் பௌத்தரோடு வாதம் செய்து வென்றமை பெரிய புராணத்திலே கூறப்படுகிறது. திருஞானசம்பந்தர் பௌத்தர்கள் வாழ்ந்த போதி மங்கைக்கு வந்தபோது, 'பரசமய கோளரி வந்தான்' என்று சிவனடியார்கள் ஆரவாரித்ததைப் பொறாத பௌத்தர்கள், தங்களுடைய சமயக்கல்வியில் மேம்பட்டிருந்த புத்த நந்தியையும், தேரர் கூட்டத்தையும் சமயவாதம் செய்ய அழைத்து வந்தார்கள்.[14] சம்பந்த சரணாலயர் என்ற அடியார் 'புத்தர் சமண் கழுக்கையர்' என்ற பிள்ளையார் திருவாக்கினையோதி, 'இடியிடித்து வீழுதலாலே பௌத்தன் தலை உருண்டு வீழ்க' என வெகுண்டுரைக்க, அவ்வாறே இடிவிழுந்து அறுபட்டு வீழ்ந்ததெனவும், சாரிபுத்தன் என்னும் பௌத்தன் மேற்கொண்டுவந்த தருக்க வாதத்திலே தோற்றானெனவும் பெரியபுராணம் கூறும். பக்தி மார்க்கமாக அக்காலத்திலே விளங்கிவந்த சைவம் தருக்க வாதத்திற்குத் தயாராக இல்லாததனாற் போலும், புத்த நந்தி இடி விழுந்து இறக்கவேண்டியதாயிற்று.[15] திருஞானசம்பந்தர் தம்முடைய ஒவ்வொரு பதிகத்தின்

பத்தாம் பாடலிலும் பௌத்தர்களைக் கண்டடிப்பதைக் காணலாம். பௌத்தர்களுடைய போலிவேடம், ஒழுக்கக்கேடு என்பன கண்டிக்கப்படுகிறதே தவிர பௌத்த சமயத் தத்துவமும் தருமமும் அங்கே கண்டிக்கப்படவில்லை.

மாணிக்கவாசகர் சரிதை கூறும் திருவாதவூரடிகள் புராணத்திலே, சைவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையே நடந்த சமய வாதம் வளர்ச்சியடைந்த நிலையிலே காணப்படுகிறது. தமிழ் நாட்டிலே பௌத்தம் பலவீனம் அடைந்து விட்டதனுற் போலும் மாணிக்கவாசகரோடு வாதம் செய்த பௌத்த குரு இலங்கையிலிருந்து வந்தவரெனப் படுகிறது. 'புத்த தேவனைத் தவிர வேறு கடவுள் இல்லையென்று தாபித்து இந்தப் பொன்னம்பலத்தினிடமாக எங்கள் புத்ததேவனைத் தாபிக்கும் பொருட்டு வந்தனன்' என்று பௌத்த குரு அறைகூவல்விட்டதும், அவ்வறைகூவலையேற்று அவனை வெல்லத் தக்கவரை அறிகிலோம் என்று தில்லைவாழ் அந்தணர் கவலைப்படுவது, அக்காலம் வரையிலே பக்தி நெறிச் சைவத்தைத் தத்துவ அடிப்படையிலே தருக்க நெறிமூலம் விளக்குவோர் அருகியிருந்த நிலையையே சுட்டு கிறதென்று கூறலாம். முதலிலே, பௌத்த குரு தம்முடைய சமயத்தை எடுத்து விளக்க, மாணிக்கவாசகர் அவனுடைய சமயக்கடவுள் நிலையும் முத்தி நிலையும் உண்மையல்ல என்று வாதித்தார். பின்பு, மாணிக்கவாசகர் தம்முடைய சமய நிலையை எடுத்து விளக்க, பௌத்த குரு சைவசமய கண்டனம் செய்தார். மணிவாசகர் கண்டனங்களுக்கு விடை கூறிவந்த போதும், பௌத்த குரு தொடர்ந்துங் கண்டனங்கள் செய்து கொண்டே போனுர்[16].

இந்தியச் சமயங்களுள்ளே சைவ சித்தாந்தமே மிக விரிவானதும், மிகுந்த செல்வாக்குள்ளதும் மிக உயர்ந்த பெறுமதியுள்ளதுமாகுமென்று கிறீத்தவ மத போதகரும் திருவாசக மொழிபெயர்ப்பாளருமான ஜி. யூ. போப் பாராட்டியுள்ளார்[17]. தத்துவ நூல்கள் தம்மதம் நிறுவுதலோடு பிறமத கண்டனத்திலும் கவனம் செலுத்துகின்றன. பிறமத கண்டனம் பரபக்கமென்ற பகுதியில் அடக்கப்படுகிறது. சந்தான குரவர்களுள்ளே அருணந்தி சிவாசாரியர் 'சகலாகம பண்டிதர்' எனப்படுகிறுர். இவர் பல சமயங்களையும் மொழிகளையும் அறிந்தவராக இருக்கவேண்டும். இவர் காசி, நேபாளம் முதலிய வட பகுதிகளுக்குப் போய் வந்தவரென முத்தையாபிள்ளை அவர்கள் தம்முடைய சிவஞான சித்தியார் இரண்டாவது பதிப்பிலே கூறியுள்ளார். இவருடைய பரந்த அறிவு, இவர் சிவஞான சித்தியார் என்ற தம்முடைய நூலிலே பரபக்கம் எழுத உதவியிருக்கவேண்டும். பரபக்கத்திலே பதினுன்கு மதங்கள் கண்டிக்கப்படுகின்றன.[18] முதலாவதாக, உலகாயதன் மதமும், மறுதலையும் இடம் பெறுகின்றன. அதைத் தொடர்ந்து வரும் சௌத்திராந்திகன் மதம், வைபாடிகன் மதம், மாத்தியமிகன் மதம், யோகசாரன் மதம் என்பன பௌத்த சமயப் பிரிவுகளைக் குறிக்கின்றன. சமண மதம் ஒரு பிரிவிலே மட்டும் அடங்குகிறது.

பௌத்தத்துக்கும் சைவத்துக்குமிடையிலான தொடர்பு நெருங்கிய உறவாக இருந்ததற்குச் சான்றுகள் உள. இந்தியாவில் இந்து மதத்திலே பௌத்தம் அமிழ்ந்துவிட்டதென்று கொண்டால், இந்தியாவுக்கு வெளியேயுள்ள சில நாடுகளிலே பௌத்த மதத்திலே சைவம் அமிழ்ந்துவிட்டதென்றும் கூறலாம். இடைக்காலத்திலே, பர்மா, தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், மலேசியா, இந்தோனேசியாவென இன்று வழங்கும் நாடுகளிலே பௌத்தம் முக்கியமான சமயமாகப் பரவியிருந்தபோதிலும், சைவமும் வேறு சில இந்து மதப் பிரிவுகளும் ஓரளவு இடம்பெற்றிருந்ததற்குச் சான்றுகள் உள. இவற்றுள், பர்மா, தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம் முதலிய நாடுகளிலே அண்மைக்காலங்களிலே கிறித்தவர், முஸ்லிம்களாக மாறியவர்கள் தவிர மற்றவர்கள் யாவரினதும் பரம்பரையும் பௌத்தர்களாக உள்ளமையைக் காணலாம். இந்தோனேசியாவில் பாலித்தீவில் மட்டும் இந்து மதமும் பௌத்த மதமும் கலந்த ஒரு கலப்பு நிலைகாணப்படுகிறது. மலேசியா, இந்தோனேசியாவென்னும் பகுதிகளிலே, இடைக்காலப் பூர்வகுடிகளிலே ஒரு பகுதியாயினராகிய இந்துக்கள் பௌத்தர்களாக மாறி, பின் முஸ்லிம்களாக மாறி விட்ட நிலையைக் காண்கிறேம். தமிழ் நாட்டிலே சைவ மன்னர் பௌத்த சமயத்தை ஆதரித்ததற்குச் சான்றுகள் உள. சைவ சமயத்தின் பொற்காலம் என்று வருணிக்கப்படும் சோழப் பெருமன்னர்கால மன்னர்கள் பௌத்தத்தையும் ஆதரித்து நின்றதற்குச் சான்றுகள் உள. ஸ்ரீ சைலேந்திரப் பேரரசர் வேண்டுகோளின்படி, இராசராசன் தமிழ்நாட்டிலுள்ள நாகபட்டினம் சூடாமணி விகாரத்துக்கு நிலம் தானஞ் செய்தான். இலங்கையை அடிப்படுத்திய இராசராசன் திருகோணமலையிலேயிருந்த வெல்கம் விகாரையைத் திராவிட சிற்பமுறைப்படி கட்டி எழுப்பி இராசராசப் பெரும்பள்ளியென்று பெயரிட்டான். முதலாம் குலோத்துங்க சோழனும் நாகபட்டினம் சூடாமணி விகாரத்துக்கு நிலம் தானஞ் செய்துள்ளான்.[19] இலங்கையிலே சிங்கள பௌத்தமன்னர்கள் சைவத்தையும் ஆதரித்துவந்துள்ளனர். சிங்கள மன்னர்கள் தமிழ்நாட்டு அரச குமாரிகளை இடையிடை மணந்து கொண்டனர். தமிழ்ச் சைவ மன்னர்கள் இடையிடை இலங்கையை ஆண்டுவந்ததால், சைவமும் இலங்கையிலே இடம்பெற்றிருந்தது. பிரபலமான பௌத்த விகாரைகளின் பிராகாரங்களிலே இந்து சமயத் தெய்வங்களை வைத்து வழிபடும் முறை தோன்றியது. பௌத்தர்கள் கதிர்காமக் கடவுளான முருகனைத் தங்கள் காவல் தெய்வங்களிலொன்று என்று வழிபட்டு வருகின்றனர். பௌத்த மன்னர்கள் கற்றறிந்த பிராமணர்களை ஆதரித்துவந்ததற்கும் பல சான்றுகளுள.[20]

'பௌத்தமும் தமிழும்' என்னும் நூல் ஒன்று 1940ஆம் ஆண்டு வெளிவந்தது. பௌத்தத்துக்கும் தமிழுக்குமிடையிலான தொடர்பு மறக்கப்பட்டுப் பௌத்தமும் சமணமும் வேறுவேறு என்று தமிழ் அறிஞர்கள் சிலர் கேட்ட சூழ்நிலையிலே நாம் எழுதியதாக அதன் ஆசிரியர் குறிப்பர். தமிழ் அறிஞர்களுக்குப் பௌத்தத்தை அறிமுகம் செய்வதிலே ஆசிரியர் வெற்றி பெற்றிருக்கிறார். அக்காலச் சூழ்நிலையிலே பௌத்தத்துக்கும் தமிழுக்குமிடையிலான உறவை வற்புறுத்திக் கூறினாலே தம்முடைய நோக்கம் நிறைவேறும் என்று ஆசிரியர் கருதியிருக்கிறார் போலத் தெரிகிறது. பௌத்தம் தமிழ் நாட்டிற் பெற்றிருந்த செல்வாக்கையும், இந்துமதம் பௌத்த மதத்திலிருந்து பெற்றுக் கொண்டவை பற்றியும் பௌத்தசமய வீழ்ச்சிக்கு இந்து சமயத்தினர் எவ்வளவு காரணராயிருந்தனரென்பது பற்றியும் ஆசிரியர் கூறும்போது, அவர் நடுநிலைகடந்து பௌத்த மதத்தீவிரவாதிபோலப் பேசுகின்றாரென்றே இன்று மதிப்பிடவேண்டியுள்ளது. உதாரணமாக 'அரச மரத்தை வலம் வந்து வணங்குகின்ற இக்காலத்து இந்துக்கள் இந்த வணக்கத்தை உண்டாக்கியவர் பௌத்தர் என்பதை அறியார். ஆனால் அவ்வணக்கத்தை உண்டாக்கியவர் பௌத்தர் என்பது மறுக்க முடியாத உண்மை' என்பர். அரசமர வணக்கம் புத்தர் பிறப்பதற்கு சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பேயே இந்து வெளி நாகரிகத்திலே இடம் பெற்றிருந்தது. இன்னுமோரிடத்திலே 'பிராமணர் மாமிசம்உண்டு வந்ததையும் நிறுத்திச் சைவ உணவை உண்ணும்படி செய்ததும் பௌத்த மதந்தான்' என்று அவர் கூறுவர். பௌத்தம் கொல்லாமையை வற்புறுத்தியதே தவிர புலாலுண்ணாமையை வற்புறுத்தவில்லை. பௌத்தப்பெரியார்கள் அன்றும் இன்றும் புலால் உண்ணக் கூசுவதில்லை. தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் செல்வாக்குப் பெற்று விளங்கும் ஐயனார் வழிபாடு, வைதிகர்கள் மாற்றிவைத்திருக்கும் பழைய புத்தர் வழிபாடே என்பர். இலங்கைச் சிங்கள பௌத்தர்கள் ஐயனாரை 'ஐயநாயக்கர்' என்று கூறித் தங்கள் காவல் தெய்வங்களிலே ஒன்று என்று கூறுவர். இதிலிருந்து ஐயனார் வழிபாடு புத்தர் வழிபாட்டிலிருந்து வேறாகப் பண்டைக் காலத்திலிருந்து நிலவி வந்திருக்கிறதென்று கூற இடமிருக்கிறது. பௌத்தத்துக்கும் தமிழிக்குமிடையிலான தொடர்பு பௌத்தத்துக்கும் சைவத்துக்குமிடையிலான தொடர்பு முதலியன முடிந்த முடிபாக இன்னும் வெளிவரவில்லை; ஆராய்ச்சிக்கு இடமிருக்கிறது. இலங்கையிலே பௌத்தமும் சைவமும் முறையே முதலாவது இரண்டாவது பெரிய சமயங்களாக இன்றுள்ளன. பௌத்தம் அரசாங்க ஆதரவு பெற்று முதன்மையடைந்து வருகிறது. இந்தியாவிற்போல, இலங்கையிலும் சாதிவேறுபாட்டால் தாழ்த்தப்பட்டோராக விளங்கிய சைவ மக்களிலே ஒருசிறு பகுதியினர் அண்மையிலே பௌத்தத்தைத் தழுவியுள்ளனர். சைவத்துக்கும் பௌத்தத்துக்குமிடையிலான தொடர்பு இலங்கையில் எப்படியிருக்கப்போகிறது என்பது எதிர்காலத்திலே தெரியவரும்.

குறிப்புகள் :


1. Madho Sarup Vats — Indus Valley Civilization — **The Cultural Heritage of India, Vol. I** — Institute of Culture, Calcutta, 1958
2. Nilakanta Sastri, K. A. — An Historical Sketch of Saivism— **The Cultural Heritage of India, Vol IV** — Institute of Culture, Calcutta, 1956.
3. Suniti Kumar Chatterjee — Contributions From Different Language Culture Groups — **C.H.I. Vol. I**
4. Bata Krishna Ghosh — The Origin of the Indo-Aryans — **C.H.I. Volume I.**
5. Majumdar, R. C. — Evolution of Religio — Philosophic Culture in India — **C.H.I. Vol. IV.**
6. Kunhan Raja, G. — Vedic Culture and the Puranas — **C.H.I. Vol. I**
7. Bhatt, P.V. — India and Buddhism — **2500 years of Buddhism** — Publication Division, Delhi, 1959.
8. Radhakrishnan, S. — Foreward — **2500 years of Buddhism.**
9. Haridas Bhattacharyya — Preface — **C.H.I. Vol. III, 1953.**
10. Surendranath Dasgupta — Introduction. Ibid.
11. Murti, T. R. V. — Rise of the Philosophical Schools — **C.H.I. Vol. III.**
12. Mookerjee, S. — Buddhism in Indian Life and Thought — **C.H.I. Vol. I.**
13. Avvai S, Doraiswami Pillai–**A History of Tamil Literature–Saiva Literature**–Annamalai University, 1958.
14. சொ. சிங்காரவேலன்,—திருஞானசம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும் திருநெய்வும்—கழகம், சென்னை, 1969.
15. ஆ. வேலுப்பிள்ளை, — தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் — சென்னை, 1969.
16. சி. கே. சுப்பிரமணிய முதலியார், ஸ்ரீ மாணிக்கவாசகர் — சென்னை. 1925.
17. G. U. Pope —**Tiruvasakam: Sacred Utterances**—Oxford, 1900
18. மெய்கண்ட சாத்திரம் பதினான்கு: மூலமும் உரையும்: முதற்பகுதி — கழகவெளியீடு, சென்னை 1969
19. Nilakanta Sastri, K. A. — **The Colas** — Madras University, 1952
20. Veluppillai, A. (Ed.) — Ceylon Tamil Inscriptions, Pt. I & II — Kandy 1971, 1972.
21. மயிலை சீனி. வேங்கடசாமி — பௌத்தமும் தமிழும் — கழகவெளியீடு — சென்னை 1957.

# ஈழத்துப் புராணங்கள்

— கலாநிதி பொ. பூலோகசிங்கம் —

தமிழ்மொழியிற் புராணமென வழங்கும் பெயரும் அதனாற் சுட்டப்படும் இலக்கிய வடிவமும் சங்கத மொழியிலிருந்து பெறப்பட்டவை. பண்டைக்காலத்திற் சூதர் எனும் இசை மரபினர் வட இந்தியாவில் இருந்தனர். அவர்கள் பழைய ஐதிகக் கதைகளைப் பாடுபவராக விளங்கினர். மக்கள் அதிகமாகக் கூடுகின்ற யாகம் ஆதியாம் நிகழ்ச்சிகளின்போது சூதர் ஐதீகக் கதைகளான புராணங்களைச் சொல்லி, அவற்றின் மூலம் மக்களிடையே நல்லொழுக்கக் கோட்பாடுகளையும் சமய தத்துவங்களையும் அறிவுறுத்தினர். மேலும், அவர்கள் மன்னர் அவையிலும் இடம்பெற்று, அவர்களுடைய குல வரலாறுகளையும் பாடுபவர்களாக விளங்கினர். தமிழ் நூல்களிலும் சூதர் பற்றிச் சில குறிப்புகள் இடம்பெறுகின்றன. தொல்காப்பியம் (புறத்திணையியல், சூத். 36), மதுரைக்காஞ்சி (670), சிலப்பதிகாரம் (5.48, 26.75), மணிமேகலை (28.50) ஆகியன காண்க. அரும்பதவுரையாசிரியர் சூதரைக் கைவாரிகள் என்பர் (சிலப்பதிகாரம், 5.48). கைதூக்கி நின்று வாழ்த்துபவர் கைவாரிகள் எனப்படுவர். நச்சினார்க்கினியர் சூதரை அகவர் என்றும் நின்றேத்துபவர் என்றும் இரு சுடர் தொடங்கி இன்றுகாறும் வருகின்ற அரசர் குலத்துள்ளார் புகழைப் பாடுபவர் என்றும் விடியற்காலத்தே பாசறைக்கண் வந்து துயிலெடை பாடுபவர் என்றும் கூறுவர். (மதுரைக்காஞ்சி, 223–224, 670). சூதர் துயிலெடை பாடுபவர் என்று நச்சினார்க்கினியர் கூறுவதற்குத் தொல்காப்பியம் ஆதாரமாகும் (புறத்திணையியல், சூத். 36). மன்னர் பரம்பரையினரின் குலவரலாறுகளைப் பாடுபவர்களாகத் தமிழ் நூல்கள் கூறும் சூதர் காணப்பெறுதல் ஈண்டு சுட்டற்பாலது. சூதர் மரபினர் வட இந்தியாவிலே தம் நிலையினை இழந்து மறைந்தபோது, அவர்கள் செய்த ஐதிகக்கதைகளைப் பாடும் பணியினைப் பௌராணிகர் திறமையாக மேற்கொண்டனர்.

சங்கத நூலார் புராணம் எனும் சொல் பழமையைக் குறிப்பதாகக் கொள்வர். எனவே புராணம் எனும் இலக்கிய வடிவம் பழமையான ஐதீகக் கதையைக் கூறுவது என்பது அவர்கள் கருத்தாம். மாணிக்கவாசக சுவாமிகளின் சிவபுராணம் சிவனது அநாதி முறைமையான பழமை கூறுவது என்னும் கருத்து ஈண்டு மனங்கொளத்தக்கது. வடமொழிப் புராணங்களின் மையமாக அமைவன ஐதீகமானவையும் சமய சம்பந்தமானவையுமாக இருப்பினும், அவை குப்தர் காலம் வரையிலான வட இந்திய வரலாற்றுச் செய்திகளைத் தருவதோடமையாது இந்திய அறிவின் களஞ்சியமாகவும் விளங்கும் பெற்றியுள்ளன என்பதை உணர்தல் இன்றியமையாததாகும். இலக்கியம், இலக்கணம், நுண்கலைகள், வைத்தியம், அரசியல், கட்டடக்கலை, போர்க்கலை முதலிய பல்வேறு துறைகள் பற்றிய செய்திகள் புராணங்களில் இடம்பெறுகின்றன. புராணம் ''பஞ்சலக்ஷணம்'' என்பது அமரம். அவையாவன சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மந்வந்தரம், வம்சாநுசரிதம் என்பனவாம். சர்க்கம் உலகத்தின் தோற்றத்தையும், பிரதிசர்க்கம் உயிர்த்தோற்றத்தையும் ஒடுக்கத்தையும், வம்சம் மன்னர் பரம்பரையையும், மந்வந்தரம் காலவரையறையினையும் மநுக்களது ஆட்சிக்காலங்களையும், வம்சாநுசரிதம் மன்னர் பரம்பரையோடு தொடர்புடைய கிளைக்கதைகளையும் குறிப்பன. சிலர் முற்கிளந்த ஐந்துடன் ஸ்திதி, ரக்ஷணம், சமுஸ்தை, ஏது, ஆசிரயம் என்பனவற்றையும் சேர்த்துப் புராணங்களின் இலக்கணம் பத்தென்பர். உலகத்தோற்ற வொடுக்கம், தேவாசுர யுத்தங்கள், மன்னர் பரம்பரையின் எழுச்சி வீழ்ச்சி முதலிய விவரணங்கள் மூலம் புராணங்கள் இறைவனின் முழுமுதற் றன்மையையும் அறநெறி, இறையன்பு ஆகியனவற்றின் மூலம் மக்கள் இறைவனை அடைதலே வாழ்க்கையின் இலட்சியம் என்பதையும் வற்புறுத்துவன. புராண இலக்கணம் தமிழில் எழுந்த பாட்டியல் நூல்களில் விரித்துரைக்கப்படவில்லை. மூன்றாம் குலோதுங்கசோழன் (1178–1216) காலத்தில் வாழ்ந்த குணவீர பண்டிதர் இயற்றிய வச்சணந்திமாலை ''குலவரவு காரிகை யாப்பிற் புராணமேயாம்'' (செய்யுளியல், 43) என்று கூறுவதோடு அமைதி காண்கிறது. 'குலவரவு முதலாயினவற்றைக் காட்டுவது புராண கதையாம்' என்பது அதன் பழைய வுரை; 'குலவரவு முதலாயினவற்றை என்றதனால் உலகத்தோற்ற ஒடுக்கங்களும் மனுவந்தரமும் முனிவர் வரலாறும் அரசர் மரபும் அவர் சரிதமும் கொள்க' என்பது அதன் விளக்கவுரை. இவ்வுரை சங்கத நூலார் மரபைப் பின்பற்றியதாகும் என்பது கூறாமலே போதரும்.

பிராமணங்களும் உபநிடதங்களும் புராண இதிகாசங்களை வேதங்களோடொத்த மதிப்புடையனவாகவும் தெய்வீகத் தோற்றமுடையனவாகவும் கருதுவன. புராணத்தை ஐந்தாம் வேதம் எனும் வழக்கும் கவனித்தற்குரியது. தருமசூத்திரங்கள் அறநெறியின் அறிவுக்களஞ்சியமாகப் புராணங்களைக் கூறுவன. வேதக்கல்வி புராணக்கல்வியாலே தொடரப்படுதல் வேண்டும் என்பது மரபு. சைவருக்குரிய இருபத்துமூன்று சிறப்பிலக்கணங்களுள் ஒன்றாகச் சிவபுராணங்களைக் கேட்டல் உபதேசகாண்டம் போன்ற நூல்களிற் குறிப்பிடப்பட்டுள்ளது. உபதேசகாண்டம், பிரமோத்தர காண்டம் முதலியன சிவபுராணம் வாசித்தல், கேட்டல் முதலியன எவ்விதம் செய்யப்படல் வேண்டும் என்பதை விரித்துரைத்தல் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

கோமதிநதிக் கரையில் நைமிசவனத்தில் முனிவர்கள் பன்னிரு வருடகாலம் செய்துவந்த யாகத்தின் இடைவேளைகளிற் புராணங்கள் யாவும் சொல்லப்பட்டன என்று கருதும் வகையிற் சங்கதத்திலுள்ள பழைய புராணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புராணங்கள் வியாசமுனிவரால் வகுக்கப்பட்டன எனல் சங்கதமரபு. வியாசர் எனும் சொல், வகுப்பர் அல்லது ஒழுங்குசெய்பவர் என்ற பொருளைத் தருவதாகும் என்பது ஈண்டு சுட்டற்பாற்று. சங்கதத்திற் பதினெண் மகா புராணங்கள், பதினெண் உப புராணங்கள் என்பனவற்றை விட வேறு புராணங்களுமுள. புராணம் தலமகிமை, அடியார் வரலாறு முதலியவற்றையும் கூறுவதற்குப் பயன்படுத்தப்பட்ட நிலையினைச் சங்கதத்தின் பின்னெழுந்த புராணங்களிற் காணலாம்.

தமிழ் மக்களிடையே புராண இதிகாசப் பயிற்சி நெடுங்காலமாக இருந்துவந்துள்ளது. மூவேந்தர் கால இலக்கியங்களின் மூலம் பாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்கள் தமிழ் நாட்டிலே பயிலப்பட்டு வந்தமையைத் தெளிவாக உணரலாம். பரிபாடல், திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம் முதலியவற்றின் மூலம் புராணக்கதைகள் பல தமிழ் நாட்டில் நிலவி வந்தமை புலனாகும். பக்தி இயக்க காலகட்டத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தத்தம் மூர்த்தியின் கீர்த்தியைப் புலப்படுததுவதற்குப் புராணக் கதைகளை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளனர். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணத்தைச் ''சூதனொலிமாலை'' (3.54. 8) எனக் குறிப்பிடுகின்றார். சிவனது அநாதிமுறைமையான பழமையை மணிவாசகர் சிவபுராணமாகப் பாடியுள்ளார். திவாகரர் பதினெண் புராணங்களையும் பதினெண் உபபுராணங்களையும் எண்ணிட்டுக் கூறுகின்றார் (திவாகரம், சூத். 162, 163). முதலாம் குலோத்துங்க சோழன் (1070–1119) காலத்தில் வீரைத்தலைவன் பரசமயகோளரி மாமுனி என்றழைக்கப்பட்டவர் அஷ்டாதச புராணம், கன்னிவனபுராணம் என்பனவற்றை யாத்துள்ளார் (மு. இராகவையங்கார்: சாஸனத் தமிழ்க்கவி சரிதம், 1961, பக். 61 –62). அவற்றின் இயல்புணருமாறில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டிற் சேக்கிழார் திருத்தொண்டரின் பழைய வரலாற்றினைப் பெரியபுராணமாகத் தந்தார். வீரைத் தலைவன் பரசமய கோளரி மாமுனியின் புராணங்களுடைய இயல்புணரமுடியாத நிலையிற் பெரும் பற்றப் புலியூர் நம்பியின் பழைய திருவிளையாடலும், உமாபதி சிவாசாரியரின் கோயிற் புராணமும் தலபுராணங்களின் முன்னோடிகளாகக் கருதத்தக்கவை. இவை முறையே பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் உரியனவாகக் கருதப்படுவன. இவற்றைத் தொடர்ந்து தமிழ் மொழியிற் பல புராணங்கள் தோன்றியிருக்கின்றன. இவை சங்கத புராணங்களின் மொழிபெயர்ப்பாகவோ அல்லது தழுவலாகவோ மட்டுமன்றித் தமிழ்நாட்டுத் திருத்தலங்களின் மான்மியங்களாகவும் மெய்யடியார்களின் வரலாறுகளாகவும் விரதமகிமை கூறுவனவாகவும் விரிவடைந்து விளங்குகின்றன.

இன்று எமக்குக் கிடைப்பனவற்றில் ஈழத்தில் எழுந்த முதற் புராண நூலாகத் தெரியும் தக்ஷிண கைலாச புராணம முதற் சித்தாண்டித் திருத்தல புராணம் ஈறாக, ஏறக்குறைய பதினைந்து தலபுராணங்கள் ஈழத்துத் தலங்கள் பற்றித் தோன்றியுள்ளன. இத்தலங்களுள்ளே கோணேசுவரம், நகுலேசுவரம் (கீரிமலை), திருக்கேதீச்சரம் ஆகியன ஒவ்வொன்றும் தனித்தனியே இரு புராணங்களைப் பெற்றுள்ளன.

தக்ஷிணகைலாசபுராணம் தேவாரம் பெற்ற திரிகோணமலையிற் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் கோணேசர் பெருமானையும் மாதுமையம்மையாரையும் போற்றும் தலபுராணமாகும். இப்புராணம் ஆரியச்சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த காலப்பகுதியில் (சுமார் கி.பி. 1242 – கி.பி. 1621) இயற்றப்பட்டது என்பதை நிறுவ அகச்சான்றுகள் உதவுகின்றன. இப்புராணம் செகராசசேகரன் எனும் சிங்காசனப் பெயரைத் தாங்கிய ஆரியச் சக்கரவர்த்தியொருவனாற் பாடப்பட்டது என்ற கருத்தை மறுப்பவரும் அப்பெயர் தாங்கியவொருவன் காலத்திற்றான் அது பாடப்பெற்றது என்ற கருத்தை மறுத்தலரிது. புலோலி பொ. வைத்தியலிங்கதேசிகர் பதிப்பிலே திருநகரச் சருக்கத்தில் இடம்பெறும் 108 ஆம் செய்யுளுட்படத் தொடரும் சில விருத்தங்களையும் 116 ஆம் செய்யுளையும் நோக்குக. ஆயினும் ஈண்டு சுட்டப்படும் செகராசசேகரன் சயவீரசிங்கையாரியனும் ஐந்தாம் செகராசசேகரன் (1380–1410) என்று சுவாமி

ஞானப்பிரகாசர் தமது யாழ்ப்பாண வைபவ விமர்சனம் (1928) எனும் நூலிற் கூறுவதைச் சித்தாந்தமாகக் கொள்வதற்கு ஆதாரம் போதாதென்பதைச் சுட்டுதல் பொருத்தமாகும். இந்நூலாசிரியர் இன்னார் என்று துணிந்து கூற முடியாத நிலைமை இன்று காணப்படுகிறது. யாழ்ப்பாணத்து நல்லூர் மஹாவித்துவான் சின்னத்தம்பிப் புலவர் இயற்றியதென்று சிலரும் பிரமஸ்ரீ பண்டிதராசர் இயற்றியதென்று வேறு சிலரும் கூறுவர். யாழ்ப்பாணத்து நல்லூர் மஹாவித்துவான் சிங்கைச் செகராசசேகரன் என்றுர் முதற் பதிப்பாசிரியர் காரைதீவு கா. சிவசிதம்பரஐயர்; திரிகோணமலை பிரமஸ்ரீ பண்டிதராசர் என்றுர் இரண்டாம் பதிப்பாசிரியர் புலோலி பொ. வைத்தியலிங்கதேசிகர். இரு பதிப்பாசிரியரும் தங்கள் கூற்றுக்கிணங்க நூலைப் பதிப்பித்துள்ளனர். எனவே இவர்களுக்குக் கிட்டாத பழைய ஏட்டுப் பிரதிகள் வெளிப்போந்தாலன்றி உண்மையறிதல் அரிதாம். காரைதீவு மு. கார்த்திகேயையர் பரிசோதித்த தக்ஷிணகைலாச புராணத்தை அவர் மகன் சிவசிதம்பரஐயர் சென்னை கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில் 1887 ஆம் ஆண்டிற் பதிப்பித்தார்; புலோலி பொ. வைத்தியலிங்கதேசிகர் கோணேசர் கல்வெட்டுடன் அதனைப் பருத்தித்துறை கலாநிதியந்திரசாலையில் 1916 ஆம் ஆண்டு மீண்டும் பதிப்பித்தார். தக்ஷிணகைலாச புராணம் பாயிரம் நீங்கலாக ஏழு சருக்கங்களையுடையது; பாயிரத்திற் காப்புச் செய்யுளுட்படப் பதினாறு செய்யுட்களுள; முதலாறு சருக்கங்களில் 501 பாடல்களுள; ஏழாம் திருநகரச் சருக்கத்தில் முதற் பதிப்பில் 116 பாடல்களும், இரண்டாம் பதிப்பில் 119 பாடல்களுமுள. மேலும் ஏழாம் சருக்கத்தில் முதற்பதிப்பிலுள்ள 15 முதல் 18 வரையிலான பாடல்கள் இரண்டாம் பதிப்பிலும், இரண்டாம் பதிப்பிலுள்ள 107 முதல் 112 வரையிலான பாடல்களும் 116 ஆம் செய்யுளும் முதற்பதிப்பிலும் இடம்பெறவில்லை. மேலும் பாயிரப் பகுதியில் இடம்பெறும் பாடல்கள் சிலவற்றில் இரு பதிப்புகளிலும் வேறுபட்ட பாடங்களுள. இப்பாடங்களிற் சில நூலாசிரியர் பற்றியவை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. எளிமையும் வருணனைச் சிறப்பும் மிக்க ஈழமண்டலச் சருக்கம், திருமலைச் சருக்கம் ஆகிய முதலிரு சருக்கங்களும் ஈழநாட்டுச் சரிதம் பற்றிய சில செய்திகளைத் தரும் திருநகரச்சருக்கமும் தக்ஷிணகைலாச புராணத்தில் சிறந்து கூறத்தக்கவையாம்.

கோணேசுவரம் மீது பாடப்பெற்ற பிறிதொரு புராணம் திரிகோணாசல புராணம் ஆகும். ஈழமண்டலப் புலவர் எனும் கட்டுரையில் (செந்தமிழ், 1914) மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை திரிகோணாசல புராண ஆசிரியர் திரிகோணமலை முத்துக்குமாரப்புலவர் என்றும் அவர் எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பு வாழ்ந்தவர் என்றும் கூறியுள்ளார். 1879 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண வைபவமாலையின் ஆங்கில மொழி பெயர்ப்பைச் செய்து வெளியிட்ட சி. பிறிற்ரோ அவ்வாண்டிலும் முத்துகுமாரப் புலவர் வாழ்ந்து கொண்டிருந்ததாகக் கூறியுள்ளார். திரிகோணாசலபுராணத்தின் பழைய ஏட்டுப்பிரதியொன்று மாசிலாமணி முத்துக்குமாரு அவர்களால் எழுதப்பட்டிருந்ததைக் கண்டவர்களும் கேட்டவர்களும் அவரே நூலாசிரியர் என்று கருதிவிட்டனர் என்று கூறுவாருமுளர். இவர்கள் திரிகோணமலையில் விளங்கிய சைவசந்தானத்தினைச் சேர்ந்தவரும் பதினெட்டாம் நூற்றாண்டினையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியையும் உட்படுத்திய காலகட்டத்தில் வாழ்ந்தவருமான புலவரொருவர் திரிகோணாசல புராணத்தை இயற்றினர் என்பர். சிலர் அவர் மதுரை இராமலிங்க பண்டிதர் எனும் திரிகோணமலைச் சைவசந்தானப் புலவர் என்பர். 1909ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் திருஞானசம்பந்தர் அச்சுக்கூடத்திலே திரிகோணாசல புராணத்தைப் பதிப்பித்த வண்ணை ஆ. சண்முகரத்தினையர் தமக்குக் கிடைத்த ஏட்டுப்பிரதியில் நூலாசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது. இப்புராணத்திலே பாயிரம் நீங்கலாக இருபது படலங்களுள; காப்புச் செய்யுள் உட்படப் பாயிரத்திலே 44 பாடல்களும், ஏனைய படலங்களிலே 1446 பாடல்களுமுள. திரிகோணாசல புராணம் கம்பராமாயணத்தினைப் பலவழிகளிலும் பின்பற்றிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

நகுலேசுவரம் மீது பாடப்பெற்றதாக அறியும் இரு புராணங்களுள் வயாவிளான் கா. அப்பாசாமி ஐயர் பாடிய நகுலகிரிப்புராணம் வயாவிளான் க. வேலுப்பிள்ளையாலே தமது சயசிறீ சாரதா பீடேந்திர சாலையிற் சுபகிருது வருஷம் ஆவணி மாதம் (1902) பதிப்பிக்கப் பெற்றது. இப்புராணத்தின் இரண்டாம் பதிப்புக் கீரிமலை இந்துசமய விருத்திச் சங்கத்தினரால் 1961 ஆம் ஆண்டு சுன்னாகம் கலாதேவி அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது. மாதகல் சு ஏரம்பையர் (1848–1914) நகுலேச்சுவரம் மீது பாடிய புராணத்திலிருந்து இரு பாடல்களைப் புங்குடுதீவு சி. இ. சதாசிவம்பிள்ளையிடமிருந்து வித்துவான் பொன். கனகசபை பெற்று ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (1966) எனும் தொகுப்பில் இடம்பெறச் செய்துள்ளார். ஏரம்பையர் பாடிய புராணத்திற்குரிய வேறு பாடல்கள் கிடைக்கப்பெறவில்லை.

தேவாரம் பெற்ற திருக்கேதீச்சரம் மீது பாடப்பெற்ற இரு புராணங்களும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியவை என்பது கவனிக்கத்தக்கது. இவற்றுள் முன்னையது நல்லூர் பண்டிதர் ச. இராமச்சந்திரனாற் பாடப்பெற்று இடைக்காடு தமிழ் மன்றத்தினரால் 1966 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நாமகள் அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றதாகும்; பின்னையது அச்சுவேலி சிவஸ்ரீ ச. கு. வைத்தீசுவரக் குருக்களால் இயற்றப்பெற்று வேலணை திருஞானசம்பந்தர் மடாலய பரிபாலன சபையினரால் 1970 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சைவப்

பிரகாச அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றதாகும்... பண்டிதரவர்கள் இயற்றிய திருக்கேதீச்சரப் புராணத்திலே துதி, வரலாறு, ஈழம், மாதோட்டம், பாலாவி, கேது திருப்பணி, விசயன் திருப்பணி, பாண்டியர் திருப்பணி, சம்பந்தர் திருப்பணி, சுந்தரர் திருப்பணி, சோழர் திருப்பணி, நாவலர் திருப்பணி, பசுபதிச் செட்டியார் திருப்பணி, திருப்பணிச் சபையார் திருப்பணி எனும் பதினான்கு தலைப்புகளிலே 120 பாடல்களைக் காணலாம். அளவில் மிக குறுகியதும், பண்டிதரவர்கள் இயற்றியதுமாகிய புராணத்தில் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துத் தருவதற்கு அளிக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம் ஏனைய எவ்விடயத்திற்கும் நரப்படவில்லை என்பது சுட்டற்பாற்று. குருக்களவர்கள் இயற்றிய திருக்கேதீச்சரப் புராணத்திற் பாயிரம் நீங்கலாக இலங்கைச் சிறப்புரைத்த சருக்கம், கிரித்திரய வரலாற்றுச் சருக்கம், திருத்தல விசேட சருக்கம், கேது பூசனைச் சருக்கம், மகா துவட்டா திருப்பணி செய்த சருக்கம், ஸ்ரீராமர் சிவபூசைச் சருக்கம், திருமணச் சருக்கம், அகத்திய முனிவர் பூசனைச் சருக்கம் என்னும் எட்டுச் சருக்கங்களிலே 231 பாடல்களுள; பாயிரத்திலே காப்புச் செய்யுள் உட்பட பதினேழு பாடல்களுள. குருக்களவர்களின் புராணப் பயிற்சிக்கும் சமயவுணர்ச்சிக்கும் கவிதா சாமர்த்தியத்திற்கும் நல்ல எடுத்துக்காட்டாக அவர் இயற்றிய புராணம் அமைகின்றது என்று கூறலாம்.

இணுவில் சி. சின்னத்தம்பிப் புலவர் இளந்தாரி புராணமென நூலொன்று செய்ததாக அறியவருகின்றது என்பர் ந. சி. கந்தையாபிள்ளை (தமிழ் புலவர் அகராதி, 1960, பக். 180). சின்னத்தம்பிப் புலவர் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் ஆட்சிபுரிந்த காலகட்டத்தின் (1658—1795) கடைசிக் கூறிலே வாழ்ந்தவர் என்டர் பாவலர் சரித்திர தீபகமுடையார். இணுவிலிலுள்ள இளந்தாரி கோயிலைப் பாடுவதாக இளந்தாரி புராணம் அமைந்திருக்கலாம். இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இளந்தாரி என்று அழைக்கப்படுபவருக்குக் கைலாயநாதன் என்பது இயற்பெயர் என்பதும் அவர் கங்கைகுலத்துதித்த காலிங்கன் ஒருவனுடைய மகனென்பதுவும் சின்னத்தம்பிப் புலவர் பாடிய பஞ்சவன்னத் தூதிலிருந்து பெறப்படுவனவாம். இப்புராணம் பற்றிய செய்திகள் எதுவும் தெரியுமாறில்லை.

திரிகோணாசலபுராணம் எழுந்த காலத்தில் அல்லது அக்காலத்தை யொட்டித் தோன்றியது திருக்கரைசைப்புராணம் ஆகும். இப்புராணம் திரிகோணமலைக்கு அண்மையில் மாவலிகங்கைக் கரையிலுள்ள அகத்தியத்தாபனம் என்று வழங்கும் கரைசையில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான் மீது பாடப்பெற்றதாகும். பாயிரத்தில் இடம் பெறும் இரு செய்யுட்களை (10, 13) ஆதாரமாகக்கொண்டு பொழிப்புரை ஆசிரியர் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் திருக்கரைசைப் புராணத்தின் ஆசிரியர் உமாபதி சிவாசாரியரின் சீடர் என்பாருமுளர் என்றுரைத்தார். குருவணக்கச் செய்யுளில் இடம்பெறும் ஈசானச்சிவனும் புராணவரலாற்றில் இடம்பெறும் கொற்றங்குடி வாழும் பிரானும் உமாபதிசிவாசாரியரைக் குறிப்பிட்டபோதும், நூலாசிரியர் ''நாயேனுக்கருள் புரிந்தவர்'' என்று அவரைப் போற்றியபோதும், அவர் கூற்று மரபென்று கருத இடமுண்டு. திருக்கரைசைப்புராண ஆசிரியர் பதினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் திரிகோணமலையில் நிலவிய சைவசந்தானத்தைச் சேர்ந்த புலவர்களுள் ஒருவர் என்பர். இச்சைவ சந்தானத்தைச் சேர்ந்தவர் உமாபதி சிவாசாரியாராம் சந்தானகுரவரைத் தமது முதல்வராக மானசீகமாகக் கொண்டமையால் நூலாசிரியர் உமாபதி சிவாசாரியாருக்குக் குருவணக்கம் செய்கிறார் போலும். இதனை ஆதரிப்பது போன்று அமைந்துள்ளது பதிப்பாசிரியர் அகிலேசபிள்ளையின் மேல்வரும் கூற்று: ''சிலர் உமாபதி சிவாசாரியர் பரம்பரையினுள்ளார் ஒருவர் என்பர்''. உமாபதி சிவாசாரியார் பற்றிய குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு திருக்கரைசைப்புராணம் பதினான்காம் நூற்றாண்டில் எழுந்தது என்று கூறல் வலுவுடைத்தன்று என்பது முற்கிளந்தனவற்றாற் போதரும்.

திருக்கரைசைப் புராணத்தின் ஆசிரியர் பெயர் அறியுமாறில்லை. இப்புராணத்தைச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் உரையோடு திரிகோணமலை வே. அகிலேசபிள்ளை மயிலிட்டி வச்சிரயந்திரசாலையில் விகிர்த்தி வருஷம் ஆனி மாதம் (1890) பதிப்பித்து வெளியிட்டார்; இரண்டாம் பதிப்பு நந்தன வருஷம் ஆடி மாதம் (1952) திரிகோணமலை கோணேஸ்வர அச்சகத்திலிருந்து வெளிப்போந்தது; மூன்றும் பதிப்பு வ. அ. இராசரத்தினத்தால் 1975 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது. காப்புச் செய்யுள் உட்படப் பதினைந்து பாடல்களுள்ள பாயிரம் நீங்கலாக 155 செய்யுட்களடங்கிய நான்கு சருக்கங்களையுடையது திருக்கரைசைப் புராணம்.

வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் (—1928) இரு தலபுராணங்களை இயற்றியுள்ளார். இவற்றில் ஒன்றான தென்கோயிற் புராணத்தின் பகுதிகளுட் சில அச்சிடப் பெற்றுள்ளன; ஒரு பகுதி சங்கானை சச்சிதானந்த அச்சியந்திரசாலையில் 1916 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது; நூல் முழுவதும் அச்சிடப்பெற்றமை அறியுமாறில்லை. இவர் நல்லூர் கைலாசநாதர் பேரிலும் ஒரு புராணம் பாடியதாக அறியமுடிகின்றது; அப்புராணம் அச்சிடப்பெற்றமை அறியுமாறில்லை.

சிவசுப்பிரமணிய சிவாசாரியர் காலத்திற்குப் பின்வரும் வாழ்ந்த வதிரி வித்துவான் சி. நாகலிங்க பிள்ளை கதிர்காமத்திற் கோயில்கொண்ட முருகப்பெருமான் மீது பாடியது கதிர்காம புராணமாகும். பருத்தித்துறை சரஸ்வதி யந்திரசாலையில் 1932 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்ற கதிர்காம புராணத்திற் காப்புச் செய்யுள் இரண்டு நீங்கலாக இருபது பாடல்களுள்ள பாயிரமும் 720 பாடல்களுள்ள பதினெட்டுப் படலங்களும் அமைந்திருக்கின்றன.

1975 இல் காலஞ்சென்ற நவாலி பண்டிதர் சோ. இளமுருகனார் காரைதீவு திண்ணபுரம் சுந்தரேசராம் சிவபிரான் மீது பாடியது ஈழத்துச் சிதம்பர புராணமாகும். பண்டிதர் இ. பரமேசுவரியின் உரையோடு ஈழத்துச் சிதம்பர தேவத்தானம் சிவஸ்ரீ க. வைத்தீசுவரக்குருக்கள் 1972 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தில் முற்கிளந்த புராணத்தைப் பதிப்பித்து வெளியிட்டார். பாயிரம் உட்படப் பத்துச் சருக்கங்களுடைய ஈழத்துச்சிதம்பர புராணத்தில் 806 பாடல்களுள.

ஆரையூர் ந. அழகேசமுதலியார் மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள சித்தாண்டியிற் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள சித்திரவேலாயுத சுவாமி மீது பாடியது சித்தாண்டித் திருத்தல புராணமாகும். இதனைச் சித்தாண்டி வைத்தியர் செ. கிருஷ்ணபிள்ளை மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகத்தில் 1973 ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார்.

மட்டக்களப்பு மன்னம்பாடியார் என்பவர் பாடிய தோன்றித்தலபுராணம் பற்றிய செய்திகள் கிடைக்குமாறில்லை.

ஈழத்தவர் தம் நாட்டிலுள்ள தலங்களுக்கு மட்டுமன்றித் தமிழகத்திலுள்ள தலங்களுக்கும் புராணங்கள் பாடியுள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த அராலி நா. விசுவநாத சாஸ்திரிகள் சிவகங்கை வேதார்த்த சுப்பிரமணியபிள்ளை பாடிய மயூரகிரி புராணத்திற்குத் தெய்வநாயகி திருமணச் சருக்கம் பாடிச் சேர்த்துள்ளார். கந்தபுராண கலாசாரம் விளங்கும் யாழ்ப்பாணப் பிரிவிலே மயூரகிரி புராண ஆசிரியர் பாடாதொழிந்த பகுதியை அராலி விசுவநாத சாஸ்திரியார்கள் பாடியது வியப்பிற்குரியதல்ல. ஆறுமுகநாவலர் (1822—1879) நாட்டுக்கோட்டைச் செட்டிகள் சிலருடைய வேண்டுகோளின்படி தேவகோட்டைத் தலபுராணத்தை ஐந்நூறு செய்யுள் வரையிற் பாடியதாகக் கேள்வி என்பர் பாவலர் சரித்திர தீபகமுடையார். இவர் கேள்விப்பட்டதை வே. கனகரத்தின உபாத்தியாயரோ அல்லது த. கைலாசபிள்ளையோ சுட்டவில்லை என்பது கவனித்தற்குரியது. நாவலரவர்களின் வித்தியாசாலைகட்குக் பொருள் கொடுத்து உதவியவர்கள் நகரத்தார். இதனை நாவலர்களே தம் ஆவேதனங்களிற் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே நகரத்தார் வேண்டுகோளின்படி நாவலரவர்கள் புராணம் பாடத் தொடங்கினர் எனும் கூற்றுப் பொருத்தமாகலாம். திருவண்ணாமலையாதீன வித்துவானாகத் தமிழ் நாட்டில் விளங்கியவரும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவருமான வண்ணை பிரமஸ்ரீ கணேச பண்டிதர் பாண்டியநாட்டு இளையாற்றங்குடியிலே தங்கியிருந்தபோது நகரத்தார் வேண்டுகோளின்படி இளசைப்புராணம் பாடினர். இப்புராணம் மன்மத ஸ்ரீ சித்திரை மாதம் (1895) பதிப்பிக்கப்பெற்றது. பாயிரம் உட்படப் பதினைந்து படலங்கள் கொண்ட இளசைப் புராணத்தில் 1090 பாடல்களுள என்பர்.

வடகோவை க. சபாபதிநாவலர் (—1903) நாவலரவர்களின் காலத்திலே சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியராக விளங்கி, பின்னர் திருவாவடுதுறையாதீன வித்துவானாகத் திகழ்ந்து, பின்னர் சென்னையிலும் சிதம்பரத்திலும் அச்சகம் நடாத்திச் சிதம்பரத்திலே மறைந்தவர். இவர் சிதம்பரத்திலுள்ள மறையோர் வேண்டுகோளின்படி ஏமசபாநாத மான்மியத்தைத் தழுவி இயற்றியது சிதம்பரசபாநாதபுராணமாகும். இப்புராணம் பார்த்திப ஸ்ரீ வைகாசி மாதம் (1885) பதிப்பிக்கப்பெற்றது. பாயிரம் நீங்கலாகப் பதின்மூன்று படலங்களுள்ள முற்கிளந்த புராணத்தில் 893 பாடல்களுள என்பர். நீர்வேலி ச. சிவப்பிரகாச பண்டிதர் (—1914) தந்தையின் நூல்களைப் பதிப்பிக்கவும் தலயாத்திரை செய்யவும் தமிழ் நாடு சென்று 1912 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் தங்கியிருந்த போது சி. பழநியப்ப முதலியார் வேண்டுகோளின்படி பாடியது திருக்கழிப் பாலைப் புராணமாகும். இப்புராணம் ஜய ஸ்ரீ (1954) சிதம்பரத்திற் பதிப்பிக்கப்பெற்றது. காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம் எனும் முப்பிரிவிலும் இருபத்தாறு பாடல்களும் ஏனைய எண் பிரிவில் 250 பாடல்களுமாக 276 பாடல்கள் திருக்கழிப்பாலைப் புராணத்திலுள. சிதம்பரம் பச்சையப்பன் ஆங்கில கலாசாலையிற் சிலகாலம் தமிழாசிரியராக விளங்கிய பன்னாலை வித்துவான் ச. சிவானந்தையர் (—1916) சிதம்பரம் நடராசப் பெருமான் மீது பாடியது புலியூர்ப்புராணமாகும். ஏழாலை ஐ. பொன்னையாபிள்ளை தமது மல்லாகம் திருஞான சம்பந்தர் அச்சியந்திரசாலையிற் புலியூர்ப் புராணத்தைத் தாது ஸ்ரீ சித்திரை மாதம் (1936) பதிப்பித்தார். இப்புராணத்திற் காப்பு முதல் பாயிரமீறாக இடம்

பெறும் முதலேழு பிரிவிலும் 373 பாடல்களும் எஞ்சிய பகுதியில் இடம் பெறும் பதினேழு படலங்களில் 850 பாடல்களும் ஆக 1223 பாடல்களுள. தமிழ்நாட்டில் நெடுங்காலம் வதிந்தவரும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிக் குரியவருமான வதிரி வித்துவான் சி. நாகலிங்கபிள்ளை திருநெல்வாயிற் புராணம், திருவைகற்புராணம், திருத்திலதைப் பதிப்புராணம்எனும் தலபுராணங்களையும் பாடியுள்ளார். திருநெல்வாயிற் புராணம் கரவெட்டி ஞானசித்தி யந்திரசாலையில் 1934—ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது. இப்புராணத்தில் காப்பு, கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நைமிசப்படலம், பதிகம் எனும் பிரிவுகளில் 62 பாடல்களும், ஏனைய 11 படலங்களில் 504 பாடல்களுமாக 566 பாடல்களுள. திருவைகற் புராணம் 1942 ஆம் ஆண்டிற் பதிப்பிக்கப்பெற்றது. திருத்திலதைப் பதிப் புராணப் பதிப்பு பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை. பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் (1889–1954) ஈழத்திற்கு 1917 ஆம் ஆண்டு வருவதற்குச் சில வருடங்களுக்கு முன்னர் திருப்பாலைத்துறைப் புராணம் என ஒரு புராணத்தை நகரப் படலம் வரை பாடி முடித்தார் என்பர். (ஸ்ரீ லங்கா, பெப்ருவரி, 1955). அருள்வாக்கி ஆ. பி. அப்துல் காதிறுப் புலவர் (1866–1918) கோட்டாறுப் புராணம் என ஒரு புராணம் பாடியுள்ளார். 1909 இல் வெளிவந்த அவருடைய சந்தத்திருப்புகழ்ப் பதிப்பிலே இப்புராணம் பதிப்பிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்புராணம் பற்றிய செய்திகள் கிடைத்தலரிது. தமிழ்நாட்டுத் தலங்கள் மீது பாடிய ஈழத்தவர் யாவரும் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளுக்குரியவர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஈழத்தவர்கள் ஏகாதசி, சிவராத்திரி, கந்தசட்டி, விநாயகசட்டி, சோமவாரம் ஆகிய விரதங்களின் மாண்பினை உணர்த்தும் புராணங்களையும் பாடியுள்ளனர். சுன்னுகம் அ. வரத பண்டிதரும், வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியரும் (—1928) ஏகாதசி விரதச் சிறப்பினைப் புராணமாகப் பாடியுள்ளனர். வரதபண்டிதர் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது சைமன் காசிச்செட்டியின் கருத்தாகும். வரதபண்டிதரின் ஏகாதசி புராணத்திற் காப்புச் செய்யுள் உட்படப் பாயிரத்தில் எட்டுச் செய்யுள்களும் ஏனைய மூன்று சருக்கங்களில் 250 பாடல்களும் இடம்பெறுவன. சிவாசாரியரின் ஏகாதசி புராணததில் ஐந்து சருக்கங்களிலே 300 விருத்தங்கள் இடம்பெறுவதாகக் கூறுவர். வரதபண்டிதரின் புராணத்தினை மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை சென்னை பண்டித மித்திர அச்சியந்திரசாலையிற் பதிப்பித்து விளம்பி ஞு ஆனி மாதம் (1898) வெளியிட்டார். இதனைச் ச. சோமசுந்தரஐயர் பருத்தித்துறை ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் இயற்றிய குறிப்புரையுடன் 1924 ஆம் ஆண்டும் ச. சுப்பிரமணிய சாஸ்திரிகளும் சிவ. பஞ்சாக்ஷரக்குருக்களும் இயற்றிய குறிப்புரையுடன் 1947 ஆம் ஆண்டும் பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலையிற் பதிப்பித்துள்ளார். துன்னாலை தெற்கு ஆ. வேலுப்பிள்ளை உபாத்தியாரும் தமது பதவுரையுடன் விளம்பி ஞு ஆனி மாதம் (1958) வரதபண்டிதரின் புராணத்தினைப் பருத்தித்துறை கலாநிதி யந்திரசாலையிற் பதிப்பித்துள்ளார்.சிவசுப்பிரமணிய சிவாசாரியர் இயற்றிய ஏகாதசி புராணம் பதிப்பிக்கப்பெற்றதாகக் கூறப்பட்ட போதும் (ஈழகேசரி 12.7.1936) அதன் விபரங்கள் அறியுமாறில்லை.

சிவராத்திரி விரதமாண்பினைச் சுன்னுகம் அ. வரதபண்டிதர், நெல்லைநாதர், வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் (—1928) ஆகியோர் புராணமாகப் பாடியுள்ளனர். வரதபண்டிதரின் புராணத்திற் காப்புச்செய்யுளுட்பட 24 பாடல்கள் கொண்ட பாயிரமும் 691 பாடல்களுடைய ஒன்பது சருக்கங்களும் இடம்பெறுவன. நெல்லைநாதர் புராணத்திற் பாயிரத்திற் பதினறு செய்யுள்களும் ஏனைய நான்கு அத்தியாயங்களில் 287 பாடல்களும் காணப்படுவன. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் புராணத்திற் காப்புச் செய்யுளுட்பட ஏழு பாடல்களுடைய பாயிரமும் 294 பாடல்களுள்ள ஆறு சருக்கங்களுமுள. வரதபண்டிதரின் சிவராத்திரி புராணத்தை வல்வை ச. வயித்தியலிங்கபிள்ளை சென்னை வித்தியாவர்த்தினி அச்சுக்கூடத்தில் விசு ஞு ஆவணி மாதம் (1881) பதிப்பித்து வெளியிட்டார். (செந்தமிழ்ச் செல்வி, 1930, 8.1.51) வயித்தியலிங்கப்பிள்ளையின் இரண்டாம் பதிப்பு சென்னை இந்து யூனியன் அச்சியந்திரசாலையிலிருந்து விஜய ஞு கன்னிரவியில் (1893) வெளிவந்தது. சாதாரண ஞு (1910) ஆடி மாதத்தில் ம. நமசிவாயப்பிள்ளையின் அரும்பிரயோகவுரையும் வசனமும் கூடிய பதிப்பொன்றும் ஆவணி மாதத்திற் புலோலி வ. குமாரசுவாமிப் புலவரின் அரும்பதப்பொருள் விளக்கத்துடன் கூடிய பதிப்பொன்றும் வரதபண்டிதரின் புராணத்திற்கு வெளிவந்தன. உடுப்பிட்டி ம. குமாரசூரியப்பிள்ளையின் பதவுரையோடு கூடிய வரதபண்டிதரின் சிவராத்திரிபுராணப் பதிப்பு தும்பளை கலாநிதி யந்திரசாலையிற் பிரமாதீச ஞு ஆவணி மாதம் (1913) அச்சிடப்பெற்று வெளி வந்தது. இப் பதவுரைப் பதிப்பினைத் தும்பளை ச. சோமசுந்தர ஐயர் ஆங்கீரச வருடமும் (1932) மறவன்புலோ மு. கணபதிப்பிள்ளை 1971 ஆம் ஆண்டிலும் வெளியிட்டுள்ளனர். நெல்லைநாதர் சிவராத்திரி புராணம் வட்டுக்கோட்டை. நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியராற் பார்வையிடப்பெற்று வட்டுக்கோட்டை வே. சதாசிவம் பிள்ளையாற் சென்னை ஸ்கொட்டிஷ் பிரஸ் எனும் அச்சகத்தில் விசு ஞு புரட்டாதி மாதம் (1881) வெளியிடப் பெற்றது. சிவசுப்பிரமணிய சிவாசாரியரின் புராணப் பதிப்பொன்று வட்டுநகர் வே. சதாசிவம்பிள்ளையால் யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் 1910 ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. இப்

பதிப்பிலே அது இரண்டாம் பதிப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது; முதலாம் பதிப்பு வெளிவந்ததை அறியுமாறில்லை.

சிவராத்திரி புராணம் பாடிய நெல்லைநாதர் இன்னர் என்பதிற் கருத்துவேறுபாடு நிலவுகின்றது. பாண்டிநாட்டைச் சேர்ந்த நெல்லைநாதர் என்பவர் சிவராத்திரிப் புராணம் பாடியதாகக் கா. சுப்பிரமணியப் பிள்ளை கூறுவர் (இலக்கியவரலாறு, இரண்டாம் பாகம், 1958, பக். 419). முதலியார் குல. சபாநாதன் சிவராத்திரி புராணம் பாடிய நெல்லைநாதர் இருபாலை நெல்லைநாத முதலியார் என்று வித்தகப் பத்திராதிபர் தென்கோவை பண்டிதர் ச. கந்தையாப்பிள்ளை கூறியதாக உரைத்துள்ளார். இருபாலை நெல்லைநாத முதலியார் சிவராத்திரி புராணம் பாடினர் என்ற கருத்துப் பொருத்தமாகத் தெரியவில்லை. சேனாதிராய முதலியார் பற்றி எழுதிய விடத்துச் சைமன் காசிச்செட்டி நெல்லைநாதரைச் சுட்டியபோதும் அவர் புலமையைப் பற்றி யாதும் கூறவில்லை. அவர் இலங்கை றேயல் ஆசிய சங்கத்தின் சஞ்சிகையில் (**JCBRAS**, 2.4. 59–80; 2.5 180–187) எழுதிய நூற்பட்டியலிலே ஏட்டு வடிவிலிருந்த பல புராணங்களைச் சுட்டிய போதும் நெல்லை நாதர் பாடிய புராணத்தைச் சுட்டவில்லை. ஆனோல்ட் சதாசிவம்பிள்ளை சில பாடல்களை மட்டுமே பாடிய ஈழத்துப் புலவர்களைப் பற்றித் தனித்தனியே எழுதியபோதும் நெல்லைநாதரைப் பற்றித் தனியாக யாதும் கூறவில்லை. நெல்லைநாதர் புராணத்தின் 1881 ஆம் ஆண்டுப் பதிப்பு வெளிவந்து ஐந்து வருடங்கழித்துப் பாவலர் சரித்திர தீபகம் தந்த ஆசிரியர் நூலாசிரியர் பெயர், நாடு, ஊர், காலம் முதலியன தெரியவில்லை என்று கூறுவர். ஒரு நூல் வெளிவரு முன்பும் வெளிவந்த காலத்தை தொடர்ந்தும் ஆசிரியர் மர்மமாக இருந்தாலும் சிறிது காலஞ்செல்ல அதன் ஆசிரியர் வெளிப்பட்டிருப்பார். ஏனெனில் நூலாசிரியர் மர்மமாக வைக்கப்பட்டமைக்கான காரணம் காலப் போக்கில் மாறியிருக்க வேண்டும். அதோடு இன்னர்தான் ஆசிரியர் என்ற கருத்து உருவாகி இருத்தல் வேண்டும். அக்கருத்து 1886 இல் உருவாகவில்லை. நெல்லைநாத முதலியாரின் புலமை கூட ஆனோல்ட் அவர்களுக்குத் தெரியவில்லை. இந்தியாவிலிருந்து வந்த வித்துவானின் தருக்கை அடக்கியவர் சேனாதிராயர் என்று ஆனோல்ட் கூறுகிறார். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை யாழ்ப்பாணச்சரித்திரத்தில் (1912) முதன்முதலாக அந்தப் பெருமையை நெல்லைநாத முதலியாருக்குத் தந்துள்ளார். சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் (1916) தமது புலவர் சரித்திரத்தில் ஆனோல்ட் கூற்றினை ஆதரித்துச் சிலர் அச்செயலைச் சேனாதிராயரின் தந்தைமேல் ஏற்றுவர் என்பர். இந்தியப் புலவரின் தருக்கை அடக்கி, இருபாலையை வித்தியாபீடமாக மாற்றிச் சிவராத்திரி புராணத்தைப் பாடிய நெல்லைநாத முதலியாரைக் குமாரசுவாமிப் புலவர் தனியிடம் அளித்துச் சிறப்பிக்காமை கவனித்தற்குரியது. வித்தகப் பத்திரிகையில் ஈழநாட்டுப் புலவர் பற்றி எழுதிய வித்துவான் சி. கணேசையரே முதன்முதலாக நெல்லைநாத முதலியாரைக் காவிய நாயகனாகப் போற்றி எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் கணேசையர் கூட, நெல்லைநாத முதலியார் பற்றி கூறுமிடத்து ''இவர் இயற்றிய நூல்களாயினும் தனிச் செய்யுள்களாயினும் இப்போது கிடைத்தலரிதாயின'' என்று கூறல் நோக்கத்தக்கது. இந்நிலையிலே பெயர் ஒற்றுமையின் அடிப்படையிலே 1939–ம் ஆண்டிற்குப் பின்னர் புதிய கதை ஒன்று தோன்றியுள்ளதாகவே கருதக்கிடக்கின்றது.

மட்டக்களப்புப் பண்டிதர் ச. பூபாலப்பிள்ளை (1922) சோமவாரத்தின் மாண்பினை விளக்குமுகமாகப் பாடியது சீமந்தனி புராணமாகும். வல்வை ச. வயித்தியலிங்கபிள்ளையாற் பரிசோதிக்கப்பெற்ற சீமந்தனி புராணம் சென்னை ஸ்ரீ பத்மநாபவிலாச அச்சுக்கூடத்தில் 1894 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது. காப்புச் செய்யுள் உட்பட பதினெரு செய்யுள் கொண்ட பாயிரமும் 789 பாடல்களையுடைய பத்துச் சருக்கங்களும் சீமந்தனி புராணத்திலுள.

வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் (–1928) கந்தசட்டி, விநாயகசட்டி ஆகிய விரதங்களின் மாண்பினையும் புராணமாகப் பாடியுள்ளார். கந்தசட்டி புராணம் வட்டுக்கோட்டை வே. சதாசிவப்பிள்ளையாற் சென்னை வெ. நா. ஜுபிலி யந்திரசாலையில் 1895 ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்றது. விநாயகசட்டி புராணம் பதிப்பிக்கப்பெற்றமை அறியுமாறில்லை. கந்தசட்டி புராணத்திற் காப்புச் செய்யுள் உட்படப் பன்னிரு செய்யுள்களையுடைய பாயிரமும் 998 பாடல்களைக் கொண்ட எட்டுச் சருக்கங்களும் காணப்படுவன. விநாயகசட்டி புராணத்தின் அமைப்பு உணருமாறில்லை.

வியாக்கிரபாத முனிவர், சிறுத்தொண்டநாயனர், அர்ச்சியேஷ்டர் யோசேப்பு, முகியித்தீன் அப்துல் காதர் ஜெயிலானி ஆண்டகை முதலிய சமயப் பெரியார் மீது ஈழத்தவர் புராணம் இயற்றியுள்ளனர். பதினேழாம் நூற்றாண்டில் திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் அளவெட்டி வைத்தியநாதமுனிவர் சங்கதத்திலிருந்து மொழி பெயர்த்துப் பாடிய வியாக்கிரபாத புராணம் அச்சிடப்பெற்றமை அறியுமாறில்லை. இப்புராணத்திற்குரிய இரு பாடல்களைச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தமிழ்ப் புலவர் சரித்திரத்திலே (முதற் பதிப்பு, 1916, பக். 139) தந்துள்ளார். பதினெட்டாம்

நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த கூழங்கைத் தம்பிரான் பாடிய யோசேப்பு புராணத்தில் இருபத்தொரு படலங்களும் 1023 பாடல்களுமுள என்பர் சைமன் காசிச்செட்டி. அவர் 'தமிழ் புளூராக்' எனும் நூலில் எடுத்தாளும் ஆற்றுப்படலத்திற்குரிய ஐந்து பாடல்களொழிய வேறுபாடல்கள் கிடைப்பதரிது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பதுறுத்தீன் புலவர் ஹிஜிறத் 1231 இல் (கி.பி. 1816) முகியித்தீன் அப்துல் காதிர் ஜெயிலானி ஆண்டகை மீது பாடியது முகியித்தீன் புராணம். இப்புராணம் 1881 ஆம் ஆண்டிற் பதிப்பிக்கப்பெற்றதாகவும் இதனுள் 72 படலங்களும் 4000 பாடல்களும் இருப்பதாகவும் கூறுவர். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த வட்டுக்கோட்டை மு. ஆறுமுகம்பிள்ளை செய்யுளாலும் வசனத்தாலும் இயற்றிய சிறுத்தொண்டநாயனார் புராணம் அளவால் மிகச் சுருங்கியதாம். இப்புராணம் பலமுறை அச்சிடப்பெற்றது.

ஈழத்தவர் மகாபுராண மொழிபெயர்ப்பில் ஈடுபட்டதற்குச் சான்றாக விளங்குவது வட்டுக்கோட்டை நா. சிவசுப்பிரமணிய சிவாசாரியர் (—1928) ஆயிரத்திற்கு முன்பின்னான செய்யுளை இயற்றி எஞ்சிய பாகத்தை முற்றுவிக்காது விட்ட சைவமகாபுராணமாகும்.

கதலிகரும் புரொட்டஸ்தாந்து மதத்தவரும் தம் வேதாகமத்தைப் புராணமாகப் பாடியுள்ளனர். கதலிக மதத்தவரான தெல்லிப்பழை தொம் பிலிப்பு பாடியது ஞானானந்த புராணமாகும். இப்புராணத்தைப் பாடுவித்த தொம் தியோகு வர்ணகுலசூரிய அரசுநிலையிட்ட முதலியார் காலம் 1746–1825 என்பர் (J. H. Martyn: Notes on Jaffna pp. 154, 173). இப்புராணத்திற் போற்றப்படும் ஜெர்வா பப்ரிஸ்ரா சுவாமிகள் (தற்சிறப்புப்பாயிரம், 7) 1823 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மேசாமிற் குருவாக விளங்கியவர் (J. H. Martyn, Notes on Jaffna, P. 172). புரொட்டஸ்தாந்து மதத்தவரான அளவெட்டி வே. கனகசபைப் புலவர் (1816–1873) பாடியது திருவாக்கு புராணமாகும். ஞானானந்தபுராணம் இராயபுரம் அ. சவரியப்ப முதலியார் குமரர் ஜெகராவு முதலியாரால் 1874 ஆம் ஆண்டிலும் திருவாக்கு புராணம் சி. சி. மக்காதர் பாதிரியாரால் 1866 ஆம் ஆண்டிலும் பதிப்பிக்கப் பெற்றன. ஞானானந்த புராணத்தில் மூன்று காண்டங்களும் பாயிரம் நீங்கலாக இருபத்து மூன்று சருக்கங்களும் 1104 விருத்தங்களும் இருப்பதாகப் பாவலர் சரித்திர தீபகம் கூறுகின்றது. முற்றுவிக்கப் பெறாத திருவாக்கு புராணத்தில் 1702 பாடல்களுள. இப்புராணப் பதிப்பிற் காப்பு முதல் பதிகம் ஈறாகவுள்ள புறவுறுப்பில் 119 பாடல்களும் பதினொரு படலங்களைக் கொண்ட ஆதிகாண்டத்தில் 1075 பாடல்களும் எட்டுப் படலங்களையுடைய யாத்திரைக் காண்டத்தில் 441 பாடல்களும் முற்றுவிக்காத சுவிசேடகாண்டத்தில் 67 பாடல்களும் காணப்படுகின்றன.

வட்டுக்கோட்டை க. முத்துக்குமாரர், நல்லூர் சி. அப்புக்குட்டி ஐயர் (1788–1863), வல்வெட்டித்துறை அட்டாவதானம் நா. ஏகாம்பரம் (1842–1873) ஆகியோர் முறையே பாடிய வல்லிவிசுபுராணம், சூதுபுராணம், புரூரவச் சக்கரவர்த்தி புராணம் என்பன புராண இதிகாசக் கதைகளின் அடிப்படையில் எழுந்தன போலும். வல்லிவிசுபுராணம் திருவிளையாடற் புராணத்திலிருந்தும் ஏனைய இரு புராணங்களும் பாரதத்திலிருந்தும் கதைகளைப் பெற்றன போலும். இம் மூன்று புராணங்களையும் குறிப்பிடும் பாவலர் சரித்திர தீபகம் மேற்கோளெதுவும் தரவில்லை. புரூரவச்சக்கரவர்த்தி புராணம் பற்றி "புராணம் பாடினராம் என்ற மட்டிலே, அதைப் பாடநினைத்தாரோ, தொடங்கினாரோ, முடித்தாரோ அறியோம்" என்பர் பாவலர் சரித்திர தீபகமுடையார்.

அச்சுவேலி நீ. காசிநாதப்புலவர் (1796–1854), வண்ணார்பண்ணை நட்டுவச் சுப்பையனார், கோப்பாய் வே. இராமலிங்கம் முறையே பாடிய தாலபுராணம், கனகி புராணம், கோட்டுப் புராணம் என்பன அங்கதமாயமைவன என்று கருத இடமுண்டு. இவர்கள் புராண நெறியினைப் புதுவழியில் இட்டுச்செல்ல எடுத்துக்கொண்ட முயற்சி குறிப்பிடத்தக்கதாம். பனங்காய்ப் பாரதம் என்றழைக்கப்பட்ட தாலபுராணத்திற்குரிய விருத்தப்பாக்கள் எதனையும் பாவலர் சரித்திர தீபகம் எடுத்தாளவில்லை. கோட்டுப் புராணத்திலிருந்து ஒரு பாடலைப் பாவலர் சரித்திர தீபகம் எடுத்தாளுகின்றது. ஏறக்குறைய 400 விருத்தங்கள் உள்ளதாகப் பாவலர் சரித்திர தீபகம் கூறும் கனகிபுராணத்திற்குரிய சில பாடல்கள் மட்டுமே இன்று கிடைக்கின்றன. நவாலி சி. கந்தையாபிள்ளையின் கனகிபுராணம் தெரிகவிகள் எனும் பதிப்பிலும் (1937) வட்டுக்கோட்டை மு. இராமலிங்கத்தின் கனகிபுராணப் பதிப்பிலும் (1961) கனக. செந்திநாதனின் 'கனகி புராணத்தில் சில பாடல்கள்' எனும் கட்டுரையிலும் (கலைச் செல்வி, ஆனி, 1960) இடம் பெறும் பாடல்களுட் சில கனகிபுராணத்திற்குரியவை என்று துணியலாம். வண்ணைச் சிவன்கோயில் தாசிகளுள் ஒருத்தியாம் கனகி என்பவளைக் கதாநாயகியாகக் கொண்டு சுப்பையனார் பாடிய நூலிற் கிடைக்கும் பாடல்கள் அங்கதப் பாடல்களாக மிளிர்கின்றன. யாழ்ப்பாணம் காரைதீவிற் சின்னாச்சிபுராணம் எனப் பெயரிய நூலொன்றிற்கு உரியதாகச் சில பாடல்கள் வழங்கிவருகின்றன என்பது ஈண்டு சுட்டற்பாற்று.

வல்வெட்டித்துறை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்திலிங்கப்பிள்ளை (1843–1900) இயற்றியது சாதிநிர்ணய புரணமாகும். இந்நூல் தும்பளை சோதிடவிலாச யந்திரசாலையில் விகாரி ௵ ஆவணி மாதம் (1899) பதிப்பிக்கப்பெற்றது. உலகநீதியாசிரியர் இயற்றிய சாதிபேத விளக்கம் போன்று சாதிநிர்ணயபுராணமும் சாதிநிர்ணயத்திலீடுபடும் 'சாதி பேத' நூலாகும். எண்பத்தெட்டுச் செய்யுள்களையுடைய சாதிநிர்ணய புராணம் புராண இலக்கணங்களில்லாத நூலாகும். மாபுராணம், பூதபுராணம் எவ்வாறு புராணங்களாகவோ அவ்வாறே சாதிநிர்ணய புராணமுமாகும்.

---

# தேவாரப் பண்முறை

பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி

இந்திய சங்கித சரித்திரத்திலே தேவாரப் பதிகங்களே மிக்க பழமையான உருப்படிகளாகும். வேதகானம் தேவாரத்துக்கு முந்தியதாயினும் அது ஒரு தாளத்தில் அமைக்கப் பெற்றுப் பாடப்படவில்லை. இராமாயண சுலோகங்களைக் குசலவர்கள் கிதை முறையிற் கானம் செய்ததாகத் தெரிய வருகிறது. ஆயின் அவற்றின் இசை நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே தேவாரப் பண்களைப் பற்றி எல்லோரும் கவனிக்க வேண்டியது மிக்க அவசியமாகும். இன்னும், கர்நாடக சங்கீதம், இந்துஸ்தானிக சங்கீதம் என்னும் பிரிவுகள் ஏற்படாத காலத்திலே தேவாரங்கள் அருளப்பட்டதினால் இந்தியாவிலுள்ள எல்லாச் சங்கீத வித்துவான்களுந் தேவார இசையிற் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

தேவாரம் என்பது திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்னும் மூவரால் அருளப்பட்ட அரிய பாடல்களாகும். திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள்; சுந்தரர் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர்கள் வாக்கிலிருந்து பக்திமேலீட்டினால் உள்ளம் பொங்கி வந்த பாடல்களானதினாலே தேவாரப் பதிகங்களுக்குத் தனிச் சிறப்புண்டு. ஒரு தலத்தில் நின்றுகொண்டு மெய்ம் மறந்து பாடப்பட்ட இப்பாடல்களை எடுத்துக்கட்டி என்று சொல்லப்பட்ட சங்கீத ஞானமும் சாகித்திய ஞானமுமுடைய சீடர்கள் ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுதினார்கள்.

''பண்' என்றால் 'இராகம்' என்பது பொருள். தேவாரப் பதிகங்களையும் பண்கள் என்று குறிப்பிடுவது மரபாகும். நவீன சங்கீதத்துக்கு இராகம் என்பதே ஆதாரமாகும். இராகம் என்னும் பதம் இசைப் பொருளுடன் பரதருக்குப் பிற்காலத்தில்தான் வந்தது. முதன் முதலில் இராக மென்னும் பெயரை இசைப் பொருளுடன் காஸ்தாசர் இயற்றிய வட மொழித் தாளங்கள்ல்தான் காண்கின்றோம். அதற்கு முன்னால் ஜாதி என்னும் பெயர் உபயோகத்தில் இருந்தது. பரதர் தமது நாட்டிய சாஸ்திரத்தில் ஜாதிகளின் பத்து வகை இலக்கணங்களைக் கூறுகின்றார். இராமாயண சுலோகங்களையும் குசலவர்கள் இனிய ஜாதிகளில் கானம் செய்தார்களென வால்மீகி முனிவர் கூறுகிறார்.

தென் நாட்டின் இசைச் சிறப்பைப்பற்றி பரதர் தனது நூலில் அழகாகத் தெரிவிக்கிறார். குரல் வளம்பெற்ற மக்களும், நன்றாக ஆடக்கூடிய மக்களும் உலவிவரும் தென்னாடென்று 14 ஆம் அத்தியாயத்தில் தமிழ் நாட்டைச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

சைவ ஆலயங்களில் தேவாரப் பதிகங்கள் தொன்று தொட்டு சம்பிரதாயம் வழுவாமல் ஓதுவார்களாற் பாடுபட்டு வந்தமையினால் அவற்றின் இசைகள் காப்பாற்றப்பட்டன. ஓதுவார்கள் சிறந்த பக்திமான்களாவர். அவர்கள் கற்றுக் கொண்ட தேவார இசையைக் கிரமம் தவறாது பாடிவந்தனர். ஏதேனும் மாறுதல் செய்தால் தெய்வ அபசாரம் நேருமென்று பயந்து வந்தார்கள். இக்காரணத்தினால் அவர்களின் இசை புராதனமானதென்று நிட்சயமாகக் கூறிக்கொள்ளலாம். மேலும் தேவாரப்பண்களின் இராகங்களெல்லாம் ஏழாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் இருந்த இராகங்களே. பிற்காலத்தில்ஏற்பட்ட ஷண்முகப்பிரியா, ஹம்ஸத்வனி போன்ற இராகங்கள் தேவாரப் பதிகங்களில் இல்லை என்பதை நன்கு கவனிக்க வேண்டும்.

சம்பந்தர் பாடிய முதற் பதிகமாகிய தோடுடைய செவியன் என்பது நட்டபாடைப் பண்ணாகும். இது ஸ, க, ம, ப, நிஸ—ஸ, நி, ப ம, க ஸ என்னும் ஆரோகண அவரோகணங்களை உடைய கம்பீர நாட்டை என்ற இராகமாகும்.

சம்பந்தரின் தகப்பனார் தனது பிள்ளையுடன் நீராடலின் பொருட்டுக் குளத்துக்குச் சென்றார். குழந்தையைப் படியில் வைத்து அதமர்ஷண ஸ்நாநஞ் செய்ய நீரில் இறங்கினார். முழுதும் நீரில் இறங்கி வேத மந்திரத்தைக் கிரமமாக ஜெபித்து பின்னர் தலை நிமிர்ந்தார். இதற்குள் தகப்பனாரைக் காணாத குழந்தை அழுதது. உடனே பார்பதி பரமேஸ்வரன் ஆகாயத்திலே தோன்றி உமா தேவியார் சம்பந்தருக்குப் பாலூட்டினார். தகப்பனார் தலை நிமிர்ந்து குழந்தையின் வாயிலிருந்து பால் வடிவதைப் பார்த்து யார் பால்தந்தார் என்று அதட்டிக் கேட்கஅந்தக் குழந்தை தோடுடை செவியன் என்றும் பதிகத்தைப் பாடி விடையளித்ததைக் கேட்டு வியந்தார். அச்சமயததில் இடபாரூடராகத் தோன்றிய ஈசனும் மெல்ல மறைவதைக் கண்டார். என்ன ஆச்சரியம்! மூன்று வயதுக் குழந்தை என்ன அழகாகப் பாடிற்று. கம்பீரநாட்டையில் அத்தேவாரத்தைக் குழந்தை பாடியதில் ஒரு பொருத்தமுளது. ஸ, ப குரல் இளியாக வுள்ள சம்வாதஸ்வரங்கள்; மத்திமம் மற்றொரு சம்வாதஸ்வரம், அந்தர—காந்தாரம், ஷட்ஜத் தந்தியில் ஒலிக்கும் ஸ்வயம்பு ஸ்வரம்; அதேமாதிரி காகலி நிஷாதம் பஞ்சம தந்தியில் ஒலிக்கும் ஸ்வயம்பு ஸ்வரம். ஆகவே கம்பீர நாட்டை என்பது ஓர் இயற்கை இராக மென்பது தெளிவு. ஆதி சங்கரர் தனது சௌந்தர்ய லகரியில் ஞானசம்பந்தரை திராவிட சிசு என்று குறிப்பிட்டிருப்பது இங்கு கவனத்திற் கொள்ளத் தக்கதாகும்.

கௌசிகப் பண் என்பது தற்காலத்துப் பைரவி இராகமாகும். இதற்கு ''வானைக்காவில் வெண்மதி'' என்னும் திருவானைக்காத் தலத்திற் பாடப்பட்ட பதிகம் நல்ல உதாரணமாகும். பைரவியினுடைய ஆரோகணம் புராதன காலத்து ஷட் ஜக் கிராம இராகமாகும். அதன் அவ ரோகணம் ஷட் ஜக் கிராமத்தின் பஞ்சம மூர்ச்சனையாகும். ஆகவே பைரவி இராகம் பாசாங்கராகமே சங்கீத சரித்திரத்தில் தோன்றிற்று.

காந்தார பஞ்சம மென்னும் பண் தற்காலத்திலுள்ள கேதார கௌளை ராகத்துக்குச் சமானமானதாகும். இது ஒரு ஔடவ சம்பூரணராகம். தமிழ் மக்களின் சுத்த மேளமாகிய ஹரிகாம் போதியில் ஜன்ஜமான இராகம் ஆகும். இது ஸ, ரி, ம, ப, நி, ஸ—ஸ, நி, த ப ம, க, ரி, ஸ என்னும் ஆரோகண அவரோகணத்தை உடையது. இது ஓர் உபாங்கராகம், 'கொட்டமே கமழும்' என்னும் பதிகத்தில் இந்தராகம் பிரகாசிப்பதைக் காணலாம்.

சாதரி என்பது இக்காலத்துப் பந்துவராளி ராகம். 'இன்று நன்று நாளை நன்று' என்னும் பதிகத்தில் சாதரி ப்பண் நன்றாக விளங்குவதைக் காணலாம்.

'பழம் பஞ்சுரம்' என்னும் பண் சங்கராபரண ராகமாகும். பழம்பஞ்சுரம் பண்ணிலுள்ள பதிகங்களின் சஞ்சாரம் தாரஷட் ஜதிற்கு மேற் போகவில்லை. இதற்கு ஒரு நல்ல காரணம் உள்ளது. தேவார காலத்தில் எல்லாப் பண்களையும் ஒரே ஆதார சுருதி வைத்துக் கொண்டு பாடப் படவில்லை. யாழ் பக்க வாத்தியமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது; அதன் நரம்புகளை சுத்த மேளமாகிய ஹரிகாம்போதிக்குச் சுருதி சேர்க்கப்பட்டது. பழம் பஞ்சுரம் பாடுகையில் யாழின் மத்திம நரம்பை ஷட்ஜமாக வைத்துக் கொண்டு பாடினார்கள். இந்தப் புதிய சுருதியில் தார ஷட்ஜத்திற்குமேல் சஞ்சாரஞ் செய்ய முடியாதென்பது தெளிவு. தேவாரப் பதிகங்களில் கல்யாணியும் தோடியும் காணப்படவில்லை. இதற்குக் காரணம் அந்த ராகங்களைக் கிரக பேதத்தின் மூலம் உச்ச சுருதியிற் பாடவேண்டியிருந்தமையேயாம். யாழ்க்கருவியிற் கம்பிதம் போன்ற ஹமகங்களைப்பாட இயலாது. மேகராகக் குறிஞ்சி என்பது நீலாம்பரி ராகமாகும். இந்த ராகத்தில் மத்திம ஸ்மரம் கா, ம, ப, ம, மா — கா, மா, பா — பா, மா என்னும் மூன்று பிரயோகங்களிலும் மூன்று வகையாக ஒலிப்பதனால் யாழில் வாசிக்க இயலாது.

சம்பந்தர் 'மாதர் மடப்பிடியும்' என்னும் பதிகத்தைப் பாடிய காலத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணரால் அதைச் சரியாக யாழில் வாசிக்க முடியவில்லை. இதனால் வெறுப்புற்று யாழையே உடைத்துப் போட முயன்றார். உடனே சம்பந்தர் அவர் கையைப் பிடித்து இது உமது குற்றமல்ல; யாழின் குற்றமென்று ஆறுதல் வார்த்தை கூறி அமரச் செய்தார். இது ஓர் அரிய சம்பவமாகும்.

வரட்சிக் காலத்தில் ஓதுவார்கள் மேகராகக் குறிஞ்சிப் பாடல்களைப் பாடி மழை பொழியச் செய்திருக்கிறார்கள்.

'அந்தாளிக் குறிஞ்சி' யென்பது சாமராகமாகும்; பஞ்சம மென்னும் பண் ஆஹிரி ராகமாகும். ஆஹிரி ராகத்திலுள்ள நுட்ப சுருதிகளைப் பஞ்சமப் பண்களிற் காணலாம். திருவொற்றியூரிற் பாடிய பதிகங்களிற் பஞ்சமப்பண் ஒளிவிடுகின்றது.

'காந்தாரம்' என்பது நவரோஸ் என்னும் இராகமாகும். சம்பந்தர் மதுரையில் பாடிய 'மானினேர் வழி' என்னும் பதிகம் நவரோஸின் பூரணக் களையை விளக்குகிறது.

''செவ்வழி'' என்பது ''யது குலகாம்போதி'' இராகம்; அப்பர் திருவாய்மலர்ந்தருளிய 'அடுத்தானை யுரித்தானை'' என்னும் பதிகத்தை இதிற் பாடுவது வழக்கம்; இதில் கொண்டுகூட்டி என்னும் அணி விளங்குகிறது.

''செந்துருத்தி'' என்பது மத்திமாவதி இராகம். மோகன இராகம் மிக்க பழைமையானது. அதன் ரிஷப மூர்ச்சனையே செந்துருத்தியாகும். மோகனத்தின் பஞ்சம மூர்ச்சனை சுத்த ஸாவேரி இராகமாகும். நிஷாதாந்திய இராகமும் மிக்க பழைமையானது. இது சீகாமரம் என்னும் பெயருடன் விளங்குகிறது. காம்போதி இராகத்திற்குச் சமமாகிய தக்கேசி என்னும் பண்ணில் பல பதிகங்களைக் காண்கின்றோம். புறநீர்மை என்பது பூபாள இராகமாகும். ''ஸௌராஷ்டிரம்'' என்பது வியாழக் குறிஞ்சிப் பண்''; பந்தத் தால்'' என்னும் பதிகம் இதற்கு நல்ல உதாரணமாகும்; இதில் சில பிரயோகங்களில் தீவ்ரகாகலி நிஷாதமும், ஏகச்ருதி ரிஷபமும் வருவதைக் கவனிக்கவும்.

மேலும் பிற்காலத்திற் பலராகங்கள் உற்பத்தியாவதற்குத் தேவாரப் பண்கள் வழிகாட்டியாயிருந்தன. தேவாரப் பண்கள் எல்லாம் ரக்திராகங்கள் — உள்ளத்தைத் தொடும் இராகங்கள். பலவகையான கமகங்களும் நுட்ப சுருதிகளும் பண்களில் ஒலிப்பதைக் கவனித்தல் வேண்டும். பண்களின் இசை வடிவங்களை அறிதற்குத் தேவாரப் பதிகங்கள் பளிங்குகள் போல் விளங்குகின்றன.

(இக்கட்டுரையை வழங்கியவர் சைவத்திருவாளர் அருள். தியாகராசா)

---

# இறைக் காதல்

— சி. தில்லைநாதன் —

கடவுட பக்தி வெள்ளம் கரை புரண்டோடிய பல்லவர் காலப் பகுதியிலே சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் இறைவனை நாயகனுகக் கொண்டு அவன்மீது பெண்கள் காதல் கொள்ளும் பாவனையிற் பாடியிருக்கின்றார்கள். முன்னர் பொதுவாகக் காதலைக் குறித்த காமம் என்ற சொல் பின்னர் முறையற்ற காதலைக் குறித்து நிற்கக் காதல் என்ற சொல் முறையான காதலைக் குறித்து வழங்கலாயிற்று. கடவுள் மீது மானிடர் கொள்ளும் காதல் ஒத்த பணபினர்க்கு இடையே நிகழும் காதலாகவன்றி ஒருதலை வேட்கையாகவே அமையினும், கடவுள் சம்பந்தப்பட்ட புனிதத்துவம் நோக்கி அதுவும் காதல் எனவே கொள்ளப்படுவதாயிற்று.

மானிடருக்கு மத்தியில் நிகழும் ஆண்பெண் காதலில் இருந்து கடவுள் மீதான காதலை வேறுபடுத்துவதோடு அதனை ஏற்புடைத்தொன்றாகவும் மேற்பட்டதாகவும் காட்டிடவேண்டிப் பேரின்பக்காதல் என்று கூறினர். மானிடரிடையில் ஏற்படும் காதலைச் சிற்றின்பக் காதல் என்று சிறுமைப்படுத்தியும் கடவுள் பால் ஏற்படும் காதலைப் பேரின்பக் காதல் என்று பெருமைப் படுத்தியும் கூறுவது கடவுட் சிந்தனை முதன்மையாகப் போற்றப்பட்டமையின் விளைவே எனலாம்.

உலகியல் வாழ்க்கையில் நிகழும் மானிடக் காதலானது முறையாகப் போற்றப்பட்ட காலத்திலே அது சிற்றின்பக் காதல் என்று குறைவு படுத்தி மதிக்கப்படவில்லை. ''ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம்'' என்று நச்சினார்க்கினியர் கூறுவதிலிருந்து அது தெளிவாகும்.

நிலையில்லா ஒன்றென்று உலகியலைப் புறக்கணித்த பல்லவர் காலத்து அடியார்கள் தங்களைப் பெண்களாகப் பாவனை செய்து கொண்டு இறைவன் மீது காதற்பாட்டுக்கள் பாடினர் என்பர். அத்தோடு இறைவன் மீது ஆன்மாக்கள் கொள்ளும் ஆராக் காதலையே அவர்தம் பாடல்கள் காட்டிநிற்கும் என்றும்கூறுவர். ஆயினும், இறைவன் மீது காதல் கொள்ளும் பாத்திரத்திற்குச் சாதாரண மானிடப் பெண்ணுக்குரிய அங்கங்களும் அணிகளும் ஆசைகளும் வாதனைகளும் விழுமியங்களும் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். அதே போல, இறைவனுக்கும் மானிடத் தலைவர்க்குரிய இயல்புகளும் அங்கங்களும் அமைந்துவிடுவதுண்டு.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தங்களையே ஆன்மாவாகவோ காதற்றலைவியாகவோ பாவனை செய்து கொண்டு மட்டும் பாடவில்லை; நற்றாயாகவும், செவிலித்தாயாகவும், தோழியாகவும் நின்றுகொண்டு, கடவுள் மீது காதல் கொண்ட ஒரு பெண்ணின் ஆசைகளையும், மனோநிலைகளையும் வேதனைகளையும் பாடியிருக்கின்றனர். பொதுவாகத் தொகுத்து நோக்கும்போது, இறைவன் மீது பெண்கள் தங்கள் மனதைப் பறிகொடுத்து ஏங்குவதைக்காட்டுவதாக இப்பாடல்கள் அமைந்திருப்பது புலனாகும். இப்பாடல்களை மேலோட்டமாக நோக்குபவர்கள் அவை சங்க கால அகத்திணைமரபைப் பின்பற்றியவை என்று கூறுவதுண்டு. அவ்வாறு பொதுப்படக் கூறுவது எத்துணைப் பொருத்தமாகும் என்பது எண்ணிப்பார்க்கவேண்டியது.

ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே நிகழும் அகவொழுக்கம் குறித்த பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே சுட்டியொருவர் பெயர் சொல்லப்படுவது மரபுக்கு மாறானதென்று கருதப்பட்டது. அங்கு அகநிகழ்ச்சிகள் முக்கியம் பெற்றனவே யன்றிச் சம்பந்தப்பட்ட பாத்திரங்களைச் சுட்டும் பெருமைகளோ பேச்சோ இல்லை. அவ்விலக்கியங்களிலே தெய்வம், 'மா, மரம், புள் முதலியவற்றோடு கருப்பொருள் அடங்கும். புணர்த்தலின் பின்னரே பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகியவையும் அவற்றின் நிமித்தங்களும் நிகழும்.

இறைவன் தலைமைபெற்ற பல்லவர்காலத்தே எழுந்த இறைக்காதற் பாடல்களில் மேற்கூறப்பட்ட மரபு வரம்புகள் பேணப்பட்டதாகக் கூறமுடியாது. அவற்றிலே இறைவன் பெயர் சுட்டப்படுவதும் அவனது தோற்றப் பொலிவும் பெருமைகளும் விரிக்கப்படுவதும் கண்கூடு; ஒத்த பண்பினரான ஒருவனும் ஒருத்தியும் அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றித் தாமே எதிர்பட்டும் கூடும் கூட்டமில்லை; அகப் பொருளுக்குரிய போக நுகர்ச்சியும் அங்கில்லை.

கடவுளின் புகழைப் பெயர் சுட்டிக் கூறுவதே இப்பாடல்களின் அடிப்படை நோக்கம் என்பது அவற்றைப் படிக்கும்போது தெளிவாகும். கடவுளின் கவர்ச்சியை மிகுத்துக் கூறப் பல்லவர்கால அடியார்கள் பல வழிகளைக் கையாண்டனர் எனக் கொள்ளலாம்.

பெண்களைக் கவருவதும் பெண்களினாற் சூழப்படுவதும் ஒப்பாருமிக்காருமற்ற தலைவனுக்குப் பெருமையென்றும் அழகென்றும் முற்கால முதற் கருதப்பட்டதுண்டு.

''மகளிர் மலைத்த லல்லது மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப'' (புறம் 10)

''வணங்குசிலை பொருதநின் மணங்கம ழகலம்
மகளிர்க் கல்லது மலைப்பறி யலையே'' (பதிற். 63)

''இளையார்க்கு மலர்ந்த மார்பினை'' (சிறுபாண். 232)

முதலிய சங்கப்பாடற் பகுதிகள் வாயிலாக அதனை உணரலாம்.

சோழன் போர்வைக் கோப் பெருநற்கிள்ளியின்பால் நக்கண்ணையார் என்னும் புலவர் காதல் கொண்டோ அல்லது காதல் கொண்டதாகப் பாவனை செய்து கொண்டோ, அவன் பொருட்டுத் தாம் வளையல்களையும் கலையையும் தோற்றதாயும், அவனது தோள்களைத் தழுவத் துடிப்பதாயும் பாடியுள்ள பாடல்கள் அரசபுகழ்பேசும் புறத்திணைப்பாடல்களென்று கருதப்பட்டமையாற் புறத்திலே அடக்கப்பட்டுள்ளன. இராமன், சிவகன் முதலிய காவியத் தலைவர்கள் உலாச் சென்றபோது பெண்கள் அவர்களைக் கண்டுகாதல் வேட்கை கொண்டதாகக் கூறப்படுகின்றது. பல்லவர்காலத்தில் எழுந்த நந்திக்கலம்பகத்திலே நந்தியின்மீது பெண்கள் காதல் கொண்டமையைக் காட்டும் பல பாடல்களிலே நந்தியரசன் புகழ் பலவாறுகத் தெளிக்கப்படுகின்றது. முத்

தொள்ளாயிரத்திலும் அவ்வாறே அரசபுகழ் காட்டப்படுகின்றது. இவ்விலக்கியங்களிலே தலைவி, தாய், தோழி முதலிய பாத்திரங்களின் வாயிலாக நாடகப் பாங்கிலே அமைத்துக் கூறப்படுவது தலைவர்களது பெருமைகளும் சாதனைகளும் தோற்றப்பொலிவுமே.

இதே நெறியினையொட்டி இறைவன் புகழ் அமைத்துக் கூறப்படுவதைக் பல்லவர்காலப் பக்தி இலக்கியங்களிலே காணலாம். சேரமான் பெருமாள் நாயனர் பாடிய திருக்கைலாய ஞான உலாவிற் சிவபெருமான் உலாச் செல்லும்போது, பல்வேறு பருவ மகளிர் அவரைக் கண்டு காதல்கொள்கின்றனர். இவ்வாறு அமைத்துக் காட்டப்படுவது தலைவரின் தன்னேரற்ற பெருமையை மிகுத்துக்கூறுவதற்பொருட்டே. உலாச் செல்லும் தலைவன் மீது காதல் மீதூரப் பெற்று நிற்பது கற்புடைப் பெண்டிர்க்கு ஏற்காதது என அஞ்சிய நச்சினர்க்கினியர் அவ்வாறு காதல் கொள்வது பொது மகளிர் என்று சமாதானம் கூறினர். ஆனற் காதல் கொள்வது பொது மகளிர் என்பதற்கு உலா இலக்கியங்களிலோ இலக்கணங்களிலோ சான்றில்லை; காதலிப்பது ஆன்மாக்கள் என்பதற்கும் சான்றில்லை. பொதுவாக இவ்வுலாவினை நோக்கும் போது சிவபிரானின் பெருமையைக் காட்டுவதற்காக அவர் மீது பெண்கள் வேட்கை கொண்டதாகப் பாடப்பட்டிருப்பது புலனகும்.

உலா இலக்கியத்திலே பெண்கள் கொள்ளும் காதல் ஒரு தலைக்காமம் ஆகையால் அது உலாப்புறம் எனப்பட்டது. தலைவனது புறப்பெருமைகளைக் காட்டுவதே உலா இலக்கியத்தின் அடிப்படை நோக்கம் என்பதையும் மறந்துவிடல் ஏலாது. அகத்துறைகளைப் பயன் படுத்தித் தலைவரின் புற மேன்மைகள் பாடப் பட்டபோது, ஒருதலைக்காமம் ஏற்கப்படுவதையும் அகமும் புறமும் இணைவதையும் அல்லது பழைய அகப் புறப் பாகுபாட்டுவரம்பு சாய்வதையும் காணலாம்.

அகத்துறைகளைப் பயன்படுத்தி அரச புகழ் பாடப்படுவதைப் பாண்டிக் கோவை, முத்தொள்ளாயிரம், நந்திக்கலம்பகம் போன்ற இலக்கியங்களிற் காணலாம். ''கோவையானது அகப்பொருள் இலக்கணத்துக்கு இலக்கியமாக அமைந்த தமிழ் நூல்'' என்று தாம் பதிப்பித்த பாண்டிக்கோவையின் முகவுரையிலே கூறும் வே. துரைசாமி, அவ்வாறு கூறுவதற்கு முன் ''நல்லறிஞர், தம்மை ஆதரித்தோரைச் செய்ர்நன்றி அறிதலால் பாராட்டி தம் உள்ளக் கருத்தை அமைத்து நூல்கள் இயற்றுதல் இயல்பு. அவற்றுள் ஒரு பிரிவு கோவை நூல்'' என்று கூறுகின்ருர். இதிலுள்ள முரண்பாட்டை ஆழ்ந்து நோக்குகினல், அகப்புற இலக்கிய மரபுக் கோட்பாடுகளுக்கிடையில் நிகழ்ந்த மயக்கமே அதற்குரிய காரணம் என்பது புலப்படும்.

ஊன்றி நோக்குமிடத்து, பாண்டிக்கோவை, முத்தொள்ளாயிரம், நந்திக் கலம்பகம் ஆகிய நூல்களில், அக்காலத்தில் வாழ்ந்த அரசர்களின் வீரம், கொடை, நல்லாட்சி முதலிய சிறப்புகளைப் பாராட்டிக் கூறுவதற்கு அகப் பொருள் கருவியாகப் பயன் படுத்தப்பட்டிருப்பதனை அவதானிக்க முடியும்.

வீரயுகத்திலே வீரர்களுடைய பெருமைகள் பாடப்பட்டதுபோல, பக்தியுகத்திலே கடவுளுடைய பெருமைகள் பாடப்பட்டன. தலைவனும் தலைவியும் சமநிலையினராக விளங்கிய காலத்தில் அவர்களுக்கிடையில் நிலவிய உறவு ஐந்திணைக்குள் முறையாக வகுத்துப் பாடப்பட்டது. தலைவியிலும் பார்க்கத் தலைவன் உயர்ந்தவனக மதிக்கப்பட்டபோது, இலக்கியத்திலும் அவன் அந்தஸ்து உயர்ந்தது.

திருவுடை மன்னரும் திருமாலும் சிவனும் ஒப்பாகப் போற்றப்பட்ட காலத்திலே முறை செய்து காப்பாற்றும் இறையொத்த மன்னருக்குக் கூறப்பட்ட தன்னிகரற்ற தகைமைகளும் சாதனைகளும் பொலிவும் திருமாலுக்கும் சிவனுக்கும் அமைத்துக் கூறப்பட்டன. அந்தஸ்தில் உயர்ந்த அரச தலைவர்பாற் பெண்கள் காதல்கொண்டதாகப் பாடியவர்கள் பெண்ணின் நிலையோ பிரச்சினையோ பற்றி அச்சந்தர்ப்பத்திலே அங்கலாய்க்கவில்லை. கடவுள் முக்கியத்துவம் மிகுந்த காலத்திற் கடவுள்பாற் பெண் காதல் கொள்வதாகப் பாட முற்பட்டவர்களுக்குப் பெண்ணின் பெருநாண் விடாப் பெருமை பற்றிய கவலை மிகுந்திருந்தால் அவர்கள் கடவுளைப் பெண்ணகப் பாவனை செய்யவும் நினைந்திருக்கக் கூடுமன்றே?

ஆனல், நிலமானியப் பகைப்புலத்தில் ஆண்டான் அடிமை வாழ்வு, ஆணுக் கடங்கிய பெண் பற்றிய எண்ணங்களில் ஊறியவர்கள் கடவுளை ஆண்டானகப் பாவனை செய்து பாடியமை வியப்புத்தருவதன்று.

தாழ்ந்த நிலையில் நின்று கடவுள் பால் வேட்கை கொண்ட பெண்கள், தம் உணர்வுகளை நேரே வெளியிடாத பெரு நாணபடைத்த சங்க இலக்கிய மகளிரைப் போலன்றி, நாணத்தை மறந்து கட்டுப்பாடுகளைக் கைவிட்டுத் தமது ஆசையையும் ஆற்றுமையையும் அவலத்தையும் வாய்விட்டுக் கூறினர். மடல் ஏறப் போவதாகப் பயமுறுத்துதல் பண்டைத் தமிழ் மரபுப்படி பெண்களுக்குச் சாலாது. எனினும், கடவுள்பாற்

காதல் கொண்ட தலைவி மடலேறப் போவதாகப் பயமுறுத்துவதைத் திருமங்கையாழ்வார் பாடிய சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகியவற்றிலும் நம்மாழ்வார் திருவாய் மொழியிலும் காணலாம். கடவுள் மேற் பெண்கள் காதல் மிகுதியைக் காட்டும் இவ்விலக்கியங்களை மரபுக்கு புறம்பானவை என ஒதுக்கவிரும்பாதவர்கள்— அதே நேரத்தில் இலக்கியத்தின் அடிப்படை நோக்கையும் பண்பையும் செவ்வனே உணராது இலக்கிய விதிகளும் விதிவிலக்குகளும் வரைய முற்பட்டவர்கள்— கடவுளர் தலைவராய் வருமிடத்துப் பெண்டிர் மடலேறலாம் என்று பின்னர் விதிவிலக்கமைத்தனர். ஓர் அரசன்பாற் காதல் மிகுந்த பெண் மடலேறப் போவதாகப் பேசும் ஒரு செய்யுள் நந்திக் கலம்பகத்தில் இருக்குமாயிற் பேரரசன் தலைவனாய் வருமிடத்தும் பெண் மடலேறலாமென்று பிற்கால இலக்கண ஆசிரியர் கூறியிருத்தல் கூடும்.

கடவுளைத் தலைவனாகப் பாவனை செய்து கொண்டு அவன் மீது பெண்கள் காதல் கொண்டதாகப் பாடிய புலவர்கள், சங்ககாலம் முதற்கொண்டு தமிழிலக்கியங்களிலே வீரர்க்கும் அரசர்க்கும் கூறப்படுவன போன்ற சிறப்புக்களையும், சாதனைகளையும், சேர்ந்தவர்களுக்கு நன்மைகளும் சேராதோருக்குத் தீமைகளும் விளைக்கும் தன்மைகளையும் கடவுளுக்கும் அமைத்துக் கூறியிருக்கின்றனர். தம் எதிர்ப்புச் சக்திகளைத் திருமால் அடக்குவது சம்பந்தமான கதைகளும் அவரது ஏறு தழுவியமை போன்ற வீரச் செயல்களும் நாலாயிரத் திவ்வியப் பிரந்தத்துட் பலவிடத்தும் அமைந்து இக்கூற்றினை உறுதிப்படுத்தும்.

எவ்வாறாயினும், இஷ்ட தேவதைக்குத் தம்மை ஆட்படுத்தி அத்தெய்வத்தைச் சிக்கெனப் பிடிக்கும் பக்தியுணர்வை ஏற்படுத்தவும் புலப்படுத்தவும் நாயகன் நாயகி பாவம் மிக ஏற்புடைத்தொன்றாக அமைந்தது. அடியார்கள் தம்மையோ ஆன்மாவையோ' பெண்ணாகப் பாவனை செய்தார்கள் என்ற கூறுவது போலக் கடவுளையும் ஆண்டகையாகப் பாவனை செய்தார்கள் என்று கூறுவதும் சாலும்.

உடற் காதற் புகைப்புலத்தில் ஆத்மீகக் காதலை அமைத்துக் காட்டும் வழக்குக் கிரேக்க நாட்டில் கிறிஸ்துவுக்கு முன் ஐர்தாம் நூற்றாண்டிலேயே பிளேட்டோவினாற் **(Plato's Symposium)** கைக்கொள்ளப்பட்டது. அங்கு ஒரே பாலினர் காதற்பாவனையாக அது அமைந்தது. மகோன்னதமான அறிவானுபவமென்பது திவ்விய சக்தியுடன் கலப்பதே என்று அரிஸ்டோட்டல் கருதுகிறார். கிரேக்கத்தில் மானிடக் காதலைக் குறித்த 'எரொஸ்' (Eros) என்ற சொல் காலகதியிலே உடல் வேட்கையைக் குறிப்பதோடு நில்லாது அறிவு வேட்கையையும் ஆத்மீக வேட்கையையும் குறிப்பதாயிற்று. அரிஸ்டோட்டலின் கருத்துப்படி ஆட்பட்டு நிற்பதென்பது பிரபஞ்சத்தின் இயற்கை விதி.

ஆண்டானுக்கு அடிமை போலக் கணவனுக்கு மனைவியும் ஆத்மாவிற்கு உடம்பும் மனத்துக்குப் பொருளும் கடவுளுக்குப் பிரபஞ்சமும் என்று நிலமானிய சமூகத்தில் வாழ்ந்த 'தொல் பழமையின் மாபெரும் சிந்தனையாளரான' அரிஸ்டோட்டல் கருதினார். மானிட வாழ்வியலில் மிகுந்த பலம்வாய்ந்ததான பாலுணர்வை அடிப்படையாகக் கொண்ட நாயகன் நாயகி பாவச் செய்யுள்களை ஆங்கிலக் கவிஞர் பலரும் ஆக்கியுள்ளனர். ஆங்கிலத்தில் அது **Bridal Love** என வழங்கப்படும். **(Margaret Willy (Ed,) The Metaphysical Poets).** ஆயினும் பக்தியியக்கம் தோன்றுவதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அக உணர்வுகளைத் துல்லியமாக வெளியிடத் தொடங்கிவிட்ட தமிழ்மொழியிலே தோன்றிய அளவிலும் நயத்திலும் நாயகன் நாயகிபாவச் செய்யுள்கள் வேறெந்த மொழியிலும் தோன்றியுள்ளதோவென்பது சந்தேகம்.

கடவுளுக்குத் தம்மை முற்றாக ஆட்படுத்திக் கொண்ட தமிழ் நாட்டு அடியார்களும் அவனோடு இரண்டறக் கலத்தலைப் பெரும் பேறாகக் கருதினர். கடவுளுடைய அன்பைப் பெறுவதற்குப் பக்தி மார்க்கமே சிறந்ததெனக் கொண்டனர். கடவுளை அறிவினாலோ புலன்களினாலோ அறிய முடியாதென்றும் பக்தியினாலேயே அவனை அகப்படுத்த முடியுமென்றும் நம்பினர். தீரா வேட்கையுடனும், உறுதியுடன் பக்தி சிரத்தையுடனும் இடைவிடாது தன்னைத் தியானிக்க வேண்டுமென்றும், சகல வினைகளின் பலாபலன்களையும் தன் பொறுப்பில் விட்டுவிடவேண்டுமென்றும் பகவத் கீதையும், ''தன்னை எனக்கு அர்ப்பணித்துக்கொண்டவன் என்னைத் தவிர வேறெதையும் விரும்பான்; அப்படியானவன் பிரம்மாவின் அல்லது இந்திரனின் உயர்பீடத்துக்கோ பிறவி நீக்கத்துக்கோ ஆசைப்பட மாட்டான்'' என்று பாகவதமும் கூறுவது இங்கு மனங்கொள்ளத் தக்கவை. இத்தகைய பக்தி நிலையினை ஏற்படுத்தவும் புலப்படுத்தவும் முனைந்து நிற்போர் பெண்களின் அந்தஸ்து, அன்பின் ஐந்திணைமரபு, பெருநாண் முதிலியன பற்றிக் கவலைப்படுபவர் என்று எதிர்பார்க்கலாமா?

எதையும் பொருட்படுத்தாது இறைவனையே கதியெனக் கொண்டு அவனுக்கு முழுக்க முழுக்கத் தம்மைச் சரணாக்கிக் கொள்ளும் அடியார்களின் பக்தி நிலையைப் புலப்படுத்துவதற்கும் நாயகன் நாயகி பாவ உத்தி மிக வாய்ப்பாக அமைந்தது. சைவ நாயன்மார் பாடல்கலே நாயகன் நாயகி முறை கையாளப்

பட்டிருப்பினும், அது அருகியும் கட்டுப்பட்டுமே காணப்படுகிறது. பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவனுக்கு அழித்தற்றொழிலே கூறப்படுவதாலும் அவனை மானிடப் படிக்குக் கொண்டு வராமல் அடியார்கள் அவனிடம் பயத்துடனும் சிரத்தையுடனும் பக்தி செலுத்தியதாலும் நாயகன் நாயகி பாவத்தில் அவனைக் குறித்துப் பாடப்பட்ட பாடல்கள் மிகக் குறைவு. ஆயர்குலக் கொழுந்தான கண்ணனது அவதாரங்களையும் லீலாவிநோதங்களையும் பற்றிய கதைகள் பலவாக இருப்பதாலும் அளித்தல் அவன் தொழிலாகலானும் சாதாரண மக்களைக் கவரும் திறனுடன் பல்வேறு பாவ நிலைகளில் ஆழ்வார்கள் அவனைப் பாட வாய்ப்புண்டாகியிருக்கிறது. அவனது ஆயர்பாடி வாழ்வும் பாலிய லீலைகளும் மானிடரோடு கூடி உறவாடிய இன்பதுன்ப அனுபவங்களும் துஷ்டநிக்கிரக சாதனைகளும் ஆழ்வார்தம் பாடல்களுக்கு மூலவளமாக அமைந்தன. கண்ணனைச் சுற்றி இயற்றப்பட்ட பல கதைகளில் மானிட அபிலாஷைகள், உள்ளுணர்வுகள், மனோவிகற்பங்கள் முதலியவற்றின் ரேகைகளும் காணப்படக்கூடும். சாதாரண மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டியிழுக்க வல்ல, நாடக பாணியில் அமைந்த, நாட்டுப்புறக் கவர்ச்சி மிகுந்த நாயகன் நாயகி பாவப் பக்திப் பாடல்கள் சக்தி மிகுந்தவையாகக் காணப்பட்டமையினால் அப்பாடல் முறையினைப் பின்பற்றி வங்காள மொழியிலும் இந்தியிலும் பல பாடல்கள் இயற்றப் பட்டன.

பக்தனின் அல்லது ஆன்மாவின் சரணாகதி நிலையையும் வேட்கையளவையும் இறைவனின் திருவருட் பெருமையையும், இறைவனோடு பக்தனுக்கு அல்லது ஆன்மாவிற்கு உள்ள பரஸ்பர ஈடுபாட்டையும் காட்டுவதற்கு மிக வாய்ப்பாக அமைந்த இந் நாயகன் நாயகி பாவப் பாடல்களின் வளர்ச்சிக்கு இஸ்லாமிய சூபி நெறித் **(Sufi)** தொடர்புகளும் ஓரளவு உதவியிருக்கலாம்.

பக்தனுடைய அல்லது ஆன்மாவினுடைய இறைக்காதலைச் செவ்வையாக வெளியிடும் வகையிலே நாயகன் நாயகி பாவத்தைக் கையாள்வதென்பது எளிமையான காரியமல்ல. இந்தத் துறையிலே பாடுபவர்களுக்கு அறிந்த அனுபவமாகவும் அடிப்படையாகவும் அமைவது உலகியற் காதலேயாகலின் பாடுபவர்கள் தம்மையோ தம் ஆன்மாவையோ கடவுட்படிக்கு உயர்த்தாது கடவுளை மானிடப் படிக்குத் தாழ்த்தும் ஆபத்தும் உண்டு. கடவுள் மீது வேட்கை கொண்டு அவருக்கு உள்ளத்திலே கோயில் அமைக்கும் அல்லது அவரது அருட்திறனையும் தோற்றப் பொலிவினையும் பெருமைகளையும் வியக்கும் தொனி தாழ்ந்து மானிடப் பெண்ணொருத்தியின் விரகதாப உணர்ச்சி வெளியீடு மேலோங்கி விடக் கூடும். எனவேதான் வ. வே. சு. ஐயர் பாரதியின் கண்ணன் பாட்டுக்கு எழுதிய முன்னுரையில் நாயகன் நாயகி பாவத்தைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்:

"இந்த பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப்பக்கத்தின் மீது நடப்பதைப் போன்ற கஷ்டமான காரியம். ஒரு வரம்பு இருக்கிறது: அதற்கு இப்புறம் அப்புறம் போய்விட்டால் அசந்தர்ப்பமாயிருக்கும். ஸ்ரீ பாகவத்திலுங் கூட கோபிகா உபாக்கியானங்களில் சுகபகவான் இவ்வரம்பை அங்கங்கே கடந்துவிட்டிருக்கின்றாரென்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம்".

சிவன் மீது காணாமலே காதல் கொண்டு அவன் திருத்தாளின் தலைப்பட்ட தலைவியின் செயலை அப்பர் சுவாமிகள்,

முன்னம் அவனுடைய நாமங்கேட்டள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

என்று அழகோடும் அளவோடும் பாடுகின்றார்.

திருமால் மீதுகொண்ட காதற் பெருக்கால் அவன் இயல்புகளையும் செயல்களையும் தனதாகக் கொண்டு பேசும் ஒரு பெண்ணின் நிலையினைத் தாயின் கூற்றாகத் தத்துவ ஆழத்துடனும் தனிச்சிறப்புடனும் பாடுகின்றார் நம்மாழ்வார்:

கற்கும் கல்விக் கெல்லை யிலனே யென்னும்
    கற்கும் கல்வி யாவேனும் யானே யென்னும்
கற்கும் கல்வி செய்வேனும் யானே யென்னும்
    கற்கும் கல்வி தீர்ப்பேனும் யானே யென்னும்
கற்கும் கல்வி சாரமும் யானே யென்னும்
    கற்கும் கல்வி நாதன்வந் தேறக் கொலோ
கற்கும் கல்வியீர்க் கிவையென் சொல்லுவேன்
    கற்கும் கல்வி யென்மகள் காண்கின்றவே.

திருமாலிடம் நெஞ்சம் பறி கொடுத்த ஒருத்தி கிளிகளையும் பூவைகளையும் குயில்களையும் மயில்களையும் பார்த்துப் பேசும் கிளவிகளிலே, முற்றாகப் பாசங்களை விட்ட பின்னரே ஆன்மா இறைவனையடையும் தகுதி பெறுமென்ற கருத்து அழகுற அமைக்கப்பட்டிருத்தலை நம்மாழ்வாரின் மேல்வரும் பாடலிற் காணலாம்.

இடையில்லை யான்வளர்த்த கிளிகாள் பூவைகாள் குயில்காள் மயில்காள்
உடையநம் மாமையும் சங்கும் நெஞ்சு மொன்று மொழிய வொட்டாது கொண்டான்
அடையும் வைகுந்தமும் பாற்கடலு மஞ்சனவெற்பு மவை நணிய
கடையறப் பாசங்கள்விட்ட பின்னையன்றி யவனவை காண்கொடானே.

திருமாலின் பிரிவாற்றாது, அவரது திருவடிகளைச் சேரும் தகுதி தனக்கில்லையோவென்று அவனிடம் கேட்குமாறு தான் வளர்ந்த கிளியிடம் மன்றாடும் தன்னடக்கம் மிக்க தலைவியையும் நம்மாழ்வாரின் மேல்வரும்பாடலிற் பார்க்கலாம்.

என்பிழை கோப்பது போலப் பனிவாடை யீர்க்கின்ற
என்பிழையே நினைந்தருளி யருளாத திருமாலார்க்கு
என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென் றொருவாய்ச்சொல்
என்பிழைக்கு மிளங்கிளியே யான்வளர்த்த நீயலையே.

சூரிய கத்தியின் மேல் அசந்தர்ப்பமேற்படாதவாறு லாவகமாக நடக்கும் அழகு மேலே எடுத்துக் காட்டப்பட்ட பாடல்களிலே சிறப்பாகப் பொருந்தியிருப்பதை அவற்றை ஆழ்ந்து நோக்கும் போது அவதானிக்கலாம். ஆனால், ஒரு சில சந்தர்ப்பங்களில் அடியார்கள் வரம்பை மீறி மானிட விரகதாபங்களை மிகைபட அழுத்திக் கூறுவதாகவே தோன்றுகிறது.

# Chola Inscriptions From Mantai

– Dr. S. PATHMANATHAN –

Many stone inscriptions of the Cholas have been brought to light from various localities in the Island. Inscriptions engraved in the reigns of Rajaraja (985–1016), Rajendra I (1014–1044), Rajendra II (1051–1063) and Adhirajendra (1067–1070) have been found in Sri Lanka. However a large number of these inscriptions belong to the reign of Rajendra I.

Most of the Chola inscriptions are from Mantai, Polonnaruwa,[1] Padaviya[2] and Periyakulam[3] in the Trincomalee district. Inscriptions brought to light in recent times from Jaffna[4], Kayts,[5] Medirigiriya[6], Kantalay[7], Nilaveli,[8] Manankeni[9], and Trincomalee[10] provide valuable information on aspects of Chola rule which have remaained obscure until recently.

Inscriptions form the most important body of materials among the archaeological sources for the history of the Chola rule in Sri Lanka. The evidence from architectural and iconographic remains and coins is supplementary and sometimes corroborative.[11]. There is hardly any information on political, social and religious conditions in the island in contemporary Tamilliterature except for a few isolated vague references to the Chola conquest. Among the local Tamil chronicles which are of a later date only **Konecar Kalveddu** records some traditions about Chola activities in a part of the island.[12] The Pali chronicle **Culawamsa**, which is the main literary source for the history of this period, gives a brief account of the wars waged by the Cholas against the successive rulers of Rohana[13]. It gives some idea about the main stages of Chola expansion in the island: But does not throw any valuable light on administration and social life in the territories that were under Chola rule.

The Chola inscriptions form a considerable proportion of the Tamil inscriptions in the island but their number is small in comparision with those set up in any area of comparable extent in the Tamil country of India during the same period. Moreover, these inscriptions are in a bad state of preservation some of them found only in fragments. Therefore, the value of these inscriptions as sources of historical information, has been considerably reduced and any study of the history of the Chola rule in Sri Lanka cannot approach in fullnes that of any Chola province in India. From epigraphic evidence, only an oultine of the histry of Chola rule could be reconstructed and even in it there are bound to be important gaps which could be filled only in the light of future archaeological discoveries.

The Chola inscriptions mostly record the donations made by persons mostly belonging to the official, military and mercantile classes to Hindu temples and to the Rajarajapperumpalli, an ancient Buddhist institution renovated and renamed under Chola rule. The details about the donors, their gifts and the institutions which were the recipients of these gifts give some idea of Chola administration, social life and religious conditions. The inscriptions have preserved to posterity the names of many religious monuments. They also record some details about the social and cultural activities of temples. These inscriptions moreover, provide useful topographical information.

**The inscriptions from Mantai.**

Three Chola inscriptions were discovered at Tirukketisvaram in Mantai several decades ago. Subsequently they were taken to the Colombo Museum where they are still to be found among the exhibits at the Stone

Gallery. The estampages of these inscriptions were taken to India for decipherment and H. Krishna Sastri's readings of the texts of these inscriptions were published in South Indian Inscriptions.[14]

The first of these, which refers to the construction of Rajarajeswaram at Matottam by Tali Kumaran, a Chola official is inscribed on all the four sides of a pillar which is 4'5'' x 8'' in dimensions[15]. Some lines of writing at the beginning and end of each side of the pillar were found to have been completely obliterrated. In its present state of preservation the epigraph has ninety-eight lines of writing. The inscription neither mentions the name of the reigning king nor records any chronological or astronomical details. Yet, it could be assigned to the early eleventh century on palaeographical considerations and the basis of its contents. It is of prime historical importance as it supplies valuable information on political, social and religious conditions in Matottam which was an area of vital importance. Most of the details recorded in this inscription are not to be found in any other source.

The second and third inscriptions, issued in the reign of Rajendra I have been indited on two sides of a slab, and contain respectively twenty-six and twenty-eight lines of writing. The second one is a fragment containing a portion of Rajēndra's **prasesti.** As the main portion of the inscription is lost the purpose of the record is not known. Presumably, it was meant to record some gifts made to a shrine. The third inscription records the grant made to the temple of Tiruviramisvaram by an official of Rajendra. Besides, it mentions some communities of Tamil traders who were settled in the neighbourhood of the temple.

The fourth inscription is a recent discovery presently found at Fort Hammenhiel off Kayts.[16] There is reason to believe that it was originally at Matottam.[17] It records the activities of a Chola general at Mattotam. It could be inferred that it was brought to its present site from Matottam along with building materials for the construction of the Dutch fort at Hammenhiel during the period of European colonial rule. As there is strong reason to believe that it was originally at Matottam this incsription may be reckoned as one of the Chola antiquities from (or relating to ) Mantai. This inscription is of considerablle historical importance as it provides further corroboration for the claim made in Rajendra's **prasasti** that his generals captured Mahinda V and his queen and their valuables and mentions the name of the general who accomplished this task.

**Language and Orthography.**

The Chola inscriptions were neatly engraved with a certain amount of professional skill and care by artisans who were sufficiently educated. In most cases the lines of writing were separated by intervening straight lines chiselled out neatly and sometimes deeply. The inscriptions under consideration, like most of the other contemporary Chola records, have been engraved in an admixture of Grantha and Tamil characters. Grantha charactershave been used for recording Sanskrit wordsand letters, the phonetic value of which cannot be represented with Tamil letters. The main body of the texts which is Tamil has been written in Tamil letters characteristic of the eleventh century.

In orthography and grammar the language of these inscriptions conforms to that of the contemporary Chola inscriptions in South India. As in all other contemporary Tamil inscriptions **viraama** or **pulli** signs were not used and a consonant had to be identified from the context in which it was found. In several instances, as in the case of the **tiirtam**, **viitu**, **niinkal** (I) and Iramiisvaram (III) the medial vowle short i has been written for the medial vowal long i.[18] In words like **onru** (I,III) and **kolvaan** (I) the dental **n** has been written for the alveolar **n.** The name of the month Vaikaaci (May-June) has been written for as Vaiyaaci (I). The form kulutta has been written for Kodutta (III) as in many medieval South Indian inscriptions. The expressions **pidittukkondu poona** and **tandanaayakanaar** have been written as **pidiccukkodu poona** and **tandanaacakanaar.** The change of t and y occuring in the middle of certain words into c was not unusual in medieval Tamil inscriptions.

**The Chola Conquest**.

The Chola inscriptions from Mantai which do not refer to the early stages of the Chola conquest of the land in the reign of Rajaraja, however, provide valuable information on the next important stage of Chola expansion which corresponded with the early years of Rajendra's reign. The text of the **prasasti** of Rajendra found on the stone slab in the Colombo Museum claims that he captured the crown of the kings of Ceylon, the exceedingly beautiful crowns of their queens, the fine crown and the garland of Indra which the Pandya had previously deposited with them (the kings of Ceylon) and the whole of Ceylon surrounded by the roaring sea.[19]

Some of Rajendra's inscriptions in South India give additional information on the conquest of Ceylon. The Karandai plates, for instance, say that Rajendra conquered the king of Ceylon with a fierce army and seized his territory, his crown, his daughter and all his wealth, his transports and the spotless garland of Indra and the Crown of Pandya left in his charge; after having lost the battle, and being shorn of his queen, son and other belongings, the king of Ceylon, out of fear, came and sought the two feet of Rajendra as shelter.[20] As the conquest of Ceylon is referred to in the inscriptions of Rajendra from his fifth year onwards, it may be inferred that his war against the king of Ceylon was undertaken during the fifth year of his reign (1017/18). According to the Chola inscriptions the main achievements of Rajendra after this war were the capture of the ruler of Ceylon and his trasures, the seizure of the Pandya regalia and conquest of the whole of Ceylon.

The account of the capture of Ceylon as found in Chola inscriptions is subsequently corroborated by the **Culavamsa** which records Sinhalese traditional history.[21]

The fragmentary inscription from Hammenhiel confirms the claim made in the **Culawamsa** that the king of Ceylon was captured and taken out of the island. Besides, it provides the information, which is not to be found elsewhere that the ruler of Ceylon was taken captive by a Chola general called **Jayankonda Chola muventa velar.** As this inscription which records some transaction of this general at Matottam refers to him as one who had captured and taken away the king of Ceylon it is clear that Mahinda had already been captured and taken out of the island when the inscription was engraved. It may be assumed that Jayankonda Chola muventa velar returned to the Chola country with the spoils of war after the successful conclusion of the campaigns in Sri Lanka and subsequently came to the island once again.

The **Culawamsa** which corroborates the claims made in Rajendra's **prasasti** about the king of Ceylon is, however, silent about the seizure ofthePandya regalia deposited at the Sinhalese court of Anuradhapura about a century earlier by the Pandya monarch, Rajasimha, who had come to seek aid fromthe Sinhalese king Udaya after his kingdom was occupied by the Chola armies under Parataka I. As he wished to be invested with the regalia of the Pandya monarchy and to be consecrated at Madurai Parantaka sent his emissaries to fetch them from the king of Anuradhapura.[22] When Udaya IV refused to part with them Parantaka sought and failed to seize them forcibly.[23] The seizure of this coveted object by the general of Rajendra seems to have given the Chola court a sense of achievement. The importance attached to the Pandya regalia by the Cholas may suggest that its possession was considered for exercising effective authority and sovereignty over the Pandya kingdom. That a son of Rajendra was consecrated at Madurai as Chola Pandya and invested with the title and paraphernalia ofthe Pandya monarchy only after the seizure of the Pandya diadem in Sri Lanka may, perhaps, suggest that any prince who wished to be consecrated as the ruler of the Pandya kingdom had to secure possession of the Pandya regalia.[24]

The **prasasti** of Rajendra claims that he conquered the whole of Ceylon whereas that of his father and predecessor, Rajaraja, claimed that Rajaraja had conquered Ceylon. Not only the whole island but even a part of it could be referred to as Ceylon. Rajaraja's claim as regards Ceylon has to be understood as one that refers to the conquest of a part of Ceylon, Rajarata. The expression **Ilam muluvatum**, 'the whole of Ceylon as found in Rajendra's **prasasti** seems to have been employed with a view to distinguish his conquest from that of his father. Rajaraja conquered Rajarata and governed it as a province of his empire . But he could not

conquer the rest of the island which continued to be under the rule of Mahinda V. In Rajendra's reign the Chola armies penetrated into Rohana, captured Mahinda and put an end to his reign. Thereafter the Chola court seems to have been of the view that in Sri Lanka, Rajendra completed the work of conquest begun by his father. The capture of Mahinda, who had continued to rule over Rohana for over two decades since the Chola conquest of Rajarata around 993 seems to have provided the justification for Rajendra's claim that he conquered the whole of Ceylon.

Rajendra's claim about the conquest of the whole island is contradicted by the **Culawamsa.** This chronicle claims that the Cholas held sway over Rajarata as far as Rakkhapasana kanttha.[25] Chola power in the island, however, was not confined to Rajarata only because in another context the same chronicle makes mention of several Chola military outposts in Dakkhinadesa and at Sakamam (Chagama) in the eastern littoral. Under Rajendra there was an expansion of Chola power in the island. In addition to Rajarata a major part of Dakkhinadesa and the eastern coastal strip of Rohana were brought under Chola rule.. Yet, Rajendra's claim that he conquered the whole island cannot be accepted on its face value. Although his armies attained for a time a position of unchallenged supremacy over the whole island they could not bring Rohana under effective Chola control. No archaeological remains which could be associated with Chola rule have hitherto been found in Rohana. The accounts of Rohana in traditional history presuppose that it was independent of Chola control and was under successive local rulers during most of this period.[26]

**Temples :** Rajarajeswaram and Tiruviramisvaram, two of the many Hindu temples constructed in the island by the Cholas, are known only from the Chola inscriptions presently found in the Colombo Museum. The architectural remains of these temples are yet to be discovered.[27] Presumably they stood at Tirukketisvaram where the Chola inscriptions which refer to them were discovered.

Rajarajeswaram, like many others Chola religious monuments, was named after the great Chola king Rajaraja. The monument is said to have been constructed at Matottam. It has been suggested, with some degree of plausibility, that the ancient Saivite shrine of Tirukketisvaram was restored and renamed Rajarajeswaram by the Cholas.[28] The temple was constructed by the dignitary named Talikumaran who had come from Cirukurranallur in Velar nadu which belonged to Kshatriya Sikhamani Valanadu in Chola mandalam.[29]

Talikumaran made provision for the maintenance of the temple which he had caused to be constructed. The endowments consisting of land and revenues of government were made by him to the temple for the purpose of conducting religious services and rituals daily and festivals and the water - cutting ceremony during the seven days of Viskham in the month of Vaikaci (May-June) annually.

The land granted in the form of a tax-free devadana was situated to the east of the great road named after Rajaraja and to the south of the blacksmiths' quarters. The portion of the inscription containing the description of the southern and eastern boundaries of the land has been lost. The grant included all lands within four stipulated boundaries with the exception of the house, mansion and the garden of Kunran Kaman, a local citizen.

The revenues given over to the temple included the tax on all the looms at the rate of a quarter of an **akkam** on each loom per month, tolls on all pathways and ferries leading to Arunmolitteva valanadu and the taxes on all commercial transactions at the rate of a **vaddam** on each **kasu** from the buyers and sellers of commodities. The monetary income thus acquired by the temple must have been substantial as Matottam being the principal emporium of the island's trade was the centre of a flourishing commerce. A portion of this income was to be used presumbly for the maintenance of a **matam** a charitable inn providing food and lodging for pilgrims.[30].

Rajarajeswaram is perhaps the only temple in Sri Lanka which is known to have been maintained with government revenues. That Rajarajeswaram enjoyed the support and patronage of the Chola government is

evident from the transfer of government revenues to the temple. It was, perhaps a replica in modest proportions, of the Great Temple which Rajaraja had constructed in Tanjore, the Chola capital.

The temple called Tiruviramisvaram is referred to in a Chola inscription of the reign of Rajendra from Mantai. It must have been a Saivite temple as all shrines referred to as isvaram were associated with Saivism. The name Tiruviramisvaram recalls of Ramesvaram, the famous Hindu temple on the side of the Palk strait A certain Tevan who was in the service of Rajendra had made a gift of four gold coins for burning lamps daily at the shrine. Two of the coins were deposited with the **Cankarapadiyar** living in Matottam. The third and the fourth coins were deposited with the Valakkay vaniyar and the Verillai Vaniyar respectively.

**Matottam — Rajarajapuram**

The Chola inscriptions from Mantai provide valuable information on some aspects of Chola administration in the island. They show that a part of the island was administered as an integral part of the Chola empire by officials sent out from South India. One of the incriptions informs that the province of Ceylon was named Mummudiccolamandalam after one of the numerous epithets of Rajaraja.[31] As any Chola province in India the province of Ceylon was divided into units called valanadu which were named after the names, epthets or titles of the Chola rulers.[32] One such unit was Arumolitteva Valanadu which comprised the town of Matottam and the localities adjacent to it. Each Valanadu in South India was divided into smaller units called Nadu. In Arunmolitteva Valanadu the most important unit was the town of Matottam which, under the Cholas had acquired the new name of Rajarajapuram.

Matottam was one of the most important Chola strongholds in Sri Lanka; the others being Polonnaruwa, Padaviya and Trincomalee. Among the ports of Sri Lanka it was the largest and the closest to South India. It served as the landing place for most of the Chola armies that came to the Island. It was the centre of a flourishing commerce and it was of vital importance in the Indo-Ceylon trade. Besides, the control of Matottam was essential for the Cholas to maintain the links between the court of Tanjore and the Chola officials in the island. The provenance of numerous Chola coins at Mantai and the evidence from the Chola inscriptions there reveal that Matottam was a vital centre of Chola power in the island.

The Chola inscriptions give limited information on economic and social life in the town of Rajarajapuram. The Rajarajapperunteru, 'The Great Street of Rajaraja' was presumably a large road by contemporary standards and was perhaps the main thoroughfare in the town. There were settlements of blacksmiths and weavers in Arumolitteva Valanadu. Cankarapadiyar, Valakkay Vaniyar and Verrilai Vaniyar referred to in one of the inscriptions were three small groups of Tamil traders whose range of activity was confined to a limited area. Their settlements may have sprung up during the period of Chola rule in the island. The fact that the monetary endowments for the 'perpetual' burning of lamps were placed under their charge implies that these trading groups had permanent settlements at Rajarajapuram and presumably, in the neighbourhood of Rajarajeswaram.

Valakkay Vaniyar and Verillai Vaniyar were dealers in bananas and betel leaves respectively. They may have been settled in the neighbourhood of the temple for supplying certain commodities required for daily use in the temple. The **Cankarapadiyar** were dealers in oil and it is possible that they were settled in the neighbourhood of Rajarajeswaram, as at several temple sites in the Tamil country, by the Chola officials for the purpose supplying oil required for the temple.[33] One of the inscriptions mentions an individual named Kunran Kaman who had a house, a mansion and a garden. Kunran Kaman's rights over his property were confirmed by the land-grant made to Rajarajeswaram. He was a wealthy and perhaps influential resident of the town.

**Administration : Officials and Revenue**

The inscriptions under consideration mention three individuals, Tali Kumaran, ...... tevan and Muventa Velar, who held positions of high rank in the Chola administration in Ceylon. All of them had come to the

island from the Tamil country. The evidence from the Chola inscriptions from Mantai and other localities in the island presuppose that the Chola administration in the island was dominated by an alien bureaucracy. In the Chola administration the aristocracy of landholders formed the core of the bureaucracy and remuneration for royal service was generally in the form of land assignments.[34]

Tali Kumaran who had caused the temple of RajaRajeswaram to be constructed is described as a kilavan, 'chief' of Cirukurra nallur in Velar Nadu in the Chola country. But the precise nature of his functions in the island has not been described in the record concerning Rajarajesvaram. Besides, the rank he held in the administration of Ceylon is not mentioned in the inscription. The contents of the record show that he exercised effective authority over the unit of Arumalitteva valanadu but we have no means of determining whether his authority was confined to that unit only. As he had the power to assign government revenues to the temple—a right which was generally held to be royal prerogative—it may be assumed that Tali Kumaran was one of the leading Chola officials in the island. On the strength of the evidence from our inscription it may be assumed that the Chola king had to delegate some of his prerogatives to some of the principal Chola dignitaries in the outlying province of the empire.

Tevan who made an endowment to the temple of Tiruviramisvaram is described as the **Utaiyan** of Cirukulattur and as a **panimakan** of the Peruntanam of Rajendra. He was originally the headman or chieftain of Cirukulattur in the Tamil Country. Besides, it may be assumed that he had performed military functions as he is said to have belonged to the peruntanam, a military group in the service of Rajendra I.[35]

Jayankonta Chola muventa Velar, mentioned in the inscription from Fort Hammenhiel had the designation Adhikara Dandanayakanar. Dandanayakanar obviously denoted the rank of a general and the qualifying expression Adhikara implies that Jayankonta Chola muventa velar held an honoured and influential position among the Chola generals of his time. His personal name is not mentioned. The title Jayankonta Chola Muventa Velar is a compound of the expressions Jayankonta Chola and Muventavelar. Jayankonta Chola was an epithet of Rajaraja and Muventa velar was an epithet which belong to some of the leading Chola Samantas. The conferment of titles or epithets which recalled the feats and virtues of the king on officials who served him loyally and with distinction became an established practice in the Chola administration. Jayankonta Chola muventa velar who led the Chola expedition which resulted in the capture of Mahinda V in Rohana, may have earned his prestigious title in the reign of Rajaraja.

The inscription about Rajarajesvaram gives some idea of the government's revenues from Arumolitteva valanadu. The endowments made to the temple included the taxes on looms, the tax on business transactions and that on the tolls on pathways and ferries leading to this territorial unit. The tax on the looms was at the rate of 1/8 of an akkam on each loom per month. The commission on all sales and purchases was at the rate of a vattam per each kasu. It must not, however, be assumed that the ones mentioned in the inscription were the only items of revenue from Arumolitteva valanadu. The inscription mentions of only a few of the items of revenue which were assigned to the temple. The introduction of the measuring rods used in South India for purposes of land measurements in the island by the Chola authorities is suggested by the evidence from one the inscriptions from Mantai.

## TEXT

### I

### Side A

1. சொழ மண்
2. டலத்து ஷ
3. த்திரிய சிகாம
4. ணி வளநா
5. ட்டு வெளார் [36] நா
6. ட்டுச் சிறுகூ
7. ற்ற நல்லூர் கிழ
8. வன் தாழி கு

9. மரன் ஈழமா
10. ன மும்முடி
11. சொழ மண்
12. டலத்து[37] மா
13. தொட்டமான[38]
14. ராஜராஜபுர
15. த்து எடுப்பி
16. த்த ராஜராஜ
17. ஈஸ்வரத்து ம
18. ஹாதேவர்க்கு
19. சந்திராதித்தவ
20. (ல்) நிற்க ராஜரா
21. ஜ நக —

## Side B

1. ளைக் கொடிநா
2. டான அருமொழி
3. தேவ வளநாட்டு
4. க்கு இசங்கும் பா
5. தைகளால் நிச
6. தம் இரண்டு வ (ட்ட)
7. மு(ம்) பிடிலிகை[39] வா
8. ரியும் இவனெ மெ
9. ல் இறுவதாகவும் இ
10. வ்வூரில் நெய்யும்
11. தறிகளால் கூடி
12. ன முதலும் வட்
13. டத்தால் கூடி
14. ன முதலும் பா
15. தை படவுகளா
16. ல் கூடின முத
17. லுங் கொண்டு
18. திரு கிருத்தியாமமம் [40]
19. வைய்யாசி விசா
20. கம் ஏழு நாளும்
21. விழா வெடுத்து
22. திர்த்தம் ஆ
23. ட்டு விப்பதாக
24. வும் ஆய
25. விடங்க
26. ய . . . .

## Side C

1. வனெ பெருங்
2. கொலால்[41] ஐங்
3. கொல்[42] உட்படவ
4. டக்கும் மெல்பா
5. ற்செல்லெ ராஜரா
6. ஜப் பெருந்தெரு
7. வுக்குக் கிழக்கும்
8. வட பாற்கெல்லெ
9. கம்மாணச்சேரி
10. க்குத்[43] தெற்கும் இ
11. வ்விசைத்த பெ
12. ரு நான்கெல்லெ
13. க்குள் அகப்பட்ட
14. நிலத்தில் இவ்
15. வூர்க்குடி குன்றன்
16. காமன் இருந்
17. த மாளிகையும்
18. விடும்[44] தொட
19. டமும்[45] திங்கலா
20. கவும்[46] இன்னடு
21. வு பட்ட இத்தனெ
22. யும் இத்தெவர்
23. க்கு[47] இறைஇலி[48] தெ
24. வ தானம் [49] ஆவ

..............................

## Side D

1. ஒந்றும் பா
2. தை படவுகளால்
3. அக்கம் ஒந்று
4. ம் இவ்வூர் நெய்
5. யும் தறிகளால்
6. தறியால் திங்க
7. ள் அரைக்கால் அக்
8. கமும் இறுப்பன
9. வற்றில் கொடுப்போ
10. ன னிடை காசின்வா
11. யொரு வட்டமும்
12. கொள்வானிடை ஒ
13. ரு வட்டமும் கொ
14. ள் வதாகவும்
15. ஆக இப்படி கொ
16. ண்டு பொழுது
17. இரு நாழியாக
18. நிசதம் ஆறு நா

19. ழி அரிசி திருவமி
20. ர்தும் அரிசிக்கு
21. ம் மாணி இரண்டு
22. க்கு நிசதம் நெல்
23. லெண்ணாழியும்
24. மட பதி ஒருவ . . . . . .
. . . . . . . . . . . . . . . . .

## II

1. ஸ்வஸ்தி ஸ்ரீ : திரு
2. மன்னி வளர இ(ரு) .
3. நில மட ந்தையு
4. ம் பொ(ற்) செயப்பா
5. வை[50] (யுஞ்) சிர்த்த
6. னிச் செல்வி[51] (யுந்த)
7. ன்(பெ)ருந் தெவியரா
8. கி[52] இன்புற நெ (டு) தியல்
9. (ஊழியுள்) இடது (ன)
10. ற நாடும் துடர்வ
11. ன வெலிப்[53] படர் வ
12. ன வா (சியு) ஞ்
13. கள்ளிச் சூழ்மதி
14. ட் கொள் (ளி)ப்பாக்
15. கைய்யும் (ந) ண்ணை
16. ற் கரு முரன் (ம) ண்
17. ணைக் கட (க்கமும்) பொரு (க)
18. ட ஙிழத்த (ரச) ர்த முடி
19. டியு மாங் (க) வர்தெ
20. (வியரொங்) கெழில்
21. முடியும் முன்னவர்
22. பக்க (ல்) தென்னவர்
23. வைத் (தசு) ந்த (ரமுடி)
24. (யும்) இந் (தி) ரனரமும்
25. (தென்றிசை) ஈழம
26. (ண்) டல (முழுவ) தும்எ
27. (றி படைக்கெரள)ன்[54]

## III

1. ஸ்வஸ்தி ஸ்ரீ : திரு (வி)
2. ராமீஸ் வரமுடைய [55] ம
3. (ஹா) தெவர்[56] எழு
4. ந்தருளும் இக்ஷவா
5. ஹு தெவர்[57] எழுந்த
6. . . . . . .மாதொட்டமான[58]
7. (ர)ா ஜராஜபுரத்து
8. திருவிராமிஸ்வர மு
9. டைய மஹா தெவர்க்
10. கு உடையார் ஸ்ரீ ரா
11. (ஜெ)ந்திர சொழதெவர்[59]
12. பெருந்தநத்துப் ப
13. ணி மகன் சிறுகுளத்
14. தூருடையான்...
15. ...தெவல்[60] சந்தி ...
16. மானடி து.....
17. நிமந்தமாவது
18. மெற்படியூர்[61] சங்க
19. ரப்பாடியார் வசம்குடு
20. த்த[62] காசிரண்டு மெற்
21. (ப)டி யூர் வெற்றிலை
22. வாணியர் வசம் குடு
23. த்த[63] காசொந்று[64] மெ
24. ற்படி[65] ஊர் வாழைக்காய்
25. வாணியர் வசம் கு
26. டுத்த காசொந்று[66]
27. ஆகக் காசு நாலு
28. நாலுக்கும் நின்றி
29. றையாக சந்தி வி

## IV

1. ஸ்வஸ்தி ஸ்ரீ :
2. ஈழ முழு
3. வதுங்[67] கொ
4. ண்டு ஈழ
5. த்தரைசரை
6. யும் பெண்
7. டிர் பண்டார
8. மும் பிடிச்
9. சுக் கொடு போ
10. ன்[68] அதிகார
11. த் தண்டநாச
12. கனர்[69] ஜய
13. ங் கொண்ட சொ
14. ழ மூவெந்(த)
15. வெளார்[70] மா
16. தொட்டமான
17 இராசராசபுர

## TRANSLATION

### I

The lands(including five rods measured by...... kol to the north and) having the black smith's quarter in the north, the Rajarajapperunteru on the west,............as its four great boundaries with the exclusion of the house, mansion and garden of Kunran Kaman, —an inhabitant of this town—have been given as tax free devadana, to last as long as the sun and the moon endure, to Rajarajeswaram which has been erected at Matottam otherwise called Rajarajapuram in Ceylon otherwise called Mummudi Colamandalam by Talikumaran, the chief of Cirukurranallur of Velar nadu in Ksatriya sikhamani valanadu in Colamandalam.

Let him contribute daily two vaddam from the amount collected as tolls from the pathways leading to Arumolitteva valanadu otherwise called ......naikkoti nadu and also the pidilikai vari. From the income derived from the looms in the town, from the vaddam and from the pathways and ferries rituals, festivals and the water-cutting ceremony shall be performed for the seven days of Vicakam in the month of Vaikaci (at this temple).

Money shall be collected at the rate of an akham (per day?) for transport through pathways and ferries. A monthly levy shall be made on all weavers in this town at the rate of one-eigth of an akkam per loom. A levy shall be made on all commercial transactions at the rate of a vattam per kasu on all buyers and sellers. From the proceeds of the amount thus collected provision shall be made for supplying daily six measures of rice for the offering of three sacred meals, eight measures of paddy for two young Brahmins and........... for a chief of the Matam (inn)..............

### II

Hail! Prosperity! While Prosperity was increasing, and while the Goddess of the great earth, the Goddess of Victory and the Goddess of unmatched fame having become his great queens, were rejoicing, (he conquered) Idaiturainadu, Vanavaci which is surrounded by a continuous hedge of forest, Kollippakkai whose ramparts were surrounded by rows of Culli (trees), Mannaikadakam whose strong fortifications were unapproachable, the crown of the king of Ceylon surrounded by the roaring sea, the exceedingly beautiful crown(s) of his queen(s) and the fine crown and the garland of Indra which the Pandya monarch had previously deposited with the king of Ceylon and the whole of Ilamandalam in the southern direction and...........of the Keralar................

### III

Hail! Prosperity! ...... Tevan Cantiman, the Utaiyan of Cirukulattur, serving Rajendra devar in the capacity of a member of the (military) group of Peruntanam has deposited two kasus with the Cankarapadiyar of the town (Matottam), one kasu with the Verrilai Vaniyar of the town and another kasu with the Valakkay Vaniyar of the same town as an endowment for the temple called Tiruviramisvaram at Matottam otherwise called Rajarajapuram (sanctified by the consecration of the image of Iksvakutevarin the temple of the Great Lord of Tiruviramisvaram). With the income from the four kasus thus deposited (lamps called cantivilakku, shall be lighted.)

### IV

Hail! Prosperity! (In) Matottam otherwise called Iracaracapuram Jayankonda Chola muventa velar the Commander-in-chief and Atikari, who conquered the whole of Ilam and captured and took away the king of Ceylon his queen and his treasures......

## NOTES

1. Chola inscriptions have been found at Siva Devale No.2 and among the ruins of Siva Devale No. 5 at Polonnaruwa. Two of the inscriptions from Siva Devale No. 2 belong to the reign of Adhirajendra. The rest, which are fragments, belong to the reign of Rajendra I; See **South Indian Inscriptions (SII) Vol. IV**; Nos. 1388, 1393, 1407, 1411, 1412, 1415.

2. K. Indrapala, 'A Fragmentary Chola Inscription from Fort Hammeheil, Katys', **Epigraphia Tamilica (ET)** 1971. Vol. I, pp. 32–36; A. Velupillai, Ceylon **Tamil Inscriptions (CTI)** pt. II (Peradeniya, 1972) pp. 23–26.

3. **ET**, pt. I, pp. 37–51; **CTI** pt. I pp. 12–19; **CTI** pp. 1–6.

4. **ET**, pt. I, pp. 52–56.

5. This inscription is said to have been first noticed in 1967 by S. A. Uduvara, the keeper of the Archaeological Museum at Anuradhapura. The inscribed stone has been utilised in the building of the Dutch Fort on the islet known as Hammenheil off Kayts. See **EZ** Vol. VI, pt. I, pp. 28–30; **ET**, pt. I, pp. 10–13.

6. **ET** pt. I, pp. 25–28.

7. K. Indrapala, Kantalayil kandupidikkappaddulla Chola Ilankesvaran kalattuk kalveddu', **Pavalar Thurai appah Pillai Nurrandu Viza Malar,** (Tellipalai, 1972) Section II, pp. 1–9, S. Gunasingham, 'Two Inscriptions of Chola Ilankesvara Deva', **Trincomalee Inscriptions** Series— No. I. (Peradeniya, 1974) pp. 5–7.

8. S. Gunasingham, **Konesvaram** (Peradeniya, 1973) pp. 74–75.

9. **Trincomalee Inscriptions Series,** No. I.

10. S. Gunasingham, **Konesvaram**, p. 74.

11. Architectural and iconographic remains datable to the Chola period have been found at Polonnaruwa, Kantalay, Potankatu and Periyakulam .

12. **Konecar kalveddu** ed. by C. V. Chanmugarathina Aiyar, Jaffna, 1909.

13. **Culawamsa,** 56.

14. **SII,** IV; Nos. 1412, 1414.

15. **CTI** pt. II (Peradeniya, 1972) p. 42.

16. **ET,** pt. I, p. 10.

17. Paranavitana also suggests that 'it is... possible that the inscribed stone has been brought to its present position from Mantai'. **EZ,** vol. VI, pt. I, p. 29.

18. **CTI,** pt. II, p. 47.

19. K. A. Nilakanta Sastri, **The Cholas** (Madras, 1955), p. 199.

20. ibid.
21. **Culavamsa** 55: 16–23.

22. **Culawamsa** 53: 41-45.

23. ibid.

24. Rajendra is said to have constructed a large palace at Madurai for one of his son Sundara Chola who was consecrated as king of the Pandya kingdom. Sundara Chola and his successors came to be uniformly referred to as **Chola Pandya** to signify both their Chola descent and the region over which they held authority.

25. **CV**, 55: 23.

26. Rohana was under the successive rule of Vikramabahu (1029-1040), Manalana Kitti (1040-1042), Vikrama Pandya (1042-1043), Jagatipala (1043-1046), Parakrama Pandya (1046-1048), Lokesvara (1048-1054), Kassapa VII (1054-1055), and Vijayabahu I (Accession 1055).

27. Archaeological remains at Mantai include the remains of some buildings of the eleventh century as well as a Nandi, a Linga and an image of Ganesa. These could be the remains of Chola monuments. Besides, an old well found at Tirukketisvaram is considered to be of Chola origin. See **A.S.C.A.R.** for 1908, pp. 28-30; K. Vaithianathan, **Thiruketheesvaram Papers**, (2nd edition, Colombo, 1960) p. 13.

28. **CTI**, pt. II, p. 49

29. **SII** Vol. IV: 1412, 11, 1-9.

30. The expression **Madapati** meaning 'the chief of the inn' occurs at the concluding portion of the epigraph.

31. Mummudiccolan, an epithet of Rajaraja, perhaps signified his rule over the Chola, Pandya and Cera kingdoms which were the three major kingdoms in the Tamil country.

32. Rajaraja valanadu, Vikkirama Chola valanadu (Koddiyaram) Nikarilicchola valanadu (Polonnaruwa) Rajendra Chola valanadu (Kantalai) and Abhayasraya valanadu were some of the other such units in Ceylon.

33. An inscription of the second year of Kulotunga I from Tiruvalangadu refers to the settlement of twenty-five families of Cankara-padiyar on land belonging to the temple. The Cakarapadiyar were to supply oil for fifteen perpetual lamps and had to be in charge of lighting them in the temple of Mahadeva at Tiruvalangadu. It may be inferred that the Cankarapadiyar of Matottam were settled there by the Chola authorities to carry out similar duties at the temple of Tiruviramisvaram See **SII**, III, p. 136.

34. S. Pathmanathan 'Social and Religious conditions in Sri Lanka' Ceylon Studies Seminar, No. 53, 1975 Series No. 1.

35. As the expressions cirutanam and Peruntanam occur in connection with soldiers **cirutanattu vatuka kavalar, Cirutanattu Valankai Velaikkarappataikal, Cirutanam Marayan** it may be assumed that they denoted ranks or groups of persons in the military establishments.

36. வேளார் நாட்டு
37. சோழ மண்டலத்து
38. மாதோட்டமான
39. பிடிவிகை வரியும்
40. இதன் பொருள் தெளிவில்லை
41. பெருங்கோலால்
42. ஐங்கோல்
43. கம்மாணச் சேரிக்கு
44. விடும்
45. தோட்டமும்
46. நீங்கலாகவும்
47. இத்தேவருக்கு
48. இறையிலி
49. தேவதானம்

| | | | |
|---|---|---|---|
| 50. | போர்ச்செயப்பாவை | 61. | மேற்படியூர் |
| 51. | சீர் தனிச் செல்வி | 62. | கொடுத்த |
| 52. | தேவியராகி | 63. | கொடுத்த |
| 53. | வனவேலி | 64. | காசொன்று |
| 54. | கல்வெட்டின் மிகுதி கிடைக்கவில்லை | 65. | மேற்படி |
| 55. | திருவிரா மீஸ்வரம் | 66. | காசொன்று |
| 56. | மஹாதேவர் | 67. | ஈழ முழுந்துவகொண்டு என கா. இந்திர பாலா வாசித்தமை தவறு |
| 57. | ....தேவர் | 68 | போன |
| 58. | மாதோட்டமான | 69. | தண்டநாயகனுர் |
| 59. | சோழதேவர் | 70. | மூவேர்த வேளா |
| 60. | ..தேவன் | | |

# மலையகத்திற் சைவம்

— நா. முத்தையா —

ஈழத்தில் வாழும் சைவமக்களுட் சரி பாதிக்குமேல் மலையகத்தில் வாழுகின்றார்கள் என்பது பலர் சிந்திக்காத ஒரு விடயமாகும். யாழ்ப்பாணத்திலே திருவாசகக் கந்தபுராணக் கலாசாரங் களும் கிழக்குமாகாணத்திற் கண்ணகி வழிபாட்டுக் கலாசாரங்களும் மக்கள் வாழ்வுடன் இரண்டறக் கலந் தது போல, மலையகத்தில் மாரியம்மன் வழிபாட்டுக் கலாசாரம் மக்கள் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்த ஒன்றாகும்.

ஈழத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தேயிலை, றப்பர் தோட்டங்கள் உள்ளன. எல்லாத் தோட்டங் களிலும் பாடசாலைகள் இல்லை. ஆனால் மாரியம்மன் வழிபாடு இல்லாத தோட்டம் இல்லையென்றே கூற லாம். பாரதநாட்டிலிருந்து மலையகமக்கள் இந்நாட்டிற்கு வந்தபோது அவர்களுடன் கூட வந்த கலாசாரம் மாரியம்மன் வழிபாடாகும். அந்தக் கலாசாரம் இன்றும் அவர்கள் மத்தியில் மங்காது மாறாது சுடர் விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

மாரியம்மன் பாரத நாட்டின் கிராம தேவதையாகக் கருதப்பட்டது. தமிழகத்திலே ஊர்தோறும் பிடாரி, காளி, திரௌபதி போன்ற வழிபாடுகளைச் சர்வ சாதாரணமாகக் காணலாம். இவ்வித ஊர்த் தெய்வங்களில் மிக மிகச் சர்வசாதாரண வழிபாடாகக் கருதப்படுவது மாரியம்மன் வழிபாடாகும். இந்த அம்மனைச் செல்வி, செல்லி, செல்லியாத்தாள், செல்லாண்டி அம்மன், ஆயிரங்கண்ணுடையாள், முத்து மாரிஅம்மன் என்பவை போன்ற பல பெயர்களால் அழைப்பர்.

மாரி என்ற பெயர் மழை எனப் பொருள் படும். வெப்பத்தைத் தணிவித்து, வெப்ப நோய்களாகிய அம்மை முதலியவற்றைத் தீர்த்து, நாடுதழைக்கச் செய்தும், மாடு பிழைக்கச் செய்தும் மக்களை மழை போலக் காப்பவள் இந்தத் தெய்வம் என்று மக்கள் போற்றுவர்.

தொழிலாளர் இந்த நாட்டுக்கு வந்த அதே காலத்திலே நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் பணம் சம்பாதிப்பதற்காக இந்த நாட்டிற்கு வந்தார்கள். செட்டியார்கள் நகரப்பகுதிகளிலே குடியேறினர் கள். எந்த நகரத்திலே கதிரேசன் கோயில் இருக்கிறதோ, அங்கே செட்டியார்கள் வாழ்ந்தார்கள் என்பது அடையாளம் ஆகும். அவர்கள் கட்டிய கோயில் எல்லாம் கதிரேசன் கோயிலே. செட்டியார்கள் கோயில் கட்டியதோடு கோயிலைப் பரிபாலிக்க வேண்டிய வருவாய்களையும் ஏற்படுத்தியிருந்தார்கள். அதனுல்தான், செட்டியார்கள் பல நகரங்களை விட்டுப் பாரத நாடு சென்றிருந்த காலத்திலும் அவர்களுடைய கோயில்களில் பூஜைகள் முட்டின்றி நடைபெற்று வருகின்றன. நாமோ கோயிலுக்குக் குத்து விளக்கு வாங்கிக் கொடுப் போம். ஆனால் எண்ணெய் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று நினைக்கமாட்டோம்.

கண்டி மாநகரிலே தலதா மாளிகையைப் போன்ற பழமையை உடைய இரு கோயில்கள் உள்ளன. ஒன்று கதிரேசன் கோயில், அடுத்தது பத்தினிதெவியோ என்று அழைக்கப்படும் கண்ணகை அம்மன் கோயில். இவை இரண்டும் தலதா மாளிகையோடு சம்பந்தமானவையாகும். மலையகத்து முக்கிய நகரங்களிலே கதிரேசன் கோயிலோடு முத்துமாரியம்மன் கோயிலும் சேர்ந்து விளங்குவதைக் காணலாம். செட்டியார்களை நகரத்தார் என்று அழைப்பது மரபு. அதனாலே கதிரேசன் கோயில்களை நகரத்தார் கோயில் என்றும், மாரியம்மன் கோயில்களை நாட்டார் கோயில் என்றும் அழைத்துவரும் வழக்கமும் உண்டு.

மலையகத்தின் நுழைவாயிலாக மாத்தளை கருதப்படுகின்றது. மாத்தளை நகருக்குள் நுழையும் போதே முத்துமாரியம்மன் கோயிலைத் தரிசிக்கும் வாய்ப்பு உண்டு; திருக்கோணமலை வீதியில் இராஜகோபுரத்துடன் காட்சி அளிக்கின்றது. இங்கு மாசி மாதத்தில் தீர்த்தோற்சவமும் முதல்நாள் தேர்விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன; சுற்றுவட்டாரங்களிலுள்ள தோட்டப்பகுதிகளில் வசிக்கும் சைவப் பெருமக்கள் தேர்த்திருவிழாவின்போது இலட்சக் கணக்கில் வந்து கூடுவர்; ஐந்து தேர்கள் பவனிசெல்லும் காட்சி மிக அழகானது. ஸ்ரீ முத்துமாரியம்பாள் எழுந்தருளியிருக்கும் தேரினைப் பெண்களே இழுத்துச் செல்லும் வழக்கம் இங்கு மாத்திரமே உண்டு. மாத்தளை நகரத்தில் கதிரேசன் கோயில் ஒன்றும் முத்து விநாயகர் கோயில் ஒன்றும் உள.

வத்தேகம நகரில் முத்துமாரியம்மன் கோயிலும் கதிரேசன் கோயிலும் உள; புசலாவை, கம்பளை, நாவலப்பிட்டி நகர்களிலும் இவ்விருகோயில்களும் அமைந்திருப்பதைக் காணலாம். கற்றன், டிக்கோயா, மஸ்கெலியா, பொகவந்தலாவை, தலவாக்கொல்லை, நுவரேலியா, பண்டாரவளை, அப்புத்தளை, பதுளை, பசறை ஆகிய இடங்களிலும் ஒருகோயிலோ அன்றி இரண்டு கோயில்களோ இருப்பதைக் காணலாம். மாத்தளை, கண்டி ஆகிய இடங்களில் உள்ள கோயில்களிற் கொடியேற்றத் தேர்விழாவும், தீர்த்தோற்சவமும் நடைபெற்று வருகின்றன; மற்றைய இடங்களில் அலங்கார விழாக்கள் மாத்திரமே நடைபெற்றுவருகின்றன.

தோட்டத்தில் வருடம் ஒரு முறை விழாக் கொண்டாடுவர்; பெரும்பாலும் மூன்று நாட்கள் அல்லது ஐந்து நாட்கள் கொண்டாடுவர். விழாக் கொண்டாடும் நாட்களிலே தோட்டத்தில் வேலை இல்லை. நிர்வாகமே விழாவுக்கென ஒரு தொகையான பொருளைக் கொடுக்கின்றது. முதல் நாள் கரகம் பாலித்தல் என்ற கிரியை ஆற்றங்கரையில் நடைபெறும்; இரண்டாவது நாள் தெருத்தெருவாக அம்பாள் வீதிவலம் நடைபெறும்; கடைசிநாளில் நீர்வெட்டு என்று சொல்லப்பெறும் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

ஒரு காலத்திலே ஆண்டில் ஒரு முறை மாத்திரமே விழாக்கொண்டாடி வந்த தோட்டப் பகுதிகளில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. வெள்ளிதோறும் கூட்டுவழிபாடும், நவராத்திரி, சிவராத்திரி போன்ற விழாக்களும், சமயச் சொற்பொழிவுகளும், சங்கீத கதாப்பிரசங்கங்களும், திருமுறை ஓதுதலும் முக்கியமாக இடம் பெற்று வருகின்றன. பல கோயில்களில் நாளாந்த பூஜையும் இடம் பெறுகின்றது. ஆண்டுதோறும் ஆடியில் நடைபெறும் கதிர்காம விழாவைத் தரிசிக்க மலையகத்தார் சென்று வருவர். தற்போது திருக்கேதீச்சரம், கோணேச்சரம், யாழ்ப்பாணத் திருத்தலங்கள் ஆகியனவற்றுக்கு யாத்திரை செய்யும் பழக்கமும் ஏற்பட்டுள்ளது.

மலையகத்தில் மூன்று பெருஞ் சித்தர்கள் வாழ்ந்து மக்களை நல்வழிப்படுத்தி உள்ளார்கள். மாத்தளையில் சமாதி அடைந்திருக்கும் பரமகுரு சுவாமிகள் ஒரு தோட்டத் தொழிலாளியின் மகன் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தம் இளமையிலேயே துறவு பூண்டு மாத்தளைக்கும் திருக்கோணமலைக்கும் இடையே உள்ள காட்டுப்பிரதேசத்தில் ஏகாந்தமாகத் தவம் செய்து தவசக்தி பெற்றவர். இவரை அண்டி உபதேசம் பெற்றவர் பலராவர்.

நாவலப்பிட்டியிலிருந்து தலவாக்கொல்லைக்குச் செல்லும் பாதையில் பதின்மூன்றுவது மைலில் ‘குயீன்ஸ்பெரி’ என்ற பெயருடைய தோட்டம் உள்ளது. அத்தோட்டத்தில் நவநாத சித்தர் என்ற மகான் வாழ்ந்து மக்களை நல்வழிப்படுத்தினார். அவர் பல சித்துக்கள் புரிந்தவர். அவரது சமாதிக் கோயிலும் அதன் பக்கத்திலே முருகன் கோயிலும் அத்தோட்டத்தில் உள. இவர் இந்தியாவிலுள்ள கொல்லிமலையிலிருந்து வந்த ஒரு மகான். இவரும், கொழும்பு முகத்துவாரத்தில் சமாதிகொண்டெழுந்தருளியிருக்கும் பெரியானைக் குட்டி சுவாமிகளும், கிழக்குமாகாணத்திற் காரைத்தீவில் சமாதிகொண்டெழுந்தருளியிருக்கும் சித்தானைக் குட்டி சுவாமிகளும் சமகாலத்தவராவர்; மூவரும் ஒன்று சேர்ந்தே ஈழம் வந்து சேர்ந்தார்கள்.

அட்டனிலிருந்து கொழும்பு செல்லும் வீதியில் நான்கு மைல் தூரத்தில் இருசல்லே என்றொரு நகரம் உண்டு; அங்கு குயில்வத்தை என்றொருதோட்டம் உண்டு; அங்கு ஒரு சிவாலயம் உண்டு; அந்தச் சிவாலயத்தில் நாகநாதசித்தர் என்றொரு மகான் வாழ்ந்து வந்தார். அவரால் அப்பகுதி மக்கள் மிகப்பயன் அடைந்தனர். அவரது சமாதியும் கோயிலின் பக்கத்தே உள்ளது. சுவாமிகளுடைய சமாதிக்குப்பின் அவரது சீடரான குமரகுருபரசுவாமிகள் அந்த இடத்தில் இருந்து பல சிவ கைங்கரியங்கள் செய்து வந்தார். அவரும் சமீபகாலத்திலே சமாதி அடைந்து விட்டார்.

கோயில்களும் மகான்களும் தவிர மலையகத்திலே சமயவளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவை சமயச் சங்கங்களும் சமயப் பாடசாலைகளுமாகும். பல தனிப்பட்ட சைவப் பெரியார்களுடைய முயற்சியினாலும் பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டு அவற்றின் உதவியினாலும் சமயவளர்ச்சி கணிசமான அளவு ஏற்பட்டது.

மாத்தளையிலுள்ள பாக்கியம் வித்தியாலயமும் கந்தசாமி வித்தியாலயமும் கந்தசாமி குடும்பத்தினரால் கட்டப்பட்டுப் பரிபாலிக்கப்பட்டு வந்தன. யாழ்ப்பாணத்தில் இராமநாதன் கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரியும் எப்படியோ, மாத்தளையில் இவ்விரு கல்லூரிகளும் அப்படி அமைந்தன எனலாம். கண்டிச் சைவமகாசபையின் நினைவாக விளங்குவது கண்டி இந்து சிரேட்ட பாடசாலையாகும். நாவலப்பிட்டி இந்து வாலிப சங்கத்தை நினைவூட்டிக் கொண்டிருப்பது கதிரேசன் கல்லூரி. மலையகத்திற் பெருஞ் சமூகத் தொண்டராக விளங்கிய இராசலிங்கம் அவர்களுடைய தனிப்பட்ட முயற்சியினால் தோன்றியது புசலாவை சரஸ்வதி பாடசாலையாகும். பதுளை சைவபரிபாலன சபையின் நினைவாக விளங்குவது பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயமாகும்.

நமது சமயம் அநாதியானது; சனாதனதர்மத்தை விளக்குவது; உலகிலுள்ள எல்லாச் சமயக் கொள்கைகளையும் உள்ளடக்கித் தாய்ச்சமயமாக விளங்குவது. இத்தகைய சமயத்திற் பிறந்த பெரும்பான்மையோர் சமய அறிவற்றவராக, கல்வி அறிவற்றவராக, சமய சாதனை அற்றவராக, நாஸ்திகராக விளங்குவதைக் கண்டு எந்தச் சைவனும் சந்தோஷம் கொள்ள முடியாது.

சமயச் சங்கங்களும், சமய அறிஞரும், பணம் படைத்தவர்களும் அடிக்கடி மலையகத்தை நாடி வந்து சமயப்பணி செய்ய வேண்டும் என்பது அடியேனுடைய தாழ்மையான வேண்டுகோளாகும்.

---

# பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஈழத்துச் சைவ மறுமலர்ச்சி

— க. அருணைநாயகம் —

தமிழரசர் ஆட்சி மறைவுற்று அந்நியரான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரது ஆட்சி நிலவிய காலத்திற் சைவசமயம் அரசியல் ஆதரவற்ற நிலையை அடைந்தது. போர்த்துக்கேயர் தம் ஆதிபத்தியத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கத்துடன் ஈழத்தின் கரையோரப் பகுதிகளிலிருந்த சைவக்கோவில்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கினர். இதனாலும் ஒல்லாந்தர் காலத்தில் விதிக்கப்பட்ட சட்டங்களின் கட்டுப்பாடுகளினாலும் பொதுவழிபாடுகள் நடைபெறுதொழிந்தன[1]. எனினும் ஒல்லாந்தர் தமது ஆட்சியின் கடைக்கூறாகிய பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியிற் சமய சட்டங்களைக் கண்டிப்பான முறையிற் செயற்படுத்தாது நெகிழவிட்டனர். இதனை வாய்ப்பாகக் கொண்டு மீண்டும் சைவக்கோவில்கள் பல கட்டப்பட்டன. கோவில்களையும், பொது வழிபாடுகளையும் அழித்துவிட்டாற் சமயம் அழிந்துவிடும் என்ற கிறீத்தவ அரசுகளின் நம்பிக்கை வீண் போயிற்று. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் (1782), நயினாதீவு நாகேஸ்வரி (1782), வண்ணை சிவன்கோவில் (1787), நல்லூர் கந்சுவாமி கோவில் (1793) போன்ற திருத்தலங்களின் திருப்பணி வேலைகள் ஒல்லாந்தர் ஆட்சியின் கடைக்கூறில் ஆரம்பமாயின. திருக்

கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருக்கும் கோவில்களினது வரலாறுகளும் பெரும்பாலும் இத்தகையனவே.

ஒல்லாந்தரிடமிருந்து ஆட்சியினைப் பறித்துக் கொண்ட ஆங்கிலேயர் ஈழத்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றுத் தமதாட்சிக்கு வலுவூட்டும் எண்ணத்துடன் பௌத்த, சைவ, கத்தோலிக்க சமயத்தவர்களது பொதுவழிபாடுகளுக் கெதிராக ஒல்லாந்தர் விதித்த சட்டங்களை நீக்கச் சமயசுவாதீனக் கொள்கைகளைக் கடைப்பிடித்தனர். இதன் விளைவாகப் போலிக் கிறித்தவர்களது எண்ணிக்கை திடீரென வீழ்ச்சியுற்றது. *1802* ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் *136,000* கிறித்தவர்கள் இருந்தார்கள். *1806* இல் புக்கணம் **(BUCHANAM)** என்பவர் இலங்கைக்கு வந்தபொழுது யாழ்ப்பாணத்தில் புரட்டஸ்தாந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் ஒருவரும் இருக்கவில்லையென்று தனது நூலிற் குறிப்பிட்டுள்ளார்[2]. முப்பத்திநான்கு கிறித்தவ தேவாலயங்களிலிருந்த யாழ்ப்பாணப் பிரதேசத்தில் *1814* ஆம் ஆண்டில் முன்னூற்றிருபத்தொன்பது சைவக் கோவில்கள் காணப்பட்டன[3]. கிறித்தவ பாதிரிமாரது ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு பார்க்குமிடத்துச் சைவ ஆசார, அனுட்டான முறைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையென்பது புலனாகும்[4]. புதிதாகக் கட்டப்பட்ட கோவில்கள் தனிப்பட்ட பிரமுகர்களின் சொந்த முயற்சியால் கட்டப்பட்டன. உயர்சாதியினரது கோவில்களில் தாழ்ந்த சாதியினர் வணங்குவதற்கு இடமளிக்காத காரணத்தினால் ஒவ்வொரு சாதியினரும் தமக்கு இஷ்டமான தெய்வங்களுக்கும், தேவைகளுக்கும் கோவில்களைக் கட்டினர். அத்துடன் காலத்துடன் ஒவ்வாத கொண்டாட்டங்களும் கோவில் வழிபாட்டுடன் சேர்ந்து கொண்டன. தேவதாசி நடனம், வெடிகொளுத்துதல் போன்றவை கோவிற் சுற்றாடலின் புனிதத் தன்மையையும், பக்தியையும் குழப்புவனவாக அமைந்திருந்தன. கோவில்களில் உபந்நியாசம் செய்தவர்களும் ''சைவாகம உணர்ச்சி இல்லாதவர்களாகையால் உண்மைப் பொருள் பரவாதொழிந்தது. நேர்ப் பொருளாகிய சிற்றின்பப் பொருளே உண்மைப் பொருளென்று பிரசரிக்கையாற் பெரும் கேடு விளைந்தது''. இக் குறைபாடுகளை நன்கு பயன்படுத்தியவர்கள் கிறித்தவ சமய பாதிரிமார்களே. ஆங்கிலேயர் காலத்தில் சைவ சமயப் பிரதேசங்களில் புரட்டஸ்தாந்து கிறித்தவ சமயத்தைப் பரப்பிய வெஸ்லியன் *(1814)*, அமெரிக்க *(1816)*, சேர்ச் மிஷன் *(1818)* போன்ற திருச்சபைகளைச் சேர்ந்த சமயப் பிரசாரகர்கள் தமது சமயப் பிரசாரத்துக்கு மேலே கூறப்பட்ட குறைபாடுகளைப் பெரிதுபடுத்திச் சைவர்களைத் தமது திருச்சபைகளுக்கு மதமாற்றம் செய்தனர். அது மாத்திரமன்றி ஊரெங்கினும் தமிழ் ஆங்கில பாடசாலைகளை நிறுவித் தமது சமயத்தை மாணவருடாகப் பரப்பினர். *1833* ஆம் ஆண்டு கோல்புறூக் ஆணைக்குழுவினர் கீழ்மட்டத்திலுள்ள நிர்வாகத்தை ஈழத்தவருக்குக் கொடுத்து அதன் மூலம் நிர்வாகச் செலவைக் குறைக்க எண்ணி ஆங்கிலக்கல்விக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்ததன் விளைவாக, ஆங்கிலக் கல்வி பெறுவதற்குப் சைவர்கள் தங்கள் சமயக் கொள்கைகளை ஒதுக்கி, கிறித்தவ பாடசாலைகளை நாடினர். ஆங்கிலக் கல்வி அளித்த உத்தியோக வாய்ப்புகளும், சைவர்கள் வாழ்ந்த சில பகுதிகளின் பொருளாதாரக் கஷ்டநிலையும் சமய மாற்றங்களுக்கு முன்னெப்பொழுதும் இல்லாதவகையில் வழிகோலின. மலைநாட்டில் கோப்பிப் பெருந்தோட்டம் எவ்வளவு துரிதமாக விருத்தியடைந்ததோ அதே வேகத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கிறித்தவ பாடசாலைகள் விருத்தியடைந்தன. கோப்பியினாற் கிடைத்த பெரு இலாபம் ஐரோப்பிய பெருந்தோட்டச் சொந்தக்காரரிடையே ஏற்படுத்திய கோப்பி வெறிபோல் **( Coffee Mania )** அரசாங்க உத்தியோக வாய்ப்புக்கள் சைவர்கள் மத்தியில், குறிப்பாக, யாழ்ப்பாணத்தவர் மத்தியில் ஆங்கிலக்கல்வி வெறியினை ஏற்படுத்தியது.

இந்நேரம் கிறித்தவ சமய முன்னேற்றத்தினைத் தடுத்து அரண்போடச் சைவர்கள் மத்தியில் எவ்வித தாபனஅமைப்பும் இருக்கவில்லை. பௌத்த மக்கள் மத்தியில் இயங்கிய பிரிவேனுக்கள் போலவும், தென்னிந்தியாவிலிருந்த ஆதீனங்கள் போன்றவுமான தாபன அமைப்புகள் எவைதானும் சைவர்கள் மத்தியிற் காணப்படவில்லை.

சமயவிழிப்புணர்ச்சி :

சமயத்துறையிற் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி தனிப்பட்ட அறிஞர்களது செல்வாக்கை மையமாகக் கொண்டிருந்தது. இவர்கள் அந்நியரது அரசியல் ஆதிபத்தியத்தினை ஏற்றனரேனும் , சமய கலாசாரத் துறைகளிலே தனித்துவத்தைப் பேணவே விழைந்தனர். ஈழச் சைவர்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சி ஆரம்பத்திற் கிறித்தவ சமயம் பரவுதலைத் தடைசெய்து சைவ சமயக் கோட்பாடுகளை மீண்டும் நிலைநிறுத்துவதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இவ்வியக்கத்தை நடத்துவதில் முன்னின்று உழைத்தவர் நல்லூர் ஆறுமுகநாவலரவர்களாவர். இவர் தமது இயக்கம் பற்றித் தீவிரமாகச் சிந்திப்பதற்கு முன்னர் *1842* இல் வண்ணார்பண்ணையிலுள்ள சைவ உயர்ந்தோர் குழாத்தைச் சேர்ந்தவர்கள் கிறித்தவமதப் போக்கினைத் தடுத்து நிறுத்திச் சைவசமயப் பாடசாலை ஒன்றை நிறுவவும்,

அச்சியந்திரசாலை நிறுவி, பத்திரிகையொன்றை வெளியிடவும் முனைந்தனர்[5]. இவர்கள் ஒழுங்கு செய்த கூட்டங்களிற் கிறீத்தவமதக் கண்டனமும், சைவமகத்துவ உரைகளும் இடம் பெற்றன. ஆனால் இவைகள் பரவலாக நடைபெறவில்லை. எனினும், இவ்வியக்கம் வண்ணார்பண்ணையைச் சைவ சமய விழிப்புணர்ச்சியின் கேந்திரஸ்தானமாகவும், நாவலர் இவ்வியக்கத்தின் நாயகனாகவும் விளங்க வழிகோலியது. நாவலர் கிறீத்தவ சமயப் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்குக் கையாண்ட வழிமுறைகள் எதுவும் புதியனவல்ல. ஆயின் சைவ சமயத்தைப் பொறுத்தளவில் அவை புதியவையாம். நாவலர் வெஸ்லியின் பாடசாலையில் கல்வி கற்று ஆசிரியராகக் கடமையாற்றியதாலும் வண. பேர்சிவலுக்கு விவிலியநூலைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கு உதவியதாலும் கிறீஸ்தவசமயம் பற்றியும், மிஷனரிமாரது உள்ளக்கிடக்கைகள் பற்றியும் நன்கறிந்து கொண்டனர். கிறீத்தவர்கள் கையாண்ட பிரசங்கப் பிரசாரமுறை, வசனரூபத்தில் அமைந்த வினாவிடைகள், பாலபாடங்கள், வசனநூல்கள், துண்டுப் பிரசுரங்கள், பாடசாலைகள் மூலம் சமயப்போதனை போன்ற முறைகளை நாவலரும் பின்பற்றினர். 1847 ஆம் ஆண்டு வண்ணைச் சிவன்கோவிலில் ஆரம்பமாகிப் பின்னர் ஏனைய பகுதிகளில் நடைபெற்ற சமயப்பிரசங்கங்கள் சைவசமய தத்துவங்களை இலகுவான முறையில் விளக்குவனவாயின[6]. 1848 ஆம் ஆண்டில் பல்வேறு தலைப்புகளில் நாவலராலும், கார்த்திகேய ஐயராலும் செய்யப்பட்ட இருபத்தொன்பது பிரசங்கங்கள் கிறீத்தவ பாதிரிமார் மத்தியில் பெரும் ஏக்கத்தினை ஏற்படுத்தியது[7]. கிறீத்தவ சமயப் பாதிரிமாராலும், சைவசமய அறிவிலிகளினாலும் புராணங்களுக்குக் கொடுக்கப் பட்ட போலி வியாக்கியானங்கள் அர்த்தமற்றவையாக்கப்பட்டன. அது மாத்திரமன்றி சைவர்கள் மத்தியிலும் சில திருத்தங்களை ஏற்படுத்தும் வகையிலும் அவை அமைந்திருந்தன. சைவ ஆகமங்கள் அங்கீகரிக்காத காடன், மாடன், காட்டேரி, கறுப்பன் என்பன உண்மையான சிவவழிபாட்டு முறைகளல்ல எனவும் அவைபோன்ற வணக்க முறைகளே பல தெய்வவழிபாட்டு முறை சைவசமயத்திலிருப்பதாகப் பிறமதத்தினரும் சமய அறிவற்றவர்களும் எண்ணச் செய்கின்றதென்றும் அம் முறைகள் களையப்பட வேண்டுமெனவும் வாதாடினர்[8]. 19 ஆம் நூற்றாண்டில் பௌத்தர்கள் மத்தியில் தோன்றிய மறுமலர்ச்சியின் போது விவசாயிகள் மத்தியில் நிலவிய தேவதை வழிபாட்டு முறைகளை நவீனப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது[9]. அதுபோன்ற முயற்சியே இதுவுமெனலாம். பொதுமக்கள் வழிபாடு முறைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இவ்வியக்கம் மிகவும் புரட்சிகரமானதொன்றாகும்.

கிறீத்தவசமயத்தினர் மும்மூர்த்திலட்சணம், குருட்டுவழி போன்ற துண்டுப்பிரசுரங்கள் மூலம் அருவருப்பான மொழியிற் சைவசமயத்தைத் தாக்கினர். இவைகளுக்கு மறுப்பாக ஆறுமுகநாவலர் சைவதூஷணபரிகாரம், சுப்பிரபோதம் போன்ற மறுப்புரைகளை வெளியிட்டார். 1854 இல் வெளியிடப்பட்ட சைவதூஷண பரிகாரம் கிறீத்தவமத எதிர்ப்பியக்க முதற்கட்டத்தின் உச்சநிலை எனலாம். சைவதூஷண பரிகாரத்தின் மூலம் இருசமயங்களையும் ஒப்பிட்டாராய்ந்து சைவசமயத்திற் பொதிந்துள்ள தெய்வாம்சம் கிறீத்தவ சமயத்திலுள்ளதிலும் பார்க்க குறைந்ததல்ல என்பதை நிலைநாட்ட முற்பட்டார். கிறீத்தவ சமயம் பற்றி நாவலருக்கிருந்த அறிவு பற்றிக் கிறீத்தவர்களே வியந்தனர். இந்நடவடிக்கைகள் சைவசமயத்திற்குச் சாதகமான சூழ் நிலையினை ஏற்படுத்திக் கிறீத்தவசமயத்தைப் பாதித்ததென்பதை கிறீத்தவர்களது அறிக்கைகளே ஒப்புக்கொண்டுள்ளன![10].

பிறசமயத்தவர்களது கண்டனங்கள் முற்றிலும் தவறானதல்ல என்பதை உள்ளூர உணர்ந்த நாவலரவர்கள் சைவசமயம் சிலதுறைகளிலே தன்னைத் தான் நெறிப்படுத்த வேண்டிய அவசியத்தையும் விளக்கினார். நல்லூர் கந்தசுவாமிகோவில் பற்றி நாவலர் வெளியிட்ட மூன்று துண்டுப் பத்திரிகைகளும் ''யாழ்ப்பாணச் சமயநிலை'' என்ற பிரசுரமும்[11] ஆழமான சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்டவையாகும். தேவதாசிகள் நடனம், வாணவிளையாட்டுக்கள், கோவில் நிர்வாகம், மிருகபலி போன்றவை பற்றியும் அவைகளைச் சீர்திருத்த வேண்டிய அவசியத்தைப் பற்றியும் வற்புறுத்திவந்தனர்.

தேவாரப் புகழ் பெற்ற திருக்கோணேசுவரம், திருக்கேதீச்சரம் போன்ற திருத்தலங்களையும்,[12] கீரிமலையிலுள்ள சிவன் கோவிலையும் புனருத்தாரணம்[13] செய்ய வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறி சைவ மக்களை அத் துறையில் உற்சாகம் காட்டச் செய்தார்.

கல்வி :

யாழ்ப்பாணத்தில் சைவ சமயச் சூழலில் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற இயக்கம் 1842 இல் ஆரம்பமானதெனலாம்.[14] அரசாங்க உதவியுடன் யாழ்ப்பாணத்தில் சமஸ்கிருத—தமிழ் பாடசாலை அமைப்பதற்குரிய பிரயத்தனம் நல்லூர் கந்தசுவாமி கோவில் பிரதமகுருக்களால் 1806—1811 ஆகிய ஆண்டுகளில் மேற் கொள்ளப்பட்டது.[15] கல்விபற்றி இக்கால கட்டத்தில் ஆங்கில அரசாங்கம் திட்ட வட்டமான

கொள்கை எதனையும் கொண்டிராததால் அவரது முயற்சி தோல்வி கண்டது. 1834 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் 239 சைவசமயப் பாடசாலைகள் இருந்தன. அவை காலப்போக்கில் கிறித்தவர்களது கைகளுக்கு மாறின. அதனாற் சைவசமயப் பிள்ளைகளுக்குப் புறம்பான பாடசாலைகள் நிறுவவேண்டிய அவசியமேற்பட்டது.

1842 இல் வைத்திலிங்கச் செட்டியார், முத்துவேலுச் செட்டியார், சிருப்பர் குருநாத முதலியார், இரகுநாத முதலியார் போன்ற உயர் குழாத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்கனவே கூறப்பட்டது போல ஒன்று கூடி, கிறித்தவசமய பிரசாரத்தைத் தடுக்கவும், சைவ சமயத்தைப் பற்றி 'பிரசாரம்' செய்யவும் பாடசாலை ஒன்றை நிறுவினர். 1822 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 22 ஆம் திகதி திறக்கப்பட்ட இப்பாடசாலை ஆகமங்களையும், சாத்திரங்களையும் போதிக்கத் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் இல்லாததினாலே தமிழ்ப் பாடசாலையாக மாறியது. இக்காலத்திலே தோன்றிய சைவக்கல்வி இயக்கம் ஆறுமுகநாவலரது தீவிர அக்கறையினாலே உத்வேகம் அடைந்தது. 1848 இல் ஆறுமுகநாவலர் வண்ணார்பண்ணையிலே தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடர்ந்து நாவலரினதும் பிற தனிப்பட்டோரின் முயற்சிகளினாலும் இணுவில், கந்தர்மடம், கோப்பாய், புலோலி போன்ற இடங்களிற் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் தோன்றின. நாவலர் வித்தியாசாலை நிறுவிய தோடமையாது அங்கு படிப்பிப்பதற்குரிய நூல்களையும் எழுதி அச்சிட்டு வெளியிட்டார். அவரது நூல்கள் தரம் பிரித்து எழுதப்பட்டன. இந் நூல்கள் கிறித்தவர்களால் வெளியிடப்பட்ட நூல்களிலும் சிறந்து விளங்கின. ஆரம்பமான காலந் தொடக்கம் நாவலரது சைவப்பிரகாச வித்தியாசாலை நிதி நெருக்கடியை எதிர்நோக்கியது. புரட்டஸ்தாந்து, கத்தோலிக்க பாடசாலைகளுக்கு அரசாங்கம் வழங்கிய உதவி நன்கொடையைப்போல[17] நாவலர் பாடசாலைக்கும் உதவி வழங்க வேண்டுமென நாவலரும், சைவர்களும் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தனர்.[18] கிறித்தவ செல்வாக்கில் இருந்த அரசாங்கக் கல்விப் பகுதி அவர்களது வேண்டுகோளைப் புறக்கணித்தது.[19] இக் கோரிக்கை காரணமாக எழுந்த விவாதங்கள் சைவர்கள் தமது தனித்துவத்தைப் பேணிக் காக்க முயன்றமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.[20] ''தேசியக் கல்வி'' என்ற தலைப்பில் உதயதாரகை நாவலர் பாடசாலைக்கு எதிராக ஐந்து தொடர் கட்டுரைகளைப் பிரசுரித்தது[21]. ஈற்றில் 1870 ஆம் ஆண்டிலேயே நாவலர் பாடசாலைக்கு அரசாங்க உதவி நன்கொடை கிடைத்தது. ஆங்கிலம் போதிக்கப்பட்டாலும் சுயமொழிப் பாடசாலையாகவே அரசாங்கத்தாற் பதிவு செய்யப்பட்டது.

1855 ஆம் ஆண்டளவில் நிதிப்பற்றுக்குறை ஏற்பட்ட பொழுது கிறித்தவ பாடசாலைகள் பாடசாலைக் கட்டணங்களை உயர்த்தின. இதனால் ஆங்கிலக் கல்வியின் சகாயத்தை அனுபவித்த சைவர்கள் அவதியுற்றனர். அரசாங்கம் சமயச்சார்பற்ற பாடசாலைகளை நிறுவவேண்டுமெனக் கோரினர்.[22] இம்முயற்சிக்கும் யாழ்ப்பாணத்தவருக்கு கல்வி போதிப்பதை தமது ஏகபோக உரிமையாக்கியிருந்த கிறித்தவர்கள், குறிப்பாக, அமெரிக்க மிஷனரிமார் எதிர்த்தனர்.[23] அரசாங்கமும் இவ்விடயத்தில் அசிரத்தை காட்டியது. அரசாங்க உத்தியோகத்திற்கு விண்ணப்பிப்போர் தொகை குறைந்து தோட்ட வேலைகளில் ஈடுபடுவோர் தொகை கூடவேண்டும் என்பதே இக்கால அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தது.

அரசாங்கத்தின் அசிரத்தைக்கும் கிறீத்தவர்களது எதிர்ப்பிற்கும் மத்தியிலே தனிப்பட்ட சைவர்கள் பாடசாலைகளை அமைக்க முயன்றனரேனும், அரசாங்கத்தின் எல்லைச் சட்டத்தினாலும், அதன் விளைவாக ஏற்பட்ட அரசாங்க அங்கீகாரமற்ற நிலையாலும் பாடசாலைகள் நிறுவ முடியவில்லை. மேலும் பெரும்பாலோர் ஆங்கிலப் பாடசாலைகளையே நாடினர். சமயச் சின்னங்களாகிய திருநீறு, சந்தனம் போன்றவற்றை அகற்ற மறுத்த சைவ மாணவர்களை வெஸ்லியன் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டதற்கு ஈடு செய்யும் வகையில் 1872 இல் சைவ—ஆங்கில வித்தியாசாலை ஒன்றினை நாவலர் நிறுவினர். இப்பாடசாலையின் தோற்றத்தினால் யாழ் மத்தியகல்லூரியின் மாணவர்தொகை வீழ்ச்சியுற்றது.[24] எனினும் பணமுடைமையாலும், அரசாங்க அங்கீகாரம் கிடைக்காததனாலும் இப்பாடசாலை 1876 இல் மூடப்பட்டது.

இக்காலப் பகுதியில் நடைபெற்ற இயக்கத்தைக் கொண்டுநடாத்தியோர் பழைமை விரும்பும் பிரதேச உயர்ந்தோர் குழாத்தைச் சேர்ந்தவர்களாவர். சமயத்துறையிற் சைவாகம வழியிற் சமயத்தை நெறிப்படுத்த முயன்றமை முற்றிலும் வெற்றி பெற்றதெனக் கூறமுடியாது. உயர்மட்டத்தில் சமயம், தத்துவம் போன்ற கலந்துரையாடல்கள் வலுப்பெற்றன. தேவதை வழிபாடும், மிருகபலியிடுதலும், தேவதாசி நடனமும் முற்றாக ஒழியவில்லை. பிற்காலத்தில் இவைகளுக்கெதிரான எதிர்ப்பு வலுவடைந்ததற்கு இவ்வியக்கமே தோற்றுவாயாக இருந்ததெனலாம். இவ்வியக்கம் தாபன அமைப்பு எதையும் கொண்டிருக்கவில்லை. சைவசமயம் பற்றிக் கிறித்தவ பாடசாலைகளிலும் உயர்மட்டத்திற் போதிக்கப்பட்டது. அமெரிக்க மிஷனைச் சேர்ந்த கலாநிதி கொய்சிங்ரன் என்பவர் சைவசித்தாந்த நூல்களான சிவஞானபோதம், சிவப்பிரகாசம், தத்துவக் கட்டளை ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். தமிழ்க் கல்விக்கும்

உரிய இடம் கிறித்தவ பாடசாலைகளிற் கிடைத்தது. மேலும், கிறித்தவ பாடசாலைகள் தாழ்ந்த சாதியினருக்கு அளித்த சலுகைகளையும் உதவிகளையும் போலச் சைவமறுமலர்ச்சியை ஏற்படுத்த விழைந்தோர் மேற்கொண்டதற்குரிய சான்றுகள் இல்லை. இவ்வியக்கம் உயர்சாதியினரது இயக்கமாகவே விளங்கியது. இதனாலும் மக்கள் மத்தியிற் கிறித்தவ பாடசாலைகளுக்குச் செல்வாக்கு இருந்தது. மறுபுறம் இக்கால வியக்கம் கண்மூடித்தனமாகக் கிறித்தவசமயத்தைத் தழுவுவோரின் ஊக்கத்தைக் குறைத்ததோடு, கிறித்தவ சமயத்தைத் தழுவியோரை மீண்டும் சைவசமயத்தைத் தழுவச் செய்வதில் வெற்றிகண்டது.

இவ்வியக்கத்தில் அவதானிக்கப்பட வேண்டிய இன்னொரு சிறந்த அம்சம் ஈழத்தையும், இந்தியாவையும், குறிப்பாகத் தென்னிந்தியாவையும் ஒன்றெனக் கருதியமையாகும். சிதம்பரம், காசி போன்றன சைவர்களிடையே பிரதான யாத்திரைத் தலங்களாக விளங்கின. நாவலரும் சிதம்பரத்தையே தனது சமய—தமிழ் வளர்ச்சிக்குக் கேந்திரத் தானமாகக் கொண்டார். ஆனால் தென்னிந்தியச் சைவர்கள் இதற்குப் பதிலாக ஈழத்துச் சைவர்கள் பற்றி அக்கறை காட்டியதற்கோ அல்லது பிறசமயத்தைத் தழுவியவர்களை தடுத்து நிறுத்த முயற்சிகள் மேற்கொண்டதற்கோ ஆதாரங்கள் இல்லை. நாவலரது சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு ஆரம்பத்திற் பொருளுதவி புரிந்தோரிற் பெரும்பான்மையினர் யாழ்ப்பாணச் சைவர்களே. கிறித்துவ பாடசாலைகளது ஊடுருவலைத் தடுக்க முடியாது போகவே நாவலர் ஈழத்துச் சைவர்களை இந்தியாவில் உள்ள பாடசாலைகளையே நாடும்படி வேண்டுகோள் விடுத்தார். இதுபோன்ற வேண்டுகோள் பிற்காலத்திற் பௌத்தர்களுக்கும் அநகாரிக தர்மபாலாவால் விடுக்கப்பட்டது. சிதம்பரத்துக்கும், ஏனைய தென்னிந்திய திருத்தலங்களுக்கும் ஈழத்தவர்கள் விளைநிலங்களை உபகரித்தனர்; அத்துடன் அங்கு சத்திரங்களையும் கட்டினர். இவ்வளவுக்கும் ஈழத்தில் நகுலேஸ்வரம், திருக்கேதீச்சரம், முன்னேச்சரம் போன்ற திருத்தலங்கள் கவனிப்பாரற்றுக் கிடந்தன. (கோணேஸ்வரத்தில் வெள்ளிக்கிழமைகளிற் பூசை செய்வதற்கு மாத்திரம் அனுமதியளிக்கப்பட்டது. இங்கு திருப்பணிவேலைகளைத் தொடருவதற்கு ஆங்கிலக் கடற்படை தங்கியிருந்தமையும், அயலிலே துறைமுகம் இருந்தமையும் தடையாகவிருந்தது எனலாம்.) தாய் சேய் மனப்பான்மையுடன் செயற்படும் எண்ணம் ஈழத்தவர் மத்தியிலே நான் கூடியளவு காணப்பட்டது.[25] கதிர்காமம் தவிர முக்கிய யாத்திரைத் தலங்கள் இந்தியாவில் இருந்ததும், அங்குள்ள கோவில்களின் சிறப்பும் ஈழச்சைவர்களைக் கவர்ந்தன எனலாம். நாவலரது முயற்சிகளிற் பல ஈழச்சைவமக்களின் அசிரத்தையால் அவர் காலத்திற் கைகூடவில்லை என்பதை அவரே ஒப்புக் கொண்டுள்ளார்.[26]

## 1880—1917 :

நாவலர் மறைந்ததைத் தொடர்ந்து இவ்வியக்கம் சிறிது தளர்ச்சியடைந்தாலும் வெகுவிரைவில் முந்தியகாலப் பகுதியிலும் பார்க்கச் சுறுசுறுப்புடன் செயற்பட ஆரம்பித்தது. 1880 ஆம் ஆண்டு தொடக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டு முடியும்வரை உள்ள காலப் பகுதியிற் சைவ சமயவளர்ச்சிக்கான திட்டங்கள் நவீனமயப்படுத்தப்பட்டன. முந்திய காலப்பகுதியைப் போலன்றி இக்கால இயக்கத்தை வழி நடாத்தியோர் ஆங்கிலக் கல்வியின் முழுப்பயனையும் பெற்ற உயர் உத்தியோகங்களில் அமர்ந்திருந்தவர்களாவர். சட்டவல்லுனர்கள், இளைப்பாறிய நீதிபதிகள், பொருள் வசதி படைத்தோர் முதலியோர் சைவ சமய வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொள்ளத் தொடங்கினர். இந்தியாவிலே தோன்றிய பிரம்மசமாஜம் போன்ற சபைகளின் நடவடிக்கைகளும் இராமகிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியோர் இந்து சமய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகளும் அளித்த புதிய தெம்பும் இவர்களைக் கவர்ந்தன. இந்திய தேசிய காங்கிரசுடனும் இவர்களிற் சிலருக்குத் தொடர்பிருந்தது.

நாவலர் மறைந்த பின்னர் கிறித்தவர்களது பிரசாரம் பன்மடங்காக அதிகரித்தது. இந்நிலையைத் தொடரவிடாது தடுக்கும் நோக்கத்துடன் நாவலரது உறவினர்களும், மாணவர்களும் சைவப்பிரகாச சமாஜம் என்னும் சபையைத் தாபித்து, உதயபானு என்னும் சைவப் பத்திரிகையை வெளியிட்டனர். இதே காலப் பகுதியிற் பௌத்தமக்கள் மத்தியில் அமெரிக்கரான கர்ணல் டேவிட் ஒல்கொட் என்பவருடைய உழைப்பாலும் உற்சாகத்தாலும் பௌத்த பிரம்மஞான சபை என்ற சபை நிறுவப்பட்டது. இவர்கள் பௌத்த சமயத்தை வளர்க்கும் பொருட்டும் பிரசாரம் செய்வதற்காகவும் சரசவி சந்தரச என்ற பத்திரிகையை வெளியிட்டனர். நவீனமுறையிற் பௌத்தத்தை வளர்க்கக் கூடிய தாபன அமைப்பையும், தலைமை நுணுக்கத்தையும் பௌத்தர்களுக்குக் கொடுத்து, அவர்கள் மத்தியில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த உணர்ச்சியை மேலும் உத்வேகம் அடையச் செய்தனர். 1880 இல் ஆரம்பிக்கப்பட்ட இச்சபை 1890 அளவில் நாற்பது பௌத்த பாடசாலைகளை நிறுவியது. இவர்களுடைய முன்னேற்றம் சைவசமயத்தவர்களுக்கு ஊக்கமளிப்பதாயிருந்தது. மேலே கூறப்பட்ட சபைபோன்ற அமைப்பு நமக்கும் அவசியமென்பதை உணர்ந்த சைவர்கள்

1888 இல் சைவசமயபரிபாலன சபையைத் தாபித்தனர் [27]. இச் சபையின் தோற்றம் ஈழத்துச் சைவசமய வளர்ச்சி வரலாற்றில் ஒரு திருப்பம் எனலாம். சைவசமய பரிபாலன சபையினது நோக்கம் பின்வருமாறு:—

(அ) வைதிக சமய உண்மைகளையும் கோட்பாடுகளையும் நிவடங்கிலும் சென்று பிரசாரம் செய்யக்கூடிய திறமையான பிரசாரக் குழுவொன்றை அமைத்தல்.

(ஆ) சைவசமூகத்தினது அரசியல், சமூக, சமய அபிலாசைகளை வெளிப்படுத்தக் கூடிய பத்திரிகைகள்; இலக்கியம், விஞ்ஞானம், தார்மிகம், சமயம் ஆகிய துறைகள் சம்பந்தப்பட்ட நூல்களைக் கொண்ட நூலகம ஒன்று நிறுவுதல்.

(இ) உயர்தர உலகியற்கல்வியினையும் சமயக்கல்வியினையும் போதிக்கக் கூடிய ஆங்கில பாடசாலை நிறுவுதல்.

(ஈ) பத்திரிகை வெளியிடல்.

(உ) பெண்களைப் படிப்பித்தல்.

மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர், மாதகல் சு. ஏரம்பையர் போன்றோரையும் இன்னும் சிலரையும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களிற் சைவப்பிரசங்கம் செய்வதற்கு உபயோகப்படுத்தினர். மேலும் விக்டோரியா நூல்நிலையமொன்றையும் நிறுவினர். சமயப் பிரசாரத்திற்குப் பத்திரிகைகளின் அவசியத்தை உணர்ந்த இவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் இந்துசாதனம் என்ற பத்திரிகையை வெளியிட்டனர். சைவசமய வளர்சசிக்கு இப்பத்திரிகை குறிப்பிடக்கூடிய தொண்டு ஆற்றியுள்ளது. தனிப்பட்ட பிரமுகர்களின் பாடசாலைகள் தோல்வியில் முடிந்ததை அனுபவரீதியாகக் கண்ட சபையினர், 1890 ஆம் ஆண்டு நியாயவாதி நாகலிங்கம் அவர்கள் நடத்தி வந்த பாடசாலையைப் பொறுப்பேற்று இந்து உயர்தரப்பாடசாலை என்ற பெயருடன் நடாத்தினர். இப்பாடசாலையின் வளர்ச்சி இந்து சமய வளர்ச்சியாகுமெனக் கருதிய சைவர்கள், இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பல வழிகளிலும் உழைத்தனர். பாடசாலைக் கட்டடங்களைக் கட்டி எழுப்பும் முயற்சியில் முன்னின்று உழைத்தவர்கள் நாகலிங்கமும் சி. த. மு. பசுபதிச் செட்டியாருமாவர். 1893இல் இப்பாடசாலையை கல்கத்தா பல்கலைக்கழகம் அங்கீகரித்து 1895 இல் தனது இணைப்புக் கல்லூரிகளில் ஒன்ருக்கியது. ஆங்கிலேய அரசின் காலத்திற் பெற்ற தாராண்மை வாதக் கல்வியின் விளைவால் உருவாகிய புத்திஜீவிகளினது முயற்சியாலே தோற்றுவிக்கப்பட்டதே இந்து உயர்தரப் பாடசாலை எனலாம். அந்நியரது கலாசார ஆதிபத்தியத்திற்கு எதிராக ஏற்பட்ட அறிஞர்களது எதிர்ப்பின் தோற்றத்தையும் இங்கு அவதானிக்க முடியும். வண்ணுர்பண்ணை இந்து உயர்தர பாடசாலையைத் தொடர்ந்து இருபதாம் நூற்ருண்டின் முதற் கூற்றில் கொக்குவில், உருப்பராய், காரைநகர், சாவகச்சேரி, வட்டுக்கோட்டை போன்ற இடங்களிற் கிளைப் பாடசாலைகள் தோன்றின. இந்து உயர்தரப் பாடசாலையுடன் தொடர்பான பாடசாலைகளை விடப் பத்தொன்பதாம் நூற்ருண்டின் முடிவிலும் இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் கந்தரோடை, தெல்லிப்பழை, மானிப்பாய் ஆகிய இடங்களிலும் தனிப்பட்டவர்களால் ஆங்கிலப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.[28]

இப்பாடசாலைகள் ஒரே நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தினுல் ஒன்றிற்கொன்று உதவியாக ஆசிரியர்களையும், அதிபர்களையும் கொடுத்துதவியதுடன் தம்முள்ளே திறமையான பரீட்சைகளையும் நடாத்தின. இப்பாடசாலைகளின் தோற்றமும் வளர்ச்சியும் கிறீந்தவ பாடசாலைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியதோடமையாது சைவசமயச் சூழலில் மாணவர்கள் கல்வியிலும் வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்தது. கிழக்கு மாகாணத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களே வெளிப்படையாகச் சைவக் கல்வி இயக்கத்தினைக் கொண்டு நடத்தினர். வெஸ்லியன் மிஷனரிகளின் ஏவுதலினுல் இவர்களை அரசாங்கம் தனது அதிகாரத்தை உபயோகித்துத் தடைசெய்தது.[29]. எனினும் சைவர்களிடையே கல்விக்காகப் ''பாசாங்கு செய்யும்'' மனப்பான்மையும் அருகிவரத் தொடங்கியது. கீழைத் தேசங்களிற் குறிப்பாக ஆங்கில அரசின் ஆதிபத்தியத்தின் கிழிருந்த நாடுகளில் தேசிய உணர்ச்சி முதலில் கலாசாரத் துறையிலே தோன்றியது. ஆங்கிலக்கல்வியும், தாராண்மைவாதமும் கீழைத்தேசத்தவர்கள் தம்மைத் தாம் அறிந்துகொள்ளத்தக்க தம் பழைய கலாசாரங்களின் சிறப்பியல்புகளைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய எதிர்மறை விளைவை ஏற்படுத்தின. இதன் விளைவாகத் தோன்றிய கல்வியியக்கங்கள் பிற்காலத் தேசியக் கிளர்ச்சிகளுக்கு உறுதுணையாக அமைந்தன.

ஆண்களுக்குரிய பாடசாலைகள் துரிதவேகத்தில் நிறுவப்பட்டபொழுது, பெண்களது கல்வி வளர்ச்சி பற்றியும் அவர்களுக்கெனத் தனியான உயர்தர கல்லூரி ஒன்று அமைக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்தார் சேர். பொன். இராமநாதன்; அவரது ஊக்கத்தின் பேரில் திருநெல்வேலியில் அமைக்கப்பட்ட சிறிய பெண்கள் பாடசாலையைத் தொடர்ந்து மருதனாமடத்தில் இராமநாதன் பெண்கள் பாடசாலை அமைக்கப்பட்டது. சைவமகளிர் கல்விவளர்ச்சிக்கு இது பெரிய தொண்டாகும். இப்பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டவர் ஆங்கிலப் பெண்ணாவார்.

சைவசமய வளர்ச்சிக்கென உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண இந்து உயரதரப் பாடசாலையையும், இராமநாதன் பெண்கள் கல்லூரியையும் தொடக்க காலத்தில் வளர்த்தெடுத்த பெருமை கிறீத்தவர்களாகப் பிறந்த அதிபர்களையே சாரும். ஆங்கிலமும், தமிழும் சரிவரப் போதிக்க வேண்டுமெனவும், சைவசமயக் காற்றோட்டம் பாடசாலைகள் முழுவதும் வீசவேண்டுமெனவும் எண்ணிய சைவர்கள் கிறீத்தவர்களைப் பாடசாலைகளின் அதிபர்களாக நியமித்தமை கல்விமுறையினை நவீனப்படுத்துவதற்காகவும் மேலைநாட்டு உயர்தரப் பாடசாலைகள் போல விருத்தியடையச் செவதற்காகவுமாகும்.

கிறித்தவ மிஷனரிமார் தம் பாடசாலைகளிற் கல்வி போதிப்பதற்குத் தேவையான ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காகப் பயிற்சிக் கலாசாலைகளையும், அப் பயிற்சி ஆசிரிய மாணவர்கள் படிப்பித்தல் பயிற்சி பெறுவதற்காய கைத் தொழிற் பாடசாலைகளையும், அனாதைப் பாடசாலைகளையும் நிறுவினர். சமயம் மாறாது இப்பாடசாலைகளிற் பயிற்சிபெற்று வெளியேறமுடியாது. எனவே சைவர்களுக்கென ஒரு ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையொன்றினை நிறுவுவதற்கெனக் கீரிமலையில் 1913 ஆம் ஆண்டு சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இச் சபையினைத் தாபித்தற்காக உழைத்தவர் காரைநகர் உபாத்தியாயர் எஸ். அருணாசலமாவார். சட்ட நிரூபண சபை அங்கத்தவரான சேர். அ. கனகசபையின் தலைமையிலான இக் கல்விச்சபையினது நோக்கம் முற்றிலும் நிறைவேறவில்லை. கல்வித்திணைக்களத்தினரது தேவைகளைத் திருப்திப்படுத்தக்கூடிய நிலையில்லாததாற் கீரிமலையிலே தாபிக்கப்பட்ட பயிற்சிக் கலாசாலை கைவிடப்பட்டது. இம்முயற்சி தோல்வியுற்றதின் பின்னர் சேர். பொன். இராமநாதனும், சேர் அ. கனகசபையும் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றை அமைக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தினர். அரசாங்கம் சைவர்களுக்கெனத் தனியாக ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையைத் தாபிக்க விரும்பவில்லை. 1915 ஆம் ஆண்டு கிறித்தவ மிஷனரிமாரையும், இந்து சமூக பிரமுகர்களையும் கூட்டி சகல சமயத்தினருக்கும் பொதுவான பயிற்சிக் கல்லூரியைத் தாபிப்பதற்கு அனுமதியளித்தது. உரோமன் கத்தோலிக்க மிஷனரிமார் இதனை விரும்பவில்லை. எனினும் புரட்டஸ்தாந்து மத மிஷனரிமாரும் இந்துக்களும் இணக்கம் தெரிவித்ததாற் கோப்பாயில் 1916 ஆம் ஆண்டு இப் பொது ஆசிரிய பயிற்சிக் கல்லூரி தாபிக்கப்படடது.

ஆறுமுகநாவலர் காலத்திலே திருக்கேதீச்சரத்தைச் சைவர்களாற் பெற்றுக் கொள்ள முடியவில்லை. சுபதார் வைத்திலிங்கம், கொழும்பு தம்பையா, கடிதவண்டி ஆசைப்பிள்ளை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முகாமையாளர் போன்றோர் கோவில் இருந்த பகுதியினை வாங்குவதற்காகச் செய்த மனுக்களை வட மாகாண அரசாங்க அதிபராக இருந்த துவைனம் அவர்கள் நிராகரித்தார். பழைய கோவிலைப் புனருத்தாரணம் செயவதற்காகவே இம் மனுக்கள் செய்யப்பட்டாலும், அவர்களது நோக்கம் அங்குள்ள திரவியங்களைத் தேடுவதற்காக விருக்கவேண்டுமெனத் துவைனம் சந்தேகித்தார். அத்துடன் மன்னார் கத்தோலிக்கரும் அப்பிரதேசத்தைக் கோரினர். இக் காரணங்களினாலும், ஏலவிலை மிகவும் அதிகமாக இருந்ததினாலும் 1893 ஆம் ஆண்டுவரை அவ்விடத்தைச் சைவர்களால் வாங்கமுடியவில்லை. ஈற்றில் 13.12.1893 ஆம் ஆண்டு திரு. ஆர். ஏ. ஏ. பழனியப்பச் செட்டியாரால் இவ்விடம் வாங்கப்பட்டது. அன்று தொடக்கம் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரது வேண்டுகோளின்படி சி. த. மு. பசுபதிச் செட்டியாரவர்கள் அப்பிரதேசத்தைச் சுத்தமாக்கிப் பழைய கோவிலையும் அதற்குரிய சின்னங்களையும் கண்டுபிடித்தார். 1903 ஆம் ஆண்டு சிறிய கோவில் கட்டப்பட்டு மாதோட்ட நகரத்தாராலும் பின்னர் யாழ்ப்பாண நகரத்தாராலும் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

திருக்கேதீச்சர ஆலய மீட்புக்கு மாத்திரமன்றி தீவின் ஏனைய பகுதிகளிலும் கோவில் வழிபாட்டிற்குச் செட்டியார் சமூகத்தினர் மகத்தான தொண்டாற்றியுள்ளனர். வண்ணைச் கதிர்வேலாயுதர் கோவிலும் செட்டிமாராலேயே கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அமைப்பதற்கு நிலம் வழங்கியவர் ஆறுமுகச் செட்டியாராவர். அத்துடன் ஆறுமுகவர் ''நாவலர்'' என்ற பட்டம் பெற்று, யாழ்ப்பாணம் திரும்பியபொழுது பெரும் வரவேற்பை ஒழுங்கு செய்தவர்களும் செட்டிமார்களே. ஈழத்திலிருந்த சைவசமூகத்தினரிடையே பொருளாதார வசதிபடைத்தோர்களாக விளங்கியவர்கள் செட்டிமார்களே. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஏனைய சைவர்களுடைய பொருளாதார நிலை

விருத்தியடையும் வரை சைவ கைங்கரியங்களுக்குச் செட்டிநகரத்தார்கள் பெரும் பண உதவி புரிந்தார்கள். நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் சைவசமயத்தவர்கள்; முருகனிற்குக் கோவில் அமைப்பதில் முன்னிற்பவர். சைவசமயத்தைத் தழுவிய பல்வேறு சமூகத்தவர்களிற் கோவில் வழிபாட்டிற்காக அதிகம் பணம் செலவிட்டவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டிமார் சமூகத்தவர்களே எனக் கூறப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றுண்டிலே தென்னிலங்கையிற் சைவக் கோவில்களை அமைத்துப் பெரும் விழாக்களை நடாத்திய பெருமை இவர்களைச் சாரும். கதிர்காமத்திற்கு வருடந்தோறும் எடுத்துச் செல்லும் வேல், சிலகாலங்களில் தொற்று நோய் பரவலால் தடைப்படுவதைக் கண்ட செட்டிமார்கள் இவ்வுற்சவத்தைக் கொழும்பில் நடைபெறச் செய்தனர். இவ்வுற்சவங்களுக்காகச் சென்ற நூற்றுண்டின் நடுப்பகுதியிற் கொழும்பில் முன்பிருந்த கதிரேசன், பிள்ளையார் கோவில்களை விடப் புதிய கோவில்களையும் அமைத்து வேல்விழா உற்சவத்தைத் திறம்பட நடாத்தியதோடு, கொழும்பிற் படிப்படியாக வந்து குடியேறிய ஏனைய சைவர்களினது வழிபாட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்தனர்.

சென்ற நூற்றுண்டிலும், இந்நூற்றுண்டின் ஆரம்பத்திலும் தீவடங்கிலும் பல சைவ ஆலயங்கள் தோன்றினலும் அவையனைத்தும் ஆகம விதிகளுக்கமையவும், கலையுணர்வுடனும் கட்டப்பட்டவையெனக் கூற முடியாது. இதற்கு விதிவிலக்காக அமைந்துள்ள ஒரோயொரு கோவில் கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலாகும். பொன்னம்பலம் முதலியாரவர்களால் 1857 ஆம் ஆண்டில் கட்டப்பட்டு, கும்பாபிஷேகம் செய்யப்பட்ட இக்கோவில், அவர் மகனுன பொ.ன். இராமநாதனுல் தென்னிந்திய திராவிடக் கட்டடச் சிற்பமுறைப்படி கருங்கல்லாற் கட்டப்பட்டு 1912 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. ஈழத்திலே திராவிடக் கட்டடக்கலை வடிவுக்கு இலக்கணமாக அமைந்திருக்கும் கோவில் இதுவொன்றே.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிற் சமயமறுமலர்ச்சி உத்வேகமடைவதற்கு இன்னெரு காரணி சுவாமி விவேகானந்தரின் ஈழ வருகையாகும். 1893 ஆம் ஆண்டில் சிக்காகோவில் நடைபெற்ற சர்வசமய மகாநாட்டிற் பங்குபற்றி இந்துசமயத்தின் மேலான பண்புகளையும், சித்தாந்தத்தையும் எடுத்துவிளம்பி மேலைநாட்டவரைக் கவர்ந்த சுவாமி விவேகானந்தர் 1897 ஆம் ஆண்டு ஈழம் வந்தார். கொழும்பு, அனுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அவர் ஆற்றிய விரிவுரைகள் சைவர்களுக்குப் பெரும் உற்சாகத்தைக் கொடுத்தன. சுவாமிகளது பெருமையினையும், அவரது தொண்டினுல் இந்து சமயம் எழுச்சியுற்று வருவதையும் அறிந்திருந்த பௌத்தர்கள் அனுராதபுரத்திற் சுவாமிகளது விரிவுரையைக் குழப்பினர். சுவாமிகள் அமெரிக்காவில் இந்துசமயம் பற்றி ஆற்றிய உரைகளையும், அவர் பற்றி மேலைதேசக் கிறீத்தவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயங்கள் பற்றி மேலைநாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளையும் மக்களுக்கு இந்து சாதனம் வழங்கியது. இவைகள் இங்குள்ள கிறீத்தவர்கள் மத்தியிற் புகைச்சலை ஏற்படுத்தியது. விவேகானந்தரது சொற்பொழிவுகள் வெறும் சமயச் சொற்பொழிவுகள் அல்ல. அவரது அறிவுரைகளிற் சமயமும் தேசாபிமானமும் இழையோடியிருந்தன. இந்துக் கலாசாரத்தின் மேம்பாட்டினை நவீன முறையில் உலகிற்கு எடுத்து விளக்கிய முதல் இந்தியர் விவேகானந்தர் என்றுல் மிகையாகாது. அவரது வருகையும், பின்னர் அவரது சீடரான சுவாமி சர்வாநந்தாவின் வருகையும் சொற்பொழிவுகளும் ஈழத்தின் பல பாகங்களிலும் இந்து இளைஞர் மன்றங்களும், அவரது பெயரிலான சபைகள், பாடசாலைகளும் தோன்றி சமயவளர்ச்சிக்கு பெருந் தொண்டாற்ற உதவின.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிற் கொழும்பிலும் சைவ எழுச்சி காணப்பட்டது. இதற்கு வழிவகுத்து வைத்தவர் பொன்னம்பல முதலியாராவர். கொச்சிக்கடையில் இவர் அமைத்த பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலைத் தொடர்ந்து சைவ பரிபாலன சபை, இந்து மகாசபை போன்றவைகள் தோன்றிச் சமயவளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றின. பொன்னம்பல முதலியாரது மூத்தமகனுன குமாரசுவாமி முதலியார் பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலைத் திறம்பட நடத்தியதோடு பிராமணக் குருக்களுக்கென ஆகமபாடசாலையையும் நடாத்தினர். மேலும் திருக்கேதீச்சரத்தைச் சைவமக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கத்துடன் வாதாடினுர். யாழ்ப்பாண இந்து உயர்தர பாடசாலை அங்கீகாரம் பெறுவதற்கும் அரசாங்க உதவி நன்கொடை பெறுவதற்கும் வழிவகுத்ததோடமையாது, பாடசாலைக்குப் பொருளுதவியும் செய்து, கொழும்பிலுள்ள ஏனையவர்களும் உதவச் செய்தார். மேற்போந்த புதிய விருத்திகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் நாவலர் மரபில் வந்தோர் தொடர்ந்து கிறீத்தவ மத கண்டனங்களையும், பிரசங்கங்களையும் செய்துவந்தனர். சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர், காசிவாசி செந்திநாதையார், நீர்வேலி

சிவசங்கரப் பண்டிதர், சி. வை. தாமோதரப்பிள்ளை போன்றோரும் கிறித்தவ மத கண்டன சபையாரும் பல கண்டன நூல்களை வெளியிட்டனர். இந்து சாதனம், இலங்கைநேசன் போன்ற பத்திரிகைகள் இவர்களுக்கு உதவின.

ஈழத்தில் பௌத்த மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த பிரம்மஞானசபையாருக்கும் திரு. பொன். இராமநாதன் அவர்களுக்குமிடையே இருந்த தொடர்பு இந்து—பௌத்த வளர்ச்சிக்கு ஒரு மித்து உழைக்கும் நிலையினை ஏற்படுத்தியது. கர்னல் ஒல்கொட்டும் பொன். இராமநாதனும் சேர்ந்து நிறுவ இருந்த இந்து—பௌத்தக் கல்லூரி போதிய ஆதரவின்மையால் கைகூடாது போயிற்று. தீர்க்க தரிசனமான இம் முயற்சி கைகூடியிருப்பின் பின் நாட்களில் ஏற்பட்ட சில தப்பபிப்பிராயங்கள் ஒருவேளை ஏற்படாதிருந்திருக்கலாம்.[30] இக் கல்லூரிக்கென பொன். இராமநாதன் சேர்த்த 25,000 ரூபா சுற்றில் கொழும்பு சைவபரிபாலன சபைக்குக் கொடுக்கப்பட்டது.[31]

முந்திய காலப் பகுதியைப் போலன்றி, இக்காலப் பகுதியில், குறிப்பாக இருபதாம் நூற்றூண்டின் முதலிரு தசாப்தங்களிலும், இளைஞர்கள் மத்தியிற் சாதி அனுட்டான முறைகள் பற்றிச் சீர்திருத்தக் கருத்துக்கள் செல்வாக்குப் பெறவாரம்பித்தன. பத்தொன்பதாம் நூற்றூண்டின் கடைக் கூற்றிலும், இருபதாம் நூற்றூண்டின் முதலிரு தசாப்தங்களிலும் வேளாளருக்கும் தாழ்ந்த சாதியினருக்குமிடையே பல கலவரங்கள் நடைபெற்றன. இவைகளிற் சில பிரேத அடக்க, தகன முறைகள், பிரேத ஊர்வலத்தில் பறை—மேளம் அடித்தல் என்பன பற்றியனவாகும். பறை—மேளம் அடிக்கும் முறை தமக்குப் பிரத்தியேகமானதொன் றென வேளாளர் வாதாடுவது முறையற்றது; இந்தியாவில் உயர் சாதியினரது பிரேத ஊர்வலத்தில் பறை—மேளம் அடிப்பதும், மேளம் அடிப்போர் ஊர்வலத்தில் கலந்து கொள்வதும் இழிவாகக் கருதப்பட்டது; எனவே ஈழத்திலுள்ள வேளாளர் அதனையொரு சிறப்புரிமை யெனக் கருதி, அச்சிறப்புரிமை கோரும் தாழ்ந்த சாதிகளது ''தலைகைகளைக் கொய்யாது'' இந்திய சைவ வேளாளர் போன்று மேளம் அடிப்பதையே முற்றாக நிறுத்திவிட வேண்டுமென யாழ்ப்பாண இந்து இளைஞர் மன்றத்தினர் வாதிட்டனர்.[32]

''பஞ்சமர்களது'' கல்வி விருத்தி பற்றிச் சைவ சமூகம் தீவிர கவனம் எடுக்க வேண்டும் மெனவும், அப்படிச் செய்யத் தவறுமிடத்து, கிறிஸ்தவர்கள் செய்யும் முயற்சிகளுக்குக் குந்தகம் விளைக்காமல் இருத்தல் வேண்டும் என்ற சிந்தனையும் முதன்முதல் அரும்ப ஆரம்பித்தது.[33] பஞ்சமர் மத்தியில் ஆசாரவாழ்க்கை முறையும், சமய அறிவும் பெருமளவில் வளர்ச்சி பெற்றுள்ள போதும் அதை நல்ல முறையில் உபயோகப் படுத்த உயர் சாதியினர் என்றழைக்கப்பட்டோர் தவறிவிட்டனர் என்பதும் இவ்விவாதங்களின் போது எடுத்துக்காட்டப்பட்டது. பழமை விரும்பும் பெரியவர்களது செல்வாக்கின் தாக்கத்தினலும், தனிப்பட்ட இயக்கத்தை நடாத்தப் பணவுதவி இல்லாமையாலும் இக்காலகட்டத்தில் இவ்வியக்கம் தான் நினைந்ததைச் சாதிக்க முடியவில்லை.

முந்திய காலப் பகுதியைப் போலன்றி இக்காலத்திற் சைவசமைய விழிப்புணர்ச்சி தீவடங்கிலும் பரவத் தொடங்கியிருந்தது. சட்ட நிரூபண சபையிலும், வெளியிலும் அரசியல்வாதிகளும் பங்கு கொண்டு மேலும் ஊக்குவித்தனர். பொன். குமாரசுவாமி, பொன். இராமநாதன், அ. கனகசபை போன்ற அரசியல் வாதிகள் சமயத்துறையிற் பெரும் அக்கறை காட்டினர். இதன் விளைவாகச் சைவசமயம் சீர்திருத்திய பாதை யில் அடியெடுத்துச்செல்ல ஆரம்பித்தது. சைவர்களிடையே ஏற்பட்ட பொருளாதார விருத்தியும், மலாயா, சிங்கப்பூர் போன்ற இடங்களிலிருந்த ஈழத்தவர்களிடமிருந்து வந்த பணமும் இவ்வியக்கங்கள் நல்லமுறையில் நடைபெற உதவின.

ஆலயநிர்வாகம் :

ஈழத்திலுள்ள இந்துக் கோவில்கள் தனிப்பட்டோர் முயற்சியாற் கட்டப்பட்ட போதும் அவற்றைப் புதுப்பிப்பதற்கும் திருத்துவதற்கும் பொதுமக்களும் தாராளமான பண உதவி புரிந்துள்ளனர். மேலும் பலர் காணிக்கையாகத் தமது அசைவற்ற ஆதனங்களையும் அவற்றால் வரும் வருமானத்தையும் கோவில் களுக்குக் கொடுத்தனர். ஆனால் கொடுக்கப்பட்ட பணமும் பொருள்களும் ஏனைய காணிக்கைகளும் சமய விருத்திக்கும், கோவில் தேவைகளுக்கும் உதவாது கோவில் முதலாளிகளது பிரத்தியேக தேவைகளுக்கும் ஆடம்பரச் செலவுகளுக்கும் உதவின. இந்தியக் கோவில்களைப் போல ஈழத்திலுள்ள இந்துக் கோவில்கள் ஆங்கில அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழும், மேற்பார்வையின் கீழும் கொண்டுவரப்படவில்லை. இதனால் கோவில் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்த முடியாது போயிற்று. கோவில் நிர்வாகிகள் தம்மிச்சை போல நடக்க உதவியது. இதனை ஒரு முக்கிய சீர்திருத்தவிடமாக்கிய பெருமை ஆறுமுகநாவலரைச் சேரும்.

கோவிலில் நடைபெறும் நித்திய பூசையும், நைமித்திய திருவிழாவும் தவறாது நடைபெறவும், கோயிலதிகாரிகள் தங்களுக்குரிய கடமையிலே தவறினால் அவர்களைத் தண்டிக்க வேண்டியது அரசினது கடமையெனவும் கோவிற் கணக்குகளை யாவரும் அறியச் செய்வது கோயிலதிகாரிகளினது பொறுப்பு எனவும் அவர் வாதாடினார்.[34] ஆனால் அரசாங்கம் தானாக இந்துக் கோவில் விடயங்களிலே தலையிட விரும்பவில்லை.

எனினும் 1889 ஆம் ஆண்டு அரசாங்கம் இயற்றிய பௌத்த அறநிலைச சட்டம் போன்ற சட்டமொன்று தமக்கும் வேண்டுமென்பதையுணர்ந்த சைவர்கள் 1890 ஆம் ஆண்டு கௌரவ பொன். இராமநாதன் மூலம் சட்ட நிருபணசபைக்கு முறையீடு ஒன்றினைச் சமர்ப்பித்தனர்.[35] அவ்வாண்டில் ரி. செல்லப்பாபிள்ளை, தி. கைலாசபிள்ளை ஆகியோர் நாவலர் சைவப்பிரகாச வித்தியாலையிற் கூட்டிய கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்தின் விளைவே மேலே குறிப்பிடப்பட்ட முறையீடாகும். முறையீட்டாளர்கள் பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொண்டு பௌத்த அறநிலைச் சட்டம் போன்ற கட்டளைச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டுமெனக் கோரினர்:

1. நீவடங்கிலுமுள்ள கோவில்களின், குறிப்பாக வடமாகாணத்திலுள்ளவைகளினது, வருடவருமானம், இலட்சம் ரூபாவளவாகும். தகுந்த நிர்வாகத்தினாலும் திறமையான கட்டுப்பாட்டினாலும் இவ்வருமானத்தை அதிகரிக்கலாம்.

2. கோவில்களினது நன்மைக்கெதிராகவும், காணிக்கை கொடுத்தவர்களது நம்பிக்கைக் கெதிராகவும், கோவில்களினது வருமானம் அர்த்த நாசம் பண்ணப்படுகின்றது. (கோவிலதிகாரிகளால்.)

3. வீணாக விரயம் செய்யப்படும் பணத்தை நல்ல முறையில் உயர்தரக் கல்வி விருத்திக்காகச் செலவிடலாம்.

இவர்களை ஆதரித்து ''இந்து சாதனம்'' ''தேசாபிமானி'' போன்ற பத்திரிகைகள் ஆசிரியத் தலையங்கங்கள் எழுதின.[36] இதன் விளைவாகவும், உயர் குழாத்தினது நெருக்குதல்களினாலும் யாழ்ப்பாணத்திலிருந்த அரசாங்க அதிபர்கள் அக்கறை காட்டத் தொடங்கினர். சீர்திருத்தக்காரர்களையும், சீர் திருத்தப்பட வேண்டியவர்களையும் கூட்டி ஆலய நிர்வாகம் பற்றி ஒழுங்குகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்க அதிபர்கள் முயன்றனர். கோவில் நிர்வாகம் பற்றிப் பல கலவரங்களும் நடைபெற்றன. இவைகளிற் சில கோர்ட்டுகளில் முடிவுற்றன. இதனால் இந்துக் கோவில்களின் நிர்வாகத்தை நம்பிக்கைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டுமென அரசாங்க அதிபர்கள் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறினர். இருபதாம் நூற்றாண்டின் முதற் பகுதியிற் கொழும்பில் உள்ள ஆங்கிலப் பத்திரிகைகளும் இவ்விடயத்தில் ஆர்வம் காட்டின.[37] 1906 ஆம் ஆண்டில் வடமாகாணச் சைவர்கள் மீண்டும் திரு. அ. கனகசபை மூலம் அரசாங்கத்துக்கு முறையீடு செய்தனர். அரசாங்கம் இவ்விடயத்திற் பொறுப்பேற்க மறுத்தது. ஆனால் சைவர்கள் ஒருமித்து நிர்வாகத்தைச் செவ்வனே நடாத்தக்கூடிய திட்டத்தைத் தயாரித்துத் தந்தால் அதை அமுல் நடத்த ஆவன செய்வதாக உறுதியளித்தது. ஆனால் 1910 ஆம் ஆண்டு வரை சைவர்கள் எவ்வித முடிவுக்கும் வரவில்லை. இவ்விடயம் பற்றி 1910 ஆம் ஆண்டு தேசாதிபதி மக்கலம் யாழ்ப்பாணத்தில் நடாத்திய தமிழ்ப் பிரதானிகளின் தர்பாரிலும் விவாதிக்கப்பட்டது. அரசாங்கத்தின் முந்திய முடிவை மாற்றமுடியாது என்பதைத் தேசாதிபதி வற்புறுத்தினார்.[38] எனினும் இக் கால முடிவிற் கோரிக்கைகள் மேலும் வலுப் பெற்று நம்பிக்கைக் கட்டளைச் சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் இந்து ஆலய நிர்வாகம் கொண்டு வரப்பட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தொகுப்பு :

1880–1915 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் சைவசமய வளர்ச்சிக்கு நல்லவாய்ப்பினை அளிப்பனவாக அமைந்தன. ஆங்கில ஆசிரியர்களும், அவர்கள் மரபைப் பின்பற்றிய ஈழத்துக் கிறித்தவ ஆசிரியர்கள் கல்வி பயிற்றுவிக்கும் கிறித்தவ–ஆங்கிலப் பாடசாலைகள் இன்னமும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தாலும், சைவர்களிற் கணிசமான தொகையினர் சைவப்பாடசாலைகளை நாடத் தொடங்கினர். கல்வி விடயங்களில் யாழ்ப்பாணத்திலுள்ள சைவப் பாடசாலைகளுக்கும், கிறித்தவபாடசாலைகளுக்குமிடையே ஒற்றுமையான போக்குக் காணப்பட்டது. குறிப்பாக இந்தியப் பல்கலைக் கழகப் பரீட்சைகளுக்கு தமிழ் மாணவர்கள் தோற்றுவதற்குத் தடைவிதிக்கப்பட்ட பொழுது யாழ்ப்பாண கிறித்தவ சைவப் பாடசாலைகளின் அதிபர்கள் ஒன்று கூடி எதிர்த்தனர். இத்தகைய ஒற்றுமையும், கலர்துரையாடல்களும் பிற்காலத்திலே தேசிய இயக்கத்தில் இருபகுதியினரும் ஒன்றியுழைக்க வழிகோலியது.

தனிப்பட்டவர்கள் தத்தம் போக்கில் இப்புதிய எழுச்சியை வழி நடத்த முயன்றனரேனும், தாபன அமைப்புகளின் முக்கியத்துவம் செவ்வையாக உணரப்பட்டு விட்டது. சைவபரிபாலன சபை, விவேகானந்த சபை, இந்து இளைஞர் மன்றம் போன்றவை தீவிரமாகச் சமய விடயங்களில் ஈடுபட ஆரம்பித்தன.

கோவில்களில் மிருகப்பலியிடுதலுக்கெதிரான கிளர்ச்சி வலுப் பெற்றது. இக் கால முடிவிற் பல இடங்களில், இந் நெருக்குதலின் விளைவாக, மிருகப்பலியிடுதல் நிறுத்தப்பட்டது. சின்னமேள நடனமும் ஏனைய ஆடம்பர உற்சவங்களுக்கெதிரான போக்கும் வலுப்பெற்றது. கோவில்களிற் பூசை செய்யும் பூசகர்கள் சைவ ஆகமங்களில் தேர்ந்தவராகவும், சமய விளக்கங்கள் கொடுப்பதற்குப் பயிற்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும் என்ற சிந்தனையும் நோக்கும் செயற்படுத்தப்படவில்லை. ஓரிரு இடங்களில் இவர்களைப் பயிற்று வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பாதியில் கைவிடப்பட்டன. அவர்கள் பெற்ற பயிற்சி அனைத்தும் சொந்த முயற்சியாற் பெற்றுக் கொண்டவையாகும்.

இக்காலப்பகுதியில் நிறுவப்பட்ட சைவ ஆங்கிலப் பாடசாலைகள் எவ்வளவு தூரம் சமயக்கல்விக்கு இடங் கொடுத்தன என்பது இன்னமும் ஆராயப்பட வேண்டிய விடயமாகும். பிரித்தானிய உயர்நிலைப் பாடசாலைகள் போன்றே சைவ ஆங்கிலப் பாடசாலைகளும் அமைக்கப்பட்டன. அவைகளை ஆரம்பகால கட்டத்தில் வழி நடாத்தியோரும், ஆசிரியர்களும் ஆங்கில–கிறீத்தவ சூழலிற் கல்வி கற்றவர்கள்; இவர்க ளுடைய செல்வாக்கு சமயத்துறையில் எத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கும் என்பதும் முறை யாகத் தெரிந்து கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும். மேலும் குறிப்பாக 1870 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை தேவைக்கதிமாக ஆங்கிலக் கல்வி போதிக்கப்பட்டது என்பதனை மிஷனரி மாரும், அரசாங்கத்தினரும் ஒப்புக் கொண்டாலும் அந்த ஆர்வத்தைக் குறைப்பதற்குமுயலவில்லை. இந்நிலையிற் சமய விழிப்புணர்வுடன் தோன்றிய சைவ ஆங்கிலப் பாடசாலைகள் ஆங்கிலம் படிப்போருக்கு மேலும் உற்சாகமளித்துப் பிற்காலச் சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுவதற்கு எவ்வளவு தூரம் உதவியுள்ளது என்பதையும் சிந்திக்க வேண்டும்.

சமய அமைப்புகளும்; ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்டதுபோல, கிறிஸ்தவ அடிப்படையிலேயே அமைக்கப்பட்டன. நவீன இந்து இளைஞர் மன்றங்கள், இந்து இளைஞர் முகாம்கள் போன்றவை கிறீத்தவ அமைப்புகளின் பிரதிபண்ணல்களேயாகும். 1916–1917 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இருபத்தியொரு இளைஞர் மன்றங்கள் இயங்கின. இவை அடிக்கடி கூடித் தமது சமய, பொருளாதார, சமூக விஷயங்களைப் பற்றிக் கலந்துரையாடின. மேலும் 1916 ஆம் ஆண்டு கீரிமலையில் மூன்று நாள் முகாம் அமைத்துப் பல சமய விடயங்கள் பற்றி ஆராய்ந்தனர். இவற்றிற்கு வழிகாட்டியாகக் கொழும்பு விவேகா னந்த சபை விளங்கியது.

1880 ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் ''சிறுகுழுவினர்'' மத்தியில் தொடங்கிய விழிப்பு ணர்ச்சி படிப்படியாக ஆங்கிலக் கல்வி கற்ற உயர்குழாம் மத்தியில் பரவியது. அரசியல் ஆதிபத்தியத்துக்கு எதிராகத் தீவிர கிளர்ச்சி தோன்றாத போதும் சமய கலாசாரத் துறையில் விழிப்புணர்ச்சி முதிர்ச்சியடைந் துள்ள நிலையினை இக்கால வியக்கம் குறித்து நின்றது. அரசியல் துறையில் ஆங்கிலேய குடிமகனுக்குரிய சிறப்புரிமைகள் போலப் பெற்றுக் கொள்ளவே இக்கால ''தேசிய வாதிகள்'' விரும்பினர். ஆனால் சமயத் துறையில் முற்றிலும் சுதந்திரமாகவே இயங்கவிரும்பினர்.

அரசியல் ரீதியாக ''சுதந்திரம்'' கோரும் உணர்வும் தெம்பும் இக்காலத் தலைவர்களிடையே ஏற் படாதவிடத்தும், சமய கலாசாரத்துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் நிச்சயமாக தேசிய உணர்வின் பெரும் அங்கம் என்பதை மறுக்க முடியாது. கலாசார ஆதிபத்தியத்திற்கு எதிரான எதிர்ப்பே மேலே காணப்பட்ட நடவடிக்கைகள். ''அரசியல் சுதந்திரம்'' கோரிய காலத்தில் அதற்கு இக்கால நடவடிக்கைகள் உரமாக அமைந்திருந்தன என்பதும் அவதானிக்கப்பட வேண்டிய சிறப்பு அம்சமாகும்.

## குறிப்புகள்

1. அருமைநாயகம், க. ''இலங்கையில் ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக் கொள்கை''. சிந்தனை மலர் 1, இதழ் 1.

2. Buchanam, Rev. Claudius. **Two Discourses and a Sermon to which added Christian Researches in Asia.** London—1811. p. 183-186.

3. Baldaeus, Rev. Dr. A Short Account of Jaffnapatam. Colombo 1816.
1816 ஆம் ஆண்டு வெஸ்லியன் மிஷனரிமாரால் பதிப்பிக்கப்பெற்ற ஆங்கிலப் பதிப்பிற் காணப் படும் அனுபந்தத்தில் விபரங்கள் உள. (ii) சைமன் காசிச் செட்டியினது "Ceylon Gazetteer" என்ற நூலில் தீவின் ஏனைய பகுதிகளில் உள்ள இந்துக் கோவில்களின் விபரங்கள் உள.

4. (i) Winslow, Miron. **A Memoir of Mrs H. W. Winslow Combining a Sketch of Ceylon Mission.** New York, 1835. p. 219-220.
நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா நிகழ்ச்சி வர்ணிக்கப்பட்டுள்ளது.
(ii) Selkirk J. **Recollections of Ceylon.** London 1844. P. 298—300
சைவர்களது நோன்பு நாட்கள், பிரதான சமய நாட்கள் பற்றிய விபரங்கள் உண்டு.

5. Morning Star, Thursday, 20th Oct. 1842.
இக்கூட்டம் 30—09—1842 இல் வண்ணார் பண்ணையில் நடைபெற்றது.

6. Morning Star, 13 Jan. 1848.
31—12—1847 இல் நடைபெற்ற முதற் பிரசங்கத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு:
"......many of the Sivites not knowing the intrinsic value of their own system of faith—the Saivism, embrace Christianity and are enslaved in the thraldom of the baneful influence of Christianity. Therefore we must henceforth try our utmost means, not to have any person to go to hear the preachings of Padris and we must inculcate into their minds the principles and essence of Saivism and we should imbue their minds with the knowledge of the nature and end of Saivism".

7. Robinson, Rev. E. J. **Hindu Pastors—a Memorial** Weslyan Conference Office, London 1867 p. 125.

8. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, பதி:— த. கைலாசபிள்ளை, சென்னை 1955. ப. 87.
''பலரைப் பரம் எனக் கொண்டு வணங்குகிற சமயம் சைவ சமயம் ஆகாது'' எனக் கூறிப் பல கடவுட் கொள்கைக்குச் சரியான விளக்கம் கொடுத்து நெறிப் படுத்த முனைந்தார். (மே. கூ. ப. 86).

9. Obeyesekere, Gananath. "Religious Symbolism and Political Changes in Ceylon" **Modern Ceylon Studies.** Vol. I. No. 1. p. 47.

10. (i) Robinson, ஏ. கூ. ப. 126. (ii) கைலாசபிள்ளை, த. ஆறுமுகநாவலர் சரித்திரம். சென்னபட்டணம், 1919. ப. க0எ—க0அ. நாவலர் தமது முக்கிய கண்டனங்களைத் தன்னை அடையாளங் காட்ட விரும்பாது ''சைவப் பிரகாச சபையார்'' என்ற பெயரிலேயே வெளியிட்டார். எனினும் அவரை இலகுவாக அடையாளங் கண்டு கொள்வதில் கிறித்தவப் பாதிரிமாருக்குக் கஷ்டம் இருக்கவில்லை.

11. நாவலரது மேற்குறிப்பிட்ட பிரசுரங்களைப் பின்வரும் கிறித்தவ ஆவணங்களுடன் ஒப்பிட்டாராயின் நாவலரது வாதங்கள் நியாயமானவையென்பது புலனாகும்.
(i) Kilner, Rev. J. "Modern Aspects of Local Hinduism" **Friend Vol. III,** No. 26—Feb. 1872.
(iii) Kilner, Rev. J. "Some Reflections on 'the Jaffna Tamil' as the material on whom the Christain Churches have to work." **Friend Vol. I. No. 6.** 1870.

12. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு: பதி:- த. கைலாசபிள்ளை, ஏ. கூ. ப. 67.

13. தனஞ்சயராசசிங்கம், ச. நாவலர் பணிகள். பேராதனை 1969. கீரிமலைச் சிவன் கோயில் என்னும் நாவலரது விக்கியாபனம் மறுபிரசுரஞ் செய்யப்பட்டுள்ளது. ப. 59–61.

14 (i) Morning Star, 29 Oct. 1842; (ii) Arumainayagam, K. "Hindu Education at the beginning of the 19th Century" Tribune, Sept. 29, 1968.

15. நல்லூர் கந்தசுவாமி கோவில் பூசகரான சுப்பையர் என்பவர் ஆங்கில நீதியரசராக (பின்னர் பிரதம நீதியரசராக) விளங்கிய சேர். அலக்ஸாண்டர் ஜோன்ஸன் என்பவர் மூலம் அரசாங்கத்தை அணுகினார்.

Sir Alexander Johnstone's Manuscripts' "The Temple of Candaswamy, Jaffna" **CALR Vol. II—part III.** p. 211–214.

16. Rajaratnam, Hon. S. **The Hindu Board for the Promotion of Education, Jaffna.** 1930. Appendix II -- "Hindu Education in Jaffna."
இவைகள் திண்ணைப்பள்ளிக் கூடங்களாக விருத்தல் வேண்டும்.

17. சைவர்கள் ஆங்கிலக்கல்வி கற்பதற்காகப் புரட்டஸ்தாந்து பாடசாலைகளை நாடி, புரட்டஸ்தாந்து வழிபாட்டு முறைகளையும், ஆலயப்பிரசங்கங்களையும் கேட்க வேண்டியிருந்தது போல கத்தோலிக்கர் களும், செய்யவேண்டியிருந்தது. எனினும் பெட்டாக்கினி மேற்றிராணியார் தாபித்த ஆண்—பெண் (தனித்தனியாக) ஆங்கிலப்பாடசாலைகள் அக்குறையினை நிவர்த்தி செய்தன. அவ்விரு பாடசாலை களுக்கும் கத்தோலிக்கப் பெற்றோரது விண்ணப்பத்தினாலும், நெருக்கத்தினாலும் 1851 ஆம் ஆண்டு தொடக்கம் 150 பவுன் உதவி நன் கொடை கிடைத்தது.
**St. Patrick's College, Jaffna.** 125 Years Celberations Volume Jaffna 1975. **p. 10.**

18. Thananjayarajasingham, S. **The Educational Activities of Arumuga Navalar. Colombo 1974.**
இந்நூலில் நாவலரினதும், ஏனைய சைவப்பிரமுகர்களினதும் மனுக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
(i) ப. 22–25 பி. சின்னகுட்டி அவர்களைக் காரியதரிசியாகக் கொண்ட சைவர்களது மனு.
(ii) ப. 14–18 க. ஆறுமுகம் (நாவலரது) மனு.
(iii) அநுபந்தம் 1. 11–08–1852 இல் நடைபெற்ற கூட்டத்தில் ஆ. அம்பலவாணர் என்பவர் ஆற்றிய உரை.

19. **Central School Commission Report 10.** p 1. 1851; **Central School Commission Report 12.** p. 12 1853.

20. (i) 19 இல் கூறப்பட்ட மனுக்களைப் பார்க்கவும்;
(ii) Morning Star, 23 Feb. 1854. p. 19–23.

21. Morning Star, 12, May 1853. Morning Star, 26 May, 1853. Morning Star 23 June, 1853. Morning Star, 28, July, 1853. Morning Star, 11 August, 1853.
மேற்கூறப்பட்ட தொடர்கட்டுரைகளுக்கு மறுப்பு எழுதிய "A. A" என்பவர் பிறசமயத்தவர்கள் சைவர்களது நன்மைநிலைமைகளை நிர்ணயிக்கும் பொறுப்பினை தாமெடுத்துக் கொண்டது பற்றி வன்மையாகக் கண்டித்தார்.
Morning Star, 23 Feb. 1854.

22. பொதுமக்கள் அபிப்பிராயமும் இவ்வுயர்நிலைப் பாடசாலை பற்றி அரசாங்கத்தை நெருங்கியது. குறிப்பாக Jaffna Freeman Examiner பத்திரிகையில் எழுதிய கடிதம் அத்தகைய அரசாங்கப் பாடசாலையின் அவசியத்தையும், இதனால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் நன்கு எடுத்து விளக்கியது.
"Since the shutting up of the American Seminary at Batticotta, the want of Superior School is much felt: and Petition after Petition was sent to the late School Commission to supply the want. But that unwieldly body was powerless to effect any reform. The generality of parents in Jaffna could not afford the luxury of Colombo Education. The expense is enormous. Hence the great rush to India. For the Fiftieth time we warn the Government of Ceylon that Madras is **fast draining the flower of the native Community from Jaffna:** and while the really efficient and able do not find sufficient inducement to return to their

"native nook of earth," the riff-raff and refuse will be left behind. **The Ceylon Overland Bi—monthly Examiner:** Vol. XVII—No. 9. May 5, 1869. p. 186.
மேற்கூறப்பட்ட நெருக்குதல்களின் விளைவாகவும், 15—04—1869 அனுப்பப்பட்ட முறையீட்டினாலும், கல்வி அத்தியட்சகர் யாழ்ப்பாணத்தில் உயர் கல்வி நிலையம் தாபிக்கப்பட வேண்டிய அவசியத்தைக் கொள்கையளவில் ஒப்புக் கொண்டார். ஆனால் அதற்குரிய செலவில் ஒரு பகுதி முறையீட்டாளர்களிடமிருந்து வரவேண்டுமெனக் குறிப்பிட்டார். **Examiner** மே. கூ. May 15th, 1869.

23. Sessional Paper, 1867. Part II. Appendix to Report on Education. p. 99.

24. Jaffna Central College (1834–1934). **Centenary Memorial Edition.** Colombo 1936. p 50.

25. சமயத்துறையில் — சைவம் பௌத்தம் ஆகிய இரண்டும் — இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பிருந்ததால் அரசியல், புவியியல் வேறுபாடுகளையும் விஞ்சிய ஒற்றுமை இரு பகுதிகளுக்குமிடையிலிருந்தது. இத்தகைய சிந்தனையே இந்திய அரசுடன் ஈழ அரசும் இணைய வேண்டும் என்ற சிந்தனையைச் சில சில சந்தர்ப்பங்களில் ஈழத்தவருக்குக் கொடுத்தது.
de Silva, V. "A political Union of India and Ceylon" The Indian Review. Vol. XXVIII May 1927.

26. கைலாசபிள்ளை, த. ஆறுமுகநாவலர் சரித்திரம். ஏ. கூ. ப. 20

27. Ragunathamutheliyar, V. **The Contribution of Saiva Paripalana Sabhai to Education.**" an essay—for Dip in-Education. University of Ceylon. Peradeniya. 1972.

28. (i) தெல்லிப்பழையில் ''மகாஜன ஆங்கில உயர்தர பாடசாலை'' என்னும் பெயருடன் கூடிய பாடசாலை தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்களால் 1910 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.
Mahajana College Golden Jubilee—Souvenir, Telippalai—1960.
(ii) கந்தரோடையில் ''கந்தரோடை ஆங்கில கல்விக்கழகம்'' என்ற பெயருடன் எஸ். கந்தையா உபாத்தியாயர் 1894 ஆல் பாடசாலை ஒன்றினை ஸ்தாபித்தார்.
The Skanda, 74th Anniversary Number (1894–1969) Chunnakam–1969.

39. Hansard. 1913–16 p. 306-309.

30. (i) Olcott, H. S. **Old Dairy Leaves.** 4th Series, Theosophical Publishing House, Madras 1931. p. 225.
(ii) இதை ஆராய்வதற்கான கூட்டம் 7—12—1889 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்றது.
**The Buddhist.** Ed. C. W. Leadbeatter. Vol I. 1888–1889. P. 413—416

31. Vythilingam, M. **The Life of Sir Ponnampalam Ramanathan,** Vol. 1. Colombo 1971.P.541.

32. **The Young Hindu** Vol. I. No. 1. Jaffna 1917. **p.** 40.

33. "If we fail to make immediate and adequate provision for their (Panchama classes) secular and religious education we should not grumple if Christian missions undertake the task and make additions to their fold of Converts. If we have not the strength to face the question and attempt a solution, Common sense at least demands that we should standby and watch if other religionists offer facilities for the education and upliftment of the Panchama classes. We should not merely tolerate their endevours but even welcome them". The Young Hindu. ibid. p. 30.

34. ஆறுமுக நாவலர் பிரபந்தத்திரட்டு. ஏ. கூ. இரண்டாம் பாகம் ப. 28—37.

35. Hansard 1916. p. 246-248.

36. i. Hindu Organ 27 Dec. 1893.
ii. Ceylon Patriot, qouted. Hindu Organ 6 Sept. 1893.

37. Times of Ceylon, 16 June 1906.

38. Discussed at the Durbar of Tamil Chiefs held in Jaffna in August 17 & 18, 1910. **Ceylon Sessional Report 1909—1910. Vol. II.**

# மன்னார் மாவட்டத்தின் குடிசனத்தொகையும் வளங்களும் அபிவிருத்தியும்

— கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை —

மன்னார் இன்று மக்கள் தொகையில் மிகவும் குறைவானதும் பொருளாதார அபிவிருத்தியிற் பின் தங்கிய நிலையிலுள்ள மாவட்டங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது. பொதுவாக இலங்கையின் வரண்ட வலயப் பகுதிகளை அதன் ஈரத் தென்மேற்குப் பகுதிகளுடன் ஒப்பிடுமிடத்து அவைகள் மக்கள் தொகையிற் குறைவாகவும் பொருளாதார நிலையிற் பின்தங்கியிருப்பதையும் காணலாம். ஆனால், 1931 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் குறிப்பாக சுதந்திரத்திற்குப் பின்பும் வரண்ட வலயத்தை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன நில அபிவிருத்தித்திட்டங்களினாற் பல மாவட்டங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளன. உதாரணமாக, பொல்லனறுவை, அம்பாறை, அனுராதபுரம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களைக் குறிப்பிடலாம். இவற்றிற்கு 1946–1971 ஆம் ஆண்டுகளுக்கிடையில் இம்மாவட்டங்களில் ஏற்பட்ட குடிசனத்தொகை அதிகரிப்பே சான்றாகும். பொல்லனறுவை மாவட்டத்தில் இக்காலத்தில் குடிசனப்பெருக்கம் 691 விகிதமாக இருந்தது. இவ்வடிப்படையில் நாம் மன்னாரை நோக்குமிடத்து அது இன்றும் ஒரு பின்தங்கிய நிலையிலுள்ள பிரதேசம் என்பதை அவதானிக்க முடிகின்றது.

இன்றைய மன்னார்பிரதேசமே இலங்கையின் வரலாற்றின் ஆரம்ப காலப் பகுதியில் மிக அபிவிருத்தியடைந்திருந்த பிரதேசங்களில் ஒன்றாகும். இப்பிரதேசம் விவசாயத்துறையில் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. இப்பகுதியில் ''மாதோட்டம்'' என்ற பெரிய துறைமுகப் பட்டணம் இருந்தது. இதன் வழியாகவே பல்வேறு நாடுகளுடன் இலங்கை வர்த்தகம் செய்தது என்பது தெரிய வருகின்றது. சைவ நாயன்மார்களாற் பாடல் பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயமும் இங்குண்டு. மேற்குறிப்பிட்டவைகளை ஆதாரமாகக் கொண்டு நோக்கும் பொழுது மன்னார்ப் பிரதேசம் இன்றுள்ள நிலையிலும் பார்க்க முன் ஒருகால் மக்கள் தொகை கூடுதலாகவும் விருத்தியுள்ள பிரதேசமாகவும் இருந்திருக்கவேண்டும். ஆனால், பின்னர் ஆறுகள், அருவிகளின் மேல் நீர்ப்பாசனத்திலும் பார்க்கப் பல குளங்கள் கட்டப்பட்டதினாலும், மண்தின்னல், மண்வள இழப்பு, மலேரியா, வரட்சி, வெள்ளப்பெருக்கு போன்ற காரணிகளாலும் மக்கள் இடம்பெயர்ந்ததினால் இப்பகுதி தனது முக்கியத்துவத்தை இழந்தது. யாழ்ப்பாண மன்னன் காலத்தில் இப்பகுதி அவனது ஆட்சியின் கீழ் இருந்தது. பின் போர்த்துக்கீசரின் மதமாற்றங்காரணமாக இப்பகுதியிலிருந்து இந்து மக்களின் ஒரு பகுதியினர் இடம்பெயர்ந்திருக்கலாம். இந்தியாவிலிருந்து தோட்டத்தொழிலாளர் பெருமளவு இம்மாவட்டதினூடாகப் பிரயாணம் செய்ததினாலும் பின்னர் மன்னார் மதவாச்சி புகையிரதப் பாதையிடப்பட்டதினால் ஏற்பட்ட பிரயாண அதிகரிப்பாலும் 'காலரா' மற்றும் தொற்று நோய்கள் பரவியதால் இம்மாவட்டத்தின் குடிசனத்தொகை குறிப்பாக 1940க்கு முன்னர் பெருகவுமில்லை; இங்கே அபிவிருத்தியும் ஏற்படவுமில்லை.

வடமாகாணத்தின் மொத்த நிலப்பரப்பு 3353 சதுர மைல்களாகும். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களின் பரப்புக்கள் முறையே 964, 954, 1431 சதுர மைல்களாகும். மன்னார் இலங்கையின் நிலப்பரப்பில் 3.8 விகிதளவாக இருப்பினும் மொத்தக் குடித்தொகையில் 0.6 விகிதத்தையே கொண்டுள்ளது. மன்னாரின் பரப்பளவு யாழ்ப்பாணத்தை ஒத்துக் காணப்படினும் மக்கள் தொகையில் யாழ்ப்பாணம் ஒன்பது மடங்கு கூடுதலாகவுள்ளது. அட்டவணை ஒன்றில் வட மாகாணத்தினதும் மூன்று மாவட்டங்களினதும் குடிசனத்தொகை விபரங்கள் 1871 ஆம் ஆண்டிலிருந்து பின்வருமாறு :—

அட்டவணை 1

| ஆண்டு | வடமாகாணம் | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|
| 1871 | 281,666 | 246,063 | 20,258 | 15,345 |
| 1881 | 302,500 | 265,583 | 21,348 | 15,569 |
| 1891 | 319,296 | 279,284 | 24,511 | 15,501 |
| 1901 | 340,936 | 300,851 | 24,926 | 15,159 |
| 1911 | 369,954 | 326,712 | 25,603 | 17,338 |
| 1921 | 375,829 | 330,541 | 25,582 | 18,706 |
| 1931 | 398,874 | 355,425 | 25,137 | 18,312 |
| 1946 | 479,835 | 425,251 | 31,538 | 23,246 |
| 1953 | 569,904 | 491,181 | 43,689 | 35,112 |
| 1963 | 741,341 | 612,596 | 60,124 | 68,621 |
| 1971 | 877,968 | 704,550 | 77,882 | 95,536 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புக்கள் 1871–1971.

1871ல் மன்னார் மாவட்டக் குடித்தொகை இருபதினாயிரமாக இருந்து 1953 இல்தான் நாற்பத்து நாலாயிரமாக அதிகரித்தது. இந்தப் புள்ளி விபரத்தின்படி மன்னார் மாவட்டத்தின் குடிசனத் தொகை 1871–1953 காலத்தில் சராசரி வருடத்துக்கு ஒரு விகிதவளர்ச்சியே பெற்றிருந்தது. 1946–1971 காலத்தில் சராசரி வருட வளர்ச்சி விகிதம் 2.5 வரையில் இருந்தது. அட்டவணை இரண்டில் மாவட்டத்தினது குடிசன அதிகரிப்பு எண்ணிக்கையிலும் விகிதத்திலும் இலங்கையினது குடிசன அதிகரிப்பு விகிதத்திலும் காட்டப் பட்டுள்ளது.

அட்டவணை 2

| குடிசனக்கணிப்பு இடைக்காலம் | மாவட்ட அதிகரிப்பு (எண்ணிக்கையில்) | மாவட்ட அதிகரிப்பு (விகிதத்தில்) | இலங்கையின் குடிசன அதிகரிப்பு (விகிதத்தில்) |
|---|---|---|---|
| 1871–81 | 1089 | 5.4 | 15.0 |
| 1881–91 | 3163 | 14.8 | 9.0 |
| 1891–01 | 415 | 1.7 | 18.6 |
| 1901–11 | 677 | 2.7 | 15.2 |
| 1911–21 | 211 | 0.08 | 9.6 |
| 1921–31 | 445 | 1.7 | 18.0 |
| 1931–46 | 6401 | 25.5 | 25.4 |
| 1946–53 | 12151 | 38.5 | 21.6 |
| 1953–63 | 16542 | 37.9 | 30.7 |
| 1963–71 | 17758 | 27.5 | 20.1 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புக்கள்.

மன்னார் மாவட்டத்தின் குடிசன வளர்ச்சியில் 1940 ஆம் ஆண்டுக்காலம் முக்கியதொரு இடத்தைப் பெற்றுள்ளது. இம்மாவட்டத்தின் குடிசன வளர்ச்சி 1946க்கு முன்னர் தேசிய வளர்ச்சியிலும் பார்க்க குறைவாக இருப்பதையும் அதற்குப் பிற்பட்ட கால வளர்ச்சி தேசிய வளர்ச்சியிலும் கூடுதலாக இருப்பதையும் அவதானிக்கலாம். 1946–1971 இடைப்பட்ட காலத்தில் இம்மாவட்டத்தின் குடிசனத் தொகை 146 விகிதத்தால் வளர்ந்தது. இவ் அதிகரிப்பு தேசிய அதிகரிப்பிலும் (91 வீதம்) 55 விகிதம் கூடுதலாகும்.

மன்னார் மாவட்டத்தின் குடிசன அடர்த்தி 1971 இல் சதுர மைலுக்கு 81 பேராக இருந்தது. மொனராகலை, வவுனியா ஆகிய இரு மாவட்டங்களுமே மன்னாரிலும் பார்க்கக் குறைந்த அடர்த்தியைக் கொண்டுள்ளன. தேசிய குடிசன அடர்த்தியளவு இம்மாவட்டத்தின் குடிசன் அடர்த்தியிலும் பார்க்க ஆறு மடங்கு கூடுதலாகவுள்ளது. இலங்கையினதும் மாவட்டங்களினதும் குடிசன அடர்த்தி அட்டவணை 3இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 3

குடிக்கணிப்பு வருடமும் சதுரமைலுக்கு குடிசன அடர்த்தியும் மாவட்டரீதியில்.

| | 1871 | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 | 1931 | 1946 | 1953 | 1963 | 1971 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 532 | 627 | 716 | 355 | 1023 | 1143 | 1388 | 1758 | 2144 | 2793 | 3308 |
| களுத்துறை | 234 | 264 | 294 | 368 | 448 | 519 | 583 | 732 | 839 | 1019 | 1173 |
| கண்டி | 254 | 325 | 315 | 413 | 447 | 475 | 643 | 779 | 920 | 1150 | 1187 |
| மாத்தளை | 83 | 96 | 85 | 102 | 120 | 129 | 144 | 173 | 222 | 332 | 411 |
| நுவரெலியா | 123 | 208 | 231 | 323 | 328 | 353 | 4?7 | 566 | 686 | 849 | 956 |
| காலி | 298 | 322 | 342 | 396 | 446 | 480 | 558 | 705 | 804 | 840 | 1131 |
| மாத்தறை | 298 | 316 | 369 | 424 | 472 | 496 | 589 | 732 | 859 | 1070 | 1223 |
| அம்பாந்தொட்டை | 60 | 71 | 88 | 104 | 109 | 118 | 123 | 148 | 189 | 274 | 334 |
| யாழ்ப்பாணம் | 246 | 266 | 280 | 301 | 327 | 331 | 356 | 425 | 493 | 635 | 705 |
| மன்னார் | 21 | 21 | 25 | 26 | 27 | 27 | 26 | 33 | 45 | 62 | 81 |
| வவுனியா | 10 | 11 | 11 | 10 | 12 | 13 | 12 | 16 | 24 | 48 | 65 |
| மட்டக்களப்பு | 33 | 38 | 44 | 52 | 55 | 86 | 93 | 103 | 139 | 207 | 254 |
| அம்பாறை | | | | | | 56 | 64 | 78 | 118 | 166 | 231 |
| திருக்கோணமலை | 19 | 21 | 25 | 27 | 28 | 33 | 36 | 22 | 80 | 136 | 183 |
| குருநாகல் | 113 | 117 | 125 | 135 | 166 | 192 | 215 | 263 | 340 | 463 | 557 |
| புத்தளம் | 53 | 67 | 29 | 33 | 44 | 39 | 39 | 47 | 65 | 263 | 160 |
| சிலாபம் | | | 241 | 284 | 333 | 390 | 438 | 533 | 649 | | 968 |
| அனுராதபுரம் | 16 | 16 | 19 | 20 | 22 | 32 | 32 | 42 | 58 | 100 | 139 |
| பொலநறுவை | | | | | | 07 | 07 | 15 | 50 | 87 | 123 |
| பதுளை | 39 | 51 | 49 | 57 | 66 | 71 | 93 | 251 | 258 | 476 | 565 |
| மொனராகலை | | | | | | | | 35 | 32 | 38 | 69 |
| இரத்தினபுரி | 74 | 85 | 86 | 106 | 133 | 162 | 211 | 275 | 337 | 438 | 529 |
| கேகாலை | 164 | 187 | 205 | 294 | 378 | 419 | 490 | 626 | 735 | 908 | 1016 |
| இலங்கை | 95 | 109 | 119 | 141 | 162 | 178 | 210 | 263 | 320 | 418 | 506 |

மூலம்: இலங்கைப் புள்ளிவிபரத்தொகுப்பு, குடிசனக்கணிப்பு

மன்னாரின் குடிசன அடர்த்தியைப் பிற மாவட்டங்களுடன் ஒப்பிடுமிடத்து எவ்வளவு குறைவாக இருக்கின்றதென்பதைக் காண முடிகின்றது. குடிசன அடர்த்தி குறைவாக இருப்பதற்குக் காரணம் அதனது வரட்சித் தன்மையேயாகும். மழைவீழ்ச்சி 50''க்கு குறைவாக இருப்பதுடன் கரையோரப் பகுதிகளில் மண் வளமும் நல்லதாகவில்லை. விவசாயம் நீர்ப்பாசன வசதியுடைய பகுதிகளிலேயே நடைபெறுகின்றது. பெருநிலப்பகுதிக்கரையோரப் பகுதிகளிலும் மன்னார் தீவிலும் மீன்பிடித் தொழில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. மாவட்டத்தின் குடிசன அடர்த்தியைக் காரியாதிகாரி பிரிவுகள் அடிப்படையில் நோக்கின் பின்வருமாறு :

அட்டவணை 4

| காரியாதிகாரி பிரிவு | பரப்பு (ச.மைல்) | குடிசனத்தொகை (1971) | குடிசன அடர்த்தி (ச. மைல்) |
|---|---|---|---|
| மன்னார்த் தீவு | 77.5 | 33270 | 429 |
| மாந்தை கிழக்கு | 326.5 | 5280 | 17 |
| மாந்தை மேற்கு | 273.0 | 15490 | 57 |
| முசலி (நானாட்டான்) | 94.0 | 15534 | 168 |
| முசலி (சிலாபத்துறை) | 186.5 | 8317 | 43 |

மூலம்: 1971 குடிசனக் கணிப்பிலிருந்து கணிக்கப்பட்டது.

மன்னார்த்தீவுக் காரியாதிகாரிப் பிரிவின் குடிசன அடர்த்தி சதுரமைலுக்கு 429 பேராக இருந்தபொழுதும் இது தேசிய அடர்த்தியிலும் குறைவாகவேயுள்ளது. இந்தப் பிரிவிற்குட்டான் மன்னார் நகரம், மற்றும் பெரிய கிராமங்களான பேசாலை, எருக்கலம்பிட்டி, தலைமன்னார், உயிலங்குளம் போன்றன உள்ளன. மாந்தை மேற்கு, நானாட்டான் பிரிவுகள் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் அமைந்துள்ளதால்தான் குடிசன அடர்த்தியில் மாந்தை கிழக்கிலும் சிலாபத்துறைப் பிரிவிலும் கூடுதலாகவுள்ளன. சிலாபத்துறையும் மாந்தை கிழக்கும் இலங்கையில் மிகவும் குடிசன அடர்த்தி குறைவான பிரதேசங்களாகும். 1963ல் இதனது குடிசன அடர்த்தி சதுரமைலுக்கு முறையே 34 பேராகவும் 9 பேராகவும் இருந்தது. வவுனிக் குள அபிவிருத்தியினால்தான் 1963–71 காலத்தில் மாந்தை கிழக்குப் பிரிவிற் பனங்காமம் பகுதியிற் குடிசனம் சற்று அதிகரித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றப் பிரிவு அடிப்படையில் குடிசன அடர்த்தியை நோக்கின் வேறுபாட்டை மேலும் நுணுக்கமாக அவதானிக்க முடியும். அட்டவணை 5 இல் உள்ளூராட்சி மன்றப்பிரிவு அடிப்படையில் 1946, 1963, 1971 ஆம் ஆண்டுகளுக்குரிய குடிசனத்தொகையும் குடிசன அடர்த்தியும் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 5

| உள்ளூராட்சி மன்றங்கள் | பரப்பு ச.மைல் | குடிசனத்தொகை 1946 | 1963 | 1971 | குடிசன அடர்த்தி 1971 |
|---|---|---|---|---|---|
| மன்னார் | 2.5 | 5190 | 8993 | 11157 | 4463 |
| மன்னார் கிழக்கு | 12.0 | 1904 | 2695 | 3217 | 268 |
| எருக்கலம் பிட்டி | 5.0 | 2463 | 3923 | 4573 | 915 |
| பேசாலை | 14.0 | 2653 | 3963 | 4859 | 347 |
| தலைமன்னார் | 15.0 | 2201 | 2830 | 3140 | 209 |
| மாந்தை தெற்கு | 18.0 | 2012 | 3431 | 4359 | 242 |
| மாந்தை மேற்கு | 12.0 | 616 | 1627 | 1925 | 164 |
| மாந்தை வடக்கு | 28.0 | 2425 | 5798 | 8667 | 266 |
| இலுப்பைக்கடவை | 97.0 | 497 | 860 | 1169 | 12 |
| பெருங்களிப்பற்று | 57.0 | 1787 | 3424 | 3907 | 69 |
| பனங்காமம் | 198.0 | 378 | 1502 | 3665 | 18 |
| மேற்குமூலை | 209.0 | 406 | 2428 | 3455 | 11 |
| வங்காலை | 3.0 | 1341 | 2047 | 3140 | 844 |
| நானாட்டான் மேற்கு | 25.0 | 2234 | 3431 | 4359 | 260 |
| நானாட்டான் கிழக்கு | 66.0 | 2219 | 4847 | 6507 | 98 |
| முசலி வடக்கு | 82.5 | 1866 | 3286 | 4080 | 48 |
| முசலி தெற்கு | 104.0 | 1903 | 3156 | 4277 | 41 |

மூலம்: குடிசனக்கணிப்புக்கள் 1946, 1963, 1971 இலிருந்து கணிக்கப்பட்டது.

மன்னார், எருக்கலம்பிட்டி, வங்காலை, பேசாலை, மன்னார் கிழக்கு, மாந்தை தெற்கு, மாந்தை வடக்கு, நானாட்டான் மேற்கு ஆகிய உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளே சதுரமைலுக்கு 200க்கு மேற்பட்ட மக்களைக் கொண்டுள்ளன. மன்னார் ஒரு நகர சபையாக இருப்பதாலும் எருக்கலம்பிட்டி, வங்காலை ஆகியன நெருக்கமான குடிசனத்தொகை கூடிய கரையோரக் குடியிருப்புக்களாக இருப்பதாலும் குடிசன அடர்த்தி அதிகமாகவுள்ளது. இம்மூன்றின் குடிசன அடர்த்தியே தேசிய அடர்த்தியிலும் பார்க்கக் கூடுதலாகவுள்ளது. இலுப்பைக்கடவை, மேற்கு மூலை, பனங்காமம், முசலி தெற்கு மிகவும் விருத்தியடையாத பகுதிகளாக வுள்ளன.

1971 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தின் குடிசனக் கூட்டில் இலங்கைத் தமிழர் 51 விகிதமாகவும், இந்தியத் தமிழர் 17.5 விகிதமாகவும் இலங்கைச் சோனகர் 19.5 விகிதமாகவும், இந்தியச் சோனகர் 2.4 விகிதமாகவும் இருந்தனர்; மிகுதி சிங்களவரும் ஏனைய இனத்தவர்களுமாகும். மத அடிப்படையில் நோக்கு மிடத்து பௌத்தர்கள் 3.4 விகிதமாகவும், இந்துக்கள் 29.9 விகிதமாகவும் முஸ்லிம்கள் 28.5 விகிதமாகவும், உரோமன் கத்தோலிக்கர் 37.8 விகிதமாகவும் ஏனைய கிறிஸ்தவர்கள் 0.7 விகிதமாகவும் ஏனையவர்கள் 0.1 விகிதமகாவும் இருந்தனர். காரியாதிகாரி பிரிவு அடிப்படையில் இனப் பரம்பல் பின்வருமாறு :

| பிரிவுகள் | சிங்களவர் | இஸ்லா. தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கைத் சோனகர் | இந்தியச் சோனகர் | ஏனையவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| மன்னார் தீவு | 1605 | 15965 | 5216 | 8909 | 1532 | 45 |
| மாந்தை கிழக்கு | 470 | 3624 | 457 | 700 | 9 | 8 |
| மாந்தை மேற்கு | 623 | 8651 | 3550 | 2552 | 98 | 23 |
| முசலி (நானாட்டான்) | 711 | 9792 | 3752 | 1150 | 139 | 3 |
| முசலி (சிலாபத்துறை) | 215 | 1724 | 627 | 5721 | 167 | 4 |

மூலம்: குடிசனக்கணிப்பு, 1971.

இலங்கைத் தமிழர் 51 விகிதமாக இருந்த பொழுதும் சிலாபத்துறைப் பிரிவின் மொத்தக்குடித் தொகையில் அவர்கள் எண்ணிக்கை 21 விகிதமாகவே இருந்தது. 1971 ஆம் ஆண்டில் இலங்கைச் சோனகர் மன்னார் பிரிவின் குடிசனத்தொகுதியில் 26 விகிதமாகவும், மாந்தை கிழக்கில் 11 விகிதமாகவும் மாந்தை மேற்கில் 17 விகிதகாமவும் நானாட்டான் பிரிவில் 7 விகிதமாகவும் சிலாபத்துறைப்பிரிவில் 69 விகிதமாகவும் இருந்தனர். இந்தியத் தமிழர் மாந்தை மேற்கு, நானாட்டான் பிரிவுகளின் குடித்தொகையில் முறையே 23,24 விகிதளவாக இருந்தனர். சிங்களவர் எல்லாப் பிரிவுகளிலும் சராசரி 5 விகிதமாகக் காணப்படுகின் றனர். இந்தியச் சோனகரில் கூடிய பங்கினர் மன்னார்த் தீவிலேயே யுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் குடிசனத் தொகையில் மதப்பரம்பல் காரியாதிகாரி பிரிவுகள் அடிப்படை யில் பின்வருமாறு :

| பிரிவுகள் | பௌத்தர்கள் | இந்து | முஸ்லிம் | உரோமன் கத். | ஏனைய கிறீஸ். | ஏனையவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| மன்னார் தீவு | 2.5 | 25.3 | 30.3 | 41.2 | .4 | 0 |
| மாந்தை கிழக்கு | 13.0 | 71.0 | 14.0 | 2.0 | 0 | 0 |
| மாந்தை மேற்கு | 2.7 | 38.8 | 23.5 | 35.0 | 0.1 | 0 |
| நானாட்டான் | 4.0 | 31.0 | 8.6 | 53.3 | 2.3 | 0 |
| சிலாபத்துறை | 0.3 | 3.5 | 73.8 | 21.0 | 0.0 | 0 |

மூலம்: குடிசனக் கணிப்பு, 1971.

இம்மாவட்டத்தில் எல்லா மதத்தவர்களும் வாழ்ந்தபொழுதும் எந்தவொரு மதத்தினரும் பெரும்பான் மையாக இல்லை. உரோமன் கத்தோலிக்கரே எல்லா மதத்தினரிலும் பார்க்க கூடிய முக்கியத்துவம் வாய்ந்தவர் கள். இந்துக்கள் மாந்தை கிழக்கிலும் (71 வீதம்) முஸ்லிம்கள் சிலாபத்துறையிலும் (73.8 வீதம்) கத்தோ லிக்கர் நானாட்டனிலும் (53.3 வீதம்) பெரும் பான்மையாகவுள்ளனர். மன்னார்த்தீவில் உரோமன் கத்தோலிக்

கரும் (42.2 வீதம்) மாந்தை மேற்கில் இந்துக்களும் (35 விகிதம்) முதலிடத்தைப் பெற்றிருந்த போதிலும் பௌத்தம் தவிர்ந்த மூன்று மதங்களும் முக்கியமாக வுள்ளன.

இம்மாவட்டத்தில் மன்னார் மாத்திரமே நகர அந்தஸ்தைப் பெற்ற குடியிருப்பாகும். மாவட்டக் குடிசனத்தொகையில் 11.57 பேரே நகரவாசிகளாகும்; அதாவது 14.3 விகிதத்தினரே நகர விகிதமாகும். மாவட்டத்தின் நகராக்க விகிதம் இலங்கையின் நகராக்க அளவிலும் பார்க்கக் குறைவாக இருப்பினும் 14 மாவட்டங்களின் நகராக்க அளவு மன்னாரிலும் பார்க்கக் குறைவாகவே உள்ளது. மன்னார்ப் பட்டணம் 1953ல் 7062 மக்களையும் 1963இல் 8988 மக்களையும் 1971இல் 11179 மக்களையும் கொண்டிருந்தது. 1953–63க் குட்பட்ட காலத்தில் இந்நகர் 28 விகித அதிகரிப்பையும் 1963–71 இடையில் 23 அதிகரிப்பையும் பெற்றது. 1947க்கு முன்னர் தலைமன்னார், பேசாலை, விடத்தல் தீவு, மன்னார் ஆகிய குடியிருப்புக்கள் சுகாதார சபைகளாக இருந்தன. மன்னாரைத் தவிர ஏனைய மூன்றும் 1947ல் கிராம சபைகளாகத் தரம் குறைக்கப்பட்டன.

1971இல் இம்மாவட்டத்தில் ஒரு நகரக் குடியிருப்பும் 349 கிராமக் குடியிருப்புக்களும் இருந்தன. இங்குள்ள கிராமக் குடியிருப்புக்கள் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள அல்லது தென்னிலங்கைப் பகுதியிலுள்ள கிராமக் குடியிருப்புக்களைப் போலல்லாது, குடிசனத்தொகையில் மிகவும் சிறியனவாகவும் சமூக பொருளாதார முறைகளிற் பின்தங்கியதாகவும் காணப்படுகின்றன. 188 குடியிருப்புக்கள் 100க்கு குறைவான மக்களையும், 87 குடியிருப்புக்கள் 100–250 இடைப்பட்ட மக்களையும், 44 குடியிருப்புக்கள் 250–500 இடைப்பட்ட மக்களையும், 21 குடியிருப்புக்கள் 500–1000 இடைப்பட்ட மக்களையும், 7 குடியிருப்புக்கள் 1000க்கு மேற்பட்ட மக்களையும் கொண்டுள்ளன. செல்வபுரம் (1099) பெரியமடு (1127) விடத்தல்தீவு (2208) எருக்கலம்பிட்டி (4438) பேசாலை (3699) தலைமன்னார் (1068) வங்காலை (2529) ஆகியனவே பிரதான கிராமக் குடியிருப்புக்களாகும். மன்னார்த் தீவிலும் பெருநிலக் கரையோரப் பகுதியிற் குறிப்பாக வங்காலை, விடத்தல்தீவு, சிலாபத்துறை, அரிப்புப் போன்றன பிரதான மீன்பிடிக் குடியிருப்புக்களாகும். ஏனைய குடியிருப்புக்கள் பிரதானமாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டன; கட்டுக்கரைக்குளப் பகுதியின் கீழ் குடியிருப்புக்கள் செறிவாகவும் நெருக்கமாகவும் இருக்க, மாந்தை கிழக்குப் பகுதியிற் குடியிருப்புக்கள் சிறியனவாகவும் பரவலாகவுமுள்ளன. வவுனிக்குளம், பெரியமடு, பண்டி விரிச்சான் ஆகிய குளக் குடியிருப்புக்களே திட்டமிடப்பட்ட குடியேற்றத்திட்டங்களாகும்.

மன்னார் பிரதேசத்தில் விவசாயம், மீன்பிடி ஆகிய இரு வளங்கள் இருந்தும் இது இன்றும் நன்கு விருத்தியடையாத நிலையிலுள்ளது. மற்றும் இம்மாவட்டத்திலுள்ள கனிப்பொருள் வளங்கள் பற்றிச் சரியான முறையில் நிலத்தோட்டம், மதிப்பீடு செய்யப்படவில்லை. இப்பகுதியில் நில எண்ணெய் வள ஆய்வு நடைபெறுகின்றது. இப்பகுதி மிகவரட்சியானதாக இருப்பதால் நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தினலல்லாது அபிவிருத்தி ஏற்படுவது கடினமானதாகும். அடுத்து, இவ்விருதுறைகளிலும் ஈடுபடுத்துவதற்குப் போதிய மக்களின்மையும் முக்கிய காரணமாகும். பொதுவாக, மன்னார் பிரதேசம் வரட்சிப் பகுதியாக இருக்கின்றபொழுதும் பல பருவ ஆறுகள் இதனூடாகப் பாய்கின்றன. பாலிஆறு, சிப்பி ஆறு, பறங்கி ஆறு, நாய் ஆறு, அருவி ஆறு, கல் ஆறு, மோதறகம் ஆறு ஆகியனவற்றுள் அருவியாறே ஓரளவிற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது. மற்றைய ஆறுகள் பருவ ஆறுகளாக இருப்பினும் விருத்தி செய்யக் கூடியதாக வுள்ளன. மேற் பறங்கியாறு, கீழ்ப்பறங்கியாறு, கல்லாறு, மாவில்லு ஆகிய புதிய நீர்பாசனத்திட்டங்கள் இங்கு அமையவிருக்கின்றன. மேலும், மகாவலி திசை திருப்புத்திட்டம் மூலம் தம்புல்ல ஓயா மூலம் அருவியாற்றுக்கு வரும் நீர் அனுராதபுரத்துக்குப்பயன் படுத்தப்பட இருப்பினும், கட்டுக்கரைக்குளத்தின் நீர்வளத்தை அதிகரிக்கச் செய்ய முடியும்.

இம்மாவட்டத்தின் விவசாய அபிவிருத்தி தரைக்கீழ் உள்ள நீரைப் பயன்படுத்துவதன் மூலமே கூடுதலாக அபிவிருத்தி செய்ய முடியும். இங்கு தரைக்கீழ் நீர் இருக்கின்ற பொழுதும் யாழ்ப்பாணம் குடாநாட்டில் இருப்பது போல் நீர் மேலாக இல்லை. இதனால் கிணறுகள் ஆழமாக வெட்டப்படவேண்டும். அண்மைக்காலத்தில் இரு முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒன்று மன்னார் மாவட்டத்தில், குறிப்பாக மேற்குக் கரையோரப் பகுதியில் தரைக்கீழ் நீர் இருப்பது அறியப்பட்டு குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் உயிலங்குளம், அடம்பன் பகுதிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மற்றும் கடினமான பாறைப்பகுதிகளிலும் குறிப்பிடத்தக்க நீரைப் பெறலாம் என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது. இதற்குச் சான்றாக இன்று வவுனியா மாவட்டத்திற் பெருமளவு கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன இந்த அடிப்படையில் குறிப்பாக, மாந்தை கிழக்குப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யலாம். கிணற்று நீர்ப்பாசனம் மூலம் நெற்செய்கை மாத்திரமன்றி உப உணவுப் பயிர்செய்கைகளையும் விருத்தியாக்க முடியும். மற்றும், மன்னார்ப் பிரதேசம் தென்னை, மரமுந்திரிகை, தோடை முதலியனவற்றின் செய்கைக்கு மிகச் சிறப்பான பகுதியாகவுள்ளது.

ஏற்கனவே, கொண்டாச்சியில் அரசு மரமுந்திரிகைச் செய்கையை விருத்தியாக்கியுள்ளது. மேலும் இச் செய்கையை இம்மாவட்டத்தில் விருத்தியாக்கப் பல சாதக நிலைகள் உண்டு.

மீன்பிடித் தொழில் இப்பகுதியில் முக்கியமானதாக இருந்த பொழுதும் நல்ல முறையில் விருத்தியடையவில்லை. பரவைக் கடலாக இருப்பதாலும் துறை முகங்கள் இல்லாததினாலும் ஆற்றுப் பெருக்குக் காலங்களில் வள்ளங்களைக் கரைக்குக் கொண்டுவருவது பெரும் கஷ்டம். இங்குள்ள மீனவர்கள் இலங்கையின் ஏனைய பகுதியிலுள்ள மீனவர்களைப் போல தொழில் நுட்பச் சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் உடையவர்களாக இருக்கின்றார்கள். பேசாலையில் மீன் பதனிடும் ஆலை அமைந்திருந்த பொழுதும் இன்றும் சரியான முறையில் நன்கு இயங்கவில்லை. மன்னார், விடத்தல்தீவு, தொந்சிக்குடா ஆகிய இடங்களிற் கடல் அட்டை பதனிடும் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளதால் இப்பகுதிக் கடல் வளம் பயன் படுத்தக்கூடியதாகவுள்ளது. இப்பகுதியிற் கடல் முத்து சரியான முறையில் விருத்தி செய்யப்பட வேண்டும். மீன்பிடித் தொழிலை விருத்தியாக்க மன்னாருக்கும் பூனகரிக்குமிடையிற் பல புதிய மீன்பிடிக்கிராமங்களைத் தோற்றுவிக்க வேண்டும். யாழ்ப்பாணத்து மீன்பிடிக் கிராமங்களிலிருந்து இங்கு மீனவர்களைக் குடியேற்ற வேண்டும். பிற இடத்து மீனவர்கள் இங்கு வருவதால் மீன்பிடியுரிமை குறித்துப் பிரச்சினைகள் உருவாகினாலும் இயந்திரப் பாவிப்பு அதிகரிப்பால் தூரக் கடற் பகுதிகளில் தொழில் செய்வதற்கு நிறைய வாய்ப்பு உண்டு.

மன்னார்ப் பிரதேச அபிவிருத்திக்கு மக்கள் தொகை குறைவாக இருப்பதும் பெரும் தடையாக இருக்கின்றது. இன்று மக்களின் அன்றாட வாழ்க்கையிற் சமூக தேவைகள் அதிகமாகிவிட்டன. இங்கு மாத்திரமல்ல உலகம் முழுவதிலும் மக்கள் விவசாயமல்லாத தொழில்களையும் நகரத்தையுமே நாடுகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் பொழுது, மன்னார்ப் பிரதேசத்திற் சேவை வசதிகள், போக்குவரத்துச் சேவை வசதிகள் குறைவாக உள்ளன. பிற மாவட்டம், குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதி மக்களை இங்கு இடம் பெயர்விக்க முற்படும் பொழுது இப்பிரதேசத்தின் சமய இடங்களின் வளர்ச்சி முக்கியமானவையாகும். இதனால் முருங்கன், உயிலங்குளம், பாண்டியன்குளம், இலுப்பைக்கடவை, சிலாபத்துறை, நானாட்டான், பெரியபுலிச்சிப் பொற்கேணி, மாந்தை, அடம்பன், பாலம்பிட்டி போன்ற இடங்கள் சேவை நிலையங்களாக விருத்தியாக்கப் படவேண்டும். மன்னார் மாவட்டத்தின் பிரதான நகராக உயிலங்குலம் அல்லது முருங்கனை விருத்தியாக்கப்படல்வேண்டும். இன்றைய மக்கள் மனநிலைப்படி அபிவிருத்தி அடையாத பகுதிகளில் மேலதிக சேவைகள் இருந்தாற்றான் புதிதாக மக்கள் வந்து குடியேறுவார்கள்.

போக்குவரத்து வசதிக்குறைவு இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கின்றது. இப் பகுதி கொழும்பு, யாழ்ப்பாணம் பகுதிகளுடன் மேற்குக் கரையோரமாக இணைக்கப்படவில்லை. மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு இரண்டாந்தரப் பாதை மூலம் பூனகரியிலுள்ள சங்குபிட்டிக்குப் போய், அங்கிருந்து கடல் மூலம் கேரதீவுக்குச் சென்று, பின்னர் யாழ்ப்பாணம் போகக் கூடியதாக இருக்கின்றது. ஆயினும் மழைக்காலத்திற் சங்குப்பிட்டி, மன்னார் பாதையிற் சாதாரண வாகனங்கள் செல்ல முடியாது. வெள்ளங்குளப் பகுதியிற் சில இடங்களில் இன்றும் வீதிகளுக்குத் தார் போடப்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்குப் பஸ்மூலம் வவுனியா வழியாகவும் புகையிரத மூலம் மதவாச்சி வழியாகவும் செல்ல வேண்டியிருப்பதாற் பிரயாணம் மிகக் கூடிய நேரம் எடுப்பதுடன், இப்பகுதிகளுக்கு இடையிலும் போக்குவரத்து வசதி மிகக் குறைவாக உள்ளது. இதேபோல், ஒதுக்கப்பட்ட வில்பத்துக் காட்டுப்பகுதியிருப்பதால் இப்பிரதேசம் புத்தளம்—கொழும்புப் பாதையுடன் தொடர்பற்றிருக்கிறது. கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இரு பகுதிகளுடன் போக்குவரத்துத் தொடர்பு குறைவாக இருப்பதும் இப்பகுதியின் அபிவிருத்திக்குத் தடையாக இறுக்கின்றது. பூனகரிக் கடற்பகுதி மூடப்பட்டு, யாழ்ப்பாணம் மன்னார் வீதி பிரதான வீதியாக மாற்றப்படின், பூனகிரி, பல்லவராயன்கட்டு, இலுப்பைக்கடவை, மாந்தை ஆகிய பிரதேசங்களில் விவசாய மீன்பிடித்துறைகளிற் பெரும் அபிவிருத்தி ஏற்பட இடமுண்டு. மேலும் இம்மாவட்டம் இன்றும் தேசிய மின்சார ஒழுங்குடன் இணைக்கப்படாமல் இருப்பது பொருளாதார விருத்திக்குப் தடையாகவுள்ளது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே மின்சாரத் தொடர்பு ஏற்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. இம் முயற்சி வெற்றிப்பெறுமாயின் வவுனியா அல்லது மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரை உயிர் அழுத்த மின்சார வசதி கிட்டும் கிராம மின்சார வசதி விருத்தியாக்கப்படின் தமிழ் நாட்டைப் போல் மன்னார் மாவட்டத்தில் நீர்பாசனத்திற்கு மின்சாரத்தைப் பயன் படுத்தலாம். கைத்தொழில் துறையில் சிமெந்துத் தொழிற்சாலை அமைக்கக் கூடித சாதக நிலையுமுண்டு. இம்மாவட்டத்தின் அபிவிருத்தி மன்னார் பிரதேச மக்களுக்கு மாத்திரமன்றி யாழ்ப்பாணப் பகுதிகளில் நகரங்களிலும் கிராமங்களிலும் நெருக்கமாக வாழும் மக்களின் சிறு தொகையினரும் இப்பகுதிகளுக்கு இடம் பெயர வாய்ப்பு அளிக்கும். வேலை வாய்ப்புக்கள் கிடைப்

பதுடன் குடியிருப்புக்குத் தேவையான நிலங்களையும் நிலமற்ற வறிய மக்கள் பெறக் கூடிய சூழ்நிலைகள் ஏற்படும். யாழ்ப்பாணம்-மன்னூர் மேற்குக் கரையோரமான விருத்தி இன்றைய தமிழ் மக்களின் பொருளாதார சமூக அரசியற் பிரச்சினைகளைச் சிறியளவிற் காவது தீர்க்கக்கூடியதொன்றாகும்.


உதவிய நூல்கள்:

1. W. J. S. Boake, Mannar: a monograh. Colombo—*1885*
2. E. B. Denham: The Mannar Gazetteer. Colombo—*1906*
3. The Census of Ceylon, *1871—1971*


# இலங்கையிற் சைவக்கல்வியின் எழுச்சி

— வ. ஆறுமுகம் —

இலங்கையின் கல்வி வரலாற்றை நூற்றாண்டுகளுக்கூடாகப் பின்னோக்கிப் பார்க்கும் எவரும் சைவ மரபிலான கல்வி இலங்கையிற் பன்னெடுங்காலமாகப் பரவியிருந்தது என்பதை உணராமல் இருக்கமுடியாது. இதேவேளையில் இன்றைய கல்வியின் வரலாறு மேற்கத்திய அரசுகளின் வருகையின் பின்னரே கணிக்கப்படலாம் என்று கருதுவோரும் உளர். கல்விக்கு இன்று நாம் கொடுக்கும் வரைவிலக்கணம், கல்வியின் பயன்களாக நாம் எதிர்பார்ப்பவை, எமது வாழ்விற் கல்விக்கு நாம் கொடுத்துள்ள இடம் ஆகியவற்றைக் கொண்டு மதிப்பிடும்போது இக்கருத்தின் பொருத்தப்பாட்டை மறுக்கமுடியாது. எனினும் மேற்கத்தையாரது வருகைக்கு முன்தொட்டு எம்மவரிடையே இருந்ததும் அவர்களால் எமக்கு விட்டுச் செல்லப்பட்டதுமான பண்பாட்டுப் பாரம்பரியங்களின் தாக்கத்தினையும் நாம் முற்றாக ஒதுக்க முடியாது.

கிறித்து சகாப்தத்துக்கு முன்பிருந்தே எமது நாட்டிற் செழிப்புற்றிருந்த பௌத்த, சைவ பாரம்பரியங்கள் எமக்கு இன்றும் ஆன்மீக பலத்தைக் கொடுத்துவருவதை நாம் அறிவோம். மேற்கத்திய செல்வாக்கு உலகியல் வாழ்வுக்கு வேண்டிய எல்லாத் துறைகளிலும் அறிவை அளித்தால் இவ்வுலக வாழ்வுக்கு அப்பால் உள்ள நிலைக்கு எம்மைப் பண்படுத்தும் பாங்கை மதப் பாரம்பரியத்தில் ஊறிய கல்வியே புரிகின்றது. கீழைத்தேய நாகரிகங்கள் யாவும் ஆன்மீகத் துறைக்கு முக்கியத்துவம் அளிப்பனவாகும். பௌத்த மதம், சைவ மதம், இஸ்லாம் மதம் என்பன எல்லாம் இதையே பெரிதாகப் போற்றுகின்றன. இலங்கையைப் பொறுத்தமட்டில் இம்மரபுகளின் ஆதிக்கம் அந்நியர் ஆட்சியின் கீழ், இடைப்பட்ட காலத்தில் அடக்கப்பட்டிருந்தாலும் ஒருபோதும் முற்றாக ஒழிக்கப்பட்டது கிடையாது. இம்மரபுகள் இன்றும் எமது மக்கள் வாழ்க்கையின் அடித்தளமாகத் திகழ்வது அவற்றின் அழியாச் சிறப்புக்கு அத்தாட்சியாகும்.

இலங்கையிற் சைவக் கல்வியின் எழுச்சியைப் பார்க்க முற்படும் நாம் அதன் தோற்றத்தையும் ஆதி வரலாற்றையும் சுருக்கமாகவேனும் நோக்குவது ஏற்புடைத்ததாகும். சைவக் கல்வி மரபு இலங்கைக்கு எப்போது வந்தது என்று ஆராயப்புகின் கிறித்துவுக்கு முற்பட்ட ஆறும் நூற்றாண்டுக்குச் செல்ல வேண்டும். கி. மு. ஆறும் நூற்றாண்டு எமது நாட்டு வரலாற்றில் ஆரியருடைய வருகைக்காலம் எனக் குறிக்கப்படுகின்றது. விசயனுடைய வருகையுடனேயே இலங்கையில் ஆரியச் செல்வாக்கு ஆரம்பிக்கின்றது என்பர். அத்துடன் இலங்கையின் ஆதிவாசிகளான இயக்கர் நாகருடைய ஆதிக்கமும் பாரம்பரியமும் தமது தனித்துவத்தை இழந்தன.

இலங்கையிற் சைவ மரபின் செல்வாக்கு தென்னிந்தியாவிலிருந்து படையெடுப்புகளுடனும தனித்தும் வந்து குடியேறிய மக்களுடைய வருகையாற் பலமடைந்தது. அதன் பயனாக இலங்கையின் வடபகுதியிற் சைவ மரபையும், வழிபாட்டையும் பேணிக்காத்து வளர்த்த ஒரு தமிழரசு உருப்பெற்றமைக்கு வரலாறு சாட்சியம் கூறுகின்றது. அவ்வரசின் கீழ் சைவ மரபும், அதன் கட்டுக்கோப்பினுள் அமைந்த கல்விமுறை

வும் யாழ்ப்பாண இராச்சியத்தில் செழித்தோங்கின. அந்நிலை கிறீத்துவுக்குப் பின் பதினைரும் நூற்றாண்டு வரைக்கும் நிலைத்திருந்தது என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

## கிறீத்தவ குழுக்களும் சைவக் கல்வியும்:

பதினைரும் நூற்றாண்டிலிருந்து இலங்கையிற் பரவிய மேனாட்டார் ஆட்சியும், அத்துடன் கூடிய கிறீத்தவ மதங்களின் ஆதிக்கமும் இடையிட்ட ஒரு காலத்துக்கு சைவ மரபினையும், வழிபாட்டையும், அவற்ருேடு பிணைந்த சைவக் கல்வியையும் இருட்டினுள் அமிழ்த்திவிட்டன. அக்காலப் பகுதியின் இலங்கையின் தேசியமத மரபுகளின் இருண்ட காலம் எனக் குறிப்பிடத்தக்கதாகும்.

முதலிற் போர்த்துக்கேயரும், பின்னர் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் சைவ பௌத்த மக்களைக் கிறீத்தவத்துக்கு மாற்றுவதிற் பல வகைப்பட்ட உத்திகளையும் கையாண்டனர். பதவி உயர்ச்சி, அரசாங்க உத்தியோகம், மேனாட்டுக் கல்வி முதலிய பரிசுகளைக் காட்டி மக்களை மதம் மாற்றினர். அப்பேற்பட்ட வழிகளோடுமட்டும் நின்றுவிடாமல் அதிகார பலத்தைப் பிரயோகித்தும் தேசிய மதங்களை ஒடுக்கினர். யாழ்ப்பாணத்தின் முதலாவது போர்த்துக்கேய ஆள்பதியான 'டி ஒலிவேரா' தனதாட்சிக்குட்பட்ட பகுதியில் எல்லோரையும் கத்தோலிக்கர் ஆகும்படி கட்டாயப்படுத்தினன். தண்டனைக்கு அஞ்சிய மக்கள் தமது அந்தரங்க வாழ்வில் சைவமத அனுட்டானங்களைக் கடைப்பிடித்தாலும் வெளியில் கத்தோலிக்கராகவே நடந்தனர். வழிபாட்டு முறைகள் இரகசியமாக இல்லங்களில் மட்டுமே நடைபெற்றன. விரத நாட்களில் உபயோகப் படுத்தப்பட்ட வாழை இலைகளைத்தானும் வீட்டுக்கூரைகளில் மறைத்து வைக்கும் நிலை ஏற்பட்டதாயின் கத்தோலிக்க வெறியின் கொடுமையைக் காட்ட வேறு அத்தாட்சி தேவையில்லை.

ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இருவரும் போர்த்துக்கேயர் கடைப்பிடித்த அளவுக்குக் கடுமையான கொள்கைகளைப் பின்பற்றுவிடினும், அவர்களும் அதிகம் தாராளமாக நடந்துகொண்டார்கள் என்று சொல்ல முடியாது. ஆங்கிலேய அரச மத விடயங்களில் நடுநிலையை மேற்கொண்டதெனக் கூறப்படினும் அவர்களு டைய போக்கு மறைமுகமாக, பாதிரிமாருக்குச்சாதகமாக, மதமாற்றத்தை உற்சாகப்படுத்துவதாகவே காணப் பட்டது. ஆரம்பத்திலிருந்தே ஆங்கிலேய ஆள்பதிகள் நாட்டின் பல பாகங்களிலும் கிறீத்தவ மதக்குழுக்க ளின் செல்வாக்கைப் பரப்புவதற்கு அரச ஆதரவையும் உதவியையும் கொடுத்தனர். அம் மதகுருமார் ஆங்கிலக் கல்வி என்னும் இனிப்புப் பண்டத்தைக் காட்டிச் சைவப் பெற்றோரையும் பிள்ளைகளையும் தம்பால் ஈர்த்தனர்.

மூன்று நூற்றாண்டுகள் வரையில் நடைபெற்ற இப்படியான திட்டமிட்ட கிறீத்தவ தாக்குதலுக்கு முன் சைவமதமும் கல்வியும் ஆட்டங்கண்டது ஆச்சரியமன்று. ஒழுங்கு முறையிலான சைவக் கல்வி வீழ்ச்சியடைய, அது முற்றாக அழிந்துவிடாமற் காப்பாற்றிய பெருமை ஆங்காங்கு இயங்கி வந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களுக்கும் கோயில்களுக்கும் மடங்களுக்குமே உரியதாகும். பாதிரிமாருடைய பள்ளிக்கூடங் களிற் படிக்கப்போகும் ஒவ்வொரு பிள்ளையும் நெற்றியில் விபூதி இட்டிருந்தால் அதைத் துடைக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்ட அந்த நாட்களிலும் சைவ மதமும் கல்வியும் தப்பிப் பிழைக்க மேற்கூறிய தாபனங் களே காலாயிருந்தன.

## நாவலர்:

கி. பி. பதினைரும் நூற்றாண்டு தொட்டுப் பல கோணங்களிலிருந்தும் நசுக்கப்பட்டு வந்த சைவக் கல்வி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து புத்துயிர்பெற்று எழுச்சியுறுவதை நாம் காண் கிறோம். அப்புத்துயிரை ஊட்டியவர் சைவமும் தமிழும் தழைத்தோங்க நல்லை நகரில் வந்துதித்த நாவலர் பெருமானேயாவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட தேசிய மறுமலர்ச்சிக்குச் சிறப்புப் பெற்றது. நாட்டு மக்களுடைய சுதேசப் பண்பாட்டின் வளர்ச்சியில் அரசின் அக்கறை காணப்படாவிடினும் பௌத்தர்களும் சைவர்களும் இஸ்லாமியரும் தங்கள் நிலையையும் அதைத் திருத்தவேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்தார்கள். ஏறத்தாழ அறுபது ஆண்டுகளாக நாட்டின் பல பகுதி களிலும் வேரூன்றிய மதக்குழுப் பள்ளிக்கூடங்கள் நாட்டுமக்களுடைய பாரம்பரிய மதங்களுக்கும் கல்வி மரபுகளுக்கும் அறைகூவலாகத் தோன்றின. சமுதாய பொருளாதாரப் பெறுபேறுகளுடன் தொடர்புற்று விளங்கிய அவர்களுடைய கல்வியமைப்பு மிகுந்த பலம் வாய்ந்த மதம் மாற்றும் கருவியாக அமைந்தது. பௌத்தர்கள், சைவர்கள், இஸ்லாமியர் எல்லோரும் தத்தமது மரபிலான கல்வி நிறுவனங்கள் இல்லாமை யினாலே தம்பிள்ளைகளைக் கிறீத்தவ பள்ளிக்கூடங்களுக்கே அனுப்பவேண்டி நேரிட்டது. அதன் பயனாகப்

பிள்ளைகள் தமது பரம்பரைச் சமயங்களையும் பண்பாடுகளையும் மறந்து மறுத்த பாங்கினையும் காணக்கூடியதாக இருந்தது. அந்தகைய நிலை சுதேச மதத்தவருடைய கண்களைத் திறந்தது. விழிப்புப் பெற்ற பௌத்தர்கள், சைவர்கள், இஸ்லாமியர் எல்லோரும் தத்தம் மதங்களை மீட்டும் பலப்படுத்துவதிலும் அவற்றின் மரபிலான கல்விக் கூடங்களைக் கட்டியெழுப்புவதிலும் ஈடுபட்டனர்.

அந்த விழிப்பில் முக்கிய இடத்தைப் பெற்றவர் ஆறுமுக நாவலர். ''நல்லைநகர் ஆறுமுக நாவலர் தோன்றிலரேல், சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே'' என்று கேட்குமளவுக்குச் சைவமும் தமிழும் தழைத்துச் செழிக்கச் செயலாற்றிய பெருமானார் அவர். தாமே கிறித்தவ பள்ளிக்கூடங்களிற் கற்றமையினாலும் கிறித்தவருக்குக் கீழே சிறிதுகாலம் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றியமையாலும் அவர்களுடைய அமைப்பு, நோக்கம், பிரசார முறைகள் ஆகியவற்றை நன்கு அறிந்தவர். அவற்றின் சத்தியையும் சரிவர உணர்ந்தவரானபடியால் அவற்றை எதிர்த்து நிறுத்தாவிடின் ஏற்படக்கூடிய ஆபத்துகளையும் உணர்ந்துகொண்டார். அதற்கு ஒரு ஆயுதமாகப் பாதிரிமார் பாவித்த பிரசங்க முறையையே பயன்படுத்தி அவர்களைச் சாடினார். சமயக் கல்வியின் அவசியத்தையும் வாழ்க்கைச் சிறப்புக்கு அதன் உபயோகத்தையும் கண்டுணர்ந்து கிறித்தவம் பெற்ற இடத்தை சைவர்களிடையே சைவ மதம் பெற வேண்டும் என்றும் கிறித்தவ மரபுக் கல்விமுறைக்குப் பதிலாக சைவ மத அடிப்படையிலான கல்வி அளிக்கப்படவேண்டுமென்றும் முயன்றார். அவர் காட்டிய பாதையில் சைவப் பாடசாலை இயக்கம் எழுச்சி பெற்றது.

நாவலர் எடுத்த முதல் முயற்சி கிறித்தவ மதக்குருமாரின் தலையீட்டால் தடைப்பட்டாலும் வண்ணார் பண்ணையில் அவர் தாபித்த ''சைவப் பிரகாச வித்தியாசாலை'' இன்றும் ''நாவலர் வித்தியாசாலை'' என்ற பெயருடன் இயங்கிவருகின்றது. நாவலருடைய பணியின் பேறாக இணுவில், கோப்பாய் ஆகிய இடங்களில் மேலும் பள்ளிக்கூடங்கள் தோன்றின. சைவமதக் கல்விக்கு நாவலர் செய்த சேவை பள்ளிக்கூடங்களைத் தாபித்ததோடு மட்டும் நின்றுவிடவில்லை. தமிழ் உரைநடை வளர்ச்சி, மாணவருக்குகர்த மொழி, சமய பாடநூல்களின் ஆக்கம் ஆகியனவும் நாவலர் பெருமையை மெருகுடன் விளங்க வைக்கின்றன.

இராமநாதன் :

சைவக் கல்வி இலங்கையில் எழுச்சி பெற்று விளங்கக் காலாயிருந்தவர்களுள் சேர். பொன்னம்பலம் இராமநாதனும் முக்கியத்துவம் பெறவேண்டியவர். இலங்கையின் பெருந்தலைவர்களில் ஒருவராகப் போற்றி மதிக்கப்பட்ட அப்பெரியார் அரசியற்றுறையில் ஆற்றிய சேவையிலும் கலவித்துறையில் ஆற்றிய சேவையே இன்றும் எம்மிடையே நிலைத்து நிற்கின்றது. கல்விப்பணிக்குப் பொதுவாகவும், சைவக் கல்விக்குச் சிறப்பாகவும் அவர் செய்த சேவை ஊழியுள்ளவரை இலங்கையரால் என்றும் போற்றப்படும் அளவுக்கு அவர் சிறப்புப் பெறுகின்றார்.

சட்டசபையில் அங்கத்தவராகக் கடமையாற்றிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கிறித்தவ மதகுருமாருடைய சகிப்பின்மை, சைவ மாணவருக்குக் கிறித்தவத்தைக் கட்டாய மாகப் போதித்தல் ஆகிய செயல்களைக் கண்டித்துக் குரலெழுப்பினர். வடமாகாணக் கல்வியைப் பொறுத்து அரசு அக்கறையில்லாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி, ஏனைய மாகாணங்களைப் போல அங்கும் ஆங்கிலப் பள்ளிகளும் ஆங்கில சுயமொழிப் பள்ளிகளும் அமைக்கப்படவேண்டுமென வற்புறுத்தினர்.

பேச்சளவில் மட்டும் நின்றுவிடாமல் தாம் கண்ட குறையைப் போக்குவதற்காகத் தம்முடைய பணத்தையே முதலீடு செய்து இரு பெருங் கலைக்கூடங்களையும் கட்டினர். அவை தாம் 1974 ஆம் ஆண்டுவரை திருநெல்வேலியில் ஆண்களுக்காக இயங்கி வந்து, இன்று பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகமாக மாறியுள்ள பரமேஸ்வராக் கல்லூரியும் சைவப் பெண்களின் கல்விக்கென மருதனார் மடத்தில் கட்டப்பட்ட இராமநாதன் கல்லூரி என்பனவுமாகும். கல்லூரிகளைக் கட்டி முடித்தது மட்டுமல்லாமல் அவை என்றும் தொடர்ந்து செயலாற்றக்கூடியவாறு அவற்றுக்கு வேண்டிய சொத்துகளையும் தர்மதானஞ் செய்து வைத்துள்ளமையும் ஈண்டு குறிப்பிடத்தக்கனவாம்.

சைவ பரிபாலன சபை :

ஏற்கனவே குறிப்பிடப்பட்ட பெரியார்களாகிய நாவலர், இராமநாதன் ஆகியோரது முதன்மையின்கீழும் அவர்கள் காட்டிய வழியைத் தொடர்ந்தும் சைவக் கல்வியின் எழுச்சிக்குத் தொண்டாற்றப் பல நிறுவனங்

களும் பெரியார்களும் முன்வந்தனர். அவற்றுள் ஒன்று 1888 இல் அமைக்கப்பட்ட ''யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை'' யாகும்.

நாவலர் பெருமானது மறைவுக்குச் சிறிது காலத்துக்குப்பின்னர் அவருடைய மருமகனுகிய வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளைபோன்ற சில சைவப் பெரியோரின் முயற்சியால் 29.4.1888 இல் ''யாழ்ப்பாணஞ் சைவ பரிபாலன சபை'' தாபிக்கப்பட்டது. சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டு செய்த நாவலரது பணியைத் தொடர்ந்து சைவத்தைப் பேணிப் பாதுகாப்பதும் சைவ மரபிலான கல்வியை வளர்ப்பதும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டு இச்சபை இயங்கத் தொடங்கியது. இச்சபையின் ஆரம்பகாலத்தில் நாவலருடைய உறவினரும் உன்வத சீடர்களுமாகிய பொன்னம்பல பிள்ளையும் கைலாசபிள்ளையும் பெரும் பங்கெடுத்தனர். அவர்களை அடுத்து நீதிபதியாயிருந்து இளைப்பாறிய திரு. த. செல்லப்பாப்பிள்ளை, நியாயவாதி எஸ். நாகலிங்கம், நியாயதுரந்தரர் வீ. காசிப்பிள்ளை, திரு. சி. த. மு. பசுபதிச் செட்டியார் ஆகியோர் சபையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர்.

இச்சபையின் முயற்சியால் 1889 ஆம் ஆண்டு இன்றைய ''யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி''யும் ''இந்து சாதனம்'' என்ற பத்திரிகையும் (தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும்) ஆரம்பிக்கப்பட்டன. சைவப் பிள்ளைகட்கு ஆங்கிலக் கல்வியை அளிப்பதற்கு ஒரு தாபனம் இல்லையே என்ற குறை இந்துக் கல்லூரியைத் தாபித்ததன் மூலம் நீக்கப்பட்டது. அவ்வேளையிலும் கிறீத்தவக் குருமாருடைய கடும் எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டியிருந்தது. எனினும் எடுத்தகருமத்தை எந்த இடையூற்றையும் தகர்த்து முடித்துவைக்கும் ஆற்றல் பெற்ற பெரியார்களைக் கொண்ட இச்சபையின் முயற்சியால் ஊருக்கு ஊர் பல பெருங் கல்லூரிகள் நிறுப்பட்டுச் சைவ மாணவர்களது கல்விப் பசி தீர்க்கப்பட்டது.

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்:

வடமாகாணத்திற் சைவக் கல்வியின் வளர்சசிக்குப் பெரிதும் உதவிய பிறிதொரு தாபனம் ''சைவ வித்தியாவிருத்திச் சங்கம்'' ஆகும். 1923ஆம் ஆண்டு திசம்பர் மாதம் ஒன்பதாம் தேதி சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். வைத்திலிங்கம் துரைசாமி போன்ஹேரது கூட்டு முயற்சியின் பேறுக உருவாகிய இச்சபை சைவக் கல்வியின் வளர்ச்சிக்கெனப் பள்ளிக்கூடங்களைத் தாபித்ததோடு, பிறரால் ஆரம்பிக்கப்பட்டவற்றையும் திறம்பட நடாத்தி வந்தது. வடமாகாணத்தின் பல பாகங்களிலும் பள்ளிக்கூடங்களை நிறுவியதன் மூலம் சைவக் கல்வி பரந்துவளரப் பணிபுரிந்த சிறப்பு இச்சங்கத்துக்கே உரியது. வேறெவரோ அல்லது வேறெந்தத் தாபனமோ செய்யாத, செய்யமுடியாத அளவுக்கு மகத்தான சேவையைச் செய்து குக்கிராமங்கள் கூடத் தமக்கெனக் கல்வி நிலையங்களைப் பெறும் வாய்ப்பினை இச்சங்கமே அளித்தது.

இச்சங்கத்தின் சேவையைப் பாராட்டும் எவரும் அதன் வளர்ச்சியில் திரு. சு. இரசரத்தினம் அவர்கள் வகித்த பங்கினை மறக்கமுடியாது. சங்கத்தின் அமைப்பினையும் சேவையையும் சீர் பெறச்செய்து யாழ்ப்பாணத்தில் சைவக் கல்வியின் வரலாற்றில் தமக்கென ஒரு தனியிடத்தை இப்பெரியார் தேடிக்கொண்டார். இச்சபைக்கு இவர் ஆற்றிய பணியின் பெருமை இவருக்கு ''இந்து போர்டு இராசரத்தினம்'' என வழங்கிய பெயரிலிருந்தே புரியக்கூடியதாகும்.

சைவ வித்தியாவிருத்திச் சங்கம் பள்ளிக் கூட்டங்களைத் தாபித்துச் செய்த சேவை முக்கியமானதாயிருந்தாலும் அதிலும் பார்க்க இன்னொரு சேவை சிறப்புப்பெறுகின்றது. அதுவே சைவ ஆசிரியர் பயிற்சிக்கென ஒரு கல்லூரியை நிறுவியதாகும். அதுவரை சைவப்பிள்ளைகள் படிப்பதற்குப் பள்ளிக்கூடங்கள் பல நிறுவப்பட்டாலும் சைவ சமய மரபு, கோட்பாடு ஆகியவற்றுக்கமைய அவர்களுக்குக் கல்வியூட்டக்கூடிய ஆசிரியர்கள் இல்லாமை அக்காலத்தில் பெருங் குறையாகவே இருந்தது. அரசாங்கத்தினுல் நடத்தப்பட்ட பயிற்சிக் கல்லூரி அத்தேவையை முற்றுக நிறைவேற்ற முடியாத நிலையில் கல்விப்பணிப்பாளருடைய ஆலோசனையின்படி சைவ வித்தியாவிருத்திச்சங்கம் 1928ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திருநெல்வேலியில் ''சைவ ஆசிரியர் பயிற்சி நிறுவனத்''தைத் தொடங்கியதன் மூலம் சைவக் கல்வியின் பரவலுக்கு அத்தியாவசியமான தேவையொன்றினை நிறைவுசெய்தது. அந்த நிறுவனம் பின்னர் அரசாங்கம் பொறுப்பேற்றதையடுத்து மூடப்பட்டாலும், அது பயிற்றிய ஆசிரியர்களின் பணிமூலமே அக்காலத்திற் சைவக்கல்வி உயிருடன் இயங்கக்கூடியதாயிற்று.

## இராமகிருஷ்ண சங்கம் :

இலங்கையிற் சைவக் கல்வியின் எழுச்சியினைப் பார்க்கும் நாம் இராமகிருஷ்ண சங்கத்தின் தொண்டினை யும் மறந்துவிட முடியாது. அச்சங்கத்தின் சேவையின் பெரும்பயனைப் பெற்றது கிழக்குமாகாணமே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அம்மாகாணத்தில் இருபதாம் நூற்றாண்டுவரையிலும் சைவக் கல்வி கவனிப்பாரற்ற நிலையிலேயே கிடந்தது. கவலைக்கிடமான அந்நிலையை மாற்றி சைவ மரபிலான கல்வியை மக்கள் பெறச் செய்ததன் மூலம் அப்பகுதி மக்களுக்குப் புத்துயிரளித்தவர் சுவாமி விபுலாநந்தராவார். அவருடைய ஊக்கத் தினால் திருகோணமலை இந்துக் கல்லூரியும் மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயமும் வளர்ச்சியுற்றன. சுவாமி விபுலாநந்தர் சைவக்கல்வியை வளரச் செய்தது மட்டுமல்லாமல் தமிழையும் வளர்த்துத் தமக்கும் தம் நாட்டுக்கும் அழியாப்புகழைப் படைத்துவிட்டார். விபுலாநந்தரின் முதன்மையிற் கிழக்குமாகாணத்தில் முன்னர் காட்டப்பட்ட இரு கல்லூரிகளையும் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தையும் தாபித்து நடாத்தி இலங்கையிற் சைவக் கல்வி நிலைபெற இராமகிருஷ்ண சங்கம் வழி செய்துள்ளது. அகில உலக ரீதியில் அமைக்கப்பட்டுள்ள இவ்வியக்கத்தின் சேவை சைவ மரபிலான கல்வி, ஒழுங்குமுறையில் வளர்ச்சி பெறுவதற்குப் பெரிதும் உதவியுள்ளதென்பதை நாம் மறக்க முடியாது.

## கொழும்பிற் சைவக் கல்வி.

தலைநகரில் வாழ்ந்த சைவர்களும் தங்கள் பிள்ளைகட்கு சைவ மரபிலான கல்வியின் தேவையைப் உணர்ந்து அவ்வழிப் பாடசாலைகளை அமைக்க முன்வந்தனர். இதற்கு முதன் முதலாக வழிகாட்டிய மகிமை ''கொழும்பு விவேகாநந்த சபைக்கே'' உரியது. 1926 ஆம் ஆண்டு இன்றைய விவேகாநந்த மகா வித்தியால யம் சபையினரால் ஆரம்பிக்கப்பட்டது. வடகொழும்பில் வாழ்ந்த சைவப் பிள்ளைகள் தமக்கெனத் தமது பாரம்பரியத்திற்கேற்ற ஒரு வித்தியாலயத்தைப் பெறும் வாய்ப்பினை அது அளித்தது. அண்மையில் பொன் விழாக் கண்ட அக் கல்லூரியின் சேவையையும் வளர்ச்சியையும் கண்கூடாகவே இன்று நாம் காணக்கிடக் கின்றது.

கொழும்பிற் சைவப் பெண்கள் தமது சமயச் சூழலில் கல்விபெறும வசதியை 1930 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சைவ மகளிர் கல்லூரி (சைவ மங்கையர் கழகம்) ஏற்படுத்தியுள்ளதுதென்பது சிறப்பாகக் கூறிக்கொள்ளக்கூடிய விடயமாகும்.

இவற்றோடு சேர்ந்து கொழும்பிற் சைவ மரபிலான கல்வியைச் சிறப்புற வளர்க்கக் ''கொழும்பு இந்து வித்தியாவிருத்திச் சங்கமும்'' உதவியுள்ளது. அதன் முகாமையின் கீழ் 1951 ஆம் ஆண்டில் தொடங் கிய கல்விக்கூடம் இன்று இரத்மலானையிலும் பம்பலப்பிட்டியிலும் இரு இந்துக் கல்லூரிகளாக வளர்ந் துள்ளன. மிகவும் அண்மையில் இவை தமது வெள்ளி விழாக்களைச் சிறப்பாக கொண்டாடின.

## சைவ மறுமலர்ச்சியின் தாக்கம்:

இடையூறுகள் சூழ்ந்த காலப் பின்னணியில் வேர்விட்டுக் கிளர்ந்தெழுந்த இயக்கமாகச் சைவக் கல்வியின் எழுச்சி செயற்பட்டாலும் அது எந்த ஒரு நிலையிலும் அழிக்கும் பாதையிற் செல்லத் தலைப்படாதது அதன் சிறப்பெனலாம். கிறீத்தவமதக் குழுவினரின் மதம்மாற்றும் செயல்கள் சைவர்களின் நிலைக்கே ஆபந் தாக இருந்தபோதுங் கூட சைவ இயக்கங்கள் வெருக்கும் எதிராகத் தனிப்பட்ட முறையில் இயங்கவில்லை. சைவர்களைக் கிறீத்தவராக மாற்றும் முயற்சியை எதிர்த்த பொழுதும், சைவர்களைச் சுய உணர்வுபெறச் செய்ய, அவர்களது பண்பாட்டுச் சிறப்பினைச் சுட்டிக்காட்டும் வழிகள் கையாளப்பட்டனவேயன்றி மாற் றோரை இழிவுபடுத்தும் முறை எதுவும் கையாளப்படவில்லை. தம்மிடத்தே காணப்பட்ட குறைகளைச் சீர்ப் படுத்தித் தம்மைத்தாமே பாதுகாப்பனவாகவே அந்த இயக்கங்கள் எல்லாம் செயற்பட்டன. மேலும் பாலையுர் தண்ணீரையும் பிரித்துப் பாலைமட்டும் அருந்தும் பான்மைத்தாய அன்னப் பறவையைப் போன்று, கிறித்தவ மதத்துடன் சேர்ந்து வந்த மேற்கத்திய கல்விமுறையிற் காணப்பட்ட உயர்ந்த அம்சங்களை ஏற்ற வாறு தெரிந்தெடுத்துப் பயன்படுத்தவும் அவ்வியக்கங்கள் தவறவில்லை. அவை எல்லாம் சேர்ந்ததன் விளை வாகவே இன்று எமது பிள்ளைகள் எதுவித குறையுமில்லாமல் எல்லாத் துறைகளிலும் கற்று முன்னேறக்கூடிய தாயுள்ளது.

இலங்கையிற் கல்விப் பொறுப்பினை அரசு ஏற்கும் நிலை 1960 ஆம் ஆண்டில் உருவாகியபோது சைவக் கல்வி தனித்துவத்துடன் இந்நாட்டில் நிலைத்திருந்தமைக்குச் சைவப்பெரியோரும், சைவதாபனங்களும் செய்த சேவைகளே காரணங்களாம். எனவே யாமும் வருங்காலச் சைவச் சந்ததியினரும் இப்பெரியோர்க் கும் இத் தாபனங்கட்கும் நன்றிமறவாக் கடப்பாடுடையோம்.

# திருக்கேதீச்சரம் - மரபுகளும் ஐதீகங்களும்

— வி. சிவசாமி —

ஈழத்திருநாட்டிலே புரர்தன காலம்தொட்டுச் சைவம் நிலவிவருகின்றது. இங்குள்ள சிவத்தலங் களிலே திருக்கேதீச்சரமும் திருக்கோணேஸ்வரமும் புராதன வரலாற்றுப் புகழ்பெற்றவை. இவ்விரு திருத்தலங்களுக்கும் சிறப்புவாய்ந்த மரபுகளும் ஐதீகங்களும் நிலவிவருகின்றன. மேலும் இவை மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் சிறப்பும் வாய்ந்தவையாம்.

திருக்கேதீச்சரம் பற்றி விபரமாக அறிதற்கான நம்பகமான, வரலாற்று மூலங்கள் அதிகம் இல்லாவிடினும் தமிழ், சங்கதம், பாளி, சிங்களம் முதலிய மொழிகளிலுள்ள தொல்லியற் சின்னங்கள் சிலவும் வெளி நாட்டாசிரியர் குறிப்புகள் சிலவும் இத்திருத்தலம் பற்றி அறிதற்கு ஓரளவு துணைபுரிகின்றன.

புராதன காலத்திலே திருக்கேதீச்சரம் மகாதுவட்டாபுரம் என அழைக்கப்பட்டதாகவும் அப்பெயரே மாதோட்டம், மாந்தோட்டை, மாந்தை என மருவிவந்துள்ளதாகவும் ஒரு சாரார் கருதுவர். இவ்விடம் புராதன பாளி, சிங்கள நூல்களில் மஹாதித்த, மஹாதித்த பட்டணகாம, மஹாதித்த பட்டண, மஹாவுடு எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. மஹாதித்த என்னும் சொல் வடமொழியிலுள்ள மஹாதீர்த்தம் எனும் பதத்திலிருந்து வந்திருக்கலாம். அவ்வாறாயின் இஃது பெரியதீர்த்தம் உடைய இடமாக விளங்கிற்று எனலாம். இத்தலத்திலுள்ள பாலாவித்தீர்த்த விசேடம் தேவார முதலிகளை நன்கு கவர்ந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. பௌத்த மரபுகளிலும் இவ்விடம் சைவசமயச் செல்வாக்குக் கூடுதலாக நிலவிய இடமாகக் கூறப் படுவதும் மேற் குறிப்பிட்ட கருத்தினை மேலும் அரண்செய்கின்றது. பொதுவாக நோக்கும்போது மாந்தையினைப் புராதன இலங்கையின் முக்கியமான ஒரு துறைமுக நகராகவும் திருக்கேதீச்சரத்தினை அங்கு மிளிர்ந்த பிரபல்லியமான சிவத்தலமாகவும் கொள்வதே பொருத்தமானதாகும். இலங்கையின் மரபுவழி வரலாற்றினைக் கூறும் மகாவம்சம், சூளவம்சம் ஆகியன மாதோட்டத்திற்கூடாக விசயன் காலந்தொட்டு இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலே நிலவிவந்துள்ள தொடர்புகள் சிலவற்றைக் குறிப்பிடுதல் ஈண்டு சுட்டற்பாலது.

## பௌராணிகர் மரபுகள் :

தமிழகத்திலுள்ள பிரதான கோவில்கள் சிலவற்றிற்கு இருப்பதைப் போன்று திருக்கேதீச்சரத்திற்கும் பழைய புராணமொன்று இருந்திருக்கலாம். சேர். பொன். இராமநாதன் இதன் சிறப்புக் கூறும் பராணமொன்று இருந்து மறைந்துவிட்டதாக 1887 இல் இலங்கை வேத்தியல் ஆசிய சங்கத்திலே 'போக்' திருக்கேதீச்சரம் பற்றி வாசித்த கட்டுரையொன்று பற்றி விமர்சிக்கும்போது குறிப்பிடுள்ளார்[1]. வடமொழியிலுள்ள ஸ்காந்தபுராணத்தின் பகுதியாம் தக்ஷணகைலாச மஹாத்மியத்திலே ஸ்ரீ கேதீஸ்வர க்ஷேத்திர வைபவம் என்ற பிரிவிலே திருக்கேதீச்சரச் சிறப்புப் பௌராணிகர் ரீதியிலே கூறப்பட்டுள்ளது.[2]

> "பெருமை வாய்ந்த தக்ஷிணகைலாஸம் என்னும் திருக்கோணசலத்திலே சிவபெருமான் உமையம்மையாருடன் பிரயக்ஷமாக இருத்தலினலும் மாதோட்டம் என்னும் திருக்கேதீஸ்வரத்திலே அடியார்க்கருள் புரியும் நோக்கமாகக் கௌரியம்பிகை நேத்திரானந்தம் கொள்ளப் பஞ்சகிருத்திய நடனஞ் செய்து கொண்டிருத்தலினலும் இவ் இலங்கா தேசமானது 56 தேசங்களிலும் சிறந்ததாகவிருக்கின்றது. இதற்கொப்பான தேசம் பிறிதொன்றுண்டானதுமில்லை. இனி உண்டாவதுமில்லை"[3]

என முக்காலம் உணர்ந்த சூதமுனிவர் நைமிஸாரணிய முனிவர்களுக்கு எடுத்துரைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. மேலும்,

"எவ்வருணத்தினனுயினும் எக்குலத்தினனுயினும் பாலாவித் தீர்த்தத்திலே மூழ்கித் திருக்கேதீஸ்வர தரிசனம் செய்வானேல் போகம் மோக்ஷம் இரண்டையும் பெறுவான். இத்தலத்துக்கிணையான புண்ணிய க்ஷேத்திர முன்னுண்டானதும் இனியுண்டாவதுமில்லை"[4]

என்றும் இப்பகுதியிற் கூறப்பட்டுள்ளது. சைவப் பௌராணிகர் மரபில் இலங்கையிலுள்ள இரு சிவத்தலங்களின் பெருமையுஞ் சிறப்பும் எவ்வாறமைந்தன என்பதற்கு முற்கிளந்த பகுதிகள் சான்ருவன. இந்நூலினைத் தழுவி 1970 இல் அச்சுவேலி சிவஸ்ரீ ச. கு. வைத்தீஸ்வரக் குருக்கள் திருக்கேதீச்சரப்புராணம் பாடியுள்ளார் என்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது.

ஆதிசேடனும் வாயுதேவனும் புரிந்த கடும்போரின் விளைவாகப் பிடுங்கப்பட்டு வெவ்வேறு இடங்களில் விழுந்தனவும் கயிலைமலையின் சிகரங்களுமே திரிகூடமலை, கந்தமாதனம், திருக்கேதீஸ்வரம் ஆகியன என்று புராணங்கூறும். மேலும் திருக்கேதீஸ்வரம் தென்கைலாசம் எனவும் ஆங்கு வழங்கப்பட்டது. கேதிச்சரம் என்ற பெயர் ஏற்படுவதற்குக் கேதுபகவான் வழிபட்டமை காரணமாகக் கூறப்படுகின்றது. கேதுபகவான் கேதீஸ்வர அஷ்டகம்[5] பாடித்துதித்துத் திருவருள் பெற்றுராம். இவ்வஷ்டகத்திலே கேதீஸ்வரச் சிறப்பும் அம்மையப்பர் மகிமையும் ஒருங்கே கூறப்படுகின்றன. மகாதுவட்டாபுரம் என்ற பெயர் தோன்றுவதற்குத் தேவதச்சன் மகாதுவட்டா இங்கு சிவபிரானையும் கௌரியம்பாளையும் பூசித்துத் திருவருள் பெற்றமை காரணமாகக் கூறப்படும். தசரத இராமன் இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பிரமஹத்தி பாவம் நீங்கத் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகிய தலங்களிலே லிங்கப் பிரதிட்டை செய்து சிவபிரானை வணங்கினுன் என்றும் கூறப்படுகின்றது. இங்கு அகத்திய முனிவர் முறையே பத்தும் ஒன்பதும் ஆகிய சுலோகங்கள் கொண்ட துதிகளாற் சிவபிரானை வணங்கித் திருவருள் பெற்ருர் எனப்படும். அகஸ்தியர் பாடிய பத்துச் சுலோகமமைந்த துதி கேதீஸ்வர தசகம்[6] எனப்படும். இவ்விருதுதிகளும் கேதீஸ்வர அஷ்டகமும் கேதீச்சரம் பற்றிய தேவாரப் பதிகங்களை நினைவூட்டுகின்றன என்று கூறல் ஈண்டு பொருத்தமாகும்.

மாதகல் மயில்வாகனப்புலவரின் யாழ்ப்பாண வைபவமாலையில் விஜயன் மேற்குத்திசையிற் பழுதுபட்டுக் கிடந்த திருக்கேதீஸ்வரத்தைப் புதுப்பித்தான் என்று கூறப்பட்டுள்ளது.

வரலாற்று மரபுகள் :

மகாவம்சமும் மகாவம்சடீகாவும் திருக்கோணமலையிலும் வேறிரு இடங்களிலும் இருந்த சிவலிங்கத் தலங்களை அழித்தனவாகக் கூறும் மகாசேனனின் (கி.பி. 276–303) மகனும் இலங்கைப் பௌத்தர்களின் புனிதச் சின்னங்களிளொன்ருன 'தந்ததாது' இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்தவனுமாகிய ஸ்ரீ மேகவண்ணன் (கி. பி. 303–331) காலத்திலே திருக்கேதீச்சரத்தில் அழகிய கோயில் ஒன்றிருந்தது என்று 'தந்ததாது'வின் வரலாற்றினைக் கூறும் தாடாவம்சம் கூறுகின்றது.[7]

கி. பி. ஏழாம் நூற்ருண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரும் கி.பி. எட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருக்கேதீச்சரம் பற்றித் தனித்தனியே பதிகங்கள் பாடியுள்ளனர். சமகாலத்திலும் அதற்கு முன்னரும் இத்தலத்தின் சிறப்புத் தமிழகத்திலே நன்கு நிலவிமையினுலேயே தேவாரம் பாடிய நாயன்மார் பாமாலை சூட்டினர். அப்பர் சுவாமிகளின் தேவாரமொன்றிலும் கேதீச்சரம் பற்றிய குறிப்புளது.[8]

அநுராதபுரகாலப் பிற்பகுதிக்குரிய இரு சிங்களக் கல்வெட்டுகள் மூலம் இலங்கையின் தலைநகரமாக விளங்கிய அநுராதபுரத்திலும் தென் கொடியிலுள்ள கதிர்காமத்திலும் வாழ்ந்த பௌத்தர் மத்தியிலும் கேதீச்சரம் பெற்றிருந்த பெருமதிப்பும் சிறப்பும் தெளிவாகின்றன. அநுராதபுரக் கல்வெட்டில் "ஜேதவன ஸ்தூபிக்கு வழங்கப்பட்டுள்ள தானம் ஒன்றினை மீறியவர்கள் மஹாவுது (மஹாதீர்த்தம்) எனுமிடத்தில் ஆட்டினைக் கொன்ற பாவங்களை அடைவர்" என்றும்[9] கதிர்காமக் கல்வெட்டிற் குறிப்பிட்ட விதிகளை மீறுவோர் மஹாதொடியிலே (மஹதீர்த்தத்திலே) பசுக்களைக் கொன்ருேரின் பாவங்களை எய்துவர் என்றும்[10] கூறப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் கி.பி. பத்தாம் நூற்ருண்டில் இலங்கையின் தலைநகரிலும் தென்கொடியிலும் இத்தலம் புனித இடமாய்க் கருதப்பட்டமை தெளிவாம். எச். எல்லாவல பௌத்தர்களிலும் சைவர்களுக்கே இஃது அதிமுக்கியமான புனித இடமாக விளங்கிற்று என எடுத்துக்காட்டியுள்ளார்.[11]

கி.பி. பத்தாம் நூற்ருண்டின் கடைக் கூறில் இலங்கையிற் சோழர் ஆட்சி நிலைபெற்றபோது திருக்கேதீச்சரமும் அவர்களுடைய ஆதரவினைப் பெற்றது. பத்தாம், பதினெராம் நூற்ருண்டுகளைச் சேர்ந்த

இரு சோழர் கல்வெட்டுகளில் மாதோட்டத்திலே திகழ்ந்த ராஜராஜேஸ்வரம், திருவிராமீஸ்வரம் ஆகிய இரு கோவில்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் ராஜராஜேஸ்வரம் திருக்கேதீச்சரத்திற்கு அளிக்கப்பட்ட புதிய பெயராக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலே நாயன்மார் வரலாற்றினைப் பக்திச் சுவை ததும்பக் காப்பிய வடிவிலமைத்துக் கூறிய சேக்கிழார் சுவாமிகள் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.[12]

கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் ஏற்பட்ட இரண்டாம் பாண்டியப் பேரரசின் ஆதிக்கத்தின் விளைவாகத் திருக்கேதீஸ்வரம் சைவரான பாண்டியப் பெருமன்னரின் ஆதரவினைப் பெற்றது. பாண்டியர் கல்வெட்டுகள் திருக்கேதீஸ்வரத்தில் இதுவரை கிடையாதபோதும் இக்காலத்திற்குரிய கட்டடப்பகுதிகள் சில இருப்பதாகக் கருதப்படுகின்றது. மேலும் முதலாம் சுந்தரபாண்டியன் காலத்துச் சிதம்பரம் கல்வெட்டொன்றிலே திருக்கேதீச்சரம் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது.

பாண்டியருக்குப் பின் ஆதிக்கம் பெற்ற விசயநகரப் பெருமன்னர் இலங்கையின் வடபகுதியிற் சில காலம் பெற்றிருந்த செல்வாக்கின் போது திருக்கேதீச்சரமும இவர்களுடைய ஆதரவைப் பெற்றிருக்கலாம் என்று வரலாற்றாசிரியர் கருதுவர்.

கி. பி. பதினாறும் நூற்றாண்டில் மன்னார்ப் பகுதி போர்த்துக்கேயர் ஆட்சிக்குட்பட்டது. அராலி விசுவநாதசாஸ்திரியாரின் சம்பவக்குறிப்பிலே திருக்கேதீச்சரத்தின் ஒரு பகுதியினை 1540 இற் கடல் கொண்டமையும் பூசைகள் வழக்கம் போல கி. பி. 1589 வரை நடைபெற்றமையும் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது[13]. மன்னாரைப் போர்த்துக்கேயர் அடிமைக்கொண்டது 1590 இல் என்பது கவனிக்கத்தக்கது. போர்த்துக்கேயருக்கு முன்பே திருக்கேதீச்சரம் புகழ் மங்கிற்று என ஒரு சாரார் கருதினும் அவர்களின் ஆதிக்கமேற்பட்டதின் விளைவாகவே இத்தலம் அழிவுற்றது எனலாம். திருக்கேதீச்சரம் பற்றிப் போர்த்துக்கேயர் விரிவாகக் குறிப்பிடாத போதும் மறைமுகமான குறிப்புகள் உள்ளன. குவேறோஸ் சுவாமிகள் தமது நூலில் மன்னார்ப் பகுதியில் ஒளித்துவைக்கப்பட்டிருந்த பெரிதும் சிறிதுமான இருபது சைவ விக்கிரகங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்[14]. இவை உருக்கப்பட்டுக் கிறிஸ்தவ தேவாலய மணியொன்று செய்யப் பயன்படுத்தப்பட்டன. இவை திருக்கேதீசசரத்தைச் சேர்ந்தனவாகலாம். கூத்தோ எனும் போர்த்துக்கேய ஆசிரியர் இப்பகுதியில் மிகப் பெரிய உருக்குச் சங்கிலியொன்று கிடைத்தமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்[15] ஊர்காவற்றுறையிலுள்ள ஹமென்ஹீல் கோட்டையிலுள்ள சாசனம் பொறிக்கப்பட்ட தூண்[16] டச்சுக்காரரினால் மாதோட்டத்திலிருந்து கொண்டுவரப்பட்டதனை நோக்கும் போது சில பகுதிகளாவது டச்சுக் காரர் காலத்தில் எஞ்சியிருந்தமையினை ஊகிக்கலாம்.

1872 இலே நாவலர் பெருமான் திருக்கேதிச்சரத்தின் மகிமையினை யாழ்ப்பாணத்துச் சைவமக்களுக்கு நினைவூட்டினார். இதைத்தொடர்ந்து திருக்கேதீச்சரம் பற்றி ஈழத்துச் சைவப் பெருமக்களும் வேறு சிலரும் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக 1903 இல் புதிய கோவில் உருவாகித் தொடர்ந்து வளர்ந்து வருகின்றது.

## குறிப்புகள்

1. JRAS, CB. Vol. X, No. 35, p. 114 (1887)
2. (அ) தக்ஷிணகைலாச மஹாத்மியம் மூலம்; வித்துவான் சி. நாகலிங்க பிள்ளை பதிப்பு கலி. 5030, விபவ ஞு சித்திரை மாதம்; அத்தியாயம் 2.
   (ஆ) ஸ்ரீமத் தக்ஷிணகைலாஸ மஹாத்மியஸ்தித ஸ்ரீ கேதீஸ்வர க்ஷேத்திர வைபவம் மூலம். க. ஸ. வைத்தியநாதசிவம் எழுதிய தமிழுரையுடன். கும்பகோணம், 1915; 3 அத்தியாயங்கள்.
3. மேற்படி பக். 7.
4. மேற்படி பக். 12–13.
5. மேற்படி, அத்தியாயம் 2.
6. மேற்படி, அத்தியாயம் 3.
7. Dathawamsa, V: V. I.

8. ஆறாம் திருமுறை, திருவீழிமிழலைத்திருத்தாண்டகம்,
9. Epigraphia Zeylonica, Vol. III. p. 132–133.
10. Epigraphia Zeylonica. Vol. III. p. 222–225.
11. H. Ellawala: Social History of Early Ceylon, 1969, p. 118.
12. பெரிய புராணம், திருஞானசம்பந்தர் புராணம், 890.
13. C. S. Navaratnam, A Short History of Hinduism in Ceylon, 1964, p. 41–42.
14. Queyroz, Fr. Fernao de. The Temporal and the Spiritual Conquest of the Island of Ceylon, Book IV Colombo, 1930. p. 665.
15. JRAS, CB. Vol. 20, No. 60, p. 83.
16. K. Indrapala, (Ed.) Epigraphia Tamilica. Vol. 1, Part I. 1971, pp. 10–13.

---

# திருவளர் திருக்கேதீச்சரம்

— துணைப்பேராசிரியர் ஆர். ராமசேஷன் —

'' மாதவர் மடங்க ளாதி வரதன்மந் திரங்களாதி
நாதமா மிலிங்க மாதி நளினபுட் கரிணியாதி
சேதமுற் றிடின் முன்போலச் செய்கின்றோர்க் குறும்பலந்தரன்
ஓதுமுன் செய்தோர் தம்மி லாயிரங் குணித மோங்கும்''

— சிவ புண்ணியத் தெளிவு.

இலங்கையில் சிவபெருமான் உவந்தெழுந்தருளி விளங்கும் தொன்மை வாய்ந்த இரு அற்புதப் பொற்புறு தலங்களில் ஒன்றாக ஒளிரும் திருக்கேதீச்சரத்தில்—நிகழும் 1976— ஜூலை த்திங்களில் மஹா கும்பாபிஷேகம் செய்ய இருப்பது சைவப் பேருலகிற்கு — சைவ நெறி வரலாற்றில் — பெருமை மிகும் அரிய நிகழ்ச்சியாகும். திருக்கேதீச்சரம் திருப்பணியைச் சிந்திக்குங்கால் கி. பி. 1872 இல் (ஆங்கீரஸ ஹு ஐப்பசி மாதம்) வந்தனைக்குரிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் 'யாழ்ப்பாணச் சமயநிலை' எனும் நூலில் எழுதிய வரிகள் இன்றும் நம் காதுகளில் ஒலிக்கின்றன.

''தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது; மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்குந் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றுஞ் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத்திருக்கேதீச்சரம் இவ்வடமாகாணத்தின் கணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்தினுள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக்கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மஹாஸ்தலத்தைச் சிறிதும் நினையாத தென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிதுசிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்துவிடும்! இதை நீங்கள் எல்லீருஞ் சிந்தித்து இத் திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வர்''

இன்று ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் இருந்தால் எத்துணை விம்பிதம் எய்துவார்! நூற்றாண்டுகள் கழிந்து அச்சிவஞானியின் கனவு நனவாகி விட்டது! சிவஞானிகளின் வேட்கை வீண் போவதில்லை. ஏனெனில் அவர்கள்,

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்''

அல்லவா! அவர்கள் விழைவதெல்லாம் கூடும் அன்பினில் கும்பிடலே யாகும். ''மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே'' என்பது தானே நம் சிவஞான போதம் காட்டும் பெருண்மை! அவ்வழிபாட்டிற்கு இன்றியமையாதவை நம் திருக்கோயில்களன்றோ! வடக்கே திருக்கயிலாயமும், தெற்கே திருக்கேதீச்சரமும் நம்சைவ நன்மரபுக்குக் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றன.

திருஞானசம்பந்தப் பெருமான் திருக்கேதீச்சரத்திறைவனைப் பாடிப்பரவும் போது,

''பண்டு நால்வருக் கறமுரைத்தருளிப்பல் லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித்துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில் மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய அருள்செய் கேதீச்சர மதுதானே''

என்று அங்கே தொண்டர்கள் நாடோறும் துதி செய்து அருள்பெறும் திறத்தினைக் காட்டுகின்றார். அன்றைய நிலை இறையருளால் இன்று மீண்டும் கைகூடியுள்ளது.

''சென்றகாலத்தின் பழுதிலாத்திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்தருளப் பெற்றபே றிதனால் எற்றைக்குந் திருவருளுடையோம்''

என்று சேக்கிழார் பெருமான் அருள் வாக்கும் இன்று மெய்ப்பிக்கப் பெற்றிருப்பது இறைவன் பேரருளன்றோ!

**1960** அக்டோபர் **31** ம் நாள் மேற்குப் பிரகாரத்தில் மீண்டும் எழுந்தருளிய திருக்கேதீச்சரப் பெருமான் இன்று எழில்விளங்கும் திருக்கோயிலுள் மீண்டும் எழுந்தருளி நம்மனோர் உய்யக் கும்பாபிஷேகம் கொண்டருளுகின்றார். இத்தருணத்தில் நமது சைவப்பெருநெறியை உய்விக்கவந்தவதரித்த திருஞானசம்பந்தப் பிள்ளையாரும், தம்பிரான் தோழரான திரு நாவலூரரும் நம் திருக்கேதீச்சரப் பெருமானைக் கண்டுவணங்கிய வரலாற்று நிகழ்ச்சியைத் தொண்டர் சீர்பரவுவார் சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கிற் சிந்தித்தல் சிறப்புடையதாம்.

''சேதுவின்கட் செங்கண்மால் பூசைசெய்த
சிவபெருமான் தனைப்பாடிப் பணிந்துபோந்து
காதலுடன் அந்நகரில் இனிது மேவிக்
கண்ணுதலான் திருத்தொண்ட ரானார்க்கெல்லாம்
கோதில்புகழ்ப் பாண்டிமா தேவியார்மெய்க்
குலச்சிறையார் குறைவறுத்துப் போற்றிச்செல்ல
நாதர்தமை நாடோறும் வணங்கி ஏத்தி
நளிர்வேலைக் கரையில் நயந்திருந்தாரன்றே.''

'' அந்நகரில் அமர்ந்தங்கண் இனிதுமேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்த செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச் சரத்தண்ணல் செய்யபாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்பரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகையுற்றார்.''

திருக்கேதீச்சரப் பெருமான் ஆளுடைய பிள்ளையாருக்கு உலவாக்கிழி அளித்தமை ஈண்டுக் குறிப்பிடப்பெறுகிறது. "வேண்டுவார்க்கு வேண்டுவன ஈவான் கண்டாய்" என்பது நம் சைவமறை வாக்கன்றோ!

ஆளுடைய நம்பியாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநெல்வேலி நீற்றழகரைப் பணிந்து வணங்கித் திருராமேச்சரத்தினை அடைகின்றார்:

"மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன் வணங்கிப்
பன்னு தமிழ்த் தொடை சாத்திப் பயில்கின்றார் பார்ம்பணிந்த
சென்னியர் மாதோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்த
சொன்மலர் மாலைகள் சாத்தித் தூரத்தே தொழுதமர்ந்தார்."

இராமேச்சரத்திலிருந்த படியே சுந்தரர் திருக்கேதீச்சரப் பெருமானைப் பாடிப்பரவினார் என்பது சேக்கிழார் சுவாமிகள் வழங்கும் வரலாற்றுக் குறிப்பாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தில் கிட்டாத ஒரு பெரும் பேறு நம்மனோர்க்கு இப்போது கிட்டியுள்ளது! ஆம்! திருக்கேதீச்சரப் பெருமானை அருகிற்சென்று வணங்கி நம் ஏதங்கள் நீங்கி இன்புறும் நல்வாய்ப்பு!

"மூவரென இருவரென முக்கண் ணுடைமூர்த்தி
மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரிற்
பாவம்வினை யறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை யாள்வான் திருக்கேதீச் சரத்தானே"

என்று என்னையாளும் திருக்கேதீச்சரநாதன் என்று நாவலர்கோன் போற்றிய நாதன் நம்மையும் காத்தருள வேண்டுவோமாக.

செந்தமிழ் நாட்டினும் நம் ஈழநாட்டில் சைவநெறி நன்கு போற்றிக்காக்கப் பெறுவது பெருமைக்குரியதாம். கடல் கடந்து வாழும் சைவச் செந்நன்னெறியைப் பேணும் அன்பர்கள் ஆற்றிவரும் சமயப் பணியை உலக றிந்து மாநாட்டின் வாயிலாக உணர்ந்த போது—குறிப்பாக நம் ஈழநாட்டுச் சோதரர்கள் ஆற்றி வரும் அறப்பணிகளும் திருப்பணிகளும் நம் செந்தமிழ் நாட்டுச் சைவர்களை விழிப்புக் கொள்ளச் செய்வதாக! திருக்கேதீச்சரத்தினை மீண்டும் சைவ உலகில் ஒளிரச் செய்யும் திருப்பணிக்குழுவைச் சார்ந்த அறப்பணிச் செம்மல்களைக் கண்டேனும் நம் சைவ அன்பர்கள் நமது தேவாரத்தலங்களைக் கருத்திற்கொண்டு போற்றி அடுத்த தலைமுறையினர் பேணிக்காப்பதற்குரிய பாங்கில் ஆற்றுப் படுத்துவார்களாக. 'சைவ சமயமே சமயம்' என்ற தாயுமானார் திருவாக்கினை எண்ணி நம் சமயநெறி உய்வடைவோமாக!

"சைவத்தின் மேற்சமயம் வேறிலையதிற் சார் சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத்தரச் செய்த நால்வர் பொற்றாள் எம்முயிர்த் துணையே."

ஸ்ரீ கௌரியம்பாள் சமேத ஸ்ரீ கேதீச்சரத்தண்ணல் திருவடி போற்றி!

# திருக்கேதீச்சரமும் திருமுறைகளும்

— வித்துவான் தி. பட்டுச்சாமிஓதுவார் —

''தொண்டர் நாடொறும் துதிசெய
அருள் செய் கேதீச்சரம் அதுதானே.''

குமரியின் தெற்கே தென்கடலின் அண்மையில் அமைந்திருக்கும் பெருந்தீவு இலங்கைத்தீவு (ஈழநாடு) ஆகும். இந்த இலங்கைத்தீவு விராட்புருடனது சரீரமாகிய பிரமாண்டத்திலே 'இடைகலை நாடி ஓடும்தானம்' என்று சாந்தோக்கிய உபநிடதமும் சிவபூமி என்று திருமந்திரமும் புகழும். இத்தீவு எந்நாளும் அழியாமல் பற்பலவளங்களைக் கொண்டது; எவ்விடத்தும் முத்துக்களையும் இரத்தினங்களையும் தன்னிடத்தே கொண்டு திகழ்வது: ''எங்கணும் மணியிலங்குமால் இலங்கை'' என்பது தட்சிணை கயிலாய புராணம். ''தென் கடல் முத்தும் குணகடல் துகிரும் ஈழத்து உணவும்'' என்பது பட்டினப் பாலை.

இலங்கைப்பதி சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே பலமாகாணங்களாகப் பிரிக்கப்பெற்றுத் திகழ்வது. இங்கு சரித்திர காலத்திற்கு முற்பட்டே பல சிவத்தலங்கள் உள்ளன. அவற்றுள் திருக்கேதீச்சரம் என்னும் சிவத்தலமும் ஒன்றாகும்.

## இலங்கை — திருக்கேதீச்சரம் :

இலங்கைப்பதியின் வடபெரும் நிலப்பரப்பில், வடகடல் அருகே மன்னார் என்ற சிறு தீவு உள்ளது. அது தலைமன்னார், கோட்டை மன்னார் என்ற இருபிரிவுகளை உடையது. கோட்டை மன்னாரிலிருந்து வட பெரும் நிலத்துடன் இணைக்கப்பெற்ற பாலத்தின் வழியாகத் தென்திசை வழியில், ஆறரைக் கல் தொலைவில், வடகடல் ஓரமாகத் தென்பால் திகழ்வது திருக்கேதீச்சரம் என்ற சிவத்தலம். ஆதியில் இப்பகுதி மாதோட்ட நகர், மாந்தைநகர் என வழங்கியது. மாதோட்டம் என்பது ஊரின் பெயர்; திருக்கேதீச்சரம் என்பது மாதோட்டத்து ஊரின்கண் விளங்கிய சிவாலயத்தின் பெயர். தற்போது மாதோட்டம் என்ற பெயர் அருகிச் சிவாலயத்தின் பெயராகிய திருக்கேதீச்சரம் என்ற திருப்பெயரே பெருவழக்காக வழங்கிவருகிறது.

ஆதியில் இத் திருக்கேதீச்சரம் திருக்கயிலைமலையின் சிகரங்களில் ஒன்றாகத்தோன்றி விளங்குவது. முன்னொரு காலத்தில் திருக்கயிலையினையும் அதன் சிகரங்களையும் இறுகக் கட்டிப் பிடித்து நின்ற ஆதிசேடனோடு மாறு கொண்ட வாயுதேவன் தனது காற்றினால் மோதித்தள்ளப் பெற்றுத் தென்பகுதியில்—ஈழப்பகுதியில் ஒரு சிகரம் வந்து விழுந்து பூமியுள் பதிந்து நின்றது. அதன் மீது அமைந்த—சுயம்பு வடிவான சிவலிங்கப் பெருமான் திருக்கோயில் தென்கயிலாயம் அல்லது ஈழக்கயிலாயம் எனப் பெயர் பெற்றது. இங்கு தோன்றிய ஊரும் தென்கயிலாயபுரம் அல்லது ஈழக்கயிலாயபுரம் எனப் பெயர் வழங்கலாயிற்று.

இத்தலத்துத் தென் கயிலாத நாதனை—சிவலிங்கப் பெருமானை நவக்கிரகங்களில் ஒருவனான கேது என்பவன் பூசித்துப் பேறுபெற்றான். அதனால் இத்திருக்கோயில் திருக்கேதீச்சரம் எனப் பெயர் வழங்கியது.

இங்கு கேது பகவான் பூசித்த பின்பு அக்கேதுநாதனைச் சூரபன்மன் மனைவியான பதுமகோமளையின் பாட்டானும் விசுவகன்மா என்பவனின் தந்தையுமான மாதுவட்டா என்ற தேவதச்சன் வந்து பூசித்து வழிபட்டான். பிறகு அவன் திருக்கேதீச்சரத் திருக்கோயிலைச் சிறப்பு முறைப்படி திருப்பணி புரிந்தான்; ஊரையும் நன்முறையில் அமைத்தான். ஊர் மகாதுவட்டாபுரம் எனப் பெயர் பெற்றதென்று வடமொழி தட்சிணகயிலாய மான்மியம் கூறுகிறது. இம்மகாதுவட்டா புரம் என்ற பெயரே காலப்போக்கில் மாதோட்டம் என்று மருவி வழங்கியது என்பர்.

இம்மாதோட்ட நகர் பௌத்த இலக்கியங்களில் கி. மு. மூன்றும் நூற்றுண்டிலிருந்து மகாதீர்த்தம் என்ற ஒரு பெயரைப் பெற்றுவருகிறது. மாதீர்த்தம்— இது மிகப் புனிதமான ஒரு புண்ணியத்தலம் என்பதாம். தீர்த்தம்—பரிசுத்தம்; புனிதமாக்குவது; அதாவது தன்னிடம் வந்து முழுகுவோரின்— தரிசிப்போரின் பாவங்களைப் போக்கித் தூய்மை செய்வதாம். இறைவனுக்குத் தீர்த்தன் என்ற ஒரு திருப்பெயரும் உள்ளது; ''சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே' என்பது ஆறும் திருமுறை; ''ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்'' என்பது எட்டாம் திரு முறை— திருவாசகம்.

இம்மகாதீர்த்தத்து அருகே பாலாவி என்ற சிவநதி ஒன்று ஓடுகிறது. மக்கள் வாரணசி (காசி) சென்று கங்கையில் நீராடுவது போல இங்குள்ள மக்களும் மாதோட்டத்தைப் புனிதத்தலமாகக் கருதி வந்து பாலாவில் நீராடிய தாகத் தெரிகிறது. ஆகவே மாதோட்டம் — திருக்கேதீச்சரம் — பாலாவி நதி இம்மூன்றும் மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றிற் சிறப்புடையனவாம். இச்சிறப்பினால் தெய்வத்தன்மை விளங்கும் இத்தலம் மகாதிவ்யத்தலம் ஆகும்.

## மாதோட்டம் — துறைமுகப்பட்டினம் :

பண்டைக் காலம் தொட்டே இம்மாதோட்ட நகர் இலங்கை—வட்கடல் துறைமுகமாக இருந்துவந்ததாகும். இத்துறைமுகத்தின் வழியாகத்தான் தசரதராமன், அகத்திய முனிவர், அருச்சுனன் முதலியோர் இலங்கை சென்றிருத்தல் வேண்டும் என்றும் கி. மு. 6 ஆம் நூற்றுண்டில் கலிங்கநாட்டு இளவரசன் — விஜயன் என்பவன் தன் நண்பர்களுடன் இலங்கைக்குச் சென்றான் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இம்மாதோட்டக் கப்பல் துறைமுகம் போக்குவரத்துத் துறைமுகமாகவும் விளங்கிவந்தது.

இங்குக் கடல் வாணிபம் வெகுகாலம் வரையில் பண்டமாற்றுகவும் பின்பு சிலகாலம் வரையில் பண்டமாற்று நாணயமாற்றும் கொண்டதாகவும் இருந்து வந்தனவாம். இவ்வாணிபம் மாசந்தை போல் விளங்கியது. ஆதன் தந்தை என்பது ஆந்தை என மருவியது போல மா சந்தை என்பது மாந்தை என ஆயிற்று. ஆகவே மாதோட்ட நகர் மாந்தை நகர் என வழங்கப் பெற்றது. ''நன்னர் மாந்தை முற்றத்து ஒன்னார், பணிதிறை கொணர்ந்த பாடுயர் நன்னகர்'' என்பது அகநானூறு; ''புன்னைச் சோலை புனற்றெங்கு சூழ்மாந்தை'' என்பது முத்தொள்ளாயிரம்.

இம்மாதோட்டக் கடற்கரை பலநாட்டுக் கப்பல்களையும் தோணிகளையும் கொண்டு விளங்கிவந்தது. அங்கு வாணிபத்தின் பொருட்டுப் பற்பல நாட்டு மக்கள் வந்து கூடி இருப்பர். இதனை ''வங்கம் மலிகின்ற கடல்மா தோட்ட நன்னகர்'' எனவும் ''வையம் மலிகின்ற கடல்மா தோட்ட நன்னகர்'' எனவும் வரும் சுந்தரர் தேவாரத்தால் அறியலாம்.

## மாதோட்டத் தலச் சிறப்பு :

முற்காலத்தில் மாதோட்ட நகரும் அங்குள்ள திருக்கேதீச்சரத் திருக்கோயிலும் நீர்வளம், நிலவளம், செல்வவளம், குடிவளம் முதலிய பலவளங்களுடன் பாலாவி நதியின் வளமும் கூடிச் சிறப்புற்று விளங்கின.

''வாழையம் பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்ட..... கேதீச்சரம்'' என்பதும் ''மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர்..... கேதீச்சரம்'' என்பதும் ''கடல்வாய்ப் பொன் விலங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்ட.... கேதீச்சரம்'' என்பதும் இரண்டாம் திருமுறை. ''மாவின் கனி தூங்கும் பொழில்மா தோட்ட நன்னகரில் பாலாவியின் கரைமேல்...... திருக்கேதீச்சரத்தானே'' என்பதும் ''வங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே'' என்பதும் ஏழாம் திருமுறை.

மாதோட்டத்திருக்கேதீச்சரத்தலம் காசி (வாரணசி)த்தலத்தைப்போலச்சிறப்புடைய புண்ணியத் தலம். இங்கு மரணம் அடையும் ஒரு உயிர் அச்சமயம் திருக்கேதீச்சரப் பெருமான் மகிமையால் அச் சிவாலயத்தின் பாகமாகத் தலை வைத்துக் கிடக்குமாம். ஒருவர் இத்தலத்தில் மரணம் அடையும் தருவாயில் திருக்கேதுநாதன் அவரைத்தம் மடிமீது இருத்திக் காசியைப் போல அவரது வலக்காதிலே ஸ்ரீ பஞ்சாட்சரம் மந்திரத்தை ஓதி இவர்க்குச் சிவகதி அருளுவர் எனத் தலமான்மியம் கூறுகிறது. ''திருவாரூர் பிறக்க முத்தி'' என்பது போல இத்தலத்துப் பிறந்த மக்கட்கும் முத்திப் பேறு கிட்டுவது திண்ணம்.

ஒருவர் கடல் சூழ்ந்த இம்மாதோட்டத் திருக்கேதீச்சரத்தலத்தை அடைந்து சிலகாலம் தங்கித் திருக்கேதுநாதனை இரவுபகல் சிந்தித்துத் துதித்து அவனது திருவடிக்கமலங்களை வணங்கி வழிபடும் அன்பர்களே சிவத்தொண்டர்களாம். அத்தொண்டரது கொடுவினைகள் அவர்களை அடைவதும் இல்லை; துன்புறுத்துவதும் இல்லை; பாவச் செயல்களும் அவர்களை வந்து தாக்குவதும் இல்லை:

''....மலிகடல் மாதோட்டத்து எல்லை யில்புகழ் எந்தைகேதீச்சரம் இராப்பகல் நினைந்தேத்தி அவ்வவ் ஆசறுத்து அரனடி இணைதொழும் அன்பராம் அடியாரே'' என்பதும் ''....கனைகடல் கடிகமழ் பொழிலணி மாதோட்டம், கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை அடையாவே'' என்பதும் ''மாதோட்டத்து, அண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்கு அருவினை அடையாவே'' என்பதும் சம்பந்தர் தேவாரம். ''மாதோட்ட நன்னகரில், பாவவினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்.... திருக்கேதீசரத்தானே'' என்பது சுந்தரர் தேவாரம்.

இத்தலத்துச் சிவமே நிலவும் நான்கு மாடவீதிகளிலும் திருவைந்தெழுத்தை — ஸ்ரீ பஞ்சாட்சரத்தை மனத்தில் செபித்துக்கொண்டு அங்கப்பிரதட்சணம் செய்பவர்களின் உடலுறு பிணிகள் நீங்குவதுடன் பிறவிப்பிணியும் நீங்குமென்க; ''அங்கத்துறு நோய்கள் அடியார் மேலொழித் தருளி... மாதோட்ட நன்னகரில் ...திருக்கேதீச்சரத்தானே'' என்பதும் ''ஊனத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருளி, ..மாதோட்டநன் னகரில், ...திருக்கேதீச்சரத்தானே'' என்பதும் சுந்தரர் தேவாரம்.

மாதோட்டப் பாலாவித் தீர்த்தத்தின் மகிமை :

மாதோட்டத் திருக்கேதீச்சரத்தில் திகழும் புண்ணிய தீர்த்தம் பாலாவி என்ற தீர்த்தம் ஒன்றேயாம். இதனை, ''மாதோட்டத்துள் மன்னு பாலாவியின் கரையில் கேதீச்சரம்'' எனச் சம்பந்தர் தேவாரமும் ''....மாதோட்டநன்னகரில், ....பாலாவியின் கரைமேல், செய்ய சடை முடியான் திருக் கேதீச்சரத்தானே'' எனச் சுந்தரர் தேவாரமும் கூறுகின்றன.

இப்பாலாவி தீர்த்தம் சிவவடிவமாகும்; இஃது இத்தலம் தோன்றியபோதே தோன்றியது. இமயத்திலுள்ள மானசவாவி என்னும் தெய்வத்தடாகத்தைப் போல மிகமேன்மை உடையது. இதனை, ''பரம்பரன் உருவாய் உற்ற பாலாவி'' என்றும் ''பலவினைக் குறும்பு போக்கும் பாலாவி'' என்றும் திருக்கேதீச்சரப் புராணம் புகழ்கிறது.

இப்பாலாவிச் சிவதீர்த்தம், திருக்கேதீச்சர ஆலயத்தின் அம்மன் சந்நிதிக்கு நேர் எதிரே — தென்பால் சிறிது தூரத்தில் உள்ளது. இது கி. பி. 9ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதியான சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திலும் பெருநதியாக இருந்து, மேலைக் கடலுடன் கலந்து நின்றதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். தற்போது பாலாவியானது அணைகட்டித் தேக்கிய நீர்நிலைபோல் காணப்படுகிறது. அது கீழ்மேல் மிக நீண்டு அகன்று ஏரிபோன்று திகழ்கிறது.

ஒருவர் இப்பாலாவி தீர்த்தத்தில் நாடோறும் ஸ்நானம் செய்து, கேதுநாதனைத் தரிசிக்கின் இஷ்டசித்திகளைப் பெறுவர். அவ்வாறு இயலாதவர், விசேட புண்ணிய காலத்திலேனும் வந்து ஸ்நானம் செய்து இறைவனைத் தரிசிக்கின் இஷ்ட காமியங்களைப் பெற்று உய்வர் என்பது திண்ணம். ஒரு நாளேனும் பாலாவியில் வந்து ஸ்நானம் செய்யாதவர் அவரது மானுடப்பிறவி ஒரு பிறவி ஆகுமோ? ஆகாது என்று தலபுராணம் கூறும்.

ஒருவர் தமது பிதுர்தினத்தில் இப்பாலாவியில் வந்து நீராடி நியமம் முடித்து அங்கேயே திலதர்ப்பணம் அல்லது ஆமசிரார்த்தம் செய்து கேதுநாதனைத் தரிசித்து நெய்விளக்கு இட்டு வழிபடின் கயாவில் சிவதர்ப்பணம் அல்லது சிவசிரார்த்தம் செய்த பெரும் பயனை அடைவர்; தென்புலத்தாரும் மிகமகிழ்ந்து அவர்க்கு ஆசிகூறுவர்.

மாதோட்டத்துக் கேதுநாதனின் பெருமை:

இம்மாதோட்டத் திருக்கேதீச்சரத் திவ்யத் திருக்கோயிலில் எழுந்தருளிய மூலஸ்தான சிவலிங்கப் பெருமான் திருக்கயிலைச் சிகரத்தில் முளைத்தெழுந்த — திருக்கேதார லிங்கம் போன்ற — சுயம்பு வடிவான மூர்த்தி ஆவார். அவர், தென்கயிலாய நாதர், ஈழக்கயிலாய நாதர், திருக்கேதீச்சர நாதர், மகாதுவட்டாபுர நாதர், கௌரிநாதர் எனப் பல திருநாமங்களைப் பெற்று விளங்குபவர்.

அன்றியும் ஆதியில் ஒருவகை நாககுலத்தினர் கேதுநாதனைப் பூசித்துவந்ததால் அவர், நாகநாதர் என்றும் மெய்யன்பர்களின் பிறவிப்பிணியினைப் போக்கும் அரிய மருந்தாகக் கௌரிநாதர் மாதோட்டத்தில் வீற்றிருந்ததால் அவர் மாதோட்டத்து மருந்து என்றும் இராசேந்திர சோழன் கல்வெட்டு ஒன்றில் கேது நாதன், இராசராசேச்சரத்து மகாதேவர் என்றும் திருப்பெயர்களைப் பெற்றுள்ளார்.

ஆங்காங்கே முழங்கும் மணமுரசின் ஒலியைப் போலக் கடலொலி நீங்காத மாதோட்டத்துத் திருக்கேதீச்சரத்தில் கேதுநாதன், பக்குவ ஆன்மாக்களுக்குத் திருவருள் புரியும் பொருட்டு எக்காலத்தும் அங்குநின்றும் பிரியாமல் வீற்றிருந்தருளுகின்றார் என்றும், இக்கேது நாதரே நித்திய கல்யாண மணவாளராக எழுந்தருளி இருந்து யாவர்க்கும் மங்கல வாழ்வு அருளுகின்றார் என்றும் சைவத் திருமுறைகள் முழங்கு கின்றன.

''...மாதோட்டக், கேழல் வெண்மருப்பு அணிந்தநீள் மார்பர்கே தீச்சரம் பிரியாரே'' என்பது சம்பந்தர் தேவாரம். 'நலீன கவிழ்வாய் மத்தமத யானையுரி போர்த்த மணவாளன்'' என்பது சுந்தரர் தேவாரம். இங்கு எழுந்தருளிய அம்மையார் திருநாமம் கௌரியம்மையார் என்பதாம்.

திருக்கேதுநாதனை வழிப்பட்டோர்:

திருக்கேதீச்சரப் பெருமானைத் திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும், கேதுபகவான், மகா துவட்டா, அகத்திய முனிவர், பிருகுமுனிவர், தசரதராமன், அருச்சுனன் முதலியோர்களும், பாண்டியன், சேரமன்னன், கலிங்கநாட்டு இளவரசனுன விஜயன், அவனது பிராமண குருவான உபத்தீசன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர்.

இலங்கை நகரிலும் மாதோட்ட நகரிலும் சிறப்புற வாழ்ந்துவந்த இராவணன், மாலியவான் மயன், மண்டோதரி முதலியவர்களும் திருக்கேதீச்சரரை நாளும் வழிபட்டு இஷ்ட சித்திகளை அடைந்தவர் ஆவர்.

திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் இராமேசுவரத் தென்பகுதியான கடற் கரையின்கண் நின்று திருக்கேதுநாதனை மனக்கண்ணுல் தரிசித்து வணங்கித் தொழுது தேவாரப்பதிகங்கள் பாடினர் என்று பெரிய புராணம் கூறும்.

# திருவாசகத்தில் சைவசித்தாந்தம்

— புலவர் ந. ரா. முருகவேள் —

சைவசித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவக் கொள்கையினை வகுத்து விளக்கிய நம்முடைய சைவப் பெருஞ் சான்றோர்கள், திருவாசகத்தை நன்றாக ஓதி உணர்ந்தவர்கள்; அதன்கண் பெரிதும் தோய்ந்து ஈடுபட்டுத் திளைத்தவர்கள். திருவாசகத்தின் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரை யும், அவர்கள் பெரிதும் நுனித்து ஆய்ந்துணர்ந்து அவற்றின் அடிப்படையிலும், அவற்றிற்கு ஒரு சிறிதும் மாறுகாத வகையிலுமே, சைவசித்தாந்தக் கொள்கைகளை வகுத்து வரையறை செய்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது. சமய ஞானத் தத்துவக்கொள்கைகளில் தெளிவு ஏற்படாத பொழுதும், சிக்கல்கள் நேரும் பொழுதும், இன்னதுதான் ஏற்புடைத்து என்று எண்ணித் துணிந்து முடிவு செய்வதற்கு, நம் முன்னோர்கள் திருவாசகத்தினை ஒரு மேல்வரிச்சட்ட நூலாக மேற்கொண்டிருந்திருக்கின்றனர் எனலாம்.

குருவும் சிவமும் :

இறைவனே குரு வடிவமாக மானுடச் சட்டை தாங்கி எழுந்தருளி உயிர்களையெல்லாம் ஆட்கொண் டருளுகின்றான் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. மாணிக்கவாசகரின் அருள் வாழ்க்கையையும் திரு

வாசகத்தையும் அடிப்படையாகக் கொண்டே இக்கொள்கை வரையறை செய்யப்பெறுவதாயிற்று. எல்லாம் வல்ல சிவபெருமான் திருப்பெருந்துறையிற் குருந்தமர நிழலில் குருவடிவம் கொண்டு போந்து மணிவாசகரை ஆட்கொண்ட திறத்தினை நினைத்தே மெய்கண்டார் பெருமான்,

'' ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்திவிட்டு
அன்னியம் இன்மையில் அரன்கழல் செலுமே''

என சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரத்தினை அருளிச் செய்தவர். அருவநிலையில் உள்ள இறைவன் உருவம் கொண்டு வருதல் இயலுமோ எனச் சிலர் ஐயுற்று வினவலாம். அதற்குத் திருக்களிற்றுப்படியாரில், திருக்கடவூர் உய்யவந்த தேவர் விடை கூறுகின்றார். உவர்ப்பு என்னும் சுவை அருவமேயாயினும், அது உப்பு என்னும் உருவப் பொருளாகத் திரண்டு குவிந்து நிற்றலைக் காண்கின்றோம். ஆதலின் இறைவன் அருவநிலையில் இருப்பினும் தனது அன்பர்களை ஆட்கொண்டு காத்தருள உருவம்கொண்டு போதருதல் இயலும் என்பது அவர் கூறும் விளக்கம். இவ்வுண்மையை வலியுறுத்துவதற்கு அவர்,

'' கண்ணால் யானும்கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவன்என யானும் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண்டு அருளினன் காண்க''

'' அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி, அருளிய பெருமை''

என்னும் திருவாசக வரிகளையே நினைவு கூர்ந்து, மேற்கோள் காட்டியிருக்கின்றார். ''சிவன் எனவே தேறினன் யான்'' என்றமையால், ''இன்றும், சிவன் அவனி வந்தபடி செப்பில்...'' என்வரும் திருக்களிற்றுப்படியார் செய்யுளில் திருவாசக வரியே மேற்கோள் நிலையில் வந்திருத்தல் காணலாம். திருவருட்பயன் என்னும் சைவ சித்தாந்த நூலின்கண் வரும் ''அருளுருநிலை'' என்னும் தலைப்பு முழுவதும் திருவாசகத்தை அடியொற்றியதேயாகும்.

## ஒளியும் இருளும் :

இறைவன் 'அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்' நிற்கின்றான். ஆயினும் உயிர்கள் இறைவனை அறிய மாட்டாமல் பொறிபுலன்களுடன் இயைந்து மயங்கியே நிற்கின்றன. இஃது எது போலும் என்னில் சூரியன் எவ்வளவுதான் பேரொளி பரப்பித் திகழ்ந்தாலும் பிறவிக் குருடர்கள் அதனை ஒரு சிறிதும் காண முடிவதில்லை. அவ்வாறே உயிர்களும் மலங்களினால் மயங்கி அறிவிழந்து, இறைவனை அறிய மாட்டாமல் துன்புறுகின்றன. ''இங்கும் தான் அந்தகருக்கு இரவிஇருள் ஆகும்; ஈசன் அருட்கண் இல்லார்க்கு ஒளியாயே இருள் ஆவன்'' என்பது சிவஞானசித்தியார். இறைவனது திருவருள் வெள்ளம் எங்கும் பரவிப் பெருகிக் கிடக்கினும் அவனை உயிர்கள் அறியமாட்டாமல் அலமந்து உழலுகின்றன என்கின்றார் உமாபதிசிவம். இந்நிலையை உன்னும்போது அவருக்குத் திருவாசகமே நினைவிற்கு வருகின்றது. ''வெள்ளத்துள் நாவற்றி யாங்கு உன் அருள் பெற்றுத் துன்பத்தினின்றும் விள்ளகிலேன்'' என்வரும் நீத்தல் விண்ணப்ப வரிகளை நினைவு கூர்ந்தே,

'' வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம்
கள்ளத் தலைவர் கடன்''

எனத் திருவருட் பயனில் உமாபதிசிவம் அருளிச் செய்திருக்கின்றார். 'முன்னோர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும் பொன்னே போற் போற்றுவம் யாம்' என்பதற்கு இஃது ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

## நீரும் தீயும் :

இறைவன் சடம், சித்து, உயிரில் பொருள், உயிர்ப்பொருள் ஆகிய எல்லாவற்றினுள்ளும் விரவிக் கலந்து நிற்கின்றான். ஆயினும் அவன் அவைகளின் ஒன்றல்லன்; அவற்றின் வேறு பட்டவன்! வேறுபட்ட அவன் அவைகளுள் எங்ஙனம் பிரிவற இலயந்து நிற்றல் இயலும் எனச் சிலர் வினவுதல் கூடும். இவ்வினாவுக்கு ஒரு வகையில் திருவருட் பயன் என்னும் சைவசித்தாந்தநூல் சிறந்ததொரு விளக்கம் தருகின்றது. நீர் தண்மையுடையது; தீ வெம்மையுடையது. நீரும் தீயும் தம்முள் வேறுபட்டவை; மாறுபட்டவை. எனவே நீரும் தீயும் தம்முள் ஒன்று கலக்கமாட்டா. ஆயினும் தண்மை மிக்க நீரின்கண் ஒரோவழி தீயினது வெம்மை கலந்து நிற்றலும் உண்டு; நீரும் தீயும் தம்முள் அறவே மாறுபட்டனவாயினும் வெந்நீரின்கண் அவையிற்றின் இரண்டு தன்மையும் பிரிவற விரவிக் கலந்து நிற்கக்காண்கின்றோம். அதுபோலவே சடமும் சித்தும் ஆகிய உலகியற் பொருள்களிலெல்லாம் அறவே வேறுபட்டவனாயினும் ஒரோவழி இறைவன் அவற்றோடு கலந்து ஒன்றி உடனாகவும் நிற்கின்றான். இறைவனின் இரண்டன்மை ஆகிய இவ்வியல்பினையே 'அத்துவிகம' அல்லது 'வேறாய் உடனாதல்' எனச் சைவ சித்தாந்த நூல்கள் சாற்றும். இறைவனின் இவ்வியல்பினையே ;

'' எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்
தங்கும் அவன் தானே தனி''

எனத் திருவருட் பயன் தெளிவிக்கின்றது. இதற்கு உரிய ஆதாரமும் மேற்கோளும் ''பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே நீருறுதீயே நினைவதேல் அரிய நின்மலா'' என வரும் திருவாசகப் பகுதியேயாகும்.

## இருவினை ஒப்பு:

இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்பன சைவசித்தாந்தத்தில் அடிக்கடி வழங்கப் பெறும் குறியீடுகள். இருவினையொப்பு என்பது மலபரிபாகம் அடைதற்கும் சத்திநிபாதம் எய்தற்கும் ஞானம் பெறுவதற்கும் உரிய வாயில் ஆகும்.

'' இருவினை யொப்பில் இறப்பில் தவத்தான்
மருவுவனும் ஞானத்தை வந்து''

என்பது சிவஞானபோதம். இருவினைகளாகிய புண்ணிய பாவங்கள் இரண்டும் சரியை, கிரியை, யோகம் என்னும் தவத்தின் பயனாகத் தராசுத் தட்டுக்களைப் போல நேராக நின்று சமநிலையை அடைதலே இருவினை யொப்பு எனப்படும். 'ஒட்டு இருவினைச்சமம், கட்டவிழ்பருவம்' என்பது பாம்பன் சுவாமிகள் அருளிய ஞானவாக்கியம்.

ஒரு பொருளில் விருப்பும் பிறிதொரு பொருளில் வெறுப்பும் கொள்ளுதல் இன்றிப் புண்ணிய பாவம் இரண்டிலும் அவற்றின் பயன்களிலும் விருப்பு வெறுப்பு இன்றிப் பொதுமை யுணர்வுடன் இருக்கப் பெறும் நிலையையே இருவினையொப்பு எனக் கொள்ளுதல் பொருந்தும். இதனைச் 'செஞ்சாந்து பூசினும் செத்தினும் போழினும் நெஞ்சார்ந்து ஓடாநிலைமை' எனத் தொல்காப்பியத்திற்கு உரை வரைந்த பேராசிரியர் குறிப்பிடுவர். இதனைச் 'சாந்தம்' அல்லது 'சமநிலை' என்றும் நூல்கள் கூறும்.

" உணக்கி லாததோர் வித்துமேல் விளையாமல்
என்வினை ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே''

எனவரும் திருவாசக வரிகளில் இருவினையொப்புப் பற்றிய சைவசித்தாந்தக் கருத்திற்கு அடிப்படை மூலம் அமைந்திருத்தல் காணலாம்.

உருமூன்று :

சில சமயங்கள் கடவுளை அருவம் என்றே கொள்கின்றன; சில சமயங்கள் கடவுளை உருவம் என்றே உரைக்கின்றன. இங்ஙனம் இவ்விருதிற நிலைக்குள் ஒவ்வொன்றனையே பற்றிக்கொண்டு சமயங்கள் பலவும் தம்முள் இகலிக்கலாம் விலைத்து நிற்க இவ்விருதிற நிலைகளையும் ஏற்று உடன்பட்டுக் கொள்வதுடன், இவற்றின் வேறாக உருவாருவம் என்னும் ஒரு நிலையும் இறைவனுக்கு உண்டு எனச் சைவசித்தாந்தம் சாற்றுகின்றது. இதனை,

''அருவமும் உருவா ரூபம்
ஆனதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன
ஒருவனுக்கு உள்ள வாமே''

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள்கொண்டு தெளியலாம். பிரமன், திருமால், உருந்திரன், மகேசுவரன் ஆகிய மூர்த்தங்கள் நான்கும் உருவம்; நிது, நாதம், சத்தி, சிவம், என்பன நான்கும் அருவம்; சதாசிவம் என்னும் சிவலிங்கத் திருமேனி அருவுருவம் (சித்தியார் 164.). கண், காது, மூக்கு, முகம், முதலிய உறுப்புகள் காணப்படாமையால் அருவமாகவும் கண்ணுற் காணப்படுகின்ற பருவடிவப் பிழம்பாகப் புலனாகி நிற்றலின் உருவமாகவும் சிவலிங்கம் திகழ்கின்றது. ஆதலின் அதனை 'உருவாருவம்' என்றும் 'சகளநிஷ்களம்' என்றும் நூல்கள் நுவலும். இங்ஙனம் இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று நிலைகளிலும் விளங்குகின்றான் எனச் சைவசித்தாந்தம் கூறுவதற்கு,

''உருமூன்றும் ஆகி
உணர்வரிதாம் ஒருவனுமே
புரம்மூன்று எரித்தவா
பூவல்லி கொய்யாமோ''

எனவரும் திருவாசகப் பகுதியே மூலமும் ஆதாரமும் ஆகும் எனத் துணிந்து மொழியலாம்.

மறக்கருணை :

உலகில் உள்ள சமயங்கள் பலவும் இறைவன் பாவிகளைச் சபிக்கின்றான்: தீயவர்களைத் தண்டிக்கின்றான் எனப் பல செய்திகளைக் கூறக் காண்கின்றோம். இறைவன் கோபங்கொள்ளுகிறான்; கோபம் கொண்டால் தண்டிக்கிறான்; அழிக்கின்றான் என்றே பல சமயங்கள் கருதுகின்றன. ஆனால் சைவச்சித்தாந்தமோ கடவுள் ஒரோவழி தண்டிக்கநேரினும், அத்தண்டனையும் கூட, அவர்தம் அளவற்ற பெருங்கருணைத் திறத்தினாலேயே நிகழ்கின்றது என விளக்குகிறது.

தந்தையும் தாயும் தாம் பெற்றெடுத்த மைந்தர்கள் தம்முடைய சொற்படி நடவாமல் தவறுகள் செய்வார்களாயின் ஒரோ வழி அவர்களை அடித்தும் தண்டிப்பதுண்டு. அஃது அவர்கள் தமது மைந்தர்களின் மீது வைத்துள்ள அளவற்ற அன்பின் காரணமாகவே அன்றிப் பிறிதொன்று பற்றியன்று (சித்தியார் 105). அம்முறையிலேயே இறைவனும் உயிர்களுக்கு ஏற்றபெற்றி அருள்புரிந்து அவைகளை ஆட்கொள்கின்றான் (சித்தியார். 125). ஆதலின் ஒரோவழி இறைவன் தண்டனைகள் அளிப்பதும் அவன் நம்மீது கொண்டுள்ள அளவற்ற பேரருட் பெற்றியினாலேயே. ''நிக்கிரகங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது'' (சித்தியார் 106) என்பது சைவசித்தாந்தக் கொள்கை. இதனை ''மறக்கருணை'' எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறும்.

''ஏற்று வந்தெதிர்த்தாமரைத் தாள்உறும்
கூற்றம் அன்னதோர் கொள்கைஎன் கொள்கையோ''

'' உடையாய் கூவிப் பணிகொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே ''

'' நயனங்கள் மூன்றுடைய
நாயகனே தண்டித்தால்
சயம் அன்றே வானவர்க்குத்
தாழ்குழலாய் சாழலோ''

'' காமன்உடல் உயிர்காலன்
பல்காய் கதிரோன். . . .
தூய்மைகள் செய்தவா
தோள்நோக்கம் ஆடாமோ''

என்பன போல வரும் திருவாசகப் பகுதிகளே இறைவனின் மறக்கருணை பற்றிய விளக்கத்திற்கு ஏதுவாகும் எனலாம்.

விளையாட்டு :

இறைவன் உலகைப் படைக்கின்றான்; காக்கின்றான்; அழிக்கின்றான் என்பதனை, இறையுண்மையை உடன்படும் சமயங்கள் பலவும் கூறும். ஆயினும், இங்ஙனம் இறைவன் உலகைப் படைத்தலும் காத்தலும் அழித்தலும் எற்றுக்கு? என வினவினால் எல்லாச் சமயங்களும் ஒரே வகையில் விடை தருவதில்லை. தன் பொருட்டு என்றும், பிறர் பொருட்டு என்றும் வீணுக்கு என்றும் விளையாட்டுக்கு என்றும் வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு வகையில் விடைகள் புகலும்.

சைவசித்தாந்தச் சான்றோர்கள் ஆகிய அருள்நந்தி சிவமும் உமாபதிசிவமும் 'விளையாட்டு' என்னும் கொள்கையை அறவே மறுத்து விடாமலும் முற்றிலும் தழுவிக்கொள்ளாமலும் ஓரளவில் ஏற்று உடன்பட்டுக் கொள்ளக் காண்கின்றோம். ''மன்னவன் விளையாட்டு என்று மொழிதலும் ஆம்'' என எச்ச உம்மை கொடுத்து உரைத்துத் தழுவிக்கொள்கின்றார் அருள்நந்தி சிவம். ''ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட்டாக இயம்புவர்கள்'' எனக் குறிப்பிடுகின்றார் உமாபதி சிவம் (சிவப்பிரகாசம் 18). இங்ஙனம் இறைவன் முத்தொழில் இயற்றுதல் திருவிளையாட்டின் பொருட்டே என்னும் சிலர் கொள்கையினை, முழுவதும் இல்லாவிட்டாலும் ஓரளவேனும் சைவசித்தாந்த ஆசிரியர்கள் தழுவிக்கொள்ள நேர்ந்தமை,

'' காத்தும் படைத்தும்
கரந்தும் விளையாடி''

'' ஐயா! நீ ஆட்கொண்டு
அருளும்விளையாட்டின்
உய்வார்கள் உய்யும்
வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்''

எனத் திருவாசகம் திருவெம்பாவைப் பாடல்களில் (11,12) மாணிக்கவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிச் செய்திருத்தலை நினைவுகூர்ந்தமை பற்றியேயாம் எனத் துணிந்து கூறலாம்.

திரோதான சத்தி :

சைவ சித்தாந்த நூல்களில் திரோதான சத்தி என்பது பற்றி ஆங்காங்கே பேசப்படும். திரோதான சத்தியாவது உயிர்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களும் தத்தம் தொழில்களைச் செய்யுமாறு ஏவி இயக்குவது. உயிர்கள் உலகியல் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுத் தத்தம் வினைப்பயன்களை நுகர்ந்து தீர்த்தற்பொருட்டு உலகியல் வாழ்வில் நேரும் நன்மை தீமைகள் ஆகியவற்றை உயிர்கள் உணராதபடி மறைத்து வைப்பது திரோதான சத்தியாகும்

" ஏயும் மும்மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும் தூயவன்.
தனதோர் சத்தி திரோதான தரியது''

என்பது சித்தியார் (57).

இங்ஙனம் மலங்களைத் தொழிற்படும்படி ஏவி இயக்கி, உயிர்களுக்கு மறைப்பினை விளைவிக்கும் திரோதான சத்தியே, உயிர்களுக்கு மலபரிபாகம் தந்த பின்னர் அநுக்கிரக சத்தியாக மாறிநின்று, எல்லா நலங்களையும் விளைவிக்கும். சேயின் குற்றம் கண்டு சினந்து கடிந்து ஒறுக்கும் தாயே பிறகு அதன் நற்றம் கண்டு உவந்து அன்பு செய்து நலம்புரிதல் போல்வது இஃது.

இவ்வாறு இறைவனின் திருவருள் ஆகிய அம்மையே முதற்கண் மறைப்பாற்றலாக இருந்து பின்னர் அருளாற்றலாக மாறி நலம் விளைவித்தலை,

> " முற்சினம் மருவு திரோதாயி
> கருணை ஆகித்
> திருந்திய சத்திநி பாதம்
> திகழும் அன்றே''

எனச் சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த நூல் கூறும். முதலிற் சினம்மருவித் திரோதாயி என்னும் மறைப்பாற்றலாக இருப்பதே, பிறகு அந்நிலையின் வேறுபட்டு அநுக்கிரகசத்தி என்னும் அருளாற்றலாக மாறி நிற்கும் என்னும் சைவ சித்தாந்த உண்மைக்கு மூலமும் சான்றும் "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை'' என்வரும் திருவாசகத் திருவெம்பாவைத் தொடரேயாகும். திரோதான சத்தியுண்மையை விளக்குவதற்கு மதுரைச் சிவப்பிரகாசர் என்னும் பேருரையாசிரியர் இத்திருவாசகத்தொடரையே மேற்கோளாக எடுத்துக்காட்டியிருத்தல் காணலாம்.

## ஒன்றுதல்—வேறுதல்—உடனுதல் :

இறைவன் உயிர்களுடன் கலப்பினால் உடலின் உயிர்போல் ஒன்றாயும் பொருட்டன்மையால் கண்ணும் அருக்கனும்போல் வேறாயும் இறக்கிநிற்றலால் கண்ணொளியும் ஆன்மபோதமும்போல் உடனாயும் திகழ்கின்றான் என்று சைவசித்தாந்தம் தேர்ந்து தெளிந்து கூறும். இவ்வுண்மை "புறச்சமயத்தவர்களுக்கு இருளாய்'' என்வரும் சிவப்பிரகாசச் செய்யுளால் தெளியப்படும்.

இங்ஙனம் இறைவன் உயிர்களுடன் ஒன்றாய்—வேறாய்—உடனாய் நிற்கின்றான் என்னும் சைவசித்தாந்த உண்மைக்கு அடிப்படையும் ஆதாரமும் திருவாசகமே ஆகும் எனலாம். ''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி'' எனத்தொடங்கும் திருவாசகச் செய்யுளில் ''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி'' என்றதனால் ஒன்றுதலும் ''உண்மையுமாய் இன்மையுமாய்'' என்றதனால் உடனுதலும் ''கோனாகியான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவானாகி'' என்றதனால் வேறுதலும் ஆகிய மூவகை நிலைகளும் இறைவனுக்கு உரியனவாதல் உணர்த்தப்பெற்றிருத்தல் காணலாம். இவ்வாறே ''இன்று எனக்கருளி இருள்கடிந்து'' எனத்தொடங்கும் திருவாசகச் செய்யுளின் கண் "நீயலால் பிறிதுமற்றில்லை'' என்பது ஒன்றுதலையும் ''ஒன்றும் நீ யல்லை'' என்பது வேறுதலையும் "அன்றி ஒன்றில்லை'' என்பது உடனுதலையும் உணர்த்தி நிற்றல் நாம் பெரிதும் உளம் கொளத்தக்கது.

## ஐந்தொழில்கள் :

உலகமானது அறிவில்லது (அசேதனம், சடம்), அறிவுடையது (சேதனம், சித்து) என இருதிறப்படும். பிற சமயங்கள் கூறும் ஆக்கல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிகள் அறிவும் உயிரும் அற்ற சடவுலகுக்கு மட்டுமே பொருந்தும்; சேதனப் பொருள்கள் ஆகிய உயிர்களுக்கு அவை பொருந்தா; ஏனெனில் இறைவன் உயிர்களைப்படைப்பதும் இல்லை; அழிப்பதும் இல்லை. "என்று நீ அன்றுநான்'' எனத் தாயுமானவர் பாடுவதற்கு ஏறப உயிர்களும் இறைவனைப் போலவே அநாதி நித்தியப் பொருள்களாகும். ஆதலின் அறிவுடைப் பொருள்கள் ஆகிய உயிர்களின் நலம் கருதியே இறைவன் மறைத்தல் அருளல் ஆகிய இருதொழில்களைச் சிறப்பு முறையிற் செய்கின்றான்.

சடவுலகத்துக்காக ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களும் சித்துலகத்திற்காக மறைத்தல் அருளல் என்னும் இரு தொழில்களும் ஆக, ஐந்து தொழில்களை இறைவன் முறையே இயற்றியருள்கின்றான் என்பது சைவசித்தாந்தம்.

"அழிப்புஇளைப் பாற்றல் ஆக்கம்
அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திடல்; நுகரச் செய்தல்
காப்பது; கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம்
    மறைப்பு; அருட செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு:
    பார்த்திடின் அருளே யெல்லாம்."

இவ்வாறு இறைவனின் ஐந்தொழிற்றிறம் குறித்துச் சைவசித்தாந்த நூல்கள் விளக்குவதற்கு உரிய அரிய சான்ருக அமைந்தது திருவாசகத்திலுள்ள சிறந்த திருவெம்பாவைத திருப்பதிகத்தின் இறுதிப் பாடலேயாகும். இதனையே மதுரைச் சிவப்பிரகாசர் என்னும் சைவசித்தாந்தப் பேருரையாசிரியர் இறைவனின் ஐந்தொழிற்றிறத்தினை விளக்கும் சிறந்த பெருமேற்கோளாக எடுத்துக காட்டியருள்கின்ருர்.

# ஈழத்திற் கண்ணகி வழிப்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

— எம். சற்குணம் —

திராவிட மக்களிடையே தாய்த்தெய்வ வழிபாட்டு முறை பண்டுதொட்டு இருந்து வர்திருக்கின்றது. இதனுலேதான் பெண் தெய்வங்களும் அவற்றின் வழிபாட்டு முறைகளும் மிகக் கூடுதலான இடத்தினை அம்மக்களிடையே பெற்றுக்கொண்டுள்ளன. மரபு வழியாகவே பெண்ணைத்தெய்வமாகவும் தெய்வத்தைப் பெண்ணுகவும் கொண்டு வணங்கும் முறை திராவிடரிடையே வேரூன்றிப் பரவுவதற்கும் தாய்த்தெய்வ வழிபாட்டு முறையே காரணமாய் இருர்திருக்க வேண்டும். திராவிடப் பண்பாடும் ஆரியப்பண்பாடும் கலந்து உருவான இந்து சமயத்திலே தாய்த்தெய்வ வழிபாடு அல்லது சக்தி வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது. சக்தியின் அம்சமாகவே ஏனைய பெண் தெய்வங்கள் யாவும் தோற்றம் பெறுகின்றன. கொற்றவை, மாரி, ஐயை போன்ற பெண் தெய்வங்கள் யாவும் சக்தியின் அவதாரமாகவே கற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. இந்நிலையிலேதான் கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாம் கண்ணகிக்கும் வழிபாடு தோன்றியிருக்க வேண்டும்.

கண்ணகி கதை பற்றி நாம் அறிந்து கொள்ள மிக முக்கியமானதும் மிகப் பழைமை பொருந்தியது மான ஆதாரம் சிலப்பதிகாரமே. இளங்கோவடிகள் கண்ணகி வரலாற்றுக்குக் காவிய வடிவம் கொடுப்பதற்கு முன்பே பண்டைக்கால மக்களிடையே இக்கண்ணகி கதைமரபுகள் வழங்கி வந்துள்ளன என்பதற்குச் சான்றுகள் உள.[1] இதனை நாம் அறிந்து கொள்ள நற்றிணைப்பாடல் ஒன்றும்[2] புறநானூற்றுப்பாடல்கள் சிலவும்[3] துணை செய்கின்றன. இவ்வாறு மரபு வழியாக இருந்து வர்த கண்ணகி பற்றிய கதைகளே சிலப்பதிகாரத்தைக் காவிய வடிவமாக எழுதி முடிப்பதற்கு இளங்கோவடிகளுக்கு உதவியிருக்க வேண்டும்.

சிலப்பதிகாரத்திற் பொதிந்துள்ள பல கதைகள் தமிழகப்பகுதிகளிலே பொதுமக்களால் வில்லுப் பாட்டாகவும் மலையாளப் பகுதிகளில் அம்மானை உருவத்தில் நாடோடிப்பாடல்களாகவும் பாடப்பட்டு வந்துள்ளன.[4] புகழேந்திப் புலவர் இயற்றியதாகக் கொள்ளப்படும் கோவலன் கதை அம்மானை உருவத்திலே பாடப்பட்டுள்ளது. அதே போலக் கோவலன் கதைப்பற்றி மலையாள நாட்டில் வழங்குவதும் தமிழ் மொழியில் அமைந்ததுமான காதற்பிரபந்தம் ஒன்று உண்டு எனவும் அறியமுடிகின்றது.[5]

தமிழகத்திற் சிலப்பதிகார காலத்தில் இருந்து கொற்றவை கண்ணகியாக வணங்கப்பட்டிருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதையிலே கொற்றவை, காளி என்னும் தெயவங்களோடு கண்ணகியின்

தோற்றம் ஒப்பீடு செய்யப்பட்டிருப்பது இதற்குச் சான்றாக அமைகின்றது.[6] எனவே சிலப்பதிகார காலத்தில் இருந்து கொற்றவை, காளி ஆகிய தெய்வங்களின் அம்சங்கள் கண்ணகியோடு சேர்க்கப்பட்டும் கண்ணகி வழிபாடு தோற்றம் பெற்றிருக்கலாம்.

சேரன் செங்குட்டுவன் சேர நாட்டிற் கண்ணகிக்கு விழாவெடுத்த போது கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் சென்று சிறப்பித்தான் எனச் சிலப்பதிகார உரைபெறு கட்டுரையும்[7] வரந்தருகாதையும்[8] கூறியுள்ளன. இது போலவே பாண்டியன் வெற்றிவேற் செழியனும் சோழன் பெருங்கிள்ளியும் கொங்கிளங்கோசரும் மாளுவ வேந்தரும் கண்ணகி விழாவிற் பங்கு கொண்டு தத்தம் நாடுகளுக்கும் கண்ணகியை எழுந்தருளுமாறு வேண்டி நின்றனர்.

இவ்வாறு தத்தம் நாடுகளுக்கு எழுந்தருளுமாறு வேண்டிய அரசர்களில் ஒருவனாகிய கயவாகு வேந்தனே இவ்வழிபாடு ஈழத்திற் பரவி வேரூன்றக் காரணமாயிருந்தான். இதனை ஈழத்து வரலாற்று நூலான இராஜாவலியும் இராஜரத்னாகரவும் கஜபா கத்தாவ என்னும் பத்தினி வரலாறு கூறும் சிங்கள நூலும் குறிப்பிடுகின்றன. எனினும் இராஜாவலிய சிலப்பதிகாரக்கதையினின்றும் சிறிது வேறுபட்ட கதையினையே கூறியுள்ளது.[9] இதன் மூலம் கஜபாகு பத்தினித் தெய்வத்தின் சிலம்பையும் நான்கு கோயில்களின் தெய்வங்களையும் ஆயுதச்சின்னங்களையும் வரவழைத்துப் பெற்றுக்கொண்டு வாலகம்பாகு காலத்தில் எடுத்துச் செல்லப்பட்டிருந்த புனித பாத்திரத்தையும் பெற்றுக் கொண்டு ஈழம் மீண்டான் என அறிய முடிகின்றது. இச் செய்திகளிற் சிலவற்றைக் கோகில சந்தேச நூலும் கூறும்.[10] எனவே கயவாகுவே ஈழத்திற் கண்ணகி வழிபாடு தோன்றி வளர்ச்சிபெறக் காரணமாயிருந்தான் எனக் கூறலாம்.

கண்ணகி வழிபாடு ஈழத்துக்குக் கொண்டு வரப்பட்டதும் அது சிங்கள, தமிழ் மக்களிடையே நிலைத்து வளரலாயிற்று. தமிழ் மக்களிடையே கண்ணகி வழிபாடெனவும் கண்ணகை அம்மன் வழிபாடெனவும் வளர்ச்சி பெற்ற போது, அது சிங்கள மக்களிடையே பத்தினி வழிபாடாக மலர்ந்தது. இதனாலே தமிழில் உள்ள கண்ணகியைத் தலைவியாகக் கொண்ட இலக்கியங்களைப் போலச் சிங்களத்திலும் - பல பத்தினி காவியங்கள் தோன்றலாயின. பத்தினிஹல்ல, பாளங்க ஹல்ல, பத்தினி கத்தாவ, பத்தினி விலாபய, கஜபா கத்தாவ, வயர்தி மாலா, அம்ப பத்தினி உபத, அம்ப விதுமன, மல்பத்தினி உபத்த, மாதேவி கத்தாவ, பத்தினி யாதின்ன, பத்தினி பிளிம, பத்தினி கோன்மூற, பாளங்க மறுவீமே சிந்துவ, பண்டி நெத்த மெகு உபத்த, அங்கெலி உபத்த, சலம்ப கத்தாவ முதலிய சிங்கள பத்தினி இலக்கியங்கள் இதற்குச் சான்றாகும்.

ஈழத்துக்கு இவ்வழிபாட்டைக் கொண்டு வந்த கயவாகு வேந்தன் ஆடிமாதந்தோறும் தலைநகரிற் பத்தினிக்குப் பெருவிழா எடுத்துப் பத்தினியின் காற்சிலம்பை யானையில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டுசென்று பெருவிழா கொண்டாடினான். இந்த யானை ஊர்வலம் பண்டு தொட்டு இன்றுவரை சேர நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உற்சவ காலங்களில் வழங்கி வருதல் குறிப்பிடத்தக்கது. கயவாகு மன்னன் கண்ணகி விழாவிற் கலந்து திரும்பி வந்தபோது அதே முறையைத்தான் பின்பற்றினான் எனக் கருத வேண்டியுள்ளது. இது கண்டி மாநகரில் நடைபெறும் எசல பெரஹராவின் ஆரம்பமாய் இருக்கலாம் என கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி தனது ''மத்தியகாலத்துச் சிங்களச் கலை'' என்னும் நூலிற் கூறிப்போந்தார். ''ஆடித்திங்க ளகவையினாங் கோர் பாடிவிழா'' பற்றிச் சிலப்பதிகாரம் கூறுவதும் ஆடி ஆவணி மாதங்களில் எசல பெரஹரா நடைபெறுவதும் சான்றாக அமைகின்றது.

பத்தினி வழிபாடு சிங்கள மக்களின் சமய வாழ்வில் மிக முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. இத்தெய்வத்தினைத் தொற்று நோய்களின், அதாவது அம்மை, சின்னமுத்து, பொக்குளிப்பான் போன்ற நோய்களின் அதிதேவதையாக அவர்கள் கொள்வதோடு கண்ணகியைத் துர்க்கையாகவும் எட்டுக் காளிகள் சூழ்ந்திருக்கும் ஈழத்தின் காவற் றெய்வமும் இதுவே எனக் கொள்வார். இது சம்பந்தமான ஐதீகங்கள் பல சிங்கள மக்களிடையே இன்றும் நிலவி வருகின்றன.[11] நிக்கவவக் குகையிற் கண்டெடுக்கப்பட்ட சந்தனக் கட்டையாலான கண்ணகை, கோவலன் சிலைகள் கயவாகு மன்னனால் கொண்டு வரப்பட்டதாய் இருக்கலாம் என ஹென்றி பார்க்கர் கருதுகின்றார். கொழும்புக்கு அண்மையில் இருக்கும் கந்தானைப் பகுதியிலே மூந்தராச வெளி வயல்வெளிக்கு அணித்தாகக் கடற்கரைக்கண் அமைந்துள்ள நடுவபிட்டிய என்னும் இடத்திற் பழைய பத்தினி ஆலயம் ஒன்று காணப்படுகின்றது. குருணாகலைப் பகுதி, கட்டுகம்பளைப் பற்று, மினுவாங்கொடை, நீர்கொழும்பு முதலான இடங்களிலும் ஒவ்வொரு பழைய இராசதானியிலும், அனுராதபுரத்தை விட, பத்தினிக்குக் கோயில்கள் உள. குண்டசாலையிலும் ஹங்குரன்கட்டையிலும் பத்தினிக்குப் பழைய கோயில்கள் இருந்திருக்கின்றன. தெய்வேந்திர முனை எனப்படும் தேவிநுவரையிலும் பத்தினிக்குக் கோயில் இருந்திருக்கின்றது. இப்பத்தினிக்கு வருடத்தில் ஒரு முறை ஏழு நாட்கள் பூசை நடப்பது வழக்கம். இந்த ஏழுநாட்

பூசைக்காக மட்டுமே பத்தினி காவியங்கள் இயற்றப் பட்டுள்ளன. இப்பாடல்களைச் சிங்கள மக்கள் வரிசைக் கிரமமாகப் பூசை வேளைகளில் வாசித்துப் பத்தினித் தெய்வத்தின் அருளை வேண்டி நிற்பார்கள். இதற்கென முப்பத்தைந்து நூல்கள் எழுதப்பட்டுள்ளன. எனவே இவை பன்திஸ் கோள்முற என அழைக்கப்படுகின்றன.[12]

கயவாகு வேந்தன் ஈழத்துக்கு திரும்பிய போது சம்புத்துறை வழியாகவே வந்திருக்க வேண்டும். சம்புத்துறை வழியாக வந்த கயவாகு வேந்தன் முதன்முதலாகக் கந்தரோடையில் உள்ள அங்கணாமைக்கடவையில் பத்தினிக்குக் கோயில் அமைத்துத் தனது உருவச்சிலையையும் கோயில் முன்றலில் நிறுவியிருக்கலாம் என்று முதலியார் சி. இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார்.[13] கந்தரோடைப் பாங்கரில் அமைந்துள்ள இக் கோயில்களைப் போலவே முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோயிலும் சிறப்பு வாய்ந்தது. கயவாகு மன்னன் நாடெங்கும் கண்ணகிக்குக் கோயில்கள் அமைத்து வழிபாடு செய்ய வேண்டும் எனக் கட்டளையிட்டதைத் தொடர்ந்து விரோதைய சிங்கையாரியன் காலத்தில் யாழ்ப்பாணப் பகுதிகளிற் கண்ணகிக்கு ஆலயங்கள் தோன்றின என்று சி. கணேசையரும்[14] வேலம்பரையில் உள்ள கண்ணகி கோயில் அக்காலத்தில் முதலில் அமைக்கப்பட்டதென்றும் அதன் பின்பு கட்டப்பட்டவையே கனையோடை, அங்கணான் கடவு முதலிய இடங்களில் உள்ளவை என்று ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையும் கூறியுள்ளனர்[15].

ஈழத்திற் கண்ணகி வழிபாடு அழியாத ஒரு வழிபாடாக நிலைத்து விட்டாலும் இவ்வழிபாட்டை ஆறுமுகநாவலரும் அவரது சகாக்களும் ஆதரிக்கவில்லை[16]. எனவே கண்ணகி கோயில்கள் நாகேஸ்வரி, நாகபூஷணி, ராஜராஜேஸ்வரி அம்மன் கோயில்களாக மாற்றப்பட்டதாக அறியமுடிகின்றது. எனினும் கீழ்வரும் கண்ணகி அம்மன் பள்ளுப்பாடல் மூலம் யாழ்ப்பாணப்பகுதிகளில் புகழுடன் இருந்த கண்ணகை அம்மன் ஆலயங்களைப் பற்றி அறியலாம்:

''அங்கணம்மைக் கடவை செட்டிபுல மச்சுழ்
ஆனதொரு வற்றாப்பளை மீதுறைந் தாய்
பொங்கு புகழ் கொம்படி பொறிக்கடவை சங்குவயல்
புகழ்பெருகு கோலங்கிராய் மீதுறைந் தாய்
எங்குமே உன்புகழை மங்காம லோத
என்றனது சிந்தையி லுறைந்த காரணியே
பங்கமுறு துயரங்கள் தீரவருள் புரிவாய்
பரிவுசெறி கோலங்கிராயி லுறை மாதே.[17]''

மட்டுவில் பன்றிதலைச்சி அம்மாள் ஊஞ்சல், எச்சரிக்கை, பராக்கு, மேற்படி கண்ணகை சரித்திரச் சுருக்கம் எழுதிய சாவகச்சேரி வித்துவான் ச. பொன்னம்பலபிள்ளையும் தனது நூலிலே அக்காலத்திலே யாழ்ப்பாணத்திற் கிராமந்தோறும் வீற்றிருந்த கண்ணகை ஆலயங்களைப்பற்றி விரிவாகக்குறிப்பிட்டுள்ளார்.[81]

பாண்டியனால் பல துண்டங்களாக வெட்டப்பட்ட கோவலனைக் கண்ணகி சேர்த்தெடுத்துத் தைத்து உயிரளிக்கக் கோவலன் எழுந்திருந்து,

மாதகியோ கண்ணகியோ வந்தவர்கள் படுகளத்தில்
மாதகியாள் வந்தாலே வாடியென் மடிமேல்''

எனக் கூறினான். இதனால், மாதவியின் பெயரை முதலில் குறித்துக்கேட்டானே என்று மனமுடைந்து கோபங்கொண்டு, கண்ணகி தன்னை ஐந்தலை நாகமாக மாற்றி, மதுரைமாநகரம் துறந்து, தெற்கு நோக்கி ஊர்ந்து சென்று, முதலில் நயினாதீவிற் தங்கினாள். பின்னர் வட்டுக்கோட்டைப்பாங்கரில் உள்ள சுருட்டுப்பனை வழியாக சீரணி, அங்கணாமைக்கடவை, அளவெட்டி, சுருவில் முதலான இடங்களிற் றங்கினாள் என்ற ஐதிகம் வழக்காற்றில் இருந்து வந்திருக்கின்றது.[19] ஐந்தலைநாகம் நகர்ந்து சென்றவழி வழுக்கியாற்றுப் பள்ளமாக மாறியதென்பர். இவ்விடங்களில் அமைந்த கோயில்களில் எல்லாம் ஐந்தலைநாக சந்நிதானமும் அம்மன் சந்நிதானமும் அமைந்திருக்கின்றன. சீரணியில் உள்ள கோயில் நாகம்மாள் கோயில் எனவும் அளவெட்டி, சுருவில் கோயில்கள் நாகதம்பிரான் கோயில் எனவும் வழங்கப்படுகின்றன. நாகதீவில் இருந்து புறப்பட்ட கண்ணகி, கோப்பாய், மட்டுவில், வேலம்பிராய், கச்சாய் வழியாகச் சென்று நாகர் கோயிலை அடைந்தவள் என்றுவேறுஞ்சிலர் கூறுவர். பின்னர் கரைச்சியில் உள்ள புளியம்பொக்கணையை அடைந்து அப்பால், முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளையை அடைந்தனள் என்பர்.

யாழ்ப்பாணத்தில் மந்திகையிற் கோயில் கொண்டெழுந்தருளிய கண்ணகை அம்மனைச் சார்ந்ததாக மந்திகைக் கண்ணகை அம்மன் அந்தாதி பாடப்பட்டிருக்கின்றது. அத்துடன் அக்கோயிலில் வருடந்தோறும் வைகாசிப்பூரணையிற் பாடப்பட்டு வரும் கோவலனூர் கதையும் வெளிவந்துள்ளது. நவாலிக் கலையோடைக் கண்ணகை அம்மனுக்கு உயிர்வருக்கத்தகவலும் கண்ணகை அம்மாள்பேரினூஞ்சலும் பாடப்பட்டுள்ளன. அதே போலக் கோப்பாய்க் கண்ணகைக்குச் சேனுதிராசமுதலியாரால் ஊஞ்சல் பாடப்பட்டுள்ளது. குஞ்சுப் பரந்தன் பொறிக்கடவைக் கண்ணகிக்குப் பதிகமும் வற்றாப்பளைக் கண்ணகிக்கு தோத்திரம், காவியம், சிந்து முதலியனவும் உள. அதுபோல அங்கணாமைக்கடவைக் கண்ணகிக்குத் தோத்திரங்களும் காவியங் களும் பாடப்பட்டு வெளிவந்துள்ளன.

ஈழத்தின் வடக்கிலே யாழ்ப்பாணப்பகுதியிற் போல, திருக்கோணமலை, வவுனியா முதலான பிராந்தி யங்களிலும் கண்ணகிக்கு ஏராளமான கோயில்கள் அமைந்திருக்கின்றன. கோயிற் புளியங்குளத்தில் உள்ள கண்ணகை அம்மன் கோயில் பத்தினி அம்மன் கோயிலாக இருந்ததாக ஆர். டபிள்யூ. ஐவேர்ஸ் குறிப்பிட்ட தோடு மடுத்திருப்பதியில் உள்ள புனிதமேரிஅம்மனும் பத்தினி அம்மனாகவே வழிபடப்பட்டு வந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.[20] பூனகரியில் (பத்தினிபாய்) அமைந்துள்ள கோயிலும் கண்ணகைக்குரிய கோயிலே என்று எஸ். குமாரசுவாமி கருதியுள்ளார்.[21]

ஈழத்தின் ஏனைய பாகங்களைவிட இன்று மட்டக்களப்புப் பகுதியிலேதான் கண்ணகை அம்மன் வழிபாடு பெருவழக்காகவும் உன்னத நிலையிலும் உள்ளது. எனவேதான் அப்பகுதிகளிற் கண்ணகையைத் தலைவியாகக் கொண்ட இலக்கியங்கள் அதிகமாகத் தோன்றியுள்ளன. மட்டக்களப்புப் பகுதியிலே ஏனைய தெய்வங்களுக்குக் கிடைக்காத சிறந்த இடம் கண்ணகைக்கு கிடைத்திருப்பதால் கண்ணகி வழிபாடு இங்குதான் வேரூன்றி வளர்ந்ததோ என்று கூட எண்ணத் தோன்றும். இப்பகுதிகளிற் கிராமங்கள் தோறும் கண்ணகிக்குக் கோயில்கள் உள. இதனைக் கீழ்வரும் ஊர்சுற்றுக்காவியத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பட்டிநகர் தமபிலுவில் காரைநகர் வீரமுனை
பலிசுபெறு கல்முனைகல் லாறுமகி முரெருவில்
செட்டிபா ளையம்புதுக் குடியிருப்பு மண்முனை
செல்வமுத லைக்குடா கொக்கட்டிச் சோலை
அட்டடிக் கும்புகழ் வந்தாறு மூலை
அன்பான சித்தாண்டி நகரதனில் உறையும்
வட்டவப் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை
மனதினில் நினைக்கவினை மாறியோ டிடுமே.[22]

இதே போலக் கூவாய் குயில் வசந்தனும், பட்டிமேட்டுக் கண்ணகை அம்மன் காவியமும் கிழக்கு மாகாணத்தில் வீற்றிருக்கும் கண்ணகை அம்மன் ஆலயங்களின் எண்ணிக்கையினைத் தெளிவாகக் கூறியுள்ளன.

கண்ணகை அம்மனின் ஏழு விக்கிரகங்களை நாடாரும் நம்பிகளும் யாழ்ப்பாணப் பகுதிகளில் இருந்து கொண்டு வந்து வழிப்பட்டதாக மடக்களப்பு மான்மியத்தின் மூலம் அறியமுடிகின்றது. பின்னர் அந்த ஏழு விக்கிரகங்களும் ஏழு கிராமங்களில் வைக்கப்பட வேண்டும் என அக்காலக் கண்டி அரசன் கட்டளையிட்ட தாகவும் நாடார்களே பூசகர்களாகவும் கோவியர்களே ஊழியர்களாகவும் இருந்ததாக மேலும் சில தகவல்களை மட்டக்களப்பு மான்மியமே தருகின்றது.[23] இச்செய்திகள் எந்தளவுக்கு வரலாற்று உண்மையாகும் என்பது தெரியுமாறில்லை.

வெருகலம்பதிக்குக் கிழக்குப் பக்கத்திலே உள்ள இலந்தைத் துறைமுகத்தில் மதுரை நகரில் இருந்து செம்பகநாச்சியம்மன், பத்திரகாளியம்மன், கண்ணகை அம்மன் சிலைகள் மூன்று கொண்டு வரப்பட்டதாகவும் செம்பகநாச்சியார் சிலையை ஈச்சிலம்பத்தையிலும் பத்திரகாளியம்மன் சிலையைச் சம்பூர்க்கடற்கரையிலும் கண்ணகி அம்மன் சிலையை மட்டக்களப்புத் தென்பாகத்தில் ஓர் ஊரிலும் வைத்து வழிபட்டு வந்ததாக அறியமுடிகின்றது.[24]

மட்டக்களப்புப் பகுதியிலே இன்று பிரபல்யத்துடன் வழங்கிவரும் கண்ணகி ஆலயங்களுள் காரை தீவு, பட்டிமேடு முதலான கிராமங்களில் உள்ள கண்ணகைஅம்மன் ஆலயங்களே மிகவும் சிறப்புடன் விளங்கி வருகின்றன. இவ்விரு கோயில்களைப்பற்றிய பல செய்திகள் நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டின் மூலம் தெளிவாகின்றன.[25] இக்கோயில்கள் வன்னியர்களின் ஆட்சி உச்சநிலை பெற்றிருந்தபோது தோன்றியவை

என்று கர்ணபரம்பரைக் கதைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. காரைதீவுக் கண்ணகை அம்மனுக்கு ஏழு விருத்தப்பாடல்கள் ஊர்சுற்றுக் காவியத்தில் உண்டு. அத்துடன் ஊஞ்சலும் விருத்தமும் அகவலும் காவியமும் இவ்வம்மனுக்கு உண்டு. வற்றாப்பளைக் கண்ணகை அம்மனின் பூசைமுறைகளும் வழிபாட்டுக் கிரியைகளுமே இவ்வாலயத்தில் வருடந்தோறும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

பட்டிமேட்டுக் கண்ணகை அம்மனின் வரலாற்றினைப் பொற்புறுவந்த காவியத்தின் மூலம் அறியலாம். சீதாவாக்கையில் இருந்து வந்த நாகமங்கலையம்மனின் புறுவழிபாடே இங்கு அம்மன் வழிபாடாக மாறியிருக்கின்றது.26 இவ்வம்மனுக்கு மழைக்காவியமும் அம்மன் காவியமும் உண்டு. அதே போலவே தம்பிலுவிற் கண்ணகை அம்மனுக்கும் மழைக்காவியமும் அம்மன் காவியமும் உண்டு. தாண்டவன் வெளிக் கண்ணகை அம்மனுக்கு அம்மன் காவியம் உண்டு.

கண்ணகை அம்மன் வழிபாடு தொடர்பாக ஈழத்திலே தோன்றிய முழுமையான காவியம் கண்ணகி வழக்குரையே. இது வழக்குரை, பழிவாங்கியகதை, கோவலனார்கதை என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. மட்டக்களப்புப் பகுதியில் ஆலயங்கள் தோறும் படிக்கப்பட்டு வரும் ஏடு வழக்குரை எனவும் யாழ்ப்பாணப்பகுதியில் உள்ள ஏடு கோவலனார் கதை எனவும் அழைக்கப்பட்டு வருடந்தோறும் வைகாசித்திங்களிற் படிக்கப்பட்டு வருகின்றது. கோவலனார் கதை ஏட்டைத் தென்புலோலியூர் ம. சே. செல்லையா 1962லும் வழக்குரை ஏட்டை வித்துவான் வி. சீ. கந்தையா 1968 லும் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். இவற்றைவிட மட்டக்களப்புப் பகுதிகளில் நிலவிவரும் வசந்தன் பாடல்களிற் சிலவும் கொம்பு விளையாட்டு தொடர்பான பாடல்களும் ஊஞ்சற்பாடல்களும் குளுத்திப்பாடல்களும் கண்ணகை அம்மனோடு தொடர்புள்ள பாடல்களாகவே காணப்படுகின்றன.

எனவே கண்ணகை அம்மன் வழிபாடானது ஈழத்திலே சிங்கள, தமிழ் மக்களுக்கு ஆத்மீகத் தொடர்பாக இருந்ததோடு தென்னிந்தியத் தமிழ்மக்களையும் இணைக்கும் ஒரு தொடர்பாக மாறிய பெருமையைப் பெற்றது எனலாம். ஏனினும் ஈழத்தின் மட்டக்களப்புப் பகுதியிலேதான் இவ்வழிபாடு நன்கு வேரூன்றி இன்றும் நிலைத்துள்ளது.

குறிப்புகள் :


1. வையாபுரிப்பிள்ளை, எஸ், சிலப்பதிகாரம் (புகார்க்காண்டம்) ஆர். கே. சண்முகஞ் செட்டியார் பதிப்பின் முன்னுரை, பக்கம் 10, கோயம்புத்தூர், 1946.
2. நற்றிணை 216.
3. புறநானூறு 144, 145.
4. வையாபுரிப்பிள்ளை. எஸ், இலக்கியமணிமாலை (2ம் பதிப்பு) பக். 127, மதருஸ், 1957.
5. இராகவையங்கார். மு, ஆராய்ச்சித் தொகுதி (2ம் பதிப்பு) பக். 239, சென்னை, 1964.
6. சிலப்பதிகாரம். 20: 36–40.
7. சிலப்பதிகாரம் உரைபெறுகட்டுரை. 3.
8. சிலப்பதிகாரம் 30: 159–164.
9. குணசேகர. பி, (பதிப்பாசிரியர்) இராஜாவலிய, பக். 34, கொழும்பு, 1926.
10. குணவர்த்தன டபிள்யூ. எம். (பதிப்பாசிரியர் ) கோகிலசந்தேச (2ம் பதிப்பு) பக். 84, கொழும்பு 1945.
11. Parker, Henry. **Ancient Ceylon**, p. 633, London, 1909.
12 சுப்பிரமணியன். நா, ''சிலம்புச் செல்வியும் சிங்கள இலக்கியமும்'', இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகள் (மூன்றாந் தொகுதி) பக் 162, சென்னை, 1968
13. Rasanayakam C. Mudaliyar, **Ancient Jaffna**, p. 74, Madras, 1926,
14. கணேசையர். சி, ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம், பக். 7, சுன்னாகம், 1939.
15. முத்துத்தம்பிப்பிள்ளை. ஆ, யாழ்ப்பாணச்சரித்திரம், (3ம் பதிப்பு) பக். 29, யாழ்ப்பாணம், 1933.
16. கைலாசபிள்ளை. த, (திரட்டப்பட்டது) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் பிரபந்தத்திரட்டு (முதற்பாகம்–3ஆம் பதிப்பு) பக். 65, சென்னபட்டனம், 1954.
17. இராமலிங்கம், மு. ''வன்னியிற் பரவிய கண்ணகி வணக்கம்'', வீரகேசரி, 8. 12.48.
18. பொன்னம்பலப்பிள்ளை. ச. (சாவகச்சேரி) மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மாள் ஊஞ்சல் எச்சரிக்கை பராக்கு, பக். 33–34, யாழ்ப்பாணம், 1938.
19. ஞானப்பிரகாசர், சுவாமி, யாழ்ப்பாண வைபவ விமர்சனம் (தமிழரசர்உகம்) பக். 21, அச்சுவேலி, 1928.

20. Ivers. R. W. **The Manual of the North Central Province**, p. 110, Colombo, 1899.
21. குமாரசுவாமி. எஸ், வடமாகாணத்திலுள்ள இடப்பெயர் வரலாறு, பக். 15, யாழ்ப்பாணம், 1918.
22. கந்தையா. வி. சி, (பதிப்பாசிரியர்) கண்ணகை அம்மன் குளுத்திப்பாடல் (முதலிய நான்கு நூல்கள்) பக். 40, மட்டக்களப்பு, 1958.
23. நடராசா. எவ். எக்ஸ். சி (பதிப்பாசிரியர்) மட்டக்களப்பு மான்மியம் பக். 61 – 62 கொழும்பு 1962.
24. கணபதிப்பிள்ளை. ம. க "வெருகலம்பதிச் செளிவழிச் செய்தி", கலைப்பூங்கா, மலர் 1 இதழ்–1, பக். 47–48 கொழும்பு 1961.
25. பத்மநாதன், எஸ் (பதிப்பாசிரியர்) "நாடுகாட்டுப்பரவணிக்கல்வெட்டு" மட்டக்களப்பு மகாநாடு நினைவு மலர், பக். 87, மட்டக்களப்பு, 1976.
26. கணபதிப்பிள்ளை. சி. (பதிப்பாசிரியர்) மகாமாரித்தேவி திவ்விய கரணி, பக். 99–104. யாழ்ப்பாணம், 1971

# The Significance of the Vel Festival in Colombo

— MRS. MAHESWARI BALAKRISHNAN —

The Vel Festival of the Bambalapitiya Hindu Temple is an annual event which evokes a great dea of enthusiasm and devotion among not only the Hindu population of SriLanka, but also a vast number of people of other faiths, particularly the Buddhists, who throng in their thousands on this occasion to pay homage to the Vel, all along its route from Sea Street to Bambalapitiya. This festival is something out of the ordinary, in that we don't hear of similar festivals associated with any other Hindu Temple in Sri Lanka. Nobody knows for certain how this festival originated or when and how this function came to be associated with this particular Temple in Colombo.

This Festival usually takes place at the end of the Festival at the Holy shrine of Kataragama. The Vel procession starts from the Kathiresan Temple at Sea Street and moves on to the Vinayakar Temple at Bambalapitiya. This is essentially a festival organised by the Chettiars of Nattukkottai.

If one goes to Kataragama during this season, one will not fail to see devotees coming from all parts of the Island. From the North, East and the Hill country, Hindus trudge on foot through the elephant, leopard and bear infested jungles and arrive here with highly decorated Kavadies on their shoulders, dancing to music all the while, for dancing, is a form of worship to the Hindus. It was customary for the Chettiars of Colombo also to set out on foot to this sacred shrine every year. It is said that once during the Festival Season an epidemic had broken out down South and so this long walk of the merchants from Colombo to Kataragama that year was banned by the then Governor of Ceylon. The devotees had no other alternative but to give up the procession much against their will. The Chettiars devised an outlet to their spiritual urge and decided to carry Kavadis from the Temple at Sea Street to the Temple at Bambalapitiya. That was how the Kavadi Procession originated and this practice was continued every year by the merchants though much modified from their original trek to Kataragama.

But, today the Kavadi procession is followed by the Vel procession too. How did the Vel Procession originate? Though the Chettiars devised a temporary measure of making a pilgrimage from Sea Street to Bambalapitiya, yet the spiritual urge in the Hindu pilgrim did not find satisfaction in this mere procession. How

were they to make sure that the spirit of Kataragama– that spirit of God, the spirit of Humanity, the Oneness of God, an experience which can never be expressed in words– would be here in this Temple at Bambalapitiya too.

Eastern religion is a matter of spiritual culture rather than scholastic learning. Religion to an Easterner is the dominant thing in life, its light and law. Once again the Chettiars' intuition devised a method of ensuring the presence of the Holy Spirit of Kataragama at the Bambalapitiya Temple too. It was customary among the Tamil Kings of old to send their favourite weapon, the sword, ahead of them at an auspicious time in a great procession to the war camp before they took up their position in the battle field. This practice of a King sending his Royal Umbrella and Sword in advance is referred to in Tolkappiyam and other works on ancient Tamil war poetry as KuTai nhaaT koolh ( குடைநாட் கோள் ) and Vaalh nhaaT Koolh ( வாள்நாட்கோள் ) ( தொல். பொருள், புறத். 68) Putapporulh veNpaa maalai, another work on the art of ancient Tamil warfare, refers to these as குடை நிலை and வாணிலை in the VanjcippaTalam (3: 38, 39) and குடைநாட்கோள் and வாணாட்கோள் in the Ulinaippadalam (96, 97)

The anthology PutaththiraTTu (புறத்திரட்டு) has a few verses from ancient works on this topic, of which the following verses have been cited by the commentators on Tolkappiyam.

"பகலெறிப்ப தென்கொலோ பான்மதியென் றஞ்சி
இகலரணத் துள்ளவ ரெல்லாம் — அகநலிய
விண்டஞ்ச மென்ன விரிந்தகுடை நாட்கோள்
கண்டஞ்சிச் சிம்பிளித்தார் கண்"
(பு.தி. 1325)

"தொழுது விழாக்குறைக்குத் தொல்கடவுட் பேணி
யழுது விழாக்கொள்வ ரன்றே — முழுதளிப்போன்
வாணாட் கோள் கேட்ட மடந்தையர் தம்மகிழ்நர்
நீணாட்கோ ளென்று நினைத்து."
(பு. தி. 1326)

Silappathikaram refers to the practice of sending the Royal war Drum along with the Royal Umbrella and the sword in advance before the King actually sets out on his expedition.

இருநில மருங்கிற் பொருநரைப் பெறூஅச்
செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசு
நாளொரு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணிய திசைமுகம் போகிய வந்நாள்.
(சிலப்பதிகாரம் 5:89–94.)

In the lines quoted above, Karikala the Great is said to have sent his Royal Umbrella, sword and war drum in advance when he set out to conquer the Kings of North India. If the weapon arrived at the war camp, then it was a sure indication that the King would arrive very soon. So the Chettiyars' intense desire to make the same Holy Spirit of Kataragama be present here too in Colombo, found a way of ensuring it by resorting to the custom of the Tamil Kings.

Murugan or Skanda or Subramaniya as the God of Kataragama is called, according to the Puranas is a war God who destroys the sins of his devotees by warlike methods. This war God will surely follow the traditions of war. So if the Vel which is the significant weapon of Murugan is taken ahead, with His consent no doubt, the war God will certainly arrive the next day. That is how the Vel procession or the procession of the weapon, starts on the final day of the Kataragama festival. Soon after the Kataragama festival is over,

pilgrims rush to the Vel temple of Bambalapitiya too for they believe that the Kataragama God takes his abode here as his weapon has already arrived. This is one of the Puranic stories relating to Skanda's manifold activities. The Puranas contain the truth dressed up in myths and stories to suit the level of understanding of the mass of the people. Krishna in the Bhagavat Gita declares to His disciple and devotee that in whatever form He is worshipped He will manifest Himself in that form and bless His devotees. Man may call Him by different names as Murugan, Skanda, Krishna, or Siva and give Him different forms, but He is One. To the Hindu that Absolute is something to be felt and realised and not explained in words.

# திருக்கோயிற் கிரியைகளில் இசைக்கருவிகள்

திருமதி ஞானா. குலேந்திரன்

"பண்ணும் பதம் ஏழும்பல ஓசைத்தமிழ் அவையும்
உண்ணின்றதோர் சுவையும் கூறு தாளத் தொலி பலவும்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
விண்ணும் முழு தானானிடம் வீழிம்மிழலையே"
(சம்பந்தர்)

"பண் அவனே, பண்ணின் திறலும் அவனே."
(அப்பர்)

"ஏழிசையாய், இசைப்பயனாய் . . . . . . . . . . ."
(சுந்தரர்)

இறைவன் இசைவடிவாய் இருக்கின்றான் என்று கண்ட சைவநாயன்மார்களது உண்மை வாக்குகள் இவை, நம் சமய தத்துவங்களில் மிக உயர்ந்தது நாததத்துவமாகும். இந்த நாதமே வடிவமான நாதனை இசையால் மகிழ்வித்தால் அவன் நிச்சயம் இரங்குவான். "தமிழோடு இசை கேட்கும் இச்சையால் நித்தஞ் சம்பந்தர்க்குக் காசு நல்கினீர்" என்று சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆண்டவனை நோக்கிக் கேட்டமை இறைவன் இசையைப் பெரிதும் விரும்பினான் என்பதை உணர்த்துகிறதல்லவா? இறைவனை இசைவிப்பதற்கு இசையை இசைக்கிறோம்; தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்னும் பாக்களை உள்ளம் உருகி ஓதுகிறோம்; ஓதும் பொழுது, குரல் வழி நிற்கும் குழலும், யாழும், வீணையும், தாளமும், மேளமும், இணைத்து இசைக்கப்பட்டால் அதன் இனிமையையும், ஆனந்தத்தையும் சொல்லத்தான் வேண்டுமோ? 'சர்வ வாத்தியங்களும்' ஒன்றிணைந்து மங்கலப் பேரொலி பெருக்கினால் அங்கு பேரானந்தந்தான் தோன்றாதோ? இத்தகைய உயர்ந்த இறையுணர்வைத் தரவல்ல இசைக்கருவிகள் பல, திருக்கோயிற்கிரியை வேளைகளிற் பயன்படுத்தப்படுகின்றன.

திருக்கோயில்களிலே கிரியா நெறியின்போது இசைக்கப்படும் இசைக்கருவிகளைப் பொதுவாக ஐந்து வகையாகப் பிரிக்கலாம். அவை,

1. பிருதுவி வாத்தியங்கள் — மரத்தினால் செய்யப்பட்ட கருவிகள்.
2. அப்பு வாத்தியங்கள் — சங்கு முதலிய கருவிகள்.
3. ஆக்கினேய வாத்தியங்கள் — உலோகங்களால் செய்யப்பட்ட கருவிகள்
4. வாயவ்விய வாத்தியங்கள் — துளைகள் உள்ள கருவிகள்
5. ஆகாச வாத்தியங்கள் — இராக பேதங்கள் காட்டும் கருவிகள்.

கிரியா நெறி விளக்கம் கூறும் நூல்களும், கோயில்களிற் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளின் பெயர்களைத் தருகின்றன. அவையாவன, மத்தளம், படகம், பேரிகை, சல்லரி, மல்லரி, காகளம், பூரி, ஏகதாளம், சங்கு, பேரிவாத்தியம், நாட வாத்தியம், கும்ப வாத்தியம், பஞ்சமுகி வாத்தியம், வீணை, கின்னர வீணை, கிம்புரு வீணை, உருத்திர வீணை, முகவீணை, வாயுவீணை, தும்புருவீணை, நாரத வீணை, காந்தருவ வீணை, வேய்ங் குழல், மிருதங்கம் முதலியனவாம். இவற்றைவிட அண்மைக் காலத்தில் நாகசுரம், தவில், தாளம், திருச்சின்னம், கின்னரி, கொம்பு, கஞ்சிரா, பிரம்மதாளம், சேமக்கலம், எக்காளம், தகரா, உடுக்கை, டமாரம், சுத்த மத்தளம், டவண்டை, பம்பை, சூரிய பிறை, சந்திரபிறை, திமிலி, நகரா, பறை ஆகிய இசைக்கருவிகளும் திருக்கோயிற் கிரியை நெறிகளின் போது இடம் பெற்றன. தற்காலத்தில் மேலே குறிப்பிட்ட கோவில் வாத்தியங்களிற் பல அருகி அற்றுப் போக, சில வாத்தியங்களே தொடர்ந்து கோயிற் கிரியா நெறிகளின் போது இசைக்கப்படுகின்றன. இவற்றுடன் சேர்த்து மேல்நாட்டு இசைக்கருவிகளாகிய பிடில், கிளாரினெட் ஆகிய இசைக் கருவிகளும், நமது கர்நாடகமுறையில் மாற்றியமைத்துப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இன்று, ஏறத்தாழ சகல சைவக் கோயில்களிலும், கிரியைவேளைகளில் இசைக்கப்படும் ஒரு வாத்தியம் 'நாகசுரமாகும்'. இந்த இசைக்கருவியைப் பொதுவாக 'மங்கல வாத்தியம்', என்றும் 'பெரிய மேளம்' என்றும் 'நாயனம்' என்றும் அழைப்பர். வசதி வாய்ப்புக்கள் கூடிய கோயில்களிலும், வசதி வாய்ப்புக்கள் குறைந்த கோயில்களிலும் கூட நித்தியோற்சவ, நைமித்திக உற்சவ, பிரமோற்சவ காலங்களில் நாகசுரமே இசைக்கப்படுகின்றது. கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பரத சங்கிரம் என்னும் நூலிலுள்ள ஒரு வெண்பாவிற்றான் முதன் முதலாக நாகசுரம் பற்றிய விளக்கமுண்டு. இந்த நாகசுரக் கருவியில் திமிரி, பாரி என இருவகையுள. தற்போது திருக்கோயில்களிற் பயன்படுத்தப்படும் கருவி 'பாரி' நாகசுரமேயாகும். கோயில்களிலே திருவனந்தற் பூசையிலிருந்து இரண்டாங்காலப் பூசை வரை முறையே, வசந்தா, பூபாளம், பிலஹரி, கேதாரம், தன்யாசி, அசாவேரி, சுத்த சாவேரி, ஆரபி, சுருட்டி, ஸ்ரீ ராகம், மணிரங்கு, முகாரி, மந்தாரி, பூரி கல்யாணி, கல்யாணி ஆகிய இராகங்கள் நாகசுரத்தில் இசைக்கப்படும். அர்த்தயாம பூசையின் போது மற்றைய கம்பீரமானதும், சிருங்காரமானதுமான இராகங்கள் வாசிக்கப்படும். பிரம்மோற்சவ காலங்களில் கோயில்களில் எட்டு அல்லது பன்னிரண்டு நாகசுரங்கள், தாள மேளங்களுடன் சேர்ந்து வாசிக்கப்படும். திருவிழாக்காலங்களில் திருக்கோயிலிலிருந்து சுவாமி புறப்படும் பொழுது நாகசுரத்தில் 'மல்லாரி' வாசிப்பது வழக்கம். மல்லாரி என்பது 'நாட்டை' இராகத்தில் பல தாளங்களில் அமைந்த ஒருவகைப் பாடலாகும். இதற்குச் சாஹித்தியம் இல்லை. சுவாமி வீதி வலம் வருகையில் பிரம்ம சந்தி, இந்திர சந்தி, அக்கினி சந்தி, யம சந்தி, நிருதி சந்தி, வருண சந்தி, வாயு சந்தி, குபேர சந்தி, ஈசான சந்தி ஆகிய நவ சந்திகளிலும் வர்ணம், இராகம், பல்லவி, கீர்த்தனை, பதம், இராக மாலிகை ஆகிய உருப்படிகள் நாகசுரத்தில் இசைக்கப்படும். பின்னர் சுவாமி திரும்பவும் திருக்கோயிலுள் புகும் போதும் நாகசுரத்தில் 'மல்லாரி' வாசிக்கப்படும். இவ்வாறு, குறிப்பிட்ட கிரியா வேளைகளில் இன்னின்ன உருப்படிகள் வாசிக்க வேண்டும் என்று ''முறை'' இருந்த போதும், ஏறத்தாழ ஐம்பது ஆண்டு காலமாக இந்த முறைகளெல்லாம் அருகி, மறைந்து போய்க் கொண்டிருக்கின்றன. தற்போது, சுவாமி வீதி வலம் வருகையில் குறிப்பிட்ட 'சந்திகளில்' உரித்தான ஸ்லோகங்கள் ஓதப்பட்டும், நாகசுரம் வாசிப்பவர்கள் தமக்கு நன்கு தெரிந்த ஒரு உருப்படியையோ அல்லது பொதுமக்களுக்கு மிகவும் பிடித்தமான ஏதாவது உருப்படிகளையோ வாசித்தும் முடித்து விடுகிறார்கள்.

நாகசுரக் கருவியோடு இணைந்து இசைக்கப்படும் தாள வாத்தியங்கள் தவிலும், தாளமும் (சல்லரியும்) ஆகும். தோற்றத்தில் நாகசுரத்தையே போல் இருக்கும் 'ஒத்து' என்னும் கருவி ஆதார சுருதிக்காக, நாகசுர இசைக் கச்சேரிகளிற் பயன்படுத்தப்படும்.

நாகசுர தவில் இசைக்கு ஏற்பத் தாள வேறுபாடுகளைக் காட்டும் சல்லரி பெரிய மேளத்தோடு இணைந்த ஒரு இசைக் கருவியானாலும், கோயில்களில் நடைபெறும் பஜனை நிகழ்ச்சிகள், கூட்டுப்பாடல்கள், கதாப்பிரசங்கங்கள் ஆகிய நிகழ்ச்சிகளின்போது அதிகமாகப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்தக் கருவியிலும் சற்றுப் பெரிதான தாளக் கருவியாகிய 'பிரம்மதாளமும்' சில கோயில்களில் நாகசுர இசையோடு சேர்த்துப் பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பிரமதாளத்தைச் சிலர் 'பிருகதாளம்' என்று சொல்லும் வழக்கமும் உண்டு.

சில கோவில்களிற் கிரியை நெறியின் போது பயன்படுத்தப்படும் மற்றுமோர் தாளவாத்தியம் 'பஞ்சமுக வாத்தியமாகும்'. இன்றும், தஞ்சாவூரிலுள்ள திருவாரூர் கோவிலிலும், திருத்துறைப் பூண்டிக் கோயிலிலும், பஞ்சமுக வாத்தியம் கிரியை நெறிகளின் போது இசைக்கப்படுகின்றது. இந்த வாத்தியம் அநேகமாகத் தனியாகவும், சில சமயம் சுத்த மேளத்தோடு சேர்த்தும் இசைக்கப்படுகின்றது. பழந்தமிழ் இலக்கியங்கள் பேசும் பானை வடிவிலுள்ள 'குடமுழா' என்னும் மிகப் பண்டைய இசைக்கருவியின்

திருந்திய வடிவமே இப் பஞ்சமுக வாத்தியமாகும். இந்த இசைக்கருவி ஐந்து மேள முகங்களைக் கொண்டது. இதன் நடு மேளம் இறைவனின் சத்யோஜாத முகம் என்றும், மற்றைய நான்கும் இறைவனின் மற்றைய முகங்களாகிய ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம் என்றும் பெயர்களைப் பெறுகின்றன. மிகப் பிரமாண்டமானதும், பாரமானதுமான இந்தக் கருவி, நாலு சக்கரங்களைக் கொண்ட ரதத்திலேயே அமைக்கப் பட்டிருக்கும். இந்தக் கருவியை வாசிப்பவர்கள் பாரசைவர்களாவர். தற்காலத்தில் இந்த அருமையான இசைக்கருவி, திருக்கோயில்களில் பயன்படுத்தப்படாமற் போனதற்கு இதனது அதிபிரமாண்டமான, பாரமான தன்மையும், இதனை இசைக்கும் வகுப்பினரின் ஒத்துழையாமையும், அவர்கள் சமுதாயத்தில் தக்கவாறு பேணப்படாமையும் காரணிகளாம்.

திருக்கோயில்களில் விசேட தினங்களிலும் விழாக்காலங்களிலும் ''சர்வ வாத்தியமும்'' இசைக்கப்பட வேண்டும் என்று 'காமிக ஆகமம்' மிக விளக்கமாகக் கூறுகிறது. சர்வ வாத்தியம் என்பது சகல இசைக் கருவிகளும் இசைத்தல் என்று கருத்துப்படும். பிரம்மோற்சவ காலங்களில் சுவாமி வீதி வலம் வருகையில் நவ சந்திகளிலும், இந்தச் சர்வ வாத்தியங்களும் இசைக்கும் ராக, தாள, பண்கள் கிரியா நூல்களிற் கூறப் பட்டுள்ளன. இச்சர்வ வாத்திய நிகழ்ச்சியின்போது இறைவன் கீதம், வாத்தியம், நிருத்தியம் ஆகிய மூன்றினாலும் வழிபடப்படுகின்றான். ஓதுவார்கள் முறைப்படி தேவார, திருவாசகங்கள் பாராயணம் பண்ணிப் புஷ்பாஞ்சலி முடிந்ததும், நந்திகேஸ்வர வாத்தியமாகிய மிருதங்கமும், பிரம்மதாளமும் இசைக்கப் படும்; இதைத் தொடர்ந்து திருச்சின்னம், முரளி, முகவீணை, நகோரவாத்தியம், மல்லரி, சங்கு, நாகசுரம், குழல், கின்னரி, கொம்பு, வீணை, தவில், மத்தளம், கஞ்சிரா, தாளம், பிரம்மதாளம், சேமக்கலம், எக்காளம், பூரி, நகரா, உடுக்கை, டமாரம், சுத்தமத்தளம், பஞ்சமுக வாத்தியம், டவண்டை, பம்பை, சூரியபிறை, சந்திரபிறை, திமிலி ஆகிய சகல திருக்கோயில் இசைக் கருவிகளும் தனித்தும், கீத நிருத்திய நிகழ்ச்சிகளுக்கு அனுசரணையாகவும் இசைக்கப்படும். ஆண்டவனை, மகிழ்விக்க விரும்பும், இந்த நிகழ்ச்சியின்போது அடியவர்கள் பெறும் அற்புத உணர்வு சொல்லிடடங்காது.

சர்வ வாத்திய இசைக்கருவிகளின் தொகுப்பில் பல வாத்தியங்கள் குறிப்பிடப்பட்டபோதும், இன்று சில வாத்தியங்களே பாவனையில் உள்ளன. இவற்றுள் வீணை வேணு மிருதங்கம் ஆகிய மூன்று கருவிகளும் பழங்காலந்தொட்டுத் தமிழராற் பெரிதும் போற்றப்பட்டு வந்தன. மெல்லென இசைதரும் யாழும், வீணையும் உஷத்கால பூசையின் போது இறைவனைத் துயிலெழுப்ப இசைக்கப்பட்டன.

> '' இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
> இருக்கொடு தோதிரம் இயம்பினர் ஒருபால்''
>
> (திருப்பள்ளியெழுச்சி— 4)

மிகப் பண்டைய காலத்திலே பாணன், பாடினியர் கையிலிருந்த யாழ்க்கருவி, இளங்கோவடிகள் காலத்திலே இசையாசிரியனதும், நாடகமகளதும் கைகளல் தவழ்ந்து, தேவார திருவாசக காலத்தில் அடியார்கள் கைகளிற் சேர்ந்து திருக்கோயில்களில் இடம் பெற்றன. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் இறைவனை மகிழ்விக்க இசைத்த இசைக் கருவி, 'சகோடயாழ்'; இறைவனைத் தன்பால் இரங்க வைப்பதற்கு இராவணன் சாமகானம் இசைத்த கருவி, வீணை; நாரதர் கையில் தவழ்ந்த கருவி சிலசமயங்களில் 'யாழ்' என்றும், சில சமயங்களில் 'வீணை' என்றும் குறிப்பிடப்படுகிறது. இதிலிருந்து ஒரு உண்மை புலனாகின்றது. முன்னர் இன்னிசை பெருக்கும் நரம்புக்கருவியாக இருந்த யாழ்தான் காலகதியில் சிற்சில மாற்றங்களோடும் திருத்தங்களோடும் தற்போதைய வீணைவடிவு பெற்றிருக்காலம் என்பதாம். இந்த வீணையே இன்று திருக்கோயில் கிரியைகளின் போதும், இசைக் கச்சேரிகளின் போதும் பயன்படுத்தப்படுகின்றது. கலைமகளின் கையில் வீணை ஏந்தி நிற்க இருப்பதே, இக் கருவி கலையுடனும், இறைவழிபாட்டுடனும் எத்துணை நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெளிவுபடுத்துகின்றது. இந்த அற்புதமான இனிய கானம் பெருக்கும் கருவி, தற்காலத்தில் கூடுதலாக மேடைகளிலும், அரங்குகளிலும், வானொலி நிகழ்ச்சிகளிலும் முக்கிய இடத்தை வகிக்கின்றதன்றித் திருக்கோயில்களில் அதிகம் இடம் பெறுவதில்லை.

திருமால், கிருஷ்ண அவதாரத்தில் போது, புல்லாங்குழலில் அமுத இசை பெருக்கிச் சகல சீவராசிகளையும் தம்பால் ஈர்த்து அருள் சுரந்தார் என்பது நாமறிந்ததே. இதே இசைக் கருவியை அடியவர்களும், திருக்கோயில்களில் ஆண்டவனுக்கு உபசாரனைகள் செய்யும் வேளையில் இசைத்து அவனை மகிழ்வித்தனர்.

புல்லாங்குழலும் தற்காலத்தில் கோயில் கிரியை நெறிகளில் அவ்வளவாகப் பயன்படுத்தப்படாமல் மேடை அரங்குகளிலும், இசைக் கச்சேரிகளிலுமே கூடுதலாகப் பயன்படுத்தப்படுகின்றது.

'வாத்தியத்ரயம்' என்று சொல்லப்பட்ட முக்கியமான மூன்று இசைக்கருவிகளான வீணை, குழல், மிருதங்கத்தில், தாளக் கருவியும், தோற் கருவியுமாக விளங்குவது மிருதங்கமாகும். இதற்குத் 'தண்ணுமை' என்றும் 'மத்தளம்' என்றும் பெயர்கள் உள. 'மத்து' என்பது ஓசைப் பெயர்; 'தளம்' என்பது இசையிட மாகிய கருவிகளுக்கெல்லாம் தளமாக இருப்பது; எனவே மத்தளம் எனப் பெயர் பெற்றது. பிரதோஷ காலத்திலும், விசேஷமாகத் திரயோதசியன்று நிகழும் சந்தியாகாலமாகிய மகாபிரதோஷ காலத்திலும் பரமசிவன் நர்த்தம் புரிவதாகச் சொல்லப்படுகிறது. இந்த நர்த்தனத்தில் பிரம்மா தாளமிட, மகாவிஷ்ணு மத்தளம் வாசிப்பராம். சிவபெருமான் தாண்டவமாடிக் காட்சியளித்த திருக்கோயில்களில் இன்றும் இந்த நடனத்தை அனுசரித்துச் சுத்தமத்தளமும், தாளமும் மாத்திரம் பிரதோஷ காலக் கிரியை நெறிகளின்போது வாசிக்கப்படுகின்றன. இதைவிடத் திருவிழாக் காலங்களில் கொடியேற்ற விழாவின் பொழுது மிருதங்கம் வாசிக்கப்படும் வழக்கமும் சில கோவில்களிலுண்டு. யாழ்ப்பாணத்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் இன்றும் கொடியேற்றத்தின்போது மிருதங்க இசையே பெருக்கப்படுகிறது.

அன்று தொட்டு இன்று வரை திருக்கோயில்களில் கிரியை நெறிகளின் போது நன்றாகப் பயன்படுத்தப் படும் மங்கல இசைக் கருவிகள் சங்கும், மணியுமாகும். மகா விஷ்ணுவின் கையிலே சதா இருக்கும் 'சங்கு' ஸ்ரீ கிருஷ்ண அவதாரத்தில் பாஞ்சஜன்னியமாகியது. இன்று அநேகமாக கோவில்களில் நித்திய பூசையிலும், மகோற்சவ காலங்களிலும் சங்குநாதம் வெகுவாக ஊதப்படுகிறது. இதை ஊதுபவர்கள் பண்டாரம், தாசரி, அல்லது பனிச்சவன் என்ற இனத்தைச் சேர்தவர்களாவர். இன்று, சாதி உணர்வு தாராளமாக மக்களிடையே பரவியமையின் காரணத்தால், சங்கு வாத்தியத்தை முறையாகவும், அழகாகவும் ஊதுவார்கள் கிடைப்பது மிக அருமையாகிவிட்டது.

மணி ஓசை ஒலிக்காத கோவிலே நமது சமயத்தில் இல்லை. எல்லாப் பூசை வேளைகளின் போதும் தேவர்களைக் கூவியழைப்பதற்கும், அரக்கர்களைத் தூர விரட்டுவதற்கும் 'மணி ஒலி' உண்டாக்கப்படுகிறது. 'கண்டாமணி', 'கொத்துமணி' 'கை மணி' எனக் கம்பீரமான இனிய ஓசை பெருக்கும் மணிகள் நித்திய நைமித்திய காமிய கிரியைகளின் போதும் நன்கு ஒலிக்கப்பெறும்.

திருவிழாக் காலங்களில் சுவாமி வீதிவலம் வருகையில், எக்காளம், திருச்சின்னம், கொம்பு வாத்தியம் ஆகிய பலத்த ஒலி தரும் ஊது வாத்தியங்கள் இன்றும் சில கோவில்களில் பயன்படுத்தப்படுகின்றன.

மாரி அம்மன் கோவில்களிலும், கிராமத் தெய்வங்கள் வீற்றிருக்கும் கோயில்களிலும், சில விசேஷமான இசைக்கருவிகள் பூசை வேளைகளில் இசைக்கப்படுகின்றன. உடுக்கை, டவண்டை, பம்மை, சூரிய பிறை, சந்திரபிறை என்னும் இசைக்கருவிகளே இவையாம். உடுக்கையைச் சில சமயங்களில் 'துடி' என்றும் 'இடை சுருங்கும் பறை' என்றும் அழைப்பர். உடுக்கையிலும் பெரியது 'டவண்டை'. உடுக்கையைக் கையாலும், டவண்டையைத் தடியாலும் அடித்தே ஒலி பெருக்கப்படும். பம்மை, ஒரு சோடி மேளங்களைக் கொண்ட பல வண்ணங்கள் தீட்டப்பட்ட தாளக் கருவியாகும். சூரியப்பிறை, சந்திரப்பிறை ஆகிய தாளக் கருவிகள், இருவர் நெற்றியல் தனித்தனியே கட்டப்பட்டு, தடியால் அடித்து இசை பெருக்கப் படும். தென் இந்தியாவிலுள்ள காளகஸ்தி கோவிலில் இந்தத் தாளக் கருவிகள் சூரியமண்டலம், சந்திர மண்டலம் என அழைக்கப்படும். இலங்கையில், யாழ்ப்பாணத்திலுள்ள பன்றித்தலைச்சி அம்மன் கோவிலிலும், வேறு வன தேவதைகளின் கோயில்களிலும், பறை மேளம் இன்றும் இசைக்கப்படுகின்றது. அம்மன் கோவில்களிலும், விஷ்ணு கோவில்களிலும், தெய்வம் வீதி வலம்வருகையில் பேரிகை இசைக்கப்படுகிறது.

தென்னிந்தியக் கோவில்களிலும், இலங்கைக் கோவில்களிலும் கிரியா வேளைகளில் முகவீணை வாசிப்பது வழக்கம். வீணை என்ற பெயரை இது பெற்ற போதும், தந்திக் கருவியாகிய வீணைக்கும் இந்த வாத்தியத்திற் கும் ஒரு விதத் தொடர்பும் இல்லை. இது நாகசுரம் போன்றது. ஆயினும், தோற்றத்தில் நாகசுரத்திலும் மிகச் சிறியது. தொடக்கத்தில் இந்த இசைக்கருவி, கோயில் கிரியா வேளையின் நிருத்திய நிகழ்ச்சியின் போது, சின்ன மேளத்திற்குப் பக்கவாத்தியமாகப் பயன்படுத்தப்பட்டது. தற்போது ஏறத்தாழ எல்லாக் கோவில்களி லுமே 'சின்னமேள' நிகழ்ச்சி அருகிப் போனமையால், முகவீணை சுவாமி பள்ளிஅறை போகும் கிரியா நெறி யின் போது இசைக்கப்படுகிறது. தென்னிந்தியாவில் வைஷ்ணவ கோயில்களில் தான் முகவீணை கூடுதலாகப் பயன்படுத்தப்படுகிறது. தற்காலத்தில் இந்த முகவீணையின் இடத்தை மேல்நாட்டு இசைக்கருவியாகிய

கிளாரினெட் எடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது. கம்பீரமான நாதத்தைத் தரும் துளைக்கருவியாகிய கிளாரினெட்டை வாசிப்பதற்கு இலங்கையிலுள்ள கோயில்கள் இன்னும் முயற்சி எடுக்கவில்லை. கிளாரினெட்டைப் போன்று வயலினும் ஒரு மேல் நாட்டு இசைக் கருவியாகும். இது பிடில் என்றும் அழைக்கப்படும். இந்த நரம்புக்கருவி இன்றைய கர்நாடக சங்கீத உலகிலே மிகவும் முன்னணியில் வைத்து மதிக்கப்படுவது யாரும் அறிந்ததே; கோயில்களிலும், கிரியா நிகழ்ச்சியின் போதும் பாடுபவர்க்குப் பக்க வாத்தியமாகவும், தனிவாத்தியமாகவும் இசைக்கப்படுவது கண்கூடு.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

# ஈழநாட்டில் சித்தர் மரபு

— ச. அம்பிகைபாகன்

தமிழ் நாட்டிற் சித்தர் மரபொன்று நெடுங்காலமாக இருந்து வருகின்றது. நாயன்மார்களை அறுபத்துமூவர் என்பது போன்று சித்தர்களையும் பதினெண்மர் என்று கூறுவது மரபு. ஆயினும் பதினெண்மருக்கு மேற் பலர் இருந்திருக்கின்றனர் என்பது வெளிப்படை; சமீப காலத்திலும், தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் சித்தர்கள் பலர் இருந்தனர்.

சித்துக்களில் வல்லவர்கள் சித்தர்கள் என்று மக்கள் பொதுவாகக் கருதுகின்றனர். சித்தர்கள் அட்டமா சித்திகளிற் கைதேர்ந்தவர்கள். யோகமார்க்கத்தில் வல்லவர்களான சித்தர்கள் அந்நெறி நின்று, பல சித்திகளைப் பெற்றனர். சித்தர்கள் கைக்கொண்ட யோகமார்க்கம் வாசியோகம் எனப்படும்; வாசியென்பது சுவாசம். வாசியை அடக்கி ஆண்டவர்கள்,

'' வாசிதனை அறியாத சண்டிமார்கள்
வார்த்தையினுல் மருட்டிவைப்பார்
நாசிநுனிதன் நடுவில் சிவத்தைக் கண்டோர்
நான் முகனும் திருமாலும் சிவனும் தாமே''

என்பர் வான்மீகர் என்னும் சித்தர். சித்தர்கள் சாதிசமய ஆசாரக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள்; சில சித்தர்கள் இவற்றை வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். மேலும் உடலைத் திடமாக வைத்திருப்பதற்கும் நீண்டநாள் வாழ்வதற்கும் சித்தர்கள் வைத்தியத் துறையில் ஆராய்ச்சி செய்து கண்ட முறை சித்த வைத்தியம் எனப்படும்.

## கடையிற் சுவாமிகள்:

பத்தொன்பதாம் நூற்றுண்டின் மத்தியில் ஈழநாட்டிற் கடையிற் சுவாமி, ஆனைக்குட்டிச் சுவாமி, பரமகுருசுவாமி என்னும் மூன்று சித்தர்கள் சஞ்சாரம் செய்தனர். கடையிற் சுவாமிகளின் பூர்வீகத்தைப் பற்றி நிச்சயமாக ஒன்றும் கூறமுடியவில்லை. சிலர் வண்ணை வயிரமுத்துச் செட்டியார் என்பவர் தென்னிந்திய யாத்திரை செய்தபோது இவரைக் கண்டு அழைத்ததற்கிணங்க இவர் யாழ்ப்பாணம் வந்ததாகக் கூறுவர்; வேறுசிலர் பங்களூரில் நீதவான் உத்தியோகம் பார்த்தபோது குற்றவாளிக்கு மரணதண்டனை விதிக்க மனமொருப்படாமையினுல் அதனைத் துறந்துவிட்டு ஈழம் வந்தவர் என்பர். இக்கூற்றுகள் எவ்வாருயினும் இவர் இந்தியாவிலிருந்து வந்தவர் என்பதும் இவரது தாய் மொழி தெலுங்கல்லது கன்னடமாக இருந்திருக்க வேண்டும் என்பதும் இவர் பேசிய பாஷையிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. பெரும்பாலும் யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதியிற் சஞ்சாரம் செய்தன்மையால் இவர் கடையிற் சுவாமி என்றழைக்கப்பட்டார். கக்கத்திலே குடையும் கரிய உடையும் கொண்டு உலாவிய சுவாமிகளின் தோற்றம் வசீகரிக்கும் தன்மையது; சாமுத்திரிகா இலட்சணங்களெல்லாம் பொருந்தியது. சுவாமிகள் பல சித்துக்களைச் செய்துள்ளார். பெரிய கடையில், கடை வைத்திருந்தவர்கள் சுவாமிகளுக்கு ஏதேனும் ஒரு பொருளைக் கொடுத்தால் தாங்கள் வியாபாரம் செழித்தோங்குமெனக் கருதினர்.

யோகர் சுவாமிகள் தாம் பன்னிரண்டு வயதுப் பையனுக இருந்தபோது கடையிற் சுவாமிகளைக் கண்டதாகக் கூறியுள்ளார். அவர்கள்,

> " கடையிற் சுவாமி சிவபோகத்தைப் புசித்தவர். அவரோடு ஒப்பிடும்போது நாமெல்லா மெங்கே? கிருஷ்ண பரமாத்மா போல் அவர் பல லீலைகள் புரிந்துள்ளார்கள். அவர் நன்மை தீமைக்கு அப்பாற் பட்டவர். அவர் என்ன செய்தாலும் அவரைக் குறை சொல்லுவர்கள் கிடையாது."

என்று கூறியுள்ளார். கடையிற் சுவாமிகளுக்குச் சார்ஷன் சுவாமி, வயிரமுத்துச் செட்டியார், சின்னச் சுவாமி, நன்னையர், குழந்தைவேலுச்சுவாமி, சடைவரதர், செல்லப்பாச் சுவாமி போன்ற பலதரப்பட்ட சீடர் இருந்தனர். சார்ஷன் சுவாமிகளே கந்தர்மடம் வேதாந்த மடத்தைத் தாபித்தவர்; சின்னச்சுவாமியின் சமாதியுள்ளதும் நாவலர் வீதியிலுள்ள அன்னசத்திரமுள்ளதுமான காணியைச் சுவாமிகள் பேரில் தர்ம சாதனம் செய்தவர் வயிரமுத்துச் செட்டியார்; மண்டைத் தீவைச் சேர்ந்தவர் நன்னையர்; குழந்தை வேலுச் சுவாமி அரசாங்கத்தில் உயர் பதவி வகித்துச் சீடரான பின், அதனைத் துறந்து சமயப் பணியில் முழு நேரத்தை யும் செலவழித்துக் கீரிமலையிற் சமாதி கொண்டவர். ஏகாலியர் குலத்தைச் சேர்ந்த சடைவரதரின் சீடர்கள் ஏழாலையிலும் உசனிலும் மடங்கள் தாபித்தவர்கள்; நல்லூர்த் தெற்கு வீதியில் வசித்துக் கந்தசுவாமி கோயில் தேரடியிற் சஞ்சரித்து, அங்கே யோகர் சுவாமிகளுக்கு உபதேசஞ் செய்தவர் செல்லப்பா சுவாமிகள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் ஆதிகுரு எனக் கூறத்தக்க கடையிற் சுவாமிகள் சமாதி வண்ணை நீராவியடியிற் காணப்படுகிறது. பண்டிதர் மு. கந்தையா எழுதிய 'குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையும்' (1965) எனும் நூலிற் சுவாமிகள் பற்றி விரிவாக அறியலாம்.

**ஆனைக்குட்டிச் சுவாமிகள் :**

கொழும்பு வீதிகளிற் பெரும்பாலும் சஞ்சரித்த ஆனைக்குட்டி சுவாமிகள் ஸ்தூலமான சரீரத்தை யுடையவர். சேர், பொன்னம்பலம் அருணுசலம் போன்ற தலைவர்கள் இவரை ஆதரித்தார்கள். இவர் சமாதி கொழும்பு முகத்துவாரத்தில் உள்ளது. சுவாமிகளின் சீடர் மொட்டைச்சி அம்மையார் திருக்கேதீச் சரத்திற் கொட்டில் அமைத்து வதிந்து வந்தார்.

**குமரகுரு சுவாமிகள் :**

குமரகுருசுவாமிகள் பற்றி இராமநாதன் கல்லூரி ஆசிரியர் சோமசுந்தரம் பிள்ளை, அக்கல்லூரி வெள்ளி விழா மலரிலும் (1939) சேர். பொன்னம்பலம் அருணுசலம் Studies and Translations (1937) எனும் நூலிலும் எழுதியுள்ளனர். சுவாமிகள் இராமநாதபுரம் கிடாரிப்பட்டியிற் பிறந்தவரென்றும் இலங்கை மலைநாட்டில் தோட்டத் தொழிலாளர் மத்தியிற் பிறந்தவரென்றும் வேறுபடக்கூறுவர். சுவாமி கள் இராமநாதபுரக் கிடாரிப்பட்டியிலும் யாழ்ப்பாணத்தில் மருதனர் மடம், கீரிமலை, வண்ணை முதலிய இடங்களிலும், மாத்தளையிலும் கொழும்பிலும் சஞ்சாரம் செய்தவர். கீரிமலையிற் சண்முகநாதன் அச்சக அதிபர் சண்முகநாதனின் தந்தையார் இவருக்கு மடமொன்று தாபித்துக் கொடுத்தார்; இங்கு இருந்த காலை குழந்தைவேலுச் சுவாமிகளுக்கு உபதேச குருவாக அமைந்தார். சோமசுந்தரம்பிள்ளை கொழும்பில் தம்பையா சத்திரத்தில் இருந்தகாலை சுவாமிகள் தமக்கு உபதேசம் செய்ததாக எழுதியுள்ளார். சேர். பொன்னம்பலம் அருணுசலம் அவர்களின் முயற்சியினுற் சுவாமிகள் சமாதி மாத்தளையிலே தாபிக்கப்பட்டது.

**யோகர் சுவாமிகள் :**

செல்லப்பா சுவாமிகளின் சீடரான யோகர் சுவாமிகள் ஐம்பது ஆண்டுகளுக்கு மேற் சிறந்த சித்த புருஷராக விளங்கியதோடு நாவலரவர்கள் வழியைப் பின்பற்றிச் சைவ சமய பரிபாலனமும் செய்து வந்தார். சித்தர் மரபும் வேதாகம மரபும் தாயுமானவரிடத்திற் போன்று இவரிடமும் சங்கமமாயின. வாசியோகத்திற் கைவரப்பெற்ற சுவாமிகள் பலவிதமான சித்திகள் உடையவராக விளங்கினுர். சுவாமிகள் திருமுறைகளை முறையாக ஓதியும் ஓதுவித்தும், அவற்றுக்கு வகுப்புக்களை நடாத்தி வந்தும், புராண படனத் திற்குப் புத்துயிர் கொடுத்தும், சித்தாந்த சாத்திர வகுப்புக்களை நடாத்துவித்தும் சைவசமய பரிபாலனம் செய்து வந்தார்கள்.

சித்தர்கள் நமது நாட்டில் வாழையடி வாழையாக வந்துள்ளார்கள்; இதனுல் சித்தர் மரபு ஒரு வற்ருத ஊற்றுக இருந்து வருகிறது; இதுவே நமது நாட்டின் தனிச் சிறப்பாகும்.

# இலங்கையிற் சைவர்கள்: குடிசனப் புவியியல் நோக்கு

— கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை —

இலங்கை பல இன, மத மக்கள் வாழும் நாடுகளில் ஒன்றாகும். உலகின் பிரதான மதங்களான பௌத்தம், சைவம், கிறீஸ்தவம், இஸ்லாம் ஆகியவற்றைப் பின்பற்றும் மக்கள் இங்கு வாழ்கின்றனர். சைவம், பௌத்தம் ஆகியன முதலிலும், இஸ்லாம், கிறீஸ்தவம் ஆகியன பின்னரும் இந்நாட்டுக்கு அறிமுகமாகின. சைவம், பௌத்தம் ஆகியன 2500 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இந்நாட்டு மக்களாற் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. அனுராதபுர காலத்தில் இந்நாட்டிற் சைவ சமயம் இருந்ததை வரலாற்றுக் காரணிகளிலிருந்து அறியக்கூடியதாக வுள்ளது. பொல்லனறுவைக் காலத்தில், குறிப்பாகச் சோழர் ஆட்சிக் காலத்தில் சைவ மதம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. இதற்கு இக் காலத்தில் அமைக்கப்பட்ட சிவாலயங்கள் சான்றாகும். பாடல் பெற்ற தலங்களான திருக் கோணேஸ்வரம் திருக்கேதீஸ்வரம் போன்றனவும், கதிர்காமம், முனீஸ்வரம், நல்லூர் கந்தசுவாமி கோயில், நல்லூர் சட்டநாதர் கோயில், வீரமாகாளியம்மன் கோயில், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், கிழக்கிலங்கையில் காணப்படும் பல கண்ணகியம்மன் கோவில்கள் போன்றனவும் இலங்கையிற் சைவர்களின் வரலாற்றைக் காட்டி நிற்கின்றன.

1971 ஆம் ஆண்டில் இலங்கையின் குடிசனத் தொகை 12.7 மில்லியனாக இருந்தது. இதில் சைவர்கள் தொகை 2,239,310 பேராக இருந்தது. இந்நாட்டில் ஒவ்வொரு 1000 பேரில் 176 பேர் சைவர்களாக உள்ளனர். 1871-1971 க்கும் இடைப்பட்ட நூற்றாண்டு காலத்துக்கு மதவடிப்படையில் இலங்கையின் குடிசனத்தொகை எண்ணிக்கையிலும் விகிதாசாரத்திலும் பின்வருமாறு:

அட்டவணை 1

| ஆண்டு | பௌத்தர்கள் | | சைவர்கள் | | முஸ்லீம்கள் | | கிறீஸ்தவர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | விகிதம் | தொகை | விகிதம் | தொகை | விகிதம் | தொகை | விகிதம் |
| 1871 | 1,520,575 | 63.3 | 465,944 | 19.4 | 171,542 | 7.1 | — | — |
| 1881 | 1,698,070 | 61.5 | 593,630 | 21.5 | 195,775 | 7.2 | 277,977 | 10.1 |
| 1891 | 1,877,043 | 62.4 | 615,932 | 20.5 | 211,995 | 7.0 | 302,127 | 10.0 |
| 1901 | 2,141,404 | 60.1 | 826,826 | 23.2 | 246,118 | 6.9 | 349,239 | 9.7 |
| 1911 | 2,474,170 | 60.3 | 938,260 | 22.8 | 283,631 | 6.9 | 409,200 | 10.0 |
| 1921 | 2,769,805 | 61.6 | 982,073 | 21.8 | 302,532 | 6.7 | 443,400 | 9.8 |
| 1946 | 4,294,932 | 64.5 | 1,320,352 | 19.8 | 436,556 | 6.6 | 603,235 | 9.1 |
| 1953 | 5,209,439 | 64.3 | 1,610,561 | 19.9 | 541,506 | 6.7 | 724,461 | 8.9 |
| 1963 | 7,003,287 | 66.2 | 1,958,394 | 18.5 | 724,043 | 6.8 | 883,900 | 8.4 |
| 1971 | 8,567,570 | 67.4 | 2,239,310 | 17.6 | 909,941 | 7.1 | 996,687 | 7.8 |

மூலம்: இலங்கைக் குடிசனக்கணிப்புக்கள்: 1871-1971.

இலங்கையில் பௌத்தத்துக்கு அடுத்தபடியாக சைவ சமயமே முக்கியமானதாகும். பௌத்தம் சிங்களவருடனும், சைவம் தமிழருடனும், இஸ்லாம் சோனகர்-மலாயர் ஆகிய இனங்களுடனும் தொடர்புள்ளதாக இருக்கின்றன. எனினும் தமிழர், சிங்களவர் மத்தியில் சிறு விகிதத்தினர் கிறீஸ்வத மதத்தைச் சேர்ந்தவர்களாகவுள்ளனர். 1971 இல் சைவ மக்கள் தொகை 22 லட்சத்துக்கு மேற்பட்டிருந்த பொழுதும்

மொத்த தொகையில் அது 17.6 விகிதமாகவே இருக்கிறது. 1871 இல் இருந்து எடுக்கப்பட்ட குடிசனக் கணிப்புக்களில், பதிவு செய்யப்பட்ட விகிதளவுகளில், 1971 ஆம் ஆண்டிற்குரிய விகிதளவே மிகக் குறைவானதாகும். அட்டவணை ஒன்றனை நோக்கின் பௌத்தர்கள் விகிதம் 1901 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்து வந்ததைக் காணலாம். 1901 இல் 60.1 விகிதமாக இருந்த பௌத்தர்கள் 1971 இல் 67.4 விகிதமாக அதிகரித்துள்ளனர். இஸ்லாமியரின் விகிதளவு 1871 -1946 க்கும் இடைப்பட்ட காலத்தில் குறைந்து சென்று 1946 -1971 க்கும் இடைப்பட்ட காலத்தில் அதிகரித்துள்ளதைக் காணலாம். ஆனால் சைவர்களின் விகிதளவு 1901 இல் இருந்தும், கிறீஸ்தவர்களின் விகிதளவு 1921 இல் இருந்தும் தொடர்ச்சியாகக் குறைந்து வந்துள்ளன. 1946 -71 க்கும் இடைப்பட்ட காலத்தில் பௌத்தர்கள் 99.5 விகிதத்தாலும், முஸ்லீம்கள் 108.4 விகிதத்தாலும், சைவர்கள் 69.6 விகிதத்தாலும், கிறீத்தவர்கள் 65.2 விகிதத்தாலும் அதிகரித்துள்ளனர். உரோமன் கத்தோலிக்கர் அல்லாத கிறீஸ்தவர்கள் இக் காலத்தில் 8 விகிதத்தால்மாத்திரமே கூடியுள்ளனர்[1]. அட்டவணை இரண்டில் மதவடிப்படையில் குடிசனக் கணிப்பு இடைக்கால குடிசனவதிகரிப்புக் காட்டப்பட்டுள்ளது :

அட்டவணை 2

| குடிசனக்கணிப்பு இடைக்காலம் | தேசிய அதிகரிப்பு | பௌத்தர்கள் | சைவர்கள் | இஸ்லாமியர்கள் | கிறீஸ்தவர்கள் |
|---|---|---|---|---|---|
| 1871—1881 | 15.0 | 11.6 | 27.4 | 14.1 | — |
| 1881—1891 | 9.0 | 10.5 | 3.8 | 8.3 | 8.7 |
| 1891—1901 | 18.6 | 12.3 | 34.2 | 16.1 | 15.6 |
| 1901—1911 | 15.2 | 15.5 | 13.5 | 15.2 | 17.2 |
| 1911—1921 | 9.6 | 11.9 | 4.7 | 6.7 | 8.4 |
| 1921—1946 | 48.0 | 55.0 | 34.4 | 44.3 | 36.0 |
| 1946—1953 | 21.6 | 21.3 | 21.9 | 24.0 | 20.1 |
| 1953—1963 | 30.7 | 34.4 | 21.6 | 33.7 | 22.0 |
| 1963—1971 | 20.1 | 22.3 | 14.3 | 25.7 | 12.8 |

மூலம்: இலங்கை குடிசனக் கணிப்புக்களிலிருந்து கணிக்கப்பெற்றது.

சைவர்களின் குடிசனவதிகரிப்பு 1871 -81 க்கும் 1891--1901 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களிலும் பார்க்கக் கூடுதலாக இருந்தது. 1901 க்குப் பின்பு சைவர்களின் குடிசன அதிகரிப்பு ஏனைய மதத்தவர்களின் அதிகரிப்பிலும் குறைவாகவே இருந்தது.

மத அடிப்படையில் மக்கள் தொகை மூன்று காரணிகளால் கட்டுப்படுத்தப் படுகின்றன. (i) இயற்கையதிகரிப்பு (ii) குறித்த மதத்தைச் சேர்ந்தவர்களின் குடியுள்வரவு, குடி வெளியேற்ற வேறுபாடுகள் (iii) மதமாற்றம். இலங்கையில் குறித்த ஒரு மதம் குறித்ததொரு இனத்துடன் தொடர்புடையதாக விருப்பதைக் காணலாம். இதனால் ஓர் இனத்தின் குடிப் புள்ளியியல் நிலைமையிலேற்படும் மாற்றம் அதனைச் சார்ந்த மதத்தையும் தாக்குகின்றது. 1946 -1971 க்கும் இடையில் கண்டிச்சிங்களவர் 115.4 விகிதத்தாலும், கரையோரச் சிங்களவர் 87.7 விகிதத்தாலும், இலங்கைத்தமிழர் 93.0 விகிதத்தாலும், இந்தியத் தமிழர் 55 விகிதத்தாலும், இலங்கைச் சோனகர் 120 விகிதத்தாலும் அதிகரித்துள்ளனர். இக்காலத்தில் இந்தியச்சோனகர் 16 விகிதத்தால் குறைவடைந்துள்ளனர்.[2] தமிழர் அதிகரிப்பு விகிதம் குறைவாகவிருந்ததே சைவ மக்கள் அதிகரிப்பு குறைவாக இருந்ததற்குக் காரணம். தமிழர் தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப சைவர்களின் விகிதமும் கூடியும் குறைந்தும் செல்லும் போக்கை அட்டவணை மூன்றில் காணலாம். தமிழர்-சைவ விகிதளவுக்கிடையே 3 விகிதம் வேறுபாடு தொடர்ச்சியாக இருப்பதைக் காணலாம். இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தாலும், 1948 ஆம் ஆண்டுக் குடியுரிமைச் சட்டம் காரணமாகவும், அரசாங்கம் வேலை வழங்கல் போன்ற துறைகளில் இலங்கையர் மயக் கொள்கையைக் கடைப்பிடித்ததாலும் இந்தியர் பெருமளவில் தாயகம் திரும்பினர். சிறிமா—சாஸ்திரி உடன்படிக்கையின் காரணமாக இலங்கை வாழ் இந்திய மக்களில் 525,000 பேரை இந்தியா ஏற்றுக் கொண்டது. இத் தொகையில் ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்டோர் ஏற்கனவே இந்தியா சென்றுள்ளனர். 1974 ஆம் ஆண்டு இந்திரா—சிறிமா உடன்படிக்கையின் காரணமாக மேலும் 75,000 பேரை இந்தியா ஏற்றுக் கொண்டது. இவ்வுடன்படிக்கைகளை

அமுல் செய்வதன் காரணமாக சைவர்களின் விகிதளவு மேலும் குறைவடைந்து செல்லும். மேலும் இலங்கைத் தமிழர் மத்தியில் தொழிற் கல்வி போன்ற காரணங்களுக்காகப் பிற நாடுகளுக்குப் போவோர் எண்ணிக்கை அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளது. இதனுல் சைவர்களின் குடிசனப்பெருக்கத்தில் தாக்கம் ஏற்படும். சைவ மதம் ஏனைய மதங்களைப் போலல்லாது கட்டுப்பாடு குறைவாக இருந்தாலும், அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்றிருக்காததாலும் சாதிப்பாகுபாடு காணப்பட்டதாலும் இம் மதத்தைச் சேர்ந்தவர்களிற் சிறு தொகையினர் பிற மதங்களுக்கு, குறிப்பாகக் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறினர். சாதிப் பிரச்சினையி

அட்டவணை 3

சைவர்கள், தமிழர்கள் தொகைகளும், விகிதளவுகளும் 1871 -1971

| ஆண்டு | சைவர்கள் | | தமிழர்கள் | | தமிழர் -சைவ வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | தொகை | விகிதம் | தொகை | விகிதம் | (விகிதத்தில்) |
| 1871 | 465,944 | 19.4 | 537,818 | 22.4 | 3.0 |
| 1881 | 593,630 | 21.5 | 687,248 | 24.9 | 3.4 |
| 1891 | 615,932 | 20.5 | 738,853 | 24.1 | 4.1 |
| 1901 | 826,826 | 23.2 | 951,740 | 26.7 | 3.5 |
| 1911 | 938,260 | 22.8 | 1,059,007 | 25.8 | 3.0 |
| 1921 | 982,073 | 21,8 | 1,120,059 | 24.9 | 3.1 |
| 1946 | 1,320,352 | 19.8 | 1,514,320 | 22.7 | 2.9 |
| 1953 | 1,610,561 | 19.9 | 1,858,807 | 23 | 3.1 |
| 1963 | 1,945,210 | 18.3 | 2,293,160 | 21.7 | 3.4 |
| 1971 | 2,239,310 | 17.6 | 2,610,935 | 20.5 | 2.9 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்புக்கள்.

லிருந்து தம்மை விடுவிக்கவும், தொழில், கல்வி போன்ற காரணங்களுக்காகவும் இவர்கள் கிறிஸ்தவர்களாக மாறினர். இலங்கையில் கிறிஸ்தவ சமயத்தின் முக்கியத்துவம் இப்பொழுது குறைவடைந்துள்ளதால் இம் மதத்தைத் தழுவும் சைவர்கள் தொகை மிகவும் குறைவடைந்துள்ளது. சிங்கள மக்கள் மத்தியில் உரோமன் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர்கள் மீண்டும் பௌத்தர்களாக மாறும் போக்குக் காணப்படுகின்றது. ஆனுல் இத்தகைய செய்முறை தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படவில்லை. தற்போது சிறுபான்மைத் தமிழர் பௌத்த சமயத்துக்கு மாறுகின்ற போக்குக் காணப்படுகின்றது. மேலும் சைவர்களுக்கும் ஏனைய மதத்தினர்களுக்குமிடையே ஏற்படும் கலப்பு விவாகம் போன்றவற்றின் விளைவால் சைவர்களே தமது சமயத்தையோ அல்லது மொழியையோ விட்டுக் கொடுக்கின்றனர். இத்தகைய காரணங்களால் சைவர் களின் குடிசன அதிகரிப்பு மற்றைய மதமக்களின் குடிசன அதிகரிப்பிலும் பார்க்கக் குறைவாகவுள்ளது.

அட்டவணை நான்கில் 1971 இல் மாவட்டக் குடிசனத் தொகையும், சைவர்களின் தொகையும், மாவட்ட குடிசனத்தொகையில் சைவர்களின் விகிதமும், சைவர்களின் மொத்தக் குடிசனத் தொகையில் குறித்த மாவட்டத்தில் வாழும் சைவர்களின் விகிதமும் காட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, நுவரேலியா ஆகிய நான்கு மாவட்டங்களின் மாத்திரமே சைவர்கள் பெரும்பான்மையாக வுள்ளனர். கண்டி, திருகோணமலை, அம்பாறை, பதுளை ஆகிய மாவட்டங்களின் குடிசனத் தொகையில் இவர்கள் 20 விகிதத்திற்கு மேலுள்ளனர். கொழும்பு, இரத்தினபுரி, கேகாலை போன்ற மாவட்டங்களின் விகிதளவில் இவர்கள் குறைவாக இருப்பினும் எண்ணிக்கையில் அதிகமாகவுள்ளனர். இலங்கையிலுள்ள சைவர்களில் 26.1 விகிதத்தினர் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்கின்றனர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, பதுளை, கொழும்பு, இரத்தினபுரி ஆகிய ஏழு மாவட்டங்களில் இலங்கையிலுள்ள சைவர்களில் 79.3 விகிதத்தினர் வாழ்கின்றனர். இலங்கையின் சைவ மக்கள் தொகையில் வடமத்திய மாகாணம் .6 விகிதத்தினரையும், தென் மாகாணம் 1.6 விகிதத்தினரையும், வட மேல் மாகாணம் 1.6 விகிதத்தினரையும் கொண்டுள்ளன. மன்னர், திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருப்பினும் சைவர்கள் சிறுபான்மையினராகவே யுள்ளனர்.

அட்டவணை 4

மாவட்ட ரீதியில் 1971 இல் சைவர்களின் குடிசனத்தொகையும் பரம்பலும்

| மாவட்டம் | | மாவட்டக் குடிசனத் தொகை | மாவட்டத்தின் சைவர்கள் தொகை | மாவட்டக் குடிசனத்தில் சைவர்களின் விகிதம் | மொத்தச் சைவர்களில் மாவட்டச் சைவர் களின் விகிதம் |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | ... | 2,672,620 | 145,567 | 5.4 | 6.5 |
| களுத்துறை | ... | 731,824 | 40,578 | 5.5 | 1.8 |
| கண்டி | ... | 1,137,170 | 308,717 | 26.0 | 13.8 |
| மாத்தளை | ... | 316,342 | 54,420 | 17.2 | 2.4 |
| நுவரேலியா | ... | 452,243 | 236,947 | 52.3 | 10.6 |
| காலி | ... | 737,451 | 16,549 | 2.2 | 0.7 |
| மாத்தறை | ... | 588,254 | 18,237 | 3.1 | 0.8 |
| அம்பாந்தோட்டை | ... | 341,905 | 1,381 | 0.4 | 0.1 |
| யாழ்ப்பாணம் | ... | 704,350 | 585,418 | 83.1 | 26.1 |
| மன்னார் | ... | 77,882 | 23,278 | 29.9 | 1.0 |
| வவுனியா | ... | 95,536 | 62,436 | 65.4 | 2.8 |
| மட்டக்களப்பு | ... | 258,104 | 167,597 | 64.9 | 7.5 |
| அம்பாறை | ... | 277,790 | 57,346 | 21.0 | 2.5 |
| திருகோணமலை | ... | 191,989 | 62,828 | 32.7 | 3.8 |
| குருநாகல் | ... | 1,028,107 | 17,493 | 1.7 | 0.8 |
| புத்தளம் | ... | 379,787 | 18,200 | 4.8 | 0.8 |
| அநுராதபுரம் | ... | 389,207 | 9,306 | 2.4 | 0.4 |
| பொலன்னறுவை | ... | 163,858 | 4,664 | 2.8 | 0.2 |
| பதுளை | ... | 616,315 | 214,506 | 34.0 | 9.6 |
| மொனறாகலை | ... | 191,565 | 13,728 | 7.2 | 0.6 |
| இரத்தினபுரி | ... | 661,710 | 111,648 | 17.3 | 5.2 |
| கேகாலை | ... | 652,094 | 67,393 | 10.3 | 3.0 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்பு 1971.

காரியாதிகாரி பிரிவுகள் அடிப்படையில் பரம்பலை நோக்கின் சைவர்களின் செறிவை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். 1971 இல் 156 காரியாதிகாரி பிரிவுகள் இருந்தன.[3] அட்டவணை ஐந்தில் காரியாதிகாரி பிரிவுகள் அடிப்படையில் சைவ மக்களின் விகிதளவு காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 5

| வகுப்பு (சைவர்களின் விகிதளவு) | காரியாதிகாரி பிரிவுகள் எண்ணிக்கை (1971) |
|---|---|
| 0—5 | 74 |
| 5—10 | 14 |
| 10—20 | 16 |
| 20—30 | 13 |
| 30—40 | 7 |
| 40—50 | 7 |
| 50—60 | 5 |
| 60—70 | 3 |
| 70—80 | 5 |
| 80—90 | 6 |
| 90—100 | 6 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்பு 1971.

சைவர்கள் 25 காரியாதிகாரி பிரிவுகளில் 50 விகிதத்திற்கு மேற்பட்டும், 27 பிரிவுகளில் 20–50 விகிதத்திற்கு இடைப்பட்டும், 30 பிரிவுகளில் 5–20 விகிதத்திற்கு இடைப்பட்டும், 74 பிரிவுகளில் 5 விகிதத்திற்குக் குறைவாகவும் உள்ளனர். வட மாகாணத்தில் வவுனியா தெற்குச் சிங்களப் பிரிவிலும், கிழக்கு மாகாணத்தில் கந்தளாய், வெலகம்பற்று வடக்கு, வெல கம்பற்று தெற்கு, விர்தனைப் பற்று ஆகிய பிரிவுகளிலும் சைவர்கள் மிகக் குறைவாக வாழ்கின்றனர்[5]; வடக்கு, கிழக்கு மாகாணங்கள், பெருந் தோட்டப்பயிர்ச் செய்கைப் பகுதிகள், கொழும்பு நகரம் ஆகிய பகுதிகளிலுள்ள காரியாதிகாரி பிரிவுகளில் சைவர்கள் முக்கியமாக வாழ்வதனைக் காணலாம். அட்டவணை ஆறில் 1971 காரியாதிகாரி பிரிவு அடிப்படையில் சைவ மக்கள் தொகையும், குடிசனத் தொகையில் சைவர்களின் விகிதமும் காட்டப்பட்டுள்ளன. (10 விகிதத்திற்கு மேற்பட்ட சைவர்களைக் கொண்ட பிரிவுகள் மாத்திரம்)

அட்டவணை 6

காரியாதிகாரி பிரிவு அடிப்படையில் சைவர்களின் தொகை, 1971

| பிரிவு | சைவர்களின் தொகை | பிரிவின் மொத்த குடிசனத் தொகையில் சைவர்களின் விகிதம் | பிரிவு | சைவர்களின் தொகை | பிரிவின் மொத்த குடிசனத் தொகையில் சைவர்களின் விகிதம் |
|---|---|---|---|---|---|
| கொழும்பு நகரம் | 93,294 | 16.6 | நெடுந்தீவு | 3,239 | 57.8 |
| கங்காபோட பற்று | 9,750 | 17.2 | தீவுப்பகுதி | 55,925 | 82.0 |
| பஸ்டும் கோறளை | 14,413 | 13.7 | யாழ்ப்பாணம் | 96,075 | 67.9 |
| கண்டிநகரமும் அயலும் | 13,264 | 12.9 | வலிகாமம் மேற்கு | 75,639 | 83.8 |
| பாத்ததும்பர | 28,647 | 18.9 | வலிகாமம் வடக்கு | 93,883 | 87.6 |
| பாத்த கேவாகற்ற | 19,973 | 21.6 | வலிகாமம் கிழக்கு | 57,262 | 91.8 |
| பன்பாகே கோறளை | 23,021 | 43.3 | தென்மராட்சி | 56,606 | 90.8 |
| அம்பகமுவ கோறளை | 125,673 | 71.3 | வடமராட்சி தெற்கும் மேற்கும் | 51,891 | 90.9 |
| உடப்பலாத்தை | 63,584 | 36.8 | வடமராட்சி கிழக்கும் வடக்கும் | 37,311 | 86.6 |
| மாத்தளை | 16,872 | 18.5 | | | |
| ரத்தோட்டை | 31,368 | 32.9 | பச்சிலைப்பளை | 10,771 | 73.0 |
| உடகேவாகற்றை | 27,465 | 30.7 | கரைச்சி | 32,913 | 88.5 |
| வலப்பனை | 29,424 | 35.3 | துணுக்காய் | 5,555 | 94.5 |
| நுவரேலியா | 125,831 | 71.5 | பூனகரி | 6,999 | 78.0 |
| கொத்மலை | 54,227 | 51.8 | மாந்தை | 9,753 | 47.0 |
| காலி/கங்காபோடபற்று | 4,087 | 10.4 | மன்னார் | 8,441 | 25.4 |
| மொறவக்க கோறளை | 12,580 | 17.0 | முசலி | 5,084 | 21.3 |
| மெடகிந்த | 73,160 | 45.7 | செட்டிகுளம் | 6,878 | 60.4 |
| உடுகிந்த | 25,401 | 27.2 | வவுனியா தெற்கு(தமிழ்) | 24,673 | 78.2 |
| யட்டிகிந்த | 51,872 | 38.0 | வவுனியா வடக்கு | 12,210 | 90.2 |
| பசறை | 81,007 | 59.1 | கரையோரப்பற்று | 18,363 | 65.1 |
| வியலுவ | 5,545 | 16.7 | மூதூர் | 13,234 | 44.9 |
| ஊவா பறனகமுவ | 16,473 | 24.6 | கிண்ணியா | 6,840 | 16.9 |
| மொனருகலை | 10,611 | 23.1 | கட்டுக்குளம் மேற்கு | 1,726 | 20.0 |
| நவடுன் கோறளை | 24,708 | 25.2 | கட்டுக்குளம் கிழக்கு | 6,067 | 40.5 |
| குருவிற்ற கோறளை | 6,616 | 14.3 | திருமலைநகரமும் அயலும் | 28,492 | 47.6 |
| அற்றகலன் கோறளை | 23,058 | 22.3 | சேருவலை | 4,923 | 37.1 |
| கடவத்த கோறளை | 27,132 | 21.8 | மண்முனை தெற்கு | 51,552 | 94.5 |
| இரத்தினபுரி | 16,871 | 16.8 | மண்முனை மேற்கு | 22,171 | 88.0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாத்த புலத்கம | 22,543 | 18.3 | மண்முனை வடக்கு | 37,425 | 49.7 |
| அழுத்தகபானவல் கோறளை | 29,136 | 24.5 | ஏறாவூர் பற்று | 28,219 | 57.4 |
| கோறளைப்பற்று | 28,230 | 53.8 | பாளமைப்பற்று | 2,867 | 20.0 |
| அக்கரைப்பற்று | 19,957 | 36.1 | சரவாருப்பற்று | 14,229 | 26.0 |
| நிந்தவூர் பற்று | 7,110 | 28.8 | சம்மாந்துறைப்பற்று | 10,167 | 25.0 |

மூலம்: இலங்கைக் குடிசனக் கணிப்பு 1971.

சைவ மக்களின் புவியியற் பரம்பலை மேலும் நுணுக்கமாக நோக்கின் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண நகரின் கரையோர வட்டாரங்கள், ஊர்காவற்றுறை, நாரந்தனை, கரம்பன், பண்டத்தரிப்பு மாதகல், பெரிய விளான் போன்ற இடங்களைத் தவிர ஏனைய எல்லா இடங்களிலும் சைவர்களே பெரும் பான்மையாகவுள்ளனர்; மன்னார் மாவட்டத்தில் பனங்காமம், மேற்கு மூலை, இலுப்பக்கடவை, மாந்தை வடக்கு, மாந்தை தெற்கு, மாந்தை மேற்கு ஆகிய கிராம சபைப் பகுதிகளில் சைவர்கள் பெரும்பான்மையாக வுள்ளனர். ஏனைய கிராமசபைப் பகுதிகளில் இஸ்லாமியர் அல்லது கத்தோலிக்கரே பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு சிங்களப் பிரிவு நீங்கலாக ஏனைய பகுதி முழுவதும் சைவர்களே பெரும்பான்மையாகவுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் நிரியாய், சாம்பல் தீவு, திருகோணமலை, தம்பலகாமம், கட்டைப்பறிச்சான், சாம்பூர், கிளிவெட்டி, மல்லிகைத்தீவு, ஈச்சிலம் பத்தை ஆகியனவே பிரதானமான சைவ மக்கள் குடியிருப்புக்களாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர், காத்தான்குடி, ஓட்டுமாவடி, மீராவோடை, வாழைச்சேனை (முஸ்லீம்) ஆகியன தவிர்ந்த ஏனைய குடியிருப்புக்கள் சைவ மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில், பொத்து வில் வட்டாரம் 3, கோமாரி, திருக்கோயில், தம்புலுவில் முதலாம் இரண்டாம் குறிச்சிகள், பனங்காடு, கருங்கொடித்தீவு 7, 8, 9 குறிச்சிகள், பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, காரைதீவு, நாவிதன்வெளி, புன்னமலை போன்றனவே பிரதானமான சைவர்கள் குடியிருப்புக்களாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் சைவர்கள் கூடுதலாகப் பெருந் தோட்டப் பகுதிகளி லும், நகர்ப் புறங்களிலும் வாழ்கின்றனர். இலங்கையில் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களில் 82.4 விகிதத்தினர் சைவர்களாகும். தேயிலை, இறப்பர் செய்கைப் பகுதிகளிலேயே சைவர்கள் செறிவாக வாழ்கின்றனர். நுவர எலியா, தலவாக்கொல்லை, மஸ்கெலியா, கற்றன், வலப்பனை, நாவலப்பிட்டி, கொத் மலை, புசல்லாவை, இறம்பொடை, இருகலை, எல்கடுவை, பன்வில, எட்டியாந்தொட்டை, டெரியோவிற்ற, பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை, பசறை, பலாங்கொடை, நிவிற்றிக்கல, இரக்குவானை, தெனியாய, புளத்சிங்கள, தெல்தெனியா கேகாலை, கேவாகெற்றை ஆகிய இடங்களில் சைவ மக்கள் அதிகளவில் வாழ்கின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில், பெருந் தோட்டப் பயிர் செய்கைப் பகுதிகளுக்கு வெளியே சைவர்கள் நகர்ப் பகுதிகளிலேயே கூடுதலாக வாழ்கின்றனர். 1971 இல் கொழும்பு மாவட்டத்தில் 145 560 சைவர்கள் இருந்தனர். இவர்களுள் 134,153 பேர் நகர்களில் வாழ்ந்தனர். கொழும்பு நகருள் 93 294 பேரும், டெகிவல, கல்கிசையில் 8732 பேரும் இருந்தனர். பெரிய கொழும்புப் பகுதியிலேயே கொழும்பு மாவட்டத்துச் சைவர்கள் செறிவாகக் காணப்படுகின்றனர். பெருந்தோட்டப் பயிர்ச் செய் கைப் பகுதியிலுள்ள நகர்களில் சைவர்கள் விகிதத்தில் அல்லது தொகையில் முக்கிய இடத்தைப் பெற்றுள் ளனர். (1971 இல்: கண்டி 10.6; கம்பளை 13.0; கற்றன் 35.2; நாவலப்பிட்டி 24.8; வத்தேகம 23.6; புசல்லாவை 43.0; தெல்தெனியா 13.1; மாத்தளை 18.3; கலேவெல 13.8; இறத் தோட்டை 32.3; நுவர எலியா 26.9; தலவாக்கொல்லை 24.2; பூண்டுலோயா 33.3; பதுளை 15.0; பண்டாரவளை 33.4; அப்புத்தளை 21.5; பசறை 17.9; வெலிமடை 11.9; ஹாலிஎல 22.4; காலிஎல 21.7; மொனருகலை 11.3; பலாங்கொடை 12.5; இறக்குவானை 16.6; எட்டியாந்தொட்டை 21.7;) பெருந் தோட்டப் பயிர் செய்கைப் பகுதிகளுக்கு வெளியே, வாழும் சைவர்கள் பிரதானமாக சேவைத் தொழில்களில் ஈடுபடுவதால் நகரப் புறங்களில் அல்லது பிரதான சேவை நிலையங்களில் வாழ்கின்றனர். இவர்களில் கூடிய விகிதத்தினர் இலங்கைத் தமிழராகும். கிழக்கு மாகாணத்தில் மட்டக் களப்பு, திருகோணமலை ஆகிய இருநகர்களைத் தவிர ஏனைய நகர்கள் எல்லாம் முஸ்லிம் மக்கள் பெரும் பான் மையாக வாழும் இடங்களாகும். (1971 இல்: சைவர்கள் விகிதம் பின்வருமாறு: மட்டக்களப்பு 56.4; ஏறாவூர் 21.5; காத்தான்குடி 6.8; கல்முனை 21.3; சம்மாந்துறை 17.2; திருகோணமலை 50.8; கிண்ணியா 5.3; மூதூர் 11.7; கந்தளாய் 18.5;) பொலன்னறுவை, புத்தளம் ஆகிய மாவட்டங் களில் தான் சில சைவக் கிராமங்கள் காணப்படுகின்றன. இக்கிராமங்களில் வாழ்வோர் மீன்பிடி, விவசாயப்

ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ளனர். புத்தளப் பகுதியிலுள்ள உடப்பு, மருதங்குளம், குசல, முனீஸ்வரம், தட்டைக்காடு, கொல்லன் தீவு போன்றன குறிப்பிடத்தக்கன.

இலங்கையின் குடிசனத் தொகையில் சைவமக்களின் விகிதளவு கடந்த காலத்தில் குறைவடைந்தது போன்று மேலும் குறைவடைய இடமுண்டு. இந்தியத் தமிழர் பெருமளவில் தாயகம் திரும்பிக் கொண்டிருப்பதால் சைவ மக்கள் தொகை அதிகரிப்பு குறைந்துள்ளது. இலங்கையில் கருவளத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருப்பதால் சைவர்களின் அதிகரிப்பு குறைவாக இருக்கும். மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் சைவர்களின் விகிதாசாரமும் இந்தியத் தமிழர் வெளியேற்றத்தால் குறைவடைந்து வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் கடந்த 25 வருட காலத்தில் ஏற்பட்ட குடியேற்றத்திட்டங்களினாலும், மத அடிப்படையில் காணப்படும் வள வேறுபாடுகளால் சைவர்களின் விகிதாசாரம் குறைவடைந்துள்ளது. கொழும்பு மாவட்டப் பகுதியிலேயே சைவர்கள் விகிதம் ஓரளவு அதிகரித்துள்ளது. மக்கள் இடம் பெயரியல்பு அதிகரித்துக் கொண்டு வருவதால் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் பல இன மத மக்கள் வாழும் பகுதிகளாக மாறி வருகின்றன. இச் செய் முறை தொடர்ந்து இயங்கக் கூடிய தன்மையைப் பெற்றுள்ளது.

1. Dept. of Census and Statistics, Colombo, 1974; The Population of Sri Lanka. pp. 47-50
2. Ibid pp. 43-47
3. Dept. of Census and Statistics, Colombo, 1972; Census of Population 1971, preliminary release no: I
4. Balasundarampillai, P, The Population Structure of Northern Sri Lanka, 4th IATR. Seminar o Tamil Studies, Jaffna. pp 34-60
—மட்டக்களப்பு பிரதேசத்தின் குடிசனத்தொகைமாற்றங்கள் 1921—1971. தமிழ் ஆராய்ச்சி மகாநாடு மார்ச்சு, 1976, மட்டக்களப்பு
—இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் குடிப்புள்ளியியற் பண்புகள்: ஊற்று, யூலை— ஆகஸ்ட், 1975, பக். 9—12.

# கந்தபுராண கலாசாரம்

— செ. தனபாலசிங்கன் —

கந்த புராணம் கற்பகதரு. அது வேண்டுவோர் வேண்டுவதைக் கொடுத்தது; கொடுக்கின்றது; கொடுக்கப்போகின்றது.

"இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற்று இனிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி அதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேள்
கந்தவேள் புராணந் தன்னை காதலித் தோது வோரே".

அசுரர்களுடைய வலிமையைக் கெடுத்து—அழித்து வாழ்வு கொடுத்த முருகப் பெருமானின் பழங் கதையாகிய கந்த புராணத்தை விரும்பிப் படிப்பவர்கள் இந்தப் பூமியிலே இந்திரர் போல் வாழ்வார்கள்; நினைத்ததெல்லாம் பெறுவார்கள்; ஈற்றிலே முத்திப் பேறும் வந்தடையும். கந்த புராணம் நம் நாட்டிலுள்ள சிவாலயம், விக்னேஸ்வராலயம், சுப்பிரமணியராலயம் போன்ற ஆலயங்களிலும், மடாலயங்களிலும் படித்துப் பொருள் சொல்லப் பெற்று வந்தது. அதனைக் கேட்டோர் மன நிறைவு பெற்று வாழ்ந்தார்கள். இதனால் உயிரின் ஆணவ நோய்க்குக் கந்த புராணம் மருந்து என்பதையும் அதன் திறம் உணர்ந்த சைவச் செந்நெறிச் சான்றோர் அறிந்திருந்தனர்.

கந்த புராணம் பெருங் காப்பிய இலக்கணங்கள் யாவும் பொருந்தியது. அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கையும் விளக்கி, அவற்றைப் பெறும் வழியைக் காட்டுவது; பெரிய புராணத்தைப் போல எம்பிரான் திருவருட் சிறப்பையும், அடியாரது அன்புத் திறத்தையும் கூறுவது; சிவஞான சித்தியாரைப் போல சைவ சமய உண்மையை சொல்லித் தருவது; திருக்கோவையார் போலப் பொருளிலக்கணத்துக்கு இலக்கியமாக ஆன்ம ஈடேற்ற முறையைப் பேசுவது; பாரதம் போலப் பழைய சரித்திரங்களைக் கூறுவது; தேவார திருவாசகங்கள் போலத் திவ்விய தோத்திரங்களைக் கொண்டது. அது அறத்தை நிலைநிறுத்தும்.

தவத்தின் தனிப்பெரும் சிறப்பைச் சொல்லித் தரும்; சிவ உபாசனையின் பெருமையையும், சிவநிந்தையின் கொடுமையையும், உயிர்கள் முத்தி பெறும் முறைமையையும் விளக்கும். சுருக்கமாகச் சொல்லப்புகின், கந்த புராணம் புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து, நவையுறு காட்சி நல்கி, அணுகுவோரை அடிமையாக்கி, இருவினை போக்கிப் பன்னிரு தடந்தோள் வள்ளல் திருவடிகளிற் சேர்ப்பிக்கும். பால் இனித்துக்கொண்டே மருந்தாவது போல கந்த புராணம் இனித்துக்கொண்டே ஆணவ நோய்க்கு அருமருந்தாய்த் தித்திக்கின்றது. செய்யுள் நடையில் சிறந்த பேரிலக்கியமாக விளங்கும் செம்மை சான்ற இந்நூல், முப்போதும் திருமேனி தீண்டும் பேறு பெற்ற கச்சியப்ப சிவாசாரிய அடிகளால், குமர கோட்டத்து இறைவன் உடனிருந்து ஊக்கமளிக்க அருளிச் செய்யப்பெற்றதாகும். ஆறு காண்டமும், நூற்று நாற்பத்தொரு படலமும், பதினாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு (10,346) திருப்பாடல்களும் கொண்டது இந்நூல்.

## தத்துவப் பொருள் :

கந்தபுராணம் சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்ற மூன்று அரக்கர்களையும் நம்முன் கொண்டு வந்து நிறுத்தி முறையே ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்களின் வலிமையை முருகவேள் அடக்கி அருளிய பேருண்மையைக் காட்டித் தருகிறது. பரம் பொருள், ஞான சக்தி, கிரியா சக்தி, இச்சா சக்தி என்ற மூன்று சக்திகளுடனும் கூடியவர் என்ற மற்றோர் உண்மையை முறையே வேல் கொண்டும் தெய்வ யானை, வள்ளி நாயகி என்ற தேவியர் கொண்டும் அறியத்தருவது கந்த புராணம். ஐம்புல வேடர்களிடையே வளர்ந்த ஜீவான்மா பரமான்மாவைச் சென்று அடையும் பெரிய தத்துவத்தை வள்ளி திருமணத்தின் வாயி லாகக் கந்த புராணம் எடுத்து ஓதுவது அற்புதத்தில் அற்புதமாகும். தமிழ் நாட்டில் நிலைபெற்று வந்த கற்பு மணம், களவு மணம் என்ற இருமணத்தின் ஒழுக்கங்களையும் கந்த புராணம் கவின் பெறச் சொல் கின்றது.

சூரன் உலகம் முழுவதையுந் தன்னுடையது என்று எண்ணியவன்; ''நான்'' என்ற அகங்காரம், ''எனது'' என்ற மமகாரம் இரண்டும் அவனிடத்தில் தலை விரித்து ஆடின; எனது என்பதற்குள் ஆயிரத்து எட்டுக்கோடி அண்டங்களை அடக்கி அரசாட்சி செய்தவன்; அதுவும் போதாதென்று தேவேந்திர போகத்தை யும் அகப்படுத்திக்கொள்ள முயன்றவன். அவனுக்கும் அருள் கொடுத்து, அவனைத் தன் வாகனமாகவும், கொடியாகவும் ஆக்கியது கந்தன் கருணை; அகங்கார மமகாரப் பிழம்பாகிய சூரபன்மாவை வசப்படுத்தி, அவனுடைய ஆணவ மலத்தைப் போக்கி அருளிய இப் பேருண்மையைக் கந்த புராணம் பாடுகின்றது:

> '' தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமுன் உற்றால்
> தூயவ ராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
> ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாட்செய்த
> மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள் பெற்று உய்ந்தான்.''

இதனை எத்தனைதரம் பாடினாலும் தகும்! உண்மையில் சூரன் அழிந்தானா? இல்லை; சூரனின் சூரத் துவம் அழிந்தது; அசுரத்துவம் ஒழிந்தது; அசுரத்துவம் அழிவது அமரத்துவம் வளர்வதற்காக என்ற பேருண் மை இங்கே சுடர் விடுகின்றது. தீமை கொடியதே அன்றித் தீயவர்கள் கொடியவர்கள் அல்லர். தீமை அகலத் தூய்மை வராமற் போகாது; இதனைப் படம் பிடித்துக் காட்டுவது கந்தபுராணம்.

நம்மை நோக்கியே கந்த புராணப் பாடல்கள் உபதேசம் செய்கின்றன என்பது தெளிவாக விளங்கு கின்றது. அநுபூதிமான்களின் பாடல்களுக்குள் அநுபவத்தைப் பெறும் பத்தியோடும் பரிவோடும் புகவேண் டும். அப்போது இப்பாடல்கள் நமக்கென்றே சொல்லப்பட்டன என்ற உணர்ச்சி ஓரளவாவது உண்டாகும். உண்டாகவே உள்ளத்தின் நுட்பமான அநுபவ இதழ்கள் மலர்ந்து, மணம் பரப்பி நம்மை மறந்து இந்தப் பாடல்களிலேயே உள்ளம் உருகிக் கரைந்து கண்ணீர் வார நிற்கும் அற்புதமும் நிகழும். இந்த ஆற்றல் இத் தெய்விகப் பாடல்களிலே ஏறுநடை போடுகின்றது. முருகன் திருவருள் கிடைக்குமானால் பிறவி வேரறும்; தலை எழுத்து அழியும்; 'அன்றே அப்போதே வீடு' என்ற உண்மைகளின் சங்கநாதம் கந்த புராணத்திலே முழங்குவதைக் காணலாம்.

## நாவலர் பேச்சில் கந்தபுராணம் :

கந்த புராணத்திலே தனிப்பற்று நாவலர் அவர்களுக்கு இருந்து வந்தது. தம்முடைய இருபத்தாறும் வயதிலே யாழ்ப்பாணத்திலிருந்து தாய்நாட்டுக்குச் சென்றபோது திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை

ஆதீனம் அவரை வரவேற்றது. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரர் சித்தியாருக்கு உரைகண்டவர். அவர் அழைப்பை ஏற்று அங்கே பிரசங்க மழை பொழிந்தார் நாவலர் பெருமான். பேச்சு சித்தாந்தத்தின் சிகர மாய் மிளிர்ந்தது. 'நாவலர், நாவலர்' என்றே வாழ்த்தினர் ஆதீனமவர்கள். சைவ சித்தாந்த உணர்ச்சிக்கு வித்திட்டது கந்த புராணம்; அன்றைக்கு அவர் எழுப்பிய குரல் இதோ:

''இந்தியாவிலே சிவபுராணப் பிரசங்கம் செய்யுங் கோயில்கள் மிக அரியன. இத் தேசத்தில் அது செய்யப்படாத கோயில் இல்லை. இந்தியாவிலோ வித்துவான்கள், சைவசமய குருமார் முதலியோர்களுள்ளும் கந்த புராணம் முதலியன அறிந்தவர் சிலர். இத் தேசத்திலோ பெண்களுள்ளும் அவை அறியாதவர் இலர். இந்து லை விசேடத்துக்குக் காரணம்தான் என்னை எனிற் கூறுதும் :

எத்துணைக்காலம் திருப்பிப் திருப்பிப் படிப்பினுங் கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாது தித்தித்து அமுதூறும் அதியற்புத அதிமதுரத்திவ்விய வாக்காகிய கந்த புராணத்திலுள்ள பதி இலக்கண திருவிருத்தங் களைக் கேட்டல், சிந்தித்தல்களினுலே இவர்கள் உள்ளத்து ஊற்றெடுத்த மெய்யுணர்வேயாம். இந்தக் கந்த புராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள் நோய் நீக்கம், செல்வம், புத்திரபாக்கியம், சத்துருஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாம்தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங் காலம் பலராலும் அநுபவத்தினுல் நிச்சயித்து உணரப்பட்ட விஷயம். இது சத்தியம், முக்காலும் சத்தியம்''.

## கந்தபுராண கலாசாரம் :

கந்த புராணம் மகா சமுத்திரம்; பக்திச்சுவை நலம் பாரிக்கும் பெருநூல்; இன்ப அன்பினை இடை யறுது விளைவிக்கும் ஏற்றம் கொண்ட திருநூல்; சுத்த அத்வைத சைவசித்தாந்தம் துள்ளி விளையாடும் அருள் நூல்; தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் தனிப் பேரரணுகத் திகழும் விறல் நூல்; வேதக் காட்சிக்கும் உபநிடதத்துச்சியில் விரித்த போதக் காட்சிக்கும் எட்டாத பாசஞானம், பசுஞானம் என்பவற்ருல் காண முடியாத முன்னவனின் திருவருளை முழங்கும் மறைநூல். இப் பெருநூலினுல் மலம் அடங்கும்; மனம் கரையும்; அருள் முகிழ்க்கும்.

இப்பெருநூல் நமக்கொரு கலாசாரத்தைத் தேடித் தந்தது. புராணக் கருத்துக்களைச் சிரமேற்கொண்டு வாழ்கின்ற சமுதாயம் கந்த புராணத்தினுல் அன்று நம் நாட்டில் வளர்ந்தது. அப்பொழுது சைவாலயங்கள் தமிழும் சைவமும் வளரும் சர்வகலாசாலைகள் ஆயின. யாழ்ப்பாணத்தில் கந்த புராணம் பேசும் சைவ சித்தாந்த கலாசாரம் வளர்ந்தது. உபதேசப்படலம் தக்கனுக்குப் பிரமா உபதேசம்; அங்கே ஒரு பாடல்,

''அவன்அருள் பெருது முத்தி அடைந்தனர் இல்லை அல்லால்
அவன்அருள் இன்றி வாழும் அமரரும் யாரும் இல்லை
அவன்அருள் எய்தின் எய்தா அரும் பொருள் இல்லை ஆனை
அவன்அலது இறைவன் இல்லை அவனை நீ அடைதி என்ருன்.''

இந்தப் பாடல் அன்று நம்மவர் இரத்தத்திலே ஊறி, இருதயத்திலே ஊறி அடித்தது. ஆனுல், இன்று நம்முடைய நாடி நாம்புகளில் புராண இதிகாச இரத்தம் இல்லை என்று தான் சொல்லத் தோன்று கிறது.

''கிருதயுகத்திலே நான்கு கால்களையும், திரேதாயுகத்திலே மூன்று கால்களையும், துவாபரயுகத்திலே இரண்டு கால்களையும், கலியுகத்திலே ஒரு காலையும் இந்தப் பூமியில் ஊன்றி நடக்குக'' என்று தருமதேவதை யாகிய இடபத்துக்கு இறைவன் திருவருள் புரிந்தார். ஆனுல், இன்று தரும தேவதை அந்த ஒரு காலைத் தானும் ஊன்றி நடக்க இந்தப் பூமியில் இடம் இல்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. காரணம் என்ன? கந்த புராண கலாசாரம் வளராத குறை! வையத்துள் வாழ்வாங்கு வழி காட்டுங் கந்த புராண கலாசாரம் நம்மிடையே வளரவேண்டும்!

நமது சமயம் சைவம் எனப்படுவது. இது சிவ நெறி—அருள் நெறி—ஆகம நெறி எனவும் பேசப் படுவது; கந்த புராண கலாசாரத்துக்கு வித்திட்ட நெறியும் இதுவேயாம். அந்தக் கலாசாரத்தின் அருமை பெருமைகளை யாம் அறியாமைக்குக் காரணம்;

"முந்தொரு காலத்தில் மூவுலகந் தன்னில்
வந்திடும் உயிர்செய்த வல்வினை அதனுலே
அந்தமில் மறைஎல்லாம் அடிதலை தடுமாறிச்
சிந்திட முனிவோருந் தேவரும் மருள்கிஞர்."

என்ற கந்த புராணத்துப் பாடலை ஒரளவு சிந்திக்கின் நன்கு புலப்படும். இனியேனும் நமது கலாசாரம் கந்த புராண கலாசாரம் என்பதனை உணர்ந்து அதனைப் பேணும் முறையிற் பேணி உய்தி பெறுவோமாக!

வாழ்க சிவநெறி! வாழ்க செந்தமிழ்! வாழ்க கந்தபுராண கலாசாரம்!

# திருநீற்றின் பெருமை

— சிவச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி —

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே"

திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருநீற்றுப் பதிகம் காலை மாலை ஓதுதற்குரியது. அது திருநீற்றின் பெருமையைச் சிறப்புற விளக்குவது. நம்மிடம் வந்தணுகும் தீவினை அனைத்தையும் நீறுபோற் பொடியாக்கிவிடுவது திரு நீறு. ஒப்பற்ற முத்திச் செல்வத்தை நல்குவதால் விபூதியென் றும், உயிர்களின் மலமாசுகளைப் போக்குவதாற் சாரம் என்றும், தெய்வ ஒளியைத் தருவதாற் பசிதம் என்றும் இதற்குப் பெயர்கள் உள.

விபூதியும் உருத்திராக்கமும் சிவ சின்னங்கள் எனப்படுவன. இவற்றை அணிவதால் நம்மை நாமே புனிதப்படுத்துகிறேம். அகத்தும் புறத்தும் இத்தூய்மை விளங்கும். அதுவே முகத்திலொளியைக் கொடுக் கும். 'நீறில்லா நெற்றிபாழ்' என்ருர் ஒளவையார். காண இனியதும் கவினைத்தருவதும் இதுவேயாம். சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான் வெண்ணீறு சண்ணித்த மேனியனுகக் காட்சி தருபவன். இவன்,

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி"

என்று கூறும் திருச்சாழல்.

மானிடப் பிறவி எடுத்த நாம் ஒவ்வொருவரும் நோய்வாய்ப்பட்டவர்களே. உடல் நோய், உளநோய், உயிர் நோய் என மூவகை நோய்கள் நமக்குள. இவற்றிலிருந்து விடுபடும் மார்க்கத்தை விளக்கி நிற்பதே சமயமாகும். எமது சமயமாகிய சைவம், பிறவி நோயைப் போக்கும் விதிகளைக் கற்பிக்கிறது. அதுவே உடல் உள நோய்க்கும் மாற்று மருந்தாக வழிபாடுகளைக் காட்டுகிறது. இவற்றிலெல்லாம் பேசப்படுவது நீற்றினது பெருமையேயாகும்.

எமது பிறவி நோயை மாற்றி முத்திப் பேற்றைக் கொடுப்பதற்காக எம்பெருமான் வெண்ணீற ணிந்து விளங்குகின்ருன். சர்வ சங்கார காலமென்னும் பேரூழிக் காலத்தில் உலகமெல்லாம் அழிந்துவிடும். சிவபெருமான் ஒருவரே தனித்து நிற்பவர். எல்லாவற்றையும் சுட்டெரித்துத் தம் முன் அவற்றை ஒடுக்கும்

செய்து, அதன் சாம்பலைத் தம் மீது பூசிக் கொள்வர். "காடுடைய சுடலைப் பொடி பூசி" என்று ஞானசம்பந்தர் குறிப்பிடுவது இதுவேயாம். ஆன்மாக்களின் வினைகளகல வேண்டுமென்றெண்ணியே, அவன் நீறணி பவளக் குன்றாய் நிற்கின்றான்.

''தொழுது எழுவார் வினைவளம் நீறெழ
நீறணி அம்பலவன்''

என்னும் திருக்கோவைத் தொடர் இதனை வலியுறுத்துகின்றது. சங்கார காலத்தில் இறைவன் விபூதி அணிந்து கொள்கிறான். எனினும் அதற்கு முன்பேயும் அவனது திருமேனியில் துலங்குகின்ற விபூதி தானே பூத்த நீறாகும். ஏன்? எரிபோல் மேனிப்பிரான் அவன் என்று தானே திருமுறை கூறுகின்றது. நெருப்பின் மீது நீறு பூக்கும். அந்த நீறு எந்நேரமும் அவன் மேனி மேல் காட்சித்தருவது. 'ஆதிபகவன் ஞான அழலிற் பூத்து நித்தியமாய் அணிந்தோர் தமக்கு வசீகரமாய் அருந்தினோர்கட்காரமுதாய்' விளங்குவது அவன் மேனியிற் பூத்த வெண்ணீறாகும். அழித்தலைக் காட்டி நிற்கும் விபூதி ஆதி விபூதி என்றும், படைத்தலைக் காட்டும் விபூதி அநாதி விபூதி என்றும் பேசப்படுகிறது.

விபூதி யாவது யாது? என்ற வினாவுக்குப் ''பசுவின் சாணத்தை அக்கினியாலே சுடுதலால் உண்டாகிய திரு நீறு'' என்று விடைதருகிறார் நாவலர் பெருமான். சிவபரம்பொருளுக்கும் பசுக்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பெருமானுக்கு என்றுமே பணி செய்து நிற்பது இடபம். தரும தேவதையே இடபமாகத் தாங்கிநிற்கிறது என்பர் புராணகாரர். இடபத்தின் வழி வந்தவையே பசுக்கூட்டங்கள். இடபதேவர் திருக்கயிலையில் இருந்த காலத்தில் அங்கு ஐந்து பசுக்கள் வாழ்ந்தன. அவையாவன சிவப்பு நிறமுள்ள சுமுனை, வெண்ணிறமான சுரபி, கபில நிறமுள்ள நந்தை, புகை நிறமுள்ள சுசீலை, கரு நிறமுள்ள சுபத்திரை என்பனவாகும். கோசலம், கோமயம் பால், தயிர், நெய் என்னும் பஞ்சகவ்வியம் அளிப்பதற்காக அவை உலகுக்கு அனுப்பப்பட்டவை. அவை பாற்கடலிலிருந்து உதித்தவை. இப்போது எம் மத்தியில் வாழும் பசுக்களும் அந்தவழி வழியாகவே வந்தவையாகும. அதனாற்றான் அவை தெய்வத் தன்மை யுடையனவாகப் போற்றப்படுகின்றன. இத்தகைய பசுக்களின் கோமயம் (சாணம்) மந்திரங்களின் மூலம் சிவாக்கினியால் தகிக்கப்பட்டபின் நமக்குத் திருநீறாகக் கிடைக்கிறது.

''இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில்
நின்ற மலமனைத்தும் நீக்குவதிங் — கென்றால்
உருவுடையான் அன்றே உருவழியப் பாயும்
உருவருள வல்லான் உரை''

என்பது திருக்களிற்றுப்படியார் தரும் கருத்தாகும்.

திருநீற்றின் பெருமையை மேலும் மிகச் சிறந்த முறையில் எடுத்து விளக்குவது பெரிய புராணம். திருக்கூட்டச் சிறப்பைக் காட்ட வந்த விடத்தில்,

''மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்கள்''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தடுத்தாட்கொண்ட புராணப் பகுதியில் சந்திரோதயங் காட்டப்படுகிறது. அங்கு மன்னுயிர்கள் தூய்மை, இன்பம், தண்மை என்னும் பண்படைய வேண்டுமானால் அவற்றிற்குதவுவது வெண்ணீற்றுச் செல்வமே எனப்படுகிறது. அத்தகைய வெண்ணீற்றிெனொளி போன்று நிலவினொளி வீசி உலகை மகிழ்வித்தது என்று கூறி மலமாசை அகற்றுவதால் தூய்மையைத் தருவதென்றும், வேண்டியதனைத்தும் நல்குஞ் சிவசின்னமாகையால் இன்பத்தை விளைவிப்பதென்றும், வெம்மை தவிர்ப்பதால் தண்மை நல்குவதென்றும் உய்த்துணர வைக்கின்றார் சேக்கிழார் பெருமான்.

"தோற்றும் மன்னுயிர்கட் கெல்லாந் தூய்மையே
சாற்றும் இன்பமுந் தண்மையுந் தந்துபோய்
ஆற்ற அண்டமெலாம் பரந்தண்ணல் வெண்
ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா"

என்பது அப் பெரிய புராணம்.

திரு நீறு பூசிய மேனியினர்க்கு ஏதஞ் செய்யார் ஏனாதிநாத நாயனார் என்பதை யறிந்திருந்த அதிசூரன், கபடவேடம் பூண்டு போர்க்களஞ் செல்கிறான்; காணுகின்றார் நாயனார். கையிலே வாள் தாங்கி நின்ற அவர் வாளைக் கீழே போடுகிறார்; எதிரியை ஓடிச் சென்று பணிய அவாவுகிறார். "முன்னெப்போதுங் காணப்படாத விபூதி இன்று இவன் நெற்றியில் காணப்படுகிறதே" என்று வியப்படைகிறார்; உடனே நினைவு மாறுகிறது. தன்கைவாள் நழுவினாலும் பகைவன் படையோடு நிற்கிறான் என்பதையும் தன்னைக் கொல்வதே அவன் குறிக்கோளாக இருக்குமென்பதையும் உணர்ந்து வாளைக் கையிலெடுத்து வைத்துக் கொண்டு வாளா நிற்கிறார். ஏனெனில் கையில் படையில்லாதவரைக் கொன்ற பழி திருநீறு பூசியவனுக்கு வரக் கூடாது என்பதற்காகவே இந்நிலையை மேற்கொண்டார் என்பர் அருண்மொழியார். உடனேயே முன்னின்ற பாதகனும் தன் கருத்து முற்றுவித்தான். இந்நிகழ்ச்சியில் பகைமையையே மாற்று நிற்கிறது அந்தத் திரு நீற்றுக் காட்சி என்பதை நாயனார் செயலிற் காண்கிறோம்.

அரசராகிய சேரமான் பெருமாள் நாயனார் தன்னெதிரே வந்த வண்ணானையே கண்டு வணங்க வைத்தது இத்திருநீறே. உவர்ப்பொதி சுமந்து வந்த அன்னவன் மழையில் நனைந்ததனால், உடம்பு முழுவதும் திருநீறு பூசியவன் போல் காட்சியளித்தான். இதனை,

"மழையிற் கரைந்தங் குவருறி
மேனி வெளுத்த வடிவினால்
உழையிற் பொலிந்த திருக்கரத்தார்
அடியார் வேடம் என்றுணர்ந்தே
இழையிற் சிறந்த ஓடை நுதல்
யானைக் கழுத்தின் நின் றிழிந்து
விழைவிற் பெருகும் காதலினால்
விரைந்து சென்று கைதொழுதார்"

எனத் திருத்தொண்டர் புராணம் கூறும்.

அஞ்சினான் வண்ணான்; அடிவண்ணான் என்று ஒதுங்கினான்; அஞ்சேலென்று சைகை காட்டினார் அடியார். ஏன்? திருநீற்றை நினைக்கச் செய்து விட்டானேயென்ற பெருமிதம். இப்பக்குவம் எவ்வளவு ஆழமான பக்தியையும், ஒடுக்கத்தையும் அடிமைத் திறத்தையும் நம்மவர்க்கு ஒருங்குணர்த்துகின்றது.

சேரர் பெருமான் தொழக்கண்டு
சிந்தை கலங்கி முன்வணங்கி
யாரென் றடியே னைக்கொண் டதடியேன்
அடிவண் ணானெனச்
சேரர் பிரானும் அடிச் சேரன் அடியேன்
என்று திரு நீற்றின்
வார வேடம் நினைப் பித்தீர் வருந்தா
தேகும் என மொழிந்தார்."

சிவபெருமான் திருநாவுக்கரசப் பெருமானைச் சூலை கொடுத்துத் தடுத்தாட் கொண்டபோது, திலக வதியார் திருநீறளித்து நின்றார். பெரு வாழ்வு வந்தது என்று பணிந்து ஏற்று அணிந்தார் அப்பர் சுவாமி கள். இது "திருவாளன் திருநீறு" என்று அங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. மீண்டும் போற்றி அணியத் தொடங்கிய அன்று தொட்டு அவர் வாழ்வு பெரு வாழ்வாகவே அமைந்தமை யாவரும் அறிந்ததே. நீறணிந் தார் அகத்திருளும் நிறை கங்குற் புறத்திருளும் மாறவரும் திருப்பள்ளி எழுச்சியினில் என்றும் சேக்கிழார் பெருமான் அழகாகக் காட்டுகிறார்.

பாண்டியனுக்குற்ற வெப்பு நோயை மாற்றியது வெண்ணீறு; இதுவே மந்திரமும் மருந்து மாகித் தீர்க்கு மென்று திருப்பதிகம் பாடினூர் சம்பந்தர். திருவளர் நீறு கொண்டு திருக்கையால் தடவினுர்; அன்னவன் வலப்பால் வெப்பு மாறிப் பொய்கை போற் குளிர்ந்தது. திருநீற்றுப் பதிகம் இச்சந்தர்ப்பத்திலேயே பாடப்பட்டதாகும். திருநீறு பற்றி அவர் தரும் விளக்கம் எமது உள்ளத்தைத் தொடுகிறது. ''திருநீருனது, மந்திரமாகவும் தந்திரமாகவும் சுர்தரமாகவும் வானவர் மேலதாகவும் துதிக்கப்படுவதாகவும் உள்ளது. இதுவே முத்தி, பத்தி, சித்தி, ஆகிய மூன்றையும் தருவதுமாம். இதனுலேயே எட்டுத் திக்கிலுள்ளவரும் திருநீற்றை ஏத்திப்புகழ்கின்றனர்'' என்று இவ்வாறு பொருள் பொதியப் பத்துப் பாடல்கள் பாடிப் பதிஞெராம் பாடலில் இந்தத் திருநீற்றுப் பதிகப் பத்துப் பாடல்களையும் சொல்ல வல்லவர் உலகில் நல்லவர்களாக வாழ்வர் என்று திருக்கடைக் காப்புச் சொல்லிமுடிக்கிருர்.

உபநிடதங்களில் திருநீறில்லாத நெற்றியை சுடு என்றும், சிவாலயமில்லாத ஊரை கொளுத்து என்றும் கூறப்பட்டுள்ளது.

திருமூலர் திருமந்திரத்திலும் கங்காளன் பூசும் கவசத்திருநீற்றை மங்காமற் பூசி மகிழ்வோருக்கு வினை யகன்று சிவநெறி சார்வார் எனப் பாடியுள்ளார்.

எனவே வேதங்கள், உபநிடதங்கள், திரு முறைகள் என்பவற்ருற் போற்றப்படும் திருநீறு சைவமக்களுக்குச் சிறப்பான சிவசின்னமாகும். இதனைச் சைவப் பெருமக்கள் அணிந்து உய்தி பெற வேண்டும்.

# பிறவிப்பிணி

— கோ. ஆழ்வாப்பிள்ளை —

அனுதியாகிய ஆன்மா, அனுதியான இறைவனுக்கு, அனுதி காலத்திருந்தே அடிமைப்பட்டுள்ளதென்பது சைவ சமூகத்தில் தோன்றிய முனிவர்களும் இருடிகளும் நாயன்மாரும் கண்ட முடிபு. இந்து மதம், வைதீக தர்மம், சனுதன தர்மம் எனப் பலபடக் கூறப்பட்டபோதிலும், இவை யெல்லாம் கல்தோன்றி மண்தோன்ருக் காலத்திலிருந்து நிலவி வருவதும் மறு மதங்களுக்கெல்லாம் தாயகமாயுள்ளதுமான சைவ மதத்தையே குறிப்பன. சில கொள்கை பேதங்கள் காணப்படினும் சைவசித்தாந்தம் எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கி சமயாதீதப் பொருளை எட்டி நிற்கின்றது. ''உண்மை ஒன்றே அதைப் பலபடக் கூறுவர் ஞானியர்'' என்ற இருக்கு வேத வாக்கியத்தில் அறிஞர் சமாதானம் காண்பர்.

முப்பொருள் உண்மையை நிலை நாட்டிய பெருமை சித்தாந்தத்துக்குரியது. இறைவனேடு ஆன்மாவும் நித்தியப் பொருள் எனபதோடு, இவ்விரு பொருள்களை இடையிட்டிருக்கும் ஆண்டான் அடிமைத் தொடர்பையும் சித்தாந்தம் வலியுறுத்தும். ''இரும்பு நேர் நெஞ்சகக் கள்வனேயானுலும் உன்னை இடை விட்டு நின்ற துண்டோ, என்று நீ அன்று நான் உன்னடிமை யல்லவோ'' என விண்ணப்பிக்கின்ருர் தாயுமான சுவாமிகள். இந்த அடிமைநிலையையும் இறைவனை அடைய வேண்டுமென்ற அதன் இலட்சியத்தையும் உணராதிருக்கும் வகை அவித்தை அல்லது அறியாமை என்ற இருள் ஆன்மாவை மறைப்பதாகும். இவ்விருளைப் போக்கும் ஒளியை ஆன்மா தன் முயற்சியாலும் இறைவன் உதவியாலும் பெற வேண்டிய காரணத்தினுல் பிறவி நிகழ்கின்றது. அதன் முயற்சிக்குத் துணையாக தநுகரண புவன போகங்களை இறைவன் வழங்குகிருன். ஆனுல், ஆணவம், கன்மம், மாயை ஆதிய மலச் சேர்க்கை காரணத்தினுல், ஆன்மாவின் அறிவு, இச்சை, செயலாவன களங்கப்பட்டு, தநு வாதிகள் துர்ப்பிரயோகத்துக்குள்ளாகி, பிறவியில் இன்பத்தோடு துன்பமும் நிகழ்கின்றது. இவற்ருல் கன்மமலம் அதிகரிக்கப் பிறவியும் மீண்டும் நிகழும். எனவே பசுவின், அதாவது ஆன்மாவின், அறிவு, இச்சை, செயலெல்லாம் நீங்கப் பெற்று, யான் எனதென்னும் செருக்கு அறப் பெற்று, ஆணவமுனைப்பு ஒடுங்கப்பெற்ற, பசு கரணங்களெல்லாம் பதிகரணங்களாகப் பெற்று, பதியின் அறிவு இச்சை செயல்கள் பசுவைச் சேர்ந்து பொருந்தும்படி செய்தலே பசுவின் வீடு பேற்றுக்கு ஒரே மார்க்கமென நம் ஞானிகளும் நாயன்மார்களும் வற்புறுத்திப் போந்தனர்.

இங்கே இக வாழ்க்கையின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் குறித்துச் சைவத்துக்கும் வேறு சில மதங்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் காண்கின்றோம். இன்பாநுபவங்களை விழைவதும் துன்பங்களை ஒழிப்பதுமே வாழ்க்கையின் நோக்கமெனப் போதிக்கும் சில மதங்கள். ஆனால் சைவமோ ''பேறிழவு இன்பமொடு பிணி மூப்புச்சாக்காடு, ஆறு முன் கருவுட்பட்டது'' என்ற கொள்கையிலே, இன்ப துன்பங்கள் வினையால் வருபவை, ஆதலின் இவற்றைப் பொருட்டாகக் கருதாமல், வினையை யொழித்து ஈறுதல் வினையால் வரும் பிறவியையும் ஒழிப்பதே ஆன்ம இலட்சியமாயும் வாழ்க்கையின் நோக்கமாயும் அமையுமென ஆணித்தரமாகக் காட்டும். எனவே மும்மலங்களினின்று விடுபடுவதற்கு ஆதியில் பிறவி வேண்டப்படுமெனினும், பிறவி ஒரு பிணி யென்றே கொள்ளப் பட்டது. பிணி மூப்புச்சாக்காடாகிய துன்பங்கள் உயிர் சார்ந்திருக்கும் உடம்புக்குரியன. ''வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய்'' என்பது ஆன்றோர் வாக்கு. இத்துன்பங்கள் உயிரையும் பாதிக்காமலில்லை, அது பற்றியே பிறவிக்கும் வினைக்குமுள்ள தொடர்பைச் சைவமகான்கள் நிர்ணயித்தனர். இத்தொடர்பைத் தெள்ளத்தெளிய உரைக்கும் குமர குருபரர் பாடல் பின் வருமாறு:

''படர்தரும் வெவ்வினைத் தொடர்பால் பவத்தொடர்பு
அப்பவத் தொடர்பால் படரா நிற்கும்
விடலரும் வெவ்வினைத் தொடர்பு அவ்வினைத தொடர்புக்கு
ஒழிவுண்டோ வினையேற்கம்மா.''

எனவே ஆணவ மலத்திலின்று விடுபடுவதற்குக் கன்மமும் மாயையும் துணை புரிவன. ஆனால் ''இருவினை இன்பதுன்பத்து இவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாகும்'' என்றபடி பிறவி மீண்டும் நிகழ்வதற்குக் காரணமாவதும் கன்மமே.

பிறவியைப் பாதிக்கும் இழுக்குகளில் மிகக் கொடியதும் வேதனை தருவதுமானது சாக்காடு. நல்வினைகளைப் புரிந்து இறைவனைப் பக்தி செய்தால், இறை காட்சி கைவரப்பெறும் சந்தர்ப்பத்திலே ''மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' எனப் பிறவியை வியக்கின்றார் அப்பரடிகள். ஆனால் அப்பரடிகளே பிறவியின் இழிவையும் ஆணித்தரமாக விளக்குகிறார். அந்தப்பாசுரம் பின் வருமாறு: பிறத்தலும், பிறர்தாற் பிணிப்படவாய்ந்தசைந்துடலம் புகுந்து நின்று இறக்குமாறுளதே இழிந்தேன் பிறப்பினை நான், அறத்தையே புரிந்த மனத்தனாய் ஆர்வச்செற்றக்குரோத நீக்கியுன் திறத்தனாய் ஒழிந்தேன் திருவாரூர் அம்மானே'' நம் பொருளிலக்கியங்களிலும் அருளிலக்கியங்களிலும் வேறு பல அடைகளுடனும் பிறவி அழைக்கப்படுகின்றது. நோய், கடல், பௌவம், துயர், தொடக்கு என்றெல்லாம் கூறப்படுகின்றது. பிறவி இழிந்தது, வேண்டப்படாதது, வெறுத்தற்குரியது, ஒழிக்கப்படவேண்டியது என்ற கொள்கை சைவத்தோத்திர சாஸ்திரங்களில் விளக்கம் பெறுகிறது. அத்தோடு இப்பிணிக்கு மருந்தையும் ஐயந்திரிபற இவை எமக்கு விரித்துரைக்கின்றன. இறைவன் கருணைப்பிரவாகத்தில் தோய்ந்து, அவனால் ஆட்கொள்ளப்படுவது, பிறவியையும் வினைகளையும் ஒழிப்பதற்கு ஒரேயொரு வழி. அவன் அருள் எல்லார் மட்டும் செல்லுமாயினும் அறவழி நின்று, சாதனைகள் புரிந்து, இடையறாமல் பக்தி செய்து, தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்பவர்மாட்டே தானே அது வெளிப்படுகின்றது. இவ்வுண்மையை நம் நாயன்மார்களுடைய வாழ்க்கையிலும் உபதேசங்களிலும் காண்கின்றோம். தூய இறைபக்தியின் தன்மையை அருமையாக வர்ணிக்கின்றார் மணிவாசகப் பெருமான். அவர் பாடல் பின்வருமாறு:

''இருத்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை என்னினல்லால்
விருத்தினனேனை விடுதிகண்டாய் மிக்கநஞ் சமுதா
அருந்தினனே மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே
மருந்தினனே பிறவிப்பிணிப்பட்டு மடங்கினர்க்கே''

இறைவனைப் பக்தி செய்து, தம் வினையெல்லாம் ஒழியப்பெற்று, பிறவியை ஒழித்து, இறைவனடி சேர்ந்தவர்கள் சைவப் பரம்பரையில் பலர். இவர்கள் உலக வாழ்க்கையிலிருந்து முற்றும் ஒதுங்கினவர் அல்லர். ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும், எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை'' என்பதற்கேற்ப இவ்வுலகில் நடமாடியவர்கள் பக்தியை வளர்க்கும் அறம், அன்பு, அருளென்னும் பண்புகளால் தம் வாழ்க்கையை நிரப்பியவர்கள். பிறரிடம் அன்பு காட்டினால்தான் இறைவனிடம் அன்பு வளரும் பிறரிடம் அருள் நோக்கு இருந்தாலே இறைவன் அருளுக்குப் பாத்தியப்படலாம். அத்தோடு இறைவழிபாட்டை இறையன்பை வளர்க்கும் ஒரு முக்கிய சாதனமாய்க் கண்டார்கள். இறைவழிபாட்டில் சிறந்த முறை கோயில்வழிபாடு. பக்திமார்க்கத்தில் நான்கு படிகளை வகுத்து இறைவன் மேல் பக்தியைப் பெருக்கும் சாதனைகளை சரியா கிரியா ஒழுக்கங்களில் நம் நாயன்மார்கள் வைத்தார்கள். கோயில் கட்டல் கோயிலைப்

புனர் உத்தாரணம் செய்தல், விழா நடத்தல், இறைவன் புகழைப் பாடுதல், அவன் உருவத்திருமேனியைப் பூசித்தல் ஆகியவை சரியை கிரியைகளிலடங்கும். இருவினையும் ஒய்ந்தால்தான் பிறப்பு அறும். ஆனால் தீவினையைப் போக்குவதற்கு நல்வினை உதவும். இறைவனைக் கோயிலில் பிரதிஷ்டை செய்து வணங்கி வந்தால் பக்திபெருகுவதோடு நல்வினைச் செய்கை தூண்டப்படும்.

யாதொருகோயில் திருப்பணி நிறைவேறுங்கால அக்கோயில் மூர்த்திகளையந் திருமஞ்சனம்செய்து அலங்கரித்து வழிபடுங்கால் அவர் விசேட அருள் பக்தர் மேல் பதியும் என்ற நம்பிக்கையில் கும்பாபிஷேகம் வழிபாட்டு முறையாகக் கருதப்பட்டு வந்தது. ஆலய வழிபாடு பண்டைவினைகளைக் களைவதற்குச் சாதகமாய் அமையுமென நம் நாயன்மார்கள் போதித்ததோடு தாமே தலங்கள் தோறும் சென்று இறைவனைத் தரிசித்துப் பதிகங்கள் பாடினார்கள்.

# ஈழநாட்டுச் சைவக்கிரியைகளும் சடங்குகளும்

— சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் —

அநாதி முத்த சித்துவாகிய பரமசிவன், ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்ந்து கடைத்தேற வேண்டும் என்னும் பெருங்கருணைத் திறத்தினால் திருவாய் மலர்ந்தருளிய முதனூல்கள் வேத சிவாகமங்களாம். இவ்விருவகை நூல்களிலும் கூறப்பட்ட விதிகளுக்கமையவே மனிதன் பண்டுதொட்டுத் தன் இகபரவாழ்வுக்கு வேண்டிய கருமங்களைச் செய்து வருகிறான்.

பாரதத்தைத் தாயகமாகக் கொண்டு, ஈழ மணித் திரு நாட்டிற் புகுந்த, இந்து சமயம் என்ற பெருநதியானது சைவம், சாக்தம், வைணவம், காணபதம், கௌமாரம், சௌரம் என்னும் ஆறுகிளைகளை உடையது. இவ்வாறு கிளைகளும் எம் நாட்டிலேதான் அவற்றின் தனித்துவம் கெடாது பேணிக்காக்கப்பட்டும், ஒன்றுக்கொன்று போட்டி பூசலின்றி ஒருங்கிணைந்தும் அனுட்டிக்கப்பட்டும் வருகின்றன. இது ஈழநாட்டிற்குரிய ஒரு தனிப் பெருமை.

வேதத்தை ஓதவும், ஓதுவிக்கவும் அதிகாரிகளாயுள்ளோர் அதன் பகுதிகளாகிய சங்கிதை, பிராம்மணம், ஆரண்யகம், உபநிடதம் என்பவற்றைப் பயின்று தத்தம் கோத்திரம், சூத்திரம் என்பவற்றுக்கேற்ப, அவற்றில் விதிக்கப்பட்ட சடங்குகளையும், கிரியைகளையும் இம்மியும் வழுவாது அவ்வவற்றுக்கு விதிக்கப்பட்ட காலங்களில் நிறைவேற்றி, அவற்றின் பயனைப் பெறுகின்றார்கள். அவற்றுள் முக்கியமானவைகளாகக் கர்ப்பாதானம், பும்ஸவனம், சீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப் பிராசனம், உபநயனம் (தீக்ஷை), விவாகம் என்பவற்றைக் கூறலாம். தாம் தாம் முன்செய்த வினைகளைப் பூர்தாமரையோன் பொறிவழியே பிறவி எடுத்து அனுபவிப்பனவாகிய ஆன்மாக்கள் தத்தம் தாய், தந்தையர் வழியாக எய்திய பாவங்களைப் பரிபரிக்கவே எரியோம்பலாகிய கிரியைகளுடன் கூடிய இச்சடங்குகளைச் செய்கிறார்கள். இவை அவர்கள் உடற்குற்றங்களை நீக்கவும், ஆன்ம விருத்திக்காகவுஞ் செய்யப்படுபவை.

கன்மத்துக்கீடாகப் பிறவி எடுக்கும் ஆன்மாக்களுள்ளே ஆறறிவு படைத்த மக்கட் தொகுதினர் தம் வாணாளில் இறுக்க வேண்டிய கடன்கள் நான்கு. அவர்கள் அக்கடனிலிருந்து தப்பவே முடியாது. அவைதாம் தேவர் கடன், முனிவர் கடன், பிதிரர் கடன், மனிதர் கடன் என்பன. அவற்றுள் தேவர் கடன், திருக்கோவில் வழிபாடு, ஆலயங்கள் சமைத்தல், திருக்கோவில் வழிபாடு, திருத் தொண்டுகள், புராண படனம் என்பவற்றினாலும், முனிவர் கடன், இருடிகளுக்குச் செய்யப்படுந் தர்ப்பணங்கள், ஜபம், தியானம் என்பவற்றினாலும் பிதிரர் கடன் அற நெறிப்பட்ட இல்லறவாழ்க்கை, ஆண்டுதோறுஞ் செய்யப்படும் மகாளயம், சிராத்தம், புண்ணிய காலங்களில் செய்யப்படும் நீர்க்கடன் என்பவற்றினாலும், மனிதர் கடன் விருந்தோம்பல், சுற்றம் பேணல் என்பவற்றின் மூலமும் இறுக்கப்படுவன. இவை எல்லா வருணத்தார்க்குமுரியவை.

முதற்கண் கூறப்பட்ட தேவர்கடன் எல்லாவருணத்தார்க்கும், எல்லா ஆச்சிரமத்தினர்க்கும், உரியவை. அவர்கள் இக பர நலன்களை அடைதற்காகவே திருக்கோவில் வழிபாடு விதிக்கப்பட்டது. இத் திருக் கோவில்களைப் பற்றி விசேடித்துக் கூறுவன சிவாகமங்கள். அவ்விதி நூல்களிற் கூறப்பட்டவாறு சிற்ப சாத்திர இலக்கண நுணுக்கங்களுக்கமைய ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டன. வேத காலங்களின் பின்னர் காணப்படும் ''தோன்று கோயிலும், தோற்றிய கோயிலும்'' காமிகம் முதலாகி ஆகம விதிகளுக்கமைய எழுந்தவையேயாம்.

குருலிங்க சங்கமம் ஆகிய மூவகைத் திருமேனிகளிடத்திலும் எழுந்தருளி நின்று ஆன்ம கோடிகளுக்கு அருள் செய்யும் இறை, சர்வான்மாக்களுக்குந் திருவருள் சுரக்க வேண்டி, இரண்டாவதாகக் கூறப்பட்ட இலிங்க வடிவிலேயே திருக்கோவில்களில் சாந்நித்தியராய் எழுந்தருளி இருக்கின்றான். இத்தகைய இலிங்கங் களிலும், பிம்பங்களிலுஞ் செய்யப்படும் மந்திரம், கிரியை, பாவனை என்பவற்றோடு கூடிய வழிபாடே ஆன்மாக்கள் தருமம், அருத்தம், காமம், மோட்சம் என்பவற்றை அடைய உதவுவன. அவைதாமும் சைவ நாற்பாதங்களுள் சரியை, கிரியை என்னும் இரண்டின் மூலமும் எய்தற்பாலன. மிகவும் அரிதிற் கிடைத்த இம்மானிட சன்மத்தில் இவையிரண்டும் மிக இன்றியமையாதன என நூல்கள் விதந்தோதுகின்றன.

ஆலயங்களிற் செய்யப்படும் கிரியைகள் முப்பெரும் பிரிவினுள் அடங்கும்; அவை கர்ஷணாதி பிரதிட்டாந்தம், பிரதிட்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச் சித்தாந்தம் என்பன. அவற்றுள் முதலாவது ஆலயமில்லாவிடத்து புதிதாக ஆலயம் (தோன்று கோவில்) சமைக்கத் தொடங்கும் கால் நிலத்திலுள்ள அசுத்தங்களை நீக்குவதற்கு அவ்விடத்தை உழுதல் (கர்ஷணம்) முதலிய கிரியைகளைச் செய்து திருக் கோவிலை எழுப்பி மூர்த்தியைப் பிரதிட்டை செய்யும் வரையுள்ள கிரியைகளைக் குறிக்கும்; இரண்டாவது, கோவில் குடமுழுக்கு முடிந்ததும் ஆங்கு தினமும் நடக்கும் நித்தியக் கிரியைகளும் விசேட தினங்களில் நடக் கும் நைமித்திக கிரியைகளும் நாட்டுக்கு நன்மை வேண்டிச் செய்யப்படும் காமிகக் கிரியைகளும், அலங்கார உற்சவம், விசேட தினங்களில் இறைவன் திருவுலாக் கொண்டருளும் நிகழ்ச்சிகளுமாம்; மூன்றாவது, வருடந்தோறு ஆலயத்தில் இறைவனது பஞ்சகிருத்திய நடனத்தை (ஐந்தொழிலாடல்) விளக்கும் (கொடி யேற்றம், தேர், தீர்த்தம்) மஹோற்சவக் கிரியைகளும் அவற்றின் முடிவில் நடைபெறும் பிராயச்சித்தம் என்பனவுமாம்.

புராணேதிகாச காலங்களிலே விநாயக சதுர்த்தி விரதம், விநாயக சட்டி விரதம், கேதார கௌரி விரதம், வரலக்ஷ்மி விரதம், நவராத்திரி விரதம், சத்திய நாராயண விரதம் முதலிய விரதங்கள் யாவும் இல்லங்களிலேயே அவ்வப் பிரதிமைகளைச் செய்து புரோகிதரை அழைத்துப் பூசை முதலியன செய்வித்துப் பூசித்த விக்கிரகத்துடன் தக்ஷிணை முதலியன கொடுத்து உபசரிப்பதே முறையாக இருந்தது. ஆனால் ஆகமங் களிற் கூறப்பட்டவாறு சிற்பசாத்திர விதிக்கமையத் திருக் கோவில்கள் எழுந்த பின்னர் அவ்விடத்திலேயே விரதிகள் ஒருங்குகூடி சங்கற்பம், அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், பூசை, ஆராதனை, அர்ச்சனை, ஜபம், தபம் முதலிய வழிபாடுகள் அனைத்தையும் செய்யத் தலைப்பட்டனர். இவ்வழிபாட்டு முறையையே இன்று நாம் காணக் கூடியதாக உள்ளது.

சிவாகமப்படி கட்டப்பட்ட திருக்கோவிலை மையமாகக் கொண்ட ஊர்களில் வதியும் இலங்கைச் சைவ மக்கள் அத்திருக்கோவில்களிலேயே வேதாகமச் சடங்குகளுட் சிலவற்றையும் செய்கின்றனர். நாம் முன்னர்க் குறித்த வைதிகச் சடங்குகளுள்ளே குழந்தையைக் கோவிலுக்கு எடுத்துச் செல்லுதல், பால் பருக்குதல், முடி இறக்குதல், வித்யாரம்பம், தீக்ஷை என்பவற்றை ஆலயங்களில் நடத்துகின்றனர். இவற்றுள் தீக்ஷை ஒழிந்த ஏனைய சடங்குகள் இறைவன் இன்னருள் வேண்டி வழிபாட்டுடன் மட்டும் செய்யப் படுவன. இல்லங்களிலே செய்யப்படுவன விவாகம், கிருகப் பிரவேசம் என்பனவாம்.

இலங்கைச் சைவ மக்களிடையே வழங்குங் கிரியைகளை முப் பெரும் பிரிவுகளில் அடக்கலாம். அவை வைதிகக் கிரியைகள், ஆகமக் கிரியைகள், வேதாகம சம்மேளனக் கிரியைகள் என்பன. ஆலயங்களிலே செய்யப்படும் கிரியைகள் யாவும் வேதாகம சம்மேளனக் கிரியைகளேயாம். அதாவது சிவாகமங்களிலுள்ள விதி முறைகளுக்கேற்ப வேதமந்திரங்களை அவ்வவ்விடத்தில் ஓதிச் செய்யப்படுவதாம்.

முதற் கிரியைகள் :

ஆலயங்களிலே நிகழுஞ் சங்காபிஷேகம், கும்பாபிஷேகம், யாகம், மஹோற்சவம் என்பவற்றிலும் இலங்கைச் சைவர்களின் இல்லங்களில் நிகழும் விவாகம், தீக்ஷை, கிருகப் பிரவேசம், சாந்தி என்பவற்றிலும்

நிகழும் முதற்கிரியைகள் சில எல்லா இடத்திற்கும் பொதுவானவை; சங்கற்பம், பஞ்சகவ்யம், புண்ணியாகம், அங்குரார்ப்பணம், இரக்ஷாபர்தனம் என்பவற்றை உதாரணமாகக் கூறலாம். இவையாவும் சிறந்த கருத்துக்களோடு கூடியவை.

சங்கற்பம்— அனுஜ்ஞை :

சங்கற்பம் என்பது எடுத்துக்கொண்ட காரியத்தைக் குருவின் உதவியுடன் செய்து முடிப்பதாக உறுதி பூணல். உறுதி பூணும் அத்தினத்தை விசேடித்துக் குறிப்பிட்டு ஒருவர் தனக்கும், குடும்பத்தினருக்கும், உறவினருக்கும், ஊரவர்க்கும் இகபர நல்வாழ்வு கிடைத்தற் பொருட்டும் அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கு புருடார்த்தங்களையும் எய்தற் பொருட்டும், நவக்கிரகங்களால் வரக்கூடிய ஊறுகளை நீக்குதற் பொருட்டும், அட்ட ஐசுவரியங்களைப் பெறுவதற்குமாகப் பிரார்த்தித்து செய்யப்படுவது.

அனுஜ்ஞை— விநாயக பூசை

அனுஜ்ஞை என்றால் உத்தரவு பெறல் என்பது பொருள். முழுமுதற் பொருளாகிய விநாயகரைப் பூசித்து அவரனுமதி பெற்றுப் பின்னர் சிவாசார்யர்கள், அந்தணோத்தமர்கள் என்போரதும் மூலமூர்த்தி முதலாகச் சண்டேசுவரர் இறுதியாகவுள்ள எல்லாத் தெய்வங்களுடையவும் அனுமதியைப் பெறல்.

பஞ்சகவ்யம் :

பஞ்ச—ஐந்து; கவ்யம்—பசுவிலிருந்து பெறப்படுவது. எனவே பஞ்சகவ்யம் என்றால் பசுவிலிருந்து பெறப்படும் ஐந்து பொருள்கள் எனப் பொருள்படும். அவையாவன—பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்பன. இவை தமிழில் ''ஆனைந்து'' என்று விதந்தோம்பப்படும். ''ஆனைந்துமாடினான்காண்'' என்றும் ''ஆவினுக்கருங்கலம் அரனஞ்சாடுதல்'' என்றும் வரும் திருப்பாடற் சொற்றொடர்கள் நோக்கற்பாலன.

பசு எங்ஙனம் சைவசமயத்துக்கு உயிர் நாடியோ, அங்ஙனமே இப்பஞ்ச கவ்வியமும் ஆகமக்கிரியைகள் அனைத்துக்கும் மூலாதாரமாக விளங்குகிறது. யாகசாலைக் கிரியைகளின்போது ஒரு முறைக்கு மேலும் பஞ்சகவ்விய பூசை நிகழ்த்துவதும் உண்டு. இது எங்களுடைய உடம்பிலுள்ள அந்தகரணங்களைச் சுத்தி செய்தற் பொருட்டும், ஸ்தல சுத்தியின் பொருட்டும், மூர்த்திகளைச் சுத்தி செய்தற் பொருட்டும் செய்யப்படும் கிரியையாகும்.

புண்ணியாகம் :

இது இடத்தைச் சுத்தி செய்தற் பொருட்டுச் செய்யப்படும் கிரியையாகும். வைதிகக் கிரியைகளிலும் ஆகமக்கிரியைகளிலும் சலதேவதையாகிய வருணனைப் பூசித்துப் பஞ்சகவ்வியத்துடன் சேர்த்துத் தெளிப்பதே புண்ணியாகம் செய்தல் எனப்படும். ஸ்நபனாபிஷேகம் செய்யும் போதும், சங்காபிஷேகம், கும்பாபிஷேகம் முதலியன செய்யும் பொழுதும் ஒவ்வொரு யாக பூசை செய்யத் தொடங்கும் பொழுதும், சப்பரம், இரதம், முதலிய வாகனங்களில் மூர்த்தியை ஆரோகணிக்கும் போதும் இக்கிரியை இடம் பெறும். சைவ மக்களது ஜெனனசௌச, மரணசௌச முடிவிலும் ஏனைய சுபாசுபக் கிரியைகளிலும், கிரியை தொடங்கும் பொழுதும் இது முதற் கிரியையாக அமையும்.

பிரவேச பலி :

இது புதிதாகக் கட்டப்படும் ஆலயங்களிலும், அயலில் குடியில்லாத வெளிகளில் கட்டப்படும் இல்லங்களிலும், நெடுங்காலமாகக் கிலமாகக் கிடந்து நித்தியம், நைமித்தியம் முதலிய பூசைகள் நிகழாத ஆலயங்களிலும் கும்பாபிஷேகத்து முன்னர் செய்யப்படுவது; கிராமத்திலுள்ள துட்ட தெய்வங்களின் இடையூறுகளை நீக்குதற் பொருட்டும் இது செய்யப்படும்; பூத பிசாச, பிரம்ம இராட்சதர்களை அவ்வத்திக்குகளிலிருந்துந் துரத்துவதற்குச் செய்யப்படும். ''மகாதேவனுடைய ஆணையினாலே இவ்விடத்தில் ஆலயம் சமைக்கப் போகிறோம். இப்பலிகளை ஏற்று வேறிடம் செல்லுவீர்களாக'' என்று வேண்டி அவைகளை அகற்றும் பாவனையாகச் செய்யப்படும்.

## இரக்ஷோக்னஹோமம் :

பிரவேச பலி புறத்தேயிருக்கும் தேவதைகளை அகற்றுவதற்குச் செய்யப்படுவது போலவே ''இரக்ஷோக்னம்'' என்னும் ஆலயத்தில் உள்ளிருக்கும் துட்ட தேவதையை விசேஷ ஹோமத்தின் மூலம் பிரீதி செய்து வெளியேற்றப்படுவது ''இரக்ஷோக்னம்'' எனப்படும். இதில் காஞ்சிரம், சமித்து, வெண் கடுகு, மிளகு, தவிடு முதலியவை உபயோகிக்கப்படும். வைதிகக் கிரியைகளில் ஜாதகர்மம் நாமகரணங்களின் போதும் பலிகரண ஹோமம் செய்யப்படுதல் நோக்கற் பாலது.

## கிராம சாந்தி :

கும்பாபிஷேகம், மஹோற்சவம் முதலியவற்றில் இடம் பெறும் கிரியைகளுள் கிராம சாந்தி முக்கியமானது. இது கிராம மக்களது நன்மையின் பொருட்டுச் செய்யப்படும் கிரியையாகும். இது ஆலயத்துக்குக் காவலாளியாக விளங்கும் பைரவ மூர்த்தியின் மூலமாக அவரது ஆதிக்கத்தின் கீழுள்ள ஏனைய அசுர, இராட்சத தேவதைகளினால் வருங் கேடுகளைத் தவிர்ப்பதற்குச் செய்யப்படுவது. இது பெரும்பாலும் ஆலய மேற்குப் புறத்தில் நிகழ்வதாகும்; வட கிழக்கில் அல்லது கிழக்குத் திக்கிலும் செய்யப்படலாம்.

## வாஸ்து சாந்தி :

இக்கிரியை மூன்று வகைப்படும். ஆலயம் சமைப்பதற்கு முன் செய்யப்படுவது ஒருவகை; இரண்டாவது பிரதிட்டை சம்புரோக்ஷணை முதலிய காலங்களிலே இடம் பெறுவது; மூன்றாவது வகை சங்காபிஷேகம், உற்சவம் சண்டாளப் பிரயாச் சித்தம் முதலிய காலங்களிற் செய்யப் பெறுவது. வாஸ்து சாந்தி கிரியா முறையில் மண்டலங்களைப் பொறுத்துரை மூன்று வகைப்படும்.

இக்கிரியை நாம் பிரதிட்டை செய்ய விரும்பும் இடத்துக்கு அல்லது கட்டவுள்ள வீட்டுக்கு அல்லது கட்டி முடித்துள்ள வீட்டுக்கு அதி தெய்வமாகவுள்ள வாஸ்து புருஷனை மகிழ்வித்தற் பொருட்டு செய்யுங் கிரியையாகும். வாஸ்துவின் அதிதெய்வமாகிய பிரமதேவரையும் சக்திகளையும் பூசித்து, ஏனைய தேவதைகளையும் பூசித்தல் மூலம் இதன் நோக்கம் பெறப்படும். அதுவும் மூவகைத்து. பூசனை, ஓமம், பலி என்னும் மூன்றினாலும் மகிழ்வித்து வாஸ்து புருஷனை அக்கினியிற் கொழுத்தி, ஆலயம் அல்லது வீட்டிலுள்ள எல்லா இடங்களுக்கும் இழுத்துச்சென்று சுத்திகரிக்கப்படும். பின் அவ்விடம் புண்யகசலத்தினால் சுத்திகரிக்கப்படும்.

## நவக்கிரக யாகம் அல்லது கிரகயக்ஞம் :

வேதோக்தம் ஆகமோக்தம் ஆகிய எல்லாச் சுபகாரியங்களிலும் நவக்கிரகயாகம் விசேடித்துச் சொல்லப்படுகிறது. இறைவனுடைய இல்லத்திற் கோள்களுக்கு இடமேது என்ற காலம் போய், கிரகங்கள் இல்லையெனில் இறைவனெவ்விடத்தான் என்ற உண்மை உணருங்காலம் வந்துளது. அவன்தான் வணங்க அவனருள் வேண்டும். அங்ஙனமே கோணிலையுற்றுதான் எக்கோளையும் பிரதிட்டை செய்ய முடியும். ஒன்பது கிரகங்களுக்கும் அதிதேவதைகளாகவும் பிரத்திபதி தேவதைகளாகவும் 18 தெய்வங்கள் உள. கும்பாபிஷேகம், உபநயனம், விவாகம், ஆயுஷ்ய ஹோமம், சாந்திகள் முதலிய சகல மங்கல காரியங்களையுங் கோள்களின் உதவி நாடியே செய்தல் வேண்டும். பிரதிட்டையின் போதுள்ள கிரியைகள் யாவற்றிலும் ஏற்படும் பல்வேறு லக்ன தோஷங்களையும் நீக்குதற்கு பொருட்டே கிரகங்களுக்குப் பிரீதி செய்யப்படுகின்றது.

## மிருத் சங்கிரகணம்— அங்குரார்ப்பணம் :

இவையிரண்டும் உற்சவம், பிரதிட்டை முதலிய தேவாலயக் கிரியைகளில் செய்யப்படுவன. ஆனால், அங்குரார்ப்பணம், தீக்ஷை, உபநயனம், விவாகம் முதலிய எல்லாச் சுபகருமங்களிலுஞ் செய்யப்படுவது. மிருத் சங்கிரகணம் என்றால் மண் எடுத்தல் என்பது பொருள். அதாவது ஆசாரியார் முளையிடுதலுக்கு புது மண் எடுத்தல் என்பது பொருள். ஆற்றங்கரை, மலையடிவாரம், நந்தவனம் முதலிய பரிசுத்தமான இடங்களில் இக்கிரியை நடைபெறும்.

'அங்குரார்ப்பணம் என்பது அங்குர—அர்ப்பணம்; முளை இடுதல் எனப் பொருள்படும். இது எப்போதும் சுபகருமங்களுக்கு முன்னதாக 5 நாள் அல்லது 9 நாள் முன்னதாக மங்கள கிரமாக முளையிடுதலைக் குறிக்கும்.

இவை ஆகமப்படி 40, 24, 16 பாலிகைகளில் இடவேண்டும். வைதிகப்படியாயின் 5 பாலிகைகளில் இடலாம். அவற்றிலே சிவாசாரியர் தானே சுமங்கலியாய் நன்முளைகளையிட்டு காலை, மாலை, பஞ்ச கவ்ய நீர் வார்த்து, அவற்றின் முளைகளை அவதானித்து, பயன்களை அறிந்து, அவற்றின் சூசகத்தை உணர்தல் வேண்டும்.

இரக்ஷாபந்தனம் :

இரக்ஷா பந்தனம் என்பது காப்புக் கட்டுதல் எனப் பொருள் படும். அதாவது சிவாசாரியர் தமக்கும் யாகத்தில் பங்கு பற்றும் ஏனைய சிவாசாரியர்கட்கும் காப்புக் கட்டுவதுடன், மூலமூர்த்திக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அவரவருக்குரிய தானத்திலும் ரஷாபந்தனம் செய்ய வேண்டும். இதனுடைய நோக்கம் கர்மாரம்பந் தொடக்கம், அது முடியும் வரை வெளியுலக உபாதைகள் ஒன்றும் இவர்களைத் தீண்டா என்பதாம்.

பூதசுத்தி: அந்தர்யாக பூசை: ஆத்ம பூசை :

இவை ஆலயக்கிரியைகளில் மிக முக்கியமான இடத்தைப் பெறுவன. இவையின்றேல் புறப் பூசைகளினாற் பயனில்லையாம். இது சிவாசாரியர் இருதய கமலத்தில் சிவனைத் தியானித்துப் பூசித்தலாம்.

இது சிவாசாரியர்கள் யாவருஞ் சிவோகம் பாவனை செய்தலாம். அவர்கள் தமது வலது கையைச் சந்தனத்தினால் சிவஹஸ்மாகப் பாவித்து, அக்கையினால் தம்மைச் சிவமாகப் பாவனை செய்து தாம் புறத்தே பூசிக்க இருக்கும் மந்திரங்களை அகத்தேயும் பூசிப்பர். எனவே சிவாசாரியர்களும் தாம் புறத்தே சிவத்தைப் பூசிக்கு முன்னர் தாமும் சிவமாவர். காண்பான், காட்சி, காட்சிப் பொருள் ஆகிய மூன்றும் சிவமாகும். இவ்வுண்மையை சண்டேசுவர நாயனர் தத்துவத்தில் விளக்கமாகக் காணலாம். சிவலிங்கம் அமைத்துச் சிவபூசை செய்யும் பொழுது, சிவத்துடன் இரண்டறக் கலந்து நின்ற தன்மையினால் அவருக்குப் புறத்தே நிகழ்ந்த ஒன்றும் தெரிந்திலது. காண்பானும் சிவம், காட்சியும் சிவம், காட்சிப் பொருளும் சிவம், என்ற முறையில் மூன்றும் ஒன்றித்த நிலையில் நிற்பதே சிவோகம் பாவனையாம். இந்நிலையை விளக்குவவே பூதசுத்தி, அந்தர்யாகம், ஆத்தும பூசை என்பவற்றின் தத்துவங்களாகும். சண்டேசுவர நாயனர் சிவமாக நின்று சிவபூசைக்கிடையூறு செய்த ஒருவரின் காலைத் துண்டித்தமையால் அக்குற்றம் அவர் மேல் செல்லவில்லை. அத்தகைய திரிகரண சுத்தியுடன் கூடிய வழிபாடுதான் பயனளிப்பது; பக்த கோடிகளின் மனதை வசீகரிப்பது; ஆன்மாக்கள் லயிப்பதற்கு வழிகோலுவது; கிரியை நடக்கும் இடத்தை ஆலயம் ஆக்குவதுமாம்.

கடஸ் தாபனம் :

கடஸ்தாபனம் என்றால் கும்பம் வைத்தல் எனப் பொருள்படும். இக்கிரியையின் கருத்து ஆராயற்பாலது. விநாயகப் பெருமானை வழிபடுவதற்கு நாம் கோமயம், மஞ்சள், சந்தனம் ஆகியவற்றால் உருவமைத்து உடன் பூசனை செய்கிறோம். அங்ஙனமே சிவபூசை செய்யுமிடத்தும் சிவலிங்கத்திற்குப் பதிலாக உருத்திராக்கம், சந்தனம் என்பவற்றில் ஆவாகித்து வழிபாடு செய்கிறோம். அங்ஙனமே கடவுள் யாவரையும் தற்காலிகமாகப் பூசிப்பதற்குக் கும்பங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. உருத்திராபிஷேகத்திலோ, நபனபிஷேகத்திலோ, சங்காபிஷேகம், கும்பாபிஷேகம் முதலியவற்றிலோ, வேறு எப்பூசையிலோ கும்பம் மூலம் மூர்த்திகள் உருவேற்றப்பட்டுப் பூசிக்கப்படுகின்றனர். வைதிகக் கிரியைகளிலும் இம்முறையே கையாளப்படுகின்றது. பாலஸ்தாபனத்திலும் கூட சில தினங்கள் வைத்துப் பூசிப்பதற்குக் கும்பங்கள் காலாகர்ஷணப் பொருள்களாக விதிக்கப்பட்டுள்ளன.

கும்பம் தாபித்தலின் தத்துவம் யாது? அது மூர்த்தியாகவே பாவிக்கப்படுகின்றது. கும்பத்தோடு சகஜமாக இருக்கின்ற மண்ணானது, உடலுக்குரிய அம்சமாகும்; அதில் சுற்றப்படும் நூல் எழுபத்தீராயிரம் நாடி நரம்புகளாகும்; அதில் சுற்றப்படும் வஸ்திரம் தோல் ஆகும்; கும்பத்தினுள் விடப்படும் நீர் இரத்தமாகவும், மேதை எனப்படும் ஏழுதாதுகளாகவும் விளங்கும்; கும்பத்தினுள் இடப்படும் நவரத்தினம், வெள்ளி, பொன் நாணயங்கள் சுக்கிலமாகும்; அந்தக் கூர்ச்சம் (உள்வைக்கப்படுவது) முள்ளந்தண்டாகக் கருதப்படும். மாவிலை சடையாகவும், தேங்காய் கபாலமாகவும் கொள்ளப்படும். வெளியே போடப் படும் கூர்ச்சம் மாவிலைகளோடு கூடச் சடைகளை முடித்த குடுமியாகவும் கொள்ளப்படும். நியாசங்கள், பிராணப்பிரதிட்டை முதலிய மந்திரங்கள் ஜீவனாகும்; கீழே பரவப்படும் தானியங்கள் மூர்த்திக்கு ஆசனங்களாகவும் கொள்ளப்படுவன; உத்தரியபமாலைகள், சுகந்த புஷ்பங்கள் அலங்காரப் பொருள்களாம்.

## அக்கினி காரியம் :

சைவர்களிடையே வழங்கும் சடங்குகள், கிரியைகள் என்பனவற்றில் முக்கிய இடம் பெறும் அதிமுக்கிய கிரியை அக்கினி காரியம் (எரியோம்பல்) ஆகும். இக்கிரியை வேதகாலந்தொட்டே மிகப் பிரதானமானது. திருக்கோவில் வழிபாடு ஏற்படுவதற்கு முன்னர் பல்வகை வேள்விகளே வாழ்வின் மூலமும் முடிபும் இலட்சியமும் என்றிருந்த காலத்தில் எரியோம்பலே முதலிடம் வகித்தது. பின்னர் தெய்வங்களுக்குத் திருக்கோவில் அமைத்து வழிபாடாற்றத் தொடங்கிய பின்னர், எரியோம்பல் வழிபாட்டில் ஓரங்கமாக அமைந்தது. எனினும் இன்றும் அது தன் சிறப்பிடத்தை வகிக்கின்றது. இல்லத்தில் செய்யப்படும் சடங்குகளிலும், ஆலயத்திற் செய்யப்படும் நித்திய நைமித்திய வழிபாடுகளிலும் நிவேட்டல் இன்றியமையாததாக உள்ளது. வேதமும் வேள்வியும் ஆய பரமசிவன் முதல் பிதிர் தேவதைகள் வரையுள்ள அசரீரிகள் சகலருக்கும் ஆன்மாக்கள் அளிக்கும் அவி முதலிய அர்ப்பணங்கள் யாவும் அக்கினி தேவன் மூலமே அவர்களைச் சென்றடைகின்றன.

உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளையும் கலி பீடித்திருக்காதிருத்தற் பொருட்டு சுற்றுங்கெரியோம்பி நிதமும் தங்கருமம் செய்வாராகிய அந்தணப் பெருமக்கள், ஆன்மார்த்தமாகிய சிவபூசையிலும், பரார்த்தமாகிய ஆலய சேவையிலும் எரிபெருக்கியே பணியாற்றுகின்றனர்.

> '' ஓமத்து ளங்கியி னுள்ளுள எளம்பிறை
> ஈமத்து ளங்கி யிரதங்கொள் வானுளன்
> வேமத்து ளங்கி வினைவு வினைகடற்(கு)
> ஓமத்து ளங்கி குரைகட லுவே.

என்னும் திருமூலர் திருவாக்கு எங்ஙனம் ஆன்மாக்களது கன்மமாகிய நெருப்பையவிக்கும் கடல் போல ஓமாக்கினி விளங்குகின்றது என நயம் படக் கூறியிருப்பது நினைதோறும் சுவை தருவதாகும்.

இதனாலேயே வைதிகச் சடங்குகள் ஆகமச் சடங்குகள் என்பவற்றிலும் கணபதி ஹோமம், சிவமகாயாகம், சண்டி மகாயாகம் போன்ற தாந்திரிகக் கிரியைகளிலும் இன்னோரன்ன பிறவற்றிலும் ''ஆகுதி வேட்கு மருமறையந்தணர்'' செய்யும் பெருவேள்விகள் யாவற்றிலும் அக்கினி காரியம் சிறப்பிடம் வகிக்கின்றது.

# கௌரியே காட்சியருள்வாய்

— வ. கோவிந்தபிள்ளை —

அந்தரத் துலவுகார் முகில்விஞ்சு கூந்தலும்
அணிசெய்தா ரலகையை விஞ்சும்
அழகுலவு விழிகளுட னுலவுமிரு குண்டலத்
தழகோடு திலகவழகும்
சந்திரர்க ளொருகோடி சேரினும் விஞ்சிடுந்
தண்ணளி முகத்தினழகுந்
தருபவள வாயினொடு முத்தொளிரு முறுவலுஞ்
சார்த்தியுள பட்டினழகுஞ்
செந்திரு மடந்தைபுறை கமலத்தை விஞ்சுமொரு
திருவடிபி னழகுங்கண்டு
சிந்தைகளி கூருமடி யார்கள்வினை நீங்கிடத்
தேனுண்ட மதுகரமதாய்க்
கந்தமலர் சூட்டியுன் புகழ்பாடி யாடிடக்
கண்கண்ட தெய்வமாகிக்
கடலுலவு பாலாவிக் கரைமீது நாதனுடன்
கௌரியே காட்சியருள்வாய் ! (1)

எண்ணரிய நற்கல்வி செல்வமென் றெதனையும்
எனக்கீந்த தில்லைவாழ்வில்
இதமான சுற்றமோ நண்பரோ வாய்த்திடவும்
ஏதுக்க ளாகவில்லை
மண் மீதி லிடர்மிடிமை பிணிகளே சுற்றமாய்
வருத்தித் துரத்திடவும் மீள்
வழியென்று கருதியான் சென்றவிட மெங்கணும்
வாதையே கூட்டிவைத்தாய்
மீண்டுவலி கொள்கடற் கலமிழந் தவன்நிலையில்
வேதனையுள் மூழ்கிமூழ்கி
மிக்கபல புரையேறி மூச்சற்று வெழுகின்ற
வேளையில் விதிவசத்தாற்
கண்டுனது பதமலரைப் பற்றிப் பிடித்தபினுங்
கதறிநான் மடிதல்முறையோ!
கட லுலவு பாலாவிக் கரைமீது நாதனுடன்
கௌரியே காட்சியருள்வாய்! (2)

தெண்ணிலா வேணியான் வந்தித்து மகிழ்வோடு
சிந்தையிற் சூடும்பதம்
திருமகளும் கலைமகளும் சயமகளும் வந்துதினம்
சிரமீது சூடும்பதம்
எண்ணுறு சிவாகம புராணவே தாந்தமும்
இலங்கிமினிர் நற்பூம்பதம்
இணையற்ற நந்திமுதற் சிவகணத் தலைவர்களும்
ஏத்தித் துதிக்கும்பதம்
பண்ணுலவு ஞானசம் பந்தனோடு சுந்தரன்
பாமாலை கொள்பூம்பதம்
பக்திமிகு மடியவர்கள் சித்தத்துள் நித்தமும்
பதிந்துலவு பொற்பூம்பதம்
கண்ணிலும் மனத்திலும் அகலாது காட்டியென்
கண்கண்ட தெய்வமாகிக்
கட லுலவு பாலாவிக் கரைமீது நாதனுடன்
கௌரியே காட்சியருள்வாய்! (3)

~~~~~~~~~~

# கூடுவோம் நாமின்றே திருக்கேதீச்சரப் பதியினிலே

— முருகு —

புன்னகையாற் புரம்மூன்றை எரிசெய்த அதிதீரன்
மென்னகையாள் கௌரி மகிழ் மின்னார் மணிமார்பன்
வெண்ணலைகள் எழுந்தாடும் பாலாவியின் கரைமேல்
விண்ணவரும் மண்ணவரும் துதிக்க அருள்கின்றாரே! (1)

காலனைக் காலா லுதைத்தருள் புரிந்தவனே
மாலயனின் மனத்தருக்கை வலிகெடுத்த சோதியனே
பாலாழியி லுதித்தகொடு விடமுண்ட மிடற்றோனே
பாலாவியின் கரைமேற்றிருக் கேதீச்சரத் துள்ளாரே! (2)
~~~~~~~~~~

கொடும்புலியின் தோலைத்தன் அரைமேலணி செய்து; வெண்
பொடிபூசி முப்புரிநூல் அணிந்த பொன்மார்பன்; மென்
கொடியிடையாள் மங்கை கௌரியுடன் மகிழ்கின்ற
துடியேந்தும் பெருமான்திருக் கேதீசரத் துறைகின்றாரே! (3)

தஞ்சமென நாடிவரும் அன்பரின் வினைகடிந்து
அஞ்சலென அபயகரம் தந்தென்றும் அருள்புரிவான்
நச்சரவை நல்லணியாய் அணிந்ததிருக் கேதீசன்
பச்சைமயில் நடம்பயிலும் பூம்பொழிலில் நிறைகின்றாரே! (4)

வெண்சங்க முத்துடனே பவளமுங் கொணர்ந்திறைக்கும்
வெண்திரைகள் ஆர்க்கின்ற நீலநெடுங் கடலோரம்
வெள்ளை விடையேறும் வித்தகனூர் கௌரியுடன்
புள்ளினங்கள் இசைபாடும் பூங்காவி லுறைகின்றாரே! (5)

எண்ணிலாப் பிறவியேற்றுப் பிறந்திறந் துழலுகின்ற
கண்ணிலா நாயேனைக் கருணையினால் ஆண்டுகொண்ட
தண்ணிலாச் சூடுகின்ற அண்ணலே மறைகள் போற்றுமுக்
கண்ணனே திருக்கேதீச்சரத் துறைகின்றாரே! (6)

தெள்ளுதமிழ்ப் பாமாலை விருப்புடனே புனைந்தேந்தி
கள்ளூறும் மலர்ப்பதத்தை நினைந்துருகும் நாயேனென்
சித்தத்துட் புகுந்தென்னை ஆட்கொண் டருள்செய்த
சித்தனவன் திருக்கேதீச்சரத் துறைகின்றாரே! (7)

நில்லாத இவ்வாழ்வை நிலையான தென்றெண்ணி
பொல்லாத ஆசைப் பெரும் புயலிற் சிக்குண்ட
கல்லாத நாயேன்நற் கதியறியா மூடனெனை
நில்லாது வந்தாண்டான் கௌரி மணாளன்றானே! (8)

சீர்காழி யூர்ப்பிள்ளை தீந்தமிழாற் போற்றி:தண்
ணீராரும் சடைமேலே இளமதியை அணிந்தவனே
மலைமகளை யுடையானே மான்மழுவைத் தரித்தோனே
அலைபுரளும் பாலாவியின் கரைமே லுறைகின்றாரே! (9)

நம்பியாரூரரின் நற்றமிழ்நா புகழ்ந்திசைத்த
தும்பிகள் பண்ணிசைக்கும் கேதீச்சரப் பதியினிலே
நம்பிக்கையுடன் நாடும் அடியவரிடர் போக்கும்
நம்பிரான் மாதினியாள் கௌரியுடன் வளர்கின்றாரே! (10)

பல்லுயிரும் பல்லுலகும் படைத்தருளும் கேதீஸ்வரர்க்கு
கல்லினாற் கோவிலினைக் கவினுறவே கற்பித்தோம்!
மன்னுயிர்கள் மண்ணுலகில் மகிழ்ந்துலவ எந்நாளும்
இன்னருளைப் பொழிகவென ஆட்டுகிறோம் குடமுழுக்கு!! (11)

வாடுவோரின் இருவினையைக் களைவோனின் பதமலரைச்
சூடுவோரின் பிறப்பிறப்பைத் துடைப்பானின் புகழையென்றும்
பாடுவோரின் இடர் தொலைத்து நலமருள்வா னாதலினால்
கூடுவோம் நாமின்றே திருக்கேதீச்சரப் பதியினிலே! (12)

# நாவலர் தாபித்த வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை

**— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —**

வரலாறு :

நாவலர்ப் பட்டம் வந்தது 1849 இல்;
வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை தாபித்தது 1848 இல்;
நாவலர் மறைவு 1879.

நாவலர் மறைந்த பின் உண்டானது இப்பொழுது நடைமுறையிலிருக்கும் வித்தியாசாலை. இது சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரைக் கொண்டிருந்தாலும், நாவலர் தாபித்த அது வேறு; இது வேறு; நாவலர் தர்மங்கள் அதற்கே யுரியவை. விளக்கம் பின்வருமாறு :

அபிவிருத்தி :

நாவலர் 1845 ஆம் ஆண்டு தொடக்கம் காலையிலும் இரவிலும் வளர்ந்தோர்க்குப் பாடம் நடத்தி வந்தார். அவர்களுள் தகுதிவாய்ந்தவர்கள் 1848 இல் சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியர் ஆனார்கள். நாவலர் ஆசிரியர்க் காசிரியராயும், வித்தியாசாலையின் அதிபதியாயுமிருந்து வந்தார். வித்தியாசாலையின் வளர்ச்சிக் காலத்தில் வடமொழியில் மகா மேதையான நீர்வேலிச் சங்கர பண்டிதர் நாவலருக்கு உசாத்துணையாய் நாவலரின் வலக்கரமாயிருந்தார்.

ஒரு காலத்தில் மகான் செந்திநாதையர் தலைமை உபாத்தியாயர்; உதவி உபாத்தியாயருள் சிரேட்டர் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை; இலக்கிய ரசனை பிள்ளைக்குப் பிறவிச் சொத்து. தெருக்கள், தெருத்திண்ணைகள், கோயில் மண்டபங்கள், சில வீடுகள் என்றிவைகள் பிள்ளைக்குக் கற்பிக்கும் பிரத்தியேக இடங்கள். எழுத்தாணியும், ஏடும் தாங்கி ரசிகர்கள் கூட்டம் பிள்ளையை மொய்த்தபடியிருக்கும். நாவலருக்குப் பூசை நேரமே ஓய்வு நேரம். ஏனைய நேரங்களில் அச்சுவிலிருந்து பாட புத்தகங்கள் எழுதுதல், உரையெழுதுதல், வசனப்படுத்தல், பழைய நூற் பரிசோதனம் என்றிவைகள் நடக்கும். இவைகளிற் பங்கு பற்றிப் பாண்டித்தியம் பெற்றோர் பலர்.

சென்னையிலும் யாழ்ப்பாணத்திலும் சித்தியார் பாடங் கேட்டுப் பிரபலஸ்தரானோர் எண்ணிக்கை முக்கியமானது.

சபாபதி நாவலர், சங்கர பண்டிதரிடமும், நாவலரிடமும் வித்துவசிரோமணியிடமும் நேரே பாடங் கேட்டவர். தர்க்க குடாரதாலுதாரி வித்தியாசாலையிற் படித்தவர்; பின்னைய இருவரிடமும் நேரேயும் பாடங்கேட்டவர். தர்க்க குடாரம் தம் தருக்க வன்மையைச் சபாபதி நாவலரோடு மோதிக் கூர்மை செய்வதுண்டு. தர்க்காமிர்தம் குடாரம் செய்தது; குடாரம்—கோடரி.

நாவலரின் மாணவர்கள், மாணவரின் மாணவர்கள் தத்தம் ஊர்களில் திண்ணைப் பள்ளிகள் நடாத்தினர்.

முக்கிய பாடமான கந்த புராண படனம் சுத்தமான தமிழையும் சைவத்தையும் பரவச் செய்தது.

சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளையும் சபாபதி நாவலரும் தமக்குத் தாமே நிகரான சமயப் பிரசங்க சிங்கங்கள்.

செந்திநாதையர் ஆறு வருடத்துக்கு மேல் தலைமையாசிரியராயிருந்தபோது, நாவலரின் வாயிலிருந்து வருபவைகளை எழுதி, எழுத்தெண்ணிப் படித்தவர். பின், வடக்கே போய்த் திருமுறைகள், சைவசித்தாந்த சாத்திரங்கள், பண்டார சாத்திரங்கள், ஆகமங்கள் யாவற்றையும் பருகி ஏப்பம் இட்டவர். காசியில் பல ஆண்டு வசித்து, சாத்திரிகளிடம் உபநிடதங்களையும், பிரம சூத்திர பாஷ்யங்களையும் படித்து அரிய பெரிய நூல்களை வெளியிட்டவர். திருப்பரங்குன்றில் இருந்து கொண்டு சைவ மடங்களுக்கும், மாயாவாத கண்டனகாரர்களுக்கும் ஊன்று கோலாய் நிகரற்ற கல்விமானாய் விளங்கியவர். எத்தனையோ சைவப் பிரசாரகர்களை உற்பத்தி செய்தவர். கதிரைவேற்பிள்ளைக்கு மாயாவாத தும்ச கோளரி என்ற பட்டம் வழங்கி ஆசீர்வதித்தவர்.

## கற்பகதரு :

நாவலர் என்ற கற்பகதரு அன்றும், அதன் மேலும், இன்றும், எங்கே சுத்தத் தமிழும் சைவமும் உண்டோ, அங்கே ஒருவாற்றால் தொடர்புடையதாயிருப்பதைக் காணலாம். நாவலரின் அடிச்சுவட்டில் நடந்து பெரிய காரியஞ் செய்த பெரியார் சுவாமி விபுலாநந்தர் என்கிறார் பேராசிரியர் கலாநிதி வித்தியானந்தன் அவர்கள். அவர்கள் காட்டும் ஒப்புமை மிகமிக அருமையானது. கற்றுவல்ல உபாத்தியாயர் தொகை அதிகரித்தது. பல துறைப்பட்ட நூலுரைகள் வெளியிடுவோரும் சைவப்பிரசாரகர்களும் உளராயினர்.

## ஐந்தாண்டுத் திட்டம் :

நாவலர் பெருமானோ இவ்வளவில் திருப்தியடைந்தாரில்லை. கற்று வல்ல உபாத்தியாயர்களையும், சைவப் பிரசாரகர்களையும் சிறப்பாயதொரு முறையில் உற்பத்தி செய்து, திட்டமான ஒழுங்கு முறையில் மேலாய நிலைத்த பயனை வருவிக்க முயன்றார். அம் முயற்சியே நாவலர் கருத்தகத்தே குடி கொண்டிருந்த ஐந்தாண்டுத்திட்டம். திட்டவிளக்கம் பின் வருமாறு :

வருடந்தோறும் இருபதின்மர் வளர்ந்த மாணவர்—ஒழுக்க சீலமும், விவேகமும், ஆரோக்கியமும் உடையவர்— தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து வருடம் பயிற்சி பெறுவர். ஐந்தாம் வருடத்தில் நூறு மாணவர்கள் கொண்ட ஐந்து வகுப்புக்கள் இருக்கும். ஐந்தாம் வருட முடிவில் இருபதின்மர் பயிற்சி முடிந்து வெளியேற, புதியவர்கள் இருபதின்மர் முதலாம் வருட வகுப்பில் சேர்க்கப்படுவர். பயிற்சி முடிந்த இருபதின்மரில் ஒரு பகுதியார் கற்று வல்ல உபாத்தியாயராயிருப்பர். ஏனையோர் சைவப் பிரசாரகராயிருப்பர். முக்கிய ஸ்தலந்தோறும் சைவப்பிரசாரகர்கள் நியமனம் பெற்று, கோயிற் பூசை முதலிய கிரமங்களைச் சாத்திர முறைப் படி நடத்தற்குப் பூசகர்களுக்கும் அதிகாரிகளுக்கும், உசாத்துணைவராயும், வழிகாட்டியாயும் இருப்பர். பெற்றோருடன் கலந்து பிள்ளைகள் உரிய காலத்தில் சமய தீட்சை பெற்றுச் சமயாசார முடையவர்களாதற்கு வழி செய்வர். பயிற்சிக் காலத்தும், பின்னும் முட்டுப்பாட்டின்றி இருத்தற்குப் பொருளாதாரத் திட்டம் புறம்பாக உண்டு.

கற்றுவல்ல உபாத்தியாயர்கள் ஊர் தோறும் சைவ பாடசாலைகள் தாபித்துச் சமய நூல்களையும், கருவி நூல்களையும் கற்பித்து, சைவப்பிரசாரகரோடும் பெற்றோரோடும் இணைந்து நடப்பர்.

கற்றுவல்ல ஆசிரியர்களுக்குப் பொருள் வருவாய்க்கு நாவலர் வழி செய்திருக்கின்றார். அது அரசினர் நன்கொடை.

நாவலர் செய்த ஒரு பெருங்காரியம், அச்சுக்கூடம் தாபிக்க உத்தரவு பெற்றதும், அரசினர் நன்கொடை பெற்றதுமாம். இந்த நன்கொடை ஐந்து வருடத் திட்டத்துக்கன்று; அதன் ஒரு அம்சமான சிறுவர் பயிலும் பாடசாலைப் பகுதிக்கு உரியது. அது கற்று வல்ல உபாத்தியாயர்கள் ஊர் தோறும் தாபிக்க வேண்டியபாட சாலைகளுக்கு முன் மாதிரிகையானது. இத்திட்டம் கற்பனையிலிருக்கும் போது நாவலர் மறைந்து விட்டார்.

## புதிய சூழ் வினை :

(i)

வட்டுக் கோட்டைச் செமினரிக்கும் நாவலருக்கும் ஒரே வயசு. சில மாதங்களால் மூத்தவர் நாவலர். செமினரி கிழக்காசியாவின் சர்வ கலாசாலை என வர்ணிக்கப்படுவது. அது சர்வசாத்திரசாலை. அதற்குத் துணை புரிவது போலத் தோன்றி நடந்தது பேர்சிவல் நடத்திய மத்திய கல்லூரி.

படித்தவர்கள் கிறிஸ்தவராய்த்தானே இருப்பார்கள் என்ற நம்பிக்கை பாதிரிமாருக்கு இருந்தது. அந்த நம்பிக்கையை முற்றிலும் மாற்றிவிட்டார் நாவலர். கிங்ஸ்பரி சி. வை. தா., கறல், பெரிய நெவின்ஸ், உவைமன் போன்றவர்களைப் பறிகொடுத்ததன்றிப் பேர்சிவலையும் இழந்தார்கள் பாதிரிமார். பேர்சிவல் நாவலர் தொடர்பால் ஓர் அபர சாக்கியர் ஆயினர். நாவலர் மறைந்ததும் பாதிரிமார் புதிய சூழ் நிலையிற் புகுந்தார்கள். 'படித்தவர்கள் மதம் மாறார்கள்' என்ற எண்ணம் ஸ்திரமானது.

(ii)

கிராமந்தோறும் பாடசாலைகள் நாபிக்கப்பட்டன. ஐந்தாம் வகுப்புவரை அங்கே நடக்கும். மேல் வகுப்புக் குறித்த இடங்களில் நடக்கும். பயிற்சி வகுப்பு இரண்டொரு இடத்தில் நடக்கும். மேல் வகுப்பில் உடை உணவு உதவியை நாட மதம் மாறுகை உற்பத்தியாய், பயிற்சி வகுப்பில் பிரவேசித்ததும் ஞான ஸ்நானத்தில் முடியும்.

(iii)

சைவர்கள் பாடசாலை தாபிக்க முடிதாயபடி சட்டங்களையும் மாற்றி வைத்துக் கொண்டார்கள். ஊர் தோறும் சைவ பாடசாலை தாபித்தல் முடியாத காரியம் ஆயது. 1900 ஆம் ஆண்டு அளவில் தராதரப் பத்திர ஆசிரியரே தலைமை ஆசிரியராகலாம் என்ற விதியும் உண்டாயது. நாவலரின் கற்றுவல்ல உபாத்தியாயர்கள் 'அன்சேட்டிவிக்கற்' என்ற பட்டத்துக்கு ஆளானார்கள்.

நான் அமெரிக்க மிஷன் பாடசாலையிற் படித்தவன். ஞானப்பால், வேதவினாவிடை, மார்க்கு எழுதிய சுவிசேஷம் படித்தவன். அதுவரை சைவ வினாவிடையைக் கண்ணாலும் காணவில்லை. 19ஆம் வயசில் நாவலர் வித்தியாசாலையை ஒருவர் காட்டியபோது நாவலர் இருக்கிறாரா என்று கேட்ட பேர்வழி நான்.

சைவ பௌத்த பிள்ளைகள் தத்தம் சமயத்தை அறியாத பிரகாரம் செய்வதே கிறித்தவரின் ஆரம் வேலை. இதற்கு நான் நல்ல உதாரணம். என் சூழலோ நாவலரோடு தொடர்புபட்டது. என்பாடு இங்ஙனமானால் சாதாரண பிள்ளைகளின் கதி என்னாகும்!

## தமிழ்ச் சங்கம் :

1900 க்கு அண்மையில் நாவலரின் தமையனார் புதல்வர் த. கைலாசபிள்ளை அவர்கள் நாவலரின் மாணவர் என்ற கருத்தில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு மானேஜர் ஆயினர். அவர் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிழலின் நிழலாக ஒரு தமிழ்ச் சங்கம் தாபித்தார். அதன் தலைமைப் புலவர் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசாமிப்புலவர் அவர்கள். இச் சங்கம் அரசகேசரி தாபித்த தமிழ்ச் சங்கத்தின் வழித் தோன்றல். இதன் பிறகுதான் நான்காவது மதுரைச் சங்கம் தோன்றியது.

சங்கச் சார்பில் பாரதி, பண்டிதர் முதலிய வகுப்புக்கள் நடத்தப்பட்டன. தலைமை ஆசிரியர் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள். உதவி ஆசிரியரில் முக்கியஸ்தர் சங்கரபண்டிதரின் புதல்வரான சிவப்பிரகாச பண்டிதரும், வடலியடைப்பு அருணாசல சாஸ்திரியும் ஆவர். சாஸ்திரியார் சங்கர பண்டிதரின் மாணவர்.

உதவி நன்கொடை பெறும் கீழ் வகுப்புக்களுக்குப் பாட விதானம், ஆசிரிய நியமனம் அதிபதி பொறுப்பில் இருந்து வந்தது. அரசாங்க நிபந்தனை அற்பம்.

1900 க்கு மேல், மெல்ல மெல்ல ஆசிரிய நியமனத்தில் பாதிரிமாரின் தூண்டுதலால் அரசாங்கம் கைவைக்கத் தொடங்கியது. தலைமை ஆசிரியர் தராதரப் பத்திர முடையவராய் இருத்தல் வேண்டும். பயிற்சி பெற்றவரானால் மிக நன்று. தராதரப் பத்திரகாரர் என்றால் மத மாற்றம் பெற்றவராயே இருப்பார்.

## நாவலர் என்ன செய்திருப்பார் ?

நாவலரின் கற்றுவல்ல உபாத்தியாயர் இடத்துக்கு தராதரப் பத்திரமுள்ள உபாத்தியாயர், அதுவும் மதம் மாறிய உபாத்தியாயர் நியமனம் பெற வேண்டியவராயினர். இதற்கு நாவலர் உடன்படுவாரா? அப்படிப்பட்ட உபாத்தியாயர் அந்தத் தானத்தில் கால் வைக்க முடியுமா?

மகான் செத்திநாதையர் அமர்ந்த கதிரை, தராதரப் பத்திரமுடைய மதம் மாறிய ஒருவரைச் சுமப்பதா? இனி என்ன செய்வது என்று கேள்வி எழுந்தது. மனேஜர் த. கை. உதவி நன்கொடையை நிறுத்திவிடுவதென்ற முடிபுக்கு வந்தார்.

பெற்றோரும் வேறு பிரமுகரும் அரிதிற் பெற்ற உதவிநன்கொடையை நிறுத்த விரும்பவில்லை. சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற பெயரையும், உதவி நன்கொடையையும் கொடுத்து, புறம்பாக நடக்க வைப்பது என்று தீர்மானித்தார்கள்.

உதவி நன்கொடை பெறும் பகுதி மதம்மாறிய ஒரு தலைமை ஆசிரியரின் கீழ் புறம்பாக நடந்து வந்தது. பண்டித, பாரதி வகுப்புக்கள் வேறான கட்டடத்தில் அ. கு. புலவர் தலைமையில் நடந்தது.

ஒரு தலைமையில் நடந்த வித்தியாசாலையில் இரு தலைமை உதயமானது.

குரு பூசை முதலிய விசேட காலங்களில் உதவி நன்கொடைப் பகுதியும் அதன் தலைமை ஆசிரியர் உள்ளிட்ட ஆசிரியரும் ஒரு நேரத்தோடு போய்விடுவார்கள். புலவர் அவர்களின் தலைமையிற் படிப்பவர்கள் உதவி நன்கொடைக்கு உதவிய இடத்தைக் கழுவிச் சுத்தஞ் செய்து குரு பூசை நடத்துவர். உதவி நன்கொடைக் காரர் பூசையிற் கலப்பதேயில்லை.

## காவியபாடசாலை :

1917 ஆம் ஆண்டில் புலவர் தலைமையில் ''காவிய வகுப்பு'' என்ற பெயரைக் கொண்ட வகுப் பொன்று நடந்தது. அதிற் சேர்ந்து படிப்பவர்களுக்கு உண்டி, உறையுள் யாவும் உதவப்படுமென்று விளம் பரஞ் செய்திருந்தார்கள். என்னை உள்ளிட்ட பதினெண்மர் அதிற் சேர்ந்தோம். எங்களில் ஒருவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை.

## உதவிநன்கொடை :

வருடந்தோறும் உதவி நன்கொடையை நிறுத்தும் பிரச்சினை உண்டாவதை நான் நன்கு அறிவேன். வித்தியாதரிசிகளுக்கும் மனேஜருக்கும் ஒத்துப் போவதில்லை. வித்தியாதரிசி சப்பாத்துடன் உள்ளே நுழைந் தாலும் நன்கொடையை நிறுத்தும் பிரச்சினை எழும். வித்தியாதரிசிகளுக்கும் படிப்புக்கும் வெகு தூரம் என்பது மனேஜர் கருத்து. ஒரு முறை புதிய வித்தியாதரிசி ஒருவர் 'நாவலர் பாலபாடத்தில் படம் இல்லை' என்று குறை சொல்லிவிட்டார். அந்தப் பகுதித் தலைமையாசிரியர் புலவரிடம் ஓடிவந்தார். இதனையறிந்த வித்தியாதரிசி மெல்ல நழுவி விட்டார்.

## ஒரு ஹாஸ்யம் :

1922 இல் புலவர் மரணப் படுக்கையில் இருக்கிறார். வித்தியாதரிசி சதாசிவ ஐயர் அவரைப் பார்க்க வந்தார். 'நாவலர் வித்தியாசாலையில் பரீட்சை நடத்திவிட்டு வருகிறேன்' என்றார். அதனைக் கேட்ட புலவ ரவர்கள்—கருவிகரணங்கள் ஒடுங்குகிற அந்த நேரத்தில் —'ஏதும் முரண்பாடு எழவில்லையோ' என்று கேட்டு விட்டார்கள். அந்த நேரத்தில் அதனை ரசிப்ப தெப்படியென்று தத்தளித்தோம்.

புலவர் மறைந்த பின்பும் உதவி நன்கொடையை நிறுத்தும் பிரச்சினை 1927 வரை இருந்துவந்தது. 1917 தொடக்கம் 1927 வரை நான் அங்கே தானே வசித்து வந்தேன். புலவருக்குப் பின் காவிய வகுப்பு ஒடுக்கம் எய்தியது.

ஒதுங்கியிருந்த உதவி நன்கொடைப் பகுதியே நடந்து வந்தது; சைவ உபாத்தியாயர்களும் கிடைத்தார்கள்; ஒதுங்கி வாழ்ந்த பாடசாலையே இப்பொழுதைய பாடசாலை.

அது வேறு—இது வேறு :

இது போன்ற பாடசாலைகளை நடத்தக் கற்று வல்ல உபாத்தியாயர்களையும் கோயில் மூலம் சமயம் வளர்க்கச் சைவ போதகர்களையும் உற்பத்தி செய்வதே நாவலர் தாபித்த வித்தியாசாலையின் குறிக்கோள். ஆகவே அது வேறு; இது வேறு.

இனச் சொத்து :

1934 ஆம் ஆண்டளவில் நாவலர் தர்மங்கள் இனச் சொத்தாய் விட்டன. மாணவர் பரம்பரை பரிபாலிக்க வேண்டுமென்கின்ற நாவலர் நோக்கம் மறைந்து விட்டது.

அரசாங்கம் எடுத்தது :

திடீரென்று பாடசாலைகளைச் சுவீகரிக்கும் சட்டம் குதித்தது. நாவலர் தர்ம பரிபாலகர் விழித்தார். அவர் மற்ற மதத்தவர்கள் நடந்த முறையைப் பின்பற்றித் தர்மங்களைப் புறம்பு செய்திருக்கலாம்; காரியந் தெரியாமல் அரசாங்க நன்கொடையை வேண்டாமென்ற பழைய கூக்குரலை எழுப்பினர்; வித்தியா சாலையில் யாரும் பிரவேசிக்கக் கூடாதென்று முட்கம்பி வேலியுமிட்டார்; அவர் செய்கை சட்ட விரோத மாயிற்று; மெத்த முன்னமே செய்திருக்க வேண்டியது.

அரசாங்கம் பள்ளிக்கூடத்தோடு தர்மச் சொத்துக்களையும் பள்ளிக்கூடச் சொத்து என்ற வகையில் சுவீகரித்து விட்டது.

நினைத்தொன்று; நடந்ததொன்று :

ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்துதற்குரிய நாவலர் வித்தியாசாலைச் சொத்து, நாவலர் கனவிலும் நினையாத ''சேட்டிவிக்கற்'' சட்டம்பியார் நடத்துகின்ற வித்தியாசாலைக்காய்விட்டது. இந்நிலை முகாமைக் காரரால் விளைந்தது.

இனிச் செய்வதென்ன ?

i. நாவலர் பெயரை உச்சரிக்கும் சபைகள், மன்றங்கள் அரசாங்கத்துக்கு உண்மை நிலையை எடுத்துக் காட்டிச் சொத்துக்களை நாவலர் நோக்கத்துக்குப் பயன் படுத்த வேண்டும்;

ii. (அ) ஐந்தாண்டுத் திட்டத்தை இக்கால நிலையை யோசித்துப் பயன்படுத்த வேண்டும்;

(ஆ) மற்றச் சமயத்து இளைஞர்கள் தத்தம சமய வழியில் நிற்க, சைவ இளைஞர்க்கு அந்நிலில்லாமை சிந்திக்கற்பாலது;

iii. நாவலர் தர்மங்களைப் பரிபாலிக்க ஒரு சபை தோன்றுமாயின், அதற்கு, சிதம்பரத்தில் வெகு மோச மான நிலையிலிருக்கும் நாவலர் தர்மங்களை நல்ல வழிப்படுத்திப் பரிபாலிக்கும் உரிமைதானே உளதாம்.

இவை நாவலர் பெருமான் கருத்தைச் சிந்திப்பார்க்கு உபகாரமாகும் சில குறிப்புக்கள்.

# கேதீச்சரம் தொழ வைத்த செம்மல் சித. மு. பசுபதிச் செட்டியார்

— க. சிவராமலிங்கம் —

நாட்டை நல்லாற்றுப் படுத்த நல்லவர்களை, வல்லவர்களை, தேவை நோக்கி அவ்வப்போது தோற்றுவிக்கிறான்—இல்லை அனுப்பி வைக்கிறான் அம்பலவாணன் என்ற புனிதமான நம்பிக்கையில் வாழ்பவர்கள் சைவத் தமிழ் மக்கள். இந்த நம்பிக்கையே, சைவ முதல் வைதிகமும் தழைத் தோங்க, புனை மணிப் பூண் காதலனைப் பெற்றெடுக்கும் தவம் புரியச் சிவபாதவிருதயரையும், என்னை ஆண்டருளும் நீராகில் அடியேன் பின் வந்தவனை—எடுத்தாள வேண்டும் எனப் பலமுறையும் விண்ணப்பம் செய்யத் திலகவதியாரையும் தூண்டி, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தரையும் தெய்வத் திருவாக்கின் வேந்தராம் அப்பர் சுவாமிகளையும் சைவத்தமிழ் உலகினுக்குத் தந்தது. இந்த வழியிலே, 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேற்றுப்புல மக்கள் ஆட்சியின் பின்னணியில் ஈழத்தின் பாரம்பரியமும், பண்பாடு, சமயம், மொழி என்பனவும் ஆட்டங்கண்டு விடுமோ என்ற அச்சத்தால், இறையடி மறவாப் பண்பாளர் சிலர் உள்ளம் வருந்தி, வேண்டி நின்றதின் பயனாக அவதரித்த பெருமகனார் நல்லைநகர் நாவலர் பெருமான். இவர் நெய்வார்த்த தூண்டா விளக்காம் சைவமும் தமிழும் என்றும் நின்று அருள் ஒளி தரத் தோன்றினார். கடாரம் வென்ற மன்னனுக்கு, வணிகத்துறை வழி காட்டு மரபில் ஒரு பெரு மகனார்.

## தோற்றமும் கல்வியும் :

கலம் பல செலுத்தி வளம் ஈட்டி, நடமாடும் தெய்வ பூசையை, பரமன் பூசையாகவே செய்து, கப்பற் துறைமுகங்கள் தோறும் மடங்களும், தண்ணீர்ப் பந்தல்களும் சமைத்துப் புண்ணியம் பல புரிந்த ஸ்ரீ சிதம்பர சுப்பையாச் செட்டியார் செய்த தவப் பயனாய் ஸ்ரீ முத்துக்குமாருச் செட்டியார் செய்த சிவப் பயனாய், ஈழத்துச் சைவத் தமிழ் மக்கள் செய்த பெருந் தவப் பயனாய், நாவலர் பெருமானின் ''நீளும் இத் தொண்டு'' என நினைந்து நினைந்து சிந்திய கண்ணீரின் திருவிருட்சமாய் 24-6-1856 இல் தோன்றிய தெய்வச் சாலியே பசுபதிச் செட்டியார்.

அன்று கல்வியூட்டிய நிலையங்கள் பல மிசனரிமாரின் கண்காணிப்பில் வளர்ந்தன. சைவமும் தமிழும் பேணி, கலை பயிற்றும் சைவ நிலையங்கள் இல்லாமை பெருங்குறையே. ஆங்கில மொழி பயிலுதல் அன்று அவசியமானதாக இருந்ததால் இளமையில் செட்டியார் அவர்கள் சுண்டிக்குளியில் நடாத்தப்பட்டதும் இன்று பரி யோவான் கல்லூரியாக விளங்குதுவமான செமினறியில் கல்வி பயின்றார். நாவலர் பெருமானும் தமது ஆரம்ப கல்வியை யாழ். மத்திய கல்லூரியில் பெற்றதை இங்கு நினைவு கொள்ளல் வேண்டும்.

அத்திவாரம் அசைக்க முடியாத சைவத் தமிழ் பண்பாட்டில் எழுப்பப்பட்டதாலும், சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தாலும், இனி எதிர் காலத்தின் சிறப்பாலும், எம்மவர் சிலரைத் திசை திருப்பிய ''மயக்கம்'' செட்டியாரைத் தீண்டவில்லை. தொடர்ந்து உயர் கல்வியை கணித மேதைகளின் பாசறையாக விளங்கிய கும்பகோணம் கல்லூரியில் ஆரம்பித்தார். தந்தையாரின் மறைவும், பொறுப்பும், பட்டப் படிப்பை முடிக்காமலே செட்டியாரை வீடு திரும்ப வைத்தது. எனினும் பிற்காலத்துக்கு வேண்டிய அறிவும், ஆற்றலும் நிர்வாகத் திறனும், மனத் திடமும் பெற்று வந்தார். நாவலர் பெருமானின் செல்வாக்கும், சிவப்பணி முறுக்கேறிய குடும்பப் பின்னணியும், சுண்டிக்குளி செமினறி கொடுத்த அனுபவமும் கும்பகோணம் அரசினர் கல்லூரி தந்த பயிற்சியும் இயற்கையாகச் செட்டியாரிடம் அமைந்திருந்த, சைவத் தமிழ்த் தாகமும், சமுதாய நலனில் கொண்ட வேட்கையும், சிவனடி மறவாத சிந்தையும், இத்தனைக்கும் நிலைக்களமாயமைந்த சிவ பூஜை நியமமும், இளைஞரைத் தலை சிறந்த சமயத் தொண்டனாய், தாய் மொழிக் காவலனாய், சமூக சேவையாளனாய் உருவாக்கித் தந்ததில் வியப்பில்லை.

## தொண்டு தொடர்ந்தது :

பேரனும் தந்தையாரும் தொடக்கிக் காத்த தொண்டு, நலியாமல் காத்ததோடமையாது, பெருக்கிப் பொலிவு கண்டார் பசுபதியார். காலத்தின் தேவை நோக்கிச் சிந்தனை நீண்டது. நற்றமிழ் வல்ல சம்பந்தனும் அப்பரும் சுந்தரரும் செய்து காட்டிய தமிழ் வேதம், தேசமெல்லாம் கேட்கும் சீரிய தொண்டு, காலர் தந்த கடுவினைக்கு மருந்தென நினைத்தார். தேவார, திருவாசகப் பாசுரங்களை இனிமையும் கனிவும் நிரம்பித் ததும்பப் பாடிப் பஜனைகளையும், கூட்டுப் பிரார்த்தனைகளையும் வண்ணையில் நடத்திச் சைவர்களுக்கு வழிகாட்டினர்.

சைவப் பெரு மக்களின் உரிமையும் கடமையும் எவை எனச் சிந்திக்கவைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த செட்டியார் அவர்கள், வேகமாகச் செயற்படத் தொடங்கினர்; கால் தேய நடந்தார்; கை சோரக் கும்பிட்டார். எனினும் கருத்துத் தேயா உள்ளத்தராய், நல்ல வல்லவர்கள் சிலரின் பக்க பலத்தோடு, நாவலர் கனவை நனவாக்க **1888** ஆம் ஆண்டு சைவபரிபாலன சபையை நிறுவி ஆக்கப்பணிகள் பலவற்றுக்குக் கால்கோள் செய்த பெருமை இவரையே சாரும். இதே காலத்தில் தென் இலங்கையிலும், தென் இந்தியாவிலும் பௌத்த, சைவத் தாபனங்கள் சில தோன்றலாயின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இவ்வியக்கம் வலுப்பெற்றது.

நாவலர் பெருமானின் சிந்தையில் உதித்த பணி, அவர் காலத்தில் சைவப் பெருமக்கள் விரும்பிய அளவு விருத்தியடையவில்லை என்பது கசப்பான உண்மையே. ஆட்சியாளரின் அனுதரவும், மிசனரிமாரின் அயரா உழைப்பும், எம்மவர் ''தூக்கமும்'' நாவலரின் உள்ளத்தை எத்துணை புண்படுத்தியது என்பதற்கு அப்பெரியார் பிரசங்கங்கள் சான்று. இந்த அவலமான நிலையில் கூதல் போக்கும் ஆதவனாய்த் தோன்றியது, யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை. இச்சபையின் சூத்திரதாரிகளில் முக்கியமான ஒருவராய்த் தொண்டாற்றிய பசுபதிச் செட்டியார் **1890** ஆம் ஆண்டு ஆடிமாதம் **19** ஆம் தேதி கூடிய சைவ பரிபாலன சபைக் கூட்டத்தில், வரலாற்றுப் பெருமை படைந்த தீர்மானமொன்றை நிறைவேற்றிப் பெருமை கொண்டார். திருவாளர் எஸ். நாகலிங்கம் அவர்களின் பட்டணப் பாடசாலையை கையேற்று நடாத்த வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட தீர்மானம், தமிழுக்கும் சைவத்திற்கும் பெரு வெற்றியாய், நாவலர் அரன் நிழலிருந்து ஆசி கூற, மன்னவர் உளங் களிகூர, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியாக மலர்ந்து இன்றும் கலை மணங் கமிழ்கின்றது என்றால், பசுபதிச் செட்டியாரின் தீர்க்க தரிசனத்தின் செம்மை கூறவல்லேமல்லோம்.

காலத்தால் அழியாத கற்றூண்களும் கட்டிடமும் இன்றும் இக்கல்லூரியின் ஆக்கத்திற்கு அரும்பாடு பட்ட அத்தனை பெரியார்களின் சிந்தனைச் செழிப்பைப் பேசி நிற்கின்றன. இவை போன்ற செயல்களே ''கல்லும் சொல்லாதோ கவி'' என்று பாடவைத்தது போலும். கல்லூரி நிறுவியது போதும் என்று அமைதி கொண்டாரல்லர். கல்லூரிக்கும், சமூகத்துக்கும் பணி புரிந்த பெருமக்களை வருங்காலச் சந்ததியினர் நன்றிக் கடனுடன் நினைவுகூரும் பண்பைப் பேணு முகத்தால், அவர்கள் ஞாபகார்த்தப் பரிசில்கள் பல வழங்கத் திட்டம் தீட்டி ''அப்பாலும் அடிசார்ந்தார்க்கும் அடியேன்'' என்று கூறும் பாரம்பரியம் பேணி ஆவணமும் செய்தார்கள் செட்டியார் அவர்கள். அதை இங்கு காண்பது பொருத்தமுடைத்தது.

**Extract of the relevent portion of a Deed written by Muththucumara Chettiar Pasupathi Chettiar. No. Jaffna D 16/122—1177.**

> " The said prizes are to be awarded in the names of the following gentlemen who have either been or are instrumental in establishing the said Hindu College and have rendered material help to promote its interests viz. (1) Arumuganavalar Avargal, (2) Thamotharampillai Chellappah Pillai Esq. (3) Sinnathamby Nagalingam Esq. (4) William Nevins Esq. etc. etc......... and also in the names of those gentlemen whose memories are in the opinion of the standing Committee of the Board of Directors worthy of being perpetuated by virtue of their having done anything to the promothion of the interest of the said College."

தேடிவாத கேதீச்சரம் :

பாடல்பெற்ற ஸ்தலங்கள் என்ற வரிசையில், ஈழத்திரு நாட்டிலும் இருதலங்கள் இடம் பெற்று உயர்ந்தன. ''குரை கடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்'' கோண மாமலையையும், பாலாவியின் கரை மேல், பயில்வார் பவம் அறுக்கும் திருக்கேதீச்சரமும், நினைப்பவர் நெஞ்சத்தில் சிவத் தேன் முந்திப் பொழியும் திருத்தலங்களாகும்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியாய், முன்னைப்பழம் பொருட்கும் முன்னைய பழம் பொருளாய், முன்னவர்க்கு முன்னவனாய், இறவா யாக்கைப் பெரியோனாய் நின்று அருள் சுரக்கும் அம்பல வாணன் திருப்பதிக்கு தோற்றமும் மறைவும் உண்டு கொல்? இல்லை. பின்னை எங்ஙனம் மண்ணும் கடலும் மறைக்கின்றன இவன் திருத்தலங்களை? என்று சிந்திக்குங் கால், அவன் பேரருட் கருணையும் திருவிளையாடல் களின் நோக்கமும் பளிச்சிடுகின்றன. பசிவந்தபோது பச்சிளம் குழந்தை அழுது தாயை அழைத்து இன்ன முதம் பெறுகிறது. ஆணவம் என்னும் சமியாக் குணத்தால் அல்லற்படும் ஆன்மாக்கள் அழுது அழுது ''தேடிக் கண்டு கொள'' ஒரு வாய்ப்புத்தந்து கரந்துறையும் திருவிளையாடல்கள் அன்றோ மண் மூடுதலும், கடல் கொள்ளு தலும். இந்த வகையில் நாம் தேடிக் கண்டு கொள, கண்டு கொண்ட போது ''திருமாலொடு நான் முகனும் தேடிக் கொணுத தேவனைக் தேடிக் கண்டு கொண்டேன்'' என்று கூத்தாடிப் பரவசமடைய வரலாற்று வரம்புகட்கு அப்பாற் பட்டதும் ''ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் மண்டோதரிக்குப் பேரருள் தந்தது மாகிய கேதீச்சரம்'' 500 ஆண்டுகளுக்கு முன் மணலால் மூடப்பட்டது.

சம்பந்தரும், சுந்தரரும் போற்றிப்பாடிய பாசுரங்கள் கேதீச்சரத்தானை நினைவூட்டி நின்றன எனினும், போர்த்துக்கீயர், ஒல்லாந்தர் காலங்களில் கற்கோயிலாக அமைய வாய்ப்பளிக்கவில்லை. ஆங்கிலேயர் வருகையும், அவர்கள் விரிந்த மனமும் சைவ மக்கள் உணர்ச்சிக்கு வரம்பு கட்ட வில்லை. ஆலயத்தைப் புதுப் பிக்கும் ஆர்வம் அவ்வப்போது தோன்றிய சைவப் பெரியார் உள்ளங்களில் வளர்வதாயிற்று. அவருள்ளும் ''நான்மறையின் தனித் துணையாய்'' ஆகமமும் திரு முறையும் காத்து நின்ற நானைத் தலைவரும் நாவலரின் திருவுள்ளத்துக் காட்டாறு போல் பெருகிய கேதீச்சரம் காணும் வேட்கை, ''திருக்கேதீச்சரம் ஒரு தேன் பொந்து, அதைச் சென்றடையுங்கள்'' என்று பேச வைத்தது. நாவலர் பெருமானின் சிவ ஒலி சைவர்கள் செவிகளில் இடை விடாது ஒலித்துக்கொண்டே இருந்தது. ஒலியின் சத்தியை இன்று நாம் உணர்கின்றோம்; விஞ்ஞானம் உணர்த்துகின்றது. சாதாரண ஒலிக்கே இந்த ஆற்றல் உண்டென்றால் நாளும், தொண்டர் நாதனை ஏற்றி ஏற்றி ஏற்றம் பெற்ற தெய்வத் திருவொலிக்கு , கால மெல்லாம் சைவமும் தமிழும் காத்த தொண்டால் முறுக் கேறிய மூதொலிக்கு, எத்துணை ஆற்றல் உண்டென்று சொல்லவும் வேண்டுமோ? சைவப் பெருமக்களின் ''சிந்திப்பரியன சிந்திக்கும்'' பேராற்றல், எதிர்த்து நின்ற சக்திகள் அனைத்தையும் வெற்றி கண்டதை விரிக்கிற் பெருகும்; வரலாறு புகலும்.

ஈற்றில் 1893 இல், அரசினரால் ஏலத்தில் விற்கப்பட்ட, கேதீச்சரம் என்று கருதப்பட்ட மண்மேட்டை திரு. பழனியப்பச் செட்டியார் அவர்கள் ரூபா 3,100க்கு வாங்கினர். இங்கு நகரத்தார் புரிந்த பெரும் பணியை இலங்கை வாழ் சைவ மக்கள் நன்றிக் கடனுடன் நினைத்து, அவர்களை வாயார வாழ்த்தி, உச்சி மேற் கொள்ளக் கடமைப்பட்டவர்கள்.

தேன் பொந்தை நுகருதல், கருவிலேயே தேன் சுவை தெரிந்த கோத்தும்பிக்கன்றோ முடியும்? ''நினைக்க இனிக்கும் பரம் பரனை'' பரம்பரையாகத் ''தின்றும் கடித்தும் திருத்தியும்'' பழக்கப்பட்ட பசுபதிச் செட்டியார் அவர்கள் தேன் பொந்தைச் சுவைத்து எம்மைச் சுவைக்க வைக்கப் புறப்பட்டார்கள். திருக் கேதீச்சர வரலாற்றில் 1894 ஆம் ஆண்டு தைமாதம் தனியான ஒரு அத்தியாயம். செட்டியார் அவர்கள் மேசன்மார், கூலியாட்கள் சகிதம் கேதீச்சரம் சென்று, நியமப்படி செய்வன செய்து, காடு வெட்டி, ஆராய்ச்சி செய்த போது செலவிடப்பட்ட தொகை ரூபா 8,000 க்கு மேல்.

அகழ் வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் சோழர் காலக் கிணறும், போர்த்துக்கேயர் காலத்துக்கு முன் வழிபட்டதாகக் கருதப்படும் 'சிவலிங்கமும்', நந்தி, கணேசர் உருவங்களும் குறிப்பிடத்தக்கன. இச்சிவலிங்கம் அகழ்ந்த போது மண் வெட்டியால் மறுவுற்ற காரணத்தால், கருவறையில் இடம் பெறாது, இன்று கோயில் மேற்குப் பிரகாரத்தில் எழுந்தருளப் பெற்று எம்மவர்க்கு அன்பு நீர் சொரியும் வாய்ப்பைத் தந்து கொண்டிருக்கின்ற தென்றால் அதுவும் அவன் திரு விளையாடலேயாம். காயமடைந்த காரணத்தால் கருவறையில் புராதன சிவலிங்கம் எழுந்தருள முடியவில்லை என்று காலம் கருதுவதிலும் பார்க்க, நரிகளின் ஊளையின் மத்தியிலும் நஞ்சு உமிழும் நாகங்களின் பக்கலிலும், சிவநாமம் ஒன்றையே துணையாகக் கொண்டு தனக்குக் கோயில் கண்ட பசுபதிக்கு, ஒரு வரம் தந்தான் கேதீச்சர நாதன் என்பதே பொருந்தும். இது

அவனுக்குப் பழக்கப்பட்டதுஒன்று அன்றே? வந்திக்காக மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு புண் சுமந்த பொன் மேனியனல்லவா? ஓரமாக அமர்ந்து உத்தம தொண்டர் காசியில் இருந்து சுமந்து வந்த சிவலிங்கம் கருவறையில் அமர்ந்தருள இன்னருள் சுரந்தவன் கேதீச்சரத்தான். இச்சிவலிங்கமே இன்றும் கருவறையில் எழுந்தருளி எம் இருள் அறுத்து அருளுகின்ற தென்று நினையும் போதும், **1903** ஆம் ஆண்டு யூன் மாதம் 28ஆம் திகதி ஒரு சிறிய கோவில் இப் பெருமகனுரால் கட்டப்பட்டது என்பதை அறியும் போதும் சைவமக்கள் உள்ளமெல்லாம் உவகையால் விம்மி ஆனந்தக் கண்ணீர் பாய்கின்றது.

கோயிலும், சுனையும், கோபுரமும் கண்டு திருக்கேதீச்சரம் அமர்ந்த பிரானுக்குக் குட முழுக்குச் செய்யும் வரலாற்றுப் பெருமை வாய்ந்த இத்திருநாளில், சிவச் செம்மல் பசுபதிச் செட்டியார் அவர்களின் திருநாமம், தொண்டே உருவான தோற்றம், சிவநாமம் சிந்தை மறவாச் சீலம், இத்தனையும் சைவ பெரு மக்கள் திருவுள்ளங்களில் என்றும் நிலைக்க வைத்தலே ஒரு மாபெரும் சிவப் பேருகும். சிறப்பாக, வருங்காலத்தை வளமாக்கத் துடிக்கும் இளைஞர்கள் சைவத் திரு நிரம்பிய பசுபதிச் செட்டியார் அவர்களின் வாழ்வும் தொண்டும் தெரிந்து நிற்றல் நாட்டுக்குப் நலம் தரும் என்று கருதுகின்ரேம்.

''பத்தாகிய தொண்டர் பசுபதிச் செட்டியார்
பெருமையை நாளும் அவர்க்கு நல்கும்
நம்பவர்தாம் அளக்க வல்லார்.''

# சிவாகமஞானபாநு
# சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள்

"அழலாடி"

''தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.''
(திருமந்திரம்)

சிவாசாரியர் திலகமாய்த் திகழ்ந்து, சைவ சமய வளர்ச்சிக்கு வேண்டிய வழிமுறைகளை ஆராய்ந்து, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுக்குப் பின்னர், இவ்விருபதாம் நூற்றுண்டிற் சிவதொண்டாற்றியவர் அச்சுவேலி சிவாகமஞானபாநு சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்களவர்களாவர். ஈசான சிவாசாரியர் எனும் தீக்ஷாநாமம் பூண்ட குருக்களவர்கள் ஆதிசைவ அந்தணர் குலத்திற் கௌதம கோத்திரத்தில், அச்சுவேலி ந. சபாபதிக் குருக்களின் புத்திரராக விய வருடம் கார்த்திகை மாதம் இருபத்தோராம் தேதி *(16.11.1886)* அவதரித்தார்கள். இவர் தாயார் சாமிக்குருக்கள் என்று வழங்கப்பெறும் அச்சுவேலி கு. சுவாமிநாதக்குருக்களின் புதல்வி தங்கம்மா அம்மையாராவர். நீர்வேலி ச. சிவப்பிரகாச பண்டிதர், நல்லூர் த. கைலாசபிள்ளை, சுன்னுகம் அ. குமாரசுவாமிப்புலவர் ஆகியோரிடம் பயின்ற குருக்களவர்கள், சங்கானை அ. அருணுசலசாஸ்திரிகள், புலோலி ம. முத்துக்குமார சுவாமிக்குருக்கள் ஆகியோரிடம் சிவாகமங்களில் தமக்கேற்பட்ட ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தவராவர்; சிவப்பிரகாசபண்டிதரின் தந்தையுடைய சரிதத்தைச் சிவசங்கரபண்டிதர் சரித்திரம் (1954) என எழுதியதோடு அமையாது சங்கரபண்டிதர் பிராசாத சட்சுலோகிக்கு எழுதிய தமிழுரையை வெளிப்படுத்தியும் தம்மாசிரியர் நன்றியை மறவாது நின்றவர். இவர் ஊரெழு சிவ. சதாசிவக்குருக்களிடம் **1910** இல் ஆசார்யாபிஷேகம் பெற்ருர். மாதகல் பரமசுவாமிக் குருக்களின் புதல்வி பராசக்தி அம்மாளை மணம்புரிந்த குருக்களவர்களுக்கு வைத்தீசுவரக் குருக்கள், மனோன்மணி அம்மாள் ஆகியோர் மக்களாவர்; திருக்கேதீச்சரப் புராணம் பாடிய வைத்தீசுவரக் குருக்கள் இவர் புதல்வர் என்பது ஈண்டு சுட்டற்பாற்று.

சைவவித்தியாசாலை தாபித்தல், குருகுல பாடசாலை நடாத்தல், சமயநூல்களை முறைப்படி கற்பித்தல், சைவப் பிரசங்கம் செய்வித்தல், புராண படனம் செய்வித்தல், சமயப்பத்திரிகை வெளியிடல், சமயநூல்களை அழியாது பாதுகாத்தல், புதிய சமய நூல்களை எழுதி வெளியிடல் முதலிய செயல்கள் சைவசமய வளர்ச்சிக்கு இன்றியமையாதவை என்று சைவப்பிரசாரகர் நாவலரவர்கள் கூறிவந்தன வற்றின் உண்மையுணர்ந்து அடியொற்றிக் குருக்களவர்கள் செயலாற்றிவந்தனர்.

1911 ஆம் ஆண்டு முதல் 1915 ஆம் ஆண்டு வரை குருக்களவர்கள் தம்மில்லத்திற் அந்தணச் சிறுர்க்கும் சைவப்பிள்ளைகளுக்கும் தமிழிலும் சங்கதத்திலும் சமய நூல்களையும் நீதி நூல்களையும் கருவி நூல்களையும் கற்பித்துவந்தார். காலயுத்தி வருடம் சித்திரை மாதம் (1918) அச்சுவேலியிற் பிள்ளையார் கோயில் மேலை வீதியிற் குருக்களவர்கள் சரஸ்வதி வித்தியாசாலை எனப் பெயரிய சைவ வித்தியாசாலையை ஆரம்பித்துத் திறம்பட நடாத்தி வந்தார். வித்தியாசாலையின் பரிபாலகாரகப் பணிபுரிந்ததோடு அதன் ஆசிரியராகவும் 1928 ஆம் ஆண்டுவரை குருக்களவர்கள் சேவையாற்றினுர்கள்; அதன் பின் வித்தியாசாலையை நிர்வகிப்ப தோடு திருப்திகாண வேண்டிய நிலைமை ஏற்பட்டமைக்கு அவர் புரிந்த பன்முகப்பட்ட சைவப்பணிகள் காரணமாயின. ஆயினும் ஆசிரியர் பணி வேறு வழிகளிற் குருக்களவர்களின் வாழ்க்கையிலே தொடர்ந்தது. யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் யாழ்ப்பாண சைவபரிபாலன சபையினர் நடாத்திய குருகுல வகுப்புக்குக் குருக்களவர்கள் சிவாகமங்களையும் பத்ததிகளையும் போதித்துச் சிவாசாரிய திலகமாக மிளிர்ந்தார். குருக்களவர்கள் கொழும்பு விவேகானந்த சபையினரின் சமய பாட பரீட்சகராகவும் திருக்கேதீச்சரத்தில் நிலவிய சிவானந்த குருகுலத்தின் பிரதமகுருவாகவும் ஆற்றிய பணிகளையும் நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடாத்தப்பெற்ற வேதாகம பாடசாலைக்குச் செய்த தொண்டுகளும், ஈண்டு மனங்கொளத் தக்கவை. இவர் பெருமுயற்சியினுல் மருதன்கேணியிலும் சோறம்பற்றிலும் சைவப்பள்ளிக்கூடங்கள் நிறுவப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

சைவ சமயத்தைத் பொதுமக்களுக்குத் தெளிவாக உணர்த்தும் ஆசை மீதூர்ந்து குருக்களவர்கள் தோற்றுவித்து நடாத்திய சஞ்சிகை சைவசாஸ்திரபரிபாலனம் ஆகும். இச்சஞ்சிகை 1939 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதல் 1941 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரை வெளி வந்தது. தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் பேர்பெற்ற சைவப்பெரியார் பலர் இச்சஞ்சிகைக்கு விடயதானம் செய்திருக்கின்றனர். இச்சஞ்சிகையைக் குருக்களவர்கள் தொடர்ந்து வெளியிட முடியாமற்போனது சைவரின் தவக்குறையே எனில், மிகையாகாது. இவர் யாழ்ப்பாணம் வேதாகம சைவ சித்தாந்த சங்கத்தினர் வெளியிட்ட 'ஆறுமுக நாவலர்' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் விளங்கினுர். மேலும் த. கைலாசபிள்ளை போன்ருேர் முன்னின்று நிறுவிய சைவாபிமானிகள் சங்கம் மாதமொருமுறை வெளியிட்ட சஞ்சிகைகளையும் குருக்களவர்கள் பார்வையிட்டு வெளியிடுசெய்ய வுதவினுர்.

சைவசமயம் பற்றி எழுந்த நூல்களை அழியாது பாதுக்காக்கவும் போற்றவும் குருக்களவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பரிய. வேதாகமங்கள், சைவசித்தாந்த சாத்திரங்கள், திருமுறைகள் முதலியனவற்றைத் துறைபோகக் கற்ற குருக்களவர்கள் சங்கதத்தையும் தமிழையும் ஒப்பநோக்கும் மனப்பக்குவமுடைய பிராமணேத்தமராக விளங்கி, வேதாகமங்களைப் போலவே தேவாரமாதி அருணூல்களையும் போற்றிச் சைவசமயத்தைச் சைவர் உணர்ந்து போற்றுமாறு பழைய சமய நூல்களை அடியொற்றிப் புதிய சைவ சமய நூல்களைக் காலத்திற்கேற்ற முறையில் ஆக்கியளித்துள்ளார். அவை சிறுர் முதற் சிவாசாரியர் வரை படித்துப் பயன் பெறத் தக்கவை; மேலும் சைவ சித்தாந்த உண்மைகளை மரபு பிறழாது எடுத்துரைப்பனவுமாம்.

குருக்களவர்கள் 1933 ஆம் ஆண்டு முதல் எழுதி வெளியிட்ட சைவப்பிரகாசிகை எனும் தொடரில் இடம் பெறும் ஐந்து நூல்களும் படிப்போரின் வயதிற்கேற்ப வகைப்படுத்தப் பெற்றவை; மாணுக்களுக்குச் சைவ சமயவுணர்ச்சியோடு ஒழுக்கத்தையும் இயைந்த திருமுறைப் பாசுரங்களின் உதவியோடு கதைகள் வாயிலாகப் புகட்டுபவை. இவை சிறிதும் கல்வியறிவுடைய முதியோர்க்கும் பெரும் பயன் தருவன. பசு பதி பாசமாம் முப்பொருளைப் பற்றி மாணுக்கருக்குப் பயன்படும் முறையிற் குருக்களவர்கள் இயற்றிய முப்பொருள் விளக்கம் (1960) நாவலரவர்களின் சைவ வினுவிடைக்கு ஒரு பாடியமாய்ச் சிவஞான சித்தியாரின் சாரமாய் அமைவதெனப் போற்றப்பட்டதாகும். இவர் யாழ்ப்பாணம் வேதாகம சைவசித்தாந்த சங்கத்தினருக்காக எழுதிய ஆலய அமைப்பு, ஆலய சேவை (1949) என்பனவும் சைவாபிமான சங்கத்தினருக்காக எழுதிய சைவ சாஸ்திரப் பிரமாணம் (1934) என்பதுவும் கொழும்பு விவேகானந்த சபையினருக்காகத் திரட்டிக் குறிப்புரை எழுதிய திருவருட் பாத்திரட்டும் மாணுக்களை இலக்காகக் கொண்டு எழுதப் பெற்றவை என்று கருதலாம். குருக்களவர்கள் விநாயக பரத்துவத்தை நாட்டும் சரிதங்களைப் பல நூல்களிலிருந்து திரட்டி விளக்கமாகவும் சுருக்கமாகவும் விநாயகபரத்துவம் (1934) எனும் நூலிலே தந்துள்ளார். தாம் நித்திய

நைமித்திகக் கிரியைகளை நடாத்தி வழிபட்டு வந்த அச்சுவேலி சித்திவிநாயகர் மீது குருக்கள் அவர்கள் பாடிய ஊஞ்சலே (1935) அவர் முதன் முதலாக வெளியிட்ட நூல் என்பதும் ஈண்டு மனங்கொளத்தக்கது. விநாயகபரத்துவத்தை ஞாபகமூட்டும் வகையில் அமைந்தது குருக்களவர்கள் இயற்றிய புவனேஸ்வரி மகத்துவம் (1939) எனும் நூலாகும். ஸ்ரீ மெய்கண்டான் சித்தாந்த மாநாட்டிற்கு 1931 ஆம் ஆண்டு குருக்கள் அவர்களால் எழுதப்பெற்றுச் சன்மானிக்கப்பெற்ற சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திர விளக்கம் எனும் கட்டுரை தருமையாதீனத்தால் விசேட மலராகப் பதிப்பிக்கப்பெற்றதாகும். சைவம் தமிழ்ச்சமயம் என்று கூறி வேதாகமங்களை வெறுப்பவரைத் தெருட்ட எழுந்தது குருக்களவர்களின் வேதாகம நிரூபணம் (முதற்பாகம் 1950; இரண்டாம் பாகம் 1951)

மந்திரம், கிரியை, பாவனை மூன்றும் வழுவாது பிரதிட்டை உற்சவாதி கிரியைகள் செய்வதிற் பிரசித்தி பெற்றவர் குருக்களவர்கள்; ஆலய அமைப்பு, விக்கிரக அமைப்பு என்பனவற்றிலும் துறைபோனவர். திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைத் தலைவராக விளங்கிய சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்,

> " இச்சபை தோன்றிய காலம் முதலாக வேத ஆகம வழுவின்றி ஆலயப் புனருத்தாரணப் பணி நடைபெறுவதற்கு அவ்வப்போது ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் தந்து வருகின்றார். ஆகமரீதியில் ஆலயம் அமைய இவர் தந்த ஆலோசனைகள் எங்ஙனம் உருப் பெற்றிருக்கின்றன என்பதை இதுவரை ஆலயத்தில் நடைபெற்றிருக்கும் திருப்பணியின் மூலம் பெருமளவு அறியத்தக்கதாய் இருக்கின்றது "

என அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் பாராட்டு விழா மலரிற் (1960, பக். 20) குறிப்பிட்டுள்ளார். 1952ஆம் ஆண்டில் கே. வி. எஸ் சுந்தரம் அவர்கள் (இன்றைய மதுரை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்) திருப்பணிச் சபையினருக்காகத் தம் செலவிலே திறம்பட நடாத்திய குடமுழுக்கு விழாவினைப் பக்தியுடனும் சிரத்தையுடனும் குறித்த நேரத்திற் சிறப்பாகச் செய்துமுடித்தவர்கள் குருக்களவர்கள்; 1960 ஆம் ஆண்டிலே நடைபெற்ற குடமுழுக்கு விழாவிலும் குருக்களவர்கள் கலந்து சிறப்பித்தார். தம்முன்னோர் பரிபாலித்த வைரவர் கோயில் திருப்பணியைத் தம் செலவிலே நிறைவேற்றி 1958 இல் புனருத்தாரண கும்பாபிஷேகம் நடாத்திய குருக்களவர்கள் செய்தும் செய்வித்தும் வைத்த கும்பாபிஷேகம், உற்சவம் மேலும் பலப்பல.

சைவக்கிரியைகளைச் செய்வதிலும் செய்விப்பதிலும் தன்னிகரற்று விளங்கிய குருக்களவர்கள் அவற்றைத் திறம்பட நடாத்துவதற்கும் விளங்கிக்கொள்வதற்கும் பல அரிய நூல்களை எழுதி உபகரித்துள்ளார். சிவபூசை விளக்கம் (1928), சிவபூசாவிதி (1937), மகோற்சவ சந்திரிகை (1932), மகோற்சவ விளக்கம் (1958), பிராசாத தீபவுரை (1933), சிராத்த தீபிகை (1933), அனுட்டான அகவலுரை (1937) என்பன தமிழில் எழுதப்பட்டவை. தமிழ்மறை மேற்கோள்களுடன் சிவபூசையின் உண்மைக் கருத்துக்களைத் தெரிய விரும்புவோர்க்குச் சிறந்த கருவியாகத் திகழ்வது சிவபூசை விளக்கம். சிவாலயங்களிற் செய்யப்படும் நித்திய நைமித்திய சைவக் கிரியைகள் யாவும் உயிர்களுக்குத் துன்பம் நீக்கி இன்பப் பெரும்பேறு உதவுதலையே குறிப்பாகக் கொண்டுள்ளன என்பதைப் பல நூற் பிரமாணங்காட்டி இனிது விளக்கும் திட்பநுட்பம் வாய்ந்தது மகோற்சவ சந்திரிகை; சந்திரிகையினைத் திருத்தியும் புதுக்கியும் விரித்தும் அமைவது மகோற்சவ விளக்கம். பிராசாததீபத்திற்கு எழுந்த தெளிவான உரைநூல் குருக்களவர்கள் எழுதிய தென்று சூரியனார்கோயிலாதீனம் இலக்கணம் முத்துகுமாரத் தம்பிரான் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது. திவசம், திதி, குருபூசை எனப்படும் சிரார்த்தமாம் அபரக் கிரியையின் உண்மை நெறி காட்டுவதாகவும் அதனை விடுக்க முயல்வோரைத் தடுத்து நன்னெறி காட்டுவதாகவும் விளங்குவது சிராத்ததீபிகை. குருக்களவர்கள் விரதாதி விஷயங்களிற் சிலர் எழுதிய நிர்ணயங்களையும் கருத்துக்களையும் நிராகரித்துச் சில பத்திரிகைகளும் எழுதி வெளியிட்டுள்ளார். இந்து சாதனம், ஈழகேசரி, சோதிட பரிபாலினி, சுவர்தர்ம போதம், சிவநேசன் முதலிய பத்திரிகைகளிற் குருக்களவர்கள் எழுதிய கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கவை. சங்கதத்திலே பிரதிட்டை, பூசை, சிரார்த்தம், சர்தியாவர்தனம் முதலியனபற்றிக் குருக்களவர்கள் எழுதியுதவிய நூல்கள் ஆசாரியர்கட்குப் பேருதவியாக அமைவன.

சைவப்பணியிலே திரிகரண சுத்தியுடன் தொண்டாற்றிய சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களவர்கள் சாதாரண வருடம் மாசி மாதம் (1971) திருவடி சேர்ந்தனர். திருக்கேதீச்சரப் பெருங்கோயில் குடமுழுக்குக் காணும் இற்றை ஞான்று அத்திருக்கோயிலின் திருப்பணியை இறுதிக்கால மேல் மூச்சாகக் கொண்டு விளங்கிய குருக்கள் ஐயா அவர்களை நினைவுகூர்ந்து இறைஞ்சுவோமாக.

# திருகேதீச்சர ஆலயமும் மாந்தைத் துறைமுகமும்

— சேர். கந்தையா வைத்தியநாதன் —

திருக்கேதீச்சரத்து இறைவன் புகழை நாயன்மார் இருவர் பாடிப் பரவினர். அவர்களுள் ஒருவர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்; மற்றவர் ஒன்பதாம் நூற்றாண்டில் சைவம் வளர்த்த சுந்தரமூர்த்தி சுவாமிகள். கேதீச்சரத்து இறைவனைப் பாடிய அவர்கள் மாந்தையின் மாண்பினையும் போற்றிப் புகழ்ந்தனர். மாந்தைத்துறைமுகத்தில் தங்கி நின்ற பெரும் கப்பல்களையும் மாந்தைப்பட்டினத்தில் அமைந்து விளங்கிய பல அடுக்கு மாளிகைகளையும் மலர்ச் சோலைகளையும் பழத் தோட்டங்களையும் தம் தேவாரங்களில் தீட்டிக் கவின்பெறக் காட்டியுள்ளனர். பாலாவியின் முகத்துவாரத்தில் மாந்தைத் துறைமுகம் அமைந்து இருந்தது. அங்கே 'மலை போன்ற அலைகள் எழுந்தும் விழுந்தும்' காட்சியளித்தன. களஞ்சியக் கட்டிடங்களும், பாலத்துறையும் பாலாவியின் தென்கரையில் அமைந்து விளங்கின. அவ்விடம் இன்றும் 'வங்காலை' (வங்கம்: கப்பல், காலை: கப்பல்கள் தங்கும் நிலையம்) என்ற பெயருடன் நிலவக் காணலாம். பாலாவியின் வடகரையில் திருக்கேதீச்சர ஆலயம் அமைந்து திகழ்ந்தது. அதையடுத்து அதன் ஆட்சியாளரின் இல்லங்களும் மக்கள் வாழ்ந்த வளம் மிக்க மாளிகைகளும் காணப்பட்டன. மாளிகைத்திடல் (மாளிகைகள் நிலவிய உயர்ந்தவிடம்), பாப்பாமோட்டை (அந்தணர்க்குரிய இடங்கள்), கோயிற்குளம் (கோயில் நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சும் குளம்) என்ற பெயர்களுடன் இன்றும் அவை இருப்பதை நாம் காணலாம்.

பண்டைக் காலத்தில் அரேபியாக் கடல் வழியாக கப்பற் போக்கு வரத்து நடந்தது. உரோமாபுரி, கிரேக்கம், பலஸ்தீனம், மெசப்பத்தேமியா, எகிப்து போன்ற நாடுகளிலிருந்து கப்பல்கள் அரேபியாக் கடலுக்கூடாகச் சென்றன. அவ்வாறு சென்ற கப்பல்களுக்குத் தென்மேல் பருவக் காற்றால் அல்லல் எதுவும் ஏற்படாமல் மாந்தைத் துறைமுகம் பாதுகாப்பளித்தது. மாந்தைத் துறைமுகம் இராமர் அணையின் பவளக் கற்பாறைக்கும் மன்னார்த் தீவுக்கும் தெற்கே சில கல் தொலைவில் அமைந்திருந்தது. அதனால் தென் மேல் பருவக் காற்றால் பாதிக்கப்படாத ஒதுக்கில் மாந்தைத்துறைமுகம் இருந்தது. தென்மேல் பருவக் காற்றின் கொடுமையிலிருந்து தப்புவதற்குக் கப்பல்கள் மாந்தைத் துறைமுகத்தில் தஞ்சம் புகுந்தன என்று கூறலாம். மன்னார்த் தீவுக்கும், இலங்கைக் கரைக்கும் இடையே இருந்த பகுதி அன்று கப்பற் போக்குவரத்திற்கு ஏற்றதாக விளங்கிற்று. எதிர்ப்பக்கமாக ஓடிய நீரோட்டங்களால் இப்பகுதியில் மணற்றிடர்கள் எதுவும் ஏற்படவில்லை. தென் கிழக்கு, தென்மேற்குக் காற்றுக்கள் எதிர்ப்பக்கமாக நீரோட்டங்களைச் செலுத்தக் காரணமாயின. எனவே தடைகள் எதுவுமின்றி ஆழமாக அமைந்திருந்த இக் கால்வாய்க் கூடாகக் கப்பல்கள் எளிதாகச் சென்றுவர முடிந்தது. ஆனால், இவ்வாறு ஆழமும் அகலமும் உடையதாய்ச் சிறப்புடன் விளங்கிய மன்னார்க் கால்வாய் சுரி நிறைந்து கப்பற்போக்கு வரத்திற்குத் தடையாய் மாறியது எங்ஙனம்? மாந்தைத் துறைமுகம் மணற் குன்றுகள் நிறைந்தும், அலைபுரண்டோடிய பாலாவி பள்ளமாகவும், அதனையடுத்த பாகங்கள் மணற்றிடராகவும் மாறியது எவ்வாறு ?

மாத்தளைப் பகுதியின் பரந்த பள்ளத்தாக்கில் ஓடிய நீரும், மல்வத்து ஓயாவும் சேர்ந்து பாலாவி என்ற பெயரோடு அன்று மாந்தைக் கடலில் கலந்தது. அவ்வாறு ஓடிய மல்வத்து ஓயா தன்படுக்கையை மாற்றித் தெற்குப் பக்கமாக மதவாச்சிப் பகுதிக்கூடாகப் பாய்வதாயிற்று. இக்கருத்தையே அண்மையில் இலங்கையில் விஞ்ஞான அடிப்படையில் மல்வத்து ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தைக் குறித்து ஆய்ந்த ரூசியப் பேராசிரியரும் வலியுறுத்திச் சென்றார். இஃது இவ்வாறாகப், புதிதாக வெட்டப் பெற்ற ''மாபெருங் குளம்'' ( **Giant's Tank**) ஒன்று பாலாவியை இரண்டாகப் பிரித்து விட்டது. அவ்வாறு பிரிந்த நீரின் ஒரு பகுதி அருவியாறு என்ற பெயரோடு இன்று மன்னார் தீவுக்குப் பல கல் தொலைவில் கடலில் விழுகின்றது. இவ்வாறு இரண்டாகப் பிரிந்ததன் காரணமாகப் பாலாவியின் முகத்துவாரம் சேறும், சுரியும் நிறைந்ததாக மாறிற்று. மேலும், புதிதாக அமைக்கப்பட்ட புகைவண்டிப் பாதையும், கற்பாலதையும் மன்னார்க் கால்வாயை

முற்றாக மறைந்து விட்டன. புகைவண்டிப் பாதையாலும் கற்பாதையாலும் மன்னார்த்தீவு இலங்கையோடு இணைக்கப்பட்டபோது, தலைமன்னார் இந்தியாவிற்குக் கிட்டிய துறைமுகமாயிற்று. பராக்கிரமபாகு மன்னன் காலத்திருந்தும், போர்த்துக்கேயர் வருகையிலிருந்தும் தலைமன்னார் சிறந்த துறைமுகமாக அமைந்து விளங்கிற்று. மாந்தை எவ்வாறு முக்கிய துறைமுகமாக விளங்கியதோ அதே போன்று தலைமன்னாரும் முக்கியம் பெற்றுத் திகழத் தொடங்கியது. கி. மு. பதினோராம் நூற்றாண்டின் முன் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக மாதோட்டம் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. இந்தியாவிற்கும் ஈழத்திற்கும் உரிய சிறந்த துறைமுகமாகவும் அமைந்து விளங்கிற்று. அல்லாமலும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பெற்ற பண்டங்களை மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் துறைமுகமாகவும் இருந்தது.

தமிழகத்தின் தென்கரையிலே அமைந்து மிளிர்ந்த ''இராமேஸ்வரத்திற்கு'' ஈடும் இணையும் உள்ள தாய் ஈழத்திலே மன்னார்க்கரையிலே 'திருக்கேதீஸ்வரம்'' அமைந்து விளங்குகின்றதன்றோ! ஆனால் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த அந்நியர் படைகளால் பலமுறை திருக்கேதீச்சரம் அல்லலுக்குள்ளாயிற்று. எனவே, எதிர்க்கரையில் திகழ்ந்த இராமேஸ்வரம் படையெடுப்புக்களால் பங்கப்படாமல் சிறப்புடன் விளங்கத் திருக்கேதீச்சரம் சீரழிந்து சிறப்புக் குன்றிற்று. ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்வு தாழ்விற்கேற்பத் திருக்கேதீச்சரம் உயர்ந்தும் தாழ்ந்தும் வந்தது. சோழ மன்னர்கள் இலங்கையைப் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்த காலத்தில் மாதோட்டம், திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டினதும் அந்தஸ்து உச்ச நிலையை அடைந்தது. ஆனல் அரசியலில் ஏற்பட்ட மாற்றம் அவைகளின் சிறப்பைத் திடீரெனச் சீரழியச் செய்தது. திருக்கேதீச்சரம் சிறப்புடன் இருந்தகாலத்தில் இராஜராஜேஸ்வரம் என்ற பெயரோடும் வழங்கப்படலாயிற்று.

யாழ்ப்பாணத்துச் சிங்கை நகரிலே அரச குடும்பத்தில் பிறந்த காரணததால் பராக்கிரமபாகுமன்னன் யாழ்ப்பாணக் குடா நாட்டின் மேல் அந்தரங்கமான அனுதாப முடையவனாயிருந்தான். இன்னும் முதலாம் சுந்தரபாண்டியன் (கி. பி. 1251 — 1280) ஆட்சிக்காலத்தில் திருக்கேதீச்சரம் அரசனின் ஆதரவைப் பெற்றுப் பாண்டியமன்னர் காலச் சிற்பமுறையில், புதுப்பித்துக் கட்டப்பட்டது. இன்று திருக்கேதீச்சரத்தில் காணப்பெறும் கற்சிற்பங்கள் இவ்வுண்மையை வலியுறுத்தும் சான்றுகளாம். மேலும் குடுமியா மலையிலுள்ள சடாவர்மன் வீரபாண்டியனின் கல்வெட்டு ஒன்று அவன் ஈழத்தில் ஈட்டிய வெற்றியைப் புகழ்ந்து பேசுகின்றது. ஈழத்து அரசனை வென்ற தோடல்லாமல் அவனைக் கப்பம் கட்டுமாறும் செய்தான் என்றும் தனது இரட்டை மீன் முத்திரையையும், கொடியையும் கோணமலையில் (திருக்கோணமலை) பொறித்துத் தன் நாடு திரும்பினுன் என்றும் அக் கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. எனவே சடாவர்மன் ஆட்சிக் காலத்திலே திருக்கேதீச்சரம் அவனின் ஆதரவைப் பெற்றிருக்கலாம். இலங்கையை வென்ற சடாவர்மன் கடல் வழியாகத் திருக்கோணமலைக்குச் சென்றிராவிட்டால் திருக்கேதீச்சரம் அவனாதரவைப் பெற்றிருக்கும்.

போர்த்துக்கேயர் இலங்கையின் வடகரையில் இறங்கியபோது திருக்கேதீச்சரம் இந்துக்களின் முக்கிய வழிபாட்டு ஆலயமாகத் திகழ்ந்தது என்பது திண்ணம். ''எமேர்சன் ரெனந்து' கூறுவதை இங்கு நோக்குவாம்:

''யாழ்ப்பாணத்தைப் பலவந்தமாகக் கைப்பற்றி அங்கே ஆட்சி செய்த மலபார் அரசபரம்பரை அரசுரிமையை ஒழித்து நேரடியான ஆட்சியை 1617 வரையிலும் போர்த்துக்கேயர் ஏற்படுத்தவில்லை. தமது வாணிகப் பெருக்கத்திற்குத் துணைபுரிந்த வளம் மிக்க தென்மாகாணங்களிலும் பார்க்க, தங்கள் குடியேற்றத்திற்குப் பாதுகாப்பளிக்கத் தகுதியுடையதாக இருந்த யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் நீண்ட காலமாக விரும்பி வந்தனர். ஆட்சிக்குப் பணியாத அப்பகுதியில் தமது மதத்தையும் பரப்பப் பாடுபட்டனர். இப்பகுதியைக் கைப்பற்ற 1544 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் முயன்றனர். போர்த்துக்கேயர் டெக்கானில் இந்து ஆலயங்களைக் கொள்ளையடிக்கச் சென்ற போது இவ்வாறு முயன்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டின் தலைவனைக் கண்டு தம் கீழ்ச் சிற்றரசனாக இருந்து கப்பங் கட்டுமாறு வற்புறுத்தினர். அதை விரும்பாத விடத்து அவன் தம்மோடு சேர்ந்து போரிடத் தயாராகவேண்டும் என்று கூறினர். அத்தலைவன் முன்னையதற்கு இணங்கி ஆண்டொன்றுக்கு 4000 டுக்கட்ஸ்க் கப்பங் கட்ட இசைந்தான். அதே ஆண்டில் மன்னார்ப் பகுதி மக்கள் பலர் வண. பிரான்சிஸ் சேவியரின் ஆணையின் கீழ் உரோமன் கத்தோலிக்கராக மாறினர். யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன் மதமாற்றத்தை வேரறுக்க, மதம் மாறிய அறுநூறு பேர்களைக் கொன்று ஒழித்தான். ஏன்? மதம் மாறிய தனது தனயனின் தலையையே கொய்து விட்டான்! இதைக் கண்ணுற்ற இரண்டாவது மகன் தந்தைக்கு பயர்து கோவா சென்று அங்கே சரணடைந்தான்.''

''இவ்வாறு வரம்பு கடந்து கொடுமைகள் செய்த அரசனுக்கு உறுதியான, மெதுவான, ஆனல் கடுமையான தண்டனை அளிக்கும்படி மூன்றும் ஜோன் இந்திய வைஸ்ரோய்க்குக் கட்டளையிட்டான். இதனுல்

மன்னார்ப் பகுதியிலுள்ள கிறிஸ்தவர்கள் முன்போலத் தொல்லைகளுக்குள்ளானார்கள் என்றும் கோவாவிற்கு ஓடிச் சென்றவனின் அண்ணனுடைய அரசுரிமை பறிக்கப்பட்டது என்றும் இரு காரணங்களைக் காட்டி **1560**ஆம் ஆண்டில் இந்திய வைஸ்ரோய் 'டொன் கொன்ஸ்டான்டைன் டி ப்ரிகாசா' ( **Don Constanine De Braganza** ) யாழ்ப்பாணக் குடா நாட்டின் மீது போர் தொடுத்தான். டி கௌடேவின் ( **De Couto** ) இந்திய வரலாற்றின் ஏழுபதாவது பிரிவு இதனை நன்கு விளக்கிக் கூறுகின்றது. அதன்படி கொச்சி மேற்றிராணியார் போர்த்துக்கேயப் படைகளுடன் இங்கு வந்தார் என்றும் கடற்கரையிலே பலிபீடம் ஒன்றை அமைத்து அதைப் பணிந்து வணங்கி ஏற்றுக் கொள்வோரை மன்னித்துப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறினார் என்றும் தெரிய வருகின்றது. இவ்வாறு தொடங்கிய போர் மிகவும் கொடுமை நிறைந்ததாக இருந்தது. மத நம்பிக்கையுள்ளோர் பலர் போர்த்துக்கேயரின் பீரங்கிகளுக்கு இரையாயினர். நகரமும் கைப்பற்றப்பட்டு, அரண்மனையும் அழிக்கப்பட்டது. அரசனும் பிடிபட்டான். போர்த்துக்கேயர்; அரசன் தமக்குக் கீழ்படிந்து நடக்கவேண்டும் என்றும் ஏழாவது புவனேகபாகுவின் மருகனும், டொன் ஜோன் தர்மபாலாவின் தந்தையுமான திரிபண்டா கண்டியிலிருந்தும் கோட்டையிலிருந்தும் கைப்பற்றிய செல்வங்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தைக்கூற வேண்டும் என்றும் வற்புறுத்தினர். அவ்வாறு அவன் செய்யின் இழந்த அரசுரிமையை மீண்டும் பெறமுடியும் என்றும் அவர்கள் கூறினர். அதற்கு உடன்பட்ட மன்னன் **8000** குருசே டோஸ் தொகையையும் மன்னார்த் தீவையும் போர்த்துக்கேயருக்குக் கொடுக்க முன்வந்தான். ''

''மேலும்யாழ்ப்பாண அரசன் சிங்களவர்களோடு சேர்ந்து போர்த்துக்கேயருக்கு எதிராக உதவி செய்தான் என்ற குற்றத்திற்காக **1591**—ஆம் ஆண்டிலும், **1604**-ஆம் ஆண்டிலும் கோவாவிலிருந்து படைகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. அப்போர்களில் வலி குன்றிய அரசன் ஒவ்வொரு முறையும் பணிந்து சென்றமையால் பயமுறுத்தலின் அபாயம் குறைந்தது. அதனால் யாழ்ப்பாணப் பகுதி தமக்கு உரித்தானது என்று போர்த்துக்கேயர் கொண்டிருந்த எண்ணம் போர்களின் நிலைமைக்கு ஏற்ப சிறிது சிறிதாகப் பின்போடப்பட்டது. ஆனால் 1617—ம் ஆண்டில் 'கொன்ஸ்டன்டைன் டி சாய் நொரோனு' **(Constantine De Saay Norona)** இன் அரசியற் தூதரின் கீழ்ப் படையொன்று யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டது. அப்படை அநாகரிகமான முறையில் போர் செய்து நகரைக் கைப்பற்றியது அல்லாமலும் யாழ்ப்பாணத்து மன்னனைக் கோவாவிற்குக் கைதியாகக் கொண்டு சென்று அங்கே அவனின் தலையை வெட்டியும்விட்டது. இதனால் அவனது மருகனான மலபார் அரசபரம்பரையைச் சேர்ந்த கடைசி இளவரசன் தன் அரசுரிமையை இழந்து பிரான்ஸிக்கன் மடத்தில் சேர்ந்தான். அவனது உடைமைகள் அனைத்தும் போர்த்துக்கேயருக்கு ஆயது.'' என்று எமேர்சன் ரெனந்து எடுத்துக் கூறியுள்ளார்.

எமேர்சன் ரெனந்து ( **Emmerson Tennent** ) வெளிப்படையாகக் குறிப்பிடாவிட்டாலும், போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில், திருக்கேதீச்சரம் சீரும் சிறப்பும் உள்ளதாய்த் திகழ்ந்தது, என்பது தெளிவு. டெக்கானில் இந்து ஆலயங்களைக் கொள்ளையிடப் போர்த்துக்கேயர் முயன்றனர். அவ்வாறு முயன்று கொண்டிருந்த அவர்களுக்கு இந்தியக் கரையில் அமைந்து விளங்கிய திருச்செந்தூர் ஆலயத்தையும், கன்னியாகுமரிக் கோயிலையும் கொள்ளையிடுவதிலும் பார்க்கத் திருக்கேதீச்சரத்தைக் கொள்ளையடித்தல் மிகவும் எளிதாக இருந்தது. அவ்வாறு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியில் வெற்றியும் கண்டனர். (இராமநாதபுரம் இராசாவின் படைபலக் காரணத்தாற்போலும் இராமேஸ்வரத்தைக் கொள்ளையடிக்கப் போர்த்துக்கேயரால் இயலாமற் போயிற்று).

மேலும், மன்னார்த் தீவில் வாழ்ந்த மக்கள் போர்த்துக்கேயரால் மதமாற்றம் செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து திருக்கேதீச்சரம் கொள்ளையடிக்கப்பட்டது. அவ்வாலயத்தை இடித்து அதன் கற்களை எடுத்துச் சென்று மன்னார்த் துறைமுகத்தைப் போர்த்துக்கேயர் கட்டினர். இவ்வாறு திருக்கேதீச்சரத்தில் போர்த்துக்கேயர் செய்த கொடுமைகளைக் கண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த அரசன் சினங் கொண்டான். பழிக்குப் பழிவாங்க எண்ணினான். ஆனால் அவன் முயற்சி அடக்கியொடுக்கப்பட்டது. யாவும் படுகொலையில் முடிந்தது. அதைத்தொடர்ந்து மேலும் நடந்த செயல்கள் அன்றைய சமய நிலையின் சீரழிவையும், ஒழுக்கத்தின் இழிவையும் காட்டுவன என்றே கூறலாம். ஆனால் இந்நிலையில் நாம் ஒன்றைத் திட்டமாகக் குறிப்பிடலாம்; திருக்கேதீச்சரத்தின் வீழ்ச்சியோடு ஈழத்தமிழரின் ஆட்சியும் அழிந்தது. அதுவரை சுதந்திரமாக வாழ்ந்த மக்கள் தமது ஆட்சியை இழந்து அடிமைகளாயினர்.

இலங்கை வேந்தனான இராவணன் சிறந்த சிவபக்தன். அவன் கோணேஸ்வரத்து இறைவனிடம் நீங்காத அன்பு கொண்டிருந்தான். இராவணனின் மாமனான மயன் திருக்கேதீச்சரத்துக்குப் புராதன ஆலயத்தை அமைத்தான் என்பது மரபு. இவ்வாலயத்தில் எழுந்தருளியிருந்த இறைவனை, இலங்கையில்

போரிட்டு வாகை சூடிய இராமன் வழிபட்டுச் சென்முன் என்று கூறுவர். இலங்கையில் வெற்றிபெற்ற பின் அயோதிக்குத் திரும்பிய அவன் வழியில் இராமேஸ்வரத்தில் ஆலயம் ஒன்றினை அமைத்தான் என்றும் சொல்வர். மேலும் மகா பாரதத்தின் கதாநாயகனுன அருச்சுனன் இலங்கைக்கு வந்தபோதுதான் மாதோட்டத்தை யடுத்திருந்த பகுதியை ஆட்சி செய்த நாககன்னியான 'அல்லி அரசாணியை'ச் சந்தித்தான் என்றும் கூறப்படுகின்றது. மன்னார்த் தீவுக்குத் தெற்கேயுள்ள பெருநிலப் பகுதியில் பாழடைந்து காணப்படுவன அல்லிராணியின் கோட்டை என்று கூறுவர்.

மாந்தை, கி. மு. மூன்ரும் நூற்ருண்டிலிருந்து 'மகதித்தா' என்ற பெயர் உடையதாய் இருந்தது என்று புத்த இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இராமரும், அகத்தியரும், அருச்சுனனனும் மாந்தைத் துறைமுகத்தில் இறங்கி இலங்கையில் புகுந்தனர் என்ருல் , விஜயனும் அவனுடைய நண்பர்களும் அவ்வாறே இங்கு வந்தனர் என்பதை நாம் ஒருவாறு ஊகித்து அறிய முடிகின்றது. இவை உண்மையானுல் விஜயனேடு கூடிவந்த உபத்தீசன் என்ற பிராமணன் வழிபட்ட சிவாலயம் திருக்கேதீச்சரந்தான் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். யாழ்ப்பாண வைபவமாலை, ''விஜயன் கி. மு. ஆரும் நூற்ருண்டில் இலங்கைக் கரையைச் சேர்ந்ததும் நெடுங்காலமாகப் பாழடைந்து கிடந்ததுமான திருக்கேதீச்சர ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினுன்'' என்று எடுத்துரைக்கின்றது.

''ஒன்பதாம் பத்தாம் நூற்ருண்டுகளில் இலங்கையில் தமிழரின் ஆட்சி சிறப்படைந்தது. மக்கள் வளம் பெற்று வாழ்ந்தனர். எனவே நாயன்மார் காலத்தில் மாதோட்டம் சீரும் சிறப்பும் உடையதாய்த் திகழ்ந்தது'' என்பது 'ராஜரட்ன கார' என்ற சிங்கள நூலில் நின்றும் அறியக் கிடக்கின்றது.

திருக்கேதீச்சர ஆலயத்தின் புனருத்தாரண முயற்சி முதல் முதலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால் தொடங்கப்பட்டது. ஆனுல் அன்று வாழ்ந்த சைவ மக்களின் உணர்ச்சிக் குறைவும், கிறீத்தவர்களுடைய பலத்த எதிர்ப்பும் நாவலருடைய முயற்சிக்கு உடனடியான பலனையளிக்கத் தடையாயின. ஆனுல் நாவலரின் மறைவுக்குப் பின் பதினுன்கு ஆண்டுகள் கழித்து அவருடைய கனவு நனவாயது. அரசாங்க அதிபராக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய சேர் வில்லியம் டுவினம் சி. சி. எஸ். யாழ்ப்பாணக் கச்சேரியில் நிலங்களை **13–12–1893** இல் ஏலம் போட்டபோது நாற்பது ஏக்கர் காடடர்ந்து கிடந்த நிலத்தை யாழ்ப்பாணத்துச் சைவப் பெருமக்கள் விலைக்கு வாங்கினர். அன்று தொடக்கம் திருக்கேதீச்சர ஆலய புனருத்தாரண வேலைகள் தொடங்கின என்று கூறலாம். சேர் வில்லியம் டுவினம் தமது ஆட்சி அறிக்கையில் திருக்கேதீச்சரத்து ஆலயத்தின் பழைய மகிமையைக் குறிப்பிட்டுள்ளார்.

''திருக்கேதீச்சரம், மகாதீர்த்தம், மாதோட்டம் அல்லது மாதோட்டை'' என்ற (**See Royal Asiatic Society Journal Volume No. 35**) தலைப்பில் **1887**–ம் ஆண்டு நவம்பர் மாதம் **7**–ம் நாள் திரு. **W. J. S.** போக் என்பவரால் படிக்கப்பெற்ற அறிக்கையிலிருந்து, புராதன ஆலயமான திருக்கேதீச்சரத்தின் நிலைமையைப் பற்றித் திட்டவட்டமான சில உண்மைகளை நாம் அறிய முடிகின்றது.

"இப் பழைய நகரில் உடைந்த சில சிற்பங்களின் பகுதிகளையும், ஓடுகளையும், செங்கட்டிகளையும், மட்பாண்டங்களையும் தவிர வேறு எதுவும் நிலத்தின்மேல் இல்லை. பழைய வீதிகளின் அறிகுறிகளும், இரண்டொரு கிணறுகளும், செங்கட்டிக் கட்டிடங்கள், கோயில்கள் என்பனவற்றின் அத்திவாரங்கள் என்பனவும் காணப்படுகின்றன. குன்று ஒன்றின் மத்தியில் செங்கட்டியால் அமைந்த பழைய அத்திவாரம் ஒன்று இருக்கின்றது. இவ்விடத்திலேயே முக்கிய நகரின் பெரும் பகுதி இருந்திருக்கவேண்டும். பழைய கிணற்றுக்கு அண்மையில் ஆலயத்தின் வாயில் இருந்திருக்கலாம்'' என்று அவர் கூறினுர்.

ஆனுல் அர்தக் கூட்டத்தில் இருந்த சேர். பொன். இராமநாதன் அவர்கள் குறித்த அறிக்கையின் ஒரு பகுதிக் கருத்தை மறுத்துரைத்து விரிவான விளக்கத்தோடு இந்துசமய அடிப்படையில் அந்த இடத்தின் அமைவைத் தெளிவு படுத்தினுர். மேலும், அவர் பழைய கட்டிடங்கள் இருந்தவிடம் நகருக்குப் புறம்பானது என்றும், அவை ஆலயத்தின் உடைமைகள் என்றும் எடுத்துக் காட்டினுர். அங்கு ஆலயத்தின் ஆட்சிக் குழுவினர், அடியார்கள், வேலையாட்கள் என்பவர்கள் வாழ்ந்தனர். அன்று திருக்கேதீச்சரத்துக்கு ஆலயத்தைச் சூழ்ந்து இருந்த அகழியின் அமைவு முக்கியமான தொன்றெனலாம். அங்கே இரண்டு அகழிகள் அமைந்திருந்தன. ஓர் அகழி கடல் நீரையும், மற்றது நன்னீரையும் உடையனவாய் இருந்தன. கோயிற் சொத்துக்களைப் பாதுகாப்பாற்றவே அகழிகள் அவ்வாறு அமைக்கப்பட்டிருர்தன போலும்!

பிரதான ஆலயத்தில் பாழுடைந்த மூலப் பகுதி 1894—ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. அவ்வாறு கண்டு அறிவதற்குக் கோயில் நிலத்தில் அமைந்திருந்த சோழர் காலக் கிணறு ஒன்றும், போர்த்துக்கேயர் காலத்திற்கு முன் வழிபடப்பட்ட சிவலிங்கம் ஒன்றும், நந்தி ஒன்றும், கணேசரின் உருவம் ஒன்றும் உதவியாயின.

ஈழத்துச் சைவப் பெருமக்களின் விருப்பத்திற்கு இணங்க, பெனாரிஸிலிருந்து மகிமை பொருந்திய சிவலிங்கம் ஒன்று கொண்டுவரப்பெற்றுத் திருக்கேதீச்சரத்து ஆலயத்தில் குடமுழுக்குச் செய்யப்பட்டது என்று இராமேஸ்வரத்திலுள்ள வரலாற்றுக் குறிப்புக்களால் அறியக் கிடக்கின்றது. அந்த மூர்த்தியே இன்றைய ஆலயத்தின் ஆதிமூலத்தில் அமைந்து திகழ்கின்றது. புராதன ஆலயம் இருந்த இடத்தில் 1903 ஆம் ஆண்டு யூன் மாதம் 28—ஆம் நாள் சிறிய கோயில் ஒன்று கட்டப்பட்டது. (See the Jaffna Hindu Organ of the day for description of the ceremony).

இன்று அம்மையும் அப்பரும் அமர்ந்து அருள்புரியும் ஆலயம் முதலாவது உலகப் போருக்குப் பின் மன்னாரில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்து அரசாங்க உத்தியோகத்தர்களால் கட்டப்பற்றது. இவ்வாறு அமைந்த ஆலயம்காலப்போக்கில் புனருத்தாரணம்எதுவுமின்றிச் சிதைந்தபோது ஆகஸ்ட் மாதம் 1952—ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டுக் குடமுழுக்கு விழாவும் நடைபெற்றது. இப்பணியினை 1948—ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19—ஆம் நாள் கொழும்பிலே கூடிய இந்துக்களால் நிறுவப்பெற்ற 'திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபையார்' செய்தனர். குடமுழுக்கு விழாவின் பின் பிரதான ஆலயத்தில் பூசையும் வழிபாடும் இடையூறு எதுவுமின்றி இனிது நடந்துகொண்டிருக்க, ஏனைய ஒன்பது பிரகாரங்களுக்குரிய ஆலயங்கள், இராசகோபுரம், திருமதில் எல்லாவற்றின் திருப்பணிகள் நடைபெற்றுவந்தன. இன்றைய ஆலயத்தின் அமைப்பு பழைய மரபினைத் தழுவி, சமயத்திலும் சிற்பத்திலும் ஆற்றல் நிறைந்த தென் இந்திய சிற்ப வல்லுனர்களால் திட்டப்பட்டது. மேலும், ஆலயத்தின் தென் கிழக்குப் பக்கத்திலுள்ள வெளி வீதியில் உற்சவ மண்டபமும் (வசந்த மண்டபம்) அதைச் சார்ந்த கட்டிடங்களும் அமைக்கப்படும். இன்னும், அடியார்கள் ஆயிரக்கணக்கில் கூடி நின்று கண்டு களிக்கக் கூடியதாகத் தேரோடும் வீதி ஒன்று வெளிப் புறச் சுவருக்கு வெளியே பெருமளவில் அமையும். அதனைச் சூழ்ந்த பகுதிகள் ஏனைய வீதிகளுக்கு ஒதுக்கப்படும். அங்கே பூந்தோட்டங்களும், அழகிய சோலைகளும், மடங்களும், சத்திரங்களும், அந்தணர், அடியார்கள், வேலையாட்கள் என்போர் இருக்கும் இல்லங்களும் அமையும். குருகுலப்பாடசாலை ஒன்றும், உயர்ந்த சமயப்படிப்புக்குக்கல்லூரி ஒன்றும், துறவிகள் தங்கி இளைப்பாறும் சாலை ஒன்றும் இடம் பெறும். குருகுலப் பாடசாலை இப்போதே ஆரம்பமாகியுள்ளது. அனாதைக் குழந்தைகள் இல்லத்தோடு இணைந்த மகளிர் இன்னல் நிலையம் ஒன்றும் நிறுவ ஏற்பாடாகியுள்ளது.

சார்வரி ஆண்டு ஐப்பசித் திங்கள் 15—ஆம் நாள் (31–10–60) திருக்கேதீச்சரத்து வரலாற்றிலே முக்கிய புனித தினமாகும். அன்று, திருக்கேதீச்சரத்து ஆலயச் சுற்றுப் பிரகாரத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த ஆலயங்களில் மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து குடமுழுக்கு நடந்தது. புராதன மகாலிங்கம், விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளுக்கு ஓம மண்டலங்களோடு கூடிய கிரியா முறைகளமைந்த மகா கும்பாபிஷேகம் அப்புனித நாளில் இனிது நிகழ்ந்தது. குடமுழுக்குச் செய்யப்பெற்ற மகாலிங்கம் மிகவும் பழமையானது. இவ்விழாவில் நூற்றுக்கணக்கான சிவநேயச் செல்வர்கள் கலந்து திருக்கேதீச்சர நாதரின் இன்னருளைப் பெற்று ஏகினர்.

சுத்தமான வெண்கலத்தாலும், தகரத்தாலும் கலந்து செய்யப் பெற்ற 'மணி' ஒன்று இலண்டனிலுள்ள பிரபலமான வார்ப்புத் தொழிற்சாலையில் செய்யப் பெற்றுக் கப்பலில் வந்து கொண்டிருக்கின்றது. நாலடி விட்டத்தில் நுட்பமாக வார்க்கப்பட்ட அந்த மணி சிறந்த ஓசையை உள்ளதாய் இருக்கும். அது ஒரு தொன் 3 அந்தர் 1 குவாட்டர் 26 இறாத்தல் நிறையுடையது. மொத்தத்தில் முழுதும் தழுவிய அதன் அளவு 50'' — 50'' — 50''. அந்த மணிக்கு ஏற்ற உயரமும் உறுதியுமுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று கட்டப்படுகின்றது. அடுத்த திங்களில், திருவெம்பாவைப் பூசையின் போது ஏறக்குறையக் கடல் மட்டத்திலிருந்து 75 அடி உயரத்தில் அந்த மணியோசை மன்னார்ப் பகுதியைச் சுற்றிப் பல மைல் தூரத்தில் வாழும் மக்களை விழித்தெழ வைத்துத் திருக்கேதீச்சரத்து இறைவனை வழிபட வைக்குமன்றோ!

பத்தாண்டுகளாகத் திருக்கேதீச்சர புனருத்தாரண சபையார் செய்து வந்துள்ள அரும்பணிகளை அவ்வாலயத்தைத் தரிசிக்கும் அடியார்கள் நேரில் கண்டு கொள்வர். திருக்கேதீச்சரத்திற்கு இறைவனைத் தரிசிக்க வரும் அடியார்கள் தங்குவதற்கான மடங்களையும், எளிதாகப் போக்குவரத்துச் செய்வதற்கான தார் இட்ட வீதிகளையும் அங்கு பார்க்கலாம். அல்லாமலும் குழாய்த் தண்ணீர் வசதியும் திருக்கேதீச்சரத்தில்

செய்யப்பட்டுள்ளது. ஒழுங்கான பஸ் போக்குவரத்தும் திருக்கேதீச்சரத்து இருக்கின்றது. கடைகளும் தொலைபேசியோடு கூடிய அஞ்சலகம் ஒன்றும் அங்கே நிறுவப்பட்டுள்ளன. மின்சார வசதியும் உண்டு.

சைவசமயத்தின் சின்னமாகத் தமிழ்ப் பண்பாட்டின் அறிகுறியாகத் தமிழ் மொழியின் அடையாளமாகத் திருக்கேதீச்சரம் மன்னாரில் திகழ்கின்றது. அங்கே அம்மையப்பராக அமர்ந்து இன்னருள் புரியும் இறைவனை வாழ்வில் ஒரு முறையாவது தரிசித்து வழிபட வேண்டியது ஒவ்வொரு ஈழத்துச் சைவர்களதும் கடமையாகும்.

''தொண்டர் நாள்தோறும் துதிசெய அருள்செய் கேதீச்சரமதுதானே''

(பேராதனை இலங்கைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்க வெளியீட்டான 'இந்து தர்மம்' எனும் சஞ்சிகையில் ஆங்கிலத்தில் முதலில் வெளியிடப்பெற்றுப் பின்னர் திருக்கேதீச்சரம் சைவ மகாநாட்டு மலரில்—1960—தமிழாக்கம் பெற்றது).

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

# சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் பிள்ளை

— பொ. பூ. —

அரையில் துலங்கு வெள்ளாடை, தோளில் அதற்கிசையப் போர்த்த மேலாடை, நெற்றியில் தூய வெண்ணீற்று அனுட்டானக் குறி, எடுப்புமிக்க சைவக்குடுமி, நாயகன் சேவடி தைவருஞ் சிந்தை எனும் லட்சணங்களுடன் குமிழ் மிதியடியில் இவ்விருபதாம் நூற்றுண்டின் மத்தியிலும் உலாவந்தார் ஒருவர். அவர் பீ. ஏ. பட்டதாரி. அவர்தான் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை.

சைவத்தையும் தமிழையும் இருகண்களெனப் போற்றிய குடும்பத்திற் சிவபாதசுந்தரனுர் வ. சுப்பிரமணியபிள்ளைக்கும் வள்ளியம்மையாருக்கும் புத்திரராக ஈசுர வருடம் தை மாதம் பதினேழாம் தேதி (1878) புலோலியிலே தோன்றினுர்கள். இவர் சிறிய தந்தையார் இருவருள் மூத்தோர், மகாவித்துவான் வ. கணபதிப் பிள்ளை (—1895) காஞ்சிபுரம் பச்சையப்பர் வித்தியாசாலை, திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரி என்பன வற்றிலே தமிழ்ப் பேராசானுக விளங்கி, சென்னைத் திராவிடவர்த்தன சபைப் பண்டிதராகத் திகழ்ந்து, மாகறல் கார்த்திகேய முதலியார் முதலானேர்களின் ஆசிரியராக மிளிர்ந்து, சங்கதத்திற் பேரறிஞரெனப் பேர் பெற்று, அம்மொழியிலும் அம்மொழியிலிருந்து தமிழ்மொழியிலும் பல நூல்களை இயற்றியவர்; இளையோர் இலக்கணக்கொத்தர் வ. குமாரசுவாமிப்புலவர் (— 1926) நன்னூற் காண்டிகையில் நுழைந்த வழுக்களைக் களைந்து உரைவிளக்கம் தந்தவர்; மாமியார் பார்வதியம்மையார் பாலாம்பிகையம்மையாரையும் பத்மாசனியம்மையாரையும் வவுனியா சு. இராஜஐயனுருக்குப் பின்னும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்கு முன்னும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்களாக்கியதன் மூலம் தமது புலமையை வெளிப்படுத்தியவர்; சகோதரி உமாமகேசுவரியார் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை உபாத்தியாயரின் பாரியார். இத்தகைய சூழலிற் பிறந்து வளர்ந்த சிவபாதசுந்தரனுர் தமிழ்நாட்டில் உயர்தரக் கல்வி பயின்று, சென்னைப் பல்கலைக் கழகத்தின் பீ. ஏ. பட்டத்தினைப் பெற்றுர். இவர் பீ. ஏ. பரீட்சைக்குப் பாடமாகக் கொண்டது கணித சாத்திரம். எனினும் தர்க்கசாத்திரத்திலும் மனோதத்துவசாத்திரத்திலும் கூடத் துறைபோனவர்; அவ்விரு சாத்திரங்களிலும் Eessentials of Logic (1952), அளவைநூல், அகநூல் (Psychology) எனும் நூல்களை அளித்தவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சரிதத்தை ஆசைபற்றி ஆங்கிலத்தில் Arumukha Navalar (1950) என அறையலுற்ற பிள்ளையவர்கள், நாவலரவர்களை முன்மாதிரியாகக் கொண்டு சைவபரிபாலனத்திற்கே தம்மை அர்ப்பணித்தார். ஈழத்திலே சைவசமயத்தினை நாவலரவர்களுக்குப் பின், பராமரிக்க முன்னின்ற பெரியாருள் ஒருவரான பிள்ளையவர்கள் அச்சமய உண்மைகளை விளக்கியும் அச்சமய வழிபாட்டிற் புகுந்த மாசுகளைத் துடைக்க முயன்றும் பிறமதச் செல்வாக்கைத் தகர்த்தும் தம்சமய வளர்ச்சிக்கான வழிதுறைகளில் முன்னின்றும் அரும்பணியாற்றினுர்.

சிவபாத சுந்தரனார் ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகள் உபாத்திமைத் தொழிலில் ஈடுபட்டார். இவற்றுள் 1920 ஆம் ஆண்டிற் சிலதிங்கள் வரை மானிப்பாய் இந்துக் கல்லூரித் துணையதிபராகவும் 1924 முதல் 1933 வரை சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அதிபராகவும் திறம்பட அத்தொழிலை வழிநடத்தியமை போற்றத்தக்கது. 1933 ஆம் ஆண்டிற்குப்பின்னர் பரமேஸ்வரா கல்லூரியிற் சில வருடங்களாக வேதனம் பெறாது பணியாற்றிய பிள்ளையவர்கள் தம் பிற்காலத்திற் கந்தவனத்தில் தம்மை நாடிவந்த மாணாக்கருக்குச் சித்தாந்த சாத்திரங்களைப் போதித்துக் கொண்டிருந்தார்.

'படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்' ஆக்கியளித்த பிள்ளையவர்கள் சைவசமய உண்மைகளை விளக்கிய திறமையை அவர் தமிழில் யாத்த சைவபோதம் முதற் புத்தகம், சைவபோதம் இரண்டாம் புத்தகம்(1916), சைவசமயசாரம் (1947), சைவசித்தாந்தம் (1932), கந்தபுராண விளக்கம், சைவக்கிரியை விளக்கம் என்பனவும் திருவருட்பயன் விளக்கவுரை (1918), திருப்பெருவடிவம் (1939), திருவாசக மணிகள் என்பனவும் தெளிவாக உணர்த்துவன. சைவபோதங்களும் சைவசமயசாரம், சைவசித்தாந்தம் என்பனவும் எளிமையும் சுருக்கமும் தெளிவும் சிறந்து சைவசமயவுண்மைகளை விளக்கி நிற்பவை; கந்தபுராணத்தின் மகிமையைச் சுருக்கமாகக் கூறிப் புராணம் பொய் என்பாரைத் தெருட்டி அருங்கவிகளின் சாத்திரக் கருத்துக்களை தெரிப்பது கந்தபுராண விளக்கம்; நித்தியானுட்டானங்களை எப்படி, ஏன் செய்யவேண்டும் என்பதைச் சுருக்கமாக நன்கு விளக்கியமைவது சைவக்கிரியை விளக்கம்; சைவக்கடலைக் குறளுருவிற்றரும் திருவருட்பயனுக்கு பிள்ளையவர்கள் கண்ட உரை அவருடைய சாத்திரப் பயிற்சிக்கும் தர்க்க வன்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டு; பழையவுரைகளின் மயக்கங்களை நீக்குவது; கந்தபுராணம் சூரவன்மன் வதைப் படலத்திலுள்ள திருவிருத்தங்களுக்கு விரிவுரையாக அமையும் திருப்பெருவடிவம் முருகப்பெருமானின் விசுவரூப தரிசனத்தை நன்கு விளக்குவது; திருவாசக பாராயணத்தில் விருப்பினைத் தூண்டிச் சில பாசுரங்களின் அரும்பெரும் பொருளை உணர்த்தி விளங்குவது திருவாசக மணிகள்.

ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை, குகதாசர் கொக்குவில் ச. சபாரத்தினமுதலியார் வரிசையிற் சைவத் சித்தாந்தத்தின் மேன்மையை மேனாட்டினருக்கு அறிவுறுத்தியவர் பிள்ளையவர்கள். இவருடைய **Saiva School of Hinduism** எனும் நூல் ஆங்கில பிரசுராலயகர்த்தாக்களால் ஏற்கப்பட்டுத் தம் செலவிலேயே அச்சிடப்பெற்ற சிறப்பினையுடையது; மேலைநாடுகளிற் சித்தாந்த விற்பன்னர் எனும் பெயரைப் பிள்ளையவர்களுக்குப் பெற்றுக்கொடுத்தது. An outline of Sivagnana botham with a rejoinder to a Christian Critic (1951), The Glories of Saivism (1954) என்பனவும் இவ்வழியில் நோக்கத்தக்கவை. தருமபுர ஆதீனத்தினர் 1948இல் இவரைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து, இவரைக் கொண்டு நல்லசாமிப்பிள்ளையின் சிவஞானசித்தியார் மொழிபெயர்ப்பைத் திருத்தியும் புதுக்கியும் வெளிப்படுத்தினர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

நாவலரவர்களுக்குக்குப் பின் கிறித்தவச் செல்வாக்கு அதிகரித்த காலகட்டத்திலே பிள்ளையவர்கள் கிறித்தவ கண்டனப் பிரசாரம் செய்து லகுலேகங்கள் இயற்றிக் கிறித்தவர் குறித்தவையும் சைவசமயிகளிடையே புகுந்தனவுமாகிய மாசுகளைத் துடைக்க முற்பட்டார். இரண்டாம் சைவபோதத்திலே தாவர உணவின் மேன்மையையும் புலால் உணவின் இழிவினையும் விளக்கி, கந்தபுராண விளக்கத்திற் புராணங்களின் நற்பொருளை எடுத்துக்காட்டிய பிள்ளையவர்கள் மிருக பலிக்கு எதிராகச் செய்த பிரசாரம் இதற்குச் சான்றாம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் **(Hindu Board)** தலைவராகப் பணிபுரிந்த பிள்ளையவர்கள் கிராமங்களிலே சைவப்பள்ளிக்கூடங்களைத் தாபித்தலிலே முன்னின்றுழைத்தார். 1939 ஆம் ஆண்டு இலங்கைக் கல்வி முறையைத் திருத்துவதற்காக அரசினரால் நிறுவப்பட்ட ஆணைக்குழுவிற் பிள்ளையவர்களை உறுப்பினராகப் பெற்று, அக்குழு பயன் அடைந்தது.

ஒவ்வொரு மூச்சும் சைவமூச்சாகக் கொண்டிருந்த சைவப்பெரியாரின் இறுதிமூச்சு திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணியாகும். திரு. கே. கனகரத்தினம் அவர்கள் தலைமையில் 1948 ஆம் ஆண்டு அக்தோபர் மாதம் பத்தொன்பதாம் தேதி கொழும்பு செட்டித்தெருவிலுள்ள நகரத்தார் வளவிற் கூடிய சைவாபிமானிகள் கூட்டத்தின் தீர்மானப்படி திரு. கே. எஸ். அருள்நந்தி தலைமையில் பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோயிலிலே அம்மாதம் 24 ஆம் தேதி கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் அங்குரார்ப்பணஞ் செய்யப்பெற்ற திருக்கேதீச்சரப் புனருத்தாரணத் திருப்பணிச் சபையின் செயற்குழுவினர் தலைவராகத் தெரிந்து கொண்டவர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார். திருக்கோயிலின் புனருத்தாரணம் பற்றிய ஆரம்ப திட்டவேலைகளை வழிவகுக்க முன்னின்று பிள்ளையவர்கள், நகரந்தோறும் இத்திருக்கோயிலின் புனருத்தாரணத்தின் இன்றியமையாமையை விளக்கி நின்றவர்; தமது செலவிலே நடராஜ மூர்த்திக்கும் அம்பாளுக்கும் திருமேனிகள்

எழுந்தருளுவித்தவர்; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் மடம் திருக்கேதீச்சரத்தில் இவர் தலைமைக் காலத்திலேயே கட்டி முற்றுவிக்கப்பட்டது. ஆயினும் மூப்பும் பிணியும் கால்கொண்டமையால் 1952 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முப்பதாம் தேதி தலைமைப் பதவியைத் துறந்து ஆலோசகராகத் தொடர்ந்து விளங்கினர். பிள்ளையவர்கள் செப்பனிட்ட பாதையிலே சேர். கந்தையா வைத்தியநாதன் முதலானேர் சென்று திருப்பணி வேலையைச் சிறப்பாகச் செய்தனர்.

சைவப்பெரியார் சிவபாத சுந்தரனர் விஜய வருடம் ஆடிமாதம் முப்பதாம் தேதி (14.8.1953) இம் மண்ணுலக வாழ்வினை நீத்தார். இருபத்திரண்டு வருடங்களுக்குப் பின்னர் அவர் கண்ட கனவு வெற்றி பெறும் இவ்வேளையில் அப்பெரியார் ஆத்மா நிச்சயமாய்ச் சாந்திபெறும்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

# சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன்

— சி. க. —

நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயனகச் சைவநெறி உலகெங்கும் பாலிக்கும் தன்மையில் நாவலருக்குப் பின் சிவம்பெருக்கி வந்த பெரியார் சபாபதி நாவலரவர்களாவர். திருவாவடுதுறை, மதுரை போன்ற ஆதீனங்களால் 'நாவலர்', 'மகாவித்துவான்' என்றும், இராமநாதபுரத்துஅரசன் பாஸ்கர சேதுபதி ஆகியோரால் 'சைவசிகாமணி', 'பரசமயகோளரி' என்றும் சிறப்புப்பட்டங்கள் வழங்கப் பட்டுப் பாராட்டப்பட்ட பெரியார் இவராவர். இப்பெரும் பிறப்பாளர் பிறந்த ஊர் கோப்பாயாகும். அஃதே நம் சிவமணியவர்களதும் ஊராம்.

தந்தையார் வேலாயுதர் கந்தையா; தாயார் தையல்முத்துப்பிள்ளை; பரம்பரையான தூய சிவ நல்னெறி ஆசார அநுட்டானங்கள் பேணி வந்த குடும்பத்தினர்; இம்மை இன்பத்திற்கு ஏதுங் குறையிலாச் செழிப்பான பரம்பரை. இவர்களுக்கு மூன்று பிள்ளைகள்; முதல் இருவரும் பெண்கள்; இளையவர் ஆண். இவர் தான் பிற்காலத்திற் கீர்த்திபெறப் பெருவாழ்வு வாழ்ந்து பெரும் பணிகள் பல ஆற்றிய வைத்திய நாதன்; இவர் பிறந்த நாள் 23—7—1896.

சிறுவன் வைத்தியநாதன் ஆரம்பக் கல்வியை ஊர்ப்பள்ளியிலும், இடைநிலை, உயர் வகுப்புக் கல்வியை யாழ். மத்திய கல்லூரி, சம்பத்திரிசியார் கல்லூரி, கொழும்பு புனித யோசேப்பு கல்லூரி ஆகியவற்றில் பெற்றனர். பின்னர் மருத்துவ நிபுணராவதற்கு விரும்பி மருத்துவக் கல்லூரியிற் சேர்ந்தனர். 1921 இல் இங்கிலாந்துக்குச் சென்று ஈராண்டுகள் மருத்துவங் கற்று வந்தவர் திடீரென அதனை விடுச் சட்டம் பயின்றனராம். ஈற்றில் அதனையும் விட்டெறிந்து விட்டு மானிட இன வரலாற்றுத்துறை (Anthropology) பயின்று அதில் சிறப்புப் பட்டம் பெற்ருர். இதன் பின்னர் அந்நாளில் உயர் உத்தியோகப் பதவி என்று கருதப்பட்டு வந்த 'சிவில் சேவை'யில் நாட்டங்கொண்டு அத்தேர்விலும் சித்தியெய்தினர். இதனல் நாட்டின் பல பாகங்களிலும் நிர்வாக சேவைகளாற்றும் வாய்ப்புக்கள் கிட்டின. இக்காலத்தில் பல சமூகத்தவரது தொடர்பும் குண இயல்புகளும் பழக்கமும் ஏற்பட்டன. இன்னும் உலக அரங்கிலுள்ள பெரும் பெரும் அரசியல்வாதிகளது இயல்புகளையும் விருப்பு வெறுப்புகளையும் அறிந்திருந்தார். முக்காலங்களையும் அறிந்து நடக்கக்கூடிய அரசதந்திரோபாயங்களையும் நன்கு கற்றுருந்தார். இயற்கையான இவரது விவேகத்துடன் கூடிய திறமைகளே இவரை முன்னுக்கு முன்னகவும் மேலுக்கு மேலாகவும் உயர்த்தி வந்தனவாம். இத்திற அதிவிவேக ஆற்றல்கள்தான் சுதந்திர இலங்கையின் பாதுகாப்பு வெளிநாட்டமைச்சின் நிரந்தரச் செயலாளராகவும் 1950 இல் கௌரவ சேர்ப்பட்டம் பெறவும் பின்னளில் நாட்டிற்கு நலன்புரி நல்லமைச்சராகவும் நியமனம் பெறவைத்தன. ஆயின் இவையாவும் நிலையான இன்பம் பயப்பனவல்ல என்பதை ஈற்றில் உணர்ந்தார். வாழ்வின் நிறைவு வேண்டிப் பல புண்ணிய அருட் திருப்பணிகளை மேற்கொண்டார். ''அறுவகை விளங்குஞ் சைவத்தளவிலா விரதஞ்சாரும் நெறிவழி நின்ற வேடம் நீடிய தவத்தினுள்ளோர் மறுவறு மனத்தில் அன்பின் வழியினல் வந்த யோகக் குறிநிலைபெற்ற தொண்டர் குழாத்துடன் குழாவி'' வாழத் தலைப்பட்டார். இங்கு இவர் சமூக சமய கல்வி கலாசார வளர்ச்சிகளைத் தேசிய ஒருமைப்பாட்டு முறையில் பேணிப்பாதுகாக்கப்

பெரிதும் பாடுபட்ட போதிலும், தனிப்பட்ட தனது இன மொழி சமய கலாசாரங்களின் பூரணத்துவ உரிமைகளைக் காப்பதில் மிக்க கண்ணோட்டம் செலுத்தி வந்தவராவர். இவற்றின் விளைவை எதிர்நோக்கி ஆண்மையுடனும் தாளாண்மையுடனும் விழிப்புடனும் கலக்கமின்றி அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தவராவர்.

கொழும்பு விவேகாநந்த சபையின் துணைத் தலைவராகவும் காப்பாளராகவும் பல ஆண்டுகள் இருந்தவர்; அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நிறுவன உறுப்பினர்களில் முக்கியமானவராகவும் தலைவராகவும் விளங்கியவர்; நாவலர் கழகத்தின் அதிபராக மலர்ந்தவர்; கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் காப்பாளராகவும் ஆலோசகராகவும் ஆரம்பகாலந்தொட்டிருந்து உதவியவர். தனது பிறந்தகத்தில் தங்கள் குலதெய்வமாக விளங்கிவந்த வீரபத்திரர் ஆலயத்தைப் புனருத்தாரணஞ் செய்வித்தவர்; 1954 இல் விருது நகரில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாநாட்டிற்குத் தலைமைதாங்கியவர்; 1960 இல் சைவசித்தாந்த மாநாடு திருக்கேதீச்சரத்தில் நடைபெறக் கர்த்தாவாக நின்றவர்; இன்னும் எத்தனை எத்தனையோ பெருஞ் செல்வாம் பல உதவிகளைச் செய்திருக்கின்றார். அப்படியே இவர் செய்த பணிகளை இன்னும் அடுக்கில் சுவியும். ஆயின் இவையெல்லாம் இவரைப் பெருமைப் படுத்தவில்லை. ஒரேயொரு பணி—திருப்பணியே இவரை உயர்த்திவிட்டது—புகழவைத்து விட்டது—உலகம் உள்ளவரை நம்மவர் நெஞ்சில் அவர் பெயரை நீக்கமற நிலைக்க வைத்து விட்டது. அது வேண்டான் புகழ் வேண்டான் என்ற பற்றற்ற நிலையில் அவர் தொடங்கியதாகும். அப்பணிதான் இன்று யாம் திருக்குட மஞ்சனங் காணுந் திருக்கேதீச்சரப் பெருங் கோயிற் புனருத்தாரணத் திருப்பணியாகும். இது அவர் கொண்ட சைவத்திருக்கோயிற்பணி என்றதுடன் மாத்திரம் நிற்கவில்லை. ஈழத்தமிழரின் மறுமலர்ச்சியை காட்டக்—காணக்கொண்ட பெரும்பணியுமாம். ஏன்? ஈழத் தமிழர் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்தகாலம் திருக்கேதீசுவர திருக்கோணேசுவர காலம் என்றும் அவற்றின் அழிபாட்டுடன்—வீழ்ச்சியுடன் அவ் இனம் இந்நாட்டில் தாழ்ந்துவிட்டது என்றும் மீண்டும் அவ்வினம் புத்துயிர் பெற வேண்டின் இவ்விரு கோவில்களும் பண்டைய நிலை—பொலிவு எய்தவேண்டும் என்றும் அடிக்கடி கூறிவந்தவர் வைத்தியநாதன் அவர்களாவர்.

இவர் ஈழத்தமிழரின் பொற்கால வாழ்வைக் காணத்துடித்தார் என்பதற்கு இன்னோர் செய்தியை ஈண்டு எடுத்துக்காட்டுவதில் தவறில்லை என எண்ணுகிறோம். முன்னர் செய்தொழித்த கொடுமைகள் போதாவென்று 1963 இல் கத்தோலிக்கர் திருக் கேதீச்சர எல்லையில் விளைவித்த இடுக்கணின் போது கத்தோலிக்க சமயத்தை தழுவிய அந்நாள் நல்லூர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் அதிமேற்றிராணியார் அவர்கட்கு 2.7.63இல் வரைந்த கடிதமே அதுவாகும். அதில் அவர் கூறியவை: "அவரிடம் எது தவறிருந்தாலும் திருக்கேதீச்சரத்தில் இருந்த பழையஆலயத்தையும் தமிழர் கலாசார நிலையத்தையும் புதுப்பிப்பதில் இலங்கைத் தமிழர்கள் எல்லோருக்கும் இசைவான மகோன்னத தேசிய சேவை செய்து வருகின்றார் சேர் கந்தையா வைத்தியநாதன் என்பதை மறக்க முடியாது. எமது மதம் எதுவாக இருந்தாலும் பாதகமில்லை. தமிழ் பேசும் மக்களாகிய நாம் எல்லோரும் எமது பழைய பொற்காலத்தைத் திருப்பி அமைக்கும் அவருக்கு எம் ஊக்கத்தையும் உழைப்பையும் நல்கவேண்டும்" என்பதாம். டாக்டர் நாகநாதன் அவர்கள் வைத்தியநாதன் அவர்களின் உள்ளத்தை அளந்து, அளந்தளவில் நிதானமாக நின்றல்லவா தனது கடிதத்தில் கூறியுள்ளார்! இதற்குமேலாக சிவமணியவர்கள் மேற்கொண்ட இப்பணிபற்றிப் பேச வேறும் இடம் வேண்டுமா? உண்டா?

அடுத்துச் சமய அடிப்படையில் திருக்கேதீச்சரத்தை நோக்கும் போது ஏழாம் எட்டாம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த சமய குரவர்கள் கண்டு பாடிய திருக்கேதீச்சரத்தைக் காணவிழைத்தவர் வைத்தியநாதனுர். மாவும் பூகமும் கதலியும் நெருங்கிப் பொலிவுதர, வண்டுகள் பண்செய்யும் மாமலர்ப்பொழிலிலே மஞ்ஞைகள் நடமிட, அடியவர்கள் கண்டிறைஞ்சும் படவேரிடை மடவாளோடு பாவம் வினையறுக்கும் பாலாவியின் கரையில் அழகமர் வண்டோதரிக்கு அருள் சுரந்த பெருமையுடன் திருக்கேதீச்சர நாதன் எழுந்தருளியிருக்கும் திருக்கோலப் பெருங்கோயிலையும்—செல்வநெடுமாடம் சென்று சேணோங்கும் வான்முட்டும் கோபுரங்களையும் தேரோடும் திரு வுலா வீதிகளையும் மாதோட்ட நகரையும் தோற்றுவிக்கவே ஊண் உறக்கமின்றி உழைத்தார்.

கோயிற் பணி சாதாரண ஆட்கள் செய்யும் பணியா? மாமன்னர்க்குரிய பணியன்றோ இது. அதுவும் பெருங் கோயிற் பணியை நோக்கில் இச்சாதாரண வைத்தியநாதன் மேற்கொண்டது அதிசயத்தினுமதிசயந்தான். 30.8.1952 இல் இவர் தலைகொடுத்த இப்பெரும் பணியில் அவர்கண்ட கனவும் எம் முந்தையோர்

ஆசையும் விரைவில் கைகூடும் என்று நாம் நாள் பார்த்திருக்கையில் பெருமான் கடமையை எம்பொறுப்பில் விட்டு 28.8.1965 இல் அவருக்கு நிறைவு கொடுத்துப் பெருவாழ்வளித்துத் தன்னோடு சேர்த்துக் கொண்டனன். இவரது நினைவையொட்டி 27.2.65 இல் கொழும்பு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் ஆன்ம சாந்தி கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் இவர் உயிர் உடலை விட்டுப் பிரியும்போது உடனிருந்த— தமிழ் நாட்டுப் பெரியார் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் "சின்முத்திரையுடன் வைத்தியநாதன் சிவன்தாள் சேர்ந்தவர்" எனக்கூறினர். இது எல்லையில் புகழ் எந்தை கேதீச்சரம் இராப் பகல் நினைந்தேத்தி அல்லல் ஆசறுத்து அரனடியினை தொழும் அன்பராம் அடியாரே!' என்ற சம்பந்தர் தேவாரத் திருவடிகளின் உண்மையையே உறுதிப் படுத்துவதாக அமைந்தது போற்றற்குரியதாம்.

இப்பெரியாரின் வாழ்வு எமக்கு ஓர் இலக்கணமாக அமைந்து விளங்குகின்றது. அன்னாரை நினைக்கும் போது

"அறிவது அறிந்து அஞ்சுவது அஞ்சி
உறுவது உலகு உவப்பச் செய்து
பெறுவதினால் இல்புற்று வாழும் — இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது".

என்ற நாலடியாரும் ஞாபகத்திற்கு வருகின்றது. இப்படியாக ஈழத்துச் சைவத்தின் பெருங்காவலராக விளங்கிய இப்பெரியாரின் பிரிவுடன் கேதீச்சரப்பணிகள் நின்று விடுமோ என்று கூட எம்மவர் எண்ணியிருந்தனர். ஆயின் பெருமான் அவ்வளவு தூரத்திற்கு எம்மை விட விரும்பவில்லை. நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் திருக்கேதீச்சரம்—திருக்கேதீச்சரப் பணி என்ற இடையறாச் சிந்தையுடன் உழைக்கவல்ல பெரியோனை மலைக்கு மலையாகத் தந்துள்ளான். அவர்தான் வழக்கறிஞர் பொலிகண்டி இ. நமசிவாயம் அவர்களாவர். வைத்தியநாதன் விட்ட இடத்திலிருந்து தொடங்கி ஓரளவு நிறைவுகாண நாட்டின் நாற்றிசையோரையும் திருப்பணி வேலைகளில் ஈடுபட வைத்து இன்று யாம் காணவிருக்கும் திருக்குடமுழுக்கிற்குக் காலாக இருப்பவர் இப்பெரியாரே என்பது நாடறிந்த செய்தியாகும்.

இன்னும் திருக்கேதீச்சரத்தில் பெருமானோடு கலந்து பெருவாழ்வு பெற்ற வைத்தியநாதன் அவர்களைச் சிவலோகப் பொலிவுடன் இன்று காட்சிதரும் திருக்கேதீச்சரத்தில் திருக்குடமஞ்சனப் பொலிவு காணவரும் சிவகணநாதர் வரிசையிலிருத்தி ஆலிங்கனஞ் செய்து அகமகிழ்வோமாக.

குறிப்பு :

வைத்திய நாதன் அவர்களது திருமணம் 29.4.1926 இல் நடைபெற்றது. கீரிமலைச் சிறுப்பர் மடம் போன்ற பல அறப் பணிகள் செய்த சண்டிலிப்பாயைச் சேர்ந்த கதிரவேலுச்சிறுப்பர் மரபில் வந்த சண்முகம் மகள் புவனேசுவரியே இவர் இல்லத்தரசியாவர். இவர்களுக்கு இரு ஆண்களும் இரு பெண்களும் பிள்ளைகளாவர். இறுதியாக மூச்சுப்பறியும் போது பெரியார் மனைவியாரிடம் கூறியது "கோபுரத்தை நன்றாகக் கட்டுங்கள்" என்பதேயாம். அதன்படி அவர்குடும்பத்தினர் அப்பணியை நிறைவு செய்ததுடன் திருக்கேதீச்சர நித்திய நைமித்தியங்களுக்கு வேண்டிய வேண்டியாங்கு காலந்தவறாது உதவி வருகின்றனர் என்பதுவும் குறிப்பிடத்தக்கனவாம்.

# வன்னியும் வன்னியரும்

— சி. எஸ். நவரத்தினம் —

*நிலநூல் (Geography)*

யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கும் நுவரகலாவிய (அனுராதபுர) மாவட்டத்திற்கும் இடையே அமைந்த இலங்கையின் வடபகுதிக்கு வன்னி என்ற பெயர் அளிக்கப்பட்டது. வன்னி என்ற பெயரைப் பெறுவதன் முன்னர் அப்பகுதி 'அடங்காப்பற்று' என்ற பெயரால் அழைக்கப் பெற்றது என்று தெரிய வருகின்றது. இவ்வன்னி நாடு கிழக்கே திருக்கோணமலையையும், மேற்கே மன்னார்ப் பகுதியையும் எல்லையாக, தென்னமரவடி, முள்ளியவளை, கருநாவல்பற்று, பனங்காமம், பெருங்காலிப்பற்று முதலியனவற்றையும், செட்டிகுளத்தின் ஒரு பகுதியையும், குதிரைமலையை உள்ளடக்கிய முசலிப்பற்றையும் தன்னகத்தே கொண்டு பரந்து கிடந்தது. இவ் வன்னி நாடு ஏறத்தாழ 3000 சதுர மைல்களைக் கொண்டதாய் அமைந்திருந்தது.

இவ்விடங்களின் கரையோரப் பகுதிகள் பதிவாயும், உட்செல்லச் செல்ல நிலம் உயர்ந்தும் உள்ளது. குருந்தூர்மலை, கும்பகன்னன்மலை, ஒதியமலை போன்ற இடங்களில் காணப்படும் கற்பாறைகளைப் போலவே முல்லைத்தீவுப் பகுதியிலும் கற்பாறைகள் காணப்படுகின்றன. கரையோரப் பகுதிகள் மணல் செறிந்த உவர்த்தரையாக இருப்பினும், உள் நாட்டில் பலவகையான வளம் நிறைந்த மண் இருக்கிறது. ஏறக்குறைய பதினாறு சதுர மைல் பரப்பில் செழிப்புள்ள கருமண்ணைக் கொண்டு துணுக்காய் அமைந்துள்ளது. மன்னார்ப் பகுதியில் துணுக்காய்க்கு தெற்கேயுள்ள வவுனிக்குளப் பகுதி மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் பார்க்கச் சிறந்த மண்வளமுடையதாய் இருக்கின்றது. ஆண்டு முழுவதும் பயிர்ச் செய்கைக்கு வேண்டிய மழையைத் தரக்கூடிய மலைப் பகுதிகள் இங்கில்லை. எனினும் நிலத்திடை தோன்றியோடும் தெள்ளிய ஊற்றுக்கள் முள்ளியவளை, தனியூற்று, குமாரபுரம் முதலிய இடங்களில் இருக்கின்றன.

மேலும் மாரியில் கரைபுரண்டோடிக் கோடையில் வற்றி விடும் காட்டாறுகள் இங்கு உள. ஆனால் இங்கிருக்கும் ஏராளமான குளங்கள் இப்பகுதியைச் செழிப்படையச் செய்வதோடு, எல்லாக் காலங்களிலும் பயிர்ச் செய்கை நடைபெறவும் வாய்ப்பளிக்கின்றன. இன்னும் சிறந்த முறையில் திட்டமிட்டு அமைக்கப்பெற்ற நீர்ப்பாசன வசதிகள் தென்பகுதி மலைகளினின்றும் இப்பகுதிக்கு நீரை அளித்து வந்தன. இந்நீர்ப்பாசனத்திட்டங்களில் முக்கியமான மல்வத்து ஓயா, பதவியா திட்டங்கள் இன்னும் பெரும் பயன் அளிப்பனவாக இருக்கின்றன.

கிறித்து காலத்திற்கு முன்பாகவே பூதக்குளம் (கட்டுக்கரை), வவுனிக்குளம், பாவற்குளம் என்பன வன்னி நாட்டில் இருந்தன. பெரிய குளம், மாமடு, ஒலுமடு, கனகராயன் குளம், பண்டாரக்குளம் என்பவை கிறித்து காலத்துத் தொடக்கத்தில் இருந்தவை எனலாம்

பூதக்குளத்தின் ( **Giant's Tank** ) கட்டுக்கரை அமைப்பு வரலாறு இலங்கை அரசர்கள் காலவரலாற்றில் மறைந்துகிடக்கின்றது. இக்குளம் இயக்கர்களாற் கட்டப்பட்டது என்பது மரபு. பார்க்கர் ( **Parker** ) என்பார் இக்குளம் கிறித்து காலத்திற்கு முற்பட்டது என்று எடுத்துரைக்கின்றார். இக்குளம் 15 மைல் நீளமுள்ள வரப்போடு 6400 ஏக்கர் நிலப்பரப்பினை உடையதாய் விளங்குகின்றது. அருவியாற்றுக்கு குறுக்கே 90 அடி அகலத்திற் கல்லணை ஒன்று கட்டப் பெற்று ஆழமான வாய்க்கால் வழியாக நீர் இக்

குளத்திற்கு கொண்டு வரப்பட்டது. 1739இல் தேசாதிபதியாக இருந்த வான் இம்கொவ் ( **Van Imhoff** ) இக் குளத்தைச் சீர்ப்படுத்த முற்பட்டார். ஆனால் அது மிகவும் கடினமானதொன்றாக இருந்தமையால் அவர் தமது முயற்சியை இடையிலே கைவிட்டார். 1897ஆம் ஆண்டில் பகிரங்க வேலைப் பகுதி இக் குளவரப்புக்க ளிலிருந்த உடைப்புக்களைச் சீர்செய்ததுடன் முன்பிருந்த கால்வாயையும் சரி செய்து அமைத்தது. இன்று இக்குளம் உலகத்தில் அமைக்கப்பெற்ற பெரிய செயற்கைக் குளங்களில் நான்காவதாக அமைந்து விளங்கு கின்றது. இக்குளத்திலிருந்து பாலாவிக்குத் தண்ணீர் பாயும்படி செய்யப்பட்டிருக்கிறது.

கிறித்து காலத்திற்கு முற்பட்ட குளங்களில் வவுனிக்குளமும் ஒன்றாகும். இது துட்டகைமுனு வின் காலத்திலேயே இருந்திருக்கின்றது. இதனை எல்லாளமன்னன் அமைத்தான் என்று 'பார்க்கர்' என்பார் கூறுவர். பாலியாற்றுப் படுக்கையின் குறுக்கே நீண்ட அணை ஒன்றினைக் கட்டி உருவாக்கப்பெற்ற இக்குளம் முன்னுளில் 'பிலிவாபி' என்று அழைக்கப்பட்டது.

பாவற்குளமும் கிறித்து காலத்திற்கு முற்பட்ட குளங்களில் ஒன்றாகும். இதுவும் வவுனிக்குளத்தோடு கால அளவில் ஒத்திருக்கின்றது. இலங்கையிலுள்ள மற்றெந்தக் குளத்திற்கும் இல்லாத கண்மாய்கள் ( **Value Pits**) ஐந்து இக்குளத்தில் காணப்படுகின்றன. ஒத்த சிங்களப் பெயர்கள் இல்லாத குளங்களில் இதுவும் ஒன்றாகும். இதனைக் கொண்டு தமிழர்கள் மிகப் பழங்காலந் தொட்டே இப்பகுதிகளில் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்களென்பதை நாம் நன்கு அறிய முடிகின்றது. நிலைத்து வாழ்ந்த தமிழினத்தின் உதவி இல்லாமல் எல்லாள மன்னன் இங்கு நாற்பத்து நான்கு ஆண்டுகள் சிறந்த ஆட்சியைத் தன்னிலும் வேறுபட்ட இனத் திடையே நிலைபெறச் செய்திருக்க முடியாது. ''தென் இந்தியாவில் நின்றும் மக்கள் தொடர்பாக மகாதித்தத் துறைமுகத்தின் (மாதோட்ட) வழியாக வந்து குடியேறியதன் பயனாய் அப்பகுதி முற்றிலும் தமிழ்நாடாக மாறியது. இன்று தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கீழ்மாகாணங்களிலும் சிங்கள ஊர்ப் பெயர்கள் பல மறைந்தும் சிதைந்தும் இருக்க மன்னார்ப் பகுதிகளில் அப்படியில்லாதிருத்தல் குறிப்பிடத்தக்க தொன்றாகும். இப் பகுதியில் யாவும் தூயதமிழ்ப் பெயர்களாக இருக்கின்றன'' என்று காலஞ்சென்ற எச் டபிள்யூ. கொட்ரிங்டன் (**H. W. Codrington**) என்பவர் எழுதிப் போந்தார்.

'விஜயன் இலங்கைக்கு வரும் முன்பு, கி.மு. ஆறும் நூற்றாண்டில் மகோதரன் என்பவன் நாகதீபத்தை ஆண்டு வந்தான். அவனின் மருமகனான குலோதரன் இராமேஸ்வரத்திற்கு அண்மையில் இருந்த கண்ட மட்டானத்தை அரசு செய்தான்.' இவ் வரலாற்றை மகாவம்சம் எடுத்துரைகின்றது. இதனிலிருந்து தென் இந்தியாவிற்கும் வட இலங்கைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பது தெளிவாகின்றது. இந்நெருங்கிய தொடர்பை நோக்கும்போது தெற்காசியாவிலேயே கடல் வாணிபத்துறையில் சிறந்து விளங்கிய தென் இந்திய தமிழர்கள் அணித்தாய் இருந்த இலங்கையில் மாதோட்டம், குதிரைமலை போன்ற இடங்களில் வாணிப நிலையங்களை நிறுவி இருக்கலாம் என்பது தெரியவருகின்றது. அன்று இத்துறைமுகப் பட்டினங்கள் வளம் நிறைந்து திகழ்ந்தன. அங்கே ஆயிரக்கணக்காக மக்கள் நெருங்கி வாழ்ந்தனர். எனவே அங்கே வாழ்ந்த மக்களின் உணவு நெருக்கடியைப் போக்கப் பெரிய குளங்களையும், நீர்ப்பாசன வசதிகளையும் தங்கள் நாட்டில் அமைத்ததுபோல இங்கும் அமைத்திருக்கலாமன்றோ! இன்னும் தங்கள் ஆத்மிக தேவைக்காகத் திருக்கேதீச் சரத்தில் சிவாலயம் ஒன்றினையும் அமைத்தனர்போலும்! இலங்கையின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் தென் இந்தியாவிற்கு எதிரில் பழைய பல குளங்கள் காணப்படுவதைக் கொண்டு இவ்வுண்மையை மேலும் வலியுறுத்த முடிகின்றது.

மேலும் பந்துகாபயன் ஆட்சிக்காலத்தில் அனுரதபுரத்தில் பொறியியல் வல்லுனனை ஜோடியன் என்ற பிராமணன் ஒருவன் இருந்தான் என்று மகாவம்சம் கூறுகின்றது. ''முன்பு தமிழர்கள் கையாண்ட வரன்முறைப்படியே இன்றும் குளத்திலுள்ள நீர் விகாரை நிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்'' என்றும் மிகுந்தலையிலுள்ள 2—ஆம் இலக்கக் கல்வெட்டொன்று எடுத்துரைக்கிறது. எனவே இலங்கையில் முதன் முதலில் தமிழர்களே குளங்களை வெட்டினர்கள் என்பது தெளிவாகின்றது. இன்னும், இரும்பின் உபயோகத்தை இலங்கையில் புகுத்தியவர்களும் தமிழர்களே! ஏனெனில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறுவ இரும்பு இன்றியமையாததாகும்.

### வன்னியைப் பற்றிய புதைபொருள் ஆராய்ச்சி :

பாழடைந்த குளங்களும், சிதைந்த குளவரப்புகளும் நிறைந்த நிலப்பரப்பே வன்னியாகும். அழிந்த தாதுகோபங்களும், சிதைந்த சிவாலயங்களும் அங்கே அருகருகே இருக்கக்காணலாம் ஒரு புறத்தில் ஆற்றங்கரையில் விநாயகப் பெருமான் பீடத்தில் அமர்ந்திருப்பார். இன்னொரு புறத்தில் காட்டினுள் தனது

அடியார்க்கு மோனமாக நடுவழியை நினைவூட்டிக் கொண்டிருக்கும் புத்தர் சிலையினைக் காணலாம். இச் சூழலில் இடையிடையே வன்னியர் இல்லங்களின் சிதைவுகள் அவர்களின் ஆயிரவாண்டுச் சுதந்திர வாழ்க்கையைக் கூறி நிற்கும். அழிந்த குளங்களும், சிதைந்த கால்வாய்களும் ஆங்காங்கே காணப்படுவதால் வன்னியின் மேற்குப் பாகமான மன்னார்ப் பகுதியில் மக்கள் பெருந்தொகையாக நெருங்கி வாழ்ந்தனர் என்பது தெளிவாகின்றது. பழைமையான அணைக்கட்டுகளில் கல்லாற்றிலுள்ள குறிஞ்சாக்குளத் தேக்கமும், பேராற்றிலுள்ள இன்னொரு தேக்கமும் குறிப்பிடத் தக்கவையாகும்.

வரலாற்றுப் புகழ் பெற்ற மாதோட்டத் துறைமுகமும், புகழ் பெற்ற திருக்கேதீச்சர ஆலயமும் இப்பகுதியிலேயே உள்ளன. இப் பழைய துறைமுகத்தின் வரலாறு, ஈழநாட்டு வரலாற்றுக்கு முற்பட்டதாகும். போர்த்துக்கேயர் தங்களது மதவெறியைத் தீர்த்துக்கொள்ள இத் திருக்கோயிலை அழித்தனர். அல்லாமலும் அவர்கள் யாழ்ப்பாணத்துப் போரில் தோல்வியுற்றபின் தமிழர்களின் தாக்குதலை தடுக்கும் வகையில் மன்னார்க் குடாக் கடலைக் கண்காணிக்க வசதியாக நான்முகக்கோட்டை ஒன்றினையும் கட்டினர். இக்கோட்டை பின்னர் ஒல்லாந்தர்களால் திருப்பிக் கட்டப் பெற்றது.

மன்னார்க் குடாவில் மாதோட்டத்திற்கு ஒரு சில கல் தெற்கே அரிப்பு என்னும் கிராமம் முத்துக்குளிக்கும் இடங்களைப் பார்த்தவண்ணம் அமைந்துள்ளது. அரிப்பு என்றால் சலித்தல் என்று தமிழில் பொருள் படும். கடலில் இருந்து முத்து எடுத்து இங்கே அரிக்கப்பட்டதனால் இவ்விடம் இப் பெயரைப் பெற்றது போலும்! இவ்விடம் முத்துக்குளித்தலோடு தொடர்புள்ளதாக இருப்பதுடன் இன்னொரு முக்கியமும் உள்ளதாக இருக்கின்றது. அதாவது ரொபர்ட் நொக்ஸ் என்பவன் கொட்டியாரில் (Kottiyar) இழந்த தன் உரிமையை இங்கே மீண்டு பெற்றான் என்று கூறப்படுகின்றது. இச்சிற்றூருக்கு ஒரு கல் தெற்கே டச்சுக் காரரின் சிதைந்த கோட்டை ஒன்று இருக்கின்றது. இன்னும், முத்துக்குளித்தலை மேற்பார்வை செய்வதற்கென இலங்கையின் முதல் ஆங்கிலத் தேசாதிபதியாக இருந்த பிரடெரிக் நோர்த் அமைத்த கட்டிடத்தின் அழிந்த பகுதிகளும் இவ்விடத்திலிருந்து ஒரு கல் தொலைவில் இருக்கின்றன.

விடத்தல்தீவிற்கும் இலுப்பைக்கடவைக்கும் இடையிலுள்ள கொம்புதூக்கியில் சில கற்றூண்கள் காணப்படுகின்றன. அவை அங்கே ஒரு ஆலயம் அமைந்திருந்தது என்பதை வலியுறுத்துகின்றன. இதற்குச் சிறிது வடக்கே வெள்ளாங்குளத்திற்கு அருகே யானையை வாகனமாகக் கொண்ட ஐயனார் கோவில் ஒன்று காணப்படுகின்றது. ''கோகில சந்தேசா''வில் கூறப்பட்ட கோவில் இதுவாக இருக்கலாம்.

கட்டிடங்களின் சிதைந்த பகுதிகள், சின்னச் செட்டிகுளம், செட்டிகுளம், பாலம்பிட்டி, வெளையன் குளம் முதலிய இடங்களில் காணப்படுகின்றன. செட்டிகுளத்திலேயே வன்னித் தலைவர்கள் வாழ்ந்தனர். திரு. ஜெ. பீ. லூயிஸ் என்பார் பழைய தமிழ்க் கையெழுத்துக் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு எழுதிய நூலில், சுமார் கி.பி. 247–இல் மதுரையிலிருந்து பல பரவர்களுடன் வந்த வீரவராயன் செட்டி என்ற பெயருடைய வாணிகன் ஒருவன் மரக்கலம் உடைந்து மன்னாரின் மேற்குக் கரையை வந்தடைந்தான் என்றும், பின் அவன் தன்னைச் சேர்ந்தாருடன் வந்து செட்டிகுளத்தில் குடியேறி அங்கே 'வவ்வாலை' என்ற பெயருடைய கேணி ஒன்றையும் , சந்திரசேகருக்குக் கோவில் ஒன்றையும் கி.பி. 289–இல் அமைத்தான் என்றும் குறிப்பிட்டுள்ளார். அப்பகுதியில் இன்று வாழும் முஸ்லீம்கள் தாங்கள் முதல் முதல் இலங்கைக்கு வந்த அரேபிய வணிகர்களின் வழித்தோன்றல்கள் என்று கூறிக் கொள்கின்றனர்.

போர்த்துக்கேயரின் வழித் தோன்றியவர்களைப் பறங்கிச் செட்டிகுளத்தில் அவர்களின் நிறத்தைக் கொண்டு அறிய முடிகின்றது. ஆனால் நிறத்தால் வேறுபட்டாலும் அவர்கள் அப்பகுதிகளுக்குரிய ஆடைகளையே அணிகின்றனர்.

புகழ்பெற்ற யாத்திரைத தலங்களில் மடுவும் ஒன்றாகும். இன்று மடுக்கோவிலில் இருக்கும் சிலை மாந்தையில் முன்பு இருந்ததாகக் கூறுவர். டச்சுக்காரர்கள் மாந்தையைக் கைப்பற்றியபோது கத்தோலிக்கர் புலர் மாதாவின் சிலையை எடுத்துச் சென்று கண்டி இராச்சியத்தின் எல்லையில் இருந்த மருத மடுவில் வைத்தனர் என்றும், அவ்விடத்தே முன்பு ஒரு சுங்க வாடி விடு, அரசனுடைய நாட்டிற்குள் கொண்டு செல்லப்படும் பொருட்களனைத்திற்கும் வரி அறவிட்டு வந்தது என்றும் பரம்பரை வழக்காகக் கத்தோலிக்கரிடையே கூறப்பட்டு வருவதை நாம் அறிவோம். மேலும் வெகு விரைவாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறிய கத்தோலிக்கர்களும் வன்னி நாட்டில் குடியேறினர். இவ்வாறு அங்கே குடியேறிய அனைவரும் நம் அன்னை புனித ஜபமாலை மாதாவின் பாதுகாப்பில் வாழ்ந்தனர். சிறிது காலத்தின் பின் ஆண்டு விழா ஒன்றினை 1370–ஆம் ஆண்டு யூலாய் மாதம் 2–ஆம் நாள் கொண்டாடினர். (அனுராதபுரத்திற்கும், மாதோட்டத்திற்கும், யாழ்ப்பாணத்

திற்கும் அமைந்திருந்த பழைய பாதைகளின் அடையாளங்களை இன்றும் நாம் கிழக்கு மூலைதெற்கில் காண லாம். பழைய பாலம் ஒன்றும் ஒலுக்குளத்தில் காணப்படுகின்றது.)

வன்னி நாட்டின் பிரதானிகளின் சிறப்பான தலைநகரில் பனங்காமமும் ஒன்றாகும். இங்கு பௌத்த சின்னங்கள் எதுவும் காணப்படவில்லை. எனவே இப்பகுதியில் பண்டுதொட்டு இந்துக்களே வாழ்ந்து வந்தனர் என்பது தெளிவாகின்றது.

வவுனிக் குளத்தின் வடமேற்குப் பகுதியில் இருக்கும் காட்டில் அழிந்து சிதைந்த அடையாளங்கள் சில தென்படுகின்றன. எனவே அது ஓர் அழிந்துபட்ட நகராக இருக்கலாம். அழிந்து சிதைந்துபோன பொருள்களின் இடையே, இந்துக்கள் வழிபட்டுவந்த சிவ விஷ்ணு ஆலயங்கள் திரு. ஜே. பீ. லூயிஸ் என் பவரால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டன.

மேலும் 1885–ம் ஆண்டில் முல்லைத்தீவில் தென்னந்தோட்டத் தொழிலாளி ஒருவரால் சுட்டமண் கொட்டுக்களால் கட்டப்பெற்ற சிறிய கிணறு ஒன்றில் வெள்ளிப் புராண ஏடுகள் (51 தகடுகளும் 16 தகடு களும் கொண்டவை) கண்டெடுக்கப்பட்டன. இந்தக் கிணறும் திருக்கேதீச்சரத்தில் காணப்பட்ட கிணறு களும் அமைப்பில் ஒத்திருக்கின்றன. இந்த அரிய கண்டுபிடிப்பின் பயனாக இப்பகுதியில் ஆதிகாலத்தில் திராவிட இனம் வாழ்ந்ததென்பதை அறியமுடிகின்றது.

மகததேசத்துப் புத்தசமயிகள் விஜய இளவரசன் காலத்தில் இலங்கையில் தஞ்சம் புகுந்தனர் என்று யாழ்ப்பாணத்தில் பரம்பரை வழக்காகக் கூறப்படுகின்றது. அப்போது தமிழ்ச் சைவசமயத்தவர்கள் மாதோட்டத்திலும், குதிரைமலைப்பகுதியிலும் வாழ்ந்து வந்தனர். எனவே விஜயனும் அவனைச்சார்ந்த புத்தசமயத்தவர்களும் தெற்கே புத்தளத்திற்கு அருகேயுள்ள தம்மன்னாவரை என்ற இடத்தில் நகரொன்றை அமைத்தனர். அந்துறைமுகம் அக்காலத்தில் கல்யாணத் துறைமுகம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. ஏனெனில் விஜய இளவரசன் குவேனியை இங்குதான் மணந்தான் போலும்....... முதன் முதலில் இலங்கையில் குடியேறியோர் தென் இந்தியர்கள் என்பதும், திராவிட நாகரிகம் விஜயன் இலங்கைக்கு வருவதன் முன்னரே இங்கு இருந்து வந்தது என்பதும் வடமாகாணப் புதை பொருளாராய்ச்சியின் பயனாய்த் தெரிய வருகின்றது. எனவே இலங்கையின் வரலாறு முதலில் வடபகுதியில் தோன்றிப் பின்னர் படிப்படியாகத் தென்பகுதிக்குச் சென்றது என்று கூறுவதற்கு யாதொரு ஐயமுமில்லை.

வன்னியர்கள் :

வன்னியர்கள் பண்டைக்காலத்தில் தென் இந்தியாவில் வாழ்ந்து வந்த அக்கினி குலத்தைச் சேர்ந்த ஆரியர் அல்லாத வகுப்பினர் ஆவர். அவர்கள் மறத்தொழில் புரியும் மாவீரர்கள் பரம்பரையில் தோன்றி யவர்கள்; அரச பரம்பரையைச்சார்ந்தவர்கள். அவர்களைத் தென் இந்திய இராசபுத்திரர்கள் ( **Rajputs** ) என்று கூறலாம்.

வன்னியர்கள் இலங்கைக்கு வந்தமை குறித்துப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக, இலங்கையின் அரசைக் கைப்பற்ற எண்ணி இங்கு கொண்டுவந்த படைகளில் அல்லது இலங்கையின்மேல் படையெடுத்து வந்த இளவரசர்கள் அல்லது தலைவர்களினது தமிழ்ப் படைவீரர்களின் எஞ்சிய பகுதியினரே வன்னியராக இருக்கலாம். இரண்டாவதாக, வையபாடல் கூறும் காரணத்தைச் சொல்லலாம்: ''பாண்டு அர சன் ஆட்சிக் காலத்தில் சுமார் கி. பி. 436–ல் இந்தியாவிலிருந்து இங்கு வந்த குளக்கோட்டன் என்ற தலைவன் கோயில்கள் பலவற்றைச் சீர்திருத்தி அமைத்தான். அப்போது இலங்கையரசன் அவனுக்கு எதிராகப் படை ஒன்றினை அனுப்பினான். ஆனால் பின்னர் அவன் அரசனோடு நல்லெண்ண உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொண்டு கோயில்கள் பலவற்றைத் திருத்தினான். மேலும் அக் கோயில்களுக்குப் பெருந்தொகை நிலங்களை மானியமாகக் கொடுத்துதவினான். வன்னியர்கள் பலரை இந்தியாவின் கரையோரப் பகுதிகளில் இருந்து வரவழைத்துக் கோயில் நிலங்களைப் பண்படுத்திப் பயிரிட்டுக் கோவிலின் நன்மைக்காகப் பாடுபடுமாறு பணித் தான். இவ்வாறு பாண்டி நாட்டிலிருந்து ஐம்பத்தொன்பது குடிகள் இங்கு வந்து சேர்ந்தன. நாளடைவில் அக்குடிகள் பெருகி மக்கள் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. வன்னியர்களில் ஏழு தலைவர்களைத் தேர்ந்து அவர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு பகுதிக்கு முழு உரிமையொடு அதிகாரம் செய்ய உரிமை அளிக்கப் பட்டது.'' இத்தலைவர்களின் வழித்தோன்றல்கள் தொடர்ந்து தங்களது தொழிலைச் செய்து வந்தமையால் அவர்கள் ஆண்டு வந்த நிலப்பரப்பு வன்னி என்ற பெயரைப் பெற்றது. இந்நிலப்பரப்பில் வாழ்ந்து வந்த மக்கள் வன்னியர் என்று அழைக்கப்பட்டனர். இதனைக் கோணேசர் கல்வெட்டு, மேலும்

உறுதிப்படுத்துகின்றது. ஆராய்ச்சி நூலாக அமையாவிட்டாலும் 'வையாபாடல்' வன்னி நாட்டில் அமைதியாகக் குடியேறியிருந்த தென் இந்திய இனங்களைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது.

'வன்னி நாடு நுவரக்கலாவிய மாவட்டத்தையும் தன்னகத்தடக்கிய பெரு நிலப்பரப்பு' என்று சிங்கள வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனை 'மாவன்னி' என்றும் கூறப்பட்டுள்ளது. பிற்பட்ட காலத்தில் வன்னியர் என்ற பெயர் சிங்கள அல்லது வேட்டுவ அல்லது முக்குவத் தலைவர்களின் சிறப்புப் பட்டங்களாகக் கொள்ளப்பட்டது. வேளாளர்கள் சிறு ஊரிற்கு தலைவர்களான போது அவர்கள் வன்னியர் என்று அழைக்கப்பட்டனர். வன்னி நாட்டு இளவரசிகளை 'நாச்சியார்' என்ற சிறப்புப் பெயரால் அழைத்தனர். இது நாயக்கர் என்ற ஆண்பாற் சொல்லுக்கு எதிரான பெண்பாற் சொல்லான 'நாயக்கியார்' என்ற சொல்லின் திரிபாகும்.

வன்னியர்கள் இங்கு வந்து குடியேறி வாழ்ந்தமைக்குப் பல விளக்கங்களைத் தரினும் சிங்கள வரலாற்று நூல்களில் குறிக்கப்படும் உத்தரகோசம் என்ற நிலப்பகுதியில் வன்னியர்கள் மிகப்பழமையான காலத்திலிருந்தே வாழ்ந்து வருபவர்கள் என்று கூறுவதற்கு எவ்வித தடையும் கூறவியலாது.

## வன்னி நாட்டுத் தெய்வங்கள் :

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் ஐயனாரை (ஐயனா—சிங்களம்) ஒரு காட்டுத் தெய்வமாக— காட்டு வழியிற் செல்லுவோருக்குப் பாதுகாப்பை அளிக்கும் தெய்வமாகக் கருதி வழிபடப்படுகின்றது. இத் தெய்வம் குளக்கரைகளிலிருந்து குளங்களைப் பேணிக் காக்கும். பயிர்ச் செய்கை நடைபெறும் போதும், மக்கள் நோய்வாய்ப்பட்டு வருந்தும்போதும், மழை வளங்குன்றும் போதும் மக்கள் ஐயனாருக்கு விழா வெடுத்து வழிபடுவர். குளம் நிரம்பித் தண்ணீர் கரைபுரண்டோடும்போது சிங்களவர்களில் முதியோர் ஒன்று திரண்டு அக்கிராமத்து ஐயனாருக்கு 'முட்டிமங்கலம்' என்ற விழாவை நடாத்தி வருவது இன்றும் வழக்கில் உண்டு.

இத் தெய்வ வணக்கம் தென் இந்தியாவிலிருந்து மிகப் பழங் காலத்திலேயே இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. இத் தெய்வத்தின் முழுப் பெயர் 'கையனார்' என்பதாகும். ஏனெனில் இவர் விஷ்ணுவின் கையில் நின்றும் வெளிவந்தாராம். திருவாங்கூரில் இத் தெய்வம் 'அய்யப்பன்' என்ற பெயரால் அழைக்கப் படுகின்றது. இத் தெய்வத்தின் சின்னம் இடையர்களின் தடியாகும். இவரின் இருப்பிடம் மேற்குப் படித் துறையர்கும்.

வன்னி நாட்டின் பல பகுதிகளில் இத் தெய்வத்திற்குரிய கோயில்கள் காணப்படுகின்றன. முன்னர் கூறியது போல் யாழ்ப்பாணத்திற்கும் மன்னாருக்குமிடையில் ஐயனார் கோயில் ஒன்று இருக்கின்றது. குதிரையும் யானையும் இத்தெய்வத்தின் வாகனங்களாம். மாதம்பையில் காணப்படும் ஐயனார் கோயில் ஒன்றில், இத் தெய்வத்தின் வாகனமான குதிரை மிகவும் புகழ் பெற்று விளங்குகின்றது.

இலங்கையில் அமைக்கப்பட்ட மிகப்பழைமையான புத்தகோயில்களில் இஸ்ருமுனியா கற்கோயிலும் ஒன்றாகும். விகாரையாக மாற்றப்படுவதற்கு முன்னர் இது ஒரு தேவாலயமாக இருந்தது. அரசதோரணையில் அமர்ந்திருக்கும் ஒருவரின் புடைப்பகழ்வுச்சித்திரம் **(Relief)** ஒன்று இங்குள்ள கற்பாறையில் காணப் படுகின்றது. இந்த உருவத்தைப் போர்வீரன் ஒருவன் என்று சிலர் கூறினாலும், அமைப்பில் எல்லா விதத்தாலும் ஐயனாரையே அது ஒத்திருக்கின்றது. இந்தச் சிலைகள் எல்லாம் உயர்ந்த முழந்தாளில் முழங்கையை வைத்து வீற்றிருக்கும் பாவனையில் அமைந்துள்ளன. இந்துக்களின் உயர்ந்த தெய்வங்களின் தலையை அலங்கரிக்கும் கூம்புவடிவமைந்த 'கிரீடம்' இத்தெய்வச் சிலைகளில் காணப் பெறுமை இங்கு குறிப்பிடத்தக்க தொன்று. இப்புடைப்பகழ்வுச் சித்திரத்தில் குதிரையும், கையில் வளைந்த தடியும், அருகே ஐயனாரின் வாகனமாகிய யானைக் கூட்டங்களும் காட்டப்பட்டுள்ளன. கீழே மற்றொரு கல்லில் காணப்படும் இடது கையிலே மலரேந்திய மங்கையின் உருவம் இவரது தேவியாய் இருக்கலாம் என்று ஊகிக்கவேண்டியுள்ளது. இவையெல்லாம் சேர்த்துக் காட்டப்பட்டுள்ளது ஐயனாரின் திருவுருவேயன்றிப் போர் வீரன் ஒருவனின் உருவம் அன்று.

மலபார் மக்களிடத்து மலிந்திருந்த நாகவணக்கம் **(Serpent Cult)** இலங்கையிலும் பரவியது. பண்டைய நாகர்கள் இதற்குக் கோயில் அமைத்து வணங்கி வந்தனர். ஐந்து தலை நாகத்திற்கு அமைக்கப்பட்ட கோவிலின் சிதைவுகள் மதவுவைத்த குளத்திற்கும் குருந்தூர்க் குளத்திற்கும் இடையில் காணப்படுகின்றது.

வன்னியின் பல பகுதிகளிலிருந்தும் புத்தூரில் நடைபெறும் நாகதம்பிரான் திருவிழாவிற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆண்டு தோறும் செல்வர்.

இலங்கையின் காவல் தெய்வமாகிய கண்ணகி வணக்கம் அல்லது பத்தினி வணக்கம், அது தோன்றிய இந்தியாவிலும் பார்க்க இலங்கையில் மிகவும் சிறப்புற்றுத் திகழ்கின்றது. இத்தெய்வம் சின்னம்மை பெரியம்மை போன்ற தொற்று நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கின்றது, தொடக்கத்திலிருந்தே பத்தினி ஒரு இந்துத் தெய்வமாக இருப்பினும் சிங்கள, பௌத்த மக்கள் பலருள்ளும் இன்று பரவியுள்ளது.

வற்றாப்பளையிலுள்ள பழைமைவாய்ந்த கண்ணகி கோவிலுக்கு ஆண்டுதோறும் தீவின் தமிழ்பேசும் பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கோர் இன்றும் செல்கின்றனர். இன்னொரு பிரபலமான கண்ணகி கோயில் ஒன்று குஞ்சுப் பரந்தனில் இருக்கின்றது.

போர்த்துக்கேயர் வருவதற்கு முன்னர் மடுவில் கண்ணகிக்குக் கோயில் ஒன்று இருந்ததாகப் பரம் பரையாகக்கூறிவரப்படுகின்றது. அவ்வாறு கொண்டாடப்பட்டுவந்த கண்ணகி வணக்கம் இந்துக்களிடையேயும் பரவி இருக்கின்றமைக்கு இப்பகுதியிலிருந்து வந்த நெடுகாலக் கண்ணகி வணக்கமே வித்திட்டதெனலாம். ஒரு தாய்த்தெய்வ வணக்கமே மற்றொருதாய்த் தெய்வ வணக்கத்திற்கு இடமளித்தது போலும்! இந்தப் பழைமையான கூற்றை ஆதரிக்கும் வகையில் திரு. ஈவேர்ஸ் என்பார், தமது 'வடமத்திய மாகாணக் கைநூலில்' பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''மடுவிலிருக்கும் தூயமேரி மாதாவின் திருக்கோயில் புத்த சமயத்தின ராலும், அனேக தமிழ் யாத்திரிகர்களாலும் பத்தினி அம்மன் கோயில் என்றே வழிபடப்பட்டு வருகிறது.''

கண்ணகி வணக்கத்தோடு சேர்ந்து ஏழு கன்னிகள் (நாச்சிமார்கள்) வணக்கமும் வன்னி நாட்டில் மிகுந்திருந்தது. இவ்வணக்கம் முதலில் தென் இந்தியாவில் தோன்றி பின்னர் இலங்கையில் தமிழ் பேசும் பகுதிகளில் பரவலாயிற்று. புதுக்குடியிருப்புக்கும் ஒட்டுசுட்டானுக்கும் இடையிலுள்ள மன்னுக்கண்டல் ( **Mannakandal** ) என்னும் இடத்தில் இத்தேவிகளின் கோயில்கள் உடைந்து சிதைந்து கிடப்பதைக் காணலாம்.

விநாயகரை வேளாண்மைக்குக் காவற் தெய்வமாகப் பயிர்த்தொழில் செய்யும் வேளாளர் கருதி வழி பட்டனர். வன்னியின் எல்லாப்பகுதிகளிலும் இத்தெய்வத்தின் அழிந்துபோன கோயில்களைக் காணலாம். ஆத்மிக வளர்ச்சியிலும் பார்க்கச் செல்வப் பெருக்கை மனத்திற்கொண்டு சிங்களவர் பிள்ளையாரை வணங்கு கின்றனர். சில காலத்துக்குமுன் அனுரதபுரியிலுள்ள அரசமரத்திற்கு எதிரில் ஒரு கணேசர் சிலை இருந்து வந்தது. இக்கணேசருக்கு இந்துக்கள் செய்வது போல், புத்த மதத்தினர் பாற்சோறு படைத்துப் பணிந்து வந்தனர். இவர் அனுராதபுரத்தையும் அரசமரத்தையும் பாதுகாக்கும் தேவகாவலன் என்றே எண்ண பட்டார்.


சிவனுக்குரிய பழைய தலங்கள் மன்னருக்கணித்தே திருக்கேதீச்சரமும், ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரமும், குதிரைமலைக்கருகேயுள்ள அசுவகிரியும் ஆவனவாம். தென் இந்தியக் கல்வெட் டொன்றின்படி திருவிராமேஸ்வரமுடைய மகாதேவன் கோவில் என்ற பெயருடைய மற்றொரு சிவன்கோயில் மாதோட்டத்தில் இருந்ததாக அறியக்கிடக்கின்றது. உருத்திரபுரமும் வவுனிக்குளத்திற்கு அண்மையிலுள்ள கோயிற்காடும், கற்சிலைமடுவும் ஏனைய முக்கிய சிவஸ்தலங்களாம். கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் அமைக்கப் பட்ட சிவன்கோயில் ஒன்று முன் கூறியதுபோல் செட்டிகுளத்தில் இருந்தது.

பழைய அனுராதபுரத்திலும் சிவவணக்கம் இருந்தது. தேவநம்பியதீசன் அனுரதபுரியின் எல்லையை வரையறுக்கும்போது அவன் பிராமணன் ஒருவனுக்குச் சொந்தமான கோயில் ஒன்றைக் கடந்து போக வேண்டியிருந்தது. 1893–இல் அனுரதபுரியில் நடந்த புதைபொருளாராய்ச்சி அப்பழம் நகரில் சிவன்கோயில் ஒன்று இருந்ததாகத் தெளிவுறுத்திற்று. ஜேத்தவனராமாவிற்கும் விஜயராம மடத்திற்கும் இடையில் இந்து ஆலயங்கள் பலவும், அவற்றைச் சார்ந்த கட்டடங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இரு சிவன் கோயில்களில் கருங்கல்லினால் செய்யப்பெற்ற இரண்டு சிவலிங்கங்கள் அவைகளுக்குரிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. ''மேஜர் போர்ப்ஸ்'' என்பார் அனுராதபுரத்தை 1828–இல் பார்வையிட்ட பின், ''காடில்லாமல் இருக்கும் ஒரேயொருபகுதி மகாவிகாரையின் முன்னுள்ள பகுதியாம். அப்பகுதியில் ஒரு சதுரத்தில் நிழல்தரும் மரம் ஒன்று நிற்கின்றது. பதினைந்து அடி உயரமுள்ள தூணொன்றின் அருகில், ஒரு அச்சில் சுழலும் கருங்கற்காளை ஒன்று உண்டு. இவையனைத்தும் இங்கே ஒரு சிவன் கோயில் இருந்ததென்பதைக் காட்டுகின்றது. இக்கற் றூண் எல்லாச் சைவக் கோயில்களிலும் நந்தியின் அருகில் காணப்படும் கொடித்தம்பமாக இருக்கலாம்.''

இத்தெய்வங்களோடு வைரவரையும், விஷ்ணுவையும், காளியையும் வன்னியர் வணங்கி வந்தனர். பெரிய காளி கோயில் ஒன்று அனுராதபுரத்தில் இருந்தது.

இவ்வாறு பண்டைக்காலத்திலிருந்தே இலங்கை மக்களிடையே எப்படித் தென்இந்தியப் பண்பாடு மேலோங்கி இருந்தது என்பதைக் காணலாம். ஆயிரமாண்டுகளுக்கு மேலாக வன்னி நாட்டை ஆண்டவர்களும், தமிழர்களின் பெருமைக்கும் பண்பாட்டிற்கும் பாத்திரர்களுமான வன்னியர்களின் வரலாறின்றி ஈழத் தமிழர் வரலாறு என்றும் முற்றுப்பெறாது.

(சி. எஸ். நவரத்தினம் அவர்கள் ''வன்னியும் வன்னியரும்'' எனும் பெயரில் ஆங்கிலத்திலெழுதிய நூலிலிருந்து எடுக்கப்பட்டது. திருக்கேதீச்சரம் சைவ மாநாட்டு மலரில் — 1960 — இடம் பெற்றது. )



# வன்னி நாட்டுப்

# பிரிவுகள் - ஆறுகள் - ஊர்ப் பெயர்கள்

## அ. பிரிவுகள்

i பெருங்காலிப்பற்று
ii முசலிப்பற்று
iii மேற்குமூலை
iv சின்னச்செட்டிகுளம்
v நடுச்செட்டிகுளம்
vi கிழக்குமூலை தெற்கு
vii கிழக்குமூலை வடக்கு
viii மேல்பற்று தெற்கு
ix மேல்பற்று கிழக்கு
x மேல்பற்று வடக்கு
xi பனங்காமம்
xii உடையாவூர்
xiii துணுக்காய்
xiv கரச்சி
xv புதுக்குடியிருப்பு
xvi முள்ளியவளை
xvii கரிக்கட்டுமூலை வடக்கு
xviii கரிக்கட்டுமூலை தெற்கு
xix மகாவன்னி
xx திருக்கோணமலை

## ஆ. ஆறுகள்

க. பறங்கிஆறு
ங. அருவி ஆறு அல்லது மல்வத்துஒயா
ச. கல்லாறு
ஞ. மொடரகம ஆறு அல்லது மோர்க்கமான் ஆறு
ட. கனகராயன் ஆறு
ண. பேராறு
த. நாயாறு
ந. மாஓயா
ப. யான் ஓயா

## இ. ஊர்கள்

1. பூநகரி
2. அக்கராயன்குளம்
3. வெள்ளாங்குளம்
4. துணுக்காய்
5. வவனிக்குளம்
6. பனங்காமம்
7. இலுப்பைக்கடவை
8. கொம்புதூக்கி
9. விடத்தல்தீவு
10. விளுயன்குளம்
11. பாலம்பிட்டி
12. மடு
13. கட்டுக்கரை
14. மாதோட்டம் (திருக்கேதீச்சரம்)
15. மன்னூர்
16. அரிப்பு
17. அகத்திமுறிப்பு
18. தேக்கம்
19. புளியடிஇறக்கம்
20. புளியடித்தேக்கம்
21. பெரியகட்டுக்குளம்
22. வில்மடுத்தேக்கம்
23. குதிரைமலை
24. பொம்பரிப்பு
25. அநுராதபுரம்
26. மதவாச்சி
27. செட்டிகுளம்
28. பூவரசங்குளம்
29. குறிஞ்சாக்குளத்தேக்கம்
30. ஒலுக்குளம்
31. பாவற்குளம்
32. சறற்பெரியகுளம்
33. வவனியா
34. மடுக்கந்தை
35. மணியர்குளம்
36. மாமடு
37. கருங்காலிக்குளம்
38. மகாகச்சக்கொடி

39. மாருஇலுப்பை
40. ஓமந்தை
41. இறம்பைக்குளம்
42. ஈஞ்வன்மடுவ
43. புளியங்குளம்
44. புத்தூர்
45. கனகராயன்குளம்
46. மாங்குளம்
47. முறிகண்டி
48. இரணைமடு
49. கிளிநொச்சி
50. குஞ்சுப்பரந்தன்
51. பரந்தன்
52. ஆனையிறவு
53. முரசுமோட்டை
54. வட்டக்கச்சி
55. இரணைமடுக்குளம்
56. கொக்காவில்
57. புதுக்குடியிருப்பு
58. கற்சிலைமடு
59. மன்னார்க்கண்டல்
60. தனியூற்று
61. வற்றாப்பளை
62. முல்லைத்தீவு
63. முள்ளியவளை
64. ஒட்டுசுட்டான்
65. குருந்தூர்மலை
66. தண்ணீரூற்றிப்பு
67. ஒதியமலை
68. பண்டாரக்குளம்
69. நெடுங்கேணி
70. பெரியகுளம்
71. சின்னப்பூவரசங்குளம்
72. ஆரியமடு
73. நொச்சிக்குளம்
74. கும்பகன்னன்மலை
75. வண்ணாத்திபாலம்
76. ஒலுமடுக்குளம்
77. தென்னமரவடி
78. கொக்கிளாய்
79. பழமோட்டை (புல்மோட்டை)
80. பதவியாக்குளம்
81. திருக்கோணமலை

# சிவநெறியின் வளர்ச்சி

## -- குன்றக்குடி அடிகளார் —

மானிட சாதியின் பண்பியல் வளர்ச்சிக்குச் சமய வாழ்வே அடிப்படை. சமுதாயத்தில் அன்பை — அறத்தை—பண்பாட்டை—சமுதாய ஒப்புரவு உணர்ச்சியை ஆட்சியால், சட்டத்தால் ஆக்க முடியாது. சமயம் ஒன்றே மனித சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கு உறுதுணை. உப்பும்—புளியும்—மிள காயும் தனித்தனியே சுவையுடைய பண்டங்கள். எனினும் அவை எல்லாம் ஒரு முறைக்குட்பட்டுக் கூட்டுக் கலவையாக்கப்பட்டால் ஒழியச் சுவைக்கமுடியாதன. உடலுக்கும் பயன் தராதன. தனித் தனிச் சுவை யுடைய பண்டங்களை வேண்டுவன சேர்த்து, வேண்டாதன விலக்கி, கூட்டும் வண்ணம் கூட்டும் சமைவண்ணத் தொழிலுக்குப் பெயர் ''சமையல்''. சற்றேறக் குறைய இதே அடிப்படைக் கண்ணோட்டத்தில்தான் ''சமயம்'' என்ற சொல்லும் பிறந்தது. வேறுபட்ட பல்வேறு குணங்களுடைய ஆன்மாவை — நன்முறையில் —தீயகுணங்களினின்றும் விலக்கி — நற்குணங்களைச் சேர்த்து ஆன்மாவை — அன்பு — அறம் — அருள் நிறைந்ததாக்கும் தத்துவத்திற்கு ''சமயம்'' என்று பெயர். எனவே சமயத்தின் பயன் அன்பின் வழியதாக ஆன்மாவை ஆற்றுப்படுத்துதல். இத்தகு நோக்கத்துடனேயே உலகெங்கும் சமய தத்துவங்கள் மலர்ந்தன. நாடு—மொழிகளுக்கேற்ப அவை தம்முள் வேற்றுமைகள் உண்டெனினும் அடிப்படையில் ஆழமான ஒற்றுமை யுடையன. ஒரே இலட்சியத்தையும் உடையன. அதாவது மனித சமுதாயத்திற்குச் சிறந்த மனவளர்ச்சி யைத் தந்து ஈடேற்றுவது என்பதாகும். இத்தகு சமயங்கள் பலவற்றுள்ளும் சிவநெறி காலத்தால் மூத்தது. கருத்தாலும் மூத்தது. முன்னைப் பழைய நெறி. பின்னைப் புதுமை நலன்களும் அமைந்த அருள் நெறி. சிவ நெறி தமிழகத்தின் தனிநெறி. தத்துவத்தால் உலகப் பொது நெறி. சிவநெறி வாழ்வில் மலர்ந்த நெறி. வாழ்வு நெறி — வாழ்க்கையை வளப்படுத்தும் நெறி. இம்மையோடு — மறுமையும் எழுமையும் இன்பந்தரும் நெறி. இத்தகு பெருமை மிகு நெறி—சைவ நெறியார்களின் அக்கறையின்மையின் காரணமாக தற்பொழுது ஆக்கமாக இல்லை. சிவநெறிக்குப் பிற்பட்ட சமயங்கள் எல்லாம உலகச் சமயமாக விளங்க, சிவநெறி மூலையில் இருக்கிறதை எண்ணும்பொழுது வேதனை பெருகுகிறது. சைவ இளைஞர்கள் இந்த நிலையை உணர்ந்து

சிவநெறியின் வளர்ச்சித் திருப்பணிகளில் ஈடுபட முன்வருவார்களா! சிவநெறியின் தலைசிறந்த தத்துவங்களை அன்றாட வாழ்க்கையில் வைத்து உயிர் கொடுப்பதே இன்றைய முதற் திருப்பணி.

நெஞ்சு கனிந்த பக்தியும்—சமுதாயத் திருத் தொண்டில் ஆர்வமும் இன்றைய சைவ உலகிற்கு—சிறப்பாக இளைஞர்களுக்குத் தேவை. இத்திருப்பணிகளை ''இலங்கை இந்து இளைஞர் மன்றம்'' செய்யும் என்று நம்புகின்றோம். மன்றத்தின் ''இந்து தர்மம்'' இதழ் வாழ்க! வளர்க அதன் கருத்தாக்கத் திருப்பணி!!

(பேராதனை இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்க வெளியீடான இந்து தர்மத்தில் 1958–1959 இல் வெளிவந்தது)

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

# சுத்த சைவ சித்தாந்தக் கொள்கைகள்

— சு. நடேசபிள்ளை —

தமிழகம் பண்டு தொட்டு பக்தியிற் சிறந்த நாடாக விளங்குகிறது. ஒருருவம் ஒரு நாமம் ஒன்றுமில்லாத பரம்பொருளுக்கு உருவத்தையும் நாமத்தையும் கொடுத்து, அதனை வழிபட்டு ஆன்மா அதுவேயாகிப் பேரின்பப் பெருவாழ்வை அடையும் பக்திமார்க்கம் சைவ அடியார்களாலும், வைணவ ஆழ்வார்களாலும் தமிழ்நாட்டில் நிலை நிறுத்தப்பட்டது. அவர்கள் தாம் பெற்ற அநுபவத்தை அமுதப் பாசுரங்களில் அருளிச் செய்தார்கள். அவற்றைப் பாடுங்கால் நாமும் அவர்கள் பெற்ற அநுபவத்தில் தோய்ந்து பரவச நிலையை ஒரு சிறிதாவது அடையக்கூடியவர்கள் ஆகின்றோம். திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது நாமறிந்த உண்மை. திருவாசகத்துக்கு இருக்கும் இத்தகைய ஆற்றல் வேதத்துக்கும் இல்லை என்றனர் ஒரு தமிழ்ப் பெரியார். இக்காலத்தில் ஆங்கில நாட்டில் பன்மொழிப் புலவராக விளங்கும் பார்னட் பேராசிரியர் உள்ளத்தை உருக்கும் பக்திப்பாடல்கள் தமிழில் இருப்பது போல் வேறெந்த மொழியிலும் இல்லை என்று கூறியுள்ளார். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலிய திருமுறைகளுக்குப் பின்னர், பட்டினத்தடிகள் பாடிய பாடல்களும், அருணகிரிநாதர் அருளிய தோத்திரங்களும் நமது உள்ளத்தை ஈர்த்து, பக்தியிற் பதியவைக்கும் பெற்றிவாய்ந்தவை. தமிழகத்தில் வாழையடி வாழையாக அடியார்கள் தோன்றித் தாம்பெற்ற அநுபவத்தை ஏனையோரும் பெறுமாறு பாடல்களை அருளிச்செய்துள்ளார்கள். பஞ்சேந்திரிய இன்பத்தைக் கடந்து, உள்ளத்தை உருக்கி, உடம்பெல்லாம் ஊற்றெடுத்துப் பாயும் பேரின்ப அநுபவம் ஒன்று உண்டு என்பதற்கும், அவ்வநுபவத்தை இப்பிறவியிலேயே பெறலாம் என்பதற்கும், இவ்வருட் பாடல்கள் சான்று பகரும் ஆப்த மொழிகளாகும்.

'' போக்கும் வரவும் இரவும்
பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவும் முடிவுமில்லா
தொன்று வந்துவந்து
தாக்கும் மனோலயந் தானேதரும்
எனைத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுகவா சொல்லொணா
திந்த ஆனந்தமே''

என்று அருணகிரிநாதர் இவ்வநுபவத்தை உணர்த்துகின்றார். இவ்வநுபவத்தைப்பெறுதற்கு முயலாது அவமே உழன்று துக்கத்துக்கும், சோகத்துக்கும், பயத்துக்கும் ஆளாகின்றோம். இவற்றைத் தவிர்த்து வாழ்வதற்கு வழியுண்டு.

"நாளென் செயும்வினை தானென்
செயும்எனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங்
கூற்றென் செயுங்கும ரேசஇரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கைபுந்
தண்டையுந் சண்முகமுந்
தோளுங் கடம்பும் எனக்கு
முன்னே வந்து தோன்றிடினே"

என்று அருணகிரிநாதர் வழிகாட்டுகிருர். அடியார்கள் "அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை" என்பது அப்பர் அருளிய வாக்கு. அவர்களுக்கு வரும் தீமையும் நன்மையாக மாறும். "ஆசறும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" என்பது திருஞானசம்பந்தர் அளிய உறுதி மொழியாகும்.

பக்திக் கொள்கையே நமது சமய வாழ்க்கையின் ஆதாரமாயுள்ளது. இக்காரணம் பற்றியே தமிழ் நாடெங்கும் திருக்கோயில்கள் எழுந்தன. திருக்கோயில் இல்லாத திருவில் ஊர் அடவி காடே என்று கூறப் பட்டது. மூர்த்தி, தலம், தீர்த்தம் எனபன பக்தி வழிபாட்டுக்குச் சாதனமாக அமைந்தன. உள்ளும் புறமும் தூய உணர்ச்சியை அடைவதற்கு சரியை கிரியை முதலியன உதவுகின்றன. திருவங்கமாலைப் பதிகத்தில் "தலையே நீ வணங்காய்" என்ற பாக்கள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன. திருக்கோயிலுள் மூர்த்தியின் கோலத்தையும், அங்கு நடக்கும் தீபாராதனை முதலிய காட்சிகளையும் கண்டு நம் கண்கள் புனிதமடைகின்றன; பக்திப்பாடல்களைக் கேட்டு நம்செவிகள் புனித மடைகின்றன; இறைவனை வணங்கி நம்கைகள் புனிதமடை கின்றன; திருக்கோயில் வலம் வந்து நம் கால்கள் புனிதமடைகின்றன; உலக வாசனையால் சலனமடைந்த நம் கரணங்கள் தூய்மை அடைந்து நாளும் சிவ சம்பந்தப்படுகின்றன. சைவ சமயம் ஆன்ம ஈடேற்றத்துக்குப் பசு புண்ணியத்தோடு சிவ புண்ணியம் அவசியமென்று வற்புறுத்துகின்றது. பசு புண்ணியம் பிற உயிர்களிடம் காட்டும் அன்புச்செயல்; சிவபுண்ணியம் பக்தி வழிபாட்டுக்குரிய சரியை கிரியை முதலியவற்றைக் குறிக்கும். பௌதம் போன்ற சமயங்கள் பசு புண்ணியத்தை மாத்திரம் போதிக்கின்றன. ஆனல் சைவ சமயம் இத னேடு அமையாது, ஆன்மா பந்தத்தினின்று நீங்குதற்குப் பதியாகிய சிவத்தின் சார்பைநாட வேண்டுமென்றும், ஆன்மா ஈடேற்றத்துக்குச் சிவபுண்ணியம் அவசியமென்றும் சாதிக்கின்றது.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு".

என்ற திருக்குறளின் கருத்தும் இதுவேயாகும்.

சரியை கிரியைகளினின்று ஆன்மா யோகத்துக்கும் ஞானத்துக்கும் உரியதாகின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சைவ சமயத்தில் இச்சாதனங்கள் படிப்படியாகச் சோபன முறையில் வகுக்கப்பட் டிருக்கின்றன. அந்தகரணங்கள் அடங்கிச் சித்தி விருத்திகள் அற்ற நிலை யோகமாகும். இச்சார்த நிலையை அடைவதற்குப் பிராணலயம் அவசியம். இதற்குரிய உபாயங்களைப் பதஞ்சலி முனிவர் யோக சூத்திரத்திற் கூறுமிடத்து "ஈஸ்வர ப்ரணிதானத்" என்று பக்தி மார்க்கத்தை வியந்தோதுகின்ருர். யோக சாதனையில் காயமே கோயிலாகின்றது. சலனமற்ற உள்ளம் இறைவன் சந்நிதானம் ஆகின்றது. தியானத்தினின்று சமாதிப் பேறுண்டாகிறது. இத்தகைய சிவயோகத்தை விலக்கி, அப்பர் சுவாமிகள்,

உயிராவணம் இருந்து உற்று நோக்கி
உள்ளக்கிழியின் உருவெழுதி
உயிரா வணஞ் செய்திட்டுன் கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி
அயிராவணம் ஏறாது ஆனேறேறி
அமரர்நா டாளாதே ஆரூராண்ட
அயிராவணமே என்னம் மானேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே".

என்று கூறியுள்ளார்கள். இங்கு உயிராவணம் என்பது பிராணலயத்தையும், உள்ளக்கிழியின் உருவெழுதி என்பது தியானத்தையும், ஒட்டி வாழ்தி என்பது ஆன்மாவுடன் சிவம் அத்வைதமாயிருத்தலையும் குறிக்கின்

றன. ஆன்மா கருவி கரணங்களினின்றும் பிரிந்து, தன்னை அறவே இழந்து, சுத்த அறிவாக இலங்குமிடத்துத் தான் சிவத்தோடு ஆநந்தமாய் இருப்பதை உணர்கின்றது. இதுவே அத்வைத ஞானமாகும். இந்நிலையில் நின்றோர் ஜீவன் முக்தர் ஆவர். இவ்வாறு பத்திநெறி முத்திநெறியாக முடிகின்றது. மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனது திருவருட்சோதியில் கலப்பதற்கு முன்னர்,

'' முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே.''

என்று பாடிய பராநுபவத்தை நினைந்து யாமும் பக்திநெறியைப் பற்றி வாழ்வோமாக.

சைவ சமயத்தின் ஞானபாதம் சைவ சித்தாந்தம் எனப்படும். ஆன்மா பந்தத்தினின்று நீங்கி, வீடுபேறடையும் முறையை விளக்குவது சைவ சித்தாந்தத்தின் முக்கிய நோக்கம். சைவ சித்தாந்தத்துக்குத் தனிச்சிறப்பளிக்கும் சில கொள்கைகள் உள. ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் பந்தம் ''பாசம்'' எனப்படும். பாசத்தால் கட்டுப்பட்டிருப்பதால், ஆன்மா ''பசு'' என்று கூறப்படும். பசுபாசங்களை இயக்கும் கர்த்தா ''பதி'' எனப்படுவர். சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களைப் பற்றி விரித்துரைக்கின்றது.

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது என்று சைவசித்தாந்தம் ஆன்ம லக்ஷணம் கூறுகின்றது. இக்கொள்கை சைவ சித்தாந்தத்துக்குச் சிறப்பாக அமைந்துள்ளது. ஆன்மா பாசத்தைச் சார்ந்த இடத்துப் பாசமயமாகவும், பதியாகிய சிவத்தைச் சார்ந்த இடத்துச் சிவமயமாகவும் உள்ளது. இதனால் அது சதசத்து என்று சொல்லப்படும். ஆன்மாவுக்கு மெய்ச் சார்பாகிய சிவம் சத்தாகும்; பொய்ச் சார்பாகிய பாசம் அசத்தாகும்.

ஆன்மாவுக்கு கேவலம், சகலம் சுத்தம் என்று மூன்று நிலைகள் உள. கேவலத்தில் ஆன்மாவின் அறிவு இச்சை செயல் என்ற சக்திகள் மறைக்கப்பட்டு இருண்மயமாக இருக்கும். ஆன்மாவை அவ்வாறு மறைத்து அணுத்தன்மையாகச் செய்வது ஆணவமலம் எனப்படும். இதினின்று ஆன்மா இறைவனது திருவருட் சக்தியால் சிறிது விடுவிக்கப்பட்டு, அதன் அறிவு இச்சை, செயல்கள் ஏகதேசப்பட்டு விளங்கும் நிலை சகலமாகும். இந்நிலையில் ஆன்மாவின் அறிவு வியாபகமின்றிச் சுட்டறிவாக இருக்கும். சகலத்தின் ஆன்மா சிறிது பிரகாசம்பெற்று இயங்குவதற்குக் காரணம் மாயை ஆகும். ஆன்மா இவ்வாறு இயங்குதற்குரிய தத்துவங்களெல்லாம் மாயையினின்றே உபகரிக்கப்படுகின்றன. ஆன்மாவின் இச்சைகளைப் பரிபக்குவப் படுத்தித் தொடைப்பதற்காகவே அதற்குக் கர்மஞானேந்திரியங்களும், அந்தகரணங்களும், பஞ்சபூதங்களாலாய உலகமும் பரமேஸ்வரனால் அளிக்கப்படுகின்றன. மாயா காரியங்கள் ஆன்மப் பிரகாசத்துக்கு ஓரளவு உபகரிக்கப்படுகின்றமையால், மாயை மூலமாகிய ஆணவத்தினின்று வேறாகும். மாயாவாதிகள் கூறும் அநிர்வசனீயமாகிய மாயையினின்று சைவ சித்தாந்திகள் கூறும் மாயை பிறிது. ஆயினும், இம்மாயையிலும் மறைப்பு இருப்பதால், இதுவும் பாசபந்தமே ஆகும். கன்மம் புண்ணியம் பாவம் என்று இருதிறப்பட்டு, சுகம் துக்கம் என்ற பலன்களுக்கு ஏதுவாய் ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் தன்மையுடையதாய்ப் பாசமாகும். சகல நிலையில் ஆணவம், கன்மம், மாயை மூவகை மலங்களும் உள. நாமனைவரும் சகலர்களே. நாம் தநு, கரண, புவன போகங்களைப் பெற்று, சிற்றறிவும் சிறு தொழிலும் உடையவர்களாக இருக்கின்றோம். சுக துக்க போகங்களை நாம் அநுபவிக்கச்செய்து, நம்மை பாசநீக்கத்துக்குப் பரிபக்குவப்படுத்துவது இறைவனது சக்தியே. கேவலத்திலும் சகலத்திலும் உடன் இருந்து மலங்களைப் பக்குவப்படுத்தி நம்மை மாயவாழ்க்கையில் நடத்தும் இச்சக்தி திரோதான சக்தி என்றும் கூறப்படும். இறைவனது தர்ம ரூபமான இச் சக்தி நம்மைத் தண்டித்தும், போகத்தைத் துய்பிக்கும் மறக்கருணை காட்டி ஆள்கின்றது. இந்தக் கோர சக்தி ஆன்மா பரிபக்குவப்பட்டுச் சுத்த நிலையில் பிரவேசிக்கும் காலத்தில் அநுக்கிரக சக்தியாக விளங்குகின்றது. திரோதான சக்தியைப்பற்றிச் சைவசித்தாந்தம் கூறும் விளக்கம் ஏனைய சித்தாந்தங்களில் காண்பது அரிதாகும்.

உலகத்தில் கன்ம வயத்தால் விருப்பு வெறுப்புக்களிலும், சுக துக்கங்களிலும் மாறிமாறிச் சுழலும் ஆன்மா, தர்ம உணர்ச்சியைப் பெற்றுப் புண்ணியத்தைச் செய்து பாபத்தைத் தவிர்க்கின்றது. ஆயினும் உலக வாழ்க்கையில் துவர்ப்படைகின்றது. மல பரிபாகத்தால் இருவினை ஒப்பு நேர்கின்றது. நித்தியமாகக் கருதியிருந்த வாழ்வு அநித்தியம் என்ற உண்மை வெளியாகின்றது. ஆன்மா பொய்ச்சார்பை விட்டு, மெய்ச்சார்பை நாடுகின்றது. இந்த நிலையைத்தான் பட்டினத்தடிகள் நமது நெஞ்சை நெகிழ்க்கும் வகையில்,

"ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல
உற்றுப்பெற்ற பேருஞ் சதமல்ல
பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல
தேசத்திலே யாருஞ் சதமல்ல
நின்றாள் சதங்கச்சி யேகம்பனே"

என்று காட்டியுள்ளார்கள். ஆன்மா பொய்ச் சார்பை விடுகின்ற காலத்தில், மெய்ச்சார்பாகிய திருவருட சக்தியின் மடியில் வீழ்கின்றது. திருவருட் சக்தி ஆன்மாவில் பதிகின்றது. இதுவே "சத்திநிபாதம்" என்று சொல்லப்படும். ஆன்மா சுத்த நிலையில் பிரவேசிக்கின்றது. இந்த நிலையில் இறைவனே சற்குருவாக எதிர்ப்படுகின்றான். சற்குருவை அதிஷ்டித்து ஆன்மாவுக்கு அருள் செய்கின்றான் என்பது சைவ சித்தாந்தக்கருத்தாகும். ஞானப் பிரகாசத்தை அருளவல்லவன் சிவனே என்று திருமூலர் அருளினர். மாணிக்கவாசக சுவாமிகள்,

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமை"

என்றும்,

"ஈறிலாதநீ எளியை யாகிவந்
தொளிசெய் மானுடமாக நோக்கியும்"

என்றும் சிவனே சத்குருவாகத் தோன்றிய வரலாற்றைக் கூறியுள்ளார்கள். திருவாசகத்தின் இரகசியார்த்தம் இவ்வுண்மையைப்பற்றியதேயாம். ஆன்மா தானாகச் சிவஞானத்தைப் பெறுவதில்லை. சற்குருவின் கடாக்ஷத்தினால் அதைப்பெறுகின்றது. இதுவே தீக்ஷையாகும்.

"குருவருளாற் காட்டிடவும் அன்பரைக் கோத்து
அறவிழுங்கிக் கொண்டபாலும்
தெரிவரிதாய்க் கலந்த தெந்தப்பொருள்
அந்தப் பொருளினையாம் சிந்தை செய்வாம்"

என்றும்,

"விண்ணாதி ஐம்பூதம் தன்னகத்தே அடக்கி
வெறு வெளியாய் ஞானக்
கண்ணாரக் கண்டவர்தம் கண்ணூடே
ஆனந்தக் கடலாய்"

என்றும் தாயுமான சுவாமிகள் குருவருளை வியந்து கூறினார்கள். இதற்கப்பால் பெறும் அநுபவத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

"காட்டாதன வெல்லாம் காட்டிச் சிவம்காட்டித்
தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன் காட்டி
ஆட்டான் கொண்டாண்டவா பாடுதும் காணம் மானாய்"

என்று அருளிச்செய்துள்ளார்கள். சற்குரு உணர்த்த ஆன்மா பெறும் உபகாரத்தைச சிவஞானபோதம்,

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்திவிட்டு
அந்நிய மின்மையின் அரன்கழல் செலுமே"

என்று கூறியது. பஞ்சேந்திரிய வாழ்க்கையில் மயங்காது ஆன்மா சிவத்தோடு அத்வைதமுற்றுச் சிவபோகம் துய்க்கும் என்பது சைவ சித்தாந்த முடிபாகும்.

ஆன்மாக்களின் பொருட்டுச் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவனம், அநுக்கிரகம் என்ற பஞ்ச கிருத்தியங்களை இறைவன் என்றும் நடத்துகின்றான் என்பது சைவ சித்தாந்த கொள்கை. இதைச் சைவ சித்தாந்தம் இறைவனது நடன இயக்கமாகக் காட்டுகின்றது. சைவதரிசனம் அண்டபகிரண்டங்களை எல்லாம் அளாவி அணுத்தோறும் நடக்கும் இறைவனது இயக்கத்தைக் காண்கின்றது. சிவத்தோடு பிரியாது ஆன்மாக்களையும் உலகத்தையும் இயக்கும் சக்தி சிற்சக்தியாகிய திருவருட் சக்தியென்றும், உலகம் தோன்றும் மாயா சக்தி இதினின்றும் வேறாக இறைவனது பரிக்ரக சக்தியாயுள்ளது என்றும் சைவ சித்தாந்தம் கொள்கிறது. மாயை சுத்த மாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என்று மூவகைப்படும். ஆன்ம தத்துவமாகிய பிரகிருதி மாயையைப்பற்றி சாங்கியம் முதலான ஏனைய தரிசனங்களும் கூறும். ஆனால் இதற்கு அப்பாலுள்ள சிவதத்துவமாகிய சுத்த மாயையைப்பற்றியும், வித்தியா தத்துவமாகிய அசுத்தமாயையப்பற்றியும் சைவ சித்தாந்தம் ஆராய்கின்றது. சப்தப் பிரபஞ்சமும் சுத்த அர்த்தப் பிரபஞ்சமும் சுத்த மாயையினின்று உண்டாவதைச் சைவ சித்தாந்தம் விளக்குகின்றது. நாதம், விந்து, சதாக்கியம், ஈஸ்வரம், சுத்தவித்தை என்ற சுத்தமாயா தத்துவங்களையும், கலை, நியதி, காலம், வித்தை, அராகம் என்ற அசுத்த மாயா தத்துவங்களையும் நுணுகி ஆராயும் சிறப்பு சைவசித்தாந்தத்துக்கு உரியது.

சைவ சித்தாந்தத்தைத் தமிழில் விளக்கும் நூல்களுள் முக்கியமானவை திருமூலர் அருளிய திருமந்திரமும், வாகீசமுனிவர் இயற்றிய ஞானாமிர்தமும், மெய்கண்டதேவர் முதலிய சந்தானசாரியர்கள் அருளிய மெய்கண்ட சாத்திரங்களுமாம். சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் என்ற மெய்கண்ட சாத்திரங்கள் பிரதானமானவை. பண்டைக் காலத்தினின்று தமிழகத்தில் சைவ சித்தாந்தக் கொள்கைகள் நிலவி வந்தன என்று கருதுவதற்கு ஆதாரமுண்டு. திருவள்ளுவர் அருளிய குறளில் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் காணப்படுகின்றன. இக்காலத்திலும் சைவ சித்தாந்தத்துக்கு உறைவிடமாக இருப்பது தமிழகமே. காஷ்மீர் சைவமும் வங்கநாட்டுச் சாக்தமும் சைவ சித்தாந்தம் கூறும் நாதம், விந்து முதலிய சூக்ஷ்ம தத்துவங்களை ஒப்புக்கொள்ளினும், சில முக்கிய கொள்கைகளில் சைவ சித்தாந்தக் கொள்கைகள் தமிழகத்தில்தான் நிலைபெற்றுள்ளன.

"சைவ சமயமே சமயம்
சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டு
மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி
புகுதவேண்டா முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேரவாரும் செகத்தீரே".

(பேராதனை இலங்கைப் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்க வெளியீடான இந்து தர்மத்தில் 1958—1959 இல் வெளிவந்தது.)

# The Philosophy of Yogar Swamigal

— RATNA NAVARATNAM —

"The sun shines not there, nor the moon and stars ;
These lightnings shine not, much less this (earthly) fire !
After Him, as He shines, doth everything shine.
This whole world is illumined with His light".

—Mundaka Upan. 2.2.10

Yoga-Swami, being all-knowing and all-wise, had penetrated the Light of lights—That which is the self-luminous light of the world, subtler than the subtle, the immortal, omnipresent, omnipotent and omniscient—the Supreme Reality which is the One warp of the world and of the individual.

It was his mission to lead all seekers after Truth to perceive the **Anma**, that shines forth in all things and deliver them from the unreal to the Real, from darkness to light and from the bondage of the perishable to immortality. List to his clarion call !

" Thou art not the body ; nor art thou the mind.
Neither art thou intelligence nor even consciousness.
Thou art **Atma. Atma** is eternal, imperishable.
Such is the realised experience of the seers.

Let this truth be enshrined for ever in thine heart.
However, there is one thing you should bear in mind.
Do not swerve from the path of **Dharma**. Reflect that all
Beings are in the hallowed presence of the Supreme One
He is within and without".

— Natchinthanai.

In this Gem, gleaned from the **Anmopanisad,** that is **Natchintanai,** the holy upadesh of Gurunathan, Siva Yoga Swamigal, we have a glimpse of the Guru as well as a revelation of his mission.

" Formless Himself, God is the home of all forms,
Sourceless Himself, He is the seed of all things.
Unattached Himself, He's the weaver of all attachments.
Yet only a Guru can open to us the door of Realisation."

In the words of **Tirumular's Tirumantram,** the Nat-Guru, that Yogaswami is, testified the vision of Truth —'Muluthum Unmai'—All that is, is Truth Absolute :

" He who transcends the seen came down on earth
As a Guru to abide in the hearts of the virtuous,
And illumined them by His gracious Love,
The peerless Siva is the matchless **Nat-Guru**.

— **Tirumantram 1576.**

Yoga Swami, endearingly called by his devotees as **Swami**, lived and moved in Sri Lanka as a manifestation of **'Dakshinamurti** — the Adi Siva — Guru who taught in silence, the Truth of the Absolute Reality to the Four Seers of old :

'' கல்லாலின் புடையமர்ந்து
நான்மறையா றங்கமுதற் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும்
வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமா யல்லதுமா
யிருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டி
சொல்லாமற் சொன்ன வரை
நினையாம நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்.''

Swami experienced the truth of the One Transcendent Being, as moving in the worlds outside as well as in the heart of every being. He saw the glory of the Immanent Siva-Sakti, irradiating every particle of being in this beauteous Isle of Lanka :

''இலங்கை வாழ்தெய்வ மெமையாளுந் தெய்வம்''

— Natchinthanai.

His odes on Lanka pulsate with the rhythm of unity with the One, all pervading spirit of God and the truth of His immanence in the world of multiplicity. It was Swami's refrain that every one should lead a life of dedicated activity — Sivathondu. When one has fully consecrated the energies of his heart and will to the Lord, there can be no enmity, no evil, no discord and no sorrow.

'' ஒரு பொல்லாப்பு மில்லையடா தம்பி
உண்மை முழுது மெடா''

Swami urges upon everyone to serve the Lord by serving one another, as all form part of the Supreme Reality of Truth :

'' ஒன்றெனக் கும்பிடுவாய் மனமே இந்த
உலகுயிர் பரமென ஒளிரும் மெய்ப்பொருளை.....''

Thus it is, that the **Natchintanai,** the Garland of Songs sung by Yoga Swami revels in the bliss of the one bird on the tree alluded in the Mundaka Upanishad and who looks on without eating, being a **Knower,** shaking off good and evil and freed from sorrow.

'' சுவாமி யோகநாதன் சொல்லியபாட்டு
சுந்தரமான வழிதனைக் காட்டும்
ஆவியுள்ளவும் அமுதத்தை யூட்டும்
அகம்பிரமாஸ்மி யென்முடி சூட்டும்'' — நற்சிந்தனை.

The great Mahavakiam of "Muluthum Unmai"— is again and again reiterated in Swami's Natchintanai songs :

"Truth alone conquers, not falsehood.
By truth is laid out the path to bliss
By which the seers, pure-hearted, chaste,
And clear in mind, desirous of **Siva-thondu**
Attain the highest repository of Truth".

**Swami** did not preach nor teach. He did not write any books. He sang his songs of glee spontaneously as he sped along the highways and by-ways of life, and for nearly ninety two years, the All-Gleaming Light of His Being shed illumination on all who came within His hallowed orbit :

"Seek to know Thy Self by thyself"

"தன்னைத்தன்னால் அறிந்திட வேண்டும்
தானுமெங்குஞ் செறிந்திட வேண்டும்."

He lived and basked in the light of the **Maha-Vakkiam**, the sublime utterances of His Great Guru, **Cheliappar** of Nallur :

| | |
|---|---|
| **Oru Pollapu millai** | "ஒரு பொல்லாப்பு மில்லை |
| **Muluthum Unmai** | முழுதும் உண்மை |
| **Naam Ariyom** | நாமறியோம் |
| **Eppavo mudintha karyam.** | எப்பவோ முடிந்த காரியம்" |

He taught his devotees that by contemplation, tapas, austerity, chastity and purity, the universal, self-luminous Siva can be beheld in the secret core of the heart :

"என்னை யறிவித் தெனக்கருள் செய்தவன்
என்னிலும் வேறல்லன் அன்னே யென்னும்."

**Natchintanai** songs reverberate the cadence of the Upanishads :

"Not by sight is it grasped, not even by speech,
Not by any other sense-organs, austerity or work
By the peace of knowledge (Jnana – prasada)
One's nature is purified—In that way, however,
By meditating, one does behold Him who is without parts."

— Mundaka Upan. 3.1.8

In the integral yoga that He lived and had his being, Swami recounts the Saiva Siddhanta doctrine of Grace. Lord Siva's Grace removes all obstacles in the pathway to liberation. The Guru establishes the reign of grace on earth. "He who knows the knowledge of the Knower, He indeed is the Teacher". Swami sings of the Sat Guru's Grace as effecting tranquil quietude. The **Atma** is realised as a continuum of **luminous** light, endowed with infinite power through the **Grace** of the Lord :

" திருவருள் கைகூடுது
சிந்தை களிகூருது.

ஒருவரும் எதிரில்லாத
உண்மை முதிருது........

அஞ்சுவ தொன்றுமில்லை
அஞ்சவரு வதுமில்லை." நற்சிந்தனை.

The vision of Truth fills the soul with ecstatic joy and Swami conveys in his poem **"Enkal Gurunathan"**, the beatitude of Power, when infinite varieties are seen as an expression of the **One**, and when the **One** reveals itself in every point of the infinite. "He made me acquainted with the deepest layers of my external and internal gross and subtle self, and I discovered Himself in myself."

" நீயு நானு மொன்றென்று சொல்லு சிவமே."

Swami pointed out that the goal to realise the beatific Grace of **Siva**, can only be attained by the path of self-realisation. He would urge the many devotees who sought the solace of His Feet, Tiruvadi, to seek the support of **Self** first and last. When the mind is stilled, our actions, thoughts and feelings too become purified and selfless. When self-love is thus subdued, we begin to see ourselves as we truly are—

" என்னை அறிந்தேன் இடரற்றுப் போச்சே."

Love blossoms into an abiding love of Siva. It becomes the ruling power of human life. Siuch intense worshipful love of Siva begins to pervade one's thoughts and actions, that it radiates as **Siva-thondu**. In the many acts done as service to Siva, one learns to find his real self :

" சிவதொண்டு செய்வார் சிவமே யாவர்."

In order to experience this awareness of **Sivamayam** :

" சிவனடிக் கன்புசெ யனைத்துஞ் சிவமே."

Swami bade the Siva-thondar to undertake a pilgrimage to the sacred sanctuary of Siva, called **'Thiruketheeswaram'** in the Mannar district, on the auspicious day of Masi-Maham on **March 9th, 1963.** The Sivathondar carried the sacred **'Paduka'** from Swami's ashram at Columbuturai, and in solemn procession in cars and vans trekked their way to Kerativu, and crossed the lagoon and came up to Sangupiddy. From there to Poonakari and the drought stricken Thunnukai—Velankulam areas, the party wended their way to Mantota—Mantai region, and here the vehicles were abandoned and the journey to the temple of Thiruketheeswaran with his consort Gowriambal began to the singing of Natchintanai songs. On the Full Moon day of Masi-Maham, the Sivathondar carrying the Holy Sandals of the Guru, bathed in the sacred Palavi tank and took "Theertha - Kavadi'. This was followed by Vedic chanting and Thirumurai Parayanam and Nyasa Abishekam at the temple, and thereafter Maheswara Puja was given to over five hundred devotees. There were religious discourses, Kathaprasangam, observance of mounam and evening Arati at the temple, and the whole atmosphere was charged with dynamic vibration of the Guru's gracious Feet. The resonance of Sankarachariya's **Nirvanasthaka** reverberated in our hearts, as we all gathered in the late hour of the same night at the Ashram of Gurunathan at Columbuturai, and experienced the truth of the utterance—**'Oru Pollappu millai—Muluthum Unmai** in the luminous Presence of Siva-Guru :

"I am not the mind or the intellect,
Nor I am the self nor the cognising power;
The sky is not I, not the land,
Neither am I the ear, the tongue, the nose, the eyes
Neither light nor wind am I;
For I am Bliss-consciousness,
Siva is in me, and I am Siva."

In these many ways of Jnana-Yajna and Yoga-sadhana, He made his followers clear all doubts and ed them to bask in the sunshine of Love , that "Intrinsic evil ,there is not", and finally led them to ex-lperience the Oneness of Truth:" From everlasting to everlasting, It is what it is. Whatever is, is nothing but Siva. The essence of love in the core of each being is Siva. **Siva** Is:"

"சிவனையென் சித்தத்துட் கண்டுகொண் டேனே."
"சிவ சிவ என்று சிந்திப்பர் சிவர்
சிவ சிவ என்னச் சிவகதி யாமே."

Such eventful pilgrimages of the Sivathondar to various temples dedicated to Siva, Sakti Ganesa-Pillayar and Subramanya brought them closer to the glory of Sivam-"Sarvam Sivamayam", and imperceptibility dawned on them the realisation, that the Sat-Guru too is also a gracious revelation of Siva :

"எல்லாஞ் சிவன் செயல் எல்லாஞ் சிவன்வடி
வெல்லா மவனன்றே அன்னே யென்னும்
எல்லா மவன்வடி வெங்கு மவனென்றுஞ்
சொல்லாப் பிங்கேதடி அன்னே யென்னும்" — நற்சிந்தனை

This gem of "Intrinsic Evil, there is not", strikes the chord of Yoga Swami's Upadesh. It is the sunrise of self-knowledge in us, the retreat of self love, with the realisation that several strands are knit together in the goal of self-less service, expounded as **Sivathondu** by our Sat-Guru, from whom through his inimitable grace are all things, and in whom is fulfilled the **Will of Siva** in us.

He taught the many seekers who thronged his ashram at Columbuturai to ponder night and day on the scintillating vibration of His great uutterance :

"செம்மையாய் வாழ்ந்து சீவன் சிவனென்ற முழு உண்மை யறிவாய் உகந்து.

I shall close this homage to Swami, with his moving adoration to the Lord of Lanka- Siva-Perumnan Let Thiruketheeswaram of hallowed antiquity as the abode of Siva, be an etenrnal testimony of Swami's vision of Lanka-our blessed land.

"Far beyond relation-ships and associations
Art Thou the Power Supreme- that art everything and yet nothing
Majestic splendour that dazzles aloft !
Father, who supports the vehicle of righteous strength!
Lord of invigorating Lanka, Thou art our refuge".

— Natchindanai.

# முன்னேசுவரம்

— செ. கு. —

இலங்கையின் வடமேல் மாகாணத்திற் சிலாபம் எனும் நகருக்குக் கீழ்த்திசையில் ஒரு கல் தொலைவிற் பக்தர்களுக்கு அருள்பாலித்து விளங்கும் புண்ணியப் பழம்பதி முன்னேசுவரமாகும். இத்திருத்தலத்தின் பெயர் முன்னேசுவரம், முன்னேஸ்வரம், முன்னீசுவரம், முன்னீச்சரம், முனீசுவரம் எனப் பலவாறு வழங்கப்படுகின்றது. முன்தோன்றிய ஈசுவரம் எனும் பெருமையால் முன்னேசுவரம், முன்னேஸ்வரம், முன்னீசுவரம் முன்னீச்சரம் எனவும் பெயரறியா முனிவர் வழிபட்டமையால் முனீசுவரம் எனவும் முனிவர்க்கெல்லாம் பெருமுனியாம் சிவபிரானின் ஈசுவரம் என்பதால் முனீசுவரம் எனவும் பெயர்பெற்றதாக இடப்பெயர் ஆய்வினர் கூறுவர். கோட்டையரசன் ஆறும் பராக்கிரமபாகுவின் (1412–1467) சாசனத்தில் ''மொண்ணீஸ்வரம்'' எனவும் கோகில சந்தேசம் எனும் சிங்கள நூலில் (செய்யுள் 263) 'முன்னேசரம' எனவும் இடம் பெறும் பெயர்கள் முன்னேசுவரம் என்பதின் திரிபுகளாகக் கருதத்தக்கவை. சிவபுராணத்திற் சனத்குமார சம்ஹிதையில் அலகேஸ்வரம் எனக் குறிக்கப்படும் தலம் முன்னேசுவரமே என்று முன்னேஸ்வர மான்மியம் கூறுகின்றது.

முன்னேசுவரத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை முன்னைநாதசுவாமி எனவும் இறைவியை வடிவாம்பிகை எனவும் அழைப்பர். இத்திருத்தலத்திற்குத் தீர்த்தம் மாயவனாறு (தெதுரு ஓயா); தலவிருட்சம் அரசமரம்.

இத்தலத்திற்குரிய ஐதிகக் கதை மரபுகளைக் கூறும் நூல்களுள் முன்னையது ஸ்ரீ தக்ஷிண கைலாச மகாத்மியம்; பின்னையது முன்னேஸ்வர மான்மியம். ஸ்ரீ தக்ஷிண கைலாச மகாத்மியம் ஈழத்தில் எழுதப்பெற்றதாகக் கருதக் கிடக்கின்றது. முன்னேஸ்வர மான்மியம் முன்னேசுவரம் மு. சோமாஸ்கந்தக் குருக்கள் (1886–1940) அவர்களால் இயற்றப்பெற்று 1927–ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது.

இராவணனைக் கொன்றமையாற் பீடிக்கப்பட்ட பிரமகத்தி தோஷம் முன்னேசுவரத்தில் நீங்கியமையால் இராமபிரான் இவ்விடத்திற் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டதாக மகாத்மியம் பதினைந்தாம் அத்தியாயம் கூறுகின்றது. பாரதம் கூறிய வியாசர் முன்னேசுவரர் ஆலயத்தில் வழிப்பட்டதாக மகாத்மியம் பதினாறும் அத்தியாயம் உரைக்கின்றது. சுயம்புலிங்கத்தின் தோற்றக் காலத்தினைக் கூற எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகளாக முற்கிளந்தனவற்றைக் கூறலாம்.

குளக்கோட்டு மன்னன் முன்னேசுவரத்தினைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிடேகம் செய்வித்ததாக முன்னேஸ்வர மான்மியம் கூறும். சோணாட்டிலிருந்து கோயிற்பணி புரிவதற்காகப் பல்வேறு வகுப்பினரைக் கொண்டுவந்து 64 கிராமங்களாகப் பிரிக்கப்பட்ட கோயிலுக்கு உரிய பூமியிலே அவர்களைக் குடியேற்றினான் என்றும் மான்மியம் கூறும். குளக்கோட்டு மன்னன் பற்றி யாழ்ப்பாண வைபவமாலை தரும் காலக் குறிப்பு (சகம் 358–கி. பி. 436) ஐயத்திற் குரியதாகக் கருதப்படுகின்றது. குளக்கோட்டனுக்குச் 'சோழகங்கன்' என்ற பெயரும் இருந்ததாகத் தக்ஷிணகைலாச புராணப் பாயிரச் செய்யுளொன்று குறிப்பிட்டுள்ளது. ஆயினும் ஒன்றிற்கு மேற்பட்ட வம்சத்திலே, பலர், சோழகங்கன் (சோடகங்கன்) என்றபெயரைப் பூண்டவர்களாகக் காணப்பெறுவதால் ஈண்டு சுட்டப்படும் சோழகங்கன் இன்னான் என்று துணிதல் அரிதாம்.

வரலாற்றுக் காலகட்டத்திலே கோட்டை அரச பரம்பரையினர் தம்மாட்சிக்குட்பட்ட பிரிவிலே நிலவிய இத்திருத்தலத்தைப் பேணி வந்துள்ளமை சாசனங்களாற் புலனாகும். ஆறும் பராக்கிரமபாகு (1412–1467) கி. பி. 1450/1453 ஆண்டில் இத்திருத்தலத்திற்குப் பல கிராமங்களை மானியமாக அளித்துள்ளான் என்பது கல்வெட்டு வாயிலாக அறியப்படுகின்றது. ஒன்பதாம் பராக்கிரமபாகு (1506–1517) 1517–இற் பல கிராமங்களைச் சர்வமானியமாக வழங்கிச் செப்பேட்டினால் உறுதிசெய்துள்ளான்.

போர்த்துக்கேயா ஆட்சியின்போது 'டயகோ டி மெலோ' ( Diogo de Mello ) என்பவ னின் தலைமையிலான படையினர் 1578–இல் முன்னேசுவரத்தினை அழித்துச் சூறையாடினர். மேலும் இத்திருத்தலத்திற்குரிய வளம்மிக்க கிராமங்கள் யாவும் யேசுசபையினருக்கு வழங்கப்பட்டன. 1606 இல் அர்ச்சியேட்டர் சின்னப்பருக்குத் தேவாலயம் அமைத்த யேசு சபையினர் இப்பிரதேசத்திலே தீவிரமான வகையில் மதப்பிரசார வேலையில் ஈடுபட்டனர்.

அந்நியராட்சியின் போது புகழ்குன்றி நின்ற முன்னேசுவரத்திற் பதினெட்டாம் நூற்றுண்டிலே கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க (1747–1782) இந்தியாவிலிருந்து சிற்பாசாரியர்களைத் தருவித்துத் திருப்பணி செய்து 1753 இல் மகாகும்பாபிடேகம் நடாத்தி மீண்டும் நன்னிலைக்குக் கொண்டுவந்தான். மேலும் கோயிலின் நித்திய நைமித்தியக் கிரியைகள் முட்டின்றிச் செவ்வனே நடைபெற விளை நிலங்களையும் மானியமாக அளித்து, 1753 இற் செப்பேடு வழங்கியுள்ளான். ஆயினும் இத்திருத்தலம் போதிய வருமானம் பெறுத காரணத்தினுலோ அல்லது வேறு காரணத்தினுலோ மீண்டும் புனருத்தாரணத்தை வேண்டி நின்றபோது காஞ்சிபுரம் நா. குமாரசுவாமிக் குருக்கள் திருப்பணி செய்து 1875 இல் மகாகும்பாபிடேகம் செய்துவைத்தார். அக்காலம் முதலாக முன்னேசு வரம் எவ்வித இடையூறுமின்றிச் சைவப்பெருமக்களின் புண்ணிய திருத்தலமாக விளங்கி வருகின்றது.

ஈழத்தில் அறுபத்துமூவர் எழுந்தருளி விக்கிரகங்களும் சிவசக்தி ஐக்கிய ரூபமாகவுள்ள மேரு யந்திர மும் முன்னேசுவரத்தில் மட்டுமே காணப்பெறுவன என்பர்.

நித்திய நைமித்தியக் கிரியைகள் முறையாக நடைபெறும் முன்னேசுவரத்தின் மகோற்சவம் 27 நாள் நடைபெற்று ஆவணிமாதப் பௌர்ணமியலன்று தீர்த்தோற்சவத்தை இறுதியாகக் கொண்டு அமையப் பெற்றது. சிவராத்திரி, நவராத்திரி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, ஆருத்திரா, பிரும்மோத்சவம், இலட்சார்ச்சனை என்பன முன்னேசுவரத்திற் சிறப்பாக நடைபெறும் விழாக்களாம். 1753, 1875, 1919, 1963 ஆகிய ஆண்டுகளிலே முன்னேசுவரத்திலே கும்பாபிடேகங்கள் நடைபெற்றதாக அறிகிறோம்.

வடிவாம்பிகா சமேத முன்னைநாத சுவாமி எழுந்தருளியுள்ள முன்னேசுவரம் திருத்தலத்தின் மீது அருளாளரும் புலவோரும் சூடிய பழைய பாமாலைகள் கிடைக்கப்பெறவில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து பெரியோர் அளித்த அருங்கலன்களே இன்று நமக்குக் கிடைக்கின்றன. கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளை, நவாலி க. சோமசுந்தரப்புலவர், சிவஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக்குருக்கள் ஆகியோர் பாடிய ஊஞ்சற் பிரபந்தங்கள் முனீஸ்வரர் ஊஞ்சல், முன்னநாதேஸ்வரர் திருவூஞ்சல், ஸ்ரீ முன்னநாதசுவாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல் என்றழைக்கப்படுவன. மேலும் சிலம்புநாதபிள்ளை முனீசுவரத்து வடிவழகி யம்மை மீது ஆசிரிய விருத்தமும் பதற்றந்தாதியும் கூடப் பாடியுள்ளார். காரைதீவு கா. சிவசிதம்பர ஐயர் முனீசுரர் நவமணிமாலையையும் பண்டிதர் மாணிக்கத் தியாகராசா ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்ன நாதஸ்வாமி நவதுதியையும் பாடியுள்ளனர்; கொக்குவில் குகதாசர் ச. சபாரத்தின முதலியார் முன்னைநாத சுவாமி ஆசிரிய விருத்தம், வடிவழகியம்மை ஆசிரிய விருத்தம் என்புவற்றையும் எஸ். எம். ராஜப்பா ஸ்ரீ முன்னேஸ்வரம் வடிவழகியம்மன் விருத்தத்தையும் பாடியுள்ளனர்; கொழும்பு அ. வயித்திலிங்கம் முனீசுரவந் தாதியையும், புழுதிவயல் எஸ். ஆர். தம்பு முனீஸ்வர வடிவழகி பதிகத்தினையும் யாத்துள்ளனர். கொழும்பு மு. சரவணமுத்துப்பிள்ளை முனியேசுரத் தீர்த்தயாத்திரை வழிநடைப்பதம் பாடியுள்ளார்.

# நகுலேசுவரம்

— "முத்து" —

வரலாற்று முக்கியத்துவமும், புராண பாரம்பரியங்களும் கொண்ட தலங்களுள் நகுலேசுவர திருத் தலம் மிக முக்கியமானதாகும். இன்று பரம்பரையாக வழங்கிவந்த ஐதிகங்களைத் தவிர மற்றைய புறச் சின்னங்கள் யாவும் ஆங்கிலேயருடைய ஆட்சிக்கு முன்பே அழிந்தொழிந்துவிட்டன.

விசயமன்னனுடைய வருகையோடுதான் சிங்களச்சரித்திரம் ஆரம்பிக்கின்றது. விஜயனுடைய வரு கைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்குப் பல ஆதாரங் கள் உள. குறைந்தது கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியே இங்கு தமிழர்கள் வாழ்ந்துவருகிறுர்

கள் ஆகவே ஏறக்குறைய 5000 ஆண்டுச் சரித்திரமாவது தமிழர்களுக்கு இங்கு உண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

கீரிமலையின் வரலாற்று மரபு விசயன் வருகையுடன் ஆரம்பிக்கின்றது. ''கீழத்திசைக்குத் தம்பலகாமத்துக் கோணேசர் கோயிலை நிறுத்தி, மேற்றிசைக்கு மாதோட்டத்திற் பழுது பட்டுக்கிடந்த திருக்கேதீச்சரச் சிவாலயத்தைப் புதுப்பித்து, தென்திசைக்கு மாத்துறையிற் சந்திரசேகரேச்சுரன் கோவிலை எழுப்பி, வடதிசைக்குக் கீரிமலைச் சாரலிலே திருத்தம்பலை என்னும் பதியிலே திருத்தம்பலேச்சுரன் திருத்தம்பலேசுவரி கோவில்களையும் கட்டுவித்து''....... என யாழ்ப்பாண வைபவமாலையில் வரும் செய்தி வரலாற்றுப் புராதனத்தை நினைவுறுத்துகின்றது.

நான்குதிசைகளிலும், நான்கு பெருங் கோயில்கள் இருந்தன என்றால், அக்காலத்தில் சைவ சமய வழிபாடு ஈழம் முழுவதுமே பரந்திருந்தது என்பது தெளிவாகின்றது. திருத்தம்பலேசுவரன் கோவிலையும் அதன் அண்மையிலுள்ள கதிரையாண்டவர் கோவிலையும் விசயமன்னனே கட்டுவித்தான். அவ்வாலயங்களுக்குப் பூசை நிகழ்த்துவதற்காக காசிப்பிராமணராகிய நீலகண்டாசாரியரின் மூன்றாவது குமாரன் வாமதேவாசாரியனையும் அவர் பத்தினியாகிய விசாலாட்சி அம்மையாரையும் நியமித்தான். கோவில் தோன்றியகாரணத்தினாலே இவ்விடம் கோவிற்கடவை என்னும் பெயரைப் பெற்றது. கீரிமலை, காங்கேசன்துறை, மாவிட்டபுரம் ஆகிய மூன்று இடங்களையும் உள்ளடக்கிய பகுதி கோவிற்கடவை என்று வழங்கப்படுவதை இன்றும் காணலாம். இந்த மூன்று இடங்களின் சரித்திரமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்திருப்பவையாம்.

ஜமதக்கினி முனிவர் தமது தந்தையாரின் சிராத்தத்திற்காக ஒரு முறை தமது குருவாகிய பிருகுமுனிவரை அழைத்திருந்தார். எதிர்பாராதவிதமாக வியாசமுனிவரும் அன்றையதினம் வந்திருந்தார். இதில் யாருக்குத் தலைமைத் தானம் கொடுப்பது என்பதில் ஜமதக்கினி முனிவர் மனம் குழம்பிப் போயிருந்தபடியினால், நேரமும் சென்று கொண்டேயிருந்தது; சிராத்த வைபவமும் தாமதம் அடைந்தது. இத்தாமதத்தைக் கீரியின் உருவில் வந்திருந்த பிருகுமுனிவர் அறிந்தார். சீற்றம் மேலிட்டவராய் சிரார்த்தத்திற்கு வைத்திருந்த பொருள்கள் எல்லாவற்றையும் எச்சிற்படுத்திவிட்டுச் சென்றார். இதனாற் கோபங்கொண்ட பிதிர்கள் ஜமதக்கினியைக் குலமற்றுப்போகும்படி சபித்தனர். மனக்கவலை மேலிட்ட ஜமதக்கினி பிருகுமுனிவரை அடைய, அவர் கோபங்கொண்டு ''கீரிமுகம் உடையவனாய் அலைவாயாக'' என்று சபித்தார். ஜமதக்கினி மிகப்பணிந்து பிருகுமுனிவரைச் சரண் அடைய, அவர் சாபவிமோசனம் அளித்தார்.

இலங்கையின் வடபாலுள்ள திருத்தம்பலேச்சுரத்தின் அருகே உள்ள கற்பாறையிலிருந்து பெருக்கெடுத்தோடிச் சங்கமமாகும் வாவியில் நீராடின் விமோசனம் அடையலாம்'' என அருளினார். அப்படியே செய்து ஜமதக்கினி முனிவர் சாபம் நீங்கினார். இத்திருத்தம்பலேச்சரமே பிற்காலத்தில் நகுலேசுவரத் திருத்தலம் என்று அழைக்கப்படுகின்றது. ஜமதக்கினி முனிவரின் கீரிமுகம் மாறியமையினாலேயே கீரிமலை என்னும் பெயரும் உண்டானதாம். நகுலகிரி, நகுலாசலம் என்னும் பெயர்களும் இதற்கு உள. விசயனுடைய சகோதரனின் மரபிற்பிறந்த உக்கிரசிங்கன் நகுலேசர் கோவிலைத் தரிசித்து நகுலமுனிவருடைய ஆசியும் பெற்றவனாவான்.

மாருதப்புரவீகவல்லி சோழநாட்டு இளவரசி. அவள் குன்மநோயும், குட்டரோகமும், குதிரை முகமும் உடையவளாக விளங்கினாள். தனது குருவின் உபதேசப்படி தீர்த்தயாத்திரை செய்து கொண்டிருந்தாள். சாந்தலிங்கமுனிவருடைய ஆலோசனையின்படி ஈழநாடு வந்து நகுலமுனிவரைச் சந்தித்து ஆசியும் பெற்றவள். அருவியில் நீராடி குதிரைமுகம் நீங்கப் பெற்றவள். அதன் ஞாபகார்த்தமாக மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயிலைக் கட்டுவித்துப் பரிபாலித்து வந்தவள். கந்தசுவாமிக்குக் காங்கேயன் என்ற பெயரும் உண்டு. காங்கேயனுடைய விக்கிரகம் இறக்குமதி செய்யப்பெற்ற துறைமுகம் ஆனபடியால் அது காங்கேயன்துறை ஆயதாகும்.

நகுலமுனிவர், கிரேதாயுகத்திலே முசுகுந்தச் சக்கரவர்த்தியுடன் வந்து நீராடியமையும் அத்தீர்த்தத்திற்குக் 'கண்டகி தீர்த்தம்' எனப் பெயர் இருந்தமையையும் இன்னோர் இடத்தில் குறிப்பிடுகின்றார். இத்தீர்த்தம் பார்வதிதேவி நீராடுவதற்காக, பரமேசுவரமூர்த்தி இம்மலைச்சாரலில் எழுந்தருளி இருந்தபோது அழைத்துவைத்ததெனவும் கூறப்படுகின்றது. கீரிமலைக்கு "கந்தருவ நகரம்", விஞ்ஞான புரம் என்னும் பெயர்களும் உள.

நளமகாராசன் சூரியகுலத்து அரசன்; சூதாடி நாடு நகரம் மனைவி யாவும் இழந்து வருந்தியவன். கலியின்கொடுமை அத்தகையது. தன்னைப் பீடித்த கலிநீங்கத் திருத்தல யாத்திரை செய்யத் தொடங்கியவன்; கோணேசர் தலத்திற்கு வந்தவன்; அங்குள்ளார் சொற்படி நகுலாசலத்திற்கு வந்து, நீராடிக் கலியிடர் நீங்கியவனுவான்.

போர்த்துக்கேயர் சிவாலயங்களை இடித்துச் செல்வங்களைக் கவர்ந்ததுடன், தமது கோட்டைகளைக் கட்ட அக்கற்களைப் பயன் படுத்தினுர்கள். பரராசசிங்கன் என்ற மன்னன் இறக்கும் வரையில் பறங்கிகள் அவன் பொருட்டாக கீரிமலையில் இருந்த திருத்தம்பலேசுவரன் கோயிலையும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலையும் இடிக்காது விட்டிருந்தார்கள். அவன் இறந்த வுடன் அவற்றையும் இடித்தொழித்தார்கள். அவர்கள் இடிக்குமுன்னர் அக்கோயிற் குருக்களாகிய பரசுபாணிஐயர் கீரிமலையில் இருந்த விக்கிரகங்களை அக்கோயிற் கிணற்றிலிட்டு, மண்ணுல்மறைத்துவிட்டு அவ்விடத்தினின்றும் நீங்கினர். இப்பிராமணுைத்தமரது சந்ததியார் இன்றும் உளர்.

சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் புராதன ஆலயங்களின் புனருத்தாரணம் பற்றித் தீவிர பிரசாரம் செய்து வரலானுர்கள். அப்பிரசாரத்தால் தூண்டப்பட்ட ஸ்ரீலஸ்ரீ கார்த்திகேயக் குருக்களும் புத்திரரிருவரும் ஆலயம் அமைக்கும் பணியினை ஆரம்பித்து வைத்தனர். கோயில் திருப்பணி நிறைவேறியபின் 1859 ஆம் ஆண்டு ஆனிமாதம் அட்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

"தேவர்தொழுங் கீரிமலைச் சிவன்கோயிற்
திருப்பணியைச் செய்விப்போரும்
ஆவலொடும் பலபொருள்க ளளித்ததன்சீர்
வளர்த்திடற்கே யகங்கொண் டோரும்
பூவனிதை பாவனிதை போற்றுநகு
லாம்பிகையைப் புணரு மெங்கோன்
சேவடியாம் பெருவாழ்விற் றிளைத்துமகிழ்ந்
திருவரிது திண்ணர் தாமே.'

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

# ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர்

## — மூல்லைமணி வே. சுப்பிரமணியம் —

ஈழத்திற் பழைமையும் பெருமையும் வாய்ந்த பல சிவாலங்கள் உள. இவற்றிற் பல இடிந்தும் சிதைந்தும் போய்விட்டன. தான்தோன்றி ஈஸ்வரன் ஆலயம் என்னும் பெயரில் இரு பிரசித்திபெற்ற ஆலயங்கள் உள்ளன. மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரன் ஆலயம். ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் ஆலயம் என்னும் இவ்விரண்டு கோவில்களும் சைவ நன்மக்களின் பெருமதிப்பைப் பெற்றவை. பாடல் பெற்ற தலங்களான திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம் என்பவை பறங்கியரால் இடித்துச் சிதைக்கப்பட்டன; அண்மையிலேயே புனருத்தாரணம் செய்யப்பெற்றன. ஆனுல் ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் கோவில் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை அழிநிலைக்குட்படாது திகழ்கின்றது.

### தோற்றம் :

இவ்வாலயம் தோன்றிய காலம்பற்றித் திட்டவட்டமாக அறியமுடியவில்லை. நமக்குக் கிடைத்த பல்வேறு கர்ணபரம்பரைக் கதைகளையும் வரலாற்றுக் குறிப்புகளையும் நுணுகி ஆராய்ந்த போது ஈழத்தில் சோழர் ஆட்சிபுரிந்த காலத்தில்—ஏறத்தாழ கி. பி. 12ஆம் 13ஆம் நூற்றுண்டில்—இவ்வாலயம் தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

மூன்று சித்தர்கள் :

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மூன்று சித்தர்கள் வன்னிப்பிரதேசத்துக்கு வந்தனர். இவர்கள் மூவரும் தற்போது ஒட்டுசுட்டான் என அழைக்கப்படும் இடத்தில் பிரிந்து சென்றனர். முதலாவது சித்தர் ஒட்டுச்சுட்டானுக்குத் தென்மேற்கே இரண்டு மைல் தொலைவிலுள்ள வாவெட்டிமலையில் நியானத்தில் இருந்து சமாதியடைந்தர். இரண்டாவது சித்தர் ஒட்டுசுட்டானுக்குத் தெற்கே இரண்டு மைல் தொலைவிலுள்ள காதலியார் சம்மளங்குளத்தில் சமாதியடைந்தார். மூன்றுவது சித்தர் ஒட்டுசுட்டானிலே ஒரு கொன்றை மரத்தின் கீழ் நிஷ்டையில் இருர்து சமாதியடைந்தர். இவர் பூசித்த சிவலிங்கமும் இவருடனே சமாதியடைந்திருக்கவேண்டும். இவ்விடத்திலேயே பிற்காலத்தில் சிவலிங்கம் தோன்றியது.

ஒடடுசுட்டான்—தான்தோன்றி ஈஸ்வரர்—வேகாவனம்

யாழ்ப்பாணம் இடைக்காட்டைச் சேர்ந்த வீரபத்திரர் என்னும் சைவவேளாளரும் அவருடைய இரண்டு பிள்ளைகளும் வன்னிக்குச் சென்று குடியேறினர். அவர்களும் அவர்களின் சந்ததியினரும் வாழ்ந்த இடம் தற்போது ஒட்டுசுட்டானில் இடைக்காடு என அழைக்கப்படுகின்றது. வீரபத்திரர் காடுவெட்டிக் குரக்கன் பயிரிட்டார். குரக்கனை வெட்டி எடுத்த பின்னர் குரக்கன் ஒட்டுகளை வெட்டிக் குவித்து நெருப்பு வைத்தார். அப்படிச் செய்தபோது ஒரு கொன்றை மரத்தடியில் ஒட்டுக்கள் எரியாமல் இருப்பதைக் கண்டார். எப்படியும் ஒட்டுக்களை நீக்கவேண்டும் என்னும் ஆவலால் மண்வெட்டியால் வெட்டினர். வெட்டிய இடத்தில் இரத்தம் கசிவதைக் கண்டார். இந்நிகழ்ச்சியின் மர்மத்தை அறியாத வீரபத்திரர் அப்பதியை ஆண்ட வன்னியனிடம் கூறினர். வன்னியன் குறிப்பிட்ட இடத்தைப் பார்வையிட்ட பின்னர் அவ்விடத்தில் கோயில் அமைத்து வழிபாடு செய்யுமாறு கூறினர். கொன்றையடிப் பிள்ளையார் என்னும் சிறு ஆலயம் அமைக்கப்பட்டது. சிலநாட்களின் பின் அவ்விடத்திலே சிவலிங்கம் சுயமாகத் தோன்றியதை மக்கள் கண்டனர். தானுகத் தோன்றிய லிங்கமாகையால் தான்தோன்றியீஸ்வரர் எனப் பெயரிடப்பட்டது; எரியாத இடத்திலே தோன்றியதால் வேகாவனேஸ்வரர் என்றும் வேகாவனப் பெருமான் என்றும் பெயர்கள் வழங்கின. ஒட்டுக்களைச் சுட்ட தனுலே பிரபல்யமான அந்த இடம் ஒட்டுசுட்டான் எனப் பெயர் பெற்றது.

ஆலயத் திருப்பணி வேலைகள்— குளக்கோட்டன் :

ஒட்டு சுட்டான் தான்தோன்றீஸ்வரன் கோவில், பொலநறுவைச் சிவன் கோவில், நல்லூர் சட்டநாதர் சிவன்கோவில் போன்ற யாவற்றையும் இடைக்காலச் சிவன் கோவில்களாகக் கொள்ளலாம். இடைக்காலச் சிவன் கோவில்கள் யாவும் சோழர் காலத்தில் கட்டப் பட்டவைவாக ஊகிக்க இடமுண்டு. இவ்வாலயத்தைக் குளக்கோட்டன் கட்டியதாகவும் ஒரு கதையுண்டு. இவன் ஈழத்திலே கோணேஸ்வரர் கோவில் திருப்பணியை மேற் கொண்டான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. ஒட்டுசுட்டானுக்கு அண்மையிலுள்ள முத்தரையன் கடடுக் குளத்தையும் குளக்கோட்டன் கட்டியதாகக் கர்ண பரம்பரைக் கதையுண்டு. ஆலயத்திருப்பணி வேலைகளிலும் குளங்கள் கட்டுவதிலும் ஈடுபட்டதாகக் கருதப்படும் குளக்கோட்டனுடன் தான்தோன்றியீஸ்வரன் கோவில் திருப்பணிவேலைகளையும் தொடர்புபடுத்தியதில் வியப்பொன்றுமில்லை.

குளக்கோட்டன் என்பவன் யார்? ஒரு வரலாற்று நபரா கற்பனைப் பாத்திரமா என்பது தெளிவாகவில்லை. கி. பி. 436 ஆம் ஆண்டிற்குச் சமமான சாலிவாகன சகாத்தம் 358 ஆம் வருஷத்திலே மனுநீதி கண்ட சோழன் மகன் குளக்கோட்டன் கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்துத் தம்பலகாமததில் அழிபட்டுக் கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் பழுது பார்ப்பித்தான். யாழ்ப்பாண வைபவமாலை தம்பலகாமத்துக் கோணேசர் சிவாலயத்தைப் பழுது பார்த்ததாகக் கூற, கோணேசர் கல்வெட்டு திருக்கோணமலை கோணேஸ்வரர் ஆலயத் திருப்பணி வேலைகளைக் குளக்கோட்டன் மேற்கொண்டதாகக் குறிப்பிடுகின்றது. இலங்கைக்கு வன்னியரை அழைத்துக் குடியேற்றியவனும் குளக்கோட்டனே என்பது வைபவமாலையில் கூறப்படும் கருத்து. தட்சிண கைலாய புராணத்தில் வரும் பாயிரச் செய்யுள் 'சீர்தாங்கு குளக்கோட்டனெனும் சோழகங்கனை நச்சிந்தைவைப்பாம்' எனக்குறிப்பிடுகின்றது. குளக்கோட்டனுக்கு சோழகங்கன் என்பதும் ஒரு பெயராகும். சோழகங்கன் அல்லது சோடகங்கன் என்னும் பெயருடன் ஒன்றுக்கு மேற்பட்ட அரசர்களை அடையாளம் காணமுடிகிறது. இரண்டாம் கஜபாகுவின் காலத்தில் ஒரு சோழகங்க குமாரன் வாழ்ந்ததாக சூளவம்சம் குறிப்பிடுகின்றது. இவன் காலம் 12 ஆம் நூற்றுண்டு. சோடகங்கன் என்னும் இன்னெரு மன்னன் பதின்மூன்றும் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஈழத்துக்குவந்திருக்கிறுன். இவ்விருவரில் ஒருவராக குளக்கோட்டனைக்

கொண்டால் வைபவ மாலை குறிப்பிடும் குளக்கோட்டன் காலத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. குளக்கோட்டன் கதையிலிருந்து நாம் அறிந்து கொள்ளக் கூடியதொரு உண்மை சோழர் காலத்திலே தான்தோன்றீஸ்வரர் கோவில் புனருத்தாரணவேலை நடைபெற்றது என்பதே. கோவில் திருப்பணி வேலைகளின் அடுத்த கட்டத்தைக் குறிக்கும் இன்னொரு கதையுமுண்டு.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தைப் பிடித்த பின்னர் வன்னிமீது தம்மேலாணையைச் செலுத்த முனைந்தனர். வன்னியர் திறை தருவதாக ஒப்புக் கொண்டு ஆண்டுதோறும் யானைகள் அனுப்பும் வழக்கம் இருந்தது. காட்டில் யானைகளைப் பிடிப்போர் யானைப் பணிக்கர் என அழைக்கப்பட்டனர். குறிப்பிட்ட தினத்திற்குள் யானைகள் பிடித்துத் தரவேண்டும் என வன்னியர் கட்டளையிட்டனர். எங்கு தேடியும் யானைகள் அகப்படவில்லை. யானைப்பணிக்கன், தான்தோன்றி ஈஸ்வரரிடம் முறையிட்டான்; யானைகள் கிடைக்கும் பட்சத்தில் கோவிலைப் பெருப்பித்துக் கட்டுவதாக நேர்த்திக்கடன் வைத்தான். இறைவன் பணிக்கனின் கனவில் தோன்றிப் பெரிய இத்திமடுவிலுள்ள கிளிமடு என்னும் இடத்தில் பௌர்ணமி தினத்திலே ஏராளமான யானைகளைக் காண்பாய் எனக் கூறினர். அதன்படியே தேவையான யானைகள் கிடைத்தன. பணிக்கன் கோவிலைப் பெருப்பித்துக் கட்டுவித்தான்.

பிரித்தானியர் காலத்தில் கோவில் திருப்பணி வேலைகளில் இன்னொரு கட்டம் இடம் பெற்றதற்குச் சான்றுண்டு. ஜே. பீ. லுவிஸ் எழுதிய வன்னிக் கைநூலில் 1874 ஆண்டு வரையில் ஒட்டுசுட்டானுக்கண்மையில் உள்ள தட்டாமலை என்னும் இடத்தில் இருந்த பௌத்த மடாலயத்தின் கற்கள் ஒட்டுசுட்டானிலுள்ள ஒரு சில கோவில்களைக் கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டது எனக் குறிக்கப்பட்டுள்ளது.

<u>கோவிற் காணிகள் :</u>

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்துக்கென கரைதுறைப்பற்று, மேற்பற்று ப குதிகளில் ஏராளமான நெல்வயல்களும் தென்னந்தோட்டங்களும் இருக்கின்றன. இவை வன்னி மன்னர்களாலும் பொதுமக்களாலும் ஆலயப் பரிபாலனத்திற்கெனத் தானம் செய்யப்பட்டவை. சோழர் காலத்தில் தஞ்சைப் பெரிய கோவிலும் ஏனைய கோவில்களும் கிராமங்களுக்குப் பல்வேறு விதத்தில் உதவியது போலவே ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் கோவிலும் பொதுமக்களுக்கு உதவியுள்ளமைக்குச் சான்றுண்டு. கோவில் நிதியிலிருந்து வட்டிக்குப் பணம் பெற்றதற்குச் சான்றாக ஓர் ஏட்டுப்பிரதியைக் கண்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இப்பொழுதும் ஆலயத்திற்குச் சொந்தமான நிலம் பொதுமக்களின் பொருளாதார விருத்திக்கு உதவுவதைக் காணலாம். நெற்காணிகளை குத்தகைக்குப் பெற்று விதைக்கும் வழக்கம் இன்று உண்டு. காணி பரிபாலனம் சம்பந்தமாக ஒரு வழக்கு நடைபெற்றிருக்கிறது.

குமழமுனை முன்னைநாள் விதானையாராகிய மாணிக்க ஐயர் அவ்வூரிலுள்ள, தான்தோன்றி ஈஸ்வரர் கோவில் காணியை ஒரு தலைமுறையாக ஆண்டுவந்தார். கோவிற் காணிகள் சரியான முறையில் பரிபாலிக்கப்படாமையால் கோவில் முகாமையாளர் மாணிக்க ஐயரிடம் குத்தகை அறவிடவில்லை. சிவசிதம்பர உடையார் கோவில் மணியகாரனாக வந்ததும் கோவிலுக்குரிய இக்காணிக்குக் குத்தகை தரும்படி மாணிக்க ஐயரை வேண்ட அவர் மறுத்துவிட்டார். கோவில் மணியகாரர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தார். வழக்கு வெள்ளைக்கார நீதிபதியால் விசாரிக்கப்பட்டது. முதல் நாள் விசாரணையின்போது மாணிக்க ஐயரின் கட்சியே வெல்வதற்குரிய சாத்தியக்கூறுகள் இருந்தன. இரண்டாவது தவணைக்குப் பதினைந்து தினங்களுக்கு முன்னர் மாணிக்க ஐயர் கனவு கண்டார். குதிரைக் குளம்படிச் சத்தம் கேட்கிறது; குதிரையில் ஒருவர் வருகிறார்; வெள்ளைவேட்டி; திருநீற்றுப்பூச்சு; கையிலே வெள்ளிப் பிரம்பு; வந்தவர் 'எனது பிள்ளையை கோட்டுக்குப் ஏன் போகச் செய்தாய்' என்று கேட்கிறார். இவர் திடுக்கிட்டுக் கண் விழிக்கிறார். தான்தோன்றி ஈஸ்வரரே கனவில் வந்து கூறியதாகக் கருதி கோவிற் காணி முழுவதும் திருப்பிக் கொடுக்கச் சம்மதித்தார்.

**ஆவுடையார்—கவசம் :**

சுயம்பு லிங்கமாகத் திகழ்கின்ற மூலஸ்தான லிங்கத்திற்கு ஆவுடையார் பகுதி இல்லை. கோவில் தர்மகர்த்தாக்கள் இந்திய சிற்பியை அழைத்து ஆவுடையார் கல்லொன்றைப் பொழிவித்து இட்டனர். ஆனால், இறைவன் சித்தம் அதற்கு மாறாகவே யிருந்தது. தனக்கு ஆவுடையார் தேவையில்லை; தோன்றிய வடிவிலேயே விடுக என இறைவன் கூறிவிட்டார். லிங்கத்தை மூடுவதற்கு ஒரு பொற்கவசம் செய்யப்பட்டது. ஆனால் அதையும் தான்தோன்றி ஈஸ்வரர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் இப்பொழுதும் அது பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டிருக்கின்றது.

**பூசையும் திருவிழாவும் :**

தான்தோன்றி ஈஸ்வரர்க்குத் தினமும் மூன்றுகாலப் பூசை தவறாமல் நடைபெற்று வருகின்றது. விசேட தினங்களில் அவ்வத் திதிக்கு ஏற்றவிதத்தில் பூசைகள் நடைபெறும். ஆனிமாத அமாவாசையில் கொடியேற்றம்; பௌர்ணமியில் தீர்த்த வைபவம்; பதின்மூன்றாம் நாள் வேட்டைத் திருவிழா இடம் பெறும். தீராத நோயால் பீடிக்கப்பட்டோர் தாம் வேட்டைத் திருவிழாவின்போது வேடனாக வருவதாக நேர்த்திக் கடன் வைப்பர். வேட்டைத்திருவிழாவின் போது ஐந்நூற்றுக்கு மேற்பட்டோர் உடம்பெங்கும் கரிபூசி வாகந் தளிர்களாலான உடையணிந்து வாகங்குழையால் அல்லது தென்னோலையால் ஆக்கப்பட்ட தொப்பி யணிந்து காணப்படுவர். ஒவ்வொருவரும் நுனியில் குழைகட்டப்பட்ட தடியொன்று வைத்திருப்பர். வேடுவர் தலைவன் சுரைக் குடுவினுள் தேன் வைத்திருப்பார். இத்தலைமைப்பதவி பரம்பரையானது. சிலாவத்தை என்னும் ஊரைச் சேர்ந்த ஒருவரே இப்பதவியை வகிக்கிறார். தலைவேடனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஏனையோர் ஒழுக வேண்டும். வேட்டைத் திருவிழாவிலன்று சுவாமி வேட்டையாடும் இடத்தில் குழுமி நிற்கும் வேடுவர் கூட்டம் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழும். சுவாமி வேட்டையால் வந்ததும் சுவாமிக்கும் அம்மனுக்குமிடையில் வாக்குவாதம் இடம்பெறும். இறைவனுக்கும் உமைக்கு மிடையேயுள்ள பிணக்கினைக் கோவில் மணியகாரரே தீர்த்துவைப்பார். சுவாமி ஆலயத்தினுள் பிரவேசித்ததும் வேடுவர் ஒருவர் பின் ஒருவராக அணிவகுத்து நிற்பர். தலைமை வேடனின் சமிக்கையைப் பின்பற்றி எல்லா வேடர்களும் விழுந்து வணக்கம் செலுத்துவர். பின்னர் கோவிலை வலம் வந்து ஒட்டுசுட்டான் குளத்திற்குச் சென்று தம் வேடுவ உடைகளை நீக்கியபின்னர் நீராடுவர். வேடுவராக வருவோர் விரதமிருந்தே இந்நேர்த்திக் கடனைச் செய்வர். பதினைந்தாம் நாள் தேர்த்திருவிழா; இதுவும் பதினாறாம் நாள் நடைபெறும் தீர்த்த வைபவமும் பெருந் திரளான மக்களைக் கவரும் திருவிழாக்களாகும்.

**இலக்கியம் :**

தான்தோன்றி ஈஸ்வரர் மீது கொக்குவில் குகதாசர் ச. சபாரத்தின முதலியார் பாடிய ஒட்டுசுட்டான் சிவபெருமான் ஆசிரிய விருத்தமும் (1883) ஓர் ஊஞ்சற் பதிகமும் வேட்டைத் திருவிழாவின் போது படிக்கப்படும் வசனகவிதையும் உள. ஊஞ்சற் பதிகத்தைச் சுதுமலைப் பண்டிதர் ஆ. சி. நாகலிங்கம் பாடியுள்ளார். இவ்வூஞ்சற்பதிகத்தைத் தவிர பெயர் தெரியாத வேறொருவர் பாடிய ஊஞ்சற்பதிகத்தின் மூன்று பாடல்கள் கிடைத்துள்ளன. இவற்றில் இப்பதி உறையும் ஈசன் தான்தோன்றியீசர், வேகாவன முடையார், சுயம்பு லிங்கமூர்த்தி எனவும் தேவி பூலோகநாயகி எனவும் அழைக்கப்படுகின்றனர். ஊஞ்சற் பதிகத்தின் காப்புச் செய்யுளில் ஒட்டுசுட்டான், 'தேவர்பதி' என அழைக்கப்படுகின்றது.

தான்தோன்றி ஈஸ்வரர் வேட்டைக்குச் சென்று திரும்பிய போது பூலோக நாயகியார் ஊடல் கொண்டு கதவை அடைக்க இருவருக்குமிடையே நடைபெறும் தர்க்கம்போல அமைந்துள்ள ஒரு வசன கவிதை வேட்டைத்திருவிழாவின்போது படிக்கப்படும். பாடல் அமைந்திருக்கும் விதம், ஈஸ்வரன் நேரடியாக உமையுடன் பேசாமல் வேறொருவருக்குச் சொல்லுவது போல அமைந்துள்ளது. அதுபோலவே உமையின் பதிலும் வேறொருவரை நோக்கிக் கூறுவது போலத் திகழ்கின்றது. கோவில் மணியகாரரே உமைக்கும் ஈஸ்வரனுக்கும் இடையே சமாதானம் பேசி உமையின் ஊடலைத் தீர்த்து வைப்பதாகக் கூறுவர். மணியகாரரே வேட்டைத் திருவிழாவின் போது இப்பாடலைப் படிப்பது வழக்கம்.

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர் கோயில்

— க. மகேஸ்வரலிங்கம் —

இழக்கிலங்கையிலே சைவமும், தமிழும், நீண்ட காலமாக நிலைத்து வாழ்ந்து வருகின்றன. இதனால் காலத்தால் தொன்மை வாய்ந்த கோயில்கள் பல இப் பகுதியில் காணப்படுகின்றன. இக் கோயில்களில் ஒரு பகுதியின 'திருப்படைக் கோயில்கள்' அல்லது 'தேசத்துக் கோயில்கள்' என்று வழங்கப்பட்டும் வருகின்றன. ''திருப்படை'' என்பது பல்வேறு சாதி மக்களினதும் ஒன்றியம் என்று பொருள் கொள்ளத்தக்கதாக உள்ளது. தேசம் என்பது மட்டக்களப்பு என்னும் தேசமாகும். இது இன்றைய மட்டக்களப்பு மாவட்டத்தையும் அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கிய பிரதேசமாகும். எனவே திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் என்று அழைக்கப்பட்டு வருபவை மட்டக்களப்பு தேசம் முழுவதிலுமுள்ள பல்வேறு சாதி மக்களுக்கும் உரிமையுள்ள கோயில்கள் எனப் பொருள் படும். இத்தோடு குளக்கோட்டு வேந்தனது திவ்விய திருப்பணியைப் பெற்ற பெருமையும் இக் கோயில்களுக்கு உரியதாகும். பண்டைக் கால அரசர்களது மதிப்பும் மானியங்களும் சீர் வரிசைகளும் பெற்றவையாகவும் இக் கோயில்கள் உள்ளன. இத் திருப்படைக் கோயில்களுள் கொக்கட்டிச் சோலை தான்தோன்றி ஈஸ்வரர் கோயிலும் ஒன்றாகும். மட்டக்களப்புத் தமிழகத்திலுள்ள ஒரேயொரு சிவன் கோயில் என்ற தனிப்பெருமை இக் கோயிலுக்குண்டு. இக்கோயிலில் இறைவன் சுயம்புலிங்கமாய் தானே தோன்றி வீற்றிருந்து அருள் சுரந்து வருகிறார்.

மட்டுநகரிலிருந்து தெற்கே மண்முனையினூடாக ஒன்பது கல் தொலைவில் கொக்கட்டிச் சோலை என்னும் கிராமம் அமைந்துள்ளது. பண்டைக்காலத்தில் கொக்கட்டி அல்லது கொக்கு நெட்டி என்னும் மரங்கள் நிறைந்திருந்தமையால் இக்கிராமத்திற்கு இப் பெயர் ஏற்படலாயிற்று. இயற்கை எழில் மிக்க இக் கிராமத்தில் நிழல் மரங்கள் நிறைந்த திரு வீதியின் மத்தியில் தான்தோன்றீஸ்வரர் கோயில் கொண்டுள்ள இத்திருக் கோயில் அமைந்துள்ளது.

## கோயிலின் அமைப்பு :

இக் கோயிலுக்கு இரண்டு சுற்று மதில்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்புற மதிலோடு தொடர்பு படுத்தி நான்கு சிறு மடங்கள் நாற் புறங்களிலும் உள்ளன. உள்புறத்தில் சிவன் கோயிலின் பக்கங்களில் பார்வதியம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை, விஷ்ணு, நவக்கிரகங்கள், நாகதம்பிரான், வைரவர் என்னும் தெய்வங்களுக்குரிய கோயில்கள் காணப்படுகின்றன. இச்சிறிய கோயில்கள் காலத்துக்குக் காலம் தனிப்பட்டவர்களாற் கட்டி அர்ப்பணிக்கப்பட்டவையாகும். சிவன் கோயில் சிகரத்தையுடைய கர்ப்பக்கிருகத்தையும், நான்கு மண்டபங்களையும் கோபுரம் இல்லாத முகப்பு என்னும் முன்பகுதியையுங் கொண்டுள்ளது. இக் கோயிலின் தம்ப மண்டபம் மிக அண்மையிலேயே கட்டப்பட்டது. அறுபதடி உயரமுடைய கொடித்தம்பத்தை இங்கு காணலாம். இக் கொடித்தம்பத்திலும் சர்ப்பக்கிருகச் சிகரம் பதிவாகவே அமைந்துள்ளது. இக் கோயிலின் தம்ப மண்டபம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் காலத்தால் முற்பட்டவை. இங்குள்ள மூன்றாவது மண்டபத்தில் பார்வதி அம்மன் கோயிலுக்கு முன்புறமாக இடபத்தின் கற்சிலை ஒன்றுள்ளது. இக்கோயிலைத் தகர்க்க வந்த போர்த்துக்கீசரை உயிர் பெற்று எழுந்து நின்று விரட்டிய எருது இதுவேயாகும். கர்ப்பக்கிருகம் சுயம்பு லிங்கத்தை வைத்தே அமைக்கப்பட்டது என்று கூறுவர். ஆனால் இந்த லிங்கம் வெளியில் தெரிவதில்லை. மூலஸ்தான பீடத்தில் ''உமா மகேஸ்வரர்'' விக்கிரகமே தாபிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

## கோயிலின் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டமை :

இக்கோயிலின் வழிபாட்டு ஆரம்பம் பற்றிச் செவிவழி மரபுக் கதையொன்று நிலவி வருகிறது. இக்கதை வேடர்களே முதன் முதலில் இங்கு வழிபாட்டை ஆரம்பித்தனர் என்று கூறுகின்றது. தேன் தேடிச் சென்ற வேடர் இங்கிருந்த கொக்கட்டி மரம் ஒன்றில் தேனிருக்கக் கண்டு அம் மரத்தை வெட்டினர். அவ்

வெட்டு வாயிலிருந்து இரத்தம் வெளிவந்தது. இவ்வதியத்தைக் கண்டு அக்கம் பக்கங்களை அவதானித்த போது அம் மரத்தடியில் ஒரு லிங்கம் இருக்கக் கண்டனர். அன்று முதல் கொத்துப் பந்தலிட்டு வேடர் வழிபாட்டு முறையில் இங்கு வழிபாடு ஆரம்பமாயிற்று என்று கூறப்படுகின்றது. கதிர்காம யாத்திரைக்கு வந்த கொக்கட்டியர் என்னும் இந்திய நாட்டைச் சேர்ந்த நபோதனர் இங்கு சமாதி இருத்தப்பட்டதாயும், அச்சமாதியிலிருந்து தோன்றிய லிங்கமே இங்குள்ள சுயம்பு லிங்கம் என்றும் இந்த லிங்கத்தை முதன் முதல் கண்ட வேடன் பெயர் நிடகன் என்றும் மட்டக்களப்பு மான்மியம் கூறும்.

இக்கதையைக் கொண்டு இக் கோயிலின் வழிபாடு எப்பொழுது ஆரம்பித்தது என்று கூற முடியாது. எனினும் இப்பகுதிகளில் வேடர் வாழ்ந்த காலத்தில் இவ் லிங்க வழிபாடு ஆரம்பமாயிற்று எனலாம். பௌத்தம் இலங்கைக்கு வருவதற்கு முன்பு லிங்க வழிபாடு இருந்தது என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இவ்வகையில் இக் கோயிலின் வழிபாட்டு ஆரம்பமும் மிக முற்பட்டதாக அமையினும் அமையலாம். இது எவ்வாறு இருந்தாலும் இங்கு நிலையான கோயில் கட்டப்படுவதற்கு நீண்டதொரு காலப் பகுதிக்கு முன்பே வழிபாடு ஆரம்பித்திருந்தது எனக் கொள்ளலாம்.

## கோயில் கட்டப்பட்டமை :

வேடரால் கொத்துப் பந்தலிட்டு நீண்ட காலமாக வழிபட்டு வந்த இடத்தில் நிலையான கோயில் கட்டியது யார் என்பது அறிய முடியாததாய் உள்ளது. இதுபற்றி மட்டக்களப்பு மான்மியத்தில் மூன்று வேறுபட்ட தகவல்கள் கூறப்பட்டுள்ளன. அவை:

1. மண்முனையைத் தலைநகராகக் கொண்டு சிற்றரசியாக இருந்த உலக நாச்சி என்னும் கலிங்க அரசியால் கட்டப்பட்டது.
2. இந்தியாவிலிருந்து கதிர்காம யாத்திரை வந்த செட்டி ஒருவரால் கட்டப்பட்டது.
3. பொலநறுவையில் அரசனாக இருந்த சேனன் என்பவனால் பாண்டிய நாட்டுக்கு அனுப்பப்பட்ட படையின் தளபதியும் மட்டக்களப்பின் நிதியதிபனுமாகிய தருமசிங்கன் என்பவனால் கட்டப்பட்டது.

இத்தகவல்களில் எந்த அளவு வரலாற்று உண்மை உள்ளது என்பது தெரியவில்லை. இவற்றுள் செட்டி திருப்பணியை இக்கோயில் பெற்றுள்ளது என்பதற்கு வேறு ஆதாரங்களும் கிடைத்துள்ளன. இதற்குப் பங்கு கூறும் கலவெட்டுச் சான்று கூறுகிறது.

இதில் கூறப்பட்டுள்ளபடி செட்டி குலத்தோர்க்குத் தேர்த்திருவிழாவுக்கு முதல் திருவிழா கொடுக்கப்பட்டிருந்தது என்பதனையும், இத்திருவிழாவை சுமார் கால் நூற்றுண்டுக்கு முன்வரையில் செட்டி குலத்தார் நடாத்தி வந்துள்ளனர் என்பதனையும் அறிய முடிகின்றது. இவற்றால் இத்திருவிழா இன்றும் ''செட்டி திருவிழா'' என்றே அழைக்கப்பட்டு வருகின்றது.

இவற்றுக்கெல்லாம் மேலாக குளக்கோட்டு மன்னனால் இக் கோயில் கட்டப்பட்டது என்பது இக் கோயிலுடன் தொடர்புடைய அனைவரதும் அசையாத நம்பிக்கையாகும். இக் கருத்து கோணேசர் கல்வெட்டு இப் பகுதிகளிற் பெற்ற செல்வாக்கால் ஏற்பட்டது என்று சிலர் கருதுவர். குளக்கோட்டனது திருப்பணியைப் பெற்று ஒழுங்குபடுத்தப்பட்ட கோயில்கள் பற்றி இங்கு நிலவும் ஒரு கல்வெட்டுப் பாடல் கூறும்.

''சீர் மேவு இலங்கைப்பதி வாழ்வுதரு
செல்வமும் சிவநேச இருசமயமும்
செப்புதற்கரிதான மாணிக்க கெங்கையும்
செக மேவு கதிர மலையும்
ஏர் பெறும் தென் கயிலை வாழ் கோணலிங்கம்
மேன்மை தான் தோன்றுலிங்கம்
வெற்றி புனை மயூர சித்திர சங்கார வேல்
வெள்ளை நாவற் பதிய தாம்
பேர் பெறும் தென் திருக் கோயில்
சிவாலயம் சிவபூசை தேவாரமும்

செய்முறைகள் என்றென்றும் நீடூழிகாலமும்
தேசம் தளம்பாமலும்
ஏர்பெருகு பரிதி குலராசன்
குளக் கோட்டர் எவ்வுலகமுய்வநாக
எழு கோபுரம் கோயில் தொழுவார் தினம்
தேட எங்கெங்கு மியற்றினரே''

இப்பாடலிற் குளக் கோட்டனது சேவையைப் பெற்ற ஏழு கோயில்களின் பெயர்கள் கூறப் பட்டுள்ளன. அவை கதிர்காமம் (மாணிக்க கெங்கை), கதிரமலை, கோணேஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில், போரதீவு சித்திரவேலாயுத சுவாமி கோயில், வெருகல் (வெள்ளை நாவற் பதி) திருக்கோயில் என்பனவாகும். திருப்படைக் கோவில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் என்னும் தொகுப்புகளுக்குள் இக் கோயில்களே கூறப்பட்டு வருகின்றன. இங்கு நிலவும் மரபு வழியான தகவல்களில் இருந்து குளக் கோட்டன் இக்கோயிலைப் புதிதாக அமைத்தான் அல்லது புதுப்பித்தான் என்று கூறப்படுகின்றது. இத்தோடு நிருவாகத்தைப் புதிய முறையில் அமைத்தும், தொண்டுளியங்களையும் அவற்றுக்கு உரியோரையும் வகுத்தும் பூசை விழாக்களைத் திட்டம் செய்தும் மானியங்களை வழங்கியும் இம் மன்னன் இக் கோயில்களுக்குத் திருப்பணி புரிந்தானென்று அறிய முடிகின்றது.

குளக்கோட்டன் என்பவன் யார் என்பது வரலாற்றில் தீர்வு காணப்படாத ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. குளக்கோட்டனது மறு பெயர் சோழகங்கன் என்று கூறப்படுகின்றது. இம்மன்னன் பத்தாம் நூற்றாண்டின் பின்னரே வாழ்ந்திருக்க முடியும் என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. திருமலைக் கோட்டையிலுள்ள வடமொழிக் கல்வெட்டிற் கூறப்படுகின்ற கி.பி. 1223 இல் ஈழத்துக்கு வந்த சோழகங்கனே கோணேசர் கல்வெட்டுக் கூறும் குளக் கோட்டன் என்று சி. பத்மநாதன் ஐயுறுவர். கா. இந்திரபாலா குளங் கட்டி வளம் பெருக்கிய மஹா சேன மன்னன் அல்லது கோணேஸ்வர ஆலயத்தைத் திருத்திக் கட்டிச் சிற்றரசனாக ஆட்சி புரிந்த கலிங்கத்துச் சோடகங்கன், குளக்கோட்டன் ஆதல் கூடும் எனக் கருதுவார். இக்கருத்துக்களில் மஹா சேனனே குளக் கோட்டன் என்ற கருத்தை மற்றும் பலர் கூறினாலும் அது பொருந்த முடையதாகத் தெரியவில்லை. தான்தோன்றி ஈஸ்வரர் கோயிலில் வழங்கி வரும் மரபு வழியான செய்திகளும் பாடல்களும் குளக்கோட்டன் பற்றிப் பொதுவான சில முடிபுகளுக்கு வர உதவுகின்றன. இவர் கலிங்கர் இலங்கையில் ஆதிக்கம் பெற்றிருந்தகாலத்தில் வாழ்ந்தவர்; ஓர் இந்தியர்; அதிலும் கலிங்கர் அல்லது கலிங்கத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவர்; சோழ நாட்டிலும் இவருக்குத் தொடர்பிருந்தது; வீரசைவத்தில் ஈடுபாடுடையவர்; கிழக்கிலங்கையில் போதுமான அரசியல் அதிகாரம் இவரிடம் இருந்திருக்கிறது. இவை இவ்வகையிற் குளக்கோட்டன் பற்றிக் கூறத்தக்க முடிபுகளாகும்.

கட்டிட அமைப்பை நோக்கில் இப்பகுதிகளில் கலிங்கர் செல்வாக்கு அதிகரித்திருந்த பதின்மூன்றும் நூற்றாண்டிலேயே திருக்கோயில், தான்தோன்றி ஈஸ்வரர் கோயில் என்பன கட்டப்பட்டுள்ளன எனலாம். திருக்கோயிலின் கட்டிட அமைப்பைக் கொண்டு அது திட்டமாக பதின்மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர். தான்தோன்றீஸ்வரர் கோயில் சுண்ணத்தாலும் சாந்தாலும் கட்டப்பட்டது. இதனால் கட்டிடத்தில் காலத்துக்குக் காலம் சில மாற்றங்கள் செய்யப்பட்டு வந்துள்ளன. எனினும் திருக்கோயிலினதும், தான்தோன்றீஸ்வரர் கோயிலினதும் கட்டிட அமைப்பும் சிற்ப வேலைப்பாடுகளும் கோயில் அமைப்பு விதிகளும் ஒரேபாணியில் இருப்பதைத் தெளிவாக உணரலாம். எனவே இக்கோயிலைக் யார் கட்டினர் என்பதற்குத் திட்டமான பதில் கூற முடியாவிட்டாலும் பதின்மூன்றும் நூற்றாண்டளவில் கட்டப்பட்டுள்ளது என்று திட்டமாகக் கூறலாம்.

## கோயிலின் பரிபாலனம் :

இக்கோயிலின் பரிபாலனம் பழமை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. மூன்று வண்ணக்குமாரைக் கொண்டதாக இப் பரிபாலனம் அமைந்துள்ளது. கோயிற் பரிபாலகர்களை 'வண்ணக்கர்' அல்லது 'வண்ணக்கு' என்று அழைப்பது மட்டக்களப்பின் பரவலான வழக்கமாக இருந்து வந்துள்ளது. 'வண்ணக்கர்' என்பது ஒரு தமிழ்ச்சொல்; இது கணக்கறிஞர் தலைவன் எனப் பொருள்படும். இவ்வாறு கோயிற் பரிபாலகர்களை வண்ணக்கர் என்று கூறும் வழக்கினை மட்டக்களப்புத் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் காணமுடியவில்லை. இம்முறை எவ்வாறு இங்கு தோன்றியது என்பது தெரியவில்லை. கண்டிராச்சியத்தில் பௌத்த ஆலயப் பரிபாலகர்களை 'வண்ணக்கு நிலமை' என்று கூறுகின்ற வழக்கம் இருந்தது என அறிய முடிகின்றது. இதனால் கண்டிராச்சியத்தின் கீழ் மட்டக்களப்புப் பிரதேசம் இருந்த காலத்தில் வண்ணக்கர் முறை மட்டக்களப்

பிலிருந்து கண்டிக்கோ, அல்லது கண்டியிலிருந்து மட்டக்களப்பிற்கோ பரவியிருத்தல் வேண்டும். இம்முறை இந்தியாவிலெங்காவது இருந்ததா என்பது ஆராயப்பட வேண்டியதொன்று.

தான்தோன்றீஸ்வரர் கோயிலில் மூன்று வண்ணக்குமாரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்புகளுக்குப் பாத்திரமானவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வண்ணக்குமார் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிற் பரந்து வாழுகின்ற 'முற்குகர்' என்னும் சாதியைச் சேர்ந்தவர்கள். இச் சாதியினருள்ளே காலிங்காகுடி, உலகிப் போடிகுடி, படையாண்டகுடி என்னும் மூன்று குடியினருக்குமே இக்கோயிலின் பரிபாலனம் சொந்தமாக இருந்து வருகின்றது. இம்மூன்று குடிப் பிரிவுகளிலும் இருந்து பதவி பெறும் இவ் வண்ணக்குமார் ஆயுள் முழுவதும் பதவியிலிருப்பர். இவ்வண்ணக்குமாருடைய பொறுப்புக்களைத் தனித் தனியே நோக்கும் போது காலிங்காகுடி தலைமைப் பதவிக்கும் உலகிப் போடிகுடி பொருளாதார அலுவல்களுக்கும் படையாண்டகுடி நிருவாக நடைமுறைகளுக்கும் பொறுப்புடையனவாகக் காணப்படுகின்றன.

மட்டக்களப்புத் தமிழக வரலாற்றில் முற்குகருடைய வரலாறு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இச் சாதியினருடைய எழுச்சியை இலங்கையிற் கலிங்கர் எழுச்சிபெற்றிருந்த காலம் **(1187 – 1236)** முதற் காணமுடிகின்றது. மட்டக்களப்புத் தேசத்திற் சிற்றரசர்களாகவும், நிதியதிபதிகளாகவும், நிலமைகளாகவும், நிலமைப் போடிகளாகவும், வன்னியர்களாகவும் இச்சாதியார் காலத்துக்குக் காலம் அதிகாரம் செலுத்தி வந்துள்ளனர். இவர்களை மட்டக்களப்பு மான்மியமும் இங்குள்ள பிற கல்வெட்டுப் பாடல்களும் 'முற்குகர்'' ''மூன்று குலத்தவர்'', 'குகன்மரபினர்'' என்றெல்லாம் கூறுகின்றன. இச்சாதியினர் பண்டைக்காலம் முதல் விவசாயத்தைச் செய்தொழிலாகக் கொண்டவர்கள்; இவர்களில் மலையாளத் தொடர்பு அதிக மிருந்தாலும் முற்றாக இவர்களை மலையாளத்தவர்கள் என்று கொள்ளுதல் பொருந்தாது. இவர்களை ஒரு கலப்புச் சாதியினர் எனக்கொள்ளலாம். இதற்கு இச்சாதியினரின் உட்பிரிவுகளும், பண்பாட்டம்சங்களும், மட்டக்களப்பு மான்மியம் முதலிய வரலாற்று ஆதாரங்களும் சான்று தருகின்றன. கலிங்கரும் கலிங்கருடன் படைவீரராய்க் கேரளத்திலிருந்து வந்தவர்களும் இங்கு வாழ்ந்த ஆதிகுடிகளிற் சில பகுதியினரும் மட்டக்களப்பு முற்குகரில் முக்கிய பங்கு பெறுகின்றனர் எனலாம். இச்சாதியினரே தான்தோன்றீஸ்வரர் கோயிலை உருப் பெற வைத்து மானியங்கள் வழங்கி பண்டைக்காலம் முதல் ஆதரித்து வந்துள்ளனர்.

## குருக்கள் பரம்பரை :

இக் கோயிலிற் பூசை செய்யும் குருக்கள் பரம்பரையினர் சைவத்தைச் சேர்ந்த 'சங்கமர்' ஆவர். 'சங்கமம்'' என்பது முழுமைபெற்ற அல்லது இலட்சியத்தை அடைந்துவிட்ட ஆன்மா எனப் பொருள்படும்; அதாவது சீவன் முத்தர் நிலையிலுள்ளவர்களே சங்கமர். இச் சங்கமக் குருமார் லிங்கத்தை அணிந்திருப்பர். பிராமணர்களுக்கும் சங்கமர்களுக்கும் இடையே சில ஒழுக்க நெறிகளில் முரண்பாட்டைக் காணலாம். சங்கமம் பற்றிக் கூறும் நூல் 'வீராகம்'' எனப்படும். இந்தியாவில் கர்நாடக பிரதேசத்திலும் சங்கமரைக் காணலாம் என்பர். இவர்களை 'நாகார்ச்சுன புரம்' என்னும் இடத்தில் இருந்து குளக்கோட்டன் கொண்டு வந்து தன் திருப்பணிகளைப் பெற்ற கோயில்களிற் பூசை செய்ய அமர்த்தியதாகக் கூறப்படுகின்றது. சங்கமர் இப்பிரதேசத்தில் குடியேற்றப்பட்ட இடம் ''தம்பட்டை'' என்னும் கிராமமாகும். இக்கிராமத்தில் இன்றும் இவர்கள் வழிவந்தோரைக் காணலாம். பண்டைய கிழக்கிலங்கைக் கோயில்களிலெல்லாம் சங்கமர்களே பூசகர்களாக அமர்த்தப்பட்டிருந்தனர் என அறிய முடிகின்றது. ஆனால் இன்று தான்தோன்றீஸ்வரர் கோயில் மட்டுமே இம்மரபினர் பூசை செய்யும் ஒரேயொரு பெரிய கோயிலாகும். தற்பொழுது தூய்மைவாய்ந்த இப்பரம்பரையும் அவர்களது உயரிய நெறிமுறைகளும் அருகி வருகின்றன.

## கோயிற்றொழும்புகள்:

இங்கு பதினெட்டுச் சிறைகள் செய்ய வேண்டிய தொண்டூழியம் பற்றி மட்டக்களப்பு மான்மியமும் பிற ஏட்டுப் பிரதிகள், சிலவும் கூறுகின்றன. இச்சிறைகளுக்குத் தலைமைபூண்டொழுகி ஏனைய சிறைகளின் சேவையைப் பெற்றுக்கொடுப்பதோடு பொறுப்பும் தூய்மையுமுள்ள தொண்டூழியங்களையும் வேளாளர்களே செய்ய வேண்டு மென்பது நியதி. இவ்வாறு வேளாளர்கள் இக்கோயிலில் செய்ய வேண்டிய சேவைகள் அகக் கடமை, புறக்கடமை என இரண்டாக வகுக்கப்பட்டுள்ளன. இச்சேவைகளை இன்னொரு வகையில் தினசரித் தொண்டூழியம், விழாக்காலத் தொண்டூழியம் எனவும் பிரிக்கலாம். இக் கோயில்களில் திருப்பணிகளைச் செய்வதற்காக வேளாளரை மருங்கூரிலும் பின் காரைக்காலிலும் இருந்து குளக்கோட்டன் அழைத்து வந்ததாயும் இவர்களுக்கு முறையே தானத்தார், வரிப்பத்தர் எனப் பெயர் வந்ததென்றும் கோணேசர் கல்வெட்டுக் கூறும். இக்கூற்றினைத் தான்தோன்றீஸ்வரர் கோயிலுடனும் இணைத்துக் கூறி வருகின்றனர்.

வேளாளரிலே பொன்னுச்சிகுடி, வைத்தி குடி, அத்தியாகுடி என்ற மூன்று குடிகளும் இக் கோயிலுடன் தொடர்புடையோராக உள்ளனர். இக் குடிப்பிரிவினர்கள் தாங்கள் குளக் கோட்டனால் ஆலயசேவைக்குக் கொண்டு வரப்பட்ட பரம்பரையினர் என்று கூறிக் கொள்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட வண்ணக்கர், குருக்கள், தொண்டுவேலியக்காரர் ஆகியோரின் உரிமைகள் எல்லாம் மட்டக்களப்பின் பாரம்பரிய முறைப்படி தாய் வழி உரிமையாக, மருமக்கள் வழியில் மாற்றப்பட்டு வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலிற் செய்யப்படும் தொண்டூளியங்களுக்கு நெல்வயல்கள் மானியமாகக் கொடுக்கப்பட்டு வந்தமையையும், நெல்படியாகக் கொடுக்கப்பட்டு வந்தமையையும் அறிந்து கொள்ளலாம். உதாரணமாக இன்றும் ஒரு திருவிழாசசேவைக்கு எழுபது மரக்கால் நெல் படியாகக் கொடுக்கப்படுவதைக் காணலாம். இந் நெல்லளவு சேவைக்குத் தக்கபடி ஐந்து மரக்கால் முதல் ஒரு ! கொத்து வரை பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

**பூசைகளும் விழாக்களும் :**

தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தினந்தோறும் மூன்று நேரத்துப் பூசை நடைபெற்று வருகிறது. தைப் பொங்கல், தைப்பூசம், மாசிமகம், சித்திரைப் பிறப்பு, சித்திரைச் சித்திரை, திருக்கார்த்திகை, மார்கழித் திருவாதிரை என்னும் நாள்களில் விசேட பூசைகளும், திருவிழாக்களும் இங்கு இடம் பெற்று வருகின்றன. சிவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகசஷ்டி என்னும் விரதங்கள் பெருந் தொகையினரால் இங்கு அனுஷ்டிக்கப் படும் விரதங்களாகும்.

**வருடாந்த உற்சவம் :**

ஒரு நீண்ட காலப் பகுதிக்கு முன்பு வருடாந்த உற்சவம் பங்குனி உத்தரத்தில் நடைபெற்று வந்தது என்று கூறுவர். இது காலப்போக்கில் கட்டாயம் மாற்றி அமைக்கப்பட வேண்டிய ஒன்றாயிற்று. பங்குனி மாதம் இச்சுற்றாடலில் உள்ள விவசாயிகளின் பெரும் போக அறுவடைக் காலமாகும். இத்தோடு பண்டைக் காலத்தின் தகுந்த போக்கு வரத்து வசதிகள் குறைவால் வெளியிடத்தவர்களும் இவ்வருடாந்த உற்சவத்துக்கு வருதல் குறைவாக இருந்தது. இச் சூழ் நிலையில் இங்குள்ள பிரமாண்டமான தேர்களை இழுப்பதற்கு ஆள் போதாது சில ஆண்டுகள் கஷ்டப்பட்டதாகவும் கூறுவர். இதனால் சுற்றாடலிலுள்ள மக்கள் ஓய்வாகவுள்ள காலப்பகுதிக்கு வருடாந்த உற்சவம் மாற்றப்படுவது அவசியமாயிற்று. தற்போதைய முறைப்படி ஆவணி மாதத்தில் வரும் முதற்பிறையில் கொடி யேற்றப்பட்டு அதை அடுத்து வரும் பூரணைக் கடுத்த திங்களில் தீர்த்தமும் அதற்கு முதல் நாள் ஞாயிறு பிற்பகல் தேர்த்திருவிழாவும் இடம் பெற்று வருகின்றன. இவ்வகையில் சில ஆண்டுகளில் புரட்டாதி மாதத்தில் தேர்த்திருவிழாவும் தீர்த்தமும் இடம்பெற வேண்டியும் ஏற்படுகின்றது. கொடியேற்றத்திலிருந்து தேர்த்திருவிழா வரையும் இரவு தோறும் பதினைந்துக்கு மேற்பட்ட திருவிழாக்கள் நடை பெறுகின்றன. இவற்றின் இறுதி ஏழு திருவிழாக்களும் முக்குகர் ஏழு குடியாராலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு முதல் நாள் திருவிழா இங்கு தொண்டூளியம் செய்வோரால் நடத்தப்பட்டு வருகின்றது. முற்பகுதித் திருவிழாக்கள் கோயிலின் பொதுக்கணக்கில் நடை பெறுகின்றன.

இக் கோயிலில் நடைபெறும் தேர்த்திருவிழாவை மட்டக்களப்பு மக்கள் 'தேரோட்டம்' என்று போற்றுவர். மட்டக்களப்பில் தேரோடுகின்ற கோயில் இது மட்டுமே உள்ளது. தேரோட்டத்தில் இரண்டு தேர்கள் திருவீதி வலம்வரும் தெய்வீகக் காட்சியைக் காணலாம். சித்திரைத் தேர் எனப்படும் பெரிய தேரில் சிவன் பார்பதிபாகராயும் பிள்ளையார் எனப்படும் சிறிய தேரில் விநாயகர் முருகப் பெருமானோடும் எழுந்தருளுவர்.

தீர்த்த தினத்தன்று அதிகாலையில் திருவேட்டை நடைபெறும். இது ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்குத் தடையாக இருக்கும் மலங்களை இறைவன் அழிக்கும் பாவனையில் அமைந்த ஒரு புனித நிகழ்ச்சியாகும். திருவேட்டையை அடுத்து கோயில் பரிபாலர்களையும், தொண்டூளியர்களையும், விழாவிற் கலந்து கொண்டோர்களையும் கௌரவிக்கும் சீர் வரிசையாக ''குடுக்கை கூறுதல்'' என்னும் நிகழ்ச்சி நடைபெறும். இந்நிகழ்ச்சி பற்றிய விபரங்களையும் வரலாற்றுச் செய்திகளையும் மட்டக்களப்பு மான்மியத்திலுள்ள ''பங்கு கூறும் கல்

வெட்டு" "திருப்படைக் களஞ்சியம்" என்னும் பகுதிகள் நன்கு கூறுகின்றன. இக்குடுக்கை கூறும் வைபவத்தில் இந்நாட்டின் பல் வேறு பிரதேச மக்களும் பிராமணர் முதல் பறையர் ஈறாக எல்லாச் சாதியினரும் குடுக்கைக் பெற்று கௌரவிக்கப் படுவர்.

இக் கோயிலில் தேர்த்திருவிழாப் போல தீர்த்தோற்சவம் அவ்வளவு முக்கியம் பெறுவதில்லை. இங்கு தீர்த்தக்குளம் ஒன்று இல்லாமையே இதற்கு முக்கிய காரணமாகும். இங்கு கிணற்றிலேயே தீர்த்தம் ஆடப்பட்டு வருகின்றது. முன்னேரால் இதற்காக ஆலய வீதியில் ஒரு கிணறு ஆக்கப்பட்டுள்ளது. இது தீர்த்தக்கிணறு என்று போற்றப்பட்டு வருகின்றது.

மானியங்களும் பிறவும் :

இக் கோயிலுக்கு குளக்கோட்டன், கலிங்கமாகன், விமலதர்மசூரியன், விக்கிரமசிங்கன் என்னும் மன்னர்கள் மானியங்களை வழங்கினர் என்ற செய்திகள் மரபு வழியாகக் கூறப்பட்டு வருகின்றன. இச் செய்திகளுக்கு வேறு ஆதாரங்கள் எதுவும் கிடைப்பதாக இல்லை. இத்தோடு இம்மானியங்களை அடையாளம் கண்டு கொள்ளவும் முடியவில்லை. இங்கு குருக்கள் பரம்பரையின் மான்மியமாக இருந்த தேவிலாமுலை பள்ளி சொண்டான் வெளியும், வேளாளருக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டிருந்த அத்தியாமுன்மாரியும் இக்கோயிலுக்கு அரசர்களால் கொடுக்கப்பட்ட மானியங்களே என்று கூறுவார்கள். இக்காணிகள் கூட இக்கோயிலின் வசம் இல்லை.. தற்பொழுது இக்கோயிலுக்கு உடைமையாக வுள்ள நூற்றிருபது ஏக்கருக்கு மேற்பட்ட காணித் துண்டுகள் காலத்துக்குக் காலம் இக்கோயிலில் ஈடுபாடுள்ள பேர்டிமாரால் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

பக்திப்பாடல்கள் :

தான்தோன்றீஸ்வரர் மேலே பாடப் பெற்ற பழமை வாய்ந்த பக்திப் பாடல்கள் ஏதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. நாட்டுக்கூத்துகளிலும் மற்றும் சில கிராம இலக்கியங்களிலும் இவ்வீசன்மேலே பாடப் பெற்ற காப்புச் செய்யுள்கள் பல கிடைத்துள்ளன. இப்பாடல்களை விட வெற்றிலைக்காரப் புலவர் என்று கூறப்படும் சின்னவப்புலவரும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் தான்தோன்றீஸ்வரர் மேல் இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார்.

# வண்ணை வைத்தீசுவரன கோயில்

— சி. சிவகுருநாதன் —

ஈழத்திருநாட்டின் வதனமென விளங்கும் யாழ்ப்பாண நன்நகரின் சிறுநுதலென விளங்குவது வண்ணார்பண்ணை. அந்நுதலில் நறுந்திலகமென மிளிர்வது அங்கேயிருக்கும் வைத்தீசுவரன் கோயில். அத்திலகத்தின் இனிய வாசனை அக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தையல்நாயகியோடுடனுறையும் வைத்தீசுவரப்பெருமானின் இனிய பெருங்கருணை. இப்பெருங்கருணையின் விளைவாகத் தமிழும் சைவமும் தழைத்தினிதோங்க நிலைக்களனாக விளங்குவன நாவலர் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சைவபரிபாலன சபை, சைவப்பிரகாச யந்திரசாலை, இந்து சாதன அலுவலகம், வைத்தீசுவர வித்தியாலயம், சாந்தையர்மடப் பிள்ளையார், பன்றிக்கோட்டுப்பிள்ளையார், நீராவிப் பிள்ளையார், பெரிய கடைப்பிள்ளையார் கோயில், கதிரேசன் கோயில், காளிகோயில், கடையிற் சுவாமி சமாதி கோயில், நடேசர் கோயில், சிவயோக சுவாமி சிவதொண்டன் நிலையம், "ஈழநாடு" செய்தித்தாள் நிறுவனம் முதலிய பலவாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தமது முதற்பிரசங்கத்தைச் செய்ததும், தமது முதல் வித்தியாசாலையைத் தாபித்ததும், கடையிற்சுவாமி பலகாலம் நடமாடிப் பத்தர்களைச் சந்தித்ததும், சிவயோக சுவாமியின் திருவடிதரிசனம் பெற்ற பல அடியார்கள் சேர்ந்து தியானம் செய்வதும் இவ்வண்ணை நகரிலேயாகும். இவற்றின் நடுவே தாரகை நடுவண் தண்மதி போல் விளங்குவதுதான் "செட்டியார் சிவன் கோயில்" என்றும் "பட்டணத்துச் சிவன்" என்றும் வழங்கப்

படும் வைத்தியநாயகி உடனுறையும் வைத்தீசுவர சுவாமியின் பெருங் கோயிலாகும். இது ஈழநாட்டிலே புள்ள பிற்காலச் சிவாலயங்களுள்ளே சிறந்த ஒன்றாகும்.

## கோயில் வரலாறு :

ஒல்லாந்தர் காலத்திலே தென்னிந்தியாவில் பாடல்பெற்ற தலங்களுள் சிறந்ததாக விளங்கும் திருவாரூரி லிருந்து கோபாலச்செட்டியார் என்ற வணிகர்குல திலகம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். கல்வி, அறிவு, ஒழுக்கங்களிலே சிறந்து விளங்கிய அவரை அக்காலத்தில் ஒல்லாந்த அரசிடத்தில் இருமொழிவல்லுநராகக் (மொழிபெயர்ப்பாளராக) கடமை செய்து வந்த கொச்சிக்கணேசையர் என்னும் சீமான் தம்மோடு வேலைக்கு அமர்த்திக்கொண்டார். சில காலஞ் செல்லக் கோபாலச் செட்டியார் அவ்வேலையினின்றும் நீங்கி வியாபாரஞ் செய்யத் தொடங்கினர். அக்காலத்தில் ஒல்லாந்தர் தேசாதிபதி வீட்டுக்குத் தேவைப்படும் அரிசி, பருப்பு, பலசரக்கு முதலிய பொருள்களை வழங்கும் உரிமையையும் பெற்றிருந்தார். செட்டியார் வணிகருள்ளே சிறந்த வராயிருந்தமையால் தேசாதிபதியின் துணைவியார் விரும்பியபடி நல்ல சரக்குகளை நிதான விலையில் கண்ணிய மாக வழங்கி வந்தாராதலின் அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

இங்ஙனம் கோபாலச் செட்டியார் செல்வம் செல்வாக்கோடு சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருங் காலத்தில், தென்னிந்தியாவிலிருந்து கூழங்கைத் தம்பிரான் என்றொரு பெரும் புலவர் வந்து அவரில்லத்திற் றங்கியிருந்தார். அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களும், சித்தாந்த சாத்திரங்களும், தேவாரமாதியாம் அருட்பாடல்களும் கற்றுத் துறைபோயவர். அவரைக் குல குருவாகக் கொண்டு இல்லறம் வழுவாது வாழுங் காலத்தில் செட்டியாருக்கு நலமெல்லாம் ஒருங்கே பொருந்திய ஓராண் மகவு நல்லோரையிற் பிறந்தது. குழந்தையைப் பார்த்துச் சாதகத்தைக் கணித்து மகிழ்ந்த தம்பிரான் சுவாமிகள் "இவன் பெரிய காரியங் களைச் செய்யப் பிறந்திருக்கிறான்; இவனுக்கு வைத்திலிங்கன் என்று பெயரிடுக" என்றார். அங்ஙனமே பெற் றோரும் மகிழ்ந்து பெயரிட்டனர்.

சிறுவனாகிய வைத்திலிங்கன் குமரப்பருவமடையத் தந்தையார் அவனைத் தம்முடைய கடையில் தமக்குத் துணையாக நியமித்தார். தந்தைக்கு வாய்த்த தனயனாகத் தம் குலத் தொழிலைச் செவ்வனே செய்து வரும் நாளிலே ஒரு நாள் தேசாதிபதியின் மனைவி செட்டியார் கடைக்குச் சென்றார். அப்போது வைத்தி லிங்கன் அவ்வம்மையாருக்குக் கையுறையாக ஒரு சிறந்த மாதுளம் பழத்தைக் கொடுத்து வரவேற்றான். ஆச்சரியமும் மகிழ்ச்சியுமடைந்த அம்மையார், சிறுவன் செட்டியாரின் அன்புக்கனி என்றறிந்ததும் அவனைத் தம்மோடு அழைத்துச்சென்றார். அவர்களுக்குக் குழந்தைச் செல்வமில்லாத படியால் கோபாலச் செட்டியாரின் இசைவினைப் பெற்றுப் பையனை அழைத்துச் சென்று தம் அரமனையிலேயே தம்பிள்ளைபோல் வளர்த்து வரலாயினர்.

இவ்வாறு நிகழும் வேளையில், வழக்கம்போல, மன்னார்க்கடலில் முத்துக்குளிக்கும் உரிமைக் குத்தகையை ஏலத்தில் விற்கும் காலம் வந்தது. பரபரப்பையூட்டும் இவ்விடயத்தைக் கவனித்த வைத்திலிங்கன் தான் அக்குத்தகையைப் பெறவேண்டுமென்று ஆசைப்பட்டுத் தன் வளர்ப்புத் தாயாகிய அம்மையாரிடம் மெதுவாகக் கூறினன். அன்னை நயைக்குறைவிடமாயமைந்த அம்மையாரும் செட்டிக் குட்டியின் மட்டற்ற ஆசையைக் கண்டு மகிழ்ந்து அதனைத் தேசாதிபதிக்கு எடுத்துரைத்தார். தந்தையன்பே உருவான தேசாதிபதியும் வளரும் பிள்ளையின் வளமான ஆற்றல்களை வளர்க்க விரும்பித் தாமே பிணையாக நின்று குத்தகைச் சீட்டை வைத்திலிங்கனுக்கு வழங்கினர். அவரும் பெரும் பொருள் சம்பாதித்தார்.

வைத்திலிங்கச் செட்டியாரான பெரிய தனவந்தருக்கு இளமை தொட்டே நல்லாசிரியனுயமைந்து அவரை நன்னெறிப்படுத்திய கூழங்கைத்தம்பிரான் செட்டியார் திரட்டிவைத்திருந்த பெருஞ்செல்வத்தைச் சிவப்பணியில் செலவிடக் கருதினர். அக்காலத்தில் தெய்வத் தமிழ் நாட்டிலுள்ளதுபோல ஈழத்தமிழ் நாட்டில் கோயிலில்லாத பெருங் குறையைச் செட்டியாருக்குச் சுட்டிக்காட்டி, எங்கும் நீக்கமற நிறைந் திருக்கும் சிவபெருமான் சாந்நித்தியமாய் எழுந்தருளித் தம்மை மெய்யன்போடு வணங்கும் அடியார்களுக்குத் திருவருள் பாலிக்க ஒரு கோயிலமைக்க வேண்டுமென்ற கருத்தினை ஊட்டினர். திருவருள் கூட்டிவைக்கச் செட்டியாரும் குருவருள் துணைகொண்டு அவ்வாறே செய்வதென உளங் கொண்டார்.

தேசாதிபதியின் உத்தியோக காலம் முடிவடையும் எல்லையும் அண்மிக்கொண்டிருந்தது. அவரும் மனைவியாரும் தந் தாய்நாடு திரும்பும் எண்ணங்கொண்டிருந்தபோது, இலங்கையிலே ஒல்லாந்தராட்சியும் ஊசலாடத்தொடங்கும் அறிகுறிகள் தோன்றின. அந்நிலையில் செட்டியார் தம்மை வளர்த்து ஆளாக்கிய

அன்புத் தாய்தந்தையரை யணுகி, தம்சமயத்தவர் சென்று கூடி வணங்குவதற்கு ஒரு சிவன் கோயில் எடுக்க இருக்கும் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். தனயனின் விருப்பம் எதுவாயினும் அது அவன் மனம்மகிழ நிறைவேறவேண்டுமென்ற ஆசைகொண்ட அன்பின் அன்னையும் பிதாவும், தம் இசைவையும் ஒரு நிலத்தையும் மகிழ்ச்சியோடு வழங்கினர்..

1787 ஆம் ஆண்டிலே பெற்ற நிலத்திலே செட்டியாரின் விருப்பப்படி கூழங்கைத்தம்பிரான் நல்லோரையில் அடிக்கல் நாட்டினர். செட்டியாரின் பிறப்பிடமாகிய திருவாரூருக்கண்மையிலே புள்ளிருக்கு வேளூர் என்னும் மூவர் பாடிய தலம் ஒன்றுளது. அது வைத்தீசுவரன் கோயில் என இக்காலத்தில் வழங்கப் படுகின்றது. தம்குல முன்னோர் அதன்பால் பெரிதும் பத்தி கொண்டிருந்தனர் என்பதனை யுணர்ந்த செட்டியார் தாம் ஈழத்தில் எடுக்கும் கோயில், புள்ளிருக்கு வேளூர்க் கோயிலைப் போல, அதனினும் சிறிய அளவிலே அமைக்க வேண்டுமென்று விரும்பினர். அங்ஙனம் நிர்மாணிக்கப்பட்டகோயில் (1790) சாதாரண ஆண்டு சித்திரைத் திங்கள் வளர் பிறைப் புனர்பூசத் திருநாளிலே திருப்பெரும் குடமுழுக்குப் பெற்றது.

<u>கோயிலமைப்பு :</u>

கூழங்கைத்தம்பிரான் முதலாய சான்றோர்கள் உடனிருந்து துணையாற்றக் கட்டப்பட்டதாதலின் இக்கோயில் ஆகமமுறைப்படி அமையும் பெருஞ்சிறப்பைக் கொண்டிருக்கின்றது.

எல்லாம் வல்லவரும் ஆன்மகோடிகளின் இன்னல்களையெல்லாம் தீர்த்துவைக்கும் மகா வைத்திய நாதனுமாகிய வைத்தீசுவரப்பெருமானுக்கு கிழக்கு நோக்கிய கருவறையும், சிவசத்தியும் உலகமாதாவுமாகிய தையல்நாயகித் தாய்க்குத் தெற்குநோக்கிய கருவறையும் அழகிய சிற்பங்கள் நிறைந்த விமானங்களோடு விளங்குகின்றன.

இறைவனின் கருவறையின் புறச்சுவர்களிலேயுள்ள கோட்டமாடங்களிலே தெற்கில் தென்முகக்கடவுளும் மேற்கில் இலிங்கோற்பவரும், வடக்கில் நான்முகக்கடவுளும் எழுந்தருளியுள்ளனர். கல்லாலின்புடை, வலக்கையில் சின்முத்திரையோடு சனகன் முதலாய நால்வர் புடைசூழ ஞானமூர்த்தியாய் எழுந்தருளுயிருக்கும் தென் முகக்கடவுளுக்கு நான்கு தூண்கள் கொண்ட சிறு மண்டபமுண்டு.

மேற்கிலுள்ள கோட்டமாடத்திலுள்ள இலிங்கோற்பவ மூர்த்தி சிற்ப நுட்பங்கள் பல செறிந்து விளங்குகின்றது. சிவராத்திரி தினத்திலே அதற்குச் சந்தனக்காப்பு சார்த்தியிருக்கும் போது, மேலே பறந்து செல்லும் அன்னப்புள்ளையும், கீழே குடைந்து செல்லும் பன்றியையும், இரண்டினிடையே இருவராலுங்காண முடியாது சோதிலிங்கமாக நிற்கும் சிவனையும் கண்குளிரக்கண்டு களிக்கலாம்.

இறைவன் இறைவியின் கருவறைகளோடு சேர்ந்துள்ள அர்த்த மண்டபங்களுக்கு முன் மகாமண்டபமும் அதனையடுத்துக் கிழக்கே நிருத்த மண்டபமும் கொடிமரமண்டபமும் உள்ளன.

கிழக்கு நோக்கிய சந்நிதியோடு அமைந்த இவ்வாலயம் மூன்று பிராகாரங்களைக் கொண்டிருக்கின்றது. இரண்டாம் பிராகாரத்தின் வடகிழக்குக் கோடியிலமைந்துள்ள வசந்த மண்டபம் திருவிழாக் காலங்களில் இறைவன் இறைவியர் திருக்குமாரர்களோடும் சண்டேசுவரரோடும் எழுந்தருளித் தம்மடியார்களுக்குக் காட்சி கொடுக்குமிடமாயமைந்துள்ளது.

புள்ளிருக்கு வேளூரிற்போலவே இங்கும் அம்பாள் சந்நிதியில் இரண்டாம் பிராகாரத்தின் வெளியே சித்தாமிர்த புட்கரணி என்னும் புண்ணிய தீர்த்தம் உண்டு. இக்கலியுகத்திலே சித்தர்கள் இறைவர் திருமுடியில் தேவாமிர்தத்தால் திருமுழுக்குச் செய்தபோது, அவ்வமிர்தம் இதிற் கலந்தமையால் இது இப்பெயர் பெற்றது. இதனையடுத்துப் பெரிய திருநந்தவனம் உளது. அது புட்பவிதியிற் கூறியபடி கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ ஆகிய நால்வகை நாண்மலர்களும் பச்சிலைகளும் பெறக்கூடியதாய் அமைந்துள்ளது.

கிழக்குச் சந்நிதியிலே மூன்றும் பிரகாரமாகிய தெருவீதியின் புறத்தே பதினாறு கால் மண்டபம் ஒன்று தமிழ் நாட்டுப் பாணியிலே கட்டப்பட்டுக் கோயிலுக்கும் நகரத்துக்கும் அழகு தந்து கொண்டிருக்கிறது. இம்

மண்டபத்திலேயே பூங்காவனத் திருவிழாவிலன்று பார்வதியம்மையார் பரமேசுவரனை நோக்கித் தவஞ் செய்ய எழுந்தருளுவர்.

இம்மண்டபத்திலிருந்து கிழக்கே சுமார் 150 யார் தூரத்திலே, இத்திருக்கோயிலை நிர்மாணஞ் செய்ய கல்லநாடாகிய காவிரிநாட்டிலிருந்து போந்த கலை வல்லுநராகிய விசுவகன்மாகுலத்தினர் திருக்கோயிலின் திருப்பணிகளைச் செய்யுங்காலத்தில் தாம், வழிபடுவதற்கெனத் தங்குலதெய்வமாகிய மகாகாளிக்கு அமைத்த திருக்கோயில் உள்ளது. இவ்விடம், கண்ணுதிட்டி என வழங்குகின்றது.

சிறப்பொடு பூசனை :

தினந்தோறும் திருவனந்தல் (5.00 மணி) கால சந்தி (6.00 மணி) உச்சிக்காலம் (12 மணி) சாயுங்காலம் (5.00 மணி) இரண்டாங் காலம் (6.00 மணி) அர்த்தசாமம் (7.00 மணி) எனக் கால பூசைகள் ஒழுங்காக பத்திசிரத்தையோடு நடைபெற்று வருகின்றன. வெள்ளிக்கிழமைகளில் இராஜராஜேஸ்வரி அம்பாள் இரண்டாங் காலப்பூசையின் பின் சிறப்புப் பூசனையேற்று அழகிய மஞ்சத்தில் இவர்ந்து உள்வீதி வலம் வரும்போது பத்தர்கள் சிவநாமம், தேவிஸ்தோத்திரமோதி வணங்குவார்கள். பிரதோஷ தினங்களில் மாலை இடபதேவருக்கு விசேட அபிடேகமாகி வெள்ளியிலான அங்கி சார்த்தப்பட்டு வழிபாடு நிகழும். பின் பிரதோஷ நாயகர் வெள்ளி இடப வாகனத்திலிவர்ந்து திருவீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பர். இக்கோயிலிலே ஒவ்வோராண்டும் நிகழும் பெருவிழாக்கள் பங்குனித் திங்களிலே உத்தரத்திரு நாளிலே நடைபெறும் தீர்த்த விழாவோடு முடிவடையும் மகோற்சவமாகிய சிவன் திருவிழாவும், ஆடி மாதத்திலே பூரநட்சத்திரத்திலே நிகழும் தீர்த்த விழாவோடு முடிவடையும் அம்மன் திருவிழாவுமாகிய இரண்டுமாம்.

சிவன் திருவிழாவில் ஒன்பதாம் திருநாளிலன்று தமது வலப்பாகத்திலே கருணைகடாட்சியாகி அம்பாளைக் கொண்ட கலியாணசுந்தரர் சமயகுரவர் நால்வர்க்குக் காட்சிகொடுக்கும் நிகழ்ச்சி பத்தர்களைப் பரவசப்படுத்தும் தகையது.

ஆடித்திங்களில் நிகழும் அம்மன் திருவிழாக்காலத்தைச் சிறப்பாக மங்கையர் தம்முடைய உபாசனு காலமாகக் கொண்டு அம்பிகையை நோக்கித் தங்குறைகள் நீங்கக் கடுமையான நோன்புகளை மேற்கொள்வர். இத்திருவிழாவின் ஏழாந்திருநாளிலே அம்பிகை நாகவாகனத்திலமர்ந்து சிவனுக்குப் பூசை பண்ணும் காட்சி மிக அருமையானதாகும். தீர்த்தோற்சவத்துக்கு அடுத்த நாள் நிகழும் திருவூஞ்சற் திருவிழா தவறாது பார்த்து மகிழவேண்டியதொன்றாகும். அப்போது பாடப்படும் தையல்நாயகி திருஊஞ்சல் பத்திச்சுவை மிக்கதாகும்.

இக்கோயிலிலே புரட்டாதி மாதத்தில் நிகழும் நவராத்திரியில் இராஜஇராஜேஸ்வரி அம்பாள் கொலு வீற்றிருந்து அருள்பாலிக்கும் செவ்வியைப் பார்த்துக்கொண்டு மணித்தியாலக் கணக்கில் இருக்கலாம்.

மார்கழி மாதத்திலே சாயுங்காலப் பூசையின் பின் மணிவாசகரை எழுந்தருளச் செய்து நடேசர் சந்நிதியில் திருவாதவூர்ப்புராணம் படித்துப் பயன் சொல்லுதலும், அதிகாலையிலே பத்தர் பலங் கூடத் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களை மெய்யன்போடு பஜனை செய்வதும், திருவாதிரைத் திருநாளன்று அபிடேக தரிசனத்தின்பின் சிவனுக்கும் உமையம்மைக்குமிடையே ஊடல் நிகழ்ந்ததாக அதனைத் தீர்த்து வைக்க ஆலால சுந்தரர் தூது செல்வதாக நிகழும்போது ''திருவூடல்'' பாடப்படுவதும் குறிப்பிடத் தக்க சிறப்பு நிகழ்ச்சிகளாம்.

சமயப்பணி :

ஈழநாட்டிலே தமிழையும் சைவத்தையும் பாதுகாத்து வளர்த்து வந்த பெருமை இவ்வைத்தீசுவரர் கோயிலுக்கு உரியதாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமது முதற் பிரசங்கத்தை இக்கோயிலின் வசந்த மண்டபத்திலேயே செய்தார். அதனைத் தொடர்ந்து பல பிரசாரக்கூட்டங்களையும் கண்டனச் சொற்பொழிவுகளையும் இங்கேயே நடத்திவைத்தார். நாவலர் பெருமானின் மருகரும் மாணாக்கரும் யாழ்ப்பாண சைவ பரிபாலன சபையின் முதற்றலைவருமாகிய வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள் தம்முடைய கம்பராமாயண, பெரியபுராண, கந்தபுராண விரிவுரைகளை நடத்திப்புகழடைந்ததும் இம்மண்டபத்திலேயே. இவ்விரிவுரைகளைக் கேட்பதற்குத் தமிழ் நாட்டிலிருந்தும் அறிஞர்கள் இங்கு வந்திருந்தார்கள். எஃப். திருஞானசம்பந்தரின் அடிச்சுவட்டில் நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஸ்ரீ சங்கரசுப்பிரமணிய சச்சிதானந்தராஜயோகிகள் இங்கே தம்மரிய கான மழையைச் சொரிந்து தமிழையும் சைவத்தையும் வளர்த்தார். இவர்கள் தம் வழியிலே இக்காலத்திலும் பலர் இப்பணியைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றனர்.

**திருப்பணி :**

இற்றைக்கு இருபது வருடங்கட்கு முன் இக்கோயிற் புனருத்தாரண கும்பாபிடேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இராஜ கோபுரத்தைப் பெரிதாகக் கருங்கற்களாலமைக்க வேண்டுமென்று விருப்பங் கொண்ட அறக்காவலர் அத்துறையில் முயற்சி எடுத்துவருகின்றார். இவ்வாலயத்துக்குப் புதிதாக ஐந்து தேர்கள் நிர்மாணிக்கத் திருவருள் பாலித்து அதற்காக ஒரு திருப்பணிச்சபையும் செயற் பட்டுவருகின்றது. அறுபத்து மூன்று சிவனடியார்களின் திருமேனிகளைக் கடவுண்மங்கலஞ் செய்யவேண்டிய திருப்பணியும் உளது. இவையெல்லாம் மிக விரைவிலே நிறைவெய்தத் தையலநாயகியுடனுறையும் வைத்திசுவரப் பெருமான் திருவருள் பாலிப்பாராகவெனப் பிரார்த்திப்போமாக.

**நிர்வாகம் :**

இத்திருக்கோயிலை ஆதியிற்றொடக்கம் வைத்திலிங்கச் செட்டியாரின் மரபில் தோன்றியவர்களே அருளாட்சி செய்து வந்துள்ளனர். இந்நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து கந்தப்ப செட்டியார், அவர் மகன் பொன்னுச் சாமிச் செட்டியார், அவர் தம்பி வைத்திலிங்கச் செட்டியார், அவர் மனைவி கண்ணம்மை ஆச்சி முதலாயி னோர் கோயிலை முட்டின்றி நடாத்தி வந்த பின், வைத்திலிங்கச் செட்டியார் மகன் கந்தப்ப செட்டியார் இளம் வயதிலேயே நிர்வாகப் பொறுப்பை ஏற்றுப் புனருத்தாரண கும்பாபிஷேகத்தை நடத்திவைத்தார்.

**பிரபந்தங்கள் :**

வைத்திசுவரப் பெருமான் மீது கூழங்கைத்தம்பிரான் பாடிய தனிக்கவியொன்றுண்டு. தையல்நாயகி கலிவெண்பாவும் முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சலும் யாழ். சைவ பரிபாலன சபை வெளியீடாக வந்துள்ளன. கொச்சிக்கணேசையர் தையல்நாயகி திருஊஞ்சலும், அராலி விசுவநாத சாத்திரியார் வண்ணைக் குறவஞ்சி யும் பாடியுள்ளனர். வைத்தீசுவரசுவாமி கோயிலிலே மார்கழிமாதத் திருவாதிரையில் சந்நிதானத்தில் ஓதப்பெறும் ''திருவூடல்'', 1972 ஆம் ஆண்டில் அச்சிடப்பெற்றது.

# நயினாதீவு நாகபூஷணியம்மாள் கோயில்

— "தமிழடியான்"

யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குத் தென்மேற்காகக் கடல்களாற் சூழப்பட்ட பல தீவுக் கூட்டங்கள் உள. இவைகள் ''சப்த தீவுகள்'' எனவும் கூறப்படும். இத்தீவுகளுக்குந் தமிழ் நாட்டிற்கும் வழிபாட்டிலும், வாணிபத்துறையிலும் பண்டை நாட்களில் பெருந் தொடர்புகள் இருந்திருக்கின்றன. அந்நாளில் இராமேசுவரப் பெருமானுக்கு நெடுந்தீவில் (பசுந்தீவு) இருந்து பாலும், கச்சைதீவில் இருந்து பூசைக்கு வேண்டிய பூக்களும் யாழ்ப்பாணத்தரசர்களால் அனுப்பப்பட்டு வந்ததாக வரலாறு உண்டு. இப் படியான இத்தீவுக் கூட்டங்களுள் வரலாற்றுச் சிறப்புமிக்கது நயினாதீவு ஆகும். வரலாற்றுச் சிறப்போடு சைவர்களது வணக்கத்தக்குரிய புராதன சக்திபீடத் தலமகிமை பொருந்தியதும் இதுவாகும். பண்டை நாளில் தமிழ் நாட்டவர்கள் யாத்திரை செய்யும் ஈழத்துத் திருத்தலங்களுள் இவ்வாலயமும் ஒன்றாக விளங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

முன்னரெல்லாம் யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் சென்று, வத்தைகளிலும், வள்ளங்களிலுமே நயினாதீவு செல்வர். இப்பொழுது புங்குடுதீவுவரை நெடுஞ்சாலை வசதி உண்டு. இதனால் இப்போ புங்குடு தீவிலிருந்து இயந்திரப்படகு மூலம் இங்கு செல்கின்றனர். இதுவே இக்காலச் சுருக்கமானதும், சுலபமானதுமான வழியாகும்.

ஈழத்தின் வடகோடியில் ஆதியில் நாகர் என்ற இனத்தவர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் சிவ வணக்கத்தினராவர். இவர்கள் கடவுள் பத்தியிலும், தவத்திலும், சீர்திருத்தத்திலும் மிகவுஞ் சிறந்திருந்த னர். இவர்கள் தங்களுக்குத் தண்டனையைத் தேடிக் கொடுக்கின்ற ஐந்து புலன்களையும் அடக்கி, தங்களுக்கு நித்திய பேரின்ப வாழ்வு அருளவேண்டுமென்ற நினைப்பொடு கடவுளை வழிபாடு செய்து வந்தனர். இதற்காகப் பல கோயில்களைக் கட்டிச் சிலைவைத்து வணங்கி வந்தனர். அப்படியான நாகரிக வாழ்வு வாழ்ந்த நாகர்கள்

காலத்தில் உருவாய கோவில்களில் ஒன்றுதான் நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவிலாகும். இந்நாகர்களையும், இவர்களது வழிபாட்டினையும் நினைவு படுத்துவனவே வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர் கோயிலில் அமைந்துள்ள நாகதம்பிரான் கோயில், யாழ் மாவட்ட கரைச்சிப் பகுதி ஊர்களுள் ஒன்றான புளியம் பொக்கனை நாகதம்பிரான், மாங்குளத்தையடுத்த புளியங்குளம் - புத்தூர் நாகதம்பிரான் போன்ற கோயில்களாம். இன்றும் பூநகரி நாகதேவன்துறை எனும் பெயருடைய துறை ஒன்று இருந்து வருவதும ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், நாகர், நாகநாதன், நாகப்பர், நாகமணி, நாகேந்திரன், நாகராசா, நாகையர், நாகலிங்கம், நாகம்மா, நாகேஸ்வரி, நாகபூஷணி, நாகநந்தினி, நாகலட்சுமி, நாகரத்தினம் போன்ற இன்றைய வழக்காற்றுப் பெயர்களும் இந்நாட்டு நாகரை எமக்கு நினைவூட்டுங் காரண இடுகுறிப்பெயர்களேயாம். இன்னும் நாகர்களால் வழிபடப்பட்ட ஆலயங்களில் ஒன்றே மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரமாகும். திருக்கேதீச்சர நாதருக்கு ''நாகநாதர்' என்ற இன்னொரு திருப்பெயர் இருப்பது இதனை வலியுறுத்துகின்றது. எப்படி நாகர் இந்நாட்டில் மிகத்தொன்மை வாய்ந்த நாகரிக மக்களாகக் கருதப்படுகின்றனரோ, அப்படியே சைவமும் நயினை நாகபூஷணி கோயிலும் ஈழத்தில் மிகத் தொன்மை வாய்ந்தவையாகும்.

நயினாதீவு நான்கு மைல் சுற்றளவு கொண்ட ஊர். அதில் 150 பரப்பு நிலம் கோயிலும், கோயில் சார்ந்த இடங்களுமாகும். நயினாதீவுக்கு நாகதீவு, 'மணிபல்லவம்' மணித்தீவு, பிராமணத்தீவு போன்ற பெயர்களுமுள. மணிமேகலை' என்ற காவியத்தில் வரும் 'மணிபல்லவம்' இதுதான் என்பது பெரும்பாலான ஆராய்ச்சியாளர் முடிபு. இங்கு கோயில் கொண்டிருக்கும் பெருமாட்டி நாகம்மாள் என்றும், நாகேசுவரி என்றும் போற்றப்படுவாள். இவ்வாலயம் எப்போது தொடக்கப்பட்டதென அறுதியிட்டுக் கூற முடியாததாகும். உமையம்மைக்குரிய கீர்த்தி வாய்ந்த 64 சக்தி பீடங்களுள் இதுவும் ஒன்றெனக் கூறப்படுகின்றது. ஆலயம் பற்றிய கர்ண பரம்பரைக் கதை, ''முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையின் படிமத்தை, அயற்றீவான புளியந்தீவிலிருந்த நாகமொன்று பூசித்து வந்ததாகவும் , ஒரு நாள் அந்நாகம் அர்ச்சனை செய்தற்காகப் பூக்களைக் கொய்து கொண்டுவரும் வழியில், கருடன் (பருந்து) ஒன்றைக் கண்டஞ்சிக் கடற்கரைக்கு அண்மையிலுள்ள கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டிருந்ததாகவும், கருடனும் இதனைக் கொல்லும் நோக்குடன் எதிரிருந்த கல்லொன்றில் இருந்ததாகவும், இந்நேரம் இவ்விரண்டினதும் பகைமையை அக்கடல் வழியாகச் சென்று கொண்டிருந்த வணிகன் ஒருவன், கண்டு அவற்றைச் சமாதானம் செய்யும் நோக்கோடு தான் சென்று கொண்டிருந்த கலத்தை நிறுத்தி, கருடனை அவ்விடததை விட்டு விலகும்படி கேட்டதாகவும், அதற்குக் கருடன் உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து என் முன் வைத்தால் விலகுவேன் என்றதாகவும், அவனும் அப்படியே செய்யக் கருடன் விலகியதாகவும், ஊர் திரும்பிய வணிகனது வீட்டிலே பேரொளி ஒன்று தோன்றியதாகவும், அங்கெல்லாம் கண்ணைப் பறிக்கும் நாகரத்தினக் கற்கள் காணப்பட்டதாகவும், இவை நயினாதீவு அம்பிகையின் திருவருட் செயலென எண்ணிய வணிகன் யாத்திரை புறப்பட்டு வந்து, அம்பாள் கோயிலைப் பெரிதாகக் கட்டி, நயினாபட்டர் என்பவரைப் பூசைக்கமர்த்தி ஆலயத்தை நிர்வகித்து வந்ததாகவும்'' கூறப்படுகின்றது. இப்பொழுதும் பாம்பு சுற்றிய கல், கருடன் இருந்த கல் என இரு கற்களைப் பொது மக்கள் காட்டும் வழக்கம் உண்டு.

இக்கோயிலுக்கும் வணிகச் செட்டிகளுக்கும் தொடர்புண்டென்பதை இவ்வாலயத்து நகரத்தார் மடம் தெளிவு படுத்துகின்றது. மேலும், இத்தீவு நீண்டகாலம் கப்பற்போக்குவரத்துத் துறைமுகமாக இருந்ததென்பதை இத்தீவின் மேற்குக் கடற்கரையிலுள்ள படகுத்துறை என்னும் பெயர் கொண்ட இடமும், இத்தீவில் கண்டெடுக்கப்பட்ட 12 ஆம் நூற்றாண்டுப் பொலநறுவை அரசனாகிய பராக்கிரம வாகுவின் சாசனமும் வலியுறுத்துகின்றன.

இப்படியாக பெரும்புகழுக்கும், மகிமைக்கும் உறைபதியாக விளங்கியதுடன், கடல் வணிகரின் காவற் தெய்வமாகவுமிருந்து அருள் பாலித்து வந்த அன்னையின் இக்கோவிலும் ஏனைய கோவில்கள் போன்று பறங்கியர்களினால் இடித்தழிக்கப்பட்டது. இடித்தழிக்கப்பட்டாலும் புத்தளப்பகுதியிலுள்ள காரைதீவுக் கோயில், கற்பிட்டியிலிருந்த நாச்சியம்மன் கோயில், நீர்கொழும்பிலிருந்த மீனாட்சி அம்மன் கோயில் (மீனாட்சி ஓடையில்), பெந்தோட்டை (**Bentota**) காளி கோயில் போன்ற பழம்பெருந் தேவி கோயில்களுக்கு நேர்ந்த கதி இவ்வாலயத்திற்கு நிகழவில்லை. காரணம் இவ்வாலயச் சூழலிலுள்ளோர் சமயம் விட்டுச் சமயம் மாறாதிருந்தமையேயாம். மேற் கூறிய பிரதேசக் கோவில்கள் அழிவோடு அழிந்தமைக்குக் காரணம் சைவராக அவ்விடங்களில் வாழ்ந்தோர் தம் சமயம் மாறியிருந்தமையேயாம். அச்சமய மாற்றம் இன மொழி கலாசார மாற்றங்களையெல்லாம் அப்பிரதேசச் சைவத் தமிழரிடம் செய்துவிட்டதென்பதையும் இவ்விடத்தில் தொட்டுக் காட்டுவது சாலப் பொருத்தமேயாம்.

மேலும், பறங்கியரால் இடியுண்ட நயினை ஆலயம் ஒல்லாந்தர் காலத்திலே சிறிய அளவிற் கட்டப்பட்டது. பின்னர் காலத்துக்குக் காலம் அடியவர்களது நன்நிதியங்கொண்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று இன்று முழுமையான ஒரு பெருங் கோவிலாக விளங்குகின்றது. கோயிலின் கிழக்கு வாயிலைக் கம்பீரத் தோற்றத்துடன் அணிசெய்வது 1935—இல் கட்டிமுடிக்கப்பட்ட தூலலிங்கமாகிய கோபுரமாகும்.

ஆலயத்தின் இப்போதுள்ள விமானம், இப்பொழுது திருக்கேதீச்சரம் திருப்பணியை மேற்கொண்டு செய்துவரும் காரைக்குடிச் சிற்பவல்லுனர் திரு. எம். செல்லக்கண்ணு ஸ்தபதியாரினால் பாண்டி நாட்டுச் சிற்பமுறையில் அமைக்கப்பட்டு 27.4.51 இல் குட முழுக்குச் செய்யப்பட்டதாகும்.

உற்சவ காலத்தில் இப்போது அம்பாள் உலா வருந் தேர் ''தேர்த்திருப்பணிச் சபை'' என ஏற்பாடு செய்யப்பட்ட சபை ஒன்றின் மூலம் செய்து முடிக்கப்பட்டு, 8—7—57 இல் வெள்ளோட்டத்திற்கு விடப்பட்டதாகும். இதனைப் பூர்த்தி செய்தவர் அருட்டிரு குன்றக்குடி அடிகளாரின் ஆலோசனைப்படி அழைக்கப்பட்ட தமிழ் நாட்டு நாகர் கோயிலைச் சேர்ந்த திரு. எஸ். குமாரசாமி ஆசாரியர் ஆவார். இத்தேர் இன்று ஈழத்திலுள்ள முதன்மை பெற்ற சித்திரலங்காரச் செய்கைத் தேர்களுள் ஒன்றாகும்.

இவ்வாலயத்தில் நாள் தோறும் ஆறுகாலப் பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. உற்சவம் ஆனிப் பூரணையில் தீர்த்தமும், அதற்கு முதல் நாள் தேரும் வரக்கூடியதாகப் பதினைந்து நாட்கள் நடைபெறும். உற்சவ காலத்தில் திரள் திரளாக நாகம்மாளைத் தரிசிக்க அடியார்கள் யாத்திரை செய்வர். அம்பாள் தேரில் திரு உலா வரும்போது மெய்யுருகும் அடியார்கள் இடும் ''அரோகரா'' ஒலி, பாம்பன் கடல் ஒலியுடன் கலந்து வானளாவும். அம்பாளின் தேர் இருப்புக்கு வரும்வரை எந்த ஒரு அடியாரும்—படகோட்டிகள்கூட ஆலயத்தை விட்டு அடி நகரமாட்டார்கள். கேணித் தீர்த்தம் முடிந்த மறுநாள் இரவு இங்கு தெப்போற்சவம் நடைபெறும். இவ்வாலயத்தனிச்சிறப்பு அம்சங்களுள் இதுவும் ஒன்றாகும். மேலும் நவராத்திரிக் காலத்தில் பார்க்கும் அடியவர் மனதில் பக்தி அநுபவப் பெருக்கு ஏற்படுமாறு விரிவாக இங்கு நடைபெற்று வரும் ஸ்ரீ சக்கர பூசையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தலம் பல மகான்களுக்கும், அறிஞர்களுக்கும், சாதனையாளர்களுக்கும், புலவர்களுக்கும் இருப்பிடமாய் அமைந்துள்ளது. இங்கு ஒரு தனியான ஆத்மிக அலை உண்டு. அந்த அலைதான் பூசை, நேர்த்திக்கடன் என்று கூறிக்கொண்டு நாளாந்தம் ஆட்களைக் அள்ளுப்பட்டுத் தன்னிடம் ஓடிவரச் செய்கிறது.

இவ்வாலயம் ஒன்பது பேர் கொண்ட அறக்காப்பாளர் சபை ஒன்றின் மூலமே நிர்வகிக்கப்படுகிறது. இவ்வாலயப் பிரதம குருக்களாக விளங்குபவர்தான் எல்லோருக்கும் நன்கு அறிமுகமானவராகிய சிவபூசாதுரந்தரர் பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் ஆவார்.

இவ்வாலய ஊஞ்சல் பாட்டு வண்ணை ம. அமரசிங்கப் புலவரினால் எழுதப்பட்டதாகும். ஆலயச் சிறப்புப் பற்றிக் கூறும் நூல்கள் அராலி முத்துக்குமாருப் புலவரது நாகேஸ்வரி பதிகம், வரகவி நாகமணிப் பாடிய நயினாதீவு திரோட்டயமக அந்தாதி, நயினை மான்மியம் போன்றவையாகும்.

பௌத்தர்களும் இன்று இவ்வாலயத் தரிசனத்திற்காக யாத்திரை செய்கின்றனர். சைவத்தமிழர்களதும், சிங்கள பௌத்த சிங்களவர்களதும் நல்லுறவிற்குப் பாலமாக இவ்வாலயம் இன்று அமைந்திருப்பது அன்னை பராசக்தியின் அருளேயாம்.

# வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோயில்

**நா. சுப்பிரமணியம்**

தமிழர் பண்பாட்டிலே கற்பொழுக்கம் பெற்றிருந்த தெய்விகப் பெருமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வது பத்தினித் தெய்வ வழிபாடாகிய கண்ணகி வழிபாடு. மாநாயக்கன் மகள் கண்ணகி கோவலற்கு மனையாளாகி, தனது கற்பின்திறத்தால், உரைசால் பத்தினி ஆக உயர்ந்தோரால் ஓதப்பட்டுப் பத்தினித் தெய்வமாகப் பரவப்பட்ட செய்தியைச் சிலப்பதிகாரம் தருகின்றது. ஈழத்திலே கண்ணகி வழிபாடு தமிழ் மக்கள் மத்தியில் 'கண்ணகை அம்மன்' வழிபாடாகவும் சிங்கள மக்கள் மத்தியில் 'பத்தினித் தெய்யோ' வழிபாடாகவும் நிலவி வருகின்றது. கண்ணகி என்ற பெயர் கண்ணகை என மருவியதோடமையாது 'அம்மன்' என்ற பின்னிணைப்பையும் பெற்றுள்ளமை இங்கு நோக்கற்பாலது.

ஈழத்திலே 'கண்ணகையம்மன்' கோவில்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்க சிறப்புடையது வவுனியா மாவட்டத்தில் முல்லைத்தீவுக் கண்மையில் வற்றாப்பளை என்னும் கிராமத்திலுள்ள கண்ணகை அம்மன் ஆலயம். இங்கு ஆண்டு தோறும் வைகாசித்திங்களில் நிகழும் பொங்கல் விழா ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் வந்து கலந்துகொள்ளும் பெருவிழாவாகும். இங்கு எழுர்தருளியுள்ள தேவி கொடிய பிணிகளைத் தீர்க்கும் பேரன்னையாகவும் 'வசியும் வளனும் சுரக்க' அருளும் கருணைச்சாலாகவும் அடியாருள்ளத்தில் இடங்கொண்டவள். வன்னி நாட்டின் அன்னைத் தெய்வமாகப் பொற்றப்படுபவள். கண்ணகைத் தாய், கண்ணகையம்மாள், கண்ணகைக் கிழவி, அம்மாளாச்சி என்றெல்லாம் ஆர்வமீதூர அடியார்களால் அழைக்கப்படும் இத் தெய்வம் இங்கு கோயில் கொண்டமை பற்றியும், அருட்செயல்களைப் பற்றியும் இங்கு செவிவழிச் செய்திகள் நிலவுகின்றன. கண்ணகையம்மனின் வரலாற்றைக் கூறும் 'சிலம்புகூறல்' என்னும் காவியம் (ஏட்டுப்பிரதி) ஒன்று இங்குளது. 'அம்மன் சிந்து' என்ற சிற்றிலக்கியமும் ஏட்டு வடிவில் உண்டு. கோவலன் கூத்து என்ற நாட்டுக்கூத்துக்கலை மரபும் இப்பிரதேசத்தில் உளது. இவை தவிர, தனித்தன்மைவாய்ந்த வழிபாட்டு நெறியொன்று இங்கு நிலவுகின்றது.

கண்ணகி மதுரையிலே தன் கற்பின் ஆற்றலைப் புலப்படுத்தியபின் அங்கிருந்து சேர நாடு சென்று நெடுவேள் குன்றில் விண்ணவர்க்கு விருந்தாயினள் என்பது சிலப்பதிகாரச் செய்தி. ஆனால் கண்ணகையம்மன் மதுரை நகரத்தை எரித்தசீற்றத்துடன் தமிழ் நாட்டை விட்டு அகன்று ஈழத்திற்கு வந்தாள் என்பதும் அப்படிவந்து பல இடங்களிலே தங்கிச் சென்றுள் என்பதும், அப்படித்தங்கிய பத்தாவது இடமே 'பத்தாம்பளை' என்று பெயர் பெற்று, பின் வற்றாப்பளையென மருவிற்று என்பதும் இங்கு வழங்கும் செவிவழிக்கருத்துக்கள்.

ஈழத்தில் கண்ணகி வழிபாடு எங்ஙனம் தோன்றி வளர்ந்த தென்பது பற்றி வரலாறு பூர்வமான விரிவான ஆய்வு முடிவுகள் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. சிலப்பதிகாரத்தின் 'உரைபெறுகட்டுரை' யிலும் 'வரந்தரு காதை' யிலும் உள்ள தகவல்களின் படி, சேரன் செங்குட்டுவன் எடுத்த கண்ணகி விழாவிலே கலந்து கொண்ட 'கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தன்' ஈழத்திற்கு இவ்வழிபாடடைக் கொணர்ந்தான் என்று கொள்ளப்படுகின்றது. 'ராஜவலிய' என்ற சிங்கள இலக்கியச் சான்றும் இக்கருத்தை ஆதரிக்கின்றது. பத்தினித்தெய்வத்தின் காற்சிலம்பைக் கொண்டு வந்து ஈழத்தில் பத்தினித் தெய்வ வழிபாட்டைத் தொடக்கி வைத்தான் கஜபாகு என ராஜவலிய கூறுகின்றது. இக் கயவாகு வேந்தன் கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் ஈழத்தை ஆட்சி செய்த முதலாம் கஜபாகு (கி. பி. 113–136) என்ற கருத்துப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எனவே ஈழத்தில் கண்ணகி வழிபாட்டின் தோற்றக காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டு என்று கொள்ளலாம்.

வற்றாப்பளையில் கண்ணகை அம்மன் கோயில் கொள்ளத் தொடங்கிய காலத்தை வரலாற்றுச் சான்றுகளுடன் தெளிவாக அறுதியிட்டுக் கூறுவதற்கு வன்னிப்பிரதேசத்தின் வரலாறு தெளிவாக ஆராயப்பட வேண்டும். இன்று ஆராய்ச்சி உள்ள நிலையில் கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டிலிருந்து வன்னிப்பகுதியின் வரலாறு தொடங்குகின்றது. ஆனால் வரன் முறைப்படி அமைக்கப்பட்டவில்லை. எனவே கண்ணகையம்மன் வழிபாடு தோன்றிய காலப்பகுதியும் சிந்தனைக்குப்புலப்படுவதாக இல்லை. எனினும் கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டை முன்னெல்லையாகக் கொள்ளலாம்.

இப்பொழுது வற்றாப்பளையிலுள்ள கண்ணகையம்மன் ஆலயம் சுமார் இருபதாண்டுகட்கு முன் திருப்பணிசெய்யப்பட்டது. அதற்கு முன் இருந்த ஆலயம் சுமார் நூறு ஆண்டுகளுக்குட்பட்ட பழைமையாவது. சில தலைமுறைகளுக்கு முன் மதுரையிலிருந்து பொற்கொல்லர் மரபினனொருவன் (இவன் கோவலனைக் குற்றஞ்சாட்டிய பொற்கொல்லனின் மரபினன் எனப்படுகிறன்) கண்ணகிச்சிலம்பும் பொற்பிரம்பும் அம்மனைக் காய்களும் உடுக்கும் கொணர்ந்து வற்றாப்பளையில் தங்கி அம்மனை வழிபட்டான் எனவும் அவன் இறக்கும் வேளையில் முள்ளியவளையிலிருந்த அந்தணர்களிடம் அவற்றை நல்கி அவ்வழிபாட்டு மரபைத்தொடரும் படி கூறிச்சென்றுன் எனவும் செவிவழிச் செய்தி வழங்குகின்றது. கண்ணகை அம்மனது வழிபாட்டிலே இப்புனிதப் பொருள்கள் தெய்விகச் சின்னங்களாக இடம் பெறுகின்றன.

வற்றாப்பளைக் கண்ணகையம்மனின் வழிபாட்டுமுறைகளை நோக்கும்போது அது ஏனைய இந்துக் கோவில்களில் நிலவும் வழிபாட்டு முறைகளிலிருந்து பெரிதும் மாறுபட்டமைந்திருப்பதைக் காண்பதோடு சிலப்பதிகாரக் கண்ணகி எப்படி ஆகமநெறிப்படியான அம்மனாக மாற்றமடைந்துள்ளாள் என்பதையும் அவதானிக்கலாம். சிலப்பதிகாரங் காட்டும் கண்ணகி மானுடபெண்ணாக இருந்து தெய்வமானவள். அதாவது வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டவள். ஆனால் கண்ணகை அம்மன் பத்திரகாளியின் அவதாரம். இதனைச் சிலம்பு கூறல் காவியமும் கோவலன் கூத்து மரபும் உணர்த்துகின்றன.

சிலம்பு கூறல் என்ற காவியம் கண்ணகி வழக்குரை என்றும் பெயர் பெறும். இந்நூலில் கதைப் போக்கிற்கும் சிலப்பதிகாரக்கதைக்குமிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுண்டு. கண்ணகியாக அவதரித்தவள் பத்திரகாளியே என்பதும் அவள் பாண்டியன் மனைவியின் வயிற்றில் உதித்து, பேழையொன்றிற் பொதிந்து கடலுள் விடப்பட்டு மாநாகச் செட்டியால் எடுத்து வளர்க்கப்பட்டுக் கோவலன் மனைவியாக வந்து பாண்டியனைப் பழிவாங்கினள் என்பது 'சிலம்புகூற'லின் செய்திகள். சிலப்பதிகாரத்தில் கற்பின் திண்மைகண்டு கண்ணகி உயர்ந்தோரால் ஒத்தப்பட்டதைக் காணும் நாம் இங்கு 'சிலம்பு கூறல்' காவியத்தில் அதனைக்காண முடியாது. ஏனெனில் கணவனும் தீண்டாத கற்புடைய தெய்வமாகவே கண்ணகை அம்மன் அமைந்து விட்டாள்.

கண்ணகை அம்மனின் வழிபாட்டைப் பற்றி நோக்கும்போது மேற்படி தெய்வத்தின் அவதாரக் கருத்து ஏன் தோன்றி வளர்ந்தது என்பதை ஓரளவு விளங்கிக் கொள்ள வேண்டியதவசியமாகின்றது. ஈழத்துத் தமிழர் மத்தியில் நிலவும் இந்து சமயம் சைவசித்தாந்த நெறிப்பட்டது. சித்தாந்த சைவம் ஆகம மரபுகளுக்கு முக்கிய இடமளிப்பது. ஆலயக்கிரியைகள் ஆகம மரபுகளை அடிப்படையாகக் கொண்டவை. கண்ணகி வழிபாடு பண்டுதொண்டு நிலவி வந்த பிரதேசங்களிலே ஆகம மரபுடன் கூடிய சித்தாந்தச்சைவம் பரவிய வேளையில் கண்ணகியை வழிபட்டு வந்த மக்கள் ஆகம நெறியில் கண்ணகிக்கு அமைதிகாண வேண்டியவர்களாயினர். இதனால் ஒரு பகுதியினர் கண்ணகியை உமை அல்லது பத்திரகாளியின் அவதாரமாகக் கொண்டனர். இதற்கேற்ப சிலம்பு கூறல் காவியக்கதை அமைந்த தெனலாம். இன்னொருபகுதியினர் கண்ணகி ஆலயங்களை முற்கூறியது போல இராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி முதலிய ஆகம மரபுடன் கூடிய சக்தி கோயில்களாக மாற்றினர். பல கண்ணகையம்மன் கோயில்களிற் கண்ணகையை 'மனோன்மணி' என்ற சக்தி அம்சத்திலே பிரதிஷ்டை செய்துள்ளனர்.

வற்றாப்பளை கண்ணகையம்மன் உமை அல்லது பத்திரகாளியின் அவதாரமாகவே கொள்ளப்படுகிறாள். பூஜைக்குரிய மந்திரங்கள் உமையினுடைய திருநாமங்களே. கண்ணகையம்மனின் தினசரி வழிபாட்டில் ஏனைய இந்து ஆலயங்களின் வழிபாட்டுமுறையே காணப்படுகின்றதெனினும் ஆண்டு தோறும் நிகழும் பெருவிழாவாகிய வைகாசிப் பொங்கலில் சில தனித்தன்மையுடைய முறைகளைக் காணலாம்.

அந்தணர்கள் மட்டுமன்றி வேளாளர், கோவியர், தச்சர் போன்ற சமூகப்பிரிவினர் பலரும் இணைந்த குழுவொன்று இப் பொங்கல் நிகழ்ச்சியை நடத்துகின்றது. பொங்கலுக்கு இரு வாரங்கட்கு முந்திய திங்கள் நாளில் 'பாக்குத் தெண்டுதல்' என்ற நிகழ்ச்சி நடைபெறும். இது அயற் கிராமங்களுக்குப் பொங்கல் பற்றி அறிவிக்கும் ஆரம்ப நிகழ்ச்சியாக அமையும். அடுத்து வரும் திங்கள் நாளில் தீர்த்தம் எடுத்தல் என்னும் நிகழ்ச்சியுடன் பொங்கலுக்கான கிரியைகள் தொடங்கிவிடும். இக்கிரியைகள் சுமார் பதினைந்தாண்டுகட்கு முன் வரை அயற்கிராமமாகிய முள்ளியவளையில் உள்ள கண்ணகையம்மன் ஆலயத்தில் நடைபெற்று வந்தவை. இப்பொழுது முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயத்தில் நடைபெறுகின்றன. பொங்கலின் முந்திய ஏழுநாட்களில் நடைபெறும் 'மடைகள்' ஞாயிற்றுக்கிழமைப் பொங்கல் ஆகிய நிகழ்ச்சிகள் முள்ளியவளைக் காட்டு விநாயகர் ஆலயத்தில் நிகழ்பவை. எட்டாம் நாளில்தான் வற்றாப்பளையில் அம்மன் ஆலயத்தில் பொங்கல் நிகழும்.

பூஜைக்குரிய அம்மன் திருவுருவானது வெள்ளி முக அமைப்பு கைகால்கள் முதலிய வற்றைக் கொண்டு அவ்வப்போது அமைக்கப்படுவது. முன் குறிப்பிட்ட சிலம்பு, பிரம்பு என்பவை அம்மனுக்கு முன் இடம் பெறுவன. உடுக்கும் பூஜையில் வைக்கப்படும். பொங்கல் நிகழ்ச்சிகளில் கச்சுநேருதல், தூளி பிடித்தல், கட்டாடுதல் முதலிய செயல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றின் உட்கருத்துக்கள் ஆராயப்படவேண்டியவை.

பொங்கல் நாட்களில் நிகழும் அற்புத நிகழ்ச்சிகளிலொன்று கடல் நீரில் தீபமெரிதல். தீர்த்தம் எடுத்தல் நிகழ்ச்சியின் போது கொண்டுவரப்படும் (முல்லைத்தீவு சிலாவத்தைக் கடற்கரையில்) கடல் நீரில் எட்டு நாட்களிலும் விசேட தீபம் ஏற்றப் படுகின்றது. கடல் நீரை மண்முட்டியில் நிறைத்து அதிலே நெய்யூறிய திரியை எரிய விடுகிறார்கள். இந்த 'அற்புதத்துக்கான அறிவியற் பின்னணி ஆராயப்படவேண்டிய தொன்றாகும். பொங்கும் பானையில் சுற்றப்படும் நூலும் கட்டப்படும் வெற்றிலைகளும் தீயில் கருகுவதில்லை என்றும் நம்பப்படுகின்றது.

பொங்கல் நிகழ்ச்சிக்குரிய எட்டு நாட்களிலும் 'சிலம்பு கூறல்' காவியம் படிக்கப்படும். ஏடுபடிக்கும் ஆற்றலுடைய சிலர் ஆண்டு தோறும் இதனைப் பயபக்தியுடன் புரிந்துவருகின்றார்கள். அம்மன் சிந்து பொங்கற் பூசையில் உடுக்கடித்துப் படிக்கப்படும்.

முகப்புப் படம் அச்சுப்பதிவு:

**மெய்கண்டான் அச்சகம் லிமிட்டெட்**

161, செட்டியார் தெரு,

கொழும்பு-11.